Koviloor Digital Library

பன்னிரு திருமுறைகள்

A.No. 17661
Q:23



மூன்றாம் திருமுறை

முதல் தொகுதி

தேவாரம்

மூலமும் உரையும்

தமிழ் நிலையம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17661

உ
சிவமயம்

திருஞானசம்பந்த சுவாமிகள்
அருளிச் செய்த

தேவாரம்

மூன்றாம் திருமுறை
(மூலமும் தெளிவுரையும்)

(முதல் தொகுதி)

உரையாசிரியர்:
வ.த. இராமசுப்பிரமணியம், எம்.ஏ.

தமிழ் நிலையம்,
ஏ.ஆர்.ஆர். காம்ப்ளக்ஸ்,
141, உஸ்மான் சாலை, தி. நகர்,
சென்னை – 600 017.

Koviloor Digital Library

முதல் பதிப்பு : 1995

உரிமை : பதிப்பகத்திற்கே

இரு தொகுதிகள்
விலை : ரூ. 175.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17.
Printed at : Sankar Printers, Madras – 42.

Koviloor Digital Library

பொருளடக்கம்

Koviloor Digital Library

முன்னுரை

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவை யாவும் தண்டமிழ் எனவும், பைந்தமிழ் எனவும், நற்றமிழ் எனவும் போற்றப்படும் இனிமை மிக்க செந் தமிழால் ஆகிய திருப்பாடல்கள் ஆகும். இவற்றுள் திருஞானசம்பந்த சுவாமிகளால் அருளிச் செய்யப் பட்ட திருப்பாடல்கள் யாவும் முதல் மூன்று திருமுறை களாக அருளாளர்களால் வகுக்கப் பெற்றுள்ளன.

இந்நூல் மூன்றாவது திருமுறையாகும். திருஞான சம்பந்தரின் திரு அவதார நோக்கமானது, "வேத நெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்கப் பூத பரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்" எனச் சேக்கிழார் சுவாமிகள் அருளியவாறு, சைவத் துறையை விளங்கச் செய்ததாகும். இதனை இத்திருமுறையில் நன்கு காணலாம்.

திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டில் எழுந்தருளிய போது, மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அழைப்பு விடுக்க, அதனை ஏற்று உடனே மதுரை நோக்கிப் புறப்பட ஆயத்தமானார். சமணர்களின் சூழ்ச்சியை அறிந்த திருநாவுக்கரசர், தடுத்துக் கூறி, நாளும் கோளும் நன்மை புரியும் ஏற்றத்தில் இல்லை என மொழிந்தும் அவற்றைப் பொருட்டாகக் கருதாமல், நாளும் கோளும் ஈசன் அடியவர்களை வருத்தாது எனப் புகன்றார். இதனை "ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி

Koviloor Digital Library

சனி பாம்பு இரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியாரவர்க்கு மிகவே" என ஓதப் பெற்றவாறு நோக்கின், ஈசனார் திருவருளே திருஞான சம்பந்தர் திருவாக்காக மலர்ந்ததெனக் காணலாம்.

தமது அவதார நோக்கமாகிய, சைவத் துறையை விளங்க வைக்க வேண்டும் என்னும் அருஞ்செயலைத் திருஞானசம்பந்தர் விரைந்து செயலாக்கிய விதமானது தனிப் பெருமை வாய்ந்ததாகும்.

இத் திருமுறையின் பதிகம் எண் 268 திருஇராமேச்சுரம். பாடல் வ.எண் 106இல், நவக்கிரகங் களால் எத்தகைய கெடுதியும் தனக்கு உண்டாகாத வாறு இராவணன் பெற்றிருந்த சிறப்பினை ஓதப் பெறுவதாகும். இது, வரபலத்தை உடைய இராவண னுக்குக் கோள்களால் தீங்கு இல்லை என்பதனைத் தெரிவிக்கிறது. இத்தன்மையில், ஞானப்பால் அருந்தித் திருவருள் நலத்தைப் பூரணமாகப் பெற்ற திருஞான சம்பந்தர்பால், கோளின் தீமை நாடாது என்பதும் வெள்ளிடை மலையாயிற்று அல்லவா!

மதுரையை அடைந்த திருஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியாரையும் குலச்சிறையாரையும் செப்பி யுரைத்த தன்மையானது, சைவம் தழைக்கப் பேருதவியாய் விளங்கியமையைத் தெளிவுபடுத்துமாறு உள்ளதைக் காணலாம். திருத்தொண்டு புரிதலும், சிவனடியார்களைப் பரவுதலுமாகிய குலச் சிறை யாரின் பெருமையும் மங்கையர்க்கரசியார் ஆற்றிய திருக்கோயில் திருப்பணியும் தழைய உரைத்தருளிய பாங்கு தனிச் சிறப்பு வாய்ந்தது.

இத் திருமுறையின் சிறப்பாகக் கருதக்கூடிய வற்றுள் கூன்பாண்டிய மன்னனாகிய வழுதி, நின்றசீர்

Koviloor Digital Library

நெடுமாறன் என்னும் பெயர் பூண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவராகத் திகழ்வதும் ஒன்றாகும்.

மாற்றாரால் ஏவப் பெற்ற நெருப்பு, திருஞான சம்பந்தரின் ஆணைக்குக் கட்டுப்பட்டுப் பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயை உண்டாக்குமாறு, பையவே சென்று அடைந்தது; திருநீற்றுத் திருப்பதிகத்தை மன்னுயிர்கள் உய்தி பெறுமாறு வழங்குவதற்குக் காரணமும் ஆகியது. திருஞான சம்பந்தர் தம் திருப்பதிகம் எழுதப் பெற்ற ஓலை, ஈசனின் அட்ட மூர்த்தங்களில் ஒன்றாகிய அந் நெருப்பால் எரிக்கப் பெறாது இருந்த சிறப்பினை யாரே அறியாதவர்! "போகமார்த்த" என்று தொடங்கும் திருப்பதிகத்தைத் (முதல் திருமுறை) தீயினில் இடும் நிலையில் அது வேகாமல் இருக்க வேண்டும் என்னும் தன்மையில் அருளிச் செய்யப் பெற்ற திருப்பதிகம் 87 திருநள்ளாற்றுப் பதிகமாகும். இதனில், "நள்ளாறர் தம் நாமமே மிளிர் இளவளர் எரியிடில் இவை பழுதிலை மெய்ம்மையே" என அருளிச் செய்யும் நயம் எண்ணி மகிழத் தக்கது.

மதுரையின்கண் அனல் வாதம் புரியும் திருஞானசம்பந்தர், திருநள்ளாற்றுப் பதிகத்தை ஓலையில் எழுதித் தீயிலிட்டு, அதனைப் பச்சைப் பதிகமாக விளங்கச் செய்யும் பாங்கினில் திருநள்ளாற்றீசனை, மதுரையிலிருந்து ஏத்திய மாண்பாஃது, ஈசன், தன்னை எங்கிருந்து ஏத்தினாலும் ஆங்கு நின்று அருள் செய்வார் என்பதனை உணர்த்து வதாயிற்று.

புனல் வாதத்தில் வெற்றி கண்ட பதிகமாகத் திகழ்வது, திருப்பாசுரம் என்னும் சிறப்புப்

Koviloor Digital Library

பெயருடைய 54ஆவது பொதுத் திருப்பதிகமாகும். இது, "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" எனத் தொடங்கப் பெற்றதாகும்; உலக மக்களின் நலமும் வேள்வியின் பெருமையும் அரசனின் மேன்மையும் விளக்கும் அரிய திருப்பதிகம். இதுவே, கூன் பாண்டினை நின்றசீர் நெடுமாறனாக்கிய அற்பு தத்தைப் புரிந்தது. புனல் வாதத்தின் வெற்றிக்குக் காரணமாகிய இத் திருப்பதிகம் கூனை நிமிர்த்தி மன்னனை நெடுமாறனாக்கி, இருதலை மாணிக்க மாகத் திகழ்வதாயிற்று.

மங்கையர்க்கரசியாரின் தாயன்பானது, சிறுபாலனாகத் திருவடிவம் கொண்டிருந்த திருஞான சம்பந்தருக்கு மாற்றார்களால் தீங்கு நேருமோ என அச்சம் கொள்ளுமாறு செய்தது. இதனை அறிந்த ஆளுடைய பிள்ளையார், தன்னைப் பாலன் என்று கருதி இரக்கம் மேலிட்டு வருந்த வேண்டாம் எனப் பொலிவொடு புகன்ற வண்ணமானது நனி சிந்தித்தற்கு உரியது. இது, திருப்பதிகம் எண் 39 திருஆலவாய் என்னும் பதிகம் வாயிலாக உரைக்கப் பெற்றது. திருஞானசம்பந்தரின் தோற்றப் பொலிவானது பாலனாகத் திகழ்ந்தாலும் எல்லா வல்லமையும் கொண்ட சிறப்பினை உணர்த்துவதாயிற்று. இது, ஈசனின் திருவருள் ஆற்றலை முழுமையாகப் பெற்றுள்ளதும், அதனை அவ்வண்ணல் நன்கு உணர்ந் துள்ளதும் வெளிப்படுத்திய அகச் சான்றாகும்.

இத் திருமுறையில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிய பிற செயல்களும் உள்ளன. அவையாவன:

1. திருவாவடுதுறையில் தந்தையார் ஆற்றும் திரு வேள்வியை ஒட்டிப் பொன் பெற்றது. திருப்பதிகம் எண் 4 "இடரினும் தளரினும்" காண்க.

Koviloor Digital Library

2. பெருவெள்ளம் காரணமாக ஓடம் செலுத்து வதற்கு யாரும் முன்வராத நிலையில், கொள்ளம் பூதூரில் ஓடத்தில் அமர்ந்து திருத்தொண்டர்கள் புடை சூழத் தாமாகவே ஓடமானது உந்திச் செல்லுமாறு செய்தது. திருப்பதிகம் எண் 6 "கொட்டமே கமழும்" காண்க.

3. வெயிலின் கடுமையில் திருஞானசம்பந்தர் வருந்துதல் தகாது எனக் கருதிய ஈசன், முத்துப் பந்தரை அருளிச் செய்து, அவர் வரும் காட்சியை நந்தியைச் சற்று விலகி இருக்குமாறு செய்து கண்டது. திருப்பதிகம் எண் 73 பட்டீச்சரம், "பாடல் மறை" காண்க.

இத் திருமுறையில் வரும் திருப்பதிகங்களில், திருத்தல வரலாறுகளும் சிறப்புக்களும் சிறப்புடன் உரைக்கப் பெற்றுள்ளதைக் காணலாம்.

திருஞானசம்பந்தர் மதுரையில் இருக்கின்ற காலத்தில் அவரது உலகியல் தந்தையாராகிய சிவபாத இருதயரை நோக்கித் திருக்கழுமலத்தில் வீற்றிருக்கும் இறைவனின் பெருமையை ஓதி உரைத்த திருப்பதிக மானது, 24 திருக்கழுமலம். "மண்ணின் நல்ல வண்ணம் வாழலாம்" என்பதாகும். இது, தந்தை சிறுவயதில் ஞானப்பால் அருந்தியதைக் கண்டித்த செயலை நினைவு கூர்ந்து, "பேதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாது எனத் தாதையார் முனிவுறத் தான் எனை ஆண்டவன்" என்று ஓதிய திருமுறை வாசகத்தை என்னென்று வியந்து போற்றுவது! இத் தன்மையானது ஈசன், தன் உடல் பொருள் ஆவி அத்தனையும் ஆளுடைய பிள்ளையாருக்கே நல்கி ஆட்கொண்ட சிறப்பினை அன்றிப் பிறிதொன்றைக் காணவொட்டாது செய்வ

Koviloor Digital Library

தாகும். இதனை, "தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை" என அருளிச் செய்த, மாணிக்கவாசகர் தம் திருவாக்கைக் கொண்டு நோக்குதலே உரித்தான தாகும்.

இத்திருமுறையில் பஞ்சாக்கரத் திருப்பதிகம் எண் பொது 22 சிறப்புடைத்து. மந்திரங்களுக்கெல்லாம் தலையாயதாகிய திருவைந்தெழுத்தின் பெருமையை இத் திருப்பதிகமானது நன்கு விளக்குவதாகும். இது, வேத நெறியைத் தழைத்தோங்கச் செய்யும் அவதார நோக்கப் பாங்காயிற்று எனில் மிகையாகாது. திருஞானசம்பந்தருக்கு வைதிக முறைப்படி திருமண நிகழ்ச்சி நடைபெற்ற தன்மையில், அவருக்கு அத்தகைய வாழ்க்கையில் பற்றற்ற நிலையில் நல்லூர்ப் பெருமணம் பதிகம் எண் 125 "கல்லூர்ப் பெருமணம்" என்று எடுத்து ஓதியருளிச் செய்தார். அவரது திருமணத்தைக் காண வந்தவர்கள் அனைவரும் திருக்கோயிலின்கண் எழுந்த சோதியில் கலந்தனர். கடைசியாகத் தம் மனைவியுடன் பெருஞ் சோதியிற் கலந்த திருஞானசம்பந்தர், இறுதியாக அருளிச் செய்த திருப்பதிகமானது, பதிகம் எண் 49 பொது, "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகமாகும். இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

ஞானமெய்ந்நெறிதான் யார்க்கும்
நமச்சிவாயச் சொலாம்என்று
ஆனசீர் நமச்சி வாயத்
திருப்பதி கத்தை அங்கண்
வானமும் நிலனும் கேட்க
அருள்செய்து "இம் மணத்தில் வந்தோர்

Koviloor Digital Library

ஈனமாம் பிறவி தீர
யாவரும் புகுக" என்ன.

— திருஞானசம்பந்த நாயனார் புராணம், 1248

என அருளிச் செய்தவாறும் காண்க.

திருஞானசம்பந்தரின் வாழ்க்கைத் துணைவியாக அமைந்து, கரம் பற்றிய பெரும் பேற்றுக்குரிய அம்மையின் பெயர், "தோத்திர பூர்ணாம்பிகை" எனவும் "சொக்கியாள்" எனவும் சில குறிப்புகளில் தென்படுகின்றன.

இத் திருமுறையில், 84 திருத்தலங்களுக்குரிய திருப்பதிகங்கள் கொண்டுள்ளன. இதில் திருத்தலங் களுக்குரிய திருப்பதிகங்கள் 121; பொதுத் திருப்பதிகங்கள் 4 — ஆக 125 திருப்பதிகங்கள் உள்ளன. இத் திருமுறையில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 1347.

இவையன்றித் திருமுறையின் எண் குறிப்பு காணப் பெறாத 3 திருப்பதிகங்கள் கிடைக்கப் பெற்றுப் பிற்சேர்க்கையாக இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தர்தம் திருப்பதிகம் யாவும் இறைவனுடைய . திருவடியையே ஒத்து விளங்கும் சிறப்புடையது. இதனைத் திருஞானசம்பந்தர் வாக்கின் வழி நின்று கூற வேண்டுமாயின், "காழியவர் கோன் அடையும் வகையால் பரவி அரனை அழகூடும் சம்பந்தன் உரையால் மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில் மாகறலுளான் அடியையே உடைய தமிழ் பத்தும்" (பாடல் வ.எண் 780) என்பதாகும். ஈசன் மலரடியும் திருஞானசம்பந்தரின் திருப்பதிகமும் ஒன்றாதலைக் காட்டும் பாங்கும் நனி காண்க.

Koviloor Digital Library

இவ்வழி நின்று இத் திருப்பதிகங்களை நன்கு பயின்று அதன் வழி நிற்போமாக. அதுவே இறைத் தொண்டும் ஆகும். அதனை ஆற்றி இவ்வுலகில் பெறும் செல்வங்களை நன்கு பெற்றுத் திளைப்போமாக. இறையருளில் தோய்ந்து பேரின்பப் பெருநலத்தை நனி எய்துவோமாக.

இவ்வரிய தெய்வநூலை, நன்முறையில் அச்சிட்டு வெளியிட்டு வழங்கும் தமிழ் நிலையத்தினருக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பூழியர் கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி.

— வ.த. இராமசுப்பிரமணியம்

Koviloor Digital Library

திருஞானசம்பந்த சுவாமிகள் வரலாறு

1. திருஅவதாரம்

சீர்மேவும் தமிழ் மண்ணில் செம்மையுறு 7ஆம் நூற்றாண்டில் செந்தமிழ்த் தேன் இனிதளிக்கும் திருஞானசம்பந்தர், சிவபாத இருதயருக்கும் அவர்தம் பொற்புடைய இல்லத்தரசியான பகவதியார் என்பவருக்கும், சீகாழிப் பதியின் தெய்வக் குழந்தையாகத் திருஅவதாரம் செய்தார். இவர் அவதாரம் செய்த சிறப்பினைச் சேக்கிழார் பெருமான்,

அவம்பெருக்கும் புல்லறிவின் அமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட நல்லூழி தொறும்
தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்
சராசரங்களெலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்.

(திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 26)

எனக் கூறுகின்றார்.

2. ஞானப்பால் அருந்தியது

திருஞானசம்பந்தர், தமக்கு மூன்று வயது ஆகும் நிலையில் ஒரு நாள், நீராடும் பொருட்டுச் சென்ற தந்தையாருடன் திருக்கோயிலுக்குச் சென்றார். ஆங்கு, தந்தையார் குளத்தில் நீராடியபோது, பிள்ளையார், "அம்மே! அப்பா!" என அழுதார். இதனைச் சேக்கிழார் சுவாமிகள், "செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம் பார்த்து அம்மே அப்பா

Koviloor Digital Library

என்றென்று அழைத்தருளி அழுதருள" என்று அருளிச் செய்கின்றார். உலக நாயகியாகிய உமாதேவியாரும் உலகநாயகராகிய ஈசனும் இவ்வினிய அழைப்பின் ஒலியைக் கேட்டு மகிழ்கின்றனர்.

ஈசனின் திருவருள் வண்ணம், உமாதேவியார், பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கறந்து, சிவஞானத்தின் இன்னமுதைக் குழைத்தருளித் திருஞானசம்பந்தப் பிள்ளையாரை நோக்கி, "உண் அடிசில்" எனக் கையில் அப்பொற் கிண்ணத்தைக் கொடுத்துக் கண் மலர் நீர்த் துளிகளையும் துடைத்தார். அந்நிலையில், அத்தெய்வக் குழந்தைக்குச் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம், பவமதனை அறமாற்றும் ஞானம், உவமையிலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம் என யாவும் கைவரப் பெற்றது.

3. ஈசன் திருக்காட்சி

நீராடி எழுந்த சிவபாத இருதயர், குளக்கரையில் உள்ள ஞானசம்பந்தரின் திருவாயினில் பால் அருந்திய சுவடு கண்டு, அதனைக் கொடுத்தவர் யார் என்று முனிவுடன் வினவினார். அதற்கு, "தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதி சூடிக்காடுடைய சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர்கள்வன், ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான்" எனப் பதிலாக மொழிந்து, அப்பெருமான் "அவன் இவனன்றே" எனச் சிவபெருமானைச் சுட்டிக் காட்டுகின்றார், பாலறா வாயர். தந்தை மகிழ்ந்து, குழந்தையைத் தோளில் வைத்துக் கொள்கின்றார்.

Koviloor Digital Library

எல்லா ஞானங்களும் பூரணமாகப் பெற்ற திருஞானசம்பந்தர், தமது தந்தையாரின் தோளின் மீது இனிது இருந்து திருக்கோயில்களுக்குச் சென்று, ஈசனை வணங்கித் திருப்பதிகளை அருளிச் செய்யலானார். திருக்கோலக்கா என்னும் திருத்தலத்தில் அவர், கைத் தாளமிட்டுப் பாட, ஈசன் பொற்றாளத்தை வழங்க, தேவி அத்தாளத்திற்கு ஓசை வழங்கி அருள் புரிந்தார்.

4. சிவகணங்கள் காட்சி

இவ்வாறு, திருநனிபள்ளி முதலான இடங் களுக்குச் சென்று ஈசனை வணங்கித் திருப்பதிகம் பாடிய திருஞானசம்பந்தருக்குத் திருநீல கண்ட யாழ்ப்பாணர், தனது துணைவியாராகிய மதங்க சூளாமணியாருடன் யாழ் வாசித்து மகிழ்ந்தார். தில்லை சென்று நடராசப் பெருமானை வணங்கித் தரிசித்துத் திருப்பதிகம் பாடியருளினார். அஞ்ஞான்று தில்லைவாழ் அந்தணர்களெல்லாம் சிவகணத் தவராகக் காட்சி அளித்தலைக் கண்டு மகிழ்ந்து வணங்கித் திருவேட்களம், எருக்கத்தம்புலியூர் முதலிய தலங்களுக்குச் சென்று தரிசித்து மகிழ்ந்தனர்.

5. முத்துச் சிவிகை பெறுதல்

திருஞானசம்பந்தர் வெயிலின்கண் நடந்து வருதலைக் கண்ட ஈசன், முத்துச் சிவிகையும் சின்னங் களும் அருளிச் செய்ய, அதனை ஏற்ற ஆளுடைய பிள்ளையார் ஈசனைப் போற்றித் திருநல்வாயில் அறத்துறையில் மேவும் நாதனை ஏத்தினார்.

6. உபநயனச் சிறப்பும் அப்பர் சந்திப்பும்

திருஞானசம்பந்தருக்கு உபநயனம் செய்விக்கப் பெற்றுச் சீகாழிப் பதியில் மேவும் நாளில்,

Koviloor Digital Library

திருநாவுக்கரசர் சென்றணைந்து வணங்கிப் போற்ற, இவர் எதிர் கொண்டு, "அப்பரே" என ஏத்திப் போற்றினார். அப்பர் எனத் திருஞானசம்பந்தரால் போற்றப்பட்ட திருநாவுக்கரசரர் சிலகாலம் உடன் இருந்து, பின்னர் விடை பெற்று ஏகினார்.

7. முயலக நோய் தீர்த்தல்

திருத்தலங்கள் பலவும் சார்ந்து இறைவனை வணங்கிய திருஞானசம்பந்தர். திருப்பாச்சி லாச்சிராமம் என்னும் திருத்தலத்தில், கொல்லி மழவன் என்னும் அப்பகுதியின் தலைவனின் புதல்வியைப் பீடித்திருந்த முயலக நோயைத் திருப்பதிகம் அருளிச் செய்து தீர்த்தருளினார்.

8. குளிர் சுரம் தீர்த்தல்

அங்கிருந்து பல தலங்களையும் சார்ந்து, ஈசனைத் தரிசித்துத் திருப்பதிகங்களை அருளிச் செய்த திருஞானசம்பந்தர், ,கொடிமாடச்செங்குன்றூரில் மக்கள் குளிர் சுரத்தால் துன்புறுதலைக் கண்டு, அவ்வினைக்கு இவ்வினை என்று எடுத்து,"செய்வினை தீண்டா திரு நீல கண்டம்" என அருளிச் செய்தார். சுரம் நீங்கி மக்கள் இன்புற்று மகிழ்ந்தனர். பின்னர் திருக்கற்குடி, சோற்றுத்துறை, நல்லூர், வலஞ் சுழி முதலான திருத்தலங்களைத் தரிசித்து மகிழ்ந்து, திருப்பதிகங்களை அருளிச் செய்யலானார்.

9. முத்துப் பந்தர் பெறுதல்

திருஞானசம்பந்தர், திருத்தலங்கள் தோறும் கடும் வெயிலில் செல்லும் நிலையைக் கண்ட ஈசன், முத்துப் பந்தரை அருளிச் செய்யத் திருவுள்ளம் கொண்டார்.

Koviloor Digital Library

அப் பெருமையானது திருப்பட்டீச்சரத்தில் உற்றது. அன்பில் திளைத்து ஏத்திய திருஞானசம்பந்தர் ஈசன் கழல் பணிந்து, திருப்பதிகம் இசைத்துப் போற்றினார். ஆளுடைய பிள்ளையார், திருக்கோயிலை நாடி வரும் அருங்காட்சியைக் காணும் வகையில் நந்தியைச் சற்று விலகி இருக்குமாறு செய்த ஈசன் திருவருள் பொலிவினை யாரே விளம்புவார்! இத்தன்மையில், இன்றும் இத்திருக்கோயிலின்கண் உள்ள இடபம் விலகி இருப்பதைக் காணலாம்.

முத்துப் பந்தரின் கீழ் விளங்கிய திருக் காட்சியினைச் சேக்கிழார் பெருமான், "அண்டர் பிரான் எடுத்த திருவடி நீழல் என அமர்ந்தார்" என்று அருளிச் செய்தனர்.

10. பொன் பெற்ற பேறு

குடந்தைக் காரோணம், திருவிடைமருதூர் முதலான தலங்களில் ஈசனை ஏத்தித் திருப்பதிகங் களை அருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார், திருவாவடுதுறையைச் சார்ந்தார். தந்தையாராகிய சிவபாத இருதயர் வேள்வியாற்றும் பொருட்டுப் பொருள் வேண்டும் எனக் கூறத் திருஞானசம்பந்தர், "இடரினும் தளரினும்" என, எடுத்தோதித் திருப்பதிகம் அருளிச் செய்தார். ஒரு பூதமானது விரைந்து வந்து, பீடத்தின் மீது ஆயிரம் பொற்கிழியை வைத்துச் சென்றது.

பின்னர், திருத்துருத்தி, மயிலாடுதுறை முதலிய திருத்தலங்களைப் பணிந்து திருப்பதிகங்கள் பாடித் திருத்தருமபுரம் சார்ந்தார்.

Koviloor Digital Library

11. யாழ் முரித்த எழிற்பதிகம்

திருஞானசம்பந்தருடைய திருப்பதிகங்களுக்கு யாழ் கொண்டு இசை மீட்டித் திருத்தொண்டு ஆற்றி வந்தவர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆவார். இவருடைய யாழின் இசையால் திருஞானசம்பந்தரின் திருப்பாடல்கள் பெருமை யுறுகின்றன எனச் சிலர் சொல்லக் கேட்டு மனம் வருந்திய பாணர், யாழின் இசைக்கு அடங்காதவாறு திருப்பதிகத்தை அருளிச் செய்ய வேண்டும் என விண்ணப்பித்தார். "மாதர் மடப் பிடி" என்னும் அரிய திருப்பதிகத்தை இசைத்த போது யாழ் முரிந்தது. யாழை உடைக்கும் நோக்கில் முனைந்த யாழ்ப்பாணரைத் தடுத்தருளினார், ஞானசம்பந்தர்.

பின்னர், சிவபெருமான் வீற்றிருக்கும் பதிகள் பல சார்ந்து, திருப்பதிகம் அருளிச் செய்து வணங்கித் திருநள்ளாறு சார்ந்தார். நீல நக்கரால் உபசரிக்கப் பெற்றுத் திருஞானசம்பந்தர் திருமருகல் என்னும் பதியை அடைந்தார்.

12. இறந்த மகனை உயிர் பெறச் செய்தது

திருமருகல் என்னும் தலத்தில் ஒரு வணிகப் பெண், தான் திருமணம் செய்து கொண்டு வாழ வேண்டும் என்று கருதியவனுடன் தங்கி இருக்க, அரவம் தீண்டி, அவ் ஆடவன் இறந்தான். அத்தகைய நிலையில் ஆற்றொணாத் துயரில் வாடிப் புலம்பிய அப் பெண்ணின் அழுகுரல் கேட்டு, ஆங்குப் போந்த திருஞானசம்பந்தர், "சடையா எனுமால்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை அருளிச் செய்து, அவ்

Koviloor Digital Library

வணிக மகனை உயிர் பெறச் செய்தார்; அவ்விரு வரையும் நன்கு வாழுமாறு செய்தார்.

திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர், திருவாரூர் முதலான திருத்தலங்களைச் சார்ந்து முக்கண் செல்வனை வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்த திருஞானசம்பந்தர், திருவீழிமிழலையை அடைந்தார்.

13. படிக்காசு பெறுதல்

திருவீழிமிழலையில், திருநாவுக்கரசர் உடன் திகழத் திருஞானசம்பந்தர், தம் அடியவர்களுடன் பெருமானை வணங்கி மகிழ்ந்திருக்கும் நாளில், கடுமையான பஞ்சம் வந்துற்றது. ஈசன் படிக்காசு அருளி இருபெரும் குரவர்களுக்கும் படி அளந்தனர். அதில் திருநாவுக்கரசருக்கு அளிக்கப் பெற்ற படிக்காசானது விரைவில் மாற்றப் பெற்று உரிய நேரத்தில் அவருடைய திருமடத்தில் உள்ள அடியவர் களுக்கு உணவு வழங்கப் பெற்றது. ஆனால், திருஞான சம்பந்தரின் திருமடத்தில் உள்ளவர்கள் காலம் தாழ்த்தி உணவு பெற்றனர். இதற்குக் காரணம், அவருக்கு அளிக்கப் பெற்ற படிக்காசு குற்றம் உடையதாக இருந்தது. இதனை அறிந்த திருஞானசம்பந்தர், "வாசி தீரவே காசு நல்கு வீர்" என எடுத்துத் திருப்பதிகம் ஓத, மாசு நீங்கிய காசு வழங்கப் பெற்றது. நற்காசு கொண்டு உரிய நேரத்தில் இவ்வடியார்கள் உணவு கொண்டனர்.

14. மறைக்கதவின் மாண்பு

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டில் எழுந்தருளிய போது, வேதங் களால் பூசிக்கப் பெற்ற மறைக்கதவமானது எவ்வாற்

Koviloor Digital Library

றானும் திறக்கப் பெறாமல் இருப்பதாக, ஆங்கு உள்ளவர்கள் இயம்பினர். திருநாவுக்கரசர், அக் கதவத்தைத் திறக்கப் பாட; திருஞானசம்பந்தர் திரும்ப மூடுமாறு பாடி அற்புதம் செய்தனர்.

அத் திருத்தலத்தில் இருந்து விடையேறும் பெருமானைப் பாடி மகிழ்ந்திருந்த காலத்தில், மதுரையில் சமணம் பரவிய தன்மையைத் தெரிவித்துப் பாண்டிமா தேவியாகிய மங்கையர்க்கரசியாரும் பாண்டிய மன்னனின் அமைச்சர் குலச்சிறையாரும் திருஞானசம்பந்தரை வருமாறு அழைப்பு விடுத்தனர்.

திருநாவுக்கரசர், நாளும் கோளும் சரியாக இல்லை எனத் தெரிவிக்கத் திருஞானசம்பந்தர், அவை, சிவனடியார்களை இடர் செய்யாது எனச் சாற்றிக் கோளறு பதிகம் பாடி அருளினார்.

15. பாண்டிய நாட்டில் பாலறாவாயர்

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் திருஞானச்சம்பந்தரைப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

திருஞானசம்பந்தரின் புகழை விரும்பாத சமணர்களில் சிலர், அவர் தங்கி இருந்த திருமடத்திற்குத் தீவைத்தனர். அதனை அறிந்த ஆளுடைய பிள்ளையார், இது அரசனின் நடுநிலைத் தன்மையிலிருந்து மாறுபட்டதால் நிகழ்வதென்பதைக் கண்டு, "பையவே சென்று பாண்டிற்கு ஆக" என அருளாணை பிறப்பித்தார். அத்தன்மையில் பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோய் பற்றியது. நோயால் அவதியுற்ற பாண்டிய மன்னன், பெருந்துன்பத்தை அடைந்தான். சமணர்கள் எத்தகைய தன்மையிலும் அவ்வெப்பு

Koviloor Digital Library

நோயைத் தீர்க்க முடியவில்லை. பின்னர், திருஞான சம்பந்தர், "மந்திரமாவது நீறு" என எடுத்து ஓதித் திருநீற்றுப் பதிகத்தை அருளிச் செய்தார். பாண்டிய னுடைய வெப்பு நோய் தீர்ந்தது.

சமணர்கள் அனல் வாதம், புனல் வாதம் செய்ய முற்பட்டனர். திருஞானசம்பந்தர், "போக மார்த்த" என்னும் திருப்பதிகத்தை ஓலையில் எழுதி நெருப்பில் இட, அது பச்சைப் பதிகமாக விளங்கியது. அது போல, புனல் வாதத்திலும் பாலறாவாயரின் திருப்பதிகம் சாற்றிய ஓலையானது வைகை ஆற்றின் வெள்ளத்தை எதிர்த்துச் சென்றது.

வாதங்களில் வெற்றி கொண்ட திருஞான சம்பந்தரின் அருள் வாக்காகிய, "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக!" எனத் திருப்பாசுரத்தை எடுத்தோதும் போது, கூன் பாண்டியனாக இருந்தவன் நின்றசீர் நெடுமாற னானார். இவர் அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. அமண் இருள் நீங்கிச் சைவ நன்னெறி தழைத்தது.

பின்னர், பாண்டிய நாட்டுத் தலங்கள் பல சென்று ஏத்தித் திருப்பதிகம் அருளிச் செய்து கேதீச்சரம் முதலான தலங்களை ஏத்தித் திருப்பதிகம் அருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார், பல தலங் களைச் சார்ந்து இறைவனைத் தரிசித்துத் திருப் பதிகங்களைப் பாடி அருளினார்.

16. ஓடம் செலுத்திய அற்புதம்

கொள்ளம்பூதூர் என்னும் தலத்தில், ஆற்றின் இருமருங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓட, ஓடம்

Koviloor Digital Library

செலுத்துபவர்கள் அச்சம் கொண்டு ஓடத்தைக் கரையில் கட்டி வெறுமனே இருந்தனர். திருஞான சம்பந்தர் ஓடத்தைக் கட்டிலிருந்து அவிழ்த்து விடுமாறு செய்து, அடியார் திருக்கூட்டத்துடன், "கொட்டமே கமழும்" எனத் தொடங்கும் திருப்பதிகம் அருளிச் செய்தார். ஓடமானது தாமாகவே உந்திச் சென்று மறுகரையை அடைந்தது. அத் திருத்தலத்தில் மேவும் பெருமானைத் தரிசித்து மகிழ்ந்து பல தலங்ககளைச் சார்ந்து ஈசனைத் தரிசித்துத் திருப்பதிகம் அருளிச் செய்யலானார்.

17. புத்தரை வாதில் வெல்லுதல்

போதி மங்கை சார்ந்த திருஞானசம்பந்தர், புத்த நந்தியை அருளால் வீழ்த்தி, வாதத்தில் வெற்றி கொண்டு புத்தர்களைப் பணியச் செய்தார். சீகாழிப் பதியை நோக்கி வரும் திருஞானசம்பந்தர், வழியில் உள்ள பல திருத்தலங்களையும் சார்ந்து உமா மகேசனை ஏத்தித் திருப்பதிகங்களை அருளிச் செய்தனர்.

18. அப்பர் காட்டிய அன்பு

திருப்பூந்துருத்தி முதலான திருத்தலங்களைத் தரிசித்து மகிழ்ந்த திருஞானசம்பந்தர், அப்பர் சுவாமிகளை நெஞ்சிற் கருதினார். அத்தருணம் அவர், "அப்பர் பெருமான் எங்குற்றார்?" என வினவ, திரு நாவுக்கரசர், "ஒப்பரிய தவம் செய்தேன் ஆதலினால் உம்மடிகள் இப்பொழுது தாங்கி வரப் பெற்றுய்ந் தேன்யான்" என்றார். அப்பர் சிவிகையைத் தாங்கி வந்ததை அறிந்தது கேட்டு அஞ்சி, கீழே இறங்கி

Koviloor Digital Library

அவரை ஏத்திய திருஞானசம்பந்தர், பன்முறை ஈசனைச் சார்ந்து இருவரும் வணங்கி மகிழ்ந்தனர்.

19. ஆண் பனை பெண் பனை ஆதல்

பின்னர், திருநாவுக்கரசரிடம் விடை கொண்டு, திருவடுகூர், திருவண்ணாமலை முதலான திருத்தலங்களை வணங்கித் திருப்பதிகம் அருளிச் செய்து ஏத்தித் திருவோத்தூர் சார்ந்தார்.

திருவோத்தூரில் எழுந்தருளியுள்ள வேத நாயகனைத் தரிசித்த நிலையில், ஆங்குள்ள சிவனடியார்கள், இங்குற்ற யாவும் ஆண் பனை ஆயின என மொழிந்து, இது சமணர்களின் நகைப்பிற்கு இடமாயிற்று என விண்ணப்பித்தனர். திருஞானசம்பந்தர், இப்பனை குலை ஈனும் எனத் திருவாய் மலர்ந்து, “பூத்தேர்ந்தாயன” என எடுத்தோதித் திருப்பதிகம் அருளிச் செய்தார். ஆண் பனை யாவும் பெண் பனையாய் மாறிக் குலைகளை ஈன்றன.

ஆங்கிருந்து, குரங்கணில்முட்டம் சென்று இறைஞ்சிக் காஞ்சி நகர் அணைந்தார். செம்பொன் மலைக் கொடி தழுவக் குழைந்தருளும் திருமேனிக் கம்பரை வணங்கித் திருப்பதிகங்கள் அருளிச் செய்து ஏத்தித் திருக்காமக் கோட்டம் சார்ந்து இறைஞ்சினார், திருஞானசம்பந்தர். பின்னர் திருமாற்பேறு, திருவல்லம், இலம்பையங்கோட்டூர், திருவூரல், திருவாலங்காடு, திருப்பாசூர் முதலாகிய திருத்தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகங்கள் அருளிச் செய்த ஆளுடைய பிள்ளையார், திருக்காளத்தி சார்ந்து ஈசனைப் பாடிப் போற்றினார். ஆங்கிருந்தவாறு வடநாட்டுத் தலங்களை ஏத்தித் திருவலிதாயம்

Koviloor Digital Library

முதலான தலங்களை வணங்கிப் பாடி, மயிலை நகர் சார்ந்தார்.

21. எலும்பைப் பெண்ணாக்கிய பேரருள்

திருமயிலையில் சிவநேசர் என்பவரின் மகளாகிய பூம்பாவை, அகால மரணமுற்ற நிலையில் அவளது எலும்பினைத் திருஞானசம்பந்தர் திருமுன்னர் வைத்தனர். அவர், திருக்கோயில் திருவிழாக்களின் பொலிவைப் போற்றி, "மட்டிட்ட புன்னையம் கானல் மடமயிலை" எனத் தொடங்கித் திருப்பதிகம் அருளிச் செய்ய, அவ் எலும்பு பெண் ணாக மாறியது.

22. பெருஞ் சோதியில் கலத்தல்

திருமயிலையிலிருந்து தலங்கள் தோறும் சென்றணைந்து ஈசனை ஏத்திய திருஞானசம்பந்தருக்கு திருமணம் செய்ய விழைந்தனர், சிவபாத இருதயர். நன்னாளில் திருமண நிகழ்ச்சி இனிது நடந்தது. உலக வாழ்க்கையினும் மேலான நிலையை மக்கள் யாவரும் பெறவேண்டும் என்னும் கருணை மேலிட, "கல்லூர்ப் பெரு மணம்" எனத் தொடங்கும் திருப்பதிகத்தை ஓதியருளினார். திருக்கோயிலின் கண்பெருஞ்சோதி வெளிப்பட்டது. ''காதலாகக் கசிந்து'' எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகத்தினை அருளிச் செய்து, திருமணம் காண வந்தவர்கள் அனைவருக்கும் முத்திப் பேற்றினை அளித்துத் தமது துணைவியாரின் கரத்தைப் பற்றிய திருஞானசம்பந்தர், அச்சோதியிற் கலந்தனர்.

திருஞானசம்பந்தர் திருக்கழல் போற்றி!

Koviloor Digital Library

பண்களின் வரிசை — அட்டவணை

மூன்றாம் திருமுறை

வ. எண்.	பண்	பதிக எண்கள்	மொத்த பதிகம்
1.	காந்தார பஞ்சமம்	259–282	24
2.	கொல்லி	283–299	17
3.	கொல்லிக் கௌவாணம்	300	1
4.	கௌசிகம்	301–314, 372	15
5.	பஞ்சமம்	315–324	10
6.	சாதாரி	325–357	33
7.	பழம் பஞ்சுரம்	358–374	17
8.	புறநீர்மை	375–381	6
9.	அந்தாளிக் குறிஞ்சி	382–383	2
	ஆக		125
	பிற்சேர்வு		
1.	கொல்லி	1	1
2.	பண்ணடைவு குறிப்பில்லை	2	1
3.	கௌசிகம்	3	1
	ஆக		3

Koviloor Digital Library

திருத்தலமும் திருப்பதிகங்களும் அட்டவணை

வ. எண்.	திருத்தலம்	பதிகத்தின் தொடக்கம்	பதிக எண்.
(1)	(2)	(3)	(4)
1.	திருஅம்பர்பெருந்திருக் கோயில்	எரிதரஅனல்	277
2.	திருஅம்பர்மாகாளம்	படியுளார்	351
3.	திருஅரதைப்பெரும்பாழி	பைத்தபாம்பு	288
4.	திருஅவள்இவள்எல்லூர்	கொம்பிரிய	340
5.	திருஆரூர்	அந்தமாய்	303
6.	திருஆலவாய்	மானினேர்விழி காட்டுமா செய்யனே வீடலாலவாய் வேதவேள்வி ஆலநிழலு மங்கையர்க்கரசி	297 305 309 310 366 373 378
7.	திருஆவடுதுறை	இடரினம்தளரினும்	262
8.	திருஆனைக்கா	வானைக்காவில்	311
9.	திருஇராமேச்சுரம்	அலைவளர் திரிதரும்	268 359
10.	திருஇன்னம்பர்	எண்திசைக்கும்	353
11.	திருஉசாத்தானம்	நீரிடை	291
12.	திருஏடகம்	வன்னியும்	290
13.	திருஒற்றியூர்	விடையவன்	315
14.	திருஓமாம்புலியூர்	பூங்கொடி	380

Koviloor Digital Library

(1)	(2)	(3)	(4)
15.	திருக்கச்சியேகம்பம்	கருவார்கச்சி பாயுமால்	299 372
16.	திருக்கச்சிநெறிக் காரைக்காடு	வாரணவு	323
17.	திருக்கடவூர்	சடையுடை	266
18.	திருக்கண்டியூர்	வினவினேன்	296
19.	திருக்கயிலாயம் திருக்கயிலாயமும் திருவானைக்காவும் திருமயேந்திரமும் திருவாரூரும்	வாளவரிகோள மண்ணது	326 367
20.	திருக்கருக்குடி	நனவிலும்	279
21.	திருக்கருகாவூர்	முத்திலங்கு	304
22.	திருக்கலிகாமூர்	மடல்வரை	363
23.	திருக்கழிப்பாலை	வெந்தருங்கிலிய	302
24.	மேலைத்திருக்காட்டுப் பள்ளி	வாருமன்னும்	287
25.	திருக்காழி கொச்சைவயம் கழுமலம் சண்பை நகர் தோணிபுரம் புறவம் வெங்குரு	சந்தமார் யாமாமா திருந்துமா மண்ணில்நல்ல உற்றுமை மடல்மலி எந்தமது சங்கமருமுன் கரும்பமர் பெண்ணிய விண்ணவர்	301 375 347 282 371 376 333 339 358 342 352

Koviloor Digital Library

(1)	(2)	(3)	(4)
	பிரமபுரம்	கரமுனம்	295
		இறையவன்	314
		சுரர்உலகு	325
		வரமதே	368
	புகலி	இயலிசை	261
		கண்ணுதலானும்	265
	பூந்தராய்	பந்துசேர்	260
		தக்கன்வேள்வி	263
		மின்னனஎயிறு	271
26.	திருக்காளத்தி	சந்தமார்அகில்	294
		வானவர்கள்	327
27.	திருக்கானப்பேர்	பிடியெலாம்	284
28.	திருக்குடமூக்கு	அரவிரிகோடல்	317
29.	திருவடகுரங்காடுதுறை	கோங்கமே	349
30.	திருக்குருகாவூர் வெள்ளடை	சுண்ணவெண்	382
31.	திருக்கொள்ளம்பூதூர்	கொட்டமேகமழும்	264
32.	திருக்கோள்ளிக்காடு	நிணம்படுசுடலை	274
33.	திருக்கோகரணம்	என்றும்அரி	337
34.	திருக்கோட்டாறு	வேதியன்விண்	270
35.	திருக்கோணமலை	நிரைகழல்	381
36.	திருக்கோயில் (தில்லை)	ஆடினாய்நறு	259
37.	திருச்சக்கரப்பள்ளி	படையினார்	285
38.	திருச்சாத்தமங்கை	திருமலர்	316
39.	திருச்சிற்றேமம்	நிறைவெண்	300
40.	திருச்சிறுகுடி	திடமலிமதி	355

Koviloor Digital Library

(1)	(2)	(3)	(4)
41.	திருச்செங்காட்டங்குடி	பைங்கோட்டு	321
42.	திருச்சேறை	முறியுறுநிறமல்கு	344
43.	திருத்தண்டலைநீள்நெறி	விரும்பும்	308
44.	திருத்திருந்து தேவன்குடி	மருந்துவேண்டில்	283
45.	திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்	ஓங்கிமேல்	348
46.	திருத்தென்குடித்திட்டை	முன்னைநான்	293
47.	திருத்தேவூர்	காடுபயில்	332
48.	திருநல்லூர் (காவிரித் தென்கரைத்தலம்)	வண்டிரிய	341
49.	திருநல்லூர்ப்பெருமணம் (காவிரி வடகரைத்தலம்)	கல்லூர்ப்பெருமணம்	383
50.	திருநள்ளாறு	தளிரிளவளர்	345
51.	திருநாரையூர்	காம்பினை கடலிடை	360 365
52.	திருநெல்வெண்ணெய்	நல்வெணெய்	354
53.	திருநெல்வேலி	மருந்தவை	350
54.	திருப்பட்டீச்சரம்	பாடல்மறை	331
55.	திருப்பந்தணைநல்லூர்	இடறினார்	379
56.	திருப்பரிதிநியமம்	விண்கொண்ட	362
57.	திருப்பல்லவனீச்சரம்	பரசுபாணி	370
58.	திருப்பனந்தாள்	கண்பொலி	320
59.	திருப்புனவாயில்	மின்னியல்	269
60.	திருப்பூவணம்	மாதமர்மேனி	278
61.	திருப்பெருவேளூர்	அண்ணாவும்	322

Koviloor Digital Library

(1)	(2)	(3)	(4)
62.	திருப்பைஞ்ஞீலி	ஆரிடம்பாடிலர்	272
63.	திருமயிலாடுதுறை	ஏனஎயிறு	328
64.	திருமயேந்திரப்பள்ளி	திரைதருபவள	289
65.	திருமழபாடி	காலையார் அங்கையார்	286 306
66.	திருமாகறல்	விங்குவிளை	330
67.	திருமாணிகுழி	பொன்னியல்	335
68.	திருமுதுகுன்றம்	வண்ணமா முரசதிர்ந்து	292 357
69.	திருவக்கரை	கறையணி	318
70.	திருவலஞ்சுழி	பள்ளமதாய	364
71.	திருவலம்புரம்	கொடியுடை	361
72.	திருவான்மியூர்	விரையார் கொன்றை	313
73.	திருவிசயமங்கை	மருவமர் குழல்	275
74.	திருவிளமர்	மந்தகம் அணிபெற	346
75.	திருவிற்கோலம்	உருவினார் உமை	281
76.	திருவீழிமிழலை	கேள்வியர் சீர்மருவு மட்டொளி வெண்மதி வேலினேர் துன்றுகொன்றை புள்ளித்தோல்	267 338 343 356 369 374 377
77.	திருவெண்காடு	மந்திரமறை	273
78.	திருவெண்டுறை	ஆதியன்	319
79.	திருவேட்டக்குடி	வண்டிரைக்கும்	324

Koviloor Digital Library

Koviloor Digital Library

259. கோயில்

தல விளக்கம்: காவிரி வடகரையில் உள்ள தலங்கள் 127இல் இது முதலாவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. சிதம்பரம், தில்லைவனம், பெரும்பற்றப் புலியூர் என்பன வேறு பெயர்கள். கோயில் என்பது எல்லாத் தலங்களுக்கும் பொதுப் பெயராக வழங்கப் பெற்றாலும், அச் சொல்லானது, இத்தலத்தின் சிறப்புப் பெயராக விளங்குவதாகும். இத்திருக்கோயிலுள், பேரம்பலம், சிற்றம்பலம், கனக சபை, நிருத்த சபை, இராஜ சபை என்னும் ஐந்து சபைகள் உள்ளன. திருமூலட்டானம் என்பது இக்கோயிலுள் தனித்துத் திகழ்வதாகும்.

பஞ்ச சபைகளுள் இது, பொற்சபை; தரிசிக்க முத்தி தரும் திருத்தலம். பஞ்சபூதத் தலங்களுள் ஆகாயம் இதுவே.

மற்றும், முதல் திருமுறை பதிகம் எண் 80 காண்க.

சுவாமி : நடராசர், அம்பலவாணர், கனகசபாபதி, கூத்தபிரான், திருமூலட்டான நாதர்

அம்பிகை : சிவகாமசுந்தரி, உமையம்மை

தல மரம் : தில்லை, ஆல்

தீர்த்தம் : சிவகங்கை

பதிகக் குறிப்பு: தில்லைவாழ் அந்தணர்கள் திருஞான சம்பந்தரை வணங்கினர். அவர்கள் வணங்கும் முன்னர் ஆளுடைய பிள்ளையார், அவ் அந்தணர் களை வணங்கினார். ஈசன் திருவருளால், அவர்கள் அனைவரும் சிவ கண நாதராய்த் திகழ்ந்தனர்.

Koviloor Digital Library

அத்திருக்காட்சியைத் திருஞானசம்பந்தர், உடன் இருந்த பாணருக்கும் காட்டிக் குவித்த கரங்களுடன் திருமுன்னர் சென்றடைந்து வழிபட்டுத் திருப்பதிகள் அருளிச் செய்யலானார்.

சிவ பூசையின்போது ஓதப்பெறும் திருப்பாசுரங் களுள் இஃதும் ஒன்று ஆகும்.

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

1. ஆடினாய்நறு நெய்யொடு பால்தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய்இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்திங்கள்
சூடினாய் அருளாய் சுருங்கஎம தொல்வினையே.

தெளிவுரை: நறுமணம் கமழும் பிரணவ புட்பம் என்று சொல்லப்படுகின்ற கொன்றை மலரை விரும்பி அணிந்துள்ள பெருமானே! நன்மணம் விளங்கும் நெய்யும் பாலும் தயிரும் அபிடேகமாக ஏற்று மகிழ்ந்து விளங்குகின்ற நாதனே! தில்லைவாழ் அந்தணர் என்னும் சிறப்புப் பொருந்திய அந்தணர்களின் உடனாகிப் பிரியாத நிலையில் திகழும் ஈசனே! சிற்றம் பலத்தில் மேவும் அம்பலக் கூத்தனே! வேதங்கள் முதலான, கீதங்களை நவின்றருளிய ஈசனே! கங்கை தரித்தமையால் பனித்துக் குளிர்ந்து விளங்கும் சடை முடியின்கண், வெண் திங்களைச் சூடிய பரமனே! எமது தொல்வினையாகிய சஞ்சித, பிராரத்த கன்மத்தை நீக்கி அருள்வீராக.

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசன், நடனக் கோலத்தில் விளங்கும் குறிப்புத் தோன்றுமாறு "ஆடினாய்" என்னும் சொல் உணர்த்துவதாயிற்று. அப்பெருமான் கொள்ளும் அபிடேகப் பொருள்களாக நெய், பால், தயிர் ஆகியன விளங்குதலும், இவண் சுட்டப் பெற்றது. "நெய்யும், பாலும், தயிரும் கொண்டு நித்தம் பூசனை செய்ய லுற்றார் எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஈசனாருக்குச் செய்விக்கும் பூசைப் பொருள்களாக ஓதி அருளிய பாங்கும் ஓர்க.

ஈசன் தில்லைவாழ் அந்தணர்களுள் ஒருவராக விளங்குகின்றார் என்னும் மெய்ம்மையும், அப் பெருமான் திருநடம்புரியும் சபையானது சிற்றம்பலம் என்பதும், அப்பெருமானைக் கண்டு தரிசிக்க முத்தி நிலை வாய்க்கும் என்னும் சிறப்பும் தோன்ற, "அந்தணர் பிரியாத சிற்றம்பலம் நாடினாய்" என உணர்த்தப் பெற்றது.

'திங்கள் சூடினாய் அருளாய்' என்பது ஈசனார்தம் குளிர்ந்த அருட்பாங்கும், வெண் திங்களுக்கு அருள் புரிந்த மாண்பினை ஒத்த சிறப்பானது, அடியவர் களாகிய எங்களுக்கும் அமையப்பெற வேண்டும் என்னும் வேட்கையையும் உணர்த்துவதாயிற்று.

வினையானது, துன்பங்கள் யாவற்றுக்கும் காரண மாதலும், அவை மன்னுயிரின் அறிவிற்கும் அப்பாற் பட்டதாதலும், அவற்றின் பெருவடிவத்தை அறியப் பெறாத நிலைமையும், அதன்வழி நேரப் பெறும் பிறவியின் பெருக்கத்தைக் களைதலும் இத்திருப் பாட்டு சுட்டுவதாயிற்று. ஈரம் வற்றிய பஞ்சானது நெருப்பில் தீய்தல் போன்று, இறைவன் திருவருளால் வினையானது நீக்கம் பெற வேண்டும் என்பதும்

Koviloor Digital Library

"சுருங்க எம தொல்வினையே" என ஓதப் பெறுவதாயிற்று.

சுருங்க – இன்மையாதல்.

2. கொட்டமேகம ழும்குழ லாளொடு
கூடினாய்எரு தேறினாய்நுதற்
பட்டமே புனைவாய் இசைபாடுவ பாரிடமா
நட்டமே நவில்வாய் மறை யோர்தில்லை
நல்லவர்பிரி யாதசிற் றம்பலம்
இட்டமா உறைவாய் இவை மேவியது என்னைகொலோ

தெளிவுரை: நறுமணம் கமழும் கூந்தலையுடைய உமாதேவியுடன் இணைந்து, இடபவாகனத்தில் வீற்றிருக்கும் நாதனே! நெற்றியின்கண் வீரப்பட்டம் புனைந்து, பூதகணங்கள் இசை பாட, நடம் புரியும் நாயகனே! வேத விற்பன்னராய் விளங்குகின்ற தில்லை வாழ் அந்தணர்கள், பிரிவில்லாது மேவும் திருச்சிற்றம் பலத்தில் (விரும்பி) வீற்றிருப்பவனே! இவற்றினைப் பொருந்தியது தான் என்கொல்!

சிறப்புரை: ஏலவார் குழலி என்னும் அம்பிகையின் பெயரினைச் சுட்டும் தன்மையில், கொட்டம் கமழும் குழலாள் என உணரத்தப் பெற்றது. மறையோதும் நன்னெறியுடைய அந்தணர்கள் விளங்கும் சிற்றம் பலத்தின்கண், ஈசன், உமாதேவியை ஒருபால் இருத்தி விடையின்மீது ஏறிப் பூதகணங்கள் பாட நடம் பயின்று, நெற்றியில் வீரப்பட்டம் கொண்டும் விளங்குவது என்கொல் என வியந்து ஓதி, ஏத்திய பாங்கினை நோக்குக.

கொட்டம் – நறுமணம், வாசனை. நல்லவர் – அந்தணர்.

Koviloor Digital Library

3. நீலத்தார்கரிய மிடற்றார் நல்ல
நெற்றிமேல்உற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப்பொடி நீறணி வார்சடையார்
சீலத்தார்தொழுது ஏத்துசிற்றம் பலம்
சேர்தலால்கழற் சேவடி கைதொழக்
கோலத்தாய்அரு ளாய்உன காரணம் கூறுதுமே.

தெளிவுரை: *ஈசன், நீல வண்ணம் பொருந்திய கரிய கண்டத்தையுடையவர்; அழகிய நெற்றியின் மீது ஒரு கண்ணுடையவர்; சூலப் படையைக் கரத்தில் ஏந்தி விளங்குபவர்; சுடலையின் சாம்பலைத் திருமேனியில் குழையப் பூசியவர்; நீண்ட சடைமுடியுடையவர்; அப்பெருமான், ஆசார ஒழுக்க நெறியால் திகழும் அந்தணர்கள் தொழுது போற்றும் சிற்றம்பலத்தில் விளங்குபவர்; அனைவராலும் ஏத்தி வழிபடும் அத் திருக்கோலத்தையுடையவர்; அவர் எமக்கு அருள் புரிவாராக!*

சிறப்புரை: *நீலகண்டம், நெற்றிக்கண், சூலப்படை, சுடலைப் பொடி, சடைமுடி ஆகியவற்றுடன் மேவும் திருக்கோலத்தினராகிய ஈசன், சீலம் மிகுந்த தில்லை வாழ் அந்தணர்களால் ஏத்தப் பெறும் மாண்பு இவண் ஓதப் பெறுவதாயிற்று. ஈசனின் திருக்கோலத்தைப் படர்க்கையிலும், அருள்புரியும் பாங்கினை முன்னிலைப்படுத்தியும் விளம்பப் பெறும் அருள் தன்மையினை நோக்குக.*

ஈசன், தோணிபுரத்து வேந்தருக்குக் காட்சி நல்கிய பேற்றினைச் "சுடலைப் பொடி பூசி என் உள்ளம் கவர் கள்வன்" எனச் (முதல் திருமுறை, முதல் திருப்பதிகம், முதல் பாட்டு) சுட்டியவாறு "சுடலைப் பொடி நீறணிவார்'' என இத்திருப்பாட்டில் உணர்த்தப்

Koviloor Digital Library

பெற்றது. தில்லைவாழ் அந்தணர்தம் சிறப்பினைத் "தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த செம்மையாலும் அறிக.

4. கொம்பலைத்தழகு எய்திய நுண்ணிடைக்
கோலவாள்மதி போலமுகத்திரண்டு
அம்பு அலைத்தகண்ணாள் முலைமேவிய வார்சடையான்
கம்பலைத்துஎழு காமுறு காளையர்
காதலால் கழற் சேவடிகைதொழ
அம்பலத்துறைவான் அடியார்க்கு அடையா வினையே.

தெளிவுரை: பூங்கொம்பு போன்ற நுண்ணிய இடையுடைய உமாதேவியைப் பாகம் கொண்டு மேவும், சடைமுடியுடைய ஈசனின் அரநாமத்தை, ஆரவாரித்துக் காளை போன்ற மிடுக்குடைய தில்லை வாழ் அந்தணர்கள் ஓதுவார்கள். பக்தியுடன் அப்பெருமானைப் கைதொழும் அடியவர்களுக்கு, வினையானது பற்றி நிற்காது.

சிறப்புரை: அம்பிகையின் திருப்பெயராகிய சிவகாம சுந்தரி என்கிற நாமரூப விளக்கத்தை முதல் மூன்று அடிகளில் வியந்து ஓதப்பட்டது. இடபம் போன்ற கம்பீரமும் மிடுக்கும் உடைய பண்பானது, ஈசனுக்கு அணுக்கமாக விளங்கும் தில்லைவாழ் அந்தணர் களின் செம்மையினைக் குறித்தது. இது "கம்பலைத்து எழு காமுறு காளையர்" என உணர்த்தப் பெற்றது.

மன்னுயிரின் வினைக்கேற்றவாறு பிறவித் துன்பமானது நேரும் என்பது, சாத்திர நூற்களில் கூறப்பட்ட மெய்ம்மை. இதன் வழி "தரிசிக்க முத்தி" எனும் பெருமையுடைய இத்திருத்தலத்தின் மகிமை யினை இத்திருப்பாட்டு சுட்டுவதாயிற்று. நல்வினை,

Koviloor Digital Library

தீவினையாகிய இருவகைப்பட்ட வினைகளும், உயிர் களைப் பற்றாதவாறு ஈசன் புரியும் அருட்செயலானது, ஈண்டு சுட்டப்பெற்றது. இது ஆகாமியத்தை உணர்த்தும். சஞ்சிதம், பிராரத்தம் ஆகிய வினைகளும் விலகிச் செல்லும் என்னும் குறிப்பும், இவண் ஈசனார் தம் அருளிச் செயலாகும் என உணர்த்துவது ஆயிற்று.

கம்பலைத்து – ஆரவாரித்து, வேதம் ஓதுதலின் பாங்கு விவரித்தலாம்.

5. தொல்லையார்அமு துண்ணநஞ் சுண்டதோர்
 தூமணி மிடறா பகுவாய தோர்
பல்லையார் தலையிற் பலியேற்றுழல் பண்டரங்கா
தில்லையார்தொழுது ஏத்து சிற்றம்பலம்
 சேர்தலால்கழற் சேவடிகைதொழ
இல்லையாம்வினை தான்எரியம் மதில் எய்தவனே.

தெளிவுரை: பண்டைக் காலத்தில் தேவர்கள், அமுது உண்ணும் பொருட்டுத் தானே நஞ்சினை உட்கொண்டு, நீலகண்டனாகத் திகழும் பெருமானே! பிரம கபாலத்தை ஏந்திப் பலி ஏற்றுப் பாண்டரங்கக் கூத்து ஆடிய நாதனே! அசுரர்களின் மூன்று மதில் களும் எரிந்து சாம்பலாகுமாறு செய்த ஈசனே! தில்லை வாழ் அந்தணர்கள் தொழுது ஏத்துகின்ற சிற்றம்பலத்தில் வீற்றிருக்கும் தேவரீரே! உமது கழலிணையைத் தொழுது போற்ற, வினை யாவும் நீங்கும்.

தில்லையார் – தில்லைவாழ் அந்தணர்; சிற்றம்பலம் – நடராசப் பெருமான் வீற்றிருக்கும் சபை; இல்லையாம் வினை – தரிசிக்க முத்தி என்னும் தல விசேடத்தைச் சுட்டுதலாயிற்று.

6. ஆகந்தோய்அணி கொன்றை யாய்அனல்
 அங்கையாய்அம ரர்க்கம ராவுமை
பாகந்தோய் பகவா பலியேற்றுழல் பண்டரங்கா

Koviloor Digital Library

மாகந்தோய்பொழில் மல்கு சிற்றம்பலம்
மன்னினாய்மழு வாளினாய் அழல்
நாகந்தோய் அரையாய் அடியாரை நண்ணா வினையே.

தெளிவுரை: *திருமேனியில் அழகிய கொன்றை மாலை திகழ, திருக்கரத்தில் நெருப்பு ஏந்திய தேவாதி தேவனே! உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்கும் பகவானே! கபாலம் ஏந்திப் பலியேற்று, வானளாவிய பொழில் மல்கும் தில்லைச் சிற்றம் பலத்தில் விளங்கும் நாதனே! மழுப் படை உடை யவனாய், நாகத்தை அரையில் கட்டி மேவும் ஈசனே! அடியவர்களுக்கு வினையானது பற்றாதவாறு அருள் பாலிக்கும் இறைவர், நீவிரே ஆவர்.*

ஆகம் – திருமேனி; மாகம் – வான், ஆகாயம்.

7. சாதியார்பளிங் கின்னொடு வெள்ளிய
சங்கவார்குழை யாய்திக ழப்படும்
வேதியா விகிர்தா விழவாரணி தில்லை தன்னுள்
ஆதியாய்க்கிடம் ஆயசிற் றம்பலம்
அங்கையால்தொழ வல்லடி யார்களை
வாதியாதகலும் நலியாமலி தீவினையே.

தெளிவுரை: *உயர்ந்த வகையான பளிங்குபோன்று, வெண்மையான சங்கினால் ஆகிய குழையைக் காதில் அணிந்துள்ள ஈசனே! பெருமை திகழும் நான்கு வேதங்களும் ஆகிய விகிர்தனே! விழாக்கள் மலிந்த தில்லையில், ஆதியாக விளங்கிச் சிற்றம்பலத்தில் மேவும் நாதனே! தேவரீரைத் தமது கரங்களால் தொழ வல்லவர்களுக்குத் தீவினையானது, துன்புறுத்தாது அகன்று ஏகும்.*

சிறப்புரை: *தீவினையின் தாக்கத்தை நுகர்தல் மன்னுயிர்க்கு உரித்தாதலும், ஆயினும் திருத்தலத்தின்*

Koviloor Digital Library

மகிமையானது, அத்தகைய துன்பத்திலிருந்து விடுவித்து அருள் புரிதலும் இவண் சுட்டப் பெற்றது.

வாதியா – துன்புறுத்தாது.

8. வேயினார்பணைத் தோளியொ டாடலை
வேண்டி னாய்விகிர் தாஉயிர் கட்கமுது
ஆயினாய்இடு காட்டெரி யாடல் அமர்ந்தவனே
தீயினார்கணை யால் புரம்மூன் றெய்த
செம்மையாய் திகழ்கின்ற சிற்றம்பலம்
மேயினாய்கழலே தொழுது எய்துதும் மேலுலகே.

தெளிவுரை: மூங்கிலைப் போன்ற தோளுடைய உமாதேவியுடன் சேர்ந்து நடனம் ஆடுதலை விரும்பிய விகிர்தனே! மன்னுயிர்களுக்குப் பேரின்பம் நல்கும் நல்லமுது ஆகிய பரமனே! மயானத்தில் நெருப்பினை ஏந்தி நின்று ஆடும் இறைவனே! முப்புரங்களை அக்கினிக் கணை தொடுத்து எரியுமாறு செய்த செம்மையுடையவனே! சிற்றம்பலத்தில் வீற்றிருக்கும் நடராசனே! தேவரீரின் திருக்கழலைத் தொழுது வணங்க, மேலான உலகினில் வாழும் பேறு உண்டாகும்.

சிறப்புரை: இம்மை நலனைக் காட்டும் தன்மையில் உயிர்கட்கு அமுது ஆயினாய் எனவும், மறுமையில் வீட்டுலகம் - மூத்திப் பேறு, வாய்த்தவை "எய்துதும் மேலுலகே" எனவும் உணர்த்தப் பெற்றது. இது "தரிசிக்க முத்தி" என்னும் திருத்தலச் சிறப்பினை நவில்வது ஆயிற்று.

9. தாரினார்விரி கொன்றையாய்மதி
தாங்குநீள்சடை யாய்தலைவாநல்ல
தேரினார்மறுகின் திருவாரணி தில்லைதன்னுள்

Koviloor Digital Library

சீரினால்வழிபாடு ஒழியாத தோர்
செம்மையால்அழ காய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உனசீரடி யேத்துதுமே.

தெளிவுரை: கொன்றை மலர் மாலை தரித்து மேவும் பெருமானே! நீண்ட சடைமுடியில் சந்திரனைத் தரித்த நாதனே! எம் தலைவனே! அழகு பொலியும் தேரோடும் வீதிகளையுடைய செல்வத் தில்லையுள், சாத்திரத்தில் விதித்தவாறு வழிபாடு செய்யப்பெறும் சிற்றம்பலத்தில் அழகு மிளிரத் திகழும் பரமனே! தேவரீரின் சீர் மிக்க திருவடியைப் பரவி ஏத்து கின்றோம்.

சிறப்புரை: யாவர்க்கும் மேலான பொருளாக விளங்கும் ஈசனைத் தலைவன் என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் திருநாவுக்கரசர்,

முன்னம் அவனிருக்கும் நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள்தன் நாமம்கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

– ஆறாம் திருமுறை; 25 திருவாரூர்; பாடல் 258.

எனத் தலைவனாகிய ஈசனின் பெருமையினை உணர்த்தியதும் கொள்க.

தரிசிக்க முத்தி தரும் சிறப்பினை நல்கும் திருவடி, "சீரடி என" உணர்த்தப் பெற்றது. அத்தகைய சீரடியின் சிறப்பினை ஏற்ற மன்னுயிரானது, வாழ்த்த வாயும்,

Koviloor Digital Library

நினைக்க மட நெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை ஏத்துதல் கடனென்றும் உணர்த்தியது. இதனைக் "கரங்குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க, சிரங்குவிவார் ஓங்கு விக்கும் சீரோன் கழல் வெல்க" என மாணிக்கவாசகர் அருளிச் செய்த வண்ணமும் நோக்குக.

தில்லைவாழ் அந்தணர்கள் நடராசப் பெருமானுக்குச் செய்யும் வழிபாடானது, சீரினால் வழிபாடு ஒழியாத என ஓதப்பெற்றது.

10. வெற்றரை யுழல்வார் துவர் ஆடைய
 வேடத்தாரவர்கள் உரைகொள்ளன்மின்
மற்றவர் உலகின் வைலம்மவை மாற்றகில்லார்
கற்றவர் தொழுது ஏத்து சிற்றம்பலம்
 காதலால் கழற் சேவடிகை தொழ
உற்றவர் உலகின் உறுதிகொள வல்லவரே.

தெளிவுரை: சமணர்களும், சாக்கியர்களும் சொல்லும் உரைகளை ஒரு பொருட்டாகக் கொள்ள வேண்டாம். மன்னுயிர்களுக்கு, விதியின் வசத்தால் நேரும் துன்பங் களை அவர்களால் தீர்க்க இயலாது. வேதங்களை நன்கு கற்றுத் தேர்ந்து, அவற்றின் மாண்பினை நன்கு உணர்ந்த அந்தணர்கள் தொழுதேத்தும் சிற்றம் பலத்தின் மேன்மையினை அறிந்து, ஆங்கு, ஆடல் புரியும் நடராசப் பெருமானுடைய சேவடியைத் தொழுது போற்றும் அடியவர்கள், மனிதப் பிறவியின் பயனை அடைந்தவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: நடராசப் பெருமான் வீற்றிருக்கும் சிற்றம் பலத்தின் சிறப்பும், ஆங்கு நடம்புரியும் நாதனின் கழற் சிறப்பும் ஒருசேர உணர்த்தப் பெற்றது. இத்தன்மை

Koviloor Digital Library

யினைத் "தொழுது ஏத்து சிற்றம்பலம் காதலால் கழற் சேவடிகைதொழ" என அருளிச் செய்யப்பட்டது.

மன்னுயிர்க்கு உறுதி பயத்தல் என்னும் பாங்கு, "உலகின் உறுதி" எனப் பேசப்பட்டது. பிறவியின் பயனாக அடையும் பெருமையே, மன்னுயிருக்கு உறுதியாதல் எனவும், அது பிறவாப் பேற்றினை அடைதல் என்பதும் கொள்க. அத்தகைய பேறு, ஈசனைத் தரிசித்தலால் வாய்க்கும் என்பது, இத்திருப்பாட்டு உணர்த்தும் மெய்ம்மையாகும்.

கற்றவர் – வேதங்களில் வல்ல தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழ;
உற்றவர் – அடியவர் பெருமக்கள்.

11. நாறுபூம்பொழில் நண்ணிய காழியுள்
நான்மறைவல்ல ஞானசம்பந்தன்
ஊறும் இன்தமிழால் உயர்ந்தார்உறை தில்லைதன்னுள்
ஏறுதொல்புகழ் ஏந்துசிற்றம் பலத்து
ஈசனை இசையாற் சொன்ன பத்திவை
கூறு மாறு வல்லார் உயர்ந்தாரொடும் கூடுவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நறுமணம் கமழும் பொழில்கள் திகழும் சீகாழி நகரில் மேவும் நான்கு மறைகளிலும் தேர்ந்த ஞானசம்பந்தன், அன்பினால் திளைக்கச் செய்யும் இனிய தமிழ்ப் பாடல்களால், உயர்ந்த பெரு மக்களாகிய வேதங்களில் வல்ல அந்தணர்கள் விளங்கு கின்ற தில்லையில், தொன்மையாய் விளங்கும் புகழ் மிக்க சிற்றம்பலத்துள் நடம்புரியும் ஈசனைப் போற்றி இசையுடன் சொன்ன இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், உயர்ந்து மேவும் பெருமக்களுடன் சேர்ந்து வாழ்வார்கள்.

Koviloor Digital Library

சிறப்புரை: தில்லைவாழ் அந்தணர்கள் சிவ கணங்களாகக் காட்சியுற்ற தன்மையும், ஈசனே அந்தணர்களுள் ஒருவராக விளங்குகின்றார் என்னும் மாண்பும் தோன்ற 'உயர்ந்தார் உறைதில்லை' என உணர்த்தப் பெற்றது. அந்நெறியில், இத்திருப்பதிகத்தை ஓதி உரைத்து விளங்கும் அடியவர்கள், அத்தகையோர் பால் கூடி இருப்பார்கள் எனக் கொள்க.

ஊறும் இன் தமிழ் – இனிமையின் ஊற்றம் உடைமை குறித்தது; உயர்ந்தார் – அந்தணர்கள்

குறிப்பு: பொதுவாகக் குறிக்கப் பெறும் இராவணனுடைய குறிப்பும், திருமால் பிரமன் அடிமுடி தேடிய வரலாறும் முறையே 8ஆம், 9ஆம் பாடலில் இடம் பெறாமை இத்திருப்பதிகத்தின் பாங்காயிற்று.

260. திருப்பூந்தராய்

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலங்கள் 63இல் இது 14ஆவது திருத்தலம். இதற்குரிய பன்னிரு பெயர்களாவன:*

1. பிரமபுரம் - பிரமன் வழிபட்டது.

2. வேணுபுரம் - இறைவன் மூங்கில் வடிவமாகத் தோன்றியது. வேணு - மூங்கில்.

3. புகலி - சூரனுக்குப் பயந்த தேவர்களுக்குப் புகலிடமாக அமைந்த தலம்.

4. வெங்குரு - குரு பகவான் (வியாழன்) வழிபட்டுப் பேறு பெற்றது.

Koviloor Digital Library

5. தோணிபுரம் – பிரளய காலத்தில் ஈசன், உமா தேவியாரோடு தோணியில் வீற்றிருத்தல்

6. பூந்தராய் – பூமியைப் பிளந்து சென்று இரணியாக் கதனைக் கொன்ற திருமால் வழிபட்டது.

7. சிரபுரம் – சிரசின் (தலை) கூறாய் இராகுபகவான் வழிபட்டது.

8. புறவம் – புறாவடிவில் வந்த அக்கினியால் சிபிச் சக்கரவர்த்தி பேறு பெற்றது.

9. சண்பை – சண்பை என்னும் கோரைப் புல்லால் மாய்ந்த குலத்தோரால் நேர்ந்த பழி தீரக் கண்ண பிரான் (திருமால்) வழிபட்டது.

10. சீகாழி (ஸ்ரீ காளி) – காளி வழி பட்டது.

11. கொச்சைவயம் – மச்சகந்தியைக் கூடிய கொச்சை (பழிச்சொல்) நீங்கப் பராசரர் பூசித்தது.

12. கழுமலம் – மலத் தொகுதி நீங்குமாறு உரோமச முனிவர் வழிபட்டது.

சந்திரன், ஆதிசேடன், முருகவேள் பூசித்த பதி. குரு, இலிங்க, சங்கம வழிபாட்டு முறையில் பிரமன் பூசித்த பிரமபுரீஸ்வரர் இலிங்கமாகவும், திருஞான சம்பந்தருக்கு ஞானப்பால் தந்தருளிய தோணியப்பர் குருமூர்த்தமாகவும், சட்டைநாதர் சங்கம வடிவினராகவும் சிறப்பிக்கப்படுகிறது. மூவர் பாடல் பெற்றது. மற்றும் முதல் திருமுறை பதிகம் 1; இரண்டாம் திருமுறை பதிகம் 137 காண்க.

சுவாமி : பிரமபுரீஸ்வரர், தோணியப்பர், சட்டைநாதர்

அம்பிகை : பெரிய நாயகி, திருநிலை நாயகி

Koviloor Digital Library

தீர்த்தம் : பிரமதீர்த்தம் - திருஞானசம்பந்தர் ஞானப்பால் அருந்திய இடம். சூல தீர்த்தம், ஆனந்த தீர்த்தம், காளி தீர்த்தம், வைணவ தீர்த்தம், இராகு தீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், பராசர தீர்த்தம், அகத்திய தீர்த்தம், கௌதம தீர்த்தம், வன்னி தீர்த்தம், குமார தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கேது தீர்த்தம், அண்ட தீர்த்தம், பதினெண்புராண தீர்த்தம், புறவ நதி, கழுமல நதி, விநாயக நதி

தல மரம் : பாரிசாதம்

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

12. பந்துசேர்விரலாள் பவளத்துவர்
வாயினாள்பனி மாமதிபோல் முகத்து
அந்தமில்புக ழாள்மலை மாதொடும் ஆதிப்பிரான்
வந்து சேர்விடம் வானவர் எத்திசையும்
நிறைந்துவலம் செய்து மாமலர்
புந்திசெய் திறைஞ்சிப் பொழிபூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: பவளம் போன்ற வாயும், முழுமதி போன்ற திருமுகமும் பந்து அணையும் விரலும் திகழ, எல்லையற்ற புகழுடைய மலைமங்கையாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்கும் ஆதிப் பிரானாகிய ஈசன் வீற்றிருக்கும் இடம், தேவர்கள் வலம் வந்து மலர் தூவி ஏத்தி இறைஞ்சும் பூந்தராய் ஆகும். அதனைப் போற்றுவோமாக.

சிறப்புரை: உமாதேவியார், பந்து அணையும் விரல்களுடன் திகழ்பவள் என்பதனைப் "பந்தணை விரலியும் நீயும் நின் அடியார் பழங்குடில் தொறும் எழுந்தருளிய பரமனே!" என மாணிக்கவாசகர்

Koviloor Digital Library

அருளிச் செய்துள்ள அமுதமொழியாலும் நோக்குக. பவளத்துவர்வாயின் சிறப்பினைச் "செந்துவர் வாய் உமைபங்கன் திருஆலவாயான் திரு நீறே" என, ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்தவாறும் காண்க.

மன்னுயிர்களுக்கு இன்னமுதாம் சிவபூசையை நிகழ்த்திக் காட்டும் மாண்பு தோன்றப் பொருட் பொலிந்த பூசையாற்றிய கருணைத் திறமும், யகர மாகிய உயிர் வகரமாகிய கருணையின் துணை கொண்டு சிகரமாகிய பதியை அடை. ! வேண்டும் என்னும் நோக்கமும், நனிவிளங்குமாறு, அம்பிகையின் அருள் வண்ணச் சிறப்பானது, "அந்த மில்புகழாள்" என ஓதப் பெற்றது. இதனை, "அந்த மில் புகழாள் உமை நங்கை ஆதரித்து வழி படப் பெற்ற கந்தவார்சடைக் கம்பன் எம்மானை" என ஓதும் சுந்தரர்வாக்காலும் (திருக்கச்சியேகம்பம் பாட்டு 8) காண்க. ஈசனை, உள்ளத்தால் ஒன்றி நினைந்து வழிபடும் செம்மை யினைப் புந்தி செய்து இறைஞ்சி" என உரைக்கப் பெற்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என முறையாக வழிபடும் மாண்பு தோன்ற "பூந்தராய் போற்றுதுமே" என்பது, தலவழிபாட்டுச் சிறப்பு ஆகும்.

மலைமாது – உமையவள்; ஆதிப்பிரான்; சிவன்.

13. காவியங்கருங் கண்ணினாள்கனித்
தொண்டைவாய்க்கதிர் முத்தநல் வெண்ணகைத்
தூவியம் பெடை அன்னநடைச்சுரி மென்குழலாள்
தேவியுந்திரு மேனியோர் பாகமாய்
ஒன்றிரண் டொரு மூன்றொடு சேர்பதி
பூவிலந்தணன் ஒப்பவர் பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: நீலோற்பல மலர்போன்ற கண்களும், கனிச் சொல் வழங்கியருளும் திருவாயும், ஒளிதிகழ்

Koviloor Digital Library

முத்தன்ன பற்களும், தூய வெண்மையான அன்னப் பறவை போன்ற நடையும், சுருண்ட மென்மையான கூந்தலும் உடைய, உமாதேவியாரைத் திருமேனியில் பாகம் கொண்டு, பூந்தராய் என்னும் பதியில் ஈசன் வீற்றிருக்கின்றார். தாமரை மலரில் விளங்கும் பிரமனை ஒத்த வேத விற்பன்னர்களும், ஆசார சீலர்களும் திகழும் அத் திருத்தலத்தைப் போற்றி வணங்குவோமாக.

சிறப்புரை: *சீகாழிப் பதிக்கு அமையப் பெற்ற 12 திருப்பெயர்களுள் ஆறாவது திருப்பெயர் பூந்தராய் என்பதாகும். அது, ஒன்று இரண்டொடு மூன்றொடு சேர்பதி (1 + 2 + 3 = 6) எனப்பட்டது.*

14. பையராவரும் அல்குல் மெல்லியல்
பஞ்சின்நேரடி வஞ்சிகொள் நுண்ணிடைத்
தையலாள்ஒரு பாலுடை எம்மிறை சாருமிடம்
செய்யெலாங்கழு நீர்கமலம் மலர்த்
தேறல்ஊறலிற் சேறுல ராதநற்
பொய்யிலா மறை யோர்பயில் பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: *பாம்பின் படத்தைப் போன்ற அல்குலும், பஞ்சினை ஒத்த மென்மையான பாதமும், நுண்ணிய மென்மையான இடையும் கொண்டு விளங்குகின்ற உமாதேவியை, ஒரு பாகமாகக் கொண்டு மேவும் எமது ஈசன் வீற்றிருக்கும் இடமாவது, வயல்களில் திகழும் தாமரை மலர்களிலிருந்து துளிர்க்கும் தேன், ஊறிப் பாயும் சேறு உலராத பாங்கும், அஞ்ஞானத்தின்பாற் படாத மறையோர் விளங்குகின்ற செம்மையும் கொண்டு திகழ்வது, பூந்தராய் என்னும் பதியாகும். அதனைப் போற்றுவோமாக.*

Koviloor Digital Library

சிறப்புரை: பூந்தராய் என்னும் நகரின் நீர் வளத் தினையும் நில வளத்தினையும் அஞ்ஞானத்தின் வயப் படாத மறையவர்கள் தம் பக்தி வளத்தினையும் இத் திருப்பாட்டு ஓதுவதாயிற்று.

பொய்யிலா – அஞ்ஞானத்தின் வயப்படாமை. செய் – வயல்.

15. முள்ளி நாண்முகை மொட்டியல் கோங்கின்
அரும்பு தேன்கொள் குரும்பை மூவாமருந்து
உள்ளியன்ற பைம்பொற் கலசத்தியல் ஒத்தமுலை
வெள்ளி மால்வரை அன்னதோர் மேனியின்
மேவினார் பதி வீமருதண்பொழிற்
புள்ளினம் துயில் மல்கிய பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: தாமரை மொட்டு, கோங்கின் அரும்பு, குரும்பை என்று பேசப்படுகின்ற தன்மையில் கருணைத் தேன் சொரியும் மூவா மருந்தாகிய தனங்களுடன் உமாதேவி விளங்குபவள். திருக்கயிலை அனைய தனது திருமேனியில், அத்தேவியைப் பொருந்தித் திகழும் ஈசன் விளங்கும் பதியாவது, மலர்கள் பொருந்திய குளிர்ச்சி மிக்க சோலையில், பறவை இனங்கள் அமைதியாகத் துயில் கொள்ளும் பூந்தராய் ஆகும். அதனைப் போற்றுவோமாக.

சிறப்புரை: வெள்ளி மலை என விளம்பப் பெறும் கயிலை மலை, ஈசனார்தம் திருமேனிக்கு ஒப்புமை கூறப்பட்ட மாண்புதனை நோக்குக.

முள்ளி – தாமரை; வீமரு – மலர்கள் பொருந்திய; வீ – மலர், பறவை.

16. பண்ணியன்றெழு மென்மொழியாள்பகர்
கோதையோர்திகழ் பைந்தளிர்மேனியோர்
பெண்ணியன்ற மொய்ம்பிற் பெருமாற்கிடம்
பெய்வளையார்

Koviloor Digital Library

கண்ணியன்றெழு காவிச் செழுங்கரு
நீலமல்கிய காமருவாவிநற்
புண்ணியர் உறையும்பதி பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: பண்ணில் இசைபோன்று இனிய மொழி பகரும் தன்மையும், பசுந்தளிர்போன்ற வண்ணத் திருமேனியும் தாங்கித் திகழ்கின்ற உமாதேவியாரை, ஒரு பாகமாகக் கொண்டுள்ள வலிமை மிக்க பெருமானாகிய ஈசனுக்கு உரிய இடமாவது, வளையலை அணிந்த மகளிர் தமது அழகிய நீலோற்பல மலர் போன்ற கண்களால், விரும்பி நோக்கப் பெறும் புண்ணியர் உறையும் பூந்தராய் என்பதாகும். அதனைப் போற்றுவோமாக.

17. வாணிலாமதி போல் நுதலாள்மட
மாழையொண்கணாள் வண்தரளந்நகை
பாணிலாவிய இன்னிசை யார்மொழிப் பாவையொடும்
சேணிலாத் திகழ் செஞ்சடைஎம் மண்ணல்
சேர்வது சிகரப் பெருங்கோயில்சூழ்
போணிலா நுழையும் பொழிற்பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: உமாதேவியார், ஒளிமிக்க திங்களைப் போன்ற நுதலும், மான் விழியும், முத்துப் பற்களும், பண்ணின் இசை போன்ற இனிய மொழியும் உடையவர். அத்தகைய பிராட்டியை, ஒளி மிக்க நிலவு திகழும் செஞ்சடையுடைய அண்ணலாகிய ஈசன், உடனாகக் கொண்டு விளங்குகின்ற இடமாவது, சிகரம் போன்ற உயர்ந்த பெருங்கோயிலைச் சூழ்ந்து, திங்களின் தண்ணொளி பரவும் பொழில் கொண்ட பூந்தராய் ஆகும். அதனைப் போற்றுவோமாக.

சிறப்புரை: நிலவின் குளிர்ச்சியான தன்மை, திருத்தலச் சிறப்பாகவும், முழு மதியின் ஒளி, தேவியின் நுதலின்

Koviloor Digital Library

மாண்பாகவும்; பிறை சூடிய சடையின் பொலிவு, ஈசனின் கருணைத் திறமாகவும் இத்திருப்பாட்டில் சுட்டப்பெற்றது. ஈசன் வீற்றிருக்கும் பெருங் கோயிலைச் "சிகரம்" என்னும் அடைமொழியால் சிறப்பித்துப் பதி சொரூபத்தை உணர்த்திய செம்மை யினை ஓர்க.

பாண் – பண்; மாழை – மான்; போணிலா – பிறைச்சந்திரன்.

18. காருலாவிய வார்குழலாள்கயற்
கண்ணினாள் புயற் காலொளி மின்னிடை
வாருலாவிய மென்முலை யாள்மலை மாதுடனாய்
நீருலாவிய சென்னியல்மன்னி
நிகரும்நாம முந்நான்குநிகழ்பதி
போருலாவெயில் சூழ்பொழிற் பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: மேகம் போன்ற கரிய நீண்ட கூந்தலும், கயல் போன்ற கண்களும், மேகத்தில் தோன்றும் மின்னலைப் போன்ற இடையும் கொண்டு விளங்கும் உமாதேவியை ஒரு பாகமாக உடைய கங்கை தரித்த திருமுடியுடைய ஈசன், பெருமையுடன் விளங்கும் பதியாவது, பன்னிரண்டு பெயர்களையுடையதாய், மதில்கள் சூழ்ந்து திகழும் பொழில் விளங்கும் பூந்தராய் ஆகும். அதனைப் போற்றுவோமாக.

புயற்கால் – மேகம்; மலைமாது – உமையவள், முந்நான்கு – பன்னிரண்டு; எயில் – மதில்.

19. காசைசேர்குழலாள் கயல்ஏர்தடங்
கண்ணிகாம்பன தோள் கதிர்மென்முலைத்
தேகசேர்மலை மாதுஅமருந்திரு மார்பகலத்து
ஈசன்மேவும் இருங்கயிலை யெடுத்தானை
அன்றடர்த்தான் இணைச்சேவடி
பூசைசெய்பவர் சேர்பொழிற் பூந்தராய் போற்றுதுமே.

Koviloor Digital Library

தெளிவுரை: *காயாம் பூ போன்ற கரிய கூந்தலும், கயற் கண்ணும், மூங்கிலையன்ன தோளும் உடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் ஈசன், கயிலை மலையை எடுத்த இராவணனை அடர்த்திய பெருமான். அவ் இறைவனுடைய திருவடிக் கமலத்தைப் பூசிப்பவர்கள் விளங்குகின்ற பூந்தராய் என்னும் பதியினைப் போற்றுவோமாக.*

காசை – காயாம்பூ

20. கொங்குசேர்குழ லாள்நிழல் வெண்ணகைக்
கொவ்வை வாய்க்கொடி யேரிடையாள் உமை
பங்கு சேர்திரு மார்புடை யார்படர் தீயுருவாய்
மங்குல் வண்ணனும் மாமலரோனும்
மயங்க நீண்டவர் வான்மிசைவந்தெழு
பொங்குநீரின் மிதந்தநற் பூந்தராய் போற்றுதுமே.

தெளிவுரை: தேன் *மணம் கமழும் கூந்தலும்,* ஒளி மிக்க வெண்பற்களும், கொடி போன்ற இடையும் கொண்டு விளங்கும் *உமாதேவியை,* ஒரு கூறாகக் கொண்டு விளங்கும் *ஈசன், படரும்* தீப்பிழம்பாகித் திருமாலும் *பிரமனும் காண முடியாதவாறு* திகைத்து நிற்க ஓங்கியவர். *அப்பெருமான்* வீற்றிருக்கும் நகரானது, *மகாப் பிரளய காலத்திலும் அழியாது* மிதந்து விளங்கு கின்ற *பூந்தராய். அதனைப் போற்றுவோமாக.*

கொங்கு – தேன்; நிழல் – ஒளி; மங்குல் வண்ணன் – திருமால்.

21. கலவமாமயி லார்இயலாள்கரும்பு
அன்னமென்மொழி யாள்கதிர் வாள்நுதற்
குலவுபூங்குழலாள் உமைகூறனை வேறுரையால்
அலவை சொல்லுவார் தேர்அமண் ஆதர்கள்
ஆக்கினான்றனை நண்ணலும் நல்கும்நற்
புலவர்தாம் புகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதுமே.

Koviloor Digital Library

தெளிவுரை: மயில் போன்ற சாயலும், கரும்பு போன்ற இனிமையான மொழியும் ஒளி மிக்க நுதலும் கொண்டு திகழும் மென்மையான பூங் கூந்தலுடைய உமா தேவியைப் பாகமாகக் கொண்டுள்ள ஈசனைப் பழித்துக் கூறும் தேரர், சமணர் ஆகியோர் முன்வினைப் பயனால் அவ்வாறு ஆயினர். வினையின் வழியால் அவ்வாறு ஆக்கிய பெருமான் தன்னை நண்ணி வணங்குபவர்களுக்கு அருள் நல்குபவர். அப் பெருமான் வீற்றிருக்கும் அறிஞர்கள் மேவும் பெருமை மிக்க, அப் பதியாகிய பூந்தராய் என்னும் திருத் தலத்தைப் போற்றுவீராக!

சிறப்புரை: எத்தகைய தீவினையுற்றாரேனும் இத்திருத் தலத்தை நண்ணுங்கால் ஈசன் அருள் நல்கும் பெற்றி யினை "நண்ணுலும் நல்கும்" என ஓதப் பெற்றது. சிவஞானம் பெற்ற பெருமக்களால் போற்றப்பெறும் பூந்தராய் என்னும் தலச் சிறப்பானது, "புலவர் தாம் புகழ் பொற்பதி" என விரிக்கப் பெற்றது. இந்நெறியில், "பொது நடத்தரசே புண்ணியனே, புலவர்க்கு எல்லாம் புகழ்க் கண்ணியனே" என ஓதும் வள்ளல் இராமலிங்க சுவாமிகள் தம் அருட்பாடலையும் காண்க.

அலவை – பழி தூற்றுதல்; புலவர் சிவஞானிகள்.

22. தேம்பல்நுண்ணிடை யாள்செழுஞ்சேலன
கண்ணியோடு அண்ணல் சேர்விடம் தேன்அமர்
பூம்பொழில் திகழ் பொற்பதி பூந்தராய் போற்றுதும் என்று
ஓம்புதன்மையன் முத்தமிழ் நான்மறை
ஞானசம்பந்தன் ஒண்டமிழ் மாலைகொண்டு
ஆம்படிஇவை ஏத்தவல்லார்க்கு அடையாவினையே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: மெலிந்த நுண்மையான இடையும், சேல் போன்ற கண்களும் உடைய உமாதேவியுடன் விளங்கும் ஈசன் வீற்றிருக்கும் இடமானது, தேன் மணம் கமழும் பூம்பொழில் திகழும் பொற்பதியாகிய பூந்தராய் ஆகும். அதனைப் போற்றுவீராக என்று, ஓம்புதல் செய்யும் தன்மையினால் நான்கு மறைகளிலும் வல்ல முத்தமிழ் வித்தகனாகிய ஞான சம்பந்தன் உரைத்த தமிழ் மாலையாகிய இத் திருப்பதிகத்தை வேண்டுதல் கொண்டு ஓதவல்லவர்கள், வினை நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: மன்னுயிர்களுக்கு இம்மைப் பயன் நல்குதலும், வினை தீரப் பெற்று மறுமையில் சிவப்பேறு வாய்த்தலும் ஒரு சேர நல்கும் சிறப்பினை இத் திருப்பாட்டில் உணர்த்தப்படுகிறது.

ஆம்படி ஏத்துதல் – இம்மைப் பயன் வேண்டிப் போற்றுதல்;
தேம்பல் – மெலிவு.

261. திருப்புகலி

தல விளக்கம்: பதிகம் எண் 260 காண்க.

நாலடிமேல் வைப்பு

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

23. இயலிசை எனும்பொரு ளின்திறமாம்
புயல்அன மிடறுடைப் புண்ணியனே
கயல்அன வரிநெடுங் கண்ணியொடும்
அயல்உல கடிதொழ அமர்ந்தவனே

Koviloor Digital Library

கலன்ஆவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலன்நாள்தொறும் இன்புற நிறைமதி அருளினனே.

தெளிவுரை: இயல், இசை ஆகிய பொருளின் உறுதி பயக்கும் நிலையாகி, மேகம் போன்ற மிடற்றினை உடைய புண்ணியனே! கயல் போன்ற நெடுங் கண்ணுடைய உமாதேவியாரை உடனாகக் கொண்டு வீற்றிருப்பவனே! பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி நறுமணம் கமழும் பொழில் விளங்கும் புகலியில் மேவி, இம் மண்ணுலகானது குளிர்ச்சியுடன் விளங்குமாறு சந்திரனுக்கு அருள் நல்கியும் வளர்ச்சியுற்று நிறையு மாறும் நீவிர் அருள் புரிந்தீர்.

சிறப்புரை: திருஞானசம்பந்தருக்கு ஞானப்பாலை ஊட்டுவித்துப் பரஞானம், அபரஞானம் ஆகியவற்றை நல்கிய மாண்பினை ஈசன் நிறைமதி அருளினன் என்னும் தொடரால் சுட்டப் பெறுவதாயிற்று.

24. நிலையுறும் இடர்நிலை யாதவண்ணம்
இலையுறு மலர்கள்கொண்டு ஏத்துதும்யாம்
மலையினில் அரிவையை வெருவவன்தேரல்
அலைவரு மதகரி உரித்தவனே
இமையோர்கள்நின் தாள்தொழ எழில்திகழ் பொழிற்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடிஇணையே.

தெளிவுரை: பெருமானே! தேகத்தைத் தாங்கி நிலை கொள்ளும் இப்பிறவியானது, இடரின்கண் நிலைத்து அழுந்தாதவாறு, மலர் தூவி உமது திருவடியை ஏத்துதல் புரிவோம். உமாதேவி வெருவி நிற்குமாறு, ஆரவாரத்துடன் யானையின் வலிமை மிக்க தோலை உரித்த செம்மையுடைய நாதனே! தேவர்கள் நின் திருவடியைத் தொழ, எழில் மிக்க புகலியில்

Koviloor Digital Library

உமாதேவியை உடனாகக் கொண்டு நீவிர் விளங்கி மேவினீர்.

25. பாடினை அருமறை வரன்முறையால்
ஆடினை காணமுன் அருவனத்திற்
சாடினை காலனைத் தயங்கொளிசேர்
நீடுவெண் பிறைமுடி நின்மலனே
நினையேஅடி யார்தொழ நெடுமதிற் புகலிந்நகர்
தனையேயிட மேவினை தவநெறி அருள்எமக்கே.

தெளிவுரை: வெண்பிறையைச் சடை முடியில் சூடிய நின்மலனே! நீவிர் அரிய வேதங்களைத் தோற்றி அருளினீர்! தாருகவனத்தில் கூத்து உகந்து ஆடினீர்! மார்க்கண்டேயரின் உயிரைக் கவரப் போந்த காலனைத் திருப்பாதத்தால் உதைத்து மாயச் செய்தீர்! புகலி நகரின்கண் மேவி வீற்றிருந்து அடியவர்கள் நின்னையே தொழுமாறு விளங்குபவர் ஆயினீர். இந்நிலையில், எமக்குத் தவநெறியினை அருள்வீராக.

சிறப்புரை: இத் திருப்பாட்டு ஈசனை வேண்டித் தவநெறியை நாடிப் பெறும் பாங்கினை உணர்த்துவ தாயிற்று. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருத்துறையூர் திருப்பதிகத்தின் வாயிலாகத் "தலைவா உனை வேண்டிக் கொள்வேன் தவ நெறியே" என அருளிச் செய்துள்ளமையும் காண்க.

26. நிழல்திகழ் மழுவினை யானையின்தோல்
அழல்திகழ் மேனியில் அணிந்தவனே
கழல்திகழ் சிலம்பொலி அலம்பநல்ல
முழவொடும் அருநடம் முயற்றினனே
முடிமேல்மதி சூடினை முருகமர் பொழிற்புகலி
அடியாரவர் ஏத்துற அழகொடும் இருந்தவனே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஒளி திகழும் மழுப்படையினையுடைய பெருமானே! யானையின் தோலை நெருப்புப் போன்ற திருமேனியில் போர்த்தி விளங்கும் நாதனே! திருக்கழலில், சிலம்பு ஒலிக்க முழவின் ஓசை முழங்க அரிய நடம்புரியும் பரமனே! தேவரீர், திருமுடியின் மீது சந்திரனைச் சூடி, அழகு திகழும் பொழிலுடைய புகலியின்கண் அடியவர்கள் தொழுது ஏத்துமாறு அருள் பாலிக்க வீற்றிருப்பவர் ஆயினீர்.

நிழல் – ஒளி; அழல்திகழ் மேனி – செந்நிற மேனி.

27. கருமையின் ஒளிர்கடல் நஞ்சம் உண்ட
உரிமையின் உலகுயிர் அளித்த நின்றன்
பெருமையை நிலத்தவர் பேசின்அல்லால்
அருமையில் அளப்பரி தாயவனே
அரவேரிடை யாளொடும் அலைகடல் மலிபுகலிப்
பொருள்சேர்தர நாள்தொறும் புவிமிசைப் பொலிந்தவனே

தெளிவுரை: கரிய வடிவத்துடன் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை அருந்தி, முழுமுதற் பொருள் என்னும் உரிமை விளங்குமாறு உலகில் உள்ள உயிர் களைப் பாதுகாத்தருளிய தேவரீரின் பெருமையை மண்ணுலகத்தவர் பேசித் தொழுதல் அன்றி வேறு யாது புரிய இயலும்! அரவம் அன்ன இடையுடைய உமாதேவியாரோடு, கடல் அலைகள் விளங்கும் புகலியின் பெருமை விளங்குமாறு பூவுலகில் பொலிந்து வீற்றிருப்பவர் நீவிரே ஆவர்.

28. அடையரி மாவொடு வேங்கையின்தோல்
புடைபட அரைமிசைப் புனைந்தவனே
படையுடை நெடுமதிற் பரிசளித்த
விடையுடைக் கொடிமல்கு வேதியனே

Koviloor Digital Library

விகிர்தாபரமா நின்னை விண்ணவர் தொழப்புகலித்
தகுவாய்மட மாதொடுந் தாள்பணிந் தவர்தமக்கே.

தெளிவுரை: நனி அடைந்து மேவிப் பொலியும் அரியின் தோலும், யானையின் தோலொடு புலியின் தோலும் அரையில் பொருந்தப் புனைந்து விளங்கும் நாதனே! மூன்று மதில்களையுடைய உலோகக் கோட்டை களைப் படையாகக் கொண்ட அவுணர்களை. அக்கோட்டைகளுடன் எரிந்து சாம்பலாகுமாறு அழித்து இடபக்கொடியுடன் திகழும் வேத நாயகனே! விகிர்தனே! பரமனே! தேவர்கள் எல்லாம் தொழு மாறு உமாதேவியுடன் புகலி நகரின்கண் அடியவர் களுக்கு நீவிர் அருள்புரிபவர் ஆயினீர்.

சிறப்புரை: திருப்புகலியில் திருமாலின் விருப்பத்திற் கிணங்கியவாறு, தோலை அணிந்து விளங்கும் சட்டை நாதரின் திருவிளையாட்டுச் சிறப்பு “அடையரி” என ஓதப்பட்டது.

அரி – திருமால், சிங்கம்; மா – விலங்கு (யானை) படையுடை; நெடு மதில் – முப்புரம்.

29. அடியவர் தொழுதெழ அமரர் ஏத்தச்
செடியவல் வினைபல தீர்ப்பவனே
துடியிடை அகல்அல்குல் தூமொழியைப்
பொடியணி மார்புறப் புல்கினனே
புண்ணியர் புனிதா புகர்ஏற்றினை புகலிந்நகர்
நண்ணினாய் கழல்ஏத்திட நண்ணகிலா வினையே.

தெளிவுரை: அடியவர்கள் தொழுது போற்றவும், தேவர்கள் ஏத்தி நிற்கவும் மேவும் ஈசனே! துன்பம் விளைவிக்கும் கொடிய வினையைத் தீர்ப்பவனே! தூமொழி நவிலும் உமாதேவியைத் திருமார்பில் பொருந்துமாறு வைத்த புண்ணியனே! புனிதனே!

Koviloor Digital Library

ஒளிமிக்க அழகிய இடபத்தை உடையவனே! புகலி நகரில் வீற்றிருக்கும் பெருமானே! தேவரீருடைய திருவடியைப் போற்றிட, வினைத் துயரானது மன்னுயிரைச் சாராது அருள் புரிபவர் நீவிரே ஆயினீர்.

சிறப்புரை: பூவுலகில் உள்ள அடியவர்கள் அட்டாங்க நமஸ்காரமும் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து வணங்குதலை "அடியவர் தொழு தெழ" என்னும் தொடரால் உணர்த்தப் பெற்றது.

ஏத்துதல் – திரையாங்க நமஸ்காரம் போற்றித்துதித்தல்; தூமொழி – உமாதேவி; புகர் – ஒளி, அழகு.

30. இரவொடு பகலதாம் எம்மான் உன்னைப்
பரவுதல் ஒழிகிலேன் வழியடியேன்
குரவிரி நறுங்கொன்றை கொண்டணிந்த
அரவிரி சடைமுடி ஆண்தகையே
அனமென்னடை யாளொடும் அதிர்கடல்
இலங்கைமன்னை
இனமார்தரு தோளடர்த்து இருந்தனை புகலியுளே.

தெளிவுரை: எம் பெருமானே! இரவும் பகலும் உன்னைப் பரவிப் போற்றுகின்றேன். நினக்கு வழி வழியாக வந்த அடியவர் மரபில் வந்து, யான் அவ்வழி யில் மேவும் அடிமை பூண்டவன். குரா மலரும் நறுங் கொன்றை மலரும் அணிந்த சடைமுடியில் அரவத்தைத் தரித்த ஆண்டகையே! இராவண னுடைய தோளை நெரித்து, அன்னம் போன்ற மென்மையான நடையழகு பொருந்திய உமாதேவி யாரை உடனாகக் கொண்டு, புகலி நகருள் வீற்றிருப்பவர் நீவிர்.

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசனை, இரவும் பகலும் ஏத்தி வழிபடும் மாண்பானது இவண் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்த பாங்கும் நோக்குக.

ஈசனுக்கு வழியடிமையாதல் புண்ணிய வசத்தினால் - நல்வினைப் பயனால், அப்பெருமானின் இன்னருளால் கிடைக்கப் பெறும் பெரும் பேறாகும். இந்நெறியினை, "ஐயா, வழியடியோம் வாழ்த்தோங் காண்; ஆரழல் போல் செய்யா வெண்ணீறாடி! செல்வா" என மாணிக்கவாசகர் உரைத்தருளிய அமுதமொழி வாயிலாகவும் காண்க.

மன்னுயிர்கள், பெண் தன்மை கொண்டு விளங்க ஈசன் ஒருவனே கொழுகொம்பாக விளங்கி மன்னுயிர்களைப் புரந்தருள் செய்பவன் என்னும் மெய்ம்மையை உணர்த்துமாறு, "ஆண்தகை" என்பது சுட்டுவதாயிற்று.

ஆண்டகை - ஞானப்பால் கொடுத்து ஆட்கொண்ட தகைமையும் ஆம்; இரவும் பகல தாம் எம்மான் - ஈசன், இரவும் பகலும் ஆகும் காலமாயும் விளங்குபவன்.

31.
உருகிட உவகைதந்து உடலினுள்ளால்
பருகிடும் அமுதன பண்பினனே
பொருகடல் வண்ணனும் பூவுளானும்
பெருகிடும் அருள்எனப் பிறங்கெரியாய்
உயர்ந்தாய்இனி நீஎனை ஒண்மலரடி யிணைக்கீழ்
வயந்தாங் குறநல் கிடுமதிற் புகலிமனே.

தெளிவுரை: உள்ளத்தால் உருகிப் போற்றி வணங்கும் அடியவர்பால், அமுதாகச் சுரந்து பேரின்பம் புரிந்தருளும் பண்புடையவன், ஈசன். அப்பெருமான், திருமாலும் பிரமனும் தேடிக் காணும் செயலை

Koviloor Digital Library

முனைந்த ஞான்று பெருகித் தோன்றும் தீப்பிழம்பாய் உயர்ந்து ஓங்கியவன். புகலியின் நாதனாய் விளங்கும் அப்பெருமான், என்னை ஒளி மிக்க மலரடியின் கீழ் நனி விளங்குமாறு விரும்பி அருள் புரிவாராக.

சிறப்புரை: உள்ளத்தால் உருகிப் போற்றும் அன்பர்களுக்கு அமுதாக விளங்குகின்ற ஈசனின் இனிய மாண்புதனை, "நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப் பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே! ஆரா அமுதே" எனவும், அப்பெருமான் பெருகி விளங்கும் தீப்பிழம்பாய்ப் - பிறங்கெரியாய், மேவிய தன்மையினைப் "பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறக்கொளிசேர் விண்ணாகி" எனவும், மாணிக்க வாசகர் திருவாசக அமுதமொழியால் அருளிச் செய்த வாறும் காண்க.

வயம் – வண்மை, விருப்பம்

32. கையினில் உண்பவர் கணிகை நோன்பர்
செய்வன தவமலாச் செதுமதியார்
பொய்யவர் உரைகளைப் பொருள்எனாத
மெய்யவர் அடிதொழ விரும்பினனே
வியந்தாய்வெள் ளேற்றினை விண்ணவர் தொழுபுகலி
உயர்ந்தார்பெருங் கோயிலுள் ஒருங்குடன் இருந்தவனே.

தெளிவுரை: சாத்திர நெறியினின்று விலகிப் பொய்யுரைகளைப் பொருளாகக் கருதி வாழும் நெறியுடையவர்தம் உரைகளைத் கொள்ளாது, மெய்ம்மையுடைய சிவஞானிகளும், அடியவர்களும் தொழுது போற்ற, விரும்பி அருள் புரிபவனாகிய ஈசன், இடப வாகனத்தைக் கொண்டு விளங்குபவர். அப்பெருமான், தேவர்கள் தொழுது போற்றும் புகலியின் மேவும் பெருங் கோயிலுள் அருள் திகழ வீற்றிருக்க ஏத்துமின்.

Koviloor Digital Library

மெய்யவர் – மெய்ம்மை உணர்ந்த சிவஞானிகள். பெருங் கோயில் – திருக்கோயிலை உணர்த்தியது. உள்ளம் பெருங்கோயில் என்னுமாறு உள்ளத்தில் ஒன்றியதாதலும் ஆம்.

33. புண்ணியர் தொழுதெழு புகலிந்நகர்
விண்ணவர் அடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம் பந்தன் வாய்மை
பண்ணிய அருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை இன்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின இன்றித்தாம் எய்துவர் தவநெறியே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நல்வினைப் பயன் காரணமாகப் பெறும் புண்ணிய விளக்கத்தினால் உயர்ந்து மேவும் பெருமக்கள் தொழுகின்ற புகலி நகரில், தேவர்கள் தொழுகின்ற சிறப்புடன் திகழும் ஈசனை, நண்ணிய ஞானசம்பந்தன் திருவாய் மலர உரைத்த அருந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஓதி உரைக்க வல்லவர்கள், இம்மையில் துன்பம் அற்றவராய் விளங்கி மறுமையில் சிவலோகத்தை நண்ணுவார்கள். மற்றும் இப்பிறவியில் இடர் ஏதும் அற்றவராய்த் தவநெறியை எய்துவார்கள்.

சிறப்புரை: ஈண்டு தவநெறி என்பது, சத்துவ குணத்தின் மாண்பினை உணர்த்துவது ஆயிற்று. "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன். தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான், தானே வந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்..." என மணிவாசகப் பெருமான், அருளிச் செய்த அமுத மொழியின் வாயிலாக உணர்த்தப் பெறும் மாண்பும் நோக்குக.

Koviloor Digital Library

மறுமையில் சிவனுலகம் நண்ணுவதற்கு எத்தகைய நடலையும் இல்லை என்பதும், அதே போன்று இம்மையில் தவநெறியைக் கொள்வதற்கு எத்தன்மையான இடரும் இல்லை என்பதும் உணர்த்தப் பெற்றது.

நடலை – துன்பம்.

262. திருவாவடுதுறை

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல் 36ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. அம்பிகை பசு வடிவத்தில் ஈசனை வழிபட்ட தலம். இதன் வேறு பெயர்களாவன: அரசவனம், கோமுத்தி நகர், முத்தி க்ஷேத்திரம், கோகழி, சிவபுரம், பிரமபுரம், அகத்திய புரம், தருமநகர், நந்திநகர், கஜாரண்யம், நவகோடி சித்திபுரம் முதலானவை.

சிறப்புகள்

1. திருஞானசம்பந்தர் தமது தந்தையார் வேள்வி புரிவதற்காக ஈசனிடம் பொற்கிழி பெற்றது. இது இத்திருப்பதிகக் குறிப்பு.
2. சுந்தரர் தம் உடற்பிணி தீருமாறு வேண்டிய தலம்.
3. தேவர்கள் படர் அரசு ஆக விளங்க, அதன் நிழலில் ஈசன் எழுந்தருளியது.
4. திருமூலர் திருமந்திரம் அருளிச் செய்தது.
5. திருமாளிகைத் தேவர் அற்புதங்களை நிகழ்த்தியது.
6. சேரமான் பெருமாள் வழிபட்டது.

Koviloor Digital Library

7. முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு மகப்பேறு அருள் செய்து, இத் திருத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவும் காட்டியது.

தியாகேசர் : செம்பொன்தியாகர், புத்திரத்தியகேசர், சொர்ணத் தியாகேசர்

ஆசனம் : வீரசசிங்காதனம்

நடனம் : சுந்தர நடனம்

8. தரும தேவதை இறைவனை வழிபட்டு, அவருக்கு வாகனமாகும் பேறு பெற்றது.

சுவாமி : மாசிலாமணி ஈஸ்வரர், கோமுத்தீஸ்வரர்

அம்பிகை : ஒப்பிலா முலையம்மை

நந்தி : தரும நந்தி

தல மரம் : படர் அரசு

தீர்த்தம் : கோமுத்தி தீர்த்தம், பத்ம தீர்த்தம், கைவல்ய தீர்த்தம்

நாலடி மேல்வைப்பு

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

34.
இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: *பாற்கடலின்கண், அமுதத்தைக் கடைந்தெடுக்கும்போது தோன்றிய நஞ்சினை மிடற்றினில்*

Koviloor Digital Library

அடக்கி வைத்துக் காத்தருளிய வேத நாயகனே! முனைந்து ஆற்றும் செயலில், இடையூறு தோன்றித் துன்பம் நேர்ந்தாலும்; மனம் தடுமாற்றம் கொண்டு அத்தகைய செயலை மேவுதற்குத் தளர்ச்சியுற்றாலும்; எனது தீவினைப் பயன் காரணமாக, இன்னலும் பிணியும் தொடர்ந்து வந்தாலும் நான், உன்னுடைய திருக்கழலைக் தொழுது வணங்குபவன். அவ்வாறு உள்ள தன்மையில், எம்மை ஆட்கொள்ளும் தகைமை இதுவோ! எமக்குத் தேவைப்படுகின்ற பொருளைத் தந்து அருள்புரியவில்லையானால், அது உமது திருவருளுக்கு அழகு ஆகுமா! ஆவடுதுறையில் வீற்றிருக்கும் அரனே! அருள்புரிவீராக.

சிறப்புரை: "வேண்டுவார் வேண்டுவது ஈவான் கண்டாய்" என்னும் நாவுக்கரசரின் திருவாக்கின் மாண்பில், சிவபெருமான் தனது அடியவர்களுக்கு அருளிச் செய்பவர் என்பதையும், அவ்வாறு அருளாது ஒழிந்தால் ஈசன் திருவருள் செம்மைக்கு ஏற்றதல்ல என்பதையும் இத்திருப்பாட்டு உணர்த்துவதாயிற்று.

குறிப்பு: இத்திருப்பதிகம் தமது தந்தையார், வேள்வி செய்தல் பொருட்டுப் பொருள் தேவைப்படுதலைத் தெரிவிக்கத் திருஞானசம்பந்தர், இத்திருப்பதிகத்தை அருளிச் செய்து, பொன் முடிப்புப் பெற்றனர். இதனைச் சேக்கிழார் பெருமான்,

நச்சி இன்தமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய இறைவர்இன் னருளால்
அச்சி றப்புஅருள் பூதமுன் விரைந்தகல் பீடத்து
உச்சி வைத்தது பசும்பொன் ஆயிரக்கிழி ஒன்று

என அருளிச் செய்தமை காண்க. (திருஞானசம்பந்தர் புராணம், பாடல் எண் 426)

Koviloor Digital Library

35. வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளந் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: இம்மையில், மண்ணுலகத்தின் நன்மைகளை நுகர்ந்து மகிழ்கின்ற காலங்களிலும், மண்ணுலகத்திலிருந்து விடுபட்டுச் சாயும் தன்மையால் மடியும் காலத்திலும், தீவினைப் பயனால் வருந்தித் துன்புறும் காலத்திலும், மனம் போன போக்கில் சென்று, நற்பாதையிலிருந்து விலகிப் பாவக் குழியில் வீழ்கின்ற காலத்திலும், ஒளிமிக்க செஞ்சடையில் கங்கை திகழப் பிறைமதியைத் தரித்து விளங்கும் புண்ணியனே! நான் உன்னுடைய திருவடியைப் பற்றி இருப்பவனே அன்றி, நின்னை மறப்பவன் அல்லன். ஆவடுதுறையுள் மேவும் அரனே! எம்மை ஆட்கொண்டு விளங்கும் நீவிர் அருள்புரியும் பாங்கு தான் இதுவோ! எமக்குத் தந்தருள்வது ஒன்று இல்லையெனில், அதுவோ உனது இனிய அருள் தன்மைக்குப் பொருத்தம் உடையது! உனது இனிய அருளின் தன்மையானது அடியவர்களுக்கு வேண்டியவற்றை நன்கு ஈவது அல்லவா!

சிறப்புரை: நல்வினைப் பயனால் இன்பங்களும் தீவினைப் பயனால் துன்பங்களும் நேர்தலை "வாழினும்" மற்றும் "வருந்தினும் போய் வீழினும்" என உரைக்கப் பெற்றதும். தீவினையால் தோன்றும் அவலத்தின் தன்மையினை "வருந்தினும்" என்பதோடு "அன்றிப் போய் வீழினும்" என்று உணர்த்தும்

Koviloor Digital Library

பாங்கினை ஓர்க. இந் நெறியினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால் மற்று நான் அறியேன் மறுமாற்றம்'' எனவும்; திருநாவுக்கரசு சுவாமிகள் "நலந் தீங்கிலும் உன்னை மறந்தறியேன். உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்'' எனவும், அருளிச் செய்துள்ள செம்மையும் நோக்குக.

இம்மையில், வாழுங்காலத்தில் இறைவனுடைய திருநாமத்தை ஓதியுணரும் பான்மையானது, நன்கு உள்ளத்தில் பதிந்து, சாகும் காலத்தில் முன்னின்று ஓது மாறு செய்து உய்விக்க வல்லது என்று உணர்த்துமாறு, "சாவினும் உனகழல் விடுவேன் அல்லேன்'' எனச் சுட்டப்பெற்றது. இது அடியவர்கள், ஈசனாகிய தலைவன்பால் கொண்டு விளங்கும் உறுதியான பக்தியை, நனி இயம்புதல் ஆயிற்று.

தயங்கு – ஒளிர்தல்

36. நனவினும் கனவினும் நம்பாஉன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போதணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்றுஎமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: கங்கையும், மணம் கமழும் கொன்றை மலரும் தரித்துக் கனன்று எரியும் நெருப்பைக் கையில் கொண்டு விளங்கும் ஈசனே! ஆவடுதுறையின் அரனே! நனவின்கண்ணும், கனவின்கண்ணும் உன்னுடைய நம்பிக்கைக்கு உகந்த திருநாமத்தை மனம் ஒன்றி வணங்குவதற்கு மறந்திலேன். எனக்குத் தாய்போன்று அன்பு செலுத்தும் பெருமையுடைய ஈசனே! எமக்கு

Koviloor Digital Library

வேண்டிய பொருளைத் தராமல் இருப்பது உனது இனிய அருள் தன்மைக்குப் பொருந்துமாறு ஆகாது.

சிறப்புரை: தாயானவள், சேயை மறவாத தன்மையில் பாதுகாப்பவள் என்பதும்; அந்நிலையில், சேயாகிய நான் எல்லா நன்மைகளும் பெறும் நிலையில், தாயாகிய ஈசனின் அருளைப் பெறுதல் வேண்டும் என்பதும் "அம்மான்" என்னும் சொல்லால் சுட்டப் பெற்றது. சேயும் தாயும் ஒருவர்க்கொருவர் மறவாமை நிலையை "மறவேன்" என்பதால் உணர்த்தப் பெற்றது.

37. தும்மலொடு அருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணைஒன்றினால்
மும்மதிள் எரிஎழ முனிந்தவனே
இதுவோஎமை யாளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: மேரு மலையை வில்லாகக் கொண்டு, அக்கினியைக் கணையாகத் தொடுத்துத் தீயனவாகிய முப்புரங்களை எரியுமாறு செய்த பரமனே! ஆவடு துறையில் மேவும் அரனே! தேகத்தில் தோன்றும் பிணி வகையான தும்மல் போன்ற துயர் வந்துற்ற காலத்திலும், அவற்றின் உபாதைகளால் நலிவுற்ற போதும், சித்தம் கலங்காமல், உனது திருநாமத்தை எனது நாவானது நவிலும் தன்மையுடையது. அங்ஙனம் இருக்க, எனக்கு அருள் புரியாது வாளா இருத்தல், உனது இனிய அருள் தன்மையின் மேன்மைக்குச் சிறப்பு ஆகுமோ! எம்மை ஆட்கொள்ளும் பரிசு இத்தன்மையதோ!

Koviloor Digital Library

சிறப்புரை: சிறிய பிணி நேர்ந்தாலும் அதனைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாதது இவ்வுடம்பு. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

நீலம்மலர்ப் பொய்கையில் அன்னம்மலி
நெல்வாயில் அரத்துறையாய் ஒருநெல்
வால்ஊன்ற வருந்தும் உடம்புஇதனை
மகிழாதுஅழகா அலந்தேன்.

(நெல்வாயில் அரத்துறை திருப்பதிகம், பாடல் எண்.6)

என, ஒரு நெல் வால் ஊன்றவும் வருந்தும் உடலின் இயல்பினை உரைத்தருளியவாறு நோக்குக. அத்தகைய நிலையிலும் திருநாமத்தைப் பரவும் நெறியினை நாவானது பற்றி நிற்கும் பாங்கானது இவண் சுட்டப் பெற்றது.

38. கையது வீழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தைசெய்யேன்
கொய்யணி நறுமலர் குலாயசென்னி
மையணி மிடறுடை மறையவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கு
இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடு துறை அரனே.

தெளிவுரை: கொய்து அணியப் பெறும் நறுமணம் கமழும் மலர்களை, மகிழ்ந்து சடைமுடியில் சூடிய நீல கண்டத்தையுடைய மறையவனே! ஆவடுதுறையில் மேவும் அரனே! கையில் உள்ள பொருள்கள் யாவும் இழந்து நைந்த காலத்திலும், பிறரால் இழிவாகக் கருதப்பட்டுக் கழிவுப் பொருளைப் போன்று குறைவுற்ற போதும், செம்மை விளங்கும் உமது திருவடியை அன்றி யான் சிந்தனை செய்ததில்லை. அங்ஙனமிருக்க, எமக்கு அருள்புரிந்து ஈவது ஒன்று

Koviloor Digital Library

இல்லை என்றால், அதுவோ உமது இனிய அருளுக்கு அழகாவது! எம்மை ஆண்டு அருள் புரிவதும் இத்தன்மைத்தோ!

சிறப்புரை: கைப்பொருளை இழந்து நிற்றல், பொருள் வயப் பட்டது எனவும், கழிவு என்னும் தன்மையில் பிறரால் எள்ளப்படுதல், மனத்தின் வயப்பட்டது எனவும் ஆகிய நிலையினை உணர்த்தி, அத்தகைய நிலையின்கண்ணும் ஈசனின் திருவடியை மறவாத செம்மையினை இவண் உரைக்கப் பெற்றது.

கழிவுறினும் என்னும் சொல்லைக் கழி உறினும் எனக் கொண்டு செய்யுள் விகாரத்தால் வகரம் மிகுந்த தெனக் கொள்ளலும் ஆம். கைப்பொருள் மிகுதியாக வரினும் (கழி - மிகுதி) கை சோர்ந்து இழத்தலே ஆயினும் சமநிலையாய்க் கொண்டு ஈசனையே சிந்தித்து இருந்து தியானித்தலை உணர்த்துதல் ஆகும்.

ஈசனாரின் சிவந்த திருவடியைச் "செய்கழல் அடி" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும் பீ" என மாணிக்க வாசகர் அருளிச் செய்துள்ள பாங்கும் நோக்குக.

செய் - சிவந்த. செய்யும் (ஆக்கும்) கழலடியும் ஆம். அருள் புரிதல் என்பது குறிப்பு.

39. வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும்
எந்தாய்உன் அடியலால் ஏத்தாதுஎன்நா
ஐந்தலை அரவுகொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஐந்து தலைகளையுடைய அரவத்தை அரையில் கட்டி, நறுமணம் கமழும் திருவெண் ணீற்றினைத் திருமேனியில் அணிந்து மேவும் சங்கரனே! ஆவடுதுறையில் திகழும் அரனே! கொடிய துன்பத்தால் அச்சம் கொண்டுற்றாலும், எம் தந்தையே! உன் திருப்பெயரை அன்றி என்னுடைய நாவானது வேறு ஒன்றைச் சொல்லாது. அங்ஙனம் இருக்க, எமக்கு வேண்டியவற்றைத் தந்தருளாத பாங்கு, உனது இனிய அருட்குணத்திற்கு நன்றாகுமோ! எம்மை ஆட்கொண்டு அருளும் பாங்கும் இதுவோ! அருள் புரிவீராக.

40. வெப்பொடு விரவியோர் வினைவரினும்
அப்பாஉன் அடியலால் அரற்றாது என்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழல்எழ விழித்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: தனக்கு ஒப்புமையாகத் தன்னையே அன்றிப் பிறரைச் சொல்லுவதற்கு இல்லாத சிறப்புக் கொண்ட மன்மதனை, அவனுடைய வடிவமானது அழியுமாறு விழித்து நோக்கி எரித்த ஈசனே! ஆவடு துறையில் மேவும் அரனே! அப்பா! வெம்மை கலந்து தோன்றித் தாக்குகின்ற கொடிய வினையானது பற்றித் தாக்கினாலும், உன் திருநாமத்தை அன்றி என்னுடைய நாவானது வேறொன்றைச் சொல்லாது. அங்ஙன மிருக்க, எமக்குத் தந்தருள்வது ஒன்றும் இல்லையெனில் உமது இனிய அருட்குணத்திற்கு அதுவோ இயல்பு! எம்மை ஆட்கொண்டு அருள் புரியும் பெற்றியும் இதுதானோ!

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசனை அப்பா என விளித்த பாங்கினை நோக்குக. இந்நெறியில், "அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ" எனத் திருநாவுக் கரசர் அருளிச் செய்த பாங்கும், "அப்பனே எனக்கு அமுதனே ஆனந்தனே" எனவும், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே!" என மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறும் நோக்குக. "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்" என வள்ளல் இராமலிங்க அடிகளார் அருட்பா கொண்டும் காண்க.

அப்பு – நீர். அப்பன் குளிர்ச்சி மிக்கவன் எனவும் அமையும்.

41. பேரிடர் பெருகிஓர் பிணிவரினும்
சீருடைக் கழல்அலால் சிந்தைசெய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: பெருமையுடைய முடிவேந்தனாகிய இராவணனைக் கயிலை மலையின்கீழ் இருந்து துன்புற்று நலியுமாறு செய்த பெருமானே! ஆவடு துறையுள் மேவும் அரனே! தீவினையின் வயத்தால் பெருந்துன்பமும், தேகத்தின் பிணியும் முன்னுற்று வருத்தினாலும், புகழ் மிக்கதாகவும் நன்மையே வழங்குவதாகவும் உள்ள உமது திருவடியை அல்லாது வேறு எதனையும் நான் சிந்தித்தது இல்லை. அங்ஙனம் இருக்க, எமக்கு எந்த ஒன்றையும் தரவில்லையாயின் அதுவோ உமது இனிய அருட் குணத்திற்கு ஒப்பது! எம்மை ஆட்கொண்டு அருளும் பாங்கும் இதுவோ!

Koviloor Digital Library

சிறப்புரை: சிவபெருமானுடைய திருக்கழலை அன்றிச் சீர்மிக்கதும் அத்தகைய சீரைத் தருவதும் வேறு ஒன்றும் இல்லை என்னும் தன்மையில், "சீருடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்" என உணர்த்தப் பெற்றது. இந்நெறியில், "செம்பொருள் துணிவே சீருடைக் கழலே செல்வமே! சிவபெருமானே! எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கு எழுந்தருளுவது இனியே!" (திருவாசகம் 534) எனச் சீருடைக் கழலின் மாண்புதனை மாணிக்கவாசகர் அருளிச் செய்த வாறும் காண்க.

42. உண்ணினும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மல ரடியலால் உரையாதென்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் அளப்பதற்கு அரிய ஈசனே! சுவை கொண்டு உணவு கொள்கின்ற நிலையிலும் அதன் கனவுத் தன்மையில் வயப்படாமலும், பசியின் களைப்பில் ஆழ்ந்திருப்பினும், அதன் சோர்வால் மெலியுறாதும், தன்னிலை மறந்து உறங்கும் காலத்திலும் அந்தராத்மாவை வெறுமனே உறங்கச் செய்யாது ஒளிமிக்க உனது திருக்கழலை மறவாதும் தியானம் செய்பவன், நான். ஆவடுதுறையின் அரனே! எமக்கு ஈந்தருள்வது ஒன்றும் இல்லையேல் அதுவோ உனது இனிய அருட் குணத்திற்கு உரியது! எம்மை ஆட்கொண்டு அருள்கின்ற வழியும் இதுவோ!

Koviloor Digital Library

43. பித்தொடு மயங்கியொர் பிணிவரினும்
அத்தாஉன் னடியலால் அரற்றாதுஎன்நாப்
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்று எமக்கு
இல்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே.

தெளிவுரை: *புத்தரும் சமணரும் புறம்பான உரைகளை நவின்றாலும், அவற்றை ஒரு பொருட்டாகக் கருதாமல், நின்னை வணங்குகின்ற பக்தர்களுக்கு வேண்டிய அனைத்தும் வழங்குகின்ற மாண்புடைய நாதனே! ஆவடுதுறையில் மேவும் அரனே! பித்தம் முதலான பிணிகளால் மயங்கும் நிலையுற்றாலும், உன்னுடைய திருநாமத்தை அல்லாது எனது நாவானது பிறவற்றைப் பேசாது. அங்ஙனம் இருக்க, அத்தனே! எமக்கு ஈந்தருள்வது யாதொன்றும் இல்லையேல், அதுவோ உனது இனிய அருள் குணத்திற்கு அழகாவது? எம்மை ஆட்கொள்ளும் வழியும் இதுவோ!*

சிறப்புரை: *தேகத்தில் பித்தம் மேலிட்டு வரும் பிணியின் வாயிலாகத் தன்னுணர்வு மயங்கும் தன்மை ஏற்படினும், ஈசன் திருநாமத்தை மறவாத சிறப்பு ஓதப் பெற்றது. ஈசனே உயர்ந்தவனாகவும், தந்தையாகவும் செல்வனாகவும், குருவாகவும், கடவுளாகவும் விளங்கு பவன் என்னும் மெய்ம்மையை "அத்தன்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "முத்து அன்ன வெண்ணகையாய் முன் வந்து எதிர் எழுந்து என் அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" என அருளிச் செய்த மாணிக்க வாசகர்தம் அமுதமொழியும் காண்க.*

Koviloor Digital Library

44. அலைபுனல் ஆவடு துறைஅமர்ந்த
இலைநுனை வேற்படை எம்இறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அலைகள் பெருகும் நீர் வளம் பொருந்திய ஆவடுதுறையில் வீற்றிருக்கும் சூலப்படையுடைய எம் ஈசனை, உலக நலன்களை விரும்பிய ஞானசம்பந்தன் மொழிந்த பெருமையுடைய தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர்கள், வினை யாவும் நீங்கப் பெற்றவராய், விண்ணவர்தம் மேலான உலகத்தினை நோக்கிச் செல்பவர்கள் ஆவார்கள். கர்ம பூமியாகிய இம்மண்ணுலகில் மீளவும் பிறவியை அடையாது செம்மையுறுவார்கள்.

சிறப்புரை: உலக நலனில் பெருங்கருணை கொண்டு அருளிச் செய்த தன்மையினை நலமிகு ஞானசம்பந்தன் எனவும், அடியவர் பெருமக்கள் இத்திருப்பதிகத்தை ஓதி நன்மையுறவேண்டும் என்னும் தன்மையினை "விலையுடை அருந்தமிழ் மாலை" எனவும் சுட்டப் பெறுதல் காண்க.

உடலின்கண் நலிவு ஏற்பட்ட காலமாக இருப்பினும், வெம்மை முதலான பிணிகள் நேரும் காலமாயினும், கைப்பொருள் இழந்து இழிவு கொள்ளு மாறு ஆயினும்; உண்ணுதல், உறங்குதல், பசித்தல், வளமுடன் வாழ்தல், மடிதல் முதலான காலங் களாயினும்; அச்சம் முதலாக நேரும் காலமாயினும்; நனவு, கனவு ஆகிய காலத்தாயினும்; மற்றும் எல்லாக்

Koviloor Digital Library

காலத்திலும் ஈசனைச் சிந்தனையுள் தேக்கி இருத்துதல் கடன் என்பது, இவண் உணர்த்தப் பெற்றது. இது ஓர் அற்புதத் திருப்பதிகம் ஆகும்.

இத்தன்மையில் மாணிக்கவாசகர்,

சிந்தனை நின்றனக் காக்கி ஞாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக்கு ஆக்கியைம் புலன்கள் ஆர
வந்து எனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தா மரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே . . . .

(திருவாசகம் 30)

என ஓதி அருளியுள்ள தன்மையும் கொண்டு ஏத்துக.

263. திருப்பூந்தராய்

தல விளக்கம்: பதிக எண் 260 காண்க.

ஈரடி மேல்வைப்பு

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

45. தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே.

தெளிவுரை: தக்கன் மேற்கொண்ட தீய வேள்வியை, வீரபத்திரர் திருக்கோலம் தாங்கித் தகர்த்த ஈசன், பூந்தராய் மேவிய விமலன் ஆவன். அப்பெரு

Koviloor Digital Library

மானுடைய பெருமை தாங்கிய திருவடியை வணங்கிப் போற்ற, மெய்யான கதி வாய்க்கும். அத்தகைய நன்மையைச் செய்பவன் சிவபெருமான்.

46. புள்ளி னம்புகழ் போற்றிய பூந்தராய்
வெள்ளம் தாங்கு விகிர்தன் அடிதொழ
ஞாலத் தில்உயர் வார்உள்கும் நன்னெறி
மூலம் ஆய முதலவன் தானே.

தெளிவுரை: அந்தணர்கள் கூறும் வேதங்களைக் கேட்டுப் பயின்ற கிள்ளைகள், அவ்வேதங்களால் போற்றும் பெருமையுடைய பூந்தராய் என்னும் பதியின்கண் கங்கை தரித்த விகிர்தனாகிய ஈசன் வீற்றிருக்க, அப்பெருமானுடைய திருவடியைத் தொழுது போற்றும் அடியவர்கள், உலகில் உயர்ந்து விளங்குவார்கள். அத்தகைய தன்மையில் தன்னை நினைத்து வணங்குமாறு செய்பவனும், முதற் பொருளாகவும் மூலப் பொருளாக விளங்குபவனும், ஈசனே ஆவன்.

47. வேந்த ராய்உல காள விருப்புறின்
பூந்த ராய்நகர் மேய வன்பொற்கழல்
நீதி யால்நினைந்து ஏத்தி உள்கிடச்
சாதி யாவினை யான தானே.

தெளிவுரை: அரச பதவியைப் பெற வேண்டும் என்று விருப்பம் உடையீராயின், பூந்தராய் நகரில் மேவும் ஈசனின் பொற்கழலை வேதாகம முறைப்படி வணங்கிப் போற்றித் துதிப்பீராக. அது வினையின் தாக்கத்தால் உண்டாகும் பிறவியைக் கெடுத்து பிறவாமையை நல்கும்.

Koviloor Digital Library

48. பூசு ரர்தொழுது ஏத்திய பூந்தராய்
ஈசன் சேவடி யேத்தி இறைஞ்சிடச்
சிந்தை நோயவை தீர நல்கிடும்
இந்து வார்சடை எம் இறையே.

தெளிவுரை: *பூவுலகின் தேவர் என்று சொல்லப்படும் அந்தணர்கள், வேதங்களை ஓதிப் போற்றும் பூந்தராய் மேவிய ஈசனின் திருவடியை ஏத்தி வணங்க, சிந்தையில் ஏற்படும் கலக்கம் முதலான குறைகள் தீரும். அத்தகைய பேற்றினை நல்குகின்ற இறைவன், சந்திரனைச் சடை முடியில் சூடிய எம் ஈசன் ஆவன்.*

49. பொலிந்த என்பணி மேனியன் பூந்தராய்
மலிந்த புந்தியர் ஆகி வணங்கிட
நுந்தம் மேல்வினை யோட வீடுசெய்
எந்தை யாயஎம் மீசன் தானே.

தெளிவுரை: *எலும்பினை மாலையாகத் திருமேனியில் கொண்டு விளங்கும் ஈசன், பூந்தராய் என்னும் பதியில் வீற்றிருப்பவன். அப்பெருமானை மனம் ஒன்றி வணங்கிட, இப்பிறவியில் பற்றும் வினை யாவும் நீங்கும். அவ்வாறு வினையை வீழுமாறு செய்பவன் எந்தையாகிய ஈசனே ஆவன்.*

50. பூதம் சூழப் பொலிந்தவன் பூந்தராய்
நாதன் சேவடி நாளும் நவின்றிட
நல்கும் நாள்தொறும் இன்பம் நளிர்புனல்
பில்கு வார்சடைப் பிஞ்ஞ கனே.

தெளிவுரை: *நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐம்பூதங்களிலும் பொலிந்து விளங்குகின்ற ஈசன் பூந்தராய் என்னும் நகரில் வீற்றிருக்கும் நாதன் ஆவான். அப்பெருமானுடைய திருவடியை நாள்தோறும் ஏத்தி*

Koviloor Digital Library

வணங்குகின்றவர்களுக்குப் பேரின்பம் பெருகும். அத்தகைய வளத்தைப் புரியும் கடவுள், கங்கை தங்கிய நீண்ட சடை முடியுடைய ஈசன் ஆவன்.

51. புற்றின் நாகம் அணிந்தவன் பூந்தராய்
பற்றி வாழும் பரமனைப் பாடிடப்
பாவம் ஆயின தீரப் பணித்திடும்
சேவது ஏறிய செல்வன் தானே.

தெளிவுரை: *புற்றில் வாழும் நாகத்தை அணிகலனாகக் கொண்டு, பூந்தராய் என்னும் நகரில் வீற்றிருக்கின்ற பரமனைப் பாடித் துதிக்கப் பாவமானது தீரும். அவ்வாறு தீரப் பணித்திடும் செல்வன் இடப வாகனத்தையுடைய ஈசனே.*

52. போத தத்துரி போர்த்தவன் பூந்தராய்
காத லித்தான் கழல்விரல் ஒன்றினால்
அரக்கன் ஆற்றல் அழித்தவ னுக்கருள்
பெருக்கி நின்றஎம் பிஞ்ஞகனே.

தெளிவுரை: *யானையின் தோலை உரித்துப் போர்த்திய ஈசன், பூந்தராய் என்னும் நகரில் விரும்பி வீற்றிருப்பான். அப்பெருமான், திருப்பாத விரல் ஒன்றினால் இராவணனுடைய வலிமையினை அழித்துப் பின்னர் அருள் செய்து உகந்த பிஞ்ஞகனும் ஆவன்.*

போதகம் – யானை.

53. மத்தம் ஆன இருவர் மருவொணா
அத்தன் ஆனவன் மேவிய பூந்தராய்
ஆள தாக அடைந்துய்ம்மின் நும்வினை
மாளு மாறருள் செய்யும் தானே.

Koviloor Digital Library

தெளிவுரை: தம்முள் பெரியவர் யார் என்பதை அறிய வேண்டும் என்று செருக்குற்று மேவிய திருமாலும், பிரமனும் காண முடியாதவராகி, உயர்ந்து விளங்கிய ஈசன் வீற்றிருக்கும் பூந்தராய் என்னும் நகரை, அடியவராய்ச் சென்றடைவீராக. உமது தீவினை யாவும் கெடுமாறு செய்தருள்பவன் அப்பெருமானே ஆவன்.

மத்தம் – செருக்கு, மயக்கம்; அத்தன் – உயர்ந்தவன்;
ஆளதாக – அடியவர் ஆக.

54. பொருத்த மில்சமண் சாக்கியப் பொய்கடிந்து
இருத்தல் செய்தபிரான் இமை யோர்தொழப்
பூந்த ராய்நகர் கோயில் கொண்டுகை
ஏந்து மான்மறி எம்இ றையே.

தெளிவுரை: பொருந்துமாறு உரை செய்யாத சமணர் சாக்கியர்களின் பொய்மையைக் கடிந்து ஒதுக்கித் தேவர்கள் தொழுது ஏத்துமாறு எக்காலத்திலும் விளங்குகின்ற கடவுள், பூந்தராய் என்னும் நகரில் இளமையான மானைக் கரத்தில் ஏந்தி விளங்கும் ஈசன். அப்பெருமானைப் போற்றுவீராக.

55. புந்தி யால்மிக நல்லவர் பூந்தராய்
அந்தம் இல்எம் அடிகளை ஞானசம்
பந்தன் மாலைகொண்டு ஏத்தி வாழும்நும்
பந்த மார்வினை பாறிடுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இயல்பாகவே அருள் உணர்வு உடையவராய், நன்மைசெய் குணத்தவராய், முடிவில்லாத தன்மையில் எல்லாக் காலத்திலும் விளங்கிப் பூந்தராய் என்னும் நகரில் வீற்றிருக்கும் எம் அடிகளைத்

Koviloor Digital Library

திருஞானசம்பந்தர் ஓதி அருளிய இத்திருப்பதிகத்தைக் கொண்டு ஏத்தி வாழ்வீராக. நும்மைப் பற்றியுள்ள வினை யாவும் தீய்ந்து துன்பம் இல்லாத நல்வாழ்க்கை உண்டாகும்.

சிறப்புரை: சிவபெருமானுடைய எண்குணங்களுள் "பேரருள் உடைமை" என்னும் குணமானது, "புந்தியால் மிக நல்லவர்" எனவும்; "முடிவில் ஆற்றல் உடைமை" என்னும் குணமானது, "அந்தமில் எம் அடிகள்" எனவும் உணர்த்தப் பெற்றது. ஈசனாரின் ஏனைய குணங்களாவன: தன் வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல், வரம்பில் இன்பம் உடைமை என்பன.

பந்தம் ஆர்வினை – இறுகப் பற்றிய தீவினை.

264. திருக்கொள்ளம்பூதூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல், இது 113ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. திருக்களம்பூர் என வழங்கப்படுகிறது. இதன் வேறு பெயர்கள்: பிரம வனம், பஞ்சாட்சரபுரம், காண்டீப வனம் என்பன. விநாயகர், கங்கை, காவிரி, ஆதிசேடன், இடைக்காடர், வரகுண பாண்டியன், கோச்செங்கட் சோழன், பிருகு முனிவர், காசிபர், கண்வர், அகத்தியர், வசிட்டர், வாமதேவர், அருச்சுனர் முதலானோர் வழிபட்டது.

பதிகக் குறிப்பு: ஊருக்குப் பக்கத்தில் முள்ளியாறு எனப்படும் அகத்திய காவேரியில் வெள்ளம் பெருக் கெடுத்தோட, அவ் ஆற்றில் ஓடம் செலுத்தும்

Koviloor Digital Library

ஓடக்காரர்கள் வெள்ளத்தின் மிகுதியைக் கண்டு அஞ்சி ஓடங்களைக் கரைப் பகுதியில் கட்டிச் சென்றனர். திருஞானசம்பந்தர், அடியவர் பெரு மக்களுடன் ஆங்கு போந்து, ஓர் ஓடத்தினைக் கட்ட விழ்த்து அதில் அமர்ந்து, "கொட்டமே கமழும் கொள்ளம்பூதூர்" என எடுத்தோதி, ஆற்றின் மறு கரையைச் சார்ந்தார். இறைவன் திருக்காட்சி நல்க தரிசித்துத் திருப்பதிகத்தை நிறைவு செய்தருளினார். இவ் அற்புதம் ஐப்பசி மாதம் அமாவாசைக்கு மறு நாள் ஓடத் திருவிழாவாக நடை பெறுகின்றது. இவ் ஆற்றின் கரையில் திருஞானசம்பந்தர் திருக்கோயில் உள்ளது. அது நம்பர் கோயில் (நம்பர் – ஞானசம்பந்தர்) என்று அழைக்கப்படுகிறது. இவ்வரிய அற்புதத்தைச் சேக்கிழார் பெருமான்,

நீணிலைகோ புரமதனை இறைஞ்சிப் புக்கு
நிகரிலாத் தொண்டருடன் நெருங்கச் சென்று
வாணிலவு கோயிலினை வலங்கொண்டு எய்தி
மதிச்சடையார் திருமுன்பு வணங்கி நின்று
தாணுவே ஆற்றின்கண் ஓடம் உய்க்கும்
தன்மையால் அருள்தந்த தலைவா நாகப்
பூணினாய் களிற்றுரிவை போர்த்த முக்கட்
புனிதனே எனப்பணிந்து போற்றி செய்தார்

– திருஞானசம்பந்தர் புராணம். பாடல் எண் 900

என அருளிச் செய்தனர்.

சுவாமி : வில்வாரண்ய ஈஸ்வரர், வில்வவன நாதர்

அம்பிகை : சௌந்தர நாயகி, அழகு நாச்சியார்

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம், அகத்திய தீர்த்தம், காண்டீப தீர்த்தம், முள்ளியாறு (வெட்டாறு)

Koviloor Digital Library

கூவிளம் (வில்வம்) என்பது கூவிளம்பூதூர் எனவாகிப் பின்னர், கொள்ளம்பூதூர் ஆயிற்று என்பர்.

ஈரடி மேல் வைப்பு

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

56. கொட்ட மேகமழும் கொள்ளம் பூதூர்
நட்டம் ஆடிய நம்பனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: *நல்லருள் மணம் கமழும் கொள்ளம்பூதூர் என்னும் திருத்தலத்தின்கண் திருக்கூத்து ஆடும் ஈசனை நினைத்துப் போற்றுகின்ற தன்மையால் இந்த ஓடமானது தனக்குத் தானே உந்திச் செல்வதாக. ஈசனே! என் நம்பனே! உம்மைச் சிந்தனை செய்து தியானித்து மகிழும் அடியவர்கள், நின்னைத் திருக்கோயிலின்கண் கண்டு தொழுமாறு அருள் புரிவீராக.*

சிறப்புரை: *ஓடத்தைச் செலுத்துபவர்கள் இன்றி ஓடமானது தானாகவே உந்தித் தள்ளி முள்ளியாற்றைக் கடந்து செல்லுமாறு அற்புதம் நிகழ்வித்த பாங்கினை ஓர்க.*

57. கோட்ட கக்கழநிக் கொள்ளம் பூதூர்
நாட்ட கத்துறை நம்பனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: *நீர் நிலைகளும் கழனிகளும் கொண்டு மேவும் கொள்ளம்பூதூரில் வீற்றிருக்கும் ஈசனை,*

Koviloor Digital Library

நெஞ்சமானது நினைத்து மகிழ, இந்த ஓடமானது தனக்குத்தானே உந்தி முன்னோக்கிச் செல்வதாக. ஈசனைத் தொழுது போற்ற, அப்பெருமான் நல்குகின்ற வழியாகும்.

கோட்டகம் – நீர்நிலை; குளம்.

58. குலையினார் தெங்குசூழ் கொள்ளம் பூதூர்
விலையின் ஆட்கொண்ட விகிர்தனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: குலைகள் விளங்கும் தென்னை மரங்கள் சூழ்ந்த கொள்ளம்பூதூரில் பெருமையுடைய பாங்குடன் என்னை ஆட்கொண்ட விகிர்தனாகிய ஈசனை நினைத்துப் போற்ற, இந்த ஓடமானது உந்திச் செல்வதாக. இது ஈசனைச் சிந்திப்பவர்களுக்கு அப்பெருமான் நல்குகின்ற வழியாகும்.

சிறப்புரை: ஈசன், திருஞானசம்பந்தரை ஆட்கொள்ளப் பெற்ற சிறப்பினை, இவண் "விலையின் ஆட்கொண்ட விகிர்தன்" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், "விலையுடை அருந்தமிழ் மாலை" எனத் திருவாவடு துறை பதிகம் எண் 4 பாடல் எண் 11இல் சுட்டப் பெற்றுள்ளதும் காண்க. ஈசனாரின் முழு உரிமைக்குத் தம்மை ஒப்படைத்துத் திட்பம் உறுகின்ற பாங்கினை இஃது உணர்த்துவதாயிற்று. "விற்றுக் கொள்வீர் ஒற்றி அல்லேன் விரும்பி ஆட்பட்டேன்" என நம்பியாரூரரும், (திருவாரூர் திருப்பதிகம், பண் – செந்துருத்தி, பாடல் எண் 2) "இருந்து என்னை ஆண்டு கொள்விற்றுக் கொள் ஒற்றிவை" என மாணிக்க வாசகரும் (திருவாசகம், பாடல் எண் 122) அருளிச் செய்த பாங்கும் நோக்குக.

விலை – மதிப்பும் பெருமையும் தோன்றுமாறு உணர்த்துவது.

Koviloor Digital Library

59. குவளை கண்மலரும் கொள்ளம் பூதூர்த்
தவள நீறணி தலைவனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: குவளை மலர் திகழும் கொள்ளம்பூதூரில் திருவெண்ணீறு அணிந்து மேவும் தலைவனாகிய ஈசனை நினைத்து ஏத்த, இந்த ஓடமானது உந்திச் செல்வதாக. இது சிவபெருமானைச் சிந்தித்து வழிபடு கின்றவர்களுக்கு. அப்பெருமான் நல்கும் வழியாகும்.

சிறப்புரை: யாவற்றுக்கும் தலைமையாக விளங்குபவன் இறைவனே ஆதலும், மன்னுயிர்கள் அப்பெருமானின் அருட் குறிப்பின் வண்ணம் இயங்குதலும், அத்தகைய தலைவனாகிய திருவெண்ணீற்று மேனியனாகிய ஈசனுக்கு ஆட்படுதல் வேண்டுமென்பதும் இவண் உணர்த்தப் பெற்றது. மற்றும் சிறப்புரைதல் பாட்டு எண் 9 (திருப்பதிகம் எண் 1 கோயில்.) காண்க.

குளிர்ச்சி மிக்க நீர் நிலைகளில் திகழும் குவளை மலர்கள் விளங்கும் கொள்ளம்பூதூர் என்னும் திருத்தலம், ஈசனின் அருள் வண்ணம் திகழப் பொலிந்து விளங்கும் பாங்குடைத்து என உணர்த்தப் பெற்றது. குவளை மலர் பெண்களின் கண்களுக்கு ஒப்புமை கூறுதல் இயல்பாதலும், அஃது அழகு பொருந்திய குளிர்ச்சியுடையதும், அந்த மலரானது, மன்மதனின் ஐந்து மலர்க்கணைகளுள் ஒன்றாதலும், இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருப்பெயருக்கு அது அணியாதலும் கொண்டு நோக்குக. இத்தன்மையினில், "குவளைக் கண்ணி கூறன் காண்க; அவளும் தானும் உடனே காண்க"

Koviloor Digital Library

எனப் போற்றும் மாணிக்கவாசகர் தம் திருவாக்கும் கொள்க.

60. கொன்றைபொன் சொரியும் கொள்ளம் பூதூர்
நின்ற புன்சடை நிமலனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: பொன் நிறம் கொண்ட கொன்றை மலர்கள் மரத்திலிருந்து உதிரும் தன்மையானது, பொன் சொரிந்தாற்போன்று திகழும் சிறப்புடையது கொள்ளம்பூதூர். ஆங்கு வீற்றிருக்கும் மென்மையான சடையை உடைய ஈசனை நினைத்து வணங்க, இந்த ஓடமானது தானாகவே உந்திச் செல்வதாகுக. ஈசன், தன்னைச் சிந்திக்கும் அடியவர்களுக்கு நல்கும் அருள் இத்தகையது ஆகும்.

61. ஓடம்வந் தணையும் கொள்ளம்பூதூர்
ஆடல் பேணிய அடிகளை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: திருநடம் புரியும் நாதனாகிய ஈசனை நினைக்க, ஓடமானது கொள்ளம்பூதூர் என்னும் ஊரின்கண் வந்து அடைய, உந்திச் செல்லுக. சிவபெருமானைத் தியானிப்பவர்களுக்கு அப்பெரு மான் நல்குகின்ற வழியும் அதுவே.

சிறப்புரை: இத் திருப்பாட்டில் ஓடமானது ஆற்றைக் கடந்து ஊரை வந்து அணுகியது என்னும் குறிப்பு பேசப்பட்டது.

62. ஆறுவந்து அணையும் கொள்ளம் பூதூர்
ஏறு தாங்கிய இறைவனை யுள்கச்

Koviloor Digital Library

செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: *ஆறு சூழ்ந்துள்ள கொள்ளம்பூதூரில் இடப வாகனத்தில் வீற்றிருக்கும் இறைவனை எண்ணித் துதிக்க, ஓடமானது உந்திச் செல்வதாக. ஈசன் தமது அடியவர்களுக்கு நல்குகின்ற அருட்பேறும் இஃதே ஆகும்.*

63. குரக்கினம் பயிலும் கொள்ளம்பூதூர்
அரக்கனைச் செற்ற ஆதியை யுள்கச்
செல்ல உந்துக சிந்தையார் தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: *குரங்குகள் மரங்களில் ஆடிக் குதிகொள்ள, கொள்ளம்பூதூரில் வீற்றிருக்கின்ற ஈசன், இராவணனைச் செற்று அடர்த்த பெருமான். அப்பரமன், ஆதிமூலமாக விளங்குபவன். அவ் இறைவனை எண்ணித் துதிக்கும் தன்மையில், ஓடமானது உந்திச் செல்வதாக. தமது அடியவர்களின் விருப்பத்தை நிறைவு செய்யும் ஈசன், அருள் புரியும் வழியும் இதுவே.*

64. பருவ ரால் உகளும் கொள்ளம் பூதூர்
இருவர் காண்பரி யான்கழல் உள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: *மீன்கள் உகளும் கொள்ளம்பூதூரில் திருமாலும் பிரமனும் காண்பதற்கு அரியவனாகிய ஈசன் திருக்கழலை எண்ணித் தொழும் பாங்கால், ஓடமானது உந்திச் செல்வதாக. அவ்வாறு*

Koviloor Digital Library

சிந்தையுடைய அடியவர்களுக்கு அருள் புரியும் ஈசன் நல்குவதும் இதுவே.

65. நீரகக் கழனிக் கொள்ளம் பூதூர்த்
தேரமண் செற்ற செல்வனை யுள்கச்
செல்ல உந்துக சிந்தை யார்தொழ
நல்கு மாறருள் நம்பனே.

தெளிவுரை: தேரரும் அமணரும் பகைத்துப் பேசும் செல்வனாகிய நீர் வளம் மிக்க கழனிகளையுடைய கொள்ளம்பூதூரில் வீற்றிருக்கும் ஈசனை நினைந்து வணங்க, இந்த ஓடமானது தானாகவே உந்திச் செல்வதாக. ஈசனைச் சிந்தையில் கொண்டு மேவும் அடியவர்களுக்கு அப்பெருமான் நல்கும் அருள் வண்ணமும் இதுவே.

66. கொன்றை சேர்சடை யான் கொள்ளம் பூதூர்
நன்று காழியுள் ஞானசம் பந்தன்
இன்று சொல் மாலைகொண்டு ஏத்தவல்
லார்போய்
என்றும் வானவ ரோடுஇருப் பாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கொன்றை மலர் தரித்த சடை முடியுடைய ஈசன் வீற்றிருக்கும் கொள்ளம்பூதூரினை, நற்புகழ் மேவும் காழியில் திகழும் ஞானசம்பந்தன் உரைத்த இத்திருப்பதிகத்தை ஓதுகின்ற அன்பர்கள், வானவர் பெருமக்களுடன் எஞ்ஞான்றும் மகிழ்ந்து விளங்கு வார்கள்.

சிறப்புரை: திருஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்த திருப்பதிகத்தை ஓதும் அன்பர்கள், எஞ்ஞான்றும் நலம் பெறும் சிறப்பினை எய்துவார்கள்

Koviloor Digital Library

என்னும் செழுமையனை, "இன்று சொல்மாலை" மற்றும் "என்றும் இருப்பாரே" ஆகிய தொடர்களால் சுட்டப் பெறுவதாயிற்று.

265. திருப்புகலி

தல விளக்கம்: *பதிகம் எண் 260 காண்க.*

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

67. கண்ணுத லானும்வெண் ணீற்றினானும் கழலார்க்கவே
பண்ணிசை பாடநின்று ஆடினானும் பரஞ்சோதியும்
புண்ணிய நான்மறை யோர்கள்ஏத் தும்புகலிந் நகர்ப்
பெண்ணினல் லாளொடும் வீற்றிருந்த பெருமானன்றே.

தெளிவுரை: *ஈசன், நெற்றியில் ஒரு கண்ணுடையவன்; திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி விளங்குபவன்; திருப்பாதத்தில் மேவும் வீரக்கழல் ஒலிக்கப் பண்ணின் வழி காணும் இசைப்பாடல் பாட நின்று திருநடனம் புரிபவன்; யாங்கணும் விளங்கும் சோதியாய்த் திகழ்பவன். அப்பெருமான் புண்ணியம் செய்த தன்மையால் வேதம் பயின்ற மறையவர்கள் ஏத்தும் புகலி நகரில் வீற்றிருக்கும் பெண்ணில் நல்லாளாகிய உமாதேவியோடு மேவும் இறைவனே!*

68. சாம்பலோ டுந்தழல் ஆடினானும் சடையின்மிசைப்
பாம்பினோ டும்மதி சூடினானும் பசுவேறியும்
பூம்படு கல்லிள வாளைபாயும் புகலிந்நகர்க்
காம்பன தோளியொ டும்மிருந்த கடவுளன்றே.

தெளிவுரை: *ஈசன், மகாப் பிரளய காலத்தில், உலகம் யாவும் நெருப்புமயமாய்த் தோன்றிய நிலையில்*

Koviloor Digital Library

அவற்றின் இடையே அழல் ஏந்தி ஆடியவன்; சடை முடியின்மீது அரவத்துடன் சந்திரனும் விளங்குமாறு சூடியவன்; இடப வாகனத்தில் அமர்ந்திருப்பவன். அப்பெருமான், மலர்ப்பொய்கையில் வாளை பாயும் புகலியில், மூங்கிலை ஒத்த தோளுடைய உமாதேவி யோடு வீற்றிருக்கும் கடவுள்.

பகுவேறி – இடபத்தில் அமர்ந்து; உயிர்களில் கலந்திருந்து

69. கருப்புநல் லார்சிலைக் காமன்வேவக் கடைக்கண்தானும்
மருப்புநல் லானையின் ஈருரி போர்த்த மணாளனும்
பொருப்பன மாமணி மாடமோங்கும் புகலிந்நகர்
விருப்பினல் லாளொடும் வீற்றிருந்த விமலனன்றே.

தெளிவுரை: ஈசன், கரும்பு வில்லைக் கொண்ட மன்மதன் எரியுமாறு நெற்றிக் கண்ணைத் திறந்தவன்; நீண்ட வலிமையான தந்தத்தையுடைய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்ட மணவாளன். அப்பெருமான் மலைபோன்று உயர்ந்து மேவும் மாட மாளிகைகளையுடைய புகலி நகரில் உமாதேவியோடு வீற்றிருக்கும் விமலன் ஆவன்.

70. அங்கையி லங்குஅழல் ஏந்தினானும் அழகாகவே
கங்கையைச் செஞ்சடை சூடினானும் கடலின்னிடைப்
பொங்கிய நஞ்சமுது உண்டவனும்புக லிந்நகர்
மங்கைநல் லாளொடும் வீற்றிருந்த மணவாளனே.

தெளிவுரை: அழகிய கையில் நெருப்பினை ஏந்திய வனாகிய ஈசன், கங்கையை அழகு திகழச் செஞ்சடையில் வைத்துப் பாற்கடலில் தோன்றிய நஞ்சினை அமுதமென உட்கொண்டு, புகலி நகரில் மங்கை நல்லாளாகிய உமாதேவியோடு வீற்றிருக்கும் மணவாளன் ஆவன்.

Koviloor Digital Library

சிறப்புரை: சிவபெருமான், உமாதேவியோடு பிரியாது வீற்றிருந்து மன்னுயிர்களைப் புரந்து அருள் பாலிக்கின்றான் என்னும் கருத்தினை உணர்த்தும் தன்மையில், மங்கை நல்லாள் எனச் சுட்டப் பெற்றது. இத்தகைமையில், பெண்ணின் நல்லாள் எனவும், விருப்பின் நல்லாள் எனவும் முந்தைய திருப்பாடல்களில் சுட்டப் பெற்றுள்ளதும் காண்க.

71. சாமநல் வேதனும் தக்கன்றன் வேள்வி தகர்த்தானும்
நாமநூ றாயிரம் சொல்லிவா னோர்தொழு நாதனும்
பூமல்கு தண்பொழில் மன்னும்அந் தண்புகலிந்நகர்க்
கோமள மாதொடும் வீற்றிருந்த குழகனன்றே.

தெளிவுரை: ஈசன், சாம வேதத்தை விரித்த பரமன்; தக்கனின் தீய வேள்வியைத் தகர்த்த தலைவன்; நூறாயிரம் (இலட்சம்) திருநாமங்களைக் கொண்டு தேவர்களால் தொழப்படுபவன். அப்பெருமான், பூக்கள் மல்கி விளங்கும் பொழில்கள் மேவும் குளிர்ச்சி மிக்க புகலியில் உமாதேவியோடு வீற்றிருக்கும் குழகன்.

சிறப்புரை: தேவர்கள், நூறாயிரம் திருநாமங்களைச் சொல்லி ஈசனை ஏத்துகின்ற செம்மையானது இவண் ஓதப் பெற்றது. இந்நெறியில் "ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க" எனவும், "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனவும், மாணிக்க வாசகர் அருளிச் செய்துள்ளமை காண்க.

ஆயிரம் – அநேகம் என்பது குறிப்பு. கோமளம் – இளமை, அழகு; குழகன் – அன்பன்.

72. இரவிடை ஒள்ளெரி ஆடினானும் இமையோர்தொழச்
செருவிடை முப்புரம் தீயெரித்த சிவலோகனும்

Koviloor Digital Library

பொருவிடை ஒன்றுஉகந்து ஏறினா னும்புக லிந்நகர்
அரவிடை மாதொடும் வீற்றிருந்த அழக னன்றே.

தெளிவுரை: *நள்ளிரவில் மயானத்தில் திருக்கூத்து புரிந்தவனும், தேவர்கள் தொழுது போற்றுமாறு முப்புரமும் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவனும், சிவலோக நாதனும், இடப வாகனத்தில் உகந்து அமர்ந்தவனும், புகலி நகரின்கண் அரவம் போன்ற இடையுடைய உமாதேவியோடு வீற்றிருக்கும் அழகனாகிய சிவபெருமானே அல்லவா!*

இரவிடை – நள்ளிருள்; பொருவிடை – எருது, இடபம்.

73. சேர்ப்பது திண்சிலை மேவினானும் திகழ் பாலன்மேல்
வேர்ப்பது செய்தவெங் கூற்றுதைத் தானும்வேள் விப்புகை
போர்ப்பது செய்தணி மாடமோங் கும்புக லிந்நகர்ப்
பார்ப்பதி யோடுடன் வீற்றிருந்த பரம னன்றே.

தெளிவுரை: *திண்மையுடன் மேவும் கயிலை மலையில் மேவி விளங்குபவனும், மார்க்கண்டேயர் மீது சினந்து வந்த கொடிய கூற்றுவனை உதைத்தவனும், வேள்விப் புகையானது மேலெழுந்து மாடமாளிகைகளில் சூழ்ந்து ஓங்கும் புகலி நகரில், உமாதேவியுடன் வீற்றிருப்பவனும் ஈசனேயன்றோ!*

திண்சிலை – கயிலை. மேரு வில்லும் குறிக்கும்.

74. கல்நெடு மால்வரைக் கீழ்அரக்கன் னிடர்கண் டானும்
வில்நெடும் போர்விறல் வேடனாகி விசயற்கு ஒரு
பொன்நெடுங் கோல்கொடுத் தானும்அந் தண்புக லிந்நகர்
அன்னமன் னந்நடை மங்கையொடும் அமர்ந் தானன்றே.

Koviloor Digital Library

தெளிவுரை: பெருமை மிக்க கயிலை மலையின்கீழ் இராவணனை இடர் செய்தவனும், வில்லேந்திப் போர் செய்யும் வீரம்மிக்க வேட்டுவ வடிவம் தாங்கி, அருச்சுனருக்கு உயர்ந்த பாசுபதம் என்னும் கணையைக் கொடுத்தவனும், புகலி நகரில் மேவும் உமாதேவியை உடனாகக் கொண்டு உறைபவன் ஈசன் அல்லவா!

கல்நெடுமால் வரை – கயிலை.

75. பொன்னிற நான்முகன் பச்சையான் என்றிவர் புக்குழித்
தன்னைஇன் னான்எனக் காண்பரிய தழற் சோதியும்
புன்னை பொன்றாது உதிர் மல்கும் அந்தண்
புகலிந்நகர்
மின்னிடை மாதொடும் வீற்றிருந்த விமலனன்றே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் காண்பதற்கு அரியவனாகிய நெருப்பின் சோதியும், புன்னை மரத்திலிருந்து பொன் போன்ற தாதுக்கள் உதிர்ந்து மேவும் குளிர்ச்சி மிக்க புகலியில் திகழும் உமாதேவி யுடன் வீற்றிருக்கும் விமலனாகிய ஈசன் அல்லவா!

பச்சையான் – திருமால்; விமலன் – ஈசன்; தழல் – நெருப்பு.

76. பிண்டியும் போதியும் பேணுவார் பேச்சினைப்
பேணாததோர்
தொண்டரும் காதல்செய் சோதியாய சுடர்ச் சோதியான்
புண்டரீ கம்மலர்ப் பொய்கை சூழ்ந்த புகலிந் நகர்
வண்டமர் கோதையொடும் இருந்த மணவாளனே.

தெளிவுரை: அசோக மரத்தையும் அரச மரத்தையும் போற்றும் சமணரும் சாக்கியரும் சொல்லும் உரைகளை ஏற்காது, தொண்டர்கள் விரும்பி ஏத்தும் சோதிச்சுடராய் விளங்குகின்ற ஈசன், தாமரை மலர்ப்

Koviloor Digital Library

பொய்கை சூழ்ந்த புகலியில், உமாதேவியோடு வீற்றிருக்கும் மணவாளன் ஆவன்.

பிண்டி – அசோகம்; போதி – அரசமரம்; புண்டரீகம் – தாமரை; மணவாளன் – சிவபெருமான்.

77. பூங்கமழ் கோதையொடும் இருந்தான் புகலிந்நகர்ப்
பாங்கனை ஞானசம் பந்தன் சொன்னதமிழ் பத்திவை
ஆங்கமர் வெய்திய ஆதியாக இசை வல்லவர்
ஓங்கம ராவதியோர் தொழச்செல்வதும் உண்மையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பூவின் மணம் கமழ்கின்ற உமாதேவியோடு வீற்றிருக்கும் புகலி நகர் நாதனாகிய ஈசனை, ஞான சம்பந்தன் சொன்ன இத் திருப்பதிகத்தினைத் திருத் தலத்தில் மேவும் ஈசனாகவே பாவித்து, இசையுடன் ஓத வல்லவர்கள், தேவர்களால் தொழுது போற்றப் படுவார்கள். இது உண்மை.

கோதை – உமையவள்; ஆதி – ஈசன்;
அமராவதி – தேவேந்திர நகரம்.

266. திருக்கடவூர் வீரட்டம்

தல விளக்கம்: காவிரித் தென் கரைத் தலங்கள் 127இல் இது 47ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. திருக் கடவூர் வீரட்டம், கடபுரி, வில்வாரண்யம், பிரமாந்திரத் தலம், பாவ விமோசன புண்ணிய வர்த்தம் என்பன வேறு பெயர்கள். அகஸ்தியர், புலஸ்தியர், வாசுகி, துர்க்கை வழிபட்டது. பிரமனுக்கு உபதேசித்த பதி. குங்குலிக் கலய நாயனார், காரி நாயனர் ஆகியோரின் திருத்தலம். மார்க்கண்டேயர் வழிபட்ட 108 திருத்தலங்களுள் இது 108ஆவது தலம்.

Koviloor Digital Library

மார்க்கண்டேயருக்காகக் காலனைச் சம்ஹரித்த தலம். அபிராமிபட்டர் வாழ்ந்து அம்பிகையின் அருளால் அமாவாசையன்று பூரணச் சந்திரனைக் காட்டி அருளும் தன்மையில் அபிராமிபட்டர் அபிராமி அந்தாதியை அருளிச் செய்த திருத்தலம்.

சுவாமி : அமிர்தகடேசர், அமுதீசர்

அம்பிகை : அபிராமி

தல மரம் : வில்வம், ஜாதி (பிஞ்சிலம்)

தீர்த்தம் : சிவகங்கை, அமிர்த தீர்த்தம்

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

78. சடையுடை யானும்நெய் யாடலா னும்சரி கோவண
உடையுடை யானும் மையார்ந்த ஒண்கண்உமை கேள்வனும்
கடையுடை நன்னெடு மாடம்ஓங் குங்கட வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தரன்அல்லனே.

தெளிவுரை: சடை முடியுடையவனும், நெய் முதலான பசுவின் ஐந்து பொருள்களை அபிடேகப் பொருளாகக் கொள்பவனும், சரிந்த கோவண ஆடையுடையவனும், மை திகழும் கண்ணொடு விளங்கும் உமாதேவியின் துணைவனும், நெடிய மாடங்களை உடைய கடவூரில் இடப வாகனத்தில் வீற்றிருக்கும் அண்ணலாகிய வீரட்டானத்து அரன் அல்லவா!

சிறப்புரை: பசுவிலிருந்து பெறப்படும் நெய், பால், தயிர், கோநீர், கோமயம் ஆகிய பொருள்களைக் கொண்டு ஈசனைப் பூசித்து வழிபடுதலை இத்திருப்பாட்டில் நெய்யாடலானும் என உணர்த்தப் பெற்றது. கோமயத்தினைத் தவிர்த்துக் கோரோசனம் என

Koviloor Digital Library

மொழிதலும் அதனைப் பஞ்சகௌவியம் எனலும் ஆகும். இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

சிந்தித்து என்றும் நினைத்தெழு வார்கள்
சிந்தையில் திகழும் சிவன்றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடு ஆனஞ்சும் ஆட்டுகந்தானை

என அருளிச் செய்தவாறும் காண்க.

இத் திருப்பாட்டில், திருமேனியின் வண்ணமாகச் சடை முடியழகும்; அபிடேக வண்ணமாக நெய்யாடலும்; உடையழகாகச் சரிகோவணமும்; அருள் வண்ணமாக உமையவளைப் பாகம் கொண்டு விளங்குதலும் சுட்டப் பெற்றது.

ஈசனாரின் வீரச் செயலைக் குறிக்கும் இத்திருத் தலமானது வீரட்டானம் என உணர்த்தப் பெற்றது. எட்டுவகையான வீரச் செயலைப் புரிந்து ஈசனின் திருச்செயல்களுள், மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனை மாய்த்தது, இத்தலத்தின் சிறப்பாயிற்று. ஏனைய வீரச் செயல்களைப் புரிந்த திருத்தலங் களாவன:

1. திருவதிகை – முப்புரத்தை எரித்தது
2. திருவிற்குடி – சலந்தராசுரனை அழித்தது
3. திருக்குறுக்கை – மன்தமனை எரித்தது
4. திருக்கோவலூர் – அந்தகாசுரனை மாய்த்தது
5. திருப்பறியலூர் – தக்கனை அழித்தது
6. திருக்கண்டியூர் – பிரமன் சிரத்தை அரிந்தது
7. வழுவை – யானையின் தோலை உரித்தது.

Koviloor Digital Library

வீரட்டானத்தில் வீற்றிருக்கும் பெருமானை அரன் என உணர்த்தப் பெற்றது. "மால்அற, நேயம் மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே" என வரும் சிவஞான போதச் சூத்திரத்தில் உணர்த்தப் பெற்ற பாங்கில் அரநாமத்தின் சிறப்பினை உய்த்துணர்க.

79. எரிதரு வார்சடை யானும்வெள் ளைஎருது ஏறியும்
புரிதரு மாமலர்க் கொன்றைமா லைபுனைந்து ஏத்தவே
கரிதரு காலனைச் சாடினா னும்கட வூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: நெருப்புப் போன்ற சிவந்த நீண்ட சடை முடியுடையவனும், வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவனும், சிறப்பான மலராக விளங்கும் கொன்றை மலரைப் புனைந்து ஏத்தி வழிபட்ட மார்க் கண்டேயருக்கு அருள் புரியும் பாங்கில், கரிய கோலத்தையுடைய காலனைக் காலால் உதைத்த வனும் ஆகிய ஈசன், கடவூரின்கண் தொல்புகழ் விளங்கும் வீரட்டானத்தில் வீற்றிருக்கும் அரன் அல்லவா!

சிறப்புரை: சிவந்த சடை முடியும், வெண்மையான இடபமும், பொன்னிறமாகிய கொன்றையும் கொண்டு மூவண்ணமாய் மேவும் ஈசனின் அருளால் கரிய கோலத்தையுடைய காலன் வீழ்ந்துபட்ட எழில் சுட்டப் பெறுதல் ஆயிற்று.

ஈசனை மலர் கொண்டு போற்றி வழிபடும் அன்பர்களுக்கு நல்வினைப் பயன் நனிவாய்க்கும் என உணர்த்தப் பெறுவதாயிற்று. "பூ நாளும் தலை சுமப்பப் புகழ் நாமம் செவி கேட்ப நாநாளும் நவின்றேத்தப்

Koviloor Digital Library

பெறலாமே நல்வினையே" எனத் திருஞானசம்பந்தர், (பாடல். 2.41.3 திருச்சாய்க்காடு இரண்டாம் திருமுறை வ. எண் 439) மலர் கொண்டு வழிபடும் மேன்மை யினை உணர்த்தும் வகையும் நோக்குக.

ஈசனை, மலர் தூவிப் போற்றி வழிபடுவோரைக் காத்தருள் புரிபவன் பரமன் என்பதற்குக் காலனைச் சாடிய செயல் சான்றாயிற்று.

கரிதரு – சாட்சி; கருமை. யானை போன்று வஞ்சிக்கும் குணம் உடைமை.

80. நாதனும் நள்ளிருள் ஆடினா னும்நளிர் போதின்கண்
பாதனும் பாய்புலித் தோலினா னும்பசு வேறியும்
காதலர் தண்கட வூரினா னும்கலந்து ஏத்தவே
வேதம தோதியும் வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: எல்லா உலகங்களுக்கும் நாதனாகவும், நள்ளிருளில் நடனம் புரிபவனாகவும், அடியவர்களின் இதயத் தாமரையில் வீற்றிருப்பவனாகவும், புலித் தோலை உடையாகக் கொண்டு விளங்குபவனாகவும், இடப வாகனத்தில் ஏறி அன்பர்கள் மேவிய கடவூரில் விளங்குபவனாகவும் உள்ள ஈசன், யாவரும் ஏத்தி வணங்குமாறு வேதம் விரித்தோதிய வீரட்டானத்தில் திகழும் அரன் அல்லவா!

81. மழுவமர் செல்வனும் மாசிலாத பல பூதமுன்
முழவொலி யாழ்குழல் மொந்தை கொட்ட முது
காட்டிடைக்
கழல்வலர் கால்குஞ்சித் தாடினானும் கடவூர்தனுள்
விழவொலி மல்கிய வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: மழுப்படையைக் கரத்தில் கொண்டு மேவும் செல்வனாகிய ஈசனைப் பரவிப் போற்றும் எக் குற்றத்தின்பாலும் மேவாது திகழும் பூதகணங்கள்

Koviloor Digital Library

முழவு ஒலிக்கவும், யாழும் குழலும் இசைக்கவும், மொந்தை என்னும் கருவி கொட்டவும் விளங்கு கின்றன. சுடுகாட்டின் இடையில் இருந்து கழல்கள் ஒலிக்கத் திருப்பாதத்தை நன்கு வளைத்து ஆடும் அப்பெருமான் கடவூரின்கண் திருவிழாக்கள் பெருகும் வீரட்டானத்தின் அரன் அல்லவா!

குஞ்சித்தல் – காலைத் தூக்கி வளைத்தல்.

82. சுடர்மணிச் சுண்ணவெண் ணீற்றினா னும்சுழல் வாயதோர்
படமணி நாகம் அரைக் கசைத்தபர மேட்டியும்
கடமணி மாவுரித் தோலினா னும்கட வூர்தனுள்
விடமணி கண்டனும் வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: சுடர் விடும் மணி போன்ற உருத்திராக்கம் அணிந்து திருவெண்ணீறு தரித்தவனும், படம் கொண்டு விளங்கும் நாகத்தை அரையில் கட்டிய பரமேட்டியும், மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவனும், கடவூரில் மேவி நஞ்சினை மணி போன்று கண்டத்தில் கொண்டு திகழ்பவனும், வீரட்டானத்தில் வீற்றிருக்கும் அரன் அல்லவா!

சிறப்புரை: ஈசனே யாவற்றுக்கும் மேலான பொருளாய் விளங்குபவன் எனச் சுட்டுமாறு பரமேட்டி என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

காயும் புலியின் அதளுடையார் கண்டர் எண்தோள்கடவூரர்
தாயும் தந்தை பல்லுயிர்க்கும் தாமே ஆய தலைவனார்
பாயும் விடையொன்றது ஏறிப் பலிதேர்ந்துண்ணும் பரமேட்டி
பேய்கள் வாழும் மயானத்துப் பெரியபெருமான் அடிகளே.

–திருக்கடவூர் மயானம் திருப்பதிகம், பாடல் 3

என உணர்த்திய வண்ணமும் காண்க.

Koviloor Digital Library

நஞ்சினை உட்கொண்டு கருமையான கண்டத்தின் சிறப்பானது நீல கண்டம் எனப் போற்றப் பட்டது. "நீல மணி மிடற்று ஒருவன் போல" என வரும் சங்கப் பாடலையும் நோக்குக. நீல மணி என வாகி, அழகு சேர்க்கின்ற பாங்கு "விட மணி" எனச் சுட்டுவதாயிற்று. விடமானது அணியாக விளங்கப் பெறுவது எனலும் பொருந்தும்.

விடமணி கண்டன் – விடம் அணி கண்டன், விட மணிகண்டன்.

83. பண்பொலி நான்மறை பாடியாடிப் பலவூர் கள்போய்
உண்பலி கொண்டுழல் வானும் வானின் னொளி
மல்கிய
கண்பொலி நெற்றிவெண் திங்க ளானும் கடவூர்தனுள்
வெண்பொடிப் பூசியும் வீரட்டானத்தரன் அல்லனே.

தெளிவுரை: *நல்ல பண்முறையில் ஓதப் பெறும் நான்கு வேதங்களையும் பாடிப்பல ஊர்களில், கபாலம் ஏந்திப் பிச்சை கொண்டு உழல்பவனும், வானில் ஒளிரும் சந்திரனைத் தரித்தும், நெற்றியில் நெருப்புக் கண் உடையவனும், கடவூரில் திருவெண்ணீறு பூசி விளங்கும் வீரட்டானத்து அரன் அல்லவா!*

84. செவ்வழ லாய்நில னாகிநின்ற சிவமூர்த்தியும்
முவ்வழல் நான்மறை ஐந்துமா யமுனி கேள்வனும்
கவ்வழல் வாய்க் கத நாகமார்த் தான்கட வூர்தனுள்
வெவ்வழல் ஏந்துகை வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: *ஈசன், செவ்வழலாகிய நெருப்பாகவும் நிலமாகவும் விளங்கும் சிவமூர்த்தியாய் விளங்குபவன்; ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி எனப்படும் மூவகையான நெருப்பாய்த் திகழ்பவன்; இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என நான்கு*

Koviloor Digital Library

வேதங்களாய் மிளிர்பவன்; ஐவகையான ஞான வேள்வியாகிய ஞானநூல்களை ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல் என ஐந்தும் ஆற்றும் முனிசிரேஷ்டர்களின் துணைவனாய் மேவுபவன். அப்பெருமான் கொடிய நஞ்சுடைய நாகத்தை அணிந்தவனாய்க் கடவூரின்கண் வெம்மையான நெருப்பினைக் கரத்தில் ஏந்தி விளங்கும் வீரட்டானத்து அரன் அல்லவா!

சிறப்புரை: ஐம்பூதங்களின் பாங்காய் விளங்குகின்ற சிவமூர்த்தியின் வடிவங்களுள் நெருப்பும் நிலமும் இவண் சுட்டப் பெற்றுள்ளன. ஏனையவையான நீர், காற்று, ஆகாயம் ஆகியனவாயும் உடையவன் ஈசன் என வருவித்துக் கொள்க. அழல் என்னும் சொல் வெவ்வேறு பொருளில் சுட்டப் பெறுவதாயிற்று. செவ்வழல், ஐம்பூதங்களில் ஒன்றாகவும்; முவ்வழல், மூன்று வகையான தீயைச் சுட்டுவதாகவும்; கவ்வழல், நாகத்தின் சீற்றத்தை உணர்த்துவதாகவும்; வெவ்வழல், தாருக வனத்து முனிவர்களால் ஏவப் பெற்று அதனை, அங்கையில் ஏற்று விளங்கிய ஆற்றலாகவும் சுட்டப் பெற்றது.

சிவமூர்த்தி – அன்பின் வடிவம்.

85. அடியிரண் டோருடம் பைந்நான்கிரு பதுதோள்தச
முடியுடை வேந்தனை மூர்க்கழித்த முதல் மூர்த்தியும்
கடிகம ழும்பொழில் சூழுமந் தண்கட வூர்தனுள்
வெடிதலை யேந்தியும் வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: ஓர் உடலில் இரண்டு கால்களும் இருபது தோள்களும் பத்துத் தலைகளும் உடைய இராவணனுடைய மூர்க்கத் தன்மையினை அழித்த, முதற் பொருளாகிய மூர்த்தி நறுமணம் கமழும் பொழில்

Koviloor Digital Library

சூழ்ந்த குளிர்ச்சி மிக்க கடவூரில், பிரம கபாலம் ஏந்தி உள்ள அவன், வீரட்டானத்து அரன் அல்லவா!

வெடிதலை – பிரம கபாலம்.

86. வரைகுடை யாமழை தாங்கினா னும்வளர் போதின்கண்
புரைகடிந் தோங்கிய நான்முகத் தான்புரிந் தேத்தவே
கரைகடல் சூழ்வையம் காக்கின்றா னுங்கட வூர்தனுள்
விரை கமழ் பூம்பொழில் வீரட்டானத்தரன் அல்லனே.

தெளிவுரை: கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காத்த திருமாலும், குற்றமற்ற தாமரைமலரின் மீது விளங்கும் நான்முகனும் போற்று மாறு இவ்வுலகத்தைக் காத்தருள்பவனாகிய ஈசன், கடவூரின்கண், பூம்பொழில் மேவும் வீரட்டானத்தில் மேவும் அரன் அல்லவா!

சிறப்புரை: ஈசனே முழு முதற் பொருளாய் இருந்து இயக்குதலும், அப்பெருமானின் அருளாக்கினைக்கு ஏற்பத் தொழில் புரிபவர்கள் படைக்கும் தொழில் மேவும் பிரமனும், காக்கும் தொழில்மேவும் திருமாலும் ஆதலும், ஈண்டு உணர்த்துவதாயிற்று.

87. தேரரும் மாசுகொள் மேனியா ரும்தெளி யாததோர்
ஆரரும் சொற்பொரு ளாகிநின்ற எமது ஆதியான்
காரிளங் கொன்றைவெண் திங்களானும் கடவூர்தனுள்
வீரமும் சேர்கழல் வீரட்டா னத்தரன் அல்லனே.

தெளிவுரை: தேரர்களும் சமணர்களும் தெளிவு கொண்டு அறிவதற்கு அரிய சொற்பொருளாகிய எமது ஆதிப்பிரானாகிய ஈசன், கார்காலத்தில் மலரும் கொன்றை மலரைத் தரித்துத் திங்களைச் சடை

Koviloor Digital Library

முடியில் சூடிக் கடவூரில் வீரக்கழல் விளங்க மேவும் வீரட்டானத்து அரன் அல்லவா!

தேரர் – பௌத்தர்.

88. வெந்தவெண் ணீறணி வீரட்டானத்துறை வேந்தனை
அந்தணர்தம் கடவூருளா னைஅணி காழியான்
சந்தமெல் லாம்அடிச் சாத்தவல்ல மறைஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியாடக் கெடும் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வீரட்டானத்தில் உறைகின்ற திருவெண்ணீறு தரித்து மேவும் இறைவன், மறையவர்கள் விளங்கி மேவும் கடவூரில் திகழ்பவன். அப்பெருமானைச் சந்தப் பாடல்களால் உரைக்க வல்ல, காழியில் மேவும் ஞானசம்பந்தன், போற்றி உரைத்த செந்தமிழ்ப் பாமாலையாகிய இத்திருப் பதிகத்தைப் பாடிப் போற்றிப் பக்தியால் கசிந்துருகித் தன்னை மறந்து விளங்கும் அன்பர்களின் பாவம் யாவும் கெடும். இது வினை யாவும் தீரும் என உரைப்பதாயிற்று.

267. திருவீழிமிழலை

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல் இது 61ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. இத் தலத்தின் வேறு பெயர்களாவன: பூகைலாசம், கல்யாணபுரம், பஞ்சாக்கரபுரம், தட்சிணகாசி, சம்மங்களஸ்தலம், சுவேதகாவனம், ஆகாச நகரம், பனசாரண்யம், நேத்திரார்ப்பணபுரம், தேஜி நீவனம் என்பன. திருமால் தனது கண்ணை இடந்து அருச் சித்துச் சக்கராயுதம் பெற்ற திருத்தலம். சுவாமி

Koviloor Digital Library

வீற்றிருக்கும் இடம், விண்ணிலிருந்து திருமாலால் கொண்டு வரப்பெற்ற விண்ணிழி விமானம் என்று சொல்லப்படுகிறது; இரதிதேவி, வசிட்டர், காமதேனு, மனு முதலானோர் பூசித்துப் பேறு பெற்றது. மிழலை - ஊர்ப் பெயர்; வீழி - செடியின் பெயர். சுவாமி உமையம்மையை மணம் கொண்ட பதி. திருஞான சம்பந்தருக்குச் சீகாழியில் உள்ள திருக்கோலத்தைக் காட்டிய தலம், இது. இங்கு திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் படிக்காசு பெற்று அடியவர்களுக்கு அமுது அளித்தனர்.

படியளக்கப் பெற்ற காசுகளைக் கொண்டு பொருட்களை வாங்கிய கடைத் தெரு, ஐயன் பேட்டை என வழங்கப்படுகிறது. ஆங்கு விற்றிருக்கும் சுவாமி - செட்டியப்பர் எனவும்; அம்பிகை - படியளந்த நாயகி எனவும் வழங்கப்படுகிறது. இது தனிக் கோயிலாக உள்ளது. மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 4 காண்க.

சுவாமி : நேத்திரார்ப்பணேசுவரர், வீழியழகர்

அம்பிகை : சுந்தரகுசாம்பிகை

தல மரம் : வீழிச்செடி

தீர்த்தம் : விஷ்ணு தீர்த்தம்

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

89. கேள்வியர் நாள்தொறும் ஓதுதல் வேதத்தர் கேடிலா
வேள்விசெய் அந்தணர் வேதியர் வீழி மிழலையார்
வாழியர் தோற்றமும் கேடும்வைப் பாருயிர்கட்கெலாம்
ஆழியர் தம்மடி போற்றியென் பார்கட்கு அணியரே.

Koviloor Digital Library

தெளிவுரை: கேள்வி ஞானத்தால் நாள்தொறும் பயிலும் வேதத்தை ஓதி, ஐவகையான வேள்விகளை ஆற்றி ஒழுகுகின்ற அந்தணர்கள் ஏத்துகின்ற வேதநாதனாய், வீழிமிழலையில் வீற்றிருக்கும் சிவபெருமான், மன்னுயிர்க்கு உலகில் பிறந்தும், நீத்தும் அடைகின்ற சரீரத்தைத் தருபவர்; உயிரால் அறியப்படாத தன்மையில் ஆழ்ந்து விளங்குபவர்; தனது திருவடியைப் போற்றி வணங்கும் பக்தர்களுக்கு நெருக்கமானவர்.

சிறப்புரை: வேதமானது செவிவழியாகப் பயிலப்பெறும் சிறப்பும், அதனை நாள்தொறும் ஓத வல்லவர்கள் ஓதுதலும். பயில வல்லவர்கள் பயிலுதலும், அத்தகைய பெருமையில் திகழும் அந்தணர்கள் இத்திருத்தலத்தில் மிகுந்து விளங்குதலும் இத் திருப்பாட்டில் எடுத்து ஓதுவதாயிற்று. வேள்வியானது, வேதத்தால் ஆற்றப் படுதலும்; அது வேத வேள்வி, தேவ வேள்வி, பித்ரு வேள்வி, புத்திர வேள்வி, அதிதி வேள்வி எனச் சொல்லப்படுகின்ற ஐவகை வேள்வியாதலும்; அதனால் உலக நலன்களே அன்றிக் கேடு விளைவிக்காதது என்பதும் உணர்த்துமாறு, "கேடிலா வேள்வி செய் அந்தணர்" எனச் சுட்டப் பெற்றது.

ஈசன், முழு முதற் பொருளாக விளங்கி, உயிர் களுக்கு அவ்வற்றின் வினைக்கு ஈடாகத் தோற்றமும் கேடும் அருள்கின்றான் எனச் சுட்டப் பெற்றது. இத் தன்மையில் மாணிக்கவாசகர், "படைப் போன் படைக்கும் பழையோன் படைத்தவை காப்போன் காக்கும் கடவுள் காப்பவை, கரப்போன் கரப்பவை கருதாக் கருத்துடைக் கடவுள்" (திருவாசகம், திருவண்டப் பகுதி) என்று அளிச்செய்துள்ளமை காண்க. இந்நெறியில், ஈசனின் ஆற்றல் ஒன்றே

Koviloor Digital Library

வல்லமையுடையது என்னும் கருத்தில் உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்துள்ள,

> கந்தமலர் அயன்படைக்கும் உலகம் எல்லாம்
> கண்ணன்அளித் திடும்அவைஎம் கடவுள்தானே
> அந்தம்உற அழித்திடுவன் ஆத லாலே
> அயன்அரியும் அவனதுஉயர் அதிகா ரத்து
> வந்தமுறை தன்தொழிலே மன்னுவிப்பன் எல்லாம்
> வருவிப்பன் விகாரங்கள் மருவான்...
>
> – சிவப்பிரகாசம், பாடல் எண் 17

என வரும் சாத்திர வாக்கியமும் காண்க. இக் கருத்து முந்தைய திருப்பதிகம் பாடல் 9இல் (3.8.9) பாடல் வ.எண் 86இல், சுட்டப் பெற்ற தன்மையை ஒக்கும்.

காணற்கு அரியவனாகிய ஈசன், தன்னைத் தொழுது போற்றுகின்றவர்களுக்கு நெருக்கம் உற்றவனாய் இருத்தலை, "கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்," என வரும் மாணிக்கவாசகர்தம் அமுத மொழியாலும் ஓர்க.

90. கல்லினற் பாவையோர் பாகத்தர் காதலித் தேத்திய
மெல்லினத் தார்பக்கல் மேவினர் வீழி மிழலையார்
நல்லினத் தார்செய்த வேள்வி செகுத்தெழு ஞாயிற்றின்
பல்லனைத் தும்தகர்த் தார்அடியார் பாவ நாசரே.

தெளிவுரை: மலைமகளாகிய உமாதேவியை ஒரு பாக மாகக் கொண்டு திகழும் ஈசன், மென்மையான இனத்தினராகிய அந்தணர்கள் விரும்பிப் போற்றுகின்ற வீழிமிழலையில் விளங்குபவர். அப்பெருமான் தீய நோக்கில் செய்யப் பெற்ற தக்கனது

Koviloor Digital Library

யாகத்தில் பங்கேற்ற சூரியனின் பற்களை வாட்டியவர். அவர், அடியவர்களின் பாவத்தைப் போக்கும் பாவ நாசகர்.

சிறப்புரை: தக்கன் செய்த யாகமானது ஈசனை, எதிர்க்கும் தன்மை ஆதலால், அதில் பங்குற்ற தேவர்களின் இகழ்ச்சி தோன்றுமாறு, "நல்லினத்தார் செய்த வேள்வி" எனக் கூறப் பெற்றது. ஈசன் வீரபத்திரரைத் தோற்றுவித்து, யாகத்தையும் தக்கனையும் அழித்தும் வெற்றி கொண்ட தன்மை இவண் சுட்டப் பெற்றது. வீரபத்திரர், சூரிய தேவனின் பற்கள் உதிர்ந்து வீழுமாறு தாக்கிய செயல் "பல்லனைத்தும் தகர்த்தார்" எனப் போற்றப் பெற்றது. இதனை, மாணிக்கவாசகர், "சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை வாரிநெரித்தவாறு உந்தீபற" என உணர்த்தியமை காண்க.

91. நஞ்சினை யுண்டிருள் கண்டர்பண்டு அந்தக
னைச்செற்ற
வெஞ்சின மூவிலைச் சூலத்தர் வீழி மிழலையார்
அஞ்சனக் கண்ணுமை பங்கினர் கங்கையங் காடிய
மஞ்சனச் செஞ்சடை யாரென வல்வினை மாயுமே.

தெளிவுரை: ஈசன், நஞ்சினை உட்கொண்ட கருமை யான கண்டத்தை உடையவர்; அந்தகா சூரனை வதைத்த சூலப் படையுடையவர்; திருவீழிமிழலையில் வீற்றிருப்பவர்; மை திகழும் கண்ணுடைய உமாதேவியை ஒரு பாகம் கொண்டு விளங்குபவர்; கங்கையை அபிடேகமாகக் கொள்ளும் சிறப்புடன் சிவந்த சடை முடியுடையவர். அப்பெருமானைப் போற்றி வணங்கக் கொடிய வினை யாவும் மாயும்.

Koviloor Digital Library

92. கலையிலங் கும்மழு கட்டங்கம் கண்டிகை குண்டலம்
விலையிலங் கும்மணி மாடத்தர் வீழிமிழலையார்
தலையிலங் கும்பிறை தாழ்வடம் சூலம் தமருகம்
அலையிலங் கும்புனல் ஏற்றவர்க்கும் அடியார்க்குமே.

தெளிவுரை: மான், மழுப்படை, யோகதண்டம், உருத்திராக்கம், குண்டலம் ஆகியன கொண்டு மணிமாடங்கள் திகழும் வீழிமிழலையில் வீற்றிருக்கும் ஈசன், பிறைச் சந்திரன் சடைமுடியில் திகழச் சூலம், எலும்பு மாலை, தமருகம், கங்கை, இடபக் கொடி ஆகியனவும் கொண்டு விளங்குபவர். அப்பெருமான், அடியவர்களுக்கும் அவ்வடிவத்தின் பாங்கினைச் செய்விப்பவர்.

சிறப்புரை: ஈசன் தமது அடியவர்களுக்கு அவ்வவர்தம் பக்குவங்களுக்கு ஏற்ப பதவிகளை வழங்கியருளுதலும், அவை சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ச நிலைகளாதலும் சுட்டப் பெற்று, இத் திருப்பாட்டில் சாரூப நிலையினை அருள் புரியும் பாங்கு உணர்த்தப் பெற்றது.

93. பிறையுறு செஞ்சடை யார்விடை யார்பிச்சை நச்சியே
வெறியுறு நாட்பலி தேர்ந்துழல் வீழி மிழலையார்
முறைமுறை யாலிசை பாடுவார் ஆடிமுன் தொண்டர்கள்
இறையுறை வாஞ்சியம் அல்லது எப்போதும் என்
உள்ளமே.

தெளிவுரை: ஈசன், பிறைச் சந்திரனைச் சூடிய சிவந்த சடை முடியுடையவர்; இடப வாகனத்தை உடையவர்; பிச்சை எடுப்பதை விரும்பித் தெருக்களில் தினந் தோறும் பலியேற்றுத் திரியும் வீழிமிழலையார். அப்பெருமான், பண்முறைப்படி இசைபாடு கின்றவர்கள், தம்மை மறந்து பக்திப் பரவசத்தினால்

Koviloor Digital Library

ஆட, அவர்தம் இதயத் தாமரையில் வீற்றிப்பவர். அதனை அல்லாது எனது உள்ளம் பிரிதொன்றை நாடாது.

சிறப்புரை: அடியவர்கள், தம்மை மறந்து பக்திப் பரவசத்தால் திளைக்கின்ற தன்மையில் அன்பு கலந்து திகழ்தலை வாஞ்சனை எனும் சொல் கொண்டு உணர்த்துதலும், அதுவே அட்ட புஷ்பம் என்னும் இதயத் தாமரையாதலும் இவண் கொள்ளப் பெற்றது. அட்ட புட்பங்களாவன: கொல்லாமை, அருள், ஐம்பொறியடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவு முதலியன.

திருஞானசம்பந்தப் பெருமான் திருவீழி மிழலையில் வீற்றிருந்து ஈசனைப் போற்றி வழிபடும் காலத்தில், திருவாஞ்சியம் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் நாதனை நினைத்துப் போற்றிய தன்மையில் "வாஞ்சியம்" என உணர்த்தியதாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

94. வசையறு மாதவங் கண்டு வரிசிலை வேடனாய்
விசையனுக் கன்றருள் செய்தவர் வீழி மிழலையார்
இசைவர விட்டியல் கேட்பித்துக் கல்ல வடமிட்டுத்
திசை தொழுது ஆடியும் பாடுவார் சிந்தையுள் சேர்வரே.

தெளிவுரை: குற்றமில்லாத சிறப்பான தவவேடத்தைப் பூண்டு, தவம் மேற்கொண்ட அர்ச்சுனருக்கு, அழகிய வில்லை ஏந்திய வேடனாய்க் கோலம் தாங்கி அருள் நல்கி வீழிமிழலையில் வீற்றிருக்கும் ஈசன், தன்னை வாயாரப் பக்திப் பெருக்கால் பாடுகின்ற அடியவர்கள்; ஈசனின் திருப்புகழை இயற்றமிழால் போற்றி உரைத்தும், கேட்டும் மகிழும் அன்பர்கள்;

Koviloor Digital Library

யோக முத்திரையில் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு புலன்களை அடக்கித் திசை நோக்கித் தொழுது போற்றுபவர்கள் ஆகியோர்தம் சித்தத்தில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: பாடிப் போற்றும் அன்பர்கள் உள்ளத்தில் கோயில் கொண்டு விளங்கும் ஈசனின் அருள் நிலை இவண் உணர்த்தப் பெற்றது. அதுபோலவே, திருப்புகழைக் கூறும் அடியவர்தம் உள்ளத்திலும், அதனைக் கேட்டு மகிழும் தொண்டர்கள் மனத்திலும் இறைவன் கோயில் கொண்டு விளங்கும் மாண்பு இவண் சுட்டப் பெற்றது. இதனைத் திருநாவுக்கரசர்,

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத் தகத்தான் இமயவர்தம் சிரத்தின் மேலான்

என அருளிச் செய்துள்ளமையும் காண்க. இத்தலத்தின் பெருமையாகச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

இருந்து நீர் தமிழோடு இசைகேட்கும் இச்சையால்
காசு நித்தல் நல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர்அடி
யேற்கும் அருளுதிரே

எனப் போற்றிப் பாடி அருளிய பாங்கும் காண்க.

ஈசனைக் குரு முகாந்திரமாகத் தியானம் செய்து போற்றிய சனகாதி முனிவர்களாகிய நால்வருக்கு அருள் புரிந்த பாங்கில், தியானிக்கும் பக்தர்களின் உள்ளத்தில் வீற்றிருந்து அருள்புரிதலைச் சுட்டுமாறு "கல்லவடம் இட்டுத் திசை தொழுவார்" என்னும் தொடர் உணர்த்தலும் ஆம்.

Koviloor Digital Library

95. சேடர்விண் ணோர்கட்குத் தேவர்நன் மூவிரு
தொன்னூலர்
வீடர்முத் தீயர்நால் வேதத்தர் வீழி மிழலையார்
காடரங் காவுமை காணவுண் டத்துஇமை யோர்தொழ
நாடகம் ஆடியை ஏத்தவல் லார்வினை நாசமே.

தெளிவுரை: ஈசன், தேவர்களால் காண முடியாத தொலைவில் இருப்பவர்; ஆறு அங்கங்களையும் கற்று விளங்கும் பூவுலகின் தேவர்களாகிய அந்தணர் பெருமக்களுக்கு வீட்டுலகத்தை அளிக்கும் பாங்குடையவர்; அவர், மூத்தீயராய், நான்கு வேதத்தினராய் வீழி மிழலையில் விளங்குபவர்; அப்பெருமான், சுடுகாட்டை அரங்காகக் கொண்டு, உமாதேவியார் கண்டு மகிழுமாறு எல்லா அண்டங்களிலும் திகழும் தேவர்கள் தொழ, திருநடம்புரிவர்; அத்தகைய இறைவனை ஏத்தி வணங்கும் அடியவர்கள் வினை யாவும் அழியும்.

சிறப்புரை: உலகில் புரியும் அறச் செயல்களானவை மறுமையில் சொர்க்க வாழ்க்கையை நல்குதலும், அதன் பயன் முடிவுற்றதும் மண்ணுலகில் மீண்டும் உயர் பிறவி கொள்ளுதலும் இவண் உணர்த்தி அத்தகையோரும் காணுதற்கு அரியவன் ஈசன் எனச் சுட்டப் பெற்றது. இம்மையில் செய்த அறச் செயல்கள் மறுமைக்கு ஆகும் என்னும் கருத்தில், "இம்மை செய்தது மறுமைக்கு ஆம் எனும் அறவிலை வணிகன் ஆய் அல்லன்" என வரும் சங்கப் பாடலாலும் காண்க. ஈசனின் திருவருள் ஒன்றே பிறவாமையை நல்கவல்லது எனச் சுட்டப் பெற்றது.

சேண் – சேய்மை, (சேடு – தொலைவு) உயரம். மூவிருதொன்னூல் – வேதத்தின் ஆறு அங்கங்கள். வீடர் – முத்தியருள்பவர், வீட்டின்பம் நல்குபவர். வினை நாசம் – சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய மூவகை வினை நீங்கப் பெறுதல் ஆயிற்று.

Koviloor Digital Library

96. எடுத்தவன் மாமலைக் கீழஇ ராவணன் வீழ்தர
விடுத்தருள் செய்திசை கேட்டவர் வீழி மிழலையார்
படுத்துவெங் காலனைப் பால்வழி பாடுசெய் பாலற்குக்
கொடுத்தனர் இன்பம் கொடுப்பர் தொழக்குறைவு
இல்லையே.

தெளிவுரை: இராவணன், அவன் எடுத்த கயிலை மலையின்கீழ் கிடந்து அலறுமாறு விடுத்து, அவன் பாடும் இசை கேட்டு அருள் புரிந்த வீழிமிழலையில் வீற்றிருக்கும் ஈசன், காலனைக் காலால் உதைத்து அழித்துத் தன்பால் சார்ந்து திகழ விளங்கும் பாலனாகிய மார்க்கண்டேயருக்குப் பேரின்பத்தைப் கொடுத்தனர். அப் பெருமானைத் தொழுது போற்றும் அடியவர்களுக்கு, நன்மைகளைத் தவிர குறைவு ஏதும் உண்டாகாது.

சிறப்புரை: பாலற்கு இன்பம் கொடுத்தனர் என்பது உபமன்யுவுக்குப் பாற்கடல் வழங்கிய அருளிச் செயலைச் சுட்டிற்று எனலும் பொருந்தும். காமிய வழிபாட்டு முறையினால் வணங்கும் தன்மையிலும் குறைவற்ற நலன்களைச் செய்பவன் ஈசன் எனக் காட்டும் சிறப்பினை, "தொழக் குறைவு இல்லையே" என ஓதப் பெற்றது. சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

மிடுக்கி லாதானை வீமனே விறல்
விசய னேவில்லுக்கு இவன்என்று
கொடுக்கி லாதானைப் பாரி யேயென்று
கூறினும் கொடுப்பார் இலை
பொடிக் கொள் மேனியெம் புண்ணியன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்குமேல் அமர உலகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுறவு இல்லையே.

–திருப்புகலூர் திருப்பதிகம், பாடல் 2

Koviloor Digital Library

என அருளிச் செய்து, ஈசனைப் போற்றித் துதிப் போர்க்குக் கிடைக்கப்பெறும் நலன்களை உணர்த்திய மாண்பும் காண்க.

97. திக்கமர் நான்முகன் மால்அண்ட மண்டலம் தேடிட
மிக்கமர் தீத்திரளாயவர் வீழி மிழலையார்
சொக்கம தாடியும் பாடியும் பாரிடம் சூழ்தரும்
நக்கர்தந் நாம்ந மச்சிவா யவ்வென்பார் நல்லரே.

தெளிவுரை: நான்கு திக்குகளிலும் முகங்கொண்டு மேவும் பிரமனும் திருமாலும் வானத்திலும் பூமிக் கடியிலும் தேடிய ஞான்று, மிகுந்து எழும் தீப் பிழம்பு ஆகியவர் வீழிமிழலை நாதர். அப்பெருமான் 'சொக்கு' எனப்படும் ஒருவகைத் திருக்கூத்து ஆடியும், பாடியும் பூதகணங்கள் சூழ விளங்கும் திகம்பரராய்க் காட்சி நல்கியவர். அவர் திருநாமமாவது நமச்சிவாய என்பர், சிவஞானியர்.

சிறப்புரை: ஈசனின் திருக்கோல மாண்பினை நக்கர் என உணர்த்தப் பெற்றது. இது, தாருக வனத்தில் உள்ள முனிபத்தினிகளிடம் பிச்சை ஏற்கச் சென்று புரிந்த திருவிளையாடலைச் சுட்டியது. இதனை, "வக்கரை அமர்வர் போலும் மாதரை மையல் செய்யும் நக்கரை யுருவர் போலும் நாகவீச் சரவனாரே" எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் உணர்த்தி அருளியவாறும் காண்க.

ஈசனை "நமச்சிவாய" என்னும் ஐந்தெழுத்தால் ஓதப்பெறும் நாம மகிமை இவண் உரைக்கப் பெற்றது. "வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று ஞானசம்பந்தர் அருளிச் செய்த வண்ணமும் காண்க. இத்தன்மையில்,

Koviloor Digital Library

திருநாவுக்கரசர், "நற்றுணையாவது நமச்சிவாயவே" எனவும்; "நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே" எனவும்; "பாவத்தை நண்ணிநின்று அறுப்பது நமச்சிவாயவே" எனவும்; நடுக்கத்தைக் கெடுப்பதும், நலமிகச் கொடுப்பதும், நன்னெறியாவதும் நமச்சிவாயவே எனவும்; ஓதியருளிச் செய்த மாண்பும் காண்க. "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்தவாறும் காண்க.

"நமச்சிவாய வாழ்க" எனவும், "போற்றியோ நமச்சிவாய.... சய சய போற்றி போற்றி" அமுத மொழியும் கொள்க.

இத்தகைய திருவைந்தெழுத்தினை நவில்பவர், நல்லர் எனச் சுட்டிய செம்மையால், நலந்தகும் சொல்லை நாளும் நவின்று ஏத்திப் பரஞானம் கண்டுணர்ந்த அருளாளர்களே அத்தகைய நல்லோர் எனக் கொள்க.

மண்டலம் – மண்தலம் (பூமி); கால அளவும் குறித்தது.

98. துற்றரையார்துவர் ஆடையர் துப்புர வொன்றிலா
வெற்றரை யார்அறி யாநெறி வீழி மிழலையார்
சொற்றெரி யாப்பொருள் சோதிக்கப் பால்நின்ற சோதிதான்
மற்றறி யாஅடி யார்கள்தம் சிந்தையுள் மன்னுமே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் அறியாத நெறியில் விளங்கும் பெருமான் வீழிமிழலையில் வீற்றிருக்கும் நாதர். சொல்லுக்கு அப்பால் விளங்கும் உண்மைப் பொருளை உணர்த்தும் அருள் ஒளியாக விளங்கி, அடியவர்தம் சிந்தையில் நன்கு காணும்

Koviloor Digital Library

வண்ணம் மிகுந்த சோதிச் சுடராய் விளங்குபவரும் அப்பெருமானே ஆவர்.

சொற்றெரியாப் பொருள் – சொல் தெரியாப் பொருள்.

99. வேதியர் கைதொழு வீழி மிழலைவி ரும்பிய
ஆதியை வாழ்பொழிற் காழியுள் ஞானசம்
பந்தன்ஆய்ந்து
ஓதிய ஒண்தமிழ் பத்திவை யுற்றுரை செய்பவர்
மாதியப் பங்கன் மலரடி சேரவும் வல்லரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மறையவர்கள் தொழுது போற்றும் வீழி மிழலையில் வீற்றிருக்கும் ஈசனை, பொழில் திகழும் காழியுள் விளங்கும் ஞானசம்பந்தன் ஆய்ந்து ஓதிய செம்மையான இத்தமிழ் மாலையை நன்கு போற்றி உரைப்பவர்கள், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் ஈசனின் திருவடி மலரில் சேர்ந்து மிளிரும் வல்லமை பெற்றவர் ஆவார்கள். இது, முத்திப் பேறு வாய்க்கும் என உணர்த்தப் பெற்றது.*

268. திருஇராமேச்சுரம்

தல விளக்கம்: *பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற 14 தலங்களுள் இது, 8ஆவது திருத்தலம். திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. இராவணனைக் கொன்ற பழி தீர, இராமபிரான் பூசித்தது. பூசிக்கச் சிவலிங்கம் கொண்டு வரும் பொருட்டு, அனுமான் காசிக்குச் சென்று வரத் தாமதம் ஆகிய நிலையில், சீதாப் பிராட்டியார், மணலால் குவித்துப் பிடித்து வைத்த இலிங்கத்தை இராமபிரான் வழிபட்டார். அனுமான், கொண்டு*

Koviloor Digital Library

வந்து சேர்த்த இலிங்கம், விசுவலிங்கம் எனத் தனியாக வேறிடத்தில் வைக்கப்பட்டது. இது பன்னிரண்டு ஜோதிலிங்கத் தலங்களுள் ஒன்று. ஏனையவை:

1. சோமநாதர்	குஜராத்
2. வைத்தியநாதம்	மகாராட்டிரம்
3. பீமசங்கரம்	
4. நாகேசம்	
5. திரயம்பகம்	
6. குஸ்மேசம்	
7. ஸ்ரீசைலம் (திருப்பருப்பதம்)	ஆந்திரம் மூவர் பாடல் பெற்றது.
8. ஓங்காரம்	மத்தியப் பிரதேசம்
9. உச்சையினி	
10. விஸ்வேசம் (காசி)	உத்திரப்பிரதேசம்
11. கேதாரம்	உத்திரப்பிரதேசம் ஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது.

சுவாமி : இராமநாதசுவாமி, இராமலிங்கேஸ்வரர்

அம்பிகை : மலைவளர் காதலி, பர்வத வர்த்தனி

தீர்த்தம் : அக்னி தீர்த்தம், இராம தீர்த்தம், இலட்சுமண தீர்த்தம் முதலான 44 தீர்த்தங்கள்

பதிகக் குறிப்பு: மங்கையர்க்கரசியாரும், குலச் சிறையாரும் திருஞானசம்பந்தப் பெருமானுடன்

Koviloor Digital Library

போந்து ஈசனைத் தரிசித்து மகிழ்ந்த ஞான்று அருளிச் செய்தது. இராமேச்சுரம்; கோயிலின் பெயர்.

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

100. அலைவளர் தண்மதி யோடய லேஅடக் கிஉமை
முலைவளர் பாக முயங்கவல்ல முதல்வன்முனி
இலைவளர் தாழைகள் விம்முகானல் இராமேச்சுரம்
தலைவளர கோலநன் மாலையன் தானிருந் தாட்சியே.

தெளிவுரை: கங்கையையும் சந்திரனையும் ஒருசேரச் சடை முடியில் இருக்குமாறு செய்து, உமாதேவியைத் தனது திருமேனியில் ஒரு பாகமாகப் பொருந்த வைத்த முதல்வன், மடல்களைப் பெருக்கி ஓங்கும் தாழைகள் விளங்கும் சோலை திகழும் இராமேச்சுரத்தில் வீற்றிருந்து, அருளாட்சி செய்தலை மேவுகின்றான்.

சிறப்புரை: ஈசன் வீற்றிருந்து மேவுதலைத் "தலைவளர் கோலம்" எனவும்; தண்ணருள் புரிதலை "மாலையன்" எனவும்; ஒப்பற்ற தன்மையினை "முதல்வன்" எனவும்; அடியவர்களுக்கு வரங்களை நல்கிக் காத்தலை "ஆட்சி" எனவும் அருளிச் செய்த வண்ணச் சிறப்பினைக் காண்க.

அலை – கங்கை

101. தேவியை வவ்விய தென்னிலங் கைத்தச மாமுகன்
பூவிய லும்முடி பொன்றுவித் தபழி போயற
ஏவிய லும்சிலை யண்ணல்செய் தஇரா மேச்சுரம்
மேவிய சிந்தையி னார்கள்தாம் மேல்வினை வீடுமே.

தெளிவுரை: சீதாப் பிராட்டியைக் கவர்ந்த இராவணனின் தலையை அறுத்துக் கொல்வித்த

Koviloor Digital Library

பழியானது நீங்குமாறு, அம்பினைச் செலுத்தும் வில்லையுடைய அண்ணலாகிய இராமபிரான், நிருமாணித்த இராமேச்சுரத்தை நெஞ்சினால் நினைப்பவர்கள், வினை நீங்கப் பெற்றவராவர்.

சிறப்புரை: இராமபிரானால் நிருமாணித்த திருத்தலம் இது என்பதனை, "அண்ணல் செய்த இராமேச்சுரம்" என்னும் தொடரால் சுட்டப் பெற்றது. நினைத்துத் தொழ நற்பேறு நல்கும் திருத்தலம் (திருவண்ணாமலை – நினைக்க முத்தி) போன்று, இத் திருத்தலமானது சிந்தித்து ஏத்த வினை நீங்கும் என்னும் பேறு நல்குதலை "மேவிய சிந்தையினார்கள் தாம் மேல் வினை வீடுமே" என்பது உணர்த்துவதாயிற்று.

மன்னுயிரின்பால் பற்றியிருந்து, நேரும் துன்பத்திற்கும் பிறப்புக்கும் காரணமாகிய சஞ்சித வினையும் இப்பிறவியில் நுகர்வதற்குப் பற்றி மேவும் பிராரத்த வினையும், இப்பிறவியின்கண் செய்யும் வினையாகிய ஆகாமியமும் ஒரு சேர விலகும் என்பதும், அதன் வழி, பிறவாமை என்னும் பெருஞ் செல்வம் வாய்க்கப் பெற்று, முத்திப் பேறு நல்கும் எனவும் இவண் சுட்டப் பெற்றது.

தேவி – சீதாப் பிராட்டி; அண்ணல் – இராமபிரான்.
ஏ – அம்பு. வீடும் – நீங்கும்.

102. மானன நோக்கியை தேவிதன் னையொரு மாயையால்
கானதில் வவ்விய கார்அரக் கன்உயிர் செற்றவன்
ஈனமி லாப்புகழ் அண்ணல் செய்தஇ ராமேச்சுரம்
ஞானமும் நன்பொரு ளாகிநின் றதொரு நன்மையே.

தெளிவுரை: மான் போன்ற விழியுடைய சீதாப் பிராட்டியை மாயம் செய்து கவர்ந்த அரக்கனாகிய

Koviloor Digital Library

இராவணனை அழித்துப் பெரும் புகழ் கொண்ட இராமபிரான் நிருவிய இராமேச்சுரமானது, சிவஞான மும் அதன் பொருளாகிய முத்தி இன்பமும் நல்கி, மன்னுயிர்களுக்கு நன்மை தரும் ஒண் பொருளாகத் திகழ்கின்றது.

சிறப்புரை: மாயையால் சீதாப்பிராட்டியைக் கவர்ந்த அரக்கன், மாயையின் வடிவம் எனவும், அதனை அழித்த இராமபிரான், ஞானத்தால் மேவியவர் எனவும் சுட்டிய தன்மையில், இராமேச்சுரமானது, ஞானத்தின் இயலாய்த் திகழ்தலும், அதன் நற் பொருளாகிய முத்தி இன்பத்தை அளித்தலும் இத்திருப்பாட்டு நனி உணர்த்துதலாயிற்று.

முதல் திருப்பாட்டில் ஆட்சி கொண்டு திகழும் தன்மையும், இரண்டாவது திருப்பாட்டில் சிந்திப் பவர்தம் வினை நீக்கமும் இத்திருப்பாட்டில் ஞானமும் முத்தியின்பமும் நல்கும் அரனுடைய ஆளுமையும் நன்கு ஓதப்பெற்றது.

தேவி – சீதாப்பிராட்டி.

103. உரையுண ராதவன் காமமென் னும்முறு வேட்கையால்
வரைபொரு தோளிறச் செற்றவில்லி மகிழ்ந்து ஏத்திய
விரைமரு வுங்கடல் ஓதமல் கும்இரா மேச்சுரத்து
அரைஅர வாடநின்று ஆடல்பே ணும்அம்மா னல்லனே.

தெளிவுரை: பிறருடைய மனைவியைக் கவர்தல் தவறு என்னும் அறவுரையை உணராது, காமத்தால் நலியப் பெற்ற இராவணனுடைய மலை போன்ற தோள் அறுந்து வீழுமாறு போர் செய்து அழித்து விளங்கிய இராமபிரான், மகிழ்ந்து ஏத்திய இராமேச்சுரத்தில்

Koviloor Digital Library

வீற்றிருக்கும் ஈசன், அரையில் அரவத்தைக் கட்டி நின்று திருநடம் புரியும் அழகிய தலைவன் அல்லவா!

சிறப்புரை: ஈசனை "அம்மான்" என்று போற்றப்படும் செம்மையினை ஓர்க. இத்தன்மையில் திருநாவுக்கரசர், "ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில வீரட்டானத்து உறை அம்மானே!" என அருளிச் செய்துள்ளமையும் காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகள், "ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே!" எனத் திருத்தொண்டத் தொகையின் வாயிலாகவும்; "ஆசைப் பட்டேன் கண்டாய் அம்மானே" எனத் திருவாதவூரர் திருவாசகம் ஆசைப்பத்து திருப்பாட்டுக்களின் வாயிலாகவும் அருளிச் செய்துள்ளமையும் காண்க.

அம்மான் – அன்பின் மிக்கோன், பெரியோன்.

104. ஊறுடை வெண்டலை கையில்ஏந்திப் பல வூர்தொறும்
வீறுடை மங்கையர் ஐயம்பெய்ய விறல் ஆர்ந்ததோர்
ஏறுடை வெல்கொடி எந்தைமேய இரா மேச்சுரம்
பேறுடை யான்பெயர் ஏத்துமாந்தர் பிணி பேருமே.

தெளிவுரை: பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றினைக் கொய்ததால் அமைந்த கபாலத்தைக் கையில் ஏந்திய ஈசன், ஊர்கள்தொறும் சென்று வீறுடைய மாதர்கள் இட்ட பிச்சையை ஏற்றும், வீரம் மிக்க இடபக் கொடியுடைய எந்தையில் இராமேச்சுரத்தில் வீற்றிருப்பவன். அப்பெருமான் எல்லாப் பேறுகளும் கொண்டு திகழ்பவன். ஆதலினால் பேறு அளிக்கும் அவன் திருப்பெயரை ஓதி ஏத்துகின்ற மாந்தர், பிணி அற்றவராய்த் திகழ்வர்.

சிறப்புரை: பேறுகள் பதினாறு என்றாலும், எல்லாவற்றையும் உடைமையாகக் கொண்டு திகழும்

Koviloor Digital Library

மாண்பினன் ஈசனே ஆதலை, "உடைய நாதனே போற்றி" எனவும், "உடையானே நின்றனை யுள்கி உள்ளம் உருகும் பெருங்காதல் உடையார் உடையாய்" எனவும், மாணிக்கவாசகர் அருளிச் செய்த பாங்கில் சுட்டப் பெற்றுள்ளதை ஓர்க. அப்பேற்றினுள் சிறந்த தாகிய வீடு பேறு என நிற்கும் இறையே "பேறுடையான்" என உணர்த்தப் பெற்றது.

பிணி பேரும் – பிணித்துத் துன்புறுத்தும் இன்னல் யாவும் நீங்கும்.

105. அணையலை சூழ்கடல் அன்றடைத் துவழி செய்தவன்
பணையிலங் கும்முடி பத்திறுத்த பழி போக்கிய
இணையிலி யென்றும் இருந்தகோ யில்இரா மேச்சுரம்
துணையிலி தூமலர்ப் பாதமேத்தத் துயர் நீங்குமே.

தெளிவுரை: அலைகள் மேவும் கடலின் மீது அணையைக் கட்டிக் கடப்பதற்கு வழி செய்த இராமபிரான், பெருமையின்பால் விளங்கும் முடிகள் பத்து கொண்ட இராவணனை அழித்தவன், அதனால் நேர்ந்த பழியைப் போக்கிய ஈசன், இணையற்றவனாய் வீற்றிருக்கும் கோயில் இராமேச்சுரம். அப் பெருமானுக்கு யாருடைய துணையும் தேவையில்லை. ஒப்பற்றவனாய்த் திகழும் இப்பெருமானுடைய திருவடி மலரைப் போற்றி ஏத்துபவர்களின் துயர் யாவும் நீங்கும்.

இணையிலி – ஈசன். துணையிலி – ஈசன்.

106. சனிபுதன் ஞாயிறு வெள்ளிதிங் கட்பல தீயன
முனிவது செய்துகந் தானைவென் றவ்வினை மூடிட
இனியருள் நல்கிடு என்று அண்ணல்செய்தஇரா
மேச்சுரம்
பனிமதி சூடிநின்று ஆடவல்ல பரமேட்டியே.

Koviloor Digital Library

தெளிவுரை: நவக் கிரகங்கள் என்று சொல்லப்படுகின்ற சனி, புதன், சூரியன், சுக்கிரன், சந்திரன் மற்றும் உள்ள குரு, அங்காரகன், ராகு, கேது ஆகியவற்றால் தனக்குக் கெடுதல் வரக்கூடாது எனச் சிறையில் வைத்த இராவணனை அழித்து வெற்றி கொண்ட பழியானது தீர வேண்டும் எனவும், அருள் பெருகுதல் வேண்டும் எனவும் இராமபிரானால் அமைக்கப் பெற்றது இராமேச்சுரம். ஆங்கு, குளிர்ச்சி மிக்க சந்திரனைத் தரித்து வீற்றிருப்பவர், முழுமுதற் பரம்பொருளாகிய சிவபெருமானே.

சிறப்புரை: "ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி பாம்பு இரண்டும் உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்க்கு மிகவே" எனக் கோளறு பதிகத்தின் *(2 – 85 – 1)* வாயிலாகக் குறிப்பிடப் பெற்றவை அடியவர்க்கு நலம் புரியும் தன்மையில் மேவும் கிரகங்களின் பெற்றியாம்.

இத் திருப்பாட்டில், தனது வர பலத்தின் காரண மாகக் கிரகங்களைச் சிறைப்படுத்திய இராவணனின் செயல் உரைக்கப் பெற்றது.

கிரகங்களின் வரிசையில் சிறைப்படுத்தப்பட்ட சந்திரனும், ஈற்றடியில் சுட்டப்பெற்ற, ஈசன் திருமுடியில் சூடி விளங்கும் சந்திரனும் வெவ்வேறு நிலையின்கண் உள்ள பாங்கு எனக் கொண்டு, நோக்குக.

அண்ணல் – இராமபிரான். பரமேட்டி – முழுமுதற்பரம்; சிவபெருமான். பாடல் வ. எண் 82 சிறப்புரை காண்க.

107. பெருவரை யன்றெடுத்து ஏந்தினான் றன்பெயர்
சாய்கெட
அருவரை யாலடர்த்து அன்றுநல்கி அயன் மாலெனும்

Koviloor Digital Library

இருவரு நாடிநின்று ஏத்துகோயில் இரா மேச்சுரத்து
ஒருவனு மேபல வாகிநின்ற தொரு வண்ணமே.

தெளிவுரை: கயிலை மலையை எடுத்த இராவண னுடைய புகழ் சாயுமாறு அவனை அம் மலையால் அடர்த்தும், நான்முகனும் திருமாலும் நாடி வந்து ஏத்துகின்றபோது விளங்கியும், திகழும் இராமேச் சுரத்தில் மேவும் ஈசனின் செம்மை ஒருவனே பல வண்ணமாகிக் காட்சி நல்குகின்ற பாங்கினை உடைய தாகும்.

சிறப்புரை: ஈசன் ஒருவனே என்பதும், ஆயினும் அப்பெருமான் பலவாகித் திருவருள் புரிதலை "ஒருவனே பலவாகி நின்றதொரு வண்ணமே" என ஓதப் பெற்றது. இந் நெறியில் ஈசன், அட்ட மூர்த்தங் களாய் (நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர்) ஏழுலகங்களும் பத்துத் திசைகளும் ஆகி நிற்றலை, மாணிக்கவாசகர்,

நிலநீர் நெருப்புஉயிர் நீள் விசும்பு நிலாப் பகலோன்
புலனாய மைந்தனோடு எண்வகையாய்ப் புணர்ந்து நின்றான்
உலகு ஏழு எனத்திசை பத்துஎனத்தான் ஒருவனுமே
பலவாகி நின்றாவா தோணோக்கம் ஆடாமோ.

என அருளிச் செய்துள்ள வண்ணமும் காண்க.

ஈசன், இராவணனை அடர்த்தும் அருளியும் விளங்கிய பாங்கும், அரிபிரமர் ஆகியோரால் ஏத்தப் பெற்ற சீலமும் இத்திருப்பாட்டில் சுட்டப் பெற்றது. இராமபிரான் பூசித்த திருத்தலத்தின் சிறப்பானது, "பிரமன் திருமால் ஆகிய இருவரும் நாடி நின்று ஏத்து கோயில்" எனச் சுட்டப்பெற்றது.

Koviloor Digital Library

108. சாக்கியர் வன்சமண் கையர்மெய் யிற்றடு மாற்றத்தார்
வாக்கிய லும்முரை பற்று விட்டுமதி யொண்மையால்
ஏக்கிய லும்சிலை யண்ணல்செய் தஇரா மேச்சுரம்
ஆக்கிய செல்வனை யேத்திவாழ் மின்னரு ளாகவே.

தெளிவுரை: சாக்கியர்களும் சமணர்களும் உரைக்கும் மெய் இல்லாததும், தடுமாற்றம் கொண்டதுமாகிய உரைகளைப் பற்றி நிற்காது, ஒளி மிகுந்த அம்பினைச் செலுத்தும் வில்லையுடைய அண்ணலாகிய இராம பிரான் வழிபாடு செய்த இராமேச்சுரத்தின்கண் மேவி விளங்குகின்ற செல்வனை, ஏத்தி வாழ்வீராக. அப்பெருமானை ஏத்தி வழிபட அவன் அருளால் அனைத்தும் கைகூடும்; நன்மைகள் பெருகும் என்பதாம்.

ஏ – அம்பு; ஆக்கிய செல்வன் – ஈசன்.

109. பகலவன் மீதுஇயங் காமைக் காத்தபதி யோன்றனை
இகலழி வித்தவன் ஏத்துகோ யில்இரா மேச்சுரம்
புகலியுள் ஞானசம் பந்தன்சொன் னதமிழ் புந்தியால்
அகலிடம் எங்குநின்று ஏத்தவல் லார்க்கில்லை அல்லலே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சூரியனுடைய வெம்மையானது தனது நகரின் மீது இயங்கக் கூடாது என்னும் ஆணையை, வரபலத்தின் வலிமையால் செலுத்திய இராவணனைப் போரில் அழித்த இராமபிரான் ஏத்துகின்ற கோயிலாகிய இராமேச்சுரத்தினைப் போற்றிப் புகலியுள் விளங்கும் ஞானசம்பந்தன் சொன்ன இத்திருப்பதிகத்தை, நன்கு மனத்திருத்தி எல்லா இடங்களிலும் ஓத வல்லவர்களுக்குத் துயரம் என்பது இல்லை.

இகல் – போர்; தமிழ் – திருப்பதிகம்; அல்லல் இல்லை – துயரத்திற்குக் காரணமாகிய வினை யாவும் நீங்கும் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

269. திருப்புனவாயில்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுப் பாடல் பெற்ற 14 தலங்களுள் இது 7ஆவது திருத்தலம். திருஞான சம்பந்தர், சுந்தரர் ஆகியோர் பாடல் பெற்றது. இதன் வேறு பெயர்களாவன: விருத்தபதி, விருத்தகாசி, இந்திரபுரம், பிரமபுரம், வச்சிரவனம், கைவல்ய ஞானபுரம், தட்சிண சிதம்பரம். பாண்டிய நாட்டுத் தலங்கள் பதினான்கும் இங்குள்ளதாக ஐதிகம். திருமால், பிரமன், இந்திரன், சூரியன், சந்திரன், எமன், ஐராவதம், வசிட்டர், அகத்தியர், வேதங்கள் வழிபட்ட தலம். இத்தலத்தில் உள்ள நடராசர் சபை சிவஞான சபை என வழங்கப்படுகிறது. ஊரின் பக்கத்தில் கடல் உள்ளது. இக்கோயிலுள் 14 சிவலிங்கங்கள் உள்ளன என்பது சிறப்பு.

சுவாமி : விருத்தபுரீஸ்வரர், பழம்பதி நாதர், மகாலிங்கேஸ்வரர்

அம்பிகை : பெரியநாயகி, பரங்கருணைநாயகி

தல மரம் : புன்னை, குருந்தை, மகிழமரம், சதுரக்கன்னி

தீர்த்தம் : இந்திர தீர்த்தம், பிரம தீர்த்தம், சக்கர தீர்த்தம், சூரிய தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், சந்திர தீர்த்தம், பாம்பாறு, வருண தீர்த்தம், கல்யாண தீர்த்தம், சிவகங்கை முதலிய பத்து தீர்த்தங்கள்.

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

110. மின்னியல் செஞ்சடை வெண்பிறை யன்விரி நூலினன்
பன்னிய நான்மறை பாடியா டிப்பல வூர்கள் போய்

Koviloor Digital Library

அன்னமன் னந்நடை யாளொடும் அமரும் இடம்
புன்னை நன் மாமலர் பொன்னுதிர்க்கும் புன வாயிலே.

தெளிவுரை: ஈசன், மின்னலைப் போன்று ஒளிரும் சிவந்த சடை முடியும், வெண்மையான பிறைச் சந்திர னும், விரிந்த மார்பினில் முப்புரி நூலும் கொண்டு விளங்குபவராய் இடைவிடாது திரும்பத் திரும்ப ஓதப் பெறும் வேதங்களை நன்கு இசைத்துத் திருத்தலங்கள் தொறும் சென்றடைந்து உமாதேவியோடு வீற்றிருக்கும் இடமாவது, புன்னை என்னும் மலர் பொன் போன்ற மகரந்தங்களை உதிர்க்கும் புனவாயில் ஆகும்.

சிறப்புரை: ஈசனைப் போற்றி வழிபடும் மலர்களாக விளங்கும் அட்ட புட்பங்களில் புன்னை மலர் ஒன்றாதலும், அதுவே இத் திருத்தலத்தின் மரமாதலும் காண்க. "இதனைப் புன்னை நன் மாமலர்" எனச் சுட்டப் பெற்றது.

111. விண்டவர் தம்புர மூன்றெரித் துவிடை யேறிப்போய்
வண்டம குங்குழல் மங்கையொ டும்மகிழ்ந் தானிடம்
கண்டலு ஞாழலு நின்றுபெ ருங்கடற் கானல்வாய்ப்
புண்டரீ கம்மலர்ப் பொய்கைசூழ்ந் தபுன வாயிலே.

தெளிவுரை: பகைத்து நின்ற முப்புர அசுரர்களும், அவர்களுடைய கோட்டைகளும் எரிந்து சாம்பலாகு மாறு செய்து, இடபவாகனத்தில் ஏறி உமாதேவியோடு மகிழ்ந்து வீற்றிருக்கும் ஈசனின் இடமாவது, தாழையும் புலி நகக் கொன்றையும் கடற்கரைச் சோலையில் திகழ, தாமரை மலர் விளங்கும் பொய்கையும் சூழ்ந்த புனவாயில் ஆகும்.

கண்டல் – தாழை; ஞாழல் – புலிநகக் கொன்றை.

Koviloor Digital Library

112. விடையுடை வெல்கொடி யேந்தினா னும்விறற் பாரிடம்
புடைபட ஆடிய வேடத்தா னும்புன வாயிலில்
தொடைநவில் கொன்றையந் தாரினா னும்சுடர்
வெண்மழுப்
படைவல னேந்திய பால்நெய்யா டும்பர மனன்றே.

தெளிவுரை: ஈசன், இடபம் பொறித்த வெற்றிக் கொடியை ஏந்தியவர்; வீரம் மிக்க பூதகணங்கள் சூழ நடனக் கோலம் தாங்கித் திருநடம் புரிபவர்; புனவாயில் என்னும் தலத்தில் கொன்றை மாலை அணிந்து, சுடர்மிகும் மழுப்படையைத் தாங்கி இருப்பவர். அப்பெருமான், நெய்யும் பாலும் அபிடேகப் பொருளாக ஏற்று, அடியவர்களுக்கு அருள் புரியும் பரம் பொருள் ஆவர்.

சிறப்புரை: ஈசனின் இடபக் கொடியானது வெற்றி யினையும்; திருநடம்புரிதல் ஆனந்தத்தையும்; பிரணவ புட்பம் எனச் சொல்லப்படுகின்ற கொன்றை மலரானது ஞானத்தையும்; வெண்மழுப் படையானது வினை நாசத்தையும் அருளிச் செய்யவல்லது எனக் கொள்க.

ஈசனை, பாலும் நெய்யும் கொண்டு பூசித்து, மன்னுயிர்கள் பிறவிப் பயனை அடைய வேண்டும் எனச் சுட்டப்பெறும் பாங்கில், "பால் நெய்யாடும் பரமன்" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் "நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தம் பூசனை செய்யலுற்றார்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த மாண்பினையும் நோக்குக.

113. சங்கவெண் தோடணி காதினா னும்சடை தாழவே
அங்கையி லங்குஅழல் ஏந்தினா னும்அழ காகவே

Koviloor Digital Library

பொங்கர வம்மணி மார்பினா னும்புன வாயிலில்
பைங்கண்வெள் வேற்றண்ண லாகிநின்ற பர மேட்டியே.

தெளிவுரை: காதில் சங்குகளால் ஆன தோடும் நீண்ட சடையும், அழகிய கையில் நெருப்பும் சீறிப் படம் கொண்டு ஆடும் பாம்பும், அணி மிகும் திருமார்பும் உடைய ஈசன் புனவாயிலின்கண் வெள்ளை இடபத்தின் மீது ஏறி, மேலான பரம்பொருள் ஆகித் திகழ்கின்ற அண்ணல் ஆவார்.

சிறப்புரை: ஞானப்பால் அருந்திய ஞானசம்பந்தப் பெருமான் முதல் திருப்பாட்டில் அருளிச் செய்தவாறு "தோடுடைய செவியன்" என்பதும் "விடையேறி" என்பதும் இத்திருப்பாட்டில், "சங்கவெண்தோடு அணி காதினானும்" எனவும் "வெள்ளேற்றண்ணல்" எனவும் சுட்டப் பெற்றுள்ள வண்ணம் காண்க.

மணி மார்பினான் – அணி மார்பினான். மணிமார்பினான்.

114. கலிபடு தண்கடல் நஞ்சமுண் டகறைக் கண்டனும்
புலியதள் பாம்பரைச் சுற்றினா னும்புன வாயிலில்
ஒலிதரு தண்புன லோடுஎருக் கும்மத மத்தமும்
மெலிதரு வெண்பிறை சூடிநின் றவிடை யூர்தியே.

தெளிவுரை: ஆரவாரம் கொண்டு கடையப் பெற்ற பாற்கடலில் இருந்து தோன்றிய நஞ்சினை உண்டு, அதனால் கரிய கண்டத்தை உடைய ஈசன், புலித் தோலை உடையாகக் கொண்டும், பாம்பினை அரையில் சுற்றிக் கட்டியும் விளங்குபவர். அப்பெருமான், குளிர்ந்த கங்கையோடு எருக்கு, ஊமத்தம் ஆகிய மலர்களும், மெல்லிய கீற்றையுடைய வெண்மையான பிறைச் சந்திரனும் சூடி இடப வாகனத்துடன் புனவாயிலில் வீற்றிருப்பவர்.

Koviloor Digital Library

சிறப்புரை: முதல் திருப்பாட்டில் புன்னை மலரின் சிறப்பினை எடுத்தோதிய மாண்பினில் அட்ட புஷ்பங்களில் ஒன்றாகிய வெள்ளெருக்க மலரும், ஊமத்தம் பூவும் ஈசன் தரித்து மேவும் சிறப்பினை இத்திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றது. ஈசனுக்கு உரிய அட்ட மலர்களாவன: 1. புன்னை, 2. வெள்ளெருக்கு, 3. சண்பகம், 4. நந்தியாவர்த்தம், 5. நீலோற்பலம், 6. பாதிரி, 7. அலரி, 8. செந்தாமரை.

115. வாருறு மென்முலை மங்கைபா டநட மாடிப்போய்க்
காருறு கொன்றைவெண் திங்களானும் கனல்
வாயதோர்
போருறு வெண்மழு ஏந்தினா னும்புன வாயிலில்
சீருறு செல்வமல் கவ்விருந்த சிவலோகனே.

தெளிவுரை: உமாதேவியார் இசை பாட, அவ் இசைக்கு ஏற்ப நடம் புரிந்து, கார்காலத்தில் மலரும் கொன்றை மலரும், வெண்மையான சந்திரனும் சடைமுடியில் தரித்துக் கனல் போன்ற பேரொளி காட்டும் போர்த் தன்மை கொண்ட மழுப்படையுடைய ஈசன், புனவாயிலில் வீற்றிருக்கும் பெருமான் ஆவார். அப்பெருமான் சிவலோக நாதனாய்ச் சீரான செல்வத்தை நல்கும் மாண்பில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: சிவலோக நாதனாகிய ஈசனின் திருவடிப் பேறு ஒன்றே சீரினைத் தரவல்ல செல்வம் என்பதும், ஏனைய பொருள் மற்றும் பதவிச் செல்வங்கள், சீர்மை பயவாத செல்வம் என்பதும் நன்கு சுட்டப் பெற்றது. இச்சிறப்பினைச் "சீர் உறு செல்வம்" எனக் கொள்க.

116. பெருங்கடல் நஞ்சமு துண்டுகந்து பெருங் காட்டிடைத்
திருந்திள மென்முலைத் தேவிபா டநட மாடிப்போய்ப்

Koviloor Digital Library

பொருந்தலர் தம்புர மூன்றும் எய்து புனவாயிலில்
இருந்தவன் தன்கழல் ஏத்துவார்கட்கு இடர் இல்லையே.

தெளிவுரை: பெரிய அளவ்ாகிய பொருட் செல்வத்தைத் தன்னகத்தே கொண்ட கடலைக் கடைந்த போது தோன்றிய நஞ்சினை உண்டு மகிழ்ந்து, தேவர்களையும் உலகங்களையும் காத்தருளிய ஈசன், மயானத்தின்கண் இருந்து, உமாதேவியார் பாடும் இசைக்கு ஏற்ப நடம் புரிந்தவர். அப்பெருமான், பகைமை கொண்ட முப்புர அசுரர்களை எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர்; புனவாயிலில் வீற்றிருப்பவர். அவர்தம் திருக்கழலை ஏத்தித் தொழுபவர்களுக்கு எத்தகைய இடையூறும் இல்லை.

சிறப்புரை: ஏத்தாத முப்புரத்து அவுணர்கள் எரிந்து அழிவுற்றதும், ஏத்திய தேவர்களை நஞ்சினையுண்டு காத்தருளிய பெற்றியும் உணர்த்தி, ஈசனை ஏத்து பவர்கள் காக்கப்படுவார்கள் என்று சுட்டிய தன்மையில், ஈசனின் இன்னருள் போற்றப்பட்டது.

117. மனமிகு வேலனவ் வாளரக் கன்வலி ஒல்கிட
வனமிகு மால்வரை யால்அடர்த்தான் இட மன்னிய
இனமிகு தொல்புகழ் பாடல்ஆ டல்எழில் மல்கிய
புனமிகு கொன்றையந் தென்றல்ஆர்ந்த புனவாயிலே.

தெளிவுரை: செருக்கு மிகுந்த மனத்தை உடையவனும் வேல் முதலான படைக்கலன்களைக் கொண்டவனும் ஆகிய அரக்கனாகிய இராவணனுடைய வலிமை அழியுமாறு, சோலைகள் மிகுந்து ஓங்கும் பெருமை உடைய கயிலை மலையால் அடர்த்த இறைவன், சிவபெருமான். அப்பெருமான் வீற்றிருக்கும் இடமாவது, சிறந்த கருத்துக்களால் அமைந்த புகழ்ப் பாடல்களும், அவற்றுக்குரிய ஆடல்களும் எழில்

Koviloor Digital Library

கொண்டு மேவி, கொன்றை மலரின் நறுமணம் கமழும் தெய்வீகக் காற்று வீசுகின்ற புனவாயில் ஆகும்.

சிறப்புரை: ஈசனைப் போற்றிப் பாடும் அடியவர்கள் மல்கி விளங்கிய பெருமையும், அதனால் ஈசனின் அருள் தழைத்து விளங்கியமையும் குறிப்பால் சுட்டப் பெற்றது. கொன்றை மணம் கமழும் காற்று ஈசனின் இன்னருள் பெருக்கத்தை நனி உணர்த்துவதாயிற்று.

118. திருவளர் தாமரை மேவினா னும்திகழ் பாற்கடல்
தருநிற வண்ணனும் காண்பரிய கடவுள் இடம்
நரல்சுரி சங்கொடும் இப்பியுந் திந்நல மல்கிய
பொருகடல் வெண்திரை வந்தெறியும்புன வாயிலே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் காண்பதற்கு அரிய வராகிய கடவுள் சிவபெருமான். அவர் வீற்றிருக்கும் இடமாவது, ஒலிக்கப் படுகின்ற சங்குகளும், சிப்பிகளும் அலைகளின் வாயிலாக உந்திக் கடற்கரையில் சேர்த்துச் செல்வத்தைக் கொழிக்கும் புனவாயில் ஆகும்.

நரல் – ஒலித்தல்.

119. போதியெ னப்பெய ராயினா ரும்பொறி யில்சமண்
சாதியு ரைப்பன கொண்டயர்ந் துதளர் வெய்தன்மின்
போதவிழ் தண்பொழில் மல்கும்அந் தண்புன வாயிலில்
வேதனை நாள்தொறும் ஏத்துவார் மேல்வினை வீடுமே.

தெளிவுரை: பௌத்தர் எனப்படுபவர்களும், சமணர் களும் சாதனையாகச் சாதித்துக் கூறும் சொற்களைக் கொண்டு அயர்ந்து தளர்ச்சி அடைய வேண்டாம். மலர்கள் விரிந்து மேவும் பொழில் மல்கும் குளிர்ச்சி மிக்க புனவாயிலில் வீற்றிருக்கும், வேதமாய் மேவும் ஈசனை, நாள்தோறும் சென்று வழிபடுவீராக.

Koviloor Digital Library

அவ்வாறு செய்பவர்களுக்கு, வினை யாவும் விலகிச் செல்ல துன்பம் இல்லாத வாழ்க்கை அமையும்.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, நாள்தோறும் அடியவர்கள் திருக்கோவிலுக்குச் சென்று வழிபடும் சிறப்பினை உணர்த்துவதாயிற்று. வினை வீழ்ச்சியானது துன்ப நீக்கமும், இன்பப் பெருக்கமும் ஆதலை உணர்த்தியதாகக் கொள்க. வினை நீக்கம் என்பது சமநிலைப் பாட்டிற்கும், ஈசனை ஏத்துதல் என்பது பேரின்பத்திற்கும் வித்தாயிற்று.

வேதன் – வேதம் போன்று மெய்ப்பொருளாயும் உறுதிப் பொருளாயும் உயர் பொருளாயும் நலம் தருபவன்.

120. பொற்றொடி யாளுமை பங்கன் மேவும் புன வாயிலைக்
கற்றவர் தாம்தொழு தேத்த நின் றகடற் காழியான்
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன தமிழ் நன்மையால்
அற்றமில் பாடல்பத்து ஏத்தவல் லார்அருள் சேர்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் ஈசன் வீற்றிருக்கும் புனவாயிலை, வேதம் கற்றவர்கள் தொழுது போற்றுகின்ற காழி நகரில் விளங்கும் நற்றமிழ் ஞானசம்பந்தன் ஏத்திய இத்தமிழ் மாலையை ஓத வல்லவர்கள், ஈசனின் அருளில் திளைத்தவர் ஆவார்கள்.

சிறப்புரை: இத் திருப்பதிகம் குற்றம் இல்லாத தன்மை உடையது என்னும் செழுமை தோன்ற, "அற்றம் இல் பாடல் பத்து" எனச் சுட்டப் பெற்றது. அத்தகைய சிறப்பு ஒன்றே "நன்மையால்" திகழ்வது எனவும், அதனை, "நற்றமிழ் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ்" எனவும் உணர்த்தியமை காண்க. இவண், தமிழ்

Koviloor Digital Library

என்பது, ஈசன் அருளை முன்னின்று வழங்கும் இனிமை எனக் கொள்க.

அற்றம் இல் – குற்றம் இல்லாத.

270. திருக்கோட்டாறு

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல் இது 53ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கொட்டாரம் என வழங்கப்படுகிறது. வெள்ளை யானை பூசித்த தலம். மற்றும் இரண்டாம் திருமுறை பதிக எண் 52 காண்க.

சுவாமி : ஐராவதீசுவரர்

அம்பிகை : வண்டமர் பூங்குழலி

தீர்த்தம் : சூரிய தீர்த்தம், வாஞ்சியாறு

தல மரம் : பாரிசாதம்

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

121. வேதியன் விண்ணவர் ஏத்தநின்றான் விளங் கும்மறை
ஓதிய வொண்பொரு ளாகிநின் றானொளி யார்கிளி
கோதிய தண்பொழில் சூழ்ந்தழ கார்திருக்
கோட்டாற்றுள்
ஆதியை யேநினைந் தேத்தவல் லார்க்கல்லல்
இல்லையே.

தெளிவுரை: வேதத்தில் வல்லவராய்த் தேவர்களால் ஏத்தப் பெறுபவராய் விளங்குகின்ற சிவபெருமான், வேதங்களால் போற்றப்படும் உயர்ந்த பொருள் ஆகியவர். அப்பெருமான் பொழில் நிறைந்த அழகிய திருக்கோட்டாற்றில் வீற்றிருப்பவர். அப் பரமனைத்

Koviloor Digital Library

தியானம் செய்து வணங்குபவர்களுக்கு இம்மையில் அல்லல் ஏதும் இல்லை.

இம்மையில் அல்லல் இல்லை என்பது மறுமைக்கும் உரித்தாம்.

122. ஏலமலர்க்குழல் மங்கைநல் லாள்இம வான்மகள்
பால்அமரும் திரு மேனிஎங்கள் பரமேட்டியும்
கோல மலர்ப்பொழில் சூழ்ந்து எழிலார்திருக்
கோட்டாற்றுள்
ஆல நீழற்கீழ் இருந்து அறம்சொன்ன அழகனே.

தெளிவுரை: உமாதேவியார், நறுமணம் கமழும் கூந்தலையுடைய மங்கை நல்லாள் எனப்படுபவர்; இமாசல மன்னனின் மகளாகத் தோன்றியவர். அப்பெருமாட்டியை உடனாகிய எங்கள் பரம்பொருள் பொழில் சூழ்ந்து விளங்கும் திருக்கோட்டாற்றுள் வீற்றிருப்பவர். அப்பெருமான், தட்சணாமூர்த்தித் திருக்கோலம் தாங்கிச் சனகாதி முனிவர்களுக்கு அறப் பொருள் சொன்ன அழகராவர்.

சிறப்புரை: உமாதேவியை "மங்கை நல்லாள்" என்னும் நாமத்தால் குறிக்கப் பெற்றுள்ள சிறப்பினை நோக்குக. இந்நெறியில் "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" எனப் (3-24-1) பாடல் வ. எண் 252இல் ஓதியருளிச் செய்த பாங்கும் காண்க. சுந்தர மூர்த்தி சுவாமிகள், "நண்ணினார்க் கென்றும் நல்லவன் றன்னை நாளும் நாம் உகக்கின்ற பிரானை" என திருக்கச்சி ஏகம்பப் பெருமானை, "நல்லவன்" என்று உணர்த்தியமையும் ஓர்க. இவ்வாற்றான் நலங்களைப் புரியும் இறைவியும் இறைவனும் "நல்" என்னும் சொல் கொண்டு மொழிதலும் அவ்வாறே நற்றமிழ் ஞான சம்பந்தன் என்னும் தொடரில் உள்ள "நல்" என்னும்

Koviloor Digital Library

அடைமொழியும் அத்தன்மை உடையதெனவும் கொள்க.

123. இலைமல்கு சூலமொன்று ஏந்தினானும் இமை
யோர்தொழ
மலைமல்கு மங்கையோர் பங்கனாய மணி கண்டனும்
குலைமல்கு தண்பொழில் சூழ்ந்தழகார் திருக்
கோட்டாற்றுள்
அலைமல்கு வார்சடை யேற்றுகந்த அழகன் அன்றே.

தெளிவுரை: கங்கையைச் சடை முடியில் ஏற்றுகந்த அழகராகிய ஈசன், சூலப் படையினைக் கரத்தில் ஏந்தியவராய்த் தேவர்கள் தொழுது போற்றவும், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டும் நீல கண்டத்தினராகியும், சோலைகளில் காய்களும் கனிகளும் குலைகளுடன் திகழும் பொழில் சூழ்ந்த அழகிய திருக்கோட்டாற்றுள் வீற்றிருப்பவர் அல்லவா!

124. ஊனம ரும்உட லுள்ளிருந்த உமை பங்கனும்
வானம ரும்மதி சென்னிவைத்த மறை யோதியும்
தேனம ரும்மலர்ச் சோலை சூழ்ந்ததிருக் கோட்டாற்றுள்
தானம ரும்விடை யானும் எங்கள் தலைவன் அன்றே.

தெளிவுரை: ஈசன் உயிர்க்கு உயிராய் இருப்பவர்; அப்பெருமான், உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; சந்திரனைச் சென்னியில் வைத்தவர்; மறைகளை விரித்து ஓத வல்லவர்; இடப வாகனத்தில் ஏறி அமர்ந்து காட்சி தருபவர். அவர், அழகிய சோலை சூழ்ந்த திருக்கோட்டாற்றுள் வீற்றிருக்கும் எங்கள் தலைவர் ஆவர்.

சிறப்புரை: உடம்பினை இயக்கும் உயிருக்கு உயிராக விளங்குபவர் ஈசன் என்னும் மெய்ம்மை, "ஊனமரும்

Koviloor Digital Library

உடலுள் இருந்த உமைபங்கன்" என உணர்த்தப் பெற்றது. இந்நெறியில் சுந்தரமூர்த்திசுவாமிகள்,

ஊனாய் உயிர் ஆனாய்உடல் ஆனாய் உல கானாய்
வானாய் நிலன் ஆனாய்கடல் ஆனாய் மலை ஆனாய்
தேனார் பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள்
ஆனாய் உனக்காளாய் இனிஅல்லேன் எனல் ஆமே.

– திருவெண்ணெய் நல்லூர்ப் பதிகம், பாட்டு 7

என அருளிச் செய்த மாண்பும் காண்க.

ஊனின்கண் இருந்து உருக்கி, வினையை ஓட்டுகின்ற பெற்றியினைப் புரியும் ஈசனின் இன்னருளை மாணிக்கவாசகர், "ஊனையும் நின்று உருக்கி என் வினையையோட்டுகந்து, தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய, கோனவன் போல் வந்து என்னைத் தன்தொழும்பிற் கொண்டு அருளும், வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்" எனத் திருவம்மானை பாடல் 14இல் அருளிய தன்மையினையும் உய்த்து உணர்க.

125. வம்பல ரும்மலர்க் கோதை பாகம் மகிழ் மைந்தனும்
செம்பவ ளத்திரு மேனிவெண் ணீறணி செல்வனும்
கொம்ப ரும்மலர் வண்டுகொண்டுந் திருக்கோட் டாற்றுள்
நம்பன் எனப் பணிவார்க்கு அருள்செய் எங்கள் நாதனே.

தெளிவுரை: நறுமண மலர் அன்ன உமாதேவியை பாகமாகக் கொண்டு மகிழும் சிவபெருமான், செம்பவளம் போன்ற திருமேனியுடன் விளங்கித் திருவெண்ணீறு அணிந்த செல்வராவர். தேன்

Koviloor Digital Library

துளிர்க்கும் திருக்கோட்டாற்றுள் வீற்றிருக்கும் நம்பனாய் மேவும் அப்பிரான், தன்னைப் பணிந்து ஏத்துகின்றவர்களுக்கு அருள் புரிபவர். அவர் எங்கள் நாதன்.

சிறப்புரை: ஈசன் செம்பவள மேனியுடையவர் என்றும் திருவெண்ணீறு தரித்தவர் என்றும் உணர்த்தியருளிய வண்ணம் காண்க. இதனைப் "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்" எனத் திருநாவுக்கரசர் ஏத்திப் போற்றியவாறும் கொள்க.

ஈசனை, "எங்கள் நாதன்" எனப் போற்றித் துதிக்கும் பாங்கினை நோக்குக. இத்தன்மையில், "எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்" என, மாணிக்கவாசகர் உரைத்தமையும்; திருநாவுக்கரசர் திருவேகம்பப் பெருமானை எங்கள் நாதன் என்னும் பாங்கில், "இலங்கை வேந்தன் இராவணன் சென்று தன் விலங்கலை எடுக்க அவ்விரல் ஊன்றலும், கலங்கிக் கச்சியேகம்பவோ என்றலும், நலன்கொள் செலவளித்தான் எங்கள் நாதனே", (ஐந்தாம் திருமுறை, பாடல் எண் 477) என அருளிச் செய்துள்ள வண்ணமும் ஓர்க.

எங்கள் – அணுக்கத்தின் மிகுதியை உணர்த்திற்று.

126. பந்தம ரும்விரல் மங்கைநல் லாள்ஒரு பாகமா
வெந்தமரும்பொடிப் பூசவல்ல விகிர் தன்மிகும்
கொந்தம ரும்மலர்ச் சோலைசூழ்ந் ததிருக்
கோட்டாற்றுள்
அந்தண னைநினைந்து ஏத்தவல் லார்க்கில்லை
அல்லலே.

Koviloor Digital Library

தெளிவுரை: பந்து போன்ற திரட்சியான விரல்களை உடைய மங்கை நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு திருவெண்ணீறு பூசி விளங்கும் விகிர்தன், கொத்தாகப் பூக்கும் மலர்ச் சோலை சூழ்ந்த திருக்கோட்டாற்றுள் வீற்றிருக்கும் அந்தணன் ஆவார். அப் பெருமானை நினைத்து வழிபடும் அடியவர்களுக்கு அல்லல் இல்லை.

அந்தணன் – தூயவன்; அற நெறி மாண்பினன்; சிவபெருமான்.

127. துண்டம ரும்பிறை சூடிநீ டுசுடர் வண்ணனும்
வண்டம ருங்குழல் மங்கைநல் லாள்ஒரு பங்கனும்
தெண்டிரை நீர்வயல் சூழ்ந்தழ கார்திருக் கோட்டாற்றுள்
அண்டமும் எண்டிசை யாகிநின்ற அழகன் அன்றே.

தெளிவுரை: துண்டித்த பிறைபோன்று விளங்கும் சந்திரனைச் சூடிய பெருமான், நீண்டு ஓங்கும் சுடர் வண்ணமாய்த் திகழ்கின்ற பரமன். அவர், வண்டு அமரும் கூந்தலை உடைய மங்கை நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர். நீர் வயல் சூழ்ந்த அழகிய திருக்கோட்டாற்றில் எழுந்தருளியுள்ள அவ் இறைவன், அண்டங்களும் ஆகி, எட்டுத் திசைகளும் ஆகி நின்ற அழகன் அல்லவா!

சிறப்புரை: சிறிய கீற்று அளவில் பிறைச் சந்திரனைத் தரித்த பாங்கு ஈசனின் அருளிச் செயலாய் ஆதலும், அப்பெருமான் பெருஞ்சோதியாய்த் திகழ்ந்தது சுடர் தரும் பரம்பொருள் எனவும் சுட்டப்பெற்றது. இதனை மாணிக்கவாசகர், "சோதியே சுடரே சூழ் ஒளி விளக்கே" என அருளிச் செய்தவாறும் காண்க. சோதி, சுடர், ஒளி விளக்கு ஆகிய மூன்றும் ஒரே தன்மையில்

Koviloor Digital Library

அமைவதாயினும், பொருள் வகையில் தனித்தனியே ஒன்றுக்கொன்று வேறுபட்ட சிறப்பினை நல்குதலாம்.

இத் திருத்தலத்தின் அம்பிகையின் திருப்பெயர் இத் திருப்பாட்டில் "வண்டமருங் குழல் மங்கை நல்லாள்" எனச் சுட்டப் பெறுதல் ஆயிற்று.

ஈசன், விரிந்த தன்மையுடையவர் என்பதனை, "அண்டமும் எண் திசையாகி நின்ற அழகன்" என இத்திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், "அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கும் அளப்பரும் தன்மை வளப்பெருங் காட்சி, ஒன்றவனுக்கு ஒன்று நின்று எழில் பகரின், நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன" என மாணிக்கவாசகர் திருவண்டப் பகுதியின் வாயிலாக அருளிச் செய்தமையும் காண்க.

ஈசன், எண் திசையாகி நின்ற செம்மையினைத் திருநாவுக்கரசர், "திகை எட்டும் (திகை – திசை) தெரிப்பதற்கு முன்னோபின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே!" என (6ஆம் திருமுறை திருவாரூர்த் திருத்தாண்டகம் வ. எண் 348) அருளிச் செய்தவாறும் நோக்குக. ஈசானியம் (கிழக்கு), வாமதேவம் (வடக்கு), சத்தியோசாதம் (மேற்கு), அகோரம் (தெற்கு) ஆகிய நேர்த்திசைகள் நான்கும் கோண திசைகளாகிய வடகிழக்கு, தென்கிழக்கு, வடமேற்கு, தென்மேற்கு ஆகிய நான்கும் சேர்ந்து எண் திசைகள் என உணர்த்தப் பெற்றது.

128. இரவம ருந்நிறம் பெற்றுடைய இலங்கைக் கிறை
கரவம ரக்கயி லையெடுத் தான்வலி செற்றவன்
குரவம ரும்மலர்ச் சோலை சூழ்ந்ததிருக் கோட்டாற்றுள்
அரவம ருஞ்சடை யானடி யார்க்கருள் செய்யுமே.

Koviloor Digital Library

தெளிவுரை: இருள் கொண்ட இரவு போன்ற கரிய நிறமுடைய இராவணன், கரவு கொண்ட நெஞ்சு உடையவனாய்க் கயிலையை எடுக்க, அவனைச் செற்று அடர்த்த ஈசன், மணம் பொருந்திய குரவ மலர்ச் சோலை திகழும் திருக்கோட்டாற்றுள் வீற்றிருப்பவர். அப் பெருமான், சடை முடியில் அரவம் தரித்து விளங்கியவராய் அடியவர்களுக்கு அருள் புரிபவர்.

சிறப்புரை: தனது நெஞ்சில் கரவு கொண்டு, கயிலையைப் பிறர் அறியாதவாறு எடுத்து வேறிடத்தில் தாபிக்க வேண்டும் என்று கருதிச் செய்த இராவண னுடைய தன்மையை, "கரவு அமரக் கயிலை எடுத்தான்" எனச் சுட்டப் பெற்றது.

"இரவு அமரும் நிறம்" என இராவணனுடைய வண்ணத்தைக் குறித்த தொடரானது, அவனுடைய அஞ்ஞான நிலையையும் சுட்டுவதாயிற்று.

129. ஓங்கிய நாரண னான்முகனும் உணரா வகை
நீங்கிய தீயுரு வாகிநின்ற நிமலன் நிழற்
கோங்கம ரும்பொழில் சூழ்ந்து எழிலார்திருக்
கோட்டாற்றுள்
ஆங்கம ரும்பெருமான் அமரர்க்கு அமரன் அன்றே.

தெளிவுரை: உலகினை அளப்பதற்குத் திரிவிக்கிரமனாய் ஓங்கிய திருமாலும், மற்றும் நான்முகனும் உணராத வகையாய் மறைந்திருந்தும் தீயுருவாகியும் நின்ற ஈசன், ஒளி திகழும் கோங்கு மலர்ப் பொழில் சூழ்ந்துள்ள திருக்கோட்டாற்றில் வீற்றிருக்கும் பெருமான் ஆவர். அப் பெருமான் தேவர்களுக்கெல்லாம் தேவர்.

Koviloor Digital Library

சிறப்புரை: ஓங்கி உயர்ந்த திருமாலும், நான்கு திசைகளிலும் முகங்களையுடைய பிரமனும் காணற்கு அரிய ஈசனின் சிறப்பினை உணர்த்தித் தேவாதிதேவன் என உரைத்தவாறு "அமரர்க்கு அமரன்" என்று ஓதப் பெறுவதாயிற்று.

130. கடுக்கொடுத்த துவர் ஆடையர் காட்சியில் லாததோர்
தடுக் கிடுக்கிச் சமணேதிரி வார்கட்குத் தன்னருள்
கொடுக்ககில்லாக் குழகன் அமரும்திருக் கோட்டாற்றுள்
இடுக்கண் இன்றித் தொழு வார் அமரர்க்குஇறை
யாவரே.

தெளிவுரை: சாக்கியரும் சமணரும் ஈசனை நாடாது புறமாக நிற்க, அருள் புரிவதற்கு உரித்தாகாத நிலை மேவிய ஈசன் திருக்கோட்டாற்றில் வீற்றிருக்க, அப்பெருமானை வணங்குபவர்கள் துன்பம் அற்றவர்களாய் வானுலகத்தின் தலைமைப் பதவியைப் பெறுவார்கள்.

சிறப்புரை: இத் திருப்பாட்டின் வாயிலாக, மெய் வருத்தம் இன்றி எளிமையான தன்மையால் வழிபாடு செய்யும் தன்மையினை, "இடுக்கண் இன்றித் தொழுவார்" எனச் சுட்டப் பெற்றது.

இடுக்கண் இன்றித் தொழுவார் – மெய் வருத்தம் நேராத வகையால் தொழுகின்ற காலத்தும் என்பது. இது வழிபடுதலின் கடமை உணர்த்தப் பெற்றது.

131. கொடியுயர் மால்விடை யூர்தி யினான்திருக்
கோட்டாற்றுள்
அடிகழ லார்க்கநின் றாடவல்ல அருளாளனைக்
கடிகம ழும்பொழிற் காழியுள் ஞானசம் பந்தன்சொல்
படியிவை பாடிநின் றாடவல் லார்க்கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: *இடபத்தைக் கொடியாகவும், வாகன மாகவும் உடைய திருக்கோட்டாற்றில் வீற்றிருக்கும் ஈசன், திருப்பாதத்தில் விளங்கும் கழல் ஆர்க்க நின்று ஆடுகின்ற அருளாளர். அப்பெருமானை நறுமணம் கமழும் பொழில் திகழும் காழியுள் மேவும் ஞானசம்பந்தன் ஏத்திச் சொல்லிய, இத்திருப் பதிகத்தைப் பாடிப் பத்திமையால் தன்னை மறந்து ஏத்த வல்லவர்கள், தம் பாவம் யாவும் நீங்கப் பெற்றவ ராவர்.*

இது தீவினையை நீக்குதலின் சிறப்பு உணர்த்துவ தாயிற்று.

271. திருப்பூந்தராய்

தல விளக்கம்: *பதிகம் எண் 260 காண்க.*

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

132. **மின்னன எயிறுடை விரவ லோர்கள்தம்**
துன்னிய புரமுகச் சுளிந்த தொன்மையர்
புன்னையம் பொழிலணி பூந்த ராய்நகர்
அன்னமன் னந்நடை யரிவை பங்கரே.

தெளிவுரை: *மின்னலைப் போன்ற வளைந்த பற்களை உடைய பகைமை கொண்ட அசுரர்களுடைய மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாகுமாறு சினந்த தொன்மையராகிய ஈசன், புன்னை மரங்களின் பொழிலை அணியாகப் பெற்று விளங்கும் பூந்தராய் நகரில், உமைபங்கராய் வீற்றிருப்பவர்.*

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசன், தொன்மையனாய் விளங்கி மேவு தலைத் "தொன்மையர்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க" எனவும்; "முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் . பொருளே" எனவும், மாணிக்க வாசகர் அருளிச் செய்துள்ள மாண்பினையும் நோக்குக.

ஈசனை, மலர் தூவிப் போற்றிப் பணிதல் சிறப்பான வழிபாடு ஆகும் என்பதும், அட்ட புஷ்பங் களில் ஒன்றாகிய புன்னை மலரால் அருச்சித்தல் தனிச் சிறப்பு வாய்ந்தது எனவும் நனி உணர்த்துகின்ற பாங்கில், "புன்னையம் பொழில் அணி பூந்தராய்" என ஓதப் பெற்ற செம்மையினை ஓர்க.

மின்னன எயிறு – அசுரர்களின் கொடுமையை உணர்த்தியது.
களிந்த – சினந்த

133. மூதணி முப்புரத்து எண்ணி லோர்கள்
வேதணி சரத்தினால் வீட்டி னாரவர்
போதணி பொழிலமர் பூந்த ராய்நகர்த்
தாதணி குழலுமை தலைவர் காண்மினே.

தெளிவுரை: முதுமைத் தன்மையுடைய முப்புரத்து அசுரர்களை, வெம்மையுடைய அம்பினால் எரிந்து சாம்பலாகுமாறு செய்த ஈசன், மலர்கள் நனிவிளங்கும் பொழில் திகழும் பூந்தராய் நகரில் மகரந்தத் தேன் கமழும் கூந்தலையுடைய உமாதேவியின் தலைவராய் வீற்றிருப்பவர். அப் பெருமானைக் கண்டு தரிசித்து ஆனந்தம் அடைவீராக.

சிறப்புரை: முந்தைய திருப்பாட்டில் ஈசன், தொன்மையராக விளங்கிய தன்மையானது நலிவு

Koviloor Digital Library

தோன்றாத தன்மையினைச் சுட்டப் பெறுவதாயிற்று. இதனைப் "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே" என்னும் திருவாசகத்தின் அமுத மொழி யாலும் கொள்க. முப்புரத்து அவுணர்களின் வியூகம் மற்றும் போர்த்தந்திரங்கள் முதுமைத் தன்மையடைந்து நலிவுற்றதாகும் எனச் சுட்டப் பெற்றது.

ஈசன் செலுத்திய அம்பானது, நுனிப் பாகத்தில் அக்கினித்தேவனும்; இடைப் பாகத்தில் திருமாலும்; அடிப்பாகத்தில் வாயுதேவனும் கொண்டு விளங்கிய தன்மையில் வேது அணி சரம் எனச் சிறப்பிக்கப் பெற்றது. (வேது - வெம்மை).

ஈசனைச் சிறப்பாகப் போற்றி வழிபடும் மலர்களாகிய புன்னை, நீலோற்பலம், சண்பகம், செந்தாமரை போன்ற மலர்கள் அட்ட புஷ்பங்களின் வகையாதலும், அத்தகைய மலர்ப் பொழில் திகழும் பூந்தராய் நகரில் எழுந்தருளி உள்ள அம்பிகையின் கூந்தலில் அத்தகைய மலர்களின் மகரந்த மணம் கமழ்தலும் ஈண்டு உணர்த்தப்பெறும் செம்மையும் காண்க.

இத் திருத்தலத்தில் மேவும் ஈசன் குரு வடிவம் (தோணியப்பர்) ஆதலும், அப்பெருமானைக் கண்டு தரிசித்தல் மன்னுயிரை மேன்மையடையச் செய்யும் என்னும் அருளாணை வழங்கப் பெறுதலும் "காண்மினே" எனச் சுட்டப் பெற்றதாகக் கொள்க. (பிரமபுரீஸ்வரர் - இலிங்க வடிவம்; சட்டைநாதர் - ஜங்கம வடிவம் எனக் காண்க).

134. **தருக்கிய திரிபுரத் தவர்கள் தாம்உகப்**
பெருக்கிய சிலைதனைப் பிடித்த பெற்றியர்

Koviloor Digital Library

பொருக்கடல் புடைகரு பூந்த ராய்நகர்க்
கருக்கிய குழலுமை கணவர் காண்மினே.

தெளிவுரை: தருக்கித் திரிந்த முப்புரத்து அசுரர்கள் அழியுமாறு மேரு மலையை வில்லாகக் கொண்ட ஈசன், கடலலைகள் சூழ்ந்த பூந்தராய் நகரின்கண் கரிய கூந்தலையுடைய உமாதேவியின் கணவர் ஆவார். அவரைக் கண்டு தரிசித்து உய்வீராக.

சிறப்புரை: ஈசனை, உமைபங்கன், உமைகேள்வன் என்கின்றாற் போன்று உமை கணவன் எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "மட்டார் பூங்குழல் மலை மகள் கணவனைக் கருதாதார் தமைக் கருதேன்" (நாட்டியத்தான் குடி நம்பி - திருப்பதிகம் பாடல் 5) என உரைத்தருளிய செம்மை காண்க.

உக – அழிய.

135. நாகமும் வரையுமே நாணும் வில்லுமா
மாகமார் புரங்களை மறித்த மாண்பினர்
பூகமார் பொழிலணி பூந்த ராய்நகர்ப்
பாகமர் மொழியுமை பங்கர் காண்மினே.

தெளிவுரை: வாசுகி என்னும் நாகத்தை நாணாகவும், மேருமலையை வில்லாகவும் கொண்டு ஆகாயத்தில் திரிந்த மூன்று புரங்களை அழியச் செய்த மாண்புடைய ஈசன், பாக்கு மரங்கள் திகழும் பூந்தராய் நகரில் இனிமையான பாகு போன்ற மொழியுடைய உமாதேவியைப் பாகமாக கொண்டு திகழ்பவர். அப் பெருமானைத் தரிசித்து உய்வீராக.

பூகம் – பாக்கு மரம்; பாகமர் மொழியுமை – ஞானமாகிய அமிர்தம் போன்று இனிமை தரும் அம்பிகையை உணர்த்திற்று.

Koviloor Digital Library

136. வெள்ளெயிறு உடையஅவ் விரவ லார்கள்ஊர்
ஒள்ளெரி யூட்டிய ஒருவ னார்ஒளிர்
புள்ளணி புறவினிற் பூந்த ராய்நகர்க்
கள்ளணி குழலுமை கணவர் காண்மினே.

தெளிவுரை: வெண்மையான அகன்ற முன் பற்களுடைய அசுரர்களின் மூன்று புரங்களும் எரிந்து சாம்பலாகுமாறு செய்த ஈசன் ஒளிர்கின்ற பறவைகள் திகழும் பூந்தராய் நகரில், தேன் கமழும் கூந்தலை உடைய அம்பிகையின் கணவர் ஆவர். அப்பெருமானைத் தரிசித்து உய்வீராக!

எயிறு – பல். அசுரர்களின் கொடுமையை உணர்த்தியது. புறவு – புறவம் சீகாழியின் பன்னிரு பெயர்களுள் பூந்தராய் ஒரு திருப் பெயராதல் போன்று இதுவும் ஒன்று.

137. துங்கியல் தானவர் தோற்ற மாநகர்
அங்கியில் வீழ்தர வாய்ந்த வம்பினர்
பொங்கிய கடலணி பூந்த ராய்நகர்
அங்கய லனகணி அரிவை பங்கரே.

தெளிவுரை: அசுரர்களின் நெடிய வடிவங்களைப் போன்று தோற்றமுடைய பெரிய நகரங்கள் மூன்றும் நெருப்பில் மூழ்கி எரியுமாறு செய்த அக்கினிக் கணையை உடைய ஈசன், கடலின் அணி திகழ மேவும் பூந்தராய் நகரில் எழுந்தருளியுள்ள கயல் போன்ற கண்ணுடைய உமாதேவியை ஒரு பாகமாக உடையவர். அவரை ஏத்துமின்!

சிறப்புரை: வாய்ந்த என்பது ஆய்ந்த என்னும் பொருளும் தரவல்லது. வகர உடம்படுமெய் சேர்ந்து அம்பினர் என்னும் சொல் வம்பினர் என ஆயிற்று. வம்பினர் என்று கொண்டு பொருள் கொள்ளுதலும் "புதுமையானவர்" என்னும் பொருளின்கண் ஈசனை

Koviloor Digital Library

உணர்த்துமாறு ஆயிற்று. "பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே" என வரும் தொடர் காண்க.

துங்கு – நெடிய தோற்றம்; தொங்குதல்; கயலனகணி – கயற்கண்ணி

138. அண்டர்கள் உய்ந்திட அவுணர் மாய்தரக்
கண்டவர் கடல்விடம் உண்ட கண்டனார்
பூண்டரீ கவ்வயற் பூந்த ராய்நகர்
வண்டமர் குழலிதன் மணாளர் காண்மினே.

தெளிவுரை: எல்லா அண்டங்களிலும் உள்ள மன்னுயிர்கள் நன்மை அடையும் பொருட்டு முப்புர அவுணர்களை மாயச் செய்தும், கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்டு கரிய கண்டத்தினராய்க் காத்தும் அருளிய ஈசன், தாமரை மலர்கள் திகழும் வயல்களை உடைய பூந்தராய் என்னும் நகரில் உமாதேவியின் மணாளராக வீற்றிருப்பவர். அப்பெருமானை எத்தித் தரிசித்து உய்வீராக!

சிறப்புரை: அண்டங்கள் பலவாதலும், அவை: பிரமன் அண்டங்கள் முதலாகத் திருமால் அண்டங்கள்; உருத்திரன் அண்டங்கள்; மகேசுவர் அண்டங்கள்; சதாசிவர் அண்டங்கள் வரை பலகோடி அண்டங்கள் உள்ளன என்பதும் உணர்த்தும் தன்மையில் "அண்டர்கள் உய்ந்திட" என ஓதப் பெற்றது. ஈசன், சூரபத்மனுக்கு 1008 அண்டங்களை ஆட்சி செய்யும் பேற்றினை அருளிச் செய்தமையைக் கொண்டு அண்டங்களின் பெருக்கத்தை உய்த்துணர்க.

139. மாசின அரக்கனை வரையின் வாட்டிய
காய்சின வெயில்களைக் கறுத்த கண்டனார்

Koviloor Digital Library

பூசுரர் பொலிதரு பூந்த ராய்நகர்க்
காசைசெய் குழலுமை கணவர் காண்மினே.

தெளிவுரை: *குற்றத்தை உடைய அரக்கனாகிய இராவணனைக் கயிலை மலையைக் கொண்டு அடர்த்து நலியச் செய்து, மன்னுயிர்களை வதைத்த முப்புரக் கோட்டைகளைக் கனன்று எரியுமாறு புரிந்த நீலகண்டராகிய ஈசன், அந்தணர்கள் பொலிந்து விளங்கும் பூந்தராய் நகரில், கரிய கூந்தலையுடைய உமாதேவியின் கணவர் ஆவர். அப் பெருமானைத் தரிசித்து உய்வீராக!*

வெயில் – எயில்; முப்புரங்கள். காசை செய் – காயாம்பூ – கருங்குழலை உணர்த்தியது.

140. தாமுக மாக்கிய அசுரர் தம்பதி
வேமுக மாக்கிய விகிர்தர் கண்ணனும்
பூமகன் அறிகிலாப் பூந்த ராய்நகர்க்
கோமகன் எழில்பெறும் அரிவை கூறரே.

தெளிவுரை: *தமது விருப்பத்தின்படி பெருந்தீங்கைப் புரிந்த அசுரர்களின் மூன்று புரங்களையும் எரித்துச் சாம்பலாக்கியவர், ஈசன். திருமாலும் பிரமனும் அறிவதற்கு ஒண்ணாத பூந்தராய் நகரில் வீற்றிருக்கும் அப்பெருமான், எழில் மிக்க உமாதேவியை ஒரு கூறாக உடையவர். அவரைத் தரிசித்து உய்வீராக!*

141. முத்தர அசுரர்கண் மொய்த்த முப்புரம்
அத்தகும் அழலிடை வீட்டி னார்அமண்
புத்தரும் அறிவொணாப் பூந்த ராய்நகர்க்
கொத்தணி குழலுமை கூறர் காண்மினே.

தெளிவுரை: *அசுரர்களிடமுள்ள மூன்று உலோகத்தால் ஆகிய கோட்டைகளை நெருப்பில் எரிந்து சாம்பலாகு*

Koviloor Digital Library

மாறு செய்த ஈசன், சமணர் மற்றும் பௌத்தர்களால் அறியவொண்ணாத பூந்தராய் நகரின்கண், உமாதேவியை ஒரு கூறாகக் கொண்டு வீற்றிருப்பவர். அப்பெருமானைத் தரிசித்து உய்வீராக!

சிறப்புரை: முப்புரங்கள் மூன்று வகையான தரத்தால் ஆனவை என வரும் குறிப்புக் காண்க. முப்புர அவுணர் தம் கோட்டையின் தன்மையில் இரண்டாந் திருமுறையில், "செம்பினாரு மதில் மூன்று எரியச் சினவாய தோர் அம்பினால் எய்தருள் வில்லி அனேகதங்காவதம்" *(பாடல் வ. எண் 46 2.5.3)* உணர்த்தப் பெற்ற பாங்கும் காண்க. அவுணர்தம் கோட்டைகள் இரும்பு, வெள்ளி, பொன் ஆகியவற்றால் ஆனவை என வழங்கப் பெறுதலும் உண்டு.

142. புரமெரி செய்தவர் பூந்த ராய்நகர்ப்
பரமலி குழலுமை நங்கை பங்கரைப்
பரவிய பந்தன்மெய்ப் பாடல் வல்லவர்
சிரமலி சிவகதி சேர்தல் திண்ணமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: முப்புரங்களை எரித்த பரமன் பூந்தராய் நகரில் மேவும் பெருமாட்டியாகிய உமாதேவியைப் பாகமாகக் கொண்டு திகழ்பவர். அப் பெருமானைப் பரவிய ஞானசம்பந்தனின் மெய்ம்மை நவிலும் இத் திருப்பதிகத்தை ஓதுபவர்கள், தலையானதாகப் போற்றப்படுகின்ற சிவகதியை அடைவார்கள்.

சிறப்புரை: இத் திருப்பதிகத்தில் உள்ள திருப்பாடல்கள் அனைத்தும் முப்புரத்தை எரித்த வரலாற்றினை உணர்த்தும் தனிச் சிறப்பு வாய்ந்தது.

பரமலி – பரங்கருணை, தெய்வத்தன்மை.

Koviloor Digital Library

272. திருப்பைஞ்ஞீலி

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலங்கள் 63இல் இது, 61ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. உமாதேவியார் வழிபட்டது. இதன் வேறு பெயர்கள்: கதலி வனம், ஞீலி வனம், அரம்பை வனம், விமலா ரண்யம், தரளகிரி, சுவேதகிரி, வியாக்ரபுரி, மேலைச் சிதம்பரம் முதலியன. சுவாமி, திருநாவுக்கரசருக்குப் பொதி சோறு அளித்துப் பசியைப் போக்கிய தலம். ஈசன், வசிட்டருக்கு நடனக் காட்சி அருளிய தலம்.*

சுவாமி : *நீலகண்டேஸ்வரர், கதலிவசந்தர், ஞீலிவனநாதர், ஆரண்யவிடங்கர்*

அம்பிகை : *விசாலாட்சி*

தல மரம் : *ஞீலி (வாழையில் ஒரு வகை)*

தீர்த்தம் : *அப்பர் தீர்த்தம்*

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

143. ஆரிடம் பாடிலர் அடிகள் காடலால்
ஓரிடம் குறைவிலர் உடையர் கோவணம்
நீரிடம் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெயும் பயில்பைஞ் ஞீலியே.

தெளிவுரை: *ஈசன், பாடலாகப் பாடுவது ஆரிடம் என்னும் வேதமும்; உறைவது சுடுகாடு எனப்படும் இடமும்; உடையாகக் கொள்வது கோவண ஆடையும் ஆகும். அப்பெருமான், கங்கையைச் சடை முடியில் ஏந்தி, இடப வாகனராய் மேவி, நித்தமும்*

Koviloor Digital Library

பணிகொண்டு மேவும் பூத கணங்கள் சூழத் திருப்பைஞ்ஞீலியில் திகழ்பவர்.

சிறப்புரை: வேதங்கள் பாடுபட்டு முயன்றும் காணாது நின்றமை முதலான பல சிறப்பின் மிக்க பொருள்களை நவிலும் தன்மையில் "ஆரிடம் பாடிலர்" என்னும் தொடர் உணர்த்தவல்லதாம்.

ஈசன் உறையும் இடமாவது மயானம் மட்டும் அல்லாது, எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்துள்ள தன்மையைச் சுட்டுமாறு, "காடலால் ஓரிடங் குறைவிலர்" என உணர்த்தப் பெற்றது.

பூத கணங்களின் சிறப்பினை, "நித்தலும் பாரிடம் பணிசெயும்" என்னும் தொடரால் உணர்த்தப் பெறுதல் காண்க.

ஆரிடம் – முனிவர் அருளிய நூல்; வேத நூல்.

144. மருவிலார் திரிபுரம் எரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை உளங்கொ ளாதஅத்
திருவிலா ரவர்களைத் தெருட்ட லாகுமே.

தெளிவுரை: பகைமை கொண்ட முப்புர அசுரர்களின் புரங்கள் எரிந்து சாம்பலாகுமாறு, மேரு என்னும் பெருமையுடைய மலையினை வில்லாக வளைத்த ஈசன், திருப்பைஞ்ஞீலி என்னும் தலத்தில் வீற்றிருப்பவர். வடிவம் அற்றவராய் விளங்கும் அப் பெருமானுடைய பெருமையை உள்ளத்தில் கொண்டு ஏத்தாதவர்கள் திரு இல்லாதவர் ஆவர். அவர்களைத் தெளிவித்து நலம் கொளச் செய்தல் ஆகுமா!

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசனின் வடிவம் இன்னதென்று வரையறை செய்து உணர்த்த இயலாது என்னும் கருத்தில் உருவிலான் எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "ஒரு நாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என உணர்த்திய மெய்ம்மொழியினையும் காண்க. அப் பெருமானை உள்ளத்தில் கொண்டு விளங்குவது திருவுடைமை ஆகுமென்று சுட்டப்படுதலும் நோக்குக. அத்தகைய திரு அற்றார்பால் ஈசனைப் பற்றித் தெளிவித்தல், அப் பெருமானின் அருளால் அன்றி பிற தன்மையால் ஆகாது என்று உணர்த்த வல்லதாய், "ஆகுமே!" என்னும் சொல்லால் உரைத்தலை ஓர்க.

பருவிலா – பெரிய வில்லாக

145. அஞ்சுரும்பு அணிமலர் அமுத மாந்தித்தேன்
பஞ்சுரம் பயிற்றுபைஞ் ஞீலி மேலான்
வெஞ்சுரந் தனில்உமை வெருவ வந்ததோர்
குஞ்சரம் படவுரி போர்த்த கொள்கையே.

தெளிவுரை: அழகிய வண்டினம், மலரில் துளிர்க்கும் தேனை அமுதமென அருந்திப் பஞ்சுரம் என்னும் பண்ணிசைத்து விளங்கும் பைஞ்ஞீலியில் வீற்றிருக்கும் ஈசன், உமாதேவி வெருவுமாறு கானகத்தில் வந்த யானையின் தோலை உரித்துப் போர்த்தித் திருவிளையாடல் புரிந்தவர்.

அஞ்சுரும்பு – அழகிய வண்டு; குஞ்சரம் – யானை.

146. கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல் வண்டிசைமுரல் பயில்பைஞ் ஞீலியார்
பேடலர் ஆணலர் பெண்ணும் அல்லதோர்
ஆடலை உகந்த எம் அடிகள் அல்லரே.

Koviloor Digital Library

தெளிவுரை: வெண்காந்தள் மலர்களும், காடுகளில் மேவும் முல்லை மலர்களும் திகழ வண்டுகள் ரீங்காரம் செய்து பாடற் பண்களை ஒலிக்கின்ற பைஞ்ஞீலியில் வீற்றிருக்கும் ஈசன், ஆணும் அல்லர், பெண்ணும் அல்லர்; ஆணும் இல்லாது பெண்ணும் இல்லாது மேவும் அலியும் அல்லர்; ஆடலை விரும்பி மேவும் அடிகள் அல்லர்.

சிறப்புரை: ஈசன் ஆணாகியும்; பெண்ணாகியும்; அவை அல்லவாகியும்; அலியாகியும்; அதுவும் அல்ல தாகியும் நிலவும் செம்மை இவண் உரைக்கப் பெற்றது. இந்நெறியில் மாணிக்கவாசர், "பெண்ணாகி, ஆணாய் அலியாய்ப் பிறங்கொளி சேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணார் அமுதமுமாய் நின்றான்" என உரைத்தருளிய (திருவாசகம் – திருவெம்பாவை 18) மாண்பும் காண்க. ஆடலை உகந்த பரமன், யாவுமாய் விளங்கி இயங்குகின்ற குணவியல் புடையவன் என ஓதுதலும் ஆயிற்று. இத்தன்மையில், இத்திருப்பதிகத்தின் திருப்பாட்டு எண் 2இல் குறிப்பிட்ட "உருவிலான்" என்னும் அருஞ் சொல்லுக்கு ஈண்டு விளக்கம் உரைத்தல் ஆயிற்று.

கோடல் – காந்தள் மலர்; பேடல – அலி அல்ல.

147. விழியிலா நகுதலை விளங்கி ளம்பிறை
சுழியிலார் வருபுனற் சூழல் தாங்கினான்
பழியிலார் பரவுபைஞ் ஞீலி பாடலான்
கிழியிலார் கேண்மையைக் கெடுக்க லாகுமே.

தெளிவுரை: பிரம கபாலத்தை ஏந்தி இளமையான பிறைச் சந்திரனும் கங்கையும் தரித்த ஈசன், வினை நீங்கப் பெற்ற அடியவர்கள் போற்றுகின்ற பைஞ்ஞீலியில், வேதம் விரித்து ஓதும் பரமன் ஆவர்.

Koviloor Digital Library

அப்பெருமானை ஏத்தித் தொழுபவர்களின் வறுமையானது கெடும்.

விழியிலா நகுதலை – பிரம கபாலம்; கிழியிலார் கேண்மை – செல்வம் இல்லாதவர்தம் உறவாகிய வறுமை.

148. விடையுடைக் கொடிவலன் ஏந்தி வெண்மழுப்
படையுடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவலான்
துடியிடைக் கலையல்கு லாளோர் பாகமாச்
சடையிடைப் புனல்வைத்த சதுரன் அல்லனே.

தெளிவுரை: இடபக் கொடியை ஏந்தி மழுப்படை உடைய ஈசன், பைஞ்ஞீலியில் மேவி விளங்குகின்ற பெருமான். அவர் உமாதேவியைத் தனது தேகத்தில் ஒரு பாகமாகக் கொண்டு சடை முடியிலும் கங்கையைத் தரித்த சதுரன் ஆவர்.

சிறப்புரை: ஈசன், சர்வ வல்லமை படைத்தவர் என்பதைச் சதுரன் என உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், "மதுரவாய் மொழி மங்கையோர் பங்கினன் சதுரன் சிற்றம்பலவன்" என வரும் திருநாவுக்கரசர் தேவாரப் பாடலும் காண்க.

149. தூயவன் தூயவெண் ணீறு மேனிமேல்
பாயவன் பாயபைஞ் ஞீலி கோயிலா
மேயவன் வேய்புரை தோளி பாகமா
ஏயவன் எனைச் செயுந் தன்மை என்கொலோ.

தெளிவுரை: ஈசன், தூய நிலை உடையவர்; தூய திருவெண்ணீற்றைத் திருமேனியில் பூசி விளங்குபவர்; நன்கு பரவப்படுமாறு பைஞ்ஞீலியில் கோயில் கொண்டு மேவித் திகழ்பவர்; மூங்கிலைப் போன்ற தோளை உடைய உமாதேவியை ஒரு கூறாக ஏற்று

Koviloor Digital Library

இருப்பவர். அப்பெருமான் என்னை ஏற்று ஆட்கொண்டு செய்கின்ற தன்மைதான் என்கொல்!

சிறப்புரை: ஈசனின் எண் குணங்களுள் ஒன்றாக விளங்கும் தூய உடம்பினன் என்பது, "தூயவன்" என்னும் சொல்லால் உணர்த்தப் பெற்றது. ஞான சம்பந்தப் பெருமான், ஞானப்பால் அருந்தி, ஆளுடைய பிள்ளையாராய்த் திகழ்ந்து விளங்கும் மாண்பானது "எனைச் செயும் தன்மை" என்னும் தொடரால் சுட்டப் பெறுவதாம். இது, ஈசனின் பேரருள் உடைமை என்னும் குணத்தை உணர்த்துவ தாயிற்று.

வெண்ணீறு மேனிமேல் பாயவன் – திருநீறுதிகழ்தல்;
பாய பைஞ்ஞீலி – அடியவர்களால் பரவப்படும் பைஞ்ஞீலி.

150. தொத்தின தோள்முடி யுடைய வன்தலை
பத்தினை நெரித்தபைஞ் ஞீலி மேவலான்
முத்தினை முறுவல்செய் தாளோர் பாகமாப்
பொத்தினன் திருந்தடி பொருந்தி வாழ்மினே.

தெளிவுரை: ஒன்றுடன் ஒன்று தொத்திச் சேர்ந்தாற் போன்ற தோள்களைக் கொண்ட இராவணனுடைய பத்துத் தலைகளும் நெரியுமாறு செய்த ஈசன், பைஞ்ஞீலியில் மேவி விளங்கும் பெருமான். முத்தன்ன வெண்ணகை உடைய உமாதேவியை ஒரு பாகமாகத் திருமேனியில் வரித்து விளங்கும் அப்பெருமானின் திருவடிமலரைப் பொருந்தி வாழ்வீராக.

சிறப்புரை: அடியவர்தம் சிந்தனையில் நின்றும், மகிழ் வினைத் தந்தும், நன்னெறிக்கு உரியவாறு செம்மைப் படுத்தும் மலரடிகள், "திருந்தடி" எனப்பட்டது. ஈசன் திருவடியே பரஞானம் அபரஞானமாதலும்,

Koviloor Digital Library

அத்தகைய அடியைப் பொருந்தி வாழ்வதே உத்தம வாழ்க்கையாகும் என்பதனை அருளாணையாக வழங்குதலும் திருஞானசம்பந்தர் வாக்கின் வழி நோக்குக.

பொத்தினன் – சேர்த்தனன், வரித்தனன்.

151. நீருடைப் போதுறை வானு மாலுமாய்ச்
சீருடைக் கழலடி சென்னி காண்கிலர்
பாருடைக் கடவுள்பைஞ் ஞீலி மேவிய
தாருடைக் கொன்றையந் தலைவர் தன்மையே.

தெளிவுரை: *நீரில் விளங்கும் தாமரையில் மேவும் பிரமன் சீர் நல்கும் கழல் அணிந்த அடி மலரையும், திருமால் திருமுடியையும் காண்கிலராய் நிற்க, பூவுலகில் பைஞ்ஞீலி என்னும் இடத்தில் மேவிய ஈசன், கொன்றை மாலை அணிந்த தலைவராய் வீற்றிருக் கின்றனர்.*

தலைவர் – யாவற்றுக்கும் தலைப்பட்டு நிகழ்விக்கும் தன்மை உணர்த்தியது. ஈசனின் தன்வயத்தனாலைச் சுட்டும்.

152. பீலியார் பெருமையும் பிடகர் நூன்மையும்
சாலியா தவர்களைச் சாதி யாததோர்
கோலியா வருவரை கூட்டி யெய்தபைஞ்
ஞீலியான் கழலடி நினைந்து வாழ்மினே.

தெளிவுரை: *மயிற் பீலி கொண்டு பெருமை கொள்ளும் சமணரும் பிடக நூல் கொண்டு மேவும் சாக்கியரும் தாம் கூறியவற்றைச் சாதிக்கும் தன்மையில்லாதவர்கள். மேருவை வில்லாக்கி, அம்பினைத் தொடுத்து எய்து முப்புரங்களை எரித்த ஈசன் பைஞ்ஞீலியில் மேவும் பரமன். அப் பெருமானுடைய மலர்களை வணங்கி வாழ்வீராக.*

Koviloor Digital Library

153. கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புணர் அருமறை ஞானசம் பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின உலகினில் ஓங்கி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நீரைத் தேக்கி வைத்திருந்து பாய்கின்ற வயல் வளம் உடைய காழியில், கற்பக மரம் போன்று நண்பு கொண்டு நலம் சேர்க்கும் மறைவல்ல ஞான சம்பந்தன், நற்பண்புடையோர் பரவும் பைஞ்ஞீலியில் வீற்றிருக்கும் ஈசனைப் பாடிய இத் திருப்பதிகத்தை உரைப்பவர்கள், கன்ம உலகமாகிய இப்பூவுலகில், ஓங்குகின்ற வாழ்க்கையை உடையவர்கள் ஆவர்.

சிறப்புரை: கன்ம பூமியாகிய இவ்வுலகில் முற்பிறவி களில் ஈட்டிய பிராரத்த வினை நுகருவதற்கும், மற்றும் இப்பிறவியில் செய்யும் ஆகாமியமும், எஞ்சிய சஞ்சிதமும் நுகரும் பொருட்டு மீண்டும் பிறவி கொள்ளுதலைச் சுட்டுமாறு "உண்பின உலகில்" என உணர்த்தப் பெற்றது.

ஞானப்பால் அருந்தி ஆளுடைய பிள்ளையாராய் மலர்ந்த திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பதிகங்களை ஓதுதல் வாயிலாக வினை நுகர்ந்தும் பிறவித் தளையில் கட்டுண்டும் நலிவுறாது, நனி ஓங்கு கின்ற வாழ்க்கையானது கைகூடும் எனச் சுட்டும் தன்மையில் "ஓங்கி வாழ்வரே" என உணர்த்தப் பெற்றது.

உலகுளோர், இவ் அருளாணையின்படி நனி வாழ்வாராக.

Koviloor Digital Library
KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17661

273. திருவெண்காடு

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலங்கள் 63இல் இது, 11ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. சுவேதாரண்யம், சுவேதவனம் என்பன வேறு பெயர்கள். இந்திரன், வெள்ளை யானை (ஐராவதம்) வழிபட்டது. இங்குள்ள முக்குளம் பிரசித்தி பெற்றது. மற்றும் இரண்டாம் திருமுறை, பதிகம் எண் 48 காண்க.*

சுவாமி : *சுவேதாரண்யர், வெண்காட்டுநாதர்*

அம்பிகை : *பிரமவித்யாநாயகி*

தல மரம் : *வட ஆலமரம்*

தீர்த்தம் : *சூரிய தீர்த்தம், அக்கினி தீர்த்தம், சந்திர தீர்த்தம் (முக்குளம்)*

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

154. மந்திர மறையவை வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை
வெந்தவெண் ணீற்றர் வெண் காடு மேவிய
அந்தமு முதலுடை அடிகள் அல்லரே.

தெளிவுரை: நன்கு ஏத்தப் பெறும் மந்திரங்களாக உள்ள வேதமும், வானவருடன் சேர்ந்து இந்திரனும் வழிபடுமாறு வீற்றிருக்கும் எமது இறைவன், திருவெண்ணீற்றுத் திருமேனியராக வெண்காட்டில் பொருந்தி விளங்குபவர். அப்பெருமான், அந்தமாகவும் ஆதியாகவும் எல்லாக் காலங்களிலும் திகழும் அடிகள் அல்லவா!

Koviloor Digital Library

சிறப்புரை: ஆதியும் அந்தமும் ஆகிய பரமனை வேத மந்திரங்கள் தொழுது போற்றும் மாண்பானது இவண் ஓதப் பெற்றது.

முதல் – ஆதி

155. படையுடை மழுவினர் பாய்புலித் தோலின்
உடைவிரி கோவணம் உகந்த கொள்கையர்
விடையுடைக் கொடியர்வெண் காடு மேவிய
சடையிடைப் புனல்வைத்த சதுரர் அல்லரே.

தெளிவுரை: ஈசன், மழுப்படையுடையவர்; புலியின் தோலை உடையாகக் கொண்டு, கோவணத்தை உகந்து தரித்திருப்பவர்; இடபத்தைக் கொடியாக ஏந்தி உடையவர். அவர் வெண்காட்டில் வீற்றிருந்து, சடையின்கண் கங்கையை வைத்து மேவும் சதுரர் அல்லவா!

156. பாலொடு நெய்தயிர் பலவும் ஆடுவர்
தோலொடு நூலிழை துதைந்த மார்பினர்
மேலவர் பரவுவெண் காடு மேவிய
ஆலம தமர்ந்தஎம் அடிகள் அல்லரே.

தெளிவுரை: ஈசன், பால், நெய், தயிர் மற்றும் முக்கனிகள் முதலான பலவும் பூசையாக ஏற்று மகிழ்பவர்; தோலை அணிந்து விளங்குவதுடன் முப்புரி நூலினை மார்பினில் திகழ அணிபவர்; சிவஞானிகள் பரவிப் போற்றும் வெண்காட்டில் வீற்றிருக்கும் அப்பெருமான், கல்லால மரத்தின்கீழ் இருந்து அறப் பொருள் உரைத்தவர். அவர் எம் தலைவர் அல்லவா!

அடிகள் – இறைவன், தலைவர்.

157. ஞாழலும் செருந்தியும் நறுமலர்ப் புன்னையும்
தாழைவெண் குருகயல் தயங்கு கானலில்

Koviloor Digital Library

வேழமது உரித்தவெண் காடு மேவிய
யாழினது இசையுடை இறைவர் அல்லரே.

தெளிவுரை: புலிநகக் கொன்றை, செருந்தி, புன்னை, தாழை ஆகியவற்றுடன், வெண் குருகு ஒளிர்ந்து திகழும் கடற்கரைச் சோலை விளங்கும் வெண் காட்டில், யானையின் தோலை உரித்த ஆற்றல் உடையவராயும், யாழின் இசை போன்ற இனிமை உடையவராயும் ஈசன் வீற்றிருப்பவர் அல்லவா!

ஞாழல் – புலிநகக் கொன்றை.

158. பூதங்கள் பலவுடைப் புனிதர் புண்ணியர்
ஏதங்கள் பலஇடர் தீர்க்கும் எம்இறை
வேதங்கள் முதல்வர்வெண் காடு மேவிய
பாதங்கள் தொழநின்ற பரமர் அல்லரே.

தெளிவுரை: பூத கணங்கள் பல உடைய புனிதர் ஆகிய ஈசன், புண்ணியத்தின் வடிவினராய் விளங்கி, மன்னுயிரின் குற்றங்களையும், அதனால் நேரும் இடையூறுகளையும் தீர்த்தருள்கின்ற எமது இறைவன் ஆவர். அப்பெருமான், வேத முதல்வராய் வெண் காட்டில் வீற்றிருப்பவர். அவர்தம் பாதங்கள் அனைவராலும் தொழப் பெறும் தன்மையில் விளங்க, அவர் பரம்பொருளாகத் திகழ்பவர் அல்லவா!

சிறப்புரை: இயல்பால் ஏற்படும் ஏதங்களையும் அவற்றால் உண்டாகும் இடர்களையும் தனது இன்னருளால் தீர்த்தருள் புரிகின்ற இறைவனைப் புனிதர் எனவும், புண்ணியர் எனவும் சுட்டப் பெறுதல் ஆயிற்று.

159. மண்ணவர் விண்ணவர் வணங்க வைகலும்
எண்ணிய தேவர்கள் இறைஞ்சும் எம்இறை

Koviloor Digital Library

விண்ணமர் பொழில்கொள் வெண்காடு மேவிய
அண்ணலை அடிதொழ அல்லல் இல்லையே.

தெளிவுரை: பூவுலக மாந்தர்களும் விண்ணுலகத் தவர்களும் ஈசனை வணங்குகின்றனர். நாள்தோறும் போற்றி வழிபட்டு இறைஞ்சுகின்ற தேவர்களுக்கு இறைவனாகிய அப்பெருமான், உயர்ந்து மேவும் பொழில் கொண்டு விளங்கும் வெண்காட்டில் வீற்றிருப்பவர். அப்பரமனைத் தொழுது போற்றுபவர் களுக்கு அல்லல் இல்லை.

160. நயந்தவர்க்கு அருள்பல நல்கி இந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்
வியந்தவர் பரவுவெண் காடு மேவிய
பயந்தரு மழுவுடைப் பரமர் அல்லரே.

தெளிவுரை: இசைந்து வழிபடும் அடியவர்களுக்கு வேண்டியவாறு நல்கியும், யானை வழிபட அருள் புரிந்தும் விளங்கும் நெற்றிக்கண்ணுடைய ஈசன், யோகிகள் பரவிப் போற்றும் வெண்காட்டில் வீற்றிருப்பவர். அப்பெருமான், மழுப்படையைக் கொண்டு மேவும் பரமர் அல்லவா!

சிறப்புரை: இத் திருத்தலத்தின் வரலாறாகிய யானை பூசித்த சிறப்பு, ஈண்டு உணர்த்தப் பெற்றது.

கயந்திரம் – யானை.

161. மலையுடன் எடுத்தவல் லரக்கன் நீள்முடி
தலையுடல் நெரித்தருள் செய்த சங்கரர்
விலையுடை நீற்றர்வெண் காடு மேவிய
அலையுடைப் புனல்வைத்த அடிகள் அல்லரே.

தெளிவுரை: கயிலை மலையை எடுத்த கொடிய அரக்கனாகிய இராவணனுடைய நீண்ட முடி, தலை,

Koviloor Digital Library

உடல் ஆகியன யாவும் நெரியுமாறு செய்த சங்கரர், பெருமையுடைய திருநீற்றினைப் பூசி விளங்கித் திகழும் வெண்காட்டில் வீற்றிருப்பவர். அப்பெருமான் சடைமுடியில் கங்கையைத் தரித்து விளங்குபவர் அல்லவா!

மலை – கயிலை மலை; சங்கரர் – நலம் செய்பவர். ஈசன்.

162. ஏடவிழ் நறுமலர் அயனு மாலுமாய்த்
தேடவும் தெரிந்தவர் தேர கிற்கிலார்
வேடம துடையவெண் காடு மேவிய
ஆடலை அமர்ந்தஎம் அடிகள் அல்லரே.

தெளிவுரை: தாமரை மலரில் விளங்குகின்ற பிரமனும், மற்றும் திருமாலும் தேடிய காலத்தில், அவ்விருவரும் தேடிய தன்மையை நன்கு அறிந்தும், காணுதற்கு அரியவராய் விளங்கிய ஈசன், வெண்காட்டில் இனிது மேவி நடம் புரிதலை விரும்பிய அடிகள் அல்லவா!

163. போதியர் பிண்டியர் பொருத்தம் இல்லிகள்
நீதிகள் சொல்லியும் நினைய கிற்கிலார்
வேதியர் பரவுவெண் காடு மேவிய
ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே.

தெளிவுரை: சாக்கியரும் சமணரும் பொருத்தம் இல்லாதவாறாய், நன்னெறிகளை ஏற்றுத் தொழாதவர் ஆயினர். வேத வித்தகர்கள் பரவித் தொழும் வெண்காட்டில் வீற்றிருக்கும் ஆதிநாயகனாகிய ஈசனது திருவடியை அன்றி, தொழுது போற்றுவதற்கு வேறு எப்பொருளும் இல்லை.

164. நல்லவர் புகலியுள் ஞான சம்பந்தன்
செல்வன்எம் சிவனுறை திருவெண் காட்டின்மேல்

Koviloor Digital Library

சொல்லிய அருந்தமிழ் பத்தும் வல்லவர்
அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நல்வினையின் பயனால் வாய்த்துப் புண்ணிய மாந்தர்கள் விளங்குகின்ற புகலியுள் மேவும் ஞானசம்பந்தன், சிவபெருமானாகிய எமது செல்வன் உறையும் திருவெண்காட்டின் மீது சொல்லிய, அரிய தமிழாகிய இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், அல்லல் அற்றவராயும் வினை நீங்கப் பெற்றவராயும் விளங்குவார்கள். இது ஆணை ஆயிற்று.*

சிறப்புரை: *ஈசனைச் "செல்வன்" என ஓதப்பெறும் சிறப்பினை நோக்குக. இத்தன்மையில், "செம்மையே ஆய சிவபதம் அளித்த செல்வமே சிவபெருமானே" என மாணிக்கவாசகரும் (திருவாசகம், பாடல் எண் 536), "திருவும் மெய்ப்பொருளும் செல்வமும் எனக்குன் சீருடைக் கழல்கள்" (வட திருமுல்லை வாயில் பதிகம், பாடல் 1) என நம்பியாரூரரும் அருளிச் செய்த பாங்கினைக் காண்க.*

இப்பிறவியில் நுகரும் பிராரத்த வினையானது "அல்லல்" எனவும், ஏனைய சஞ்சிதம் மற்றும் இப்பிறவியில் ஈட்டும் ஆகாமியம் என்பன "அருவினை" எனவும் உரைக்கப் பெற்றது. இவை யாவும் நீங்கும் என்னும் ஆணையானது இவண் வழங்கப் பெற்றது.

274. திருக்கொள்ளிக்காடு

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல், இது 115ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல்*

Koviloor Digital Library

பெற்றது. கள்ளிக் காடு என வழங்கப்படுகிறது. அக்கினி பகவான் பூசித்தது.

சுவாமி : அக்கினீஸ்வரர்

அம்பிகை : மிருது பாத நாயகி, பஞ்சின் மெல்லடியம்மை

தல மரம் : வன்னி

தீர்த்தம் : தீர்த்தக்குளம்

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

165. நிணம்படு சுடலையி னீறு பூசிநின்று
இணங்குவர் பேய்களோடு இடுவர் மாடம்
உணங்கல் வெண்டலைதனில் உண்பர் ஆயினும்
குணம்பெரி துடையர்நம் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: பிணங்களை எரிக்கும் சுடுகாட்டின் சாம்பலைப் பூசிப் பேய்க் கூட்டத்தோடு நின்று ஆடுகின்ற ஈசன், காய்ந்த மண்டை ஓட்டினைக் கையில் ஏந்திப் பலி ஏற்று உண்பவர். ஆயினும் அப்பெருமான், பெருங்குணத்துடன் உடையவராய்க் கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: ஈசன் சுடலையில் வீற்றிருப்பவர் எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையினைக் "கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை, தாயுமிலி தந்தையிலி தான் தனியன் காணேடி" என மாணிக்க வாசகர் அருளிச் செய்தவாறும் (திருவாசகம் 257) காண்க.

உணங்கல் வெண்டலை – பிரம கபாலம்.

166. ஆற்றல்நல் லடியிணை அலர்கொண்டு ஏத்துவான்
சாற்றிய அந்தணன் தகுதி கண்டநாள்

Koviloor Digital Library

மாற்றல னாகிமுன் னடர்த்து வந்தணை
கூற்றினை யுதைத்தனர் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: நலம் செய்யும் ஈசனின் திருவடிக் கமலத்தை மலர் தூவிப் போற்றி வழிபட்ட மார்க்கண்டேயரை நெருங்கிய கூற்றுவனை, அடர்த்து உதைத்தருளிய ஈசன், கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: ஈசனிடம் அடைக்கலம் புகுந்த மார்க்கண்டேயரின் பெருமையை ஓராது, சினந்து வந்த காலனின் செயல், அவனை அடர்த்து வதைப் பதற்குக் காரணமாயிற்று என்னும் மெய்ம்மையை உணர்த்துமாறு, "மாற்றலனாகி முன் அடர்த்து" என சுட்டப் பெற்றது.

அந்தணன் – மார்க்கண்டேயர்.

167. அத்தகு வானவர்க் காக மால்விடம்
வைத்தவர் மணிபுரை கண்டத் தின்னுளே
மத்தமும் வன்னியும் மலிந்த சென்னிமேல்
கொத்தலர் கொன்றையர் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: எக்காலத்திலும் குறைவின்றி வழிபடும் தேவர்களின் நலன்களைக் காப்பதற்காகப் பெரிய தாகத் திரண்டு எழுந்த விடத்தைக் கண்டத்தில் தேக்கி வைத்து நீலகண்டனாய் விளங்கிய ஈசன், ஊமத்தம் பூவும் வன்னியும் மலிந்து மேவும் சடைமுடியில், கொத்தாகக் கொன்றை மலர் சூடியவர். அவர் கொள்ளிக் காட்டில் வீற்றிருப்பவராவர்.

மால் – விடத்தின் அளவு பெரியதெனச் சுட்டிற்று.

168. பாவண மேவுசொல் மாலை யிற்பல
நாவணங் கொள்கையின் நவின்ற செய்கையர்

Koviloor Digital Library

ஆவணங் கொண்டெமை யாள்வ ராயினும்
கோவணங் கொள்கையர் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: *பலவாறாகிய சந்தங்களையுடைய பாடல்களின் வண்ணம் மேவும் தமிழ் மாலையால், சொல் வண்ணம் திகழும் கொள்கையில் நவிலுமாறு செய்தவர் ஈசன். அப்பெருமான், எல்லா வகையாலும் ஆகின்ற வண்ணத்தில் எம்மை ஆள்கின்றவர். அவர், கோவண ஆடை உடையவராய்க் கொள்ளிக்காட்டில் வீற்றிருக்கும் பெருமானே.*

சிறப்புரை: *ஈசன், ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஞானப்பால் தந்தருளி ஆட்கொண்ட நிலையின் விளக்கமாக "ஆவணம் கொண்டு எமை ஆள்வர்" என உணர்த்தப் பெற்றது. இது, எவ்வகையான தன்மையிலும் ஆகும் வண்ணம் ஆட்கொள்ளப் பெற்ற சிறப்பினைச் சுட்டிற்று. சுந்தரமூர்த்தி சுவாமிகளை ஆட்கொண்ட வண்ணமும் (ஆவணம் - ஓலை) இத்தன்மையில் பொருத்திக் காண்க. இது, ஈசனின் அருள் ஆகும் வண்ணம் ஆகும். பாலைக் காட்டித் திருஞானசம்பந்தப் பெருமானையும், சூலையைக் காட்டித் திருநாவுக்கரசரையும், ஓலையைக் காட்டிச் சுந்தரமூர்த்தி சுவாமிகளையும் ஆவணம் கொண்டு ஆளும் ஈசனின் அருட்பொலிவை உய்த்துணர்க.*

ஆவணம் – ஆகும் வண்ணம்.

169. வாரணி வனமுலை மங்கை யாளொடும்
சீரணி திருவுருத் திகழ்ந்த சென்னியர்
நாரணி சிலைதனால் நணுக லார்எயில்
கூர்எரி கொளுவினர் கொள்ளிக் காடரே.

Koviloor Digital Library

தெளிவுரை: உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு சிறப்பான அழகிய திருவடிவத்தோடு திகழும் ஈசன், பெருமை மிக்க மேருமலையை வில்லாகக் கொண்டு, பகைவர்களாகிய முப்புர அவுணர்கள் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அவர் கொள்ளிக் காட்டில் வீற்றிருப்பவரே.

170. பஞ்சுதோய் மெல்லடிப் பாவை யாளொடும்
மஞ்சுதோய் கயிலையுள் மகிழ்வர் நாள்தொறும்
வெஞ்சின மருப்பொடு விரைய வந்தடை
குஞ்சரம் உரித்தனர் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: பஞ்சு போன்ற மென்மையான அடியை உடைய அம்பிகையை உடனாகக் கொண்டு, மேகங்கள் தோயும் கயிலை மலையின்கண் மகிழ்ந்து, நாள்தொறும் அருள் பாலிக்கும் ஈசன், வெஞ்சினத் துடன் வந்த யானையின் தோலை உரித்தவர். அப்பெருமான், கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: இத் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமம் இத் திருப்பாட்டில் சுட்டப் பெற்றுள்ளதைக் காண்க.

171. இறையுறு வரிவளை இசைகள் பாடிட
அறையுறு கழலடி ஆர்க்க ஆடுவர்
சிறையுறு விரிபுனல் சென்னி யின்மிசைக்
குறையுறு மதியினர் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: திருக்கரத்தில் விளங்குகின்ற அழகிய வளையல்களையுடைய உமாதேவியார் இசை பாட தமது வீரக்கழல்கள் ஒலிக்கத் திருநடம் புரிபவர், ஈசன். அவர், கங்கையைத் தடுத்துச் சடையில் வைத்துப்

Koviloor Digital Library

பிறைச் சந்திரனையும் உடன்கொண்டு கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவர்.

172. எடுத்தனன் கயிலையை இயல் வலியினால்
அடர்த்தனர் திருவிர லால் அலறிடப்
படுத்தனர் என்றவன் பாடல் பாடலும்
கொடுத்தனர் கொற்றவாள் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: தனது வர பலத்தின் வலிமையினால் கயிலை மலையை எடுத்த இராவணனைத் திருப்பாத விரலால் அடர்த்து நலியுறச் செய்தவர், ஈசன். அத் துன்பத்தைத் தாங்க முடியாத அவ்வரக்கன், அலறிச் சாமவேதத்தை இசைத்துப் பாட, இரங்கி அருள் புரிந்த அப்பெருமான், வீரம் மிக்க வாட்படையை அருளிச் செய்தவர். அவர் கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவரே.

173. தேடினார் அயன்முடி மாலும் சேவடி
நாடினார் அவரென்று நணுக கிற்றிலர்
பாடினார் பரிவொடு பத்தர் சித்தமும்
கூடினார்க்கு அருள்செய்வர் கொள்ளிக் காடரே.

தெளிவுரை: பிரமன், திருமுடியினையும்; திருமால், திருவடியையும் தேடிய காலத்தில், நண்ண முடியாத வாறு விளங்கியவர் ஈசன். அவர், பரிவுடன் விளக்கும் பக்தர் சித்தத்தில் வீற்றிருந்து அருள் புரியும் கொள்ளிக்காடு என்னும் தலத்தில் வீற்றிருப்பவரே.

174. நாடிநின்று அறிவில் நாணிலிகள் சாக்கியர்
ஓடிமுன் னோதிய உரைகள் மெய்யல
பாடுவர் நான்மறை பயின்ற மாதொடும்
கூடுவர் திருவுருக் கொள்ளிக் காடரே.

Koviloor Digital Library

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் முனைந்து சொல்லும் உரைகள் யாவும் பொய்யுரைகளாகும். அவற்றை மெய்யென்று கருத வேண்டாம். நான்கு மறைகளை விரித்து ஓதியவரும், அத்தகு மறைகளில் வல்லவராகிய உமாதேவியோடு உடனாகத் திகழ்பவரும் ஆகிய பெருமான் கொள்ளிக்காட்டில் வீற்றிருக்கின்ற இறைவன் ஆவர். அவரை வணங்கி ஏத்துமின்.

திருவுரு – ஈசன்

175. நற்றவர் காழியுள் ஞான சம்பந்தன்
குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடரைச்
சொற்றமிழ் இன்னிசை மாலை சோர்வின்றிக்
கற்றவர் கழலடி காண வல்லரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நற்றவத்தை மேவி விளங்கும் காழியுள் திகழும் ஞானசம்பந்தன், குற்றம் அற்ற பெரும்புகழ் மேவும் கொள்ளிக்காட்டில் வீற்றிருக்கும் ஈசனை, இனிய தமிழால் போற்றிப் பாடிய இத்திருப்பதிகத்தை நன்கு கற்று ஓதுபவர்கள், அப்பரமனின் திருவடி நலன் காணும் வல்லமையைப் பெறுவார்கள்.

சிறப்புரை: ஈசனை அன்றி மற்றவர் அடையும் புகழ் குற்றம் உடையது என்று குறிப்பால் சுட்டப் பெற்றது. இத் திருப்பதிகத்தை மனம் விரும்பிப் பயிலுதல் வேண்டும் என்னும் அறவுரை "சோர்வின்றிக் கற்றவர்" என்னும் தொடரால் உணர்த்தப்படுதல் காண்க.

குற்றமில் புகழ் – பொருள் சேர் புகழ்

Koviloor Digital Library

275. திருவிசயமங்கை

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலம் 63இல், இது 47ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. ஒரு காலத்தில் ஊர் கோவந்த புத்தூர் எனவும் கோயில் விசய மங்கை எனவும் வழங்கப் பெற்றது. தற்போது திருவிஜய மங்கை என வழங்கப் பெறுகிறது. விசயன் (அர்ச்சுனன்) பூசித்துப் பேறு பெற்ற தலம். கோ பூசித்த தலம்.*

சுவாமி : *விசயநதேஸ்வரர்*

அம்பிகை : *மங்கள நாயகி, மங்கை நாயகி*

தீர்த்தம் : *அர்ச்சுன தீர்த்தம்*

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

176. **மருவமர் குழலுமை பங்கர் வார்சடை**
அரவமர் கொள்கையெம் அடிகள் கோயிலாம்
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள்
விரவிய பொழிலணி விசய மங்கையே.

தெளிவுரை: *நறுமணம் கமழும் கூந்தலை உடைய உமையவள் பங்கராய், நீண்ட சடையின்கண் அரவம் அணிந்த எமது ஈசனின் கோயில் என்பது, குரவம், சுரபுன்னை, கோங்கு, வேங்கை ஆகிய மரங்கள் கலந்து விளங்கும் பொழில் திகழும் விசய மங்கை ஆகும்.*

மரு – நறுமணம்.

177. **கீதமுன் னிசைதரக் கிளரும் வீணையர்**
பூதமுன் னியல்புடைப் புனிதர் பொன்னகர்

Koviloor Digital Library

கோதனம் வழிபடக் குலவு நான்மறை
வேதியர் தொழுதெழு விசய மங்கையே.

தெளிவுரை: *கீதத்தின் வாயிலாக எழும்பும் இசையில் விழைந்து வீணை வாசிப்பவர், ஈசன். அப்பெருமான் பூதகணங்கள் புடை சூழ விளங்கும் புனிதர் ஆவர். அப் பெருமானின் பொன்னகர் என்பது பசுவானது வழிபட்டு விளங்கவும், நான்மறை வல்ல வேதியர் தொழுது போற்றத் திகழும் விசய மங்கையே.*

சிறப்புரை: *பசு, பூசித்துப் பேறு பெற்ற இத்திருத்தலத்தின் சிறப்பானது இவண் சுட்டப் பெற்றது. ஈசன் வீணை வாசித்த வரலாறும் சுட்டப் பெற்றது.*

178. அக்கர வரையினர் அரிவை பாகமாத்
தொக்கநல் விடையுடைச் சோதி தொன்னகர்
தக்கநல் வானவர் தலைவர் நாள்தொறும்
மிக்கவர் தொழுதெழு விசய மங்கையே.

தெளிவுரை: *உருத்திராக்கமும் அரவமும் அரையில் கட்டி மேவும் ஈசன், உமாதேவியை ஒரு பாகமாகவும், இடபத்தை வாகனமாகவும் உடைய சோதியாவர். அவர் வீற்றிருக்கும் தொன்மையான நகராவது, வானவர்தம் தலைவராகிய இந்திரனும் மற்றும் பிரமன் திருமால் ஆகியோரும் நாள்தொறும் தொழுது போற்று கின்ற விசய மங்கையாகும்.*

அக்கு – உருத்திராக்கம்.

179. தொடைமலி இதழியும் துன்னெ ருக்கொடு
புடைமலி சடைமுடி யடிகள் பொன்னகர்
படைமலி மழுவினர் பைங்கண் மூரிவெள்
விடைமலி கொடியணல் விசய மங்கையே.

Koviloor Digital Library

தெளிவுரை: கொன்றை மலர் மாலையும், நெருக்கமாகக் கட்டிய எருக்க மாலையும் திகழத் தரித்த சடை முடியுடைய ஈசனின் பொன்னகராவது, மழுப்படை ஏந்திய கையும், இடபக் கொடியும் விளங்கும் ஈசனின் விசய மங்கையே.

இதழி – கொன்ற மலர்

180. **தோடமர் காதினன் துதைந்த நீற்றினன்**
ஏடமர் கோதையோடு இனிது அமர்விடம்
காடமர் மாகரி கதறப் போர்த்ததோர்
வேடம துடையணல் விசய மங்கையே.

தெளிவுரை: ஈசன், தோடு அமர்ந்த காது உடையவர்; நன்கு குழையத் திருவெண்ணீறு பூசியவர்; மலர் போன்ற கூந்தலையுடைய உமாதேவியோடு இனிது வீற்றிருப்பவர். அப்பெருமானுடைய இடமாவது கானகத்தில் விளங்கிய பெரிய யானையானது கதறுமாறு, அதன் தோலை உரித்துப் போர்த்துத் திகழும் அண்ணலின் விசய மங்கையாகும்.

சிறப்புரை: ஈசன் அணிந்துள்ள "தோடு" என்னும் அணிகலனின் சிறப்புத் தோன்ற இத்திருப்பாட்டு அருளிச் செய்யப்பட்டுள்ளது. "தோடுடைய செவியன்" என முதற்பாட்டில் *(1-1-1)* அருளிச் செய்துள்ள தொடரினை, ஈண்டு ஒப்பு நோக்குதற்கு உரியது. இத்திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள அம்பிகையின் திருநாமமாகிய மங்கை நாயகி என்னும் குறிப்பு (கோதை - பெண். மங்கை) இத்திருப்பாட்டில் குறிப்பால் உணர்த்தப் பெறுதல் காண்க.

ஏடமர் – மலரிதழ்; அணல் – அண்ணல் – ஈசன்.

Koviloor Digital Library

181. மைப்புரை கண்ணுமை பங்கன் வண்தழல்
ஒப்புரை மேனியெம் முடைய வன்நகர்
அப்பொடு மலர்கொடு அங்கு இறைஞ்சி வானவர்
மெய்ப்பட அருள்புரி விசய மங்கையே.

தெளிவுரை: *கரிய மை போன்ற கண்ணுடைய உமாதேவியை ஒரு பங்காகக் கொண்டு திகழும் ஈசன், தழலை ஒத்த நன்மை தரும் செம்மேனியராய் எம்மை உடையவர். அப் பெருமானின் நகரானது, நீரும், மலரும் கொண்டு பூசித்துப் பக்தியுடன் வானவர்கள் இறைஞ்சிப் போற்றி வழிபட, மெய்ம்மையுறுமாறு அருள் புரியும் விசய மங்கையாகும்.*

சிறப்புரை: *ஈசனின் திருமேனிச் சிறப்பானது வண்மை யுடைய தழலுக்கு உவமையாகக் கூறப் பெற்றது. இது, அப் பெருமானை நினைக்குந்தோறும் அமுதாகி விளைவதும், காணுந்தோறும் அருட் பெருஞ் சோதியாகத் திகழுவதும் உணர்த்துதலாம். இதனைச் "சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனைக் கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை" (திருவாசகம் 221) என மாணிக்கவாசகர் உரைத்து அருளியவாறும் நோக்குக.*

தாம், ஈசனுக்கு முழுமையாக ஆட்கொள்ளப் பெற்ற செம்மையை, ஆளுடைய பிள்ளையாராகிய பாலறாவாயர், "எம் உடையாய்" என விளித்து அருளிச் செய்துள்ளார். இத்தன்மையில், "உடைய நாதனே போற்றி, நின்னலாற் பற்று மற்று எனக்கு ஆவது ஒன்று இனி உடையனோ" என வரும் திருவாசகமும் (பாடல் 101) காண்க.

வானவர்கள், நீரும் மலரும் கொண்டு ஈசனைப் பூசித்துப் பேறு பெறும் இத் திருத்தலச் சிறப்பினை உணர்த்தி அருளிய பாங்கினையும் நோக்குக.

Koviloor Digital Library

182. இரும்பொனின் மலைவில் லின்எரி சரத்தினால்
வரும்புரங் களைப்பொடி செய்த மைந்தனூர்
சுரும்பமர் கொன்றையும் தூய மத்தமும்
விரும்பிய சடையண்ணல் விசய மங்கையே.

தெளிவுரை: *மிகப் பெரிய பொன்மலையாகிய மேருவை வில்லாகக் கொண்டு, அக்கினியை அம்பாக்கித் தொடுத்து, முப்புரங்ளைச் சாம்பலாகுமாறு செய்த ஈசனின் ஊரானது, கொன்றை மலரும் தூய்மையான ஊமத்தம் பூவும் விரும்பிச் சடை முடியின்கண் அணிந்த அண்ணலின் விசய மங்கையாகும்.*

சிறப்புரை: இத் திருத்தலத்தின் சிறப்பினை, "மைந்தன் ஊர்" எனவும், "அண்ணலின் விசய மங்கை" எனவும் ஈசனின் இன்னருளின் மாண்பினைச் சுட்டுமாறு உரைத்தருளும் நன்னயத்தினை நனி நோக்குக.

இரும்பொனின் மலை – மேரு மலை; எரிசரம் – அக்கினியைச் சரமாகத் தொடுத்தலும், எரிந்து சாம்பிலாகுமாறு செய்யும் நெருப்பினையும் உணர்த்தியது.

183. உளங்கைய இருபதோடு ஒருபதும் கொடுஆங்கு
அளந்தரும் வரையெடுத் திடும் அரக்கனைத்
தளர்ந்துடன் நெரிதர அடர்த்த தன்மையன்
விளங்கிழை யொடும்புகும் விசய மங்கையே.

தெளிவுரை: தனது பாதையின் குறுக்கே தடை செய்வதாக உள்ளத்தில் வெறுப்புத் தோன்ற, இருபது தோளும் பத்துத் தலையும் கொண்டு அளப்பதற்கு அரியதாகிய கயிலை மலையை எடுத்த இராவணனைத் தளர்ச்சியுற்று நலியுமாறு, அக்கணமே நெரியும் தன்மையில் அடர்த்த தன்மையுடைய ஈசன், உமாதேவியோடு இனிது மேவுவது விசய மங்கை ஆகும்.

Koviloor Digital Library

உளங்கைய – உள்ளம் கைத்து. உள்ளமானது வெறுப்புத் தோன்ற கசந்து.

184. மண்ணினை யுண்டவன் மலரின் மேலுறை
அண்ணல்கள் தமக்குஅளப் பரிய அத்தனூர்
தண்ணறுஞ் சாந்தமும் பூவும் நீர்கொடு
விண்ணவர் தொழுதெழு விசய மங்கையே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் ஆகிய அண்ணல் களால் அளப்பதற்கு அரியவனாகிய ஈசனின் ஊரானது, குளிர்ச்சி பொருந்திய நறுமணம் கமழும் சந்தனம் கொண்டும், பூக்கள் கொண்டும், நீர் கொண்டும் தேவர் கள் பூசித்துத் தொழுது போற்றும் விசய மங்கையாகும்.

185. கஞ்சியுங் கவளமுண் கவணர் கட்டுரை
நஞ்சினுங் கொடியன நமர்கள் தேர்கிலார்
செஞ்சடை முடியுடைத் தேவன் நன்னகர்
விஞ்சையர் தொழுதெழு விசய மங்கையே.

தெளிவுரை: கஞ்சியாகவும் கவளமாகவும் தமது உணவை வகுத்துக் கொண்டு ஒழுகுகின்ற புறச் சமயத்தார் உரைக்கும் கருத்துக்கள், நஞ்சினும் கொடியனவாகும். அதனை நம்மவர்கள் ஏற்றுக் கொள்ளாதவர் ஆவார்கள். சிவந்த சடைமுடியுடைய தேவன் வீற்றிருக்கும் நன்னகராகிய வித்தியாதரர்கள் போற்றித் தொழுகின்ற விசய மங்கையை ஏத்துமின்! அது அமிர்தத்தை ஒப்பாகும் என்பது குறிப்பு.

விஞ்சையர் – வித்தியாதரர். புலவர்.
அறிவுடைய பெருமக்கள் என்பதும் சுட்டும்.

186. விண்ணவர் தொழுதெழு விசய மங்கையை
நண்ணிய புகலியுள் ஞான சம்பந்தன்

Koviloor Digital Library

பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர்
புண்ணியர் சிவகதி புகுதல் திண்ணமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: விண்ணவர்கள் தொழுது போற்றும் விசய மங்கையை நண்ணிய, புகலி நகர் மேவும் ஞான சம்பந்தன் பாடிய செந்தமிழ் மாலையாகிய இத் திருப் பதிகத்தை ஓத வல்லவர்கள், புண்ணியர்கள் ஆவர். அத்தகையோர் சிவகதியை அடைவது உறுதியாகும்.

276. வைகல் மாடக் கோயில்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல், 33ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. ஊர் - வைகல்; கோயில் - மாடக் கோயில், கோச்செங்கட் சோழனால் கட்டப் பெற்றது. இவ்வூரில் மூன்று கோயில்கள் உள்ளன.

1. விஸ்வநாதர் திருக்கோயில் - திருமால் வழிபட்டது.
2. பிரமபுரீஸ்வரர் திருக்கோயில் - பிரமன் வழிபட்டது
3. வைகல் மாடக் கோயில் - ஞானசம்பந்தர் பாடல் பெற்றது - இலட்சுமி வழிபட்டது.

சுவாமி : வைகல் நாதர், சண்பகாரண்யேஸ்வரர்

அம்பிகை : கொம்பியல் கோதை, வைகலாம்பிகை

தல மரம் : சண்பகம்

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

187. துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை எந்தை யாரிடம்

Koviloor Digital Library

உளமதி யுடையவர் வைகல் ஓங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே.

தெளிவுரை: ஈசன், துள்ளிக் குதிக்கும் இயல்பான தன்மையுடைய மான் கன்றைத் திருக்கரத்தில் ஏந்தி உள்ளவர்; இளமையான பிறைச் சந்திரனைச் சடை முடியில் அணிந்தவர். எம் தந்தையாகிய அப்பெருமான் வீற்றிருக்கும் இடமாவது, சிவஞானம் கொண்டு விளங்கும் பெருமக்கள் திகழும் வைகல் என்னும் ஊரில், வளம் நிறைந்த மதியொளி மேவும் மாடக் கோயில் ஆகும்.

188. மெய்யக மிளிரும்வெண் ணூலர் வேதியர்
மையகண் மலைமக ளோடும் வைகிடம்
வையக மகிழ்தர வைகல் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே.

தெளிவுரை: ஈசன், திருமேனியில் முப்புரி நூல் கொண்டு விளங்குபவர்; வேதம் விரித்து ஓதுபவர்; உமாதேவிஸ்ய உடனாகக் கொண்டு திகழ்பவர். அப்பெருமான் வீற்றிருக்கும் இடமாவது, இப் பூவுலகத்தில் மகிழ்ச்சி அடையுமாறு, வைகல் என்னும் ஊரின் மேற்றிசையில், சிவந்த கண்ணுடைய வளவன் எனப்பெறும் கோச் செங்கட் சோழனால் கட்டப் பெற்ற மாடக் கோயிலாகும்.

சிறப்புரை: கோச்செங்கட் சோழன் அறுபத்து மூவருள் ஒருவராய் விளங்கிய செம்மையை, "தென்னவனாய் உலகாண்ட செங்கணனார்க் கடியேன்" எனத் திருத்தொண்டத் தொகையும்; முற்பிறவியில் சிலந்தியாய் இருந்து சிவப் பணி ஆற்றிய தன்மை யினை,

Koviloor Digital Library

தெருண்ட வாயிடை நூல்கொண்டு சிலந்தி
சித்திரப்பந்தர் சிக்கன இயற்றச்
சுருண்ட செஞ்சடை யாய்அது தன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சி கண்டு

— திருவாவடுதுறைப் பதிகம், பாட்டு 2

எனவும் அருளிச் செய்த சுந்தரர்தம் தேவாரம் காண்க. சிலந்தியாகிச் சிவப்பணியாற்ற, அது தொடரும் வகையில் கோச்செங்கட் சோழனாக்கிச் சைவப் பணியைத் தொடர்ச்சி கொள்ளுமாறு புரிந்த அருள் தன்மை இவண் சுட்டப் பெற்றது. இதனைச் சேக்கிழார் பெருமான்,

மந்திரிகள் தமைஏவி வள்ளல்கொடை அனபாயன்
முந்தைவருங் குலமுதலோர் ஆயமுதற் செங்கணார்
அந்தமில்சீர்ச் சோணாட்டில் அகனாடு தொறுமணியார்
சந்திரசே கரன்அமருந் தானங்கள் பல சமைத்தார்.

— கோச்செங்கட் சோழனார் புராணம், பாடல் 14

என அருளிச் செய்தமை காண்க.

இத் திருக்கோயிலானது இவ்வையகம் மகிழ்ந்து பேரின்ப நிலை கொள்ளும் தன்மையில் கட்டப் பெற்றது என்பது "வையக மகிழ்தர... செய்த கோயிலே" என உணர்த்தப் பெறுவதாயிற்று.

189. கணியணி மலர்கொடு காலை மாலையும்
பணியணி பவர்க்கருள் செய்த பான்மையர்
தணியணி உமையொடு தாமும் தங்கிடம்
மணியணி கிளர்வைகல் மாடக் கோயிலே.

தெளிவுரை: கண்களுக்கு அழகிய மலர்கள் தூவிக் காலையும் மாலையும் பணிபவர்களுக்கு அருள் செய்யும் சிவபெருமான், கருணை வயத்தவராகிய

Koviloor Digital Library

உமாதேவியோடு வீற்றிருக்கும் இடமாவது, நவமணிகள் முதலான சிறப்புகளுடன் திகழும் வைகல் மாடக் கோயில் ஆகும்.

சிறப்புரை: இவ்வுலகம் மகிழ்வதற்காகச் செய்யப் பெற்ற கோயில் என முந்தைய திருப்பாட்டில் அருளிச் செய்த தன்மையில், காலையும் மாலையும் மலர் தூவிப் பணிபவர்கள் அருள் பெற்ற பாங்கினை இத் திருப்பாட்டு உணர்த்துவதாயிற்று. ஈசனைத் தொழுது போற்றுதல் வேண்டும் என்னும் கருத்தினை உணர்த்துமாறு, "காலையிலும், மாலையிலும் கடவுள் அடிபணிந்து கசிந்த மனத்தவர் பயிலும் கலயநல்லூர் காணே" (திருக்கலய நல்லூர் பதிகம், பாட்டு 8) என அருளிச் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் வாக்கும் நோக்குக.

கணி அணிமலர் – நெருக்கமான மலர், மருத நிலத்து மலர்.
கணி – வேங்கை மரம்.

190. கொம்பியல் கோதைமுன் அஞ்சக் குஞ்சரத்
தும்பியது உரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகல் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே.

தெளிவுரை: உமாதேவி அஞ்சுமாறு யானையின் தோலை உரித்துப் போர்த்தி வீரத்தைப் புரிந்த ஈசன் வீற்றிருக்கும் இடமாவது, நறுமணம் கமழும் சோலை சூழ்ந்த வைகலில் மேற்புரத்தில், கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில் ஆகும்.

கொம்பியல் கோதை – இத் திருத்தலத்தின் அம்பிகையின் திருநாமம்.
தங்கிடம் – தங்கும் இடம்.

Koviloor Digital Library

191. விடமடை மிடற்றினர் வேத நாவினர்
மடமொழி மலைமக ளோடும் வைகிடம்
மடவனம் நடைபயில் வைகல் மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக் கோயிலே.

தெளிவுரை: *பாற்கடலில் தோன்றிய விடத்தைக் கழுத்தில் தேக்கி வைத்து விளங்கும் நீலகண்டத்தை உடைய ஈசன், வேதத்தை விரித்து ஓதும் நாவினர். அப் பெருமான், உமாதேவியாரோடு வீற்றிருக்கும் இடமாவது, அன்னம் நடை பயிலும் வைகல் என்னும் நகரின் மேற்புரத்தில் நிலவும் மாடக் கோயில் ஆகும்.*

192. நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவர் உறைவிடம் இலங்கு மூவெரி
மறையொடு வளர்வுசெய் வாணர் வைகலில்
திறையுடை நிறைசெல்வன் செய்த கோயிலே.

தெளிவுரை: *நிறைந்த புனிதம் மிக்க புனலாகிய கங்கையும், பிறைச் சந்திரனும் நீண்ட சடை தரித்த இறைவன் மூன்று வகையாக ஓம்பும் தீயிலும் வேதத்திலும் மேவி விளங்குபவர். அப் பெருமான், திறைப்பொருள் ஈட்டிய நிறை செல்வனாகிய கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயிலில் வீற்றிருப்பவர்.*

193. எரிசரம் வரிசிலை வளைய ஏவிமுன்
திரிபுரம் எரிசெய்த செல்வர் சேர்விடம்
வரிவளை யவர்பயில் வைகல் மேற்றிசை
வருமுகில் அணவிய மாடக் கோயிலே.

தெளிவுரை: *அக்கினியைச் சரமாகக் கொண்டு மேரு மலையை வில்லாக வளைத்துத் தொடுத்துத் திரிபுரங்களை எரியுண்ணுமாறு செய்த செல்வராகிய ஈசன் உறையும் இடமாவது, வரிவளையல்கள் அணிந்த*

Koviloor Digital Library

மகளிர் பயிலும் வைகலின் மேற்புரத்தில் விளங்கும் மாடக் கோயில் ஆகும்.

194. மலையன இருபது தோளி னான்வலி
தொலைவுசெய்து அருள்செய்த சோதி யார்இடம்
மலர்மலி பொழிலணி வைகல் வாழ்வர்கள்
வலம்வரு மலையன மாடக் கோயிலே.

தெளிவுரை: மலை போன்ற இருபது தோள் உடைய இராவணனுடைய வலிமையை அழித்துப் பின்னர் அவன் வேதத்தின் வாயிலாகப் போற்றி ஏத்த, அருள் செய்யும் சோதியாகிய ஈசனின் இடமாவது, மலர்ப் பொழில் அணியுடன் விளங்கும் வைகலில் வாழ்கின்றவர்கள், வலம் வரும் மலை போன்ற மாடக் கோயிலாகும்.

195. மாலவன் மலரவன் நேடி மால்கொள
மாலெரி யாகிய வரதர் வைகிடம்
மாலைகொ டணிமறை வாணர் வைகலில்
மாலன மணியணி மாடக் கோயிலே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் தேடியும் காணாது மயக்கம் கொள்ள, பெருமை மிக்க நெருப்பு மலை யாகிய, வரம் நல்கும் வள்ளலாகிய ஈசன் வீற்றிருக்கும் இடமாவது, மாலை கொண்டு அணிந்து வேத விற்பன்னர்கள் வாழும் வைகலில் பெருமை மிக்க மணிகளை அணியாகக் கொண்டு மேவும் மாடக் கோயில் ஆகும்.

சிறப்புரை: இத் திருப்பாட்டில் பன்முறை மால் என்னும் சொல் வெவ்வேறு பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ள சிறப்பினைக் காண்க. வரங்களை நல்கும் ஈசனை "வரதர்" எனப் போற்றப்படுவதாயிற்று. இந்நெறியில்,

Koviloor Digital Library

திருப்பாச்சில் ஆச்சிராமம் என்னும் தலத்தில் வீற்றருளும் ஈசனின் திருப்பெயர் "மாற்றறி வரதர்" எனவும், திருக்கச்சூர் ஆலக் கோயிலில் மேவும் ஈசனின் திருநாமம் "விருந்திட்ட வரதர்" எனவும் வழங்கப் பெறுதல் காண்க. "வரதா முருகா மயில் வாகனனே" என வரும் கந்தர் அனுபூதியும் காண்க. (பதிகம் எண் 288) "அரதைப் பெரும்பாழி" என்னும் தலத்தின் ஈசன் திருநாமம் பாதாள வரதர் என வழங்கப் பெறலும் காண்க.

196. கடுவுடை வாயினர் கஞ்சி வாயினர்
பிடகுரை பேணிலார் பேணு கோயிலாம்
மடமுடை யவர்பயில் வைகல் மாநகர்
வடமலை யனையநன் மாடக் கோயிலே.

தெளிவுரை: *சமணரும் சாக்கியரும் போற்றும் பிடக நூலைப் பேணாதவர்களாகிய சிவனடியார்கள் போற்றுகின்ற கோயிலாவது, அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு என்னும் நான்கு நற்பண்புகள் நிறைந்த மகளிர் பயிலும் மாநகராகிய வைகலில் மேரு மலையனைய சிறப்புடைய நன்மாடக் கோயில் ஆகும்.*

மடம் – மகளிரின் நற்பண்புகளில் ஒன்று; வழிபடுவோர் சங்கம். வடமலை – மேருமலை.

197. மைந்தனது இடம்வைகல் மாடக் கோயிலைச்
சந்தமர் பொழில்அணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *ஈசனது இடமாகிய வைகல் மாடக் கோயிலைச் சந்தன மரங்கள் கொண்ட பொழில்*

Koviloor Digital Library

விளங்கும் சண்பை நகரின் ஞானசம்பந்தன் நவின்ற தமிழ் வழங்கும் இத்திருப்பதிகத்தைச் சிந்தையில் கொள்பவர்கள், சிவலோகம் சேர்வார்கள்.

சிறப்புரை: இத் திருப்பாட்டு ஈசனின் அருள் வயத்தால் நவிலப்படுவதால் ஞானசம்பந்தன தமிழ் கெழுபாடல் என ஓதப் பெற்றது.

ஈசன்பால் சாரும் பதவிகள் சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சம் என்னும் நான்கனுள், இத் திருப்பதிகமானது சாலோகத்தை அருளிச் செய்யும் பேறுடையது என உணர்த்தப் பெற்றது.

சேர்தல் – பொருந்தி இருத்தல்.

277. திருஅம்பர் பெருந்திருக்கோயில்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல், இது 54 ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. அம்பர் என வழங்கப்படுகிறது (அம்பர் மாகாளம் என்பது வேறு. இதுவும் பாடல் பெற்ற தலம். பதிகம் எண் 93 காண்க). பிரமன் பூசித்த திருத்தலம். சோமாசி மாறநாயனார் வசித்த பதி. கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில்.

சுவாமி : பிரமபுரீஸ்வரர்

அம்பிகை : பூங்குழல் நாயகி, சுகந்தகுந்தளாம்பிகை

தல மரம் : புன்னை

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : காந்தார பஞ்சமம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

198. எரிதர அனல்கையில் ஏந்தி எல்லியில்
நரிதிரி கானிடை நட்டம் ஆடுவர்
அரிசிலம் பொருபுனல் அம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே.

தெளிவுரை: *ஈசன், எரிகின்ற நெருப்பைக் கையில் ஏந்தி நள்ளிருளின்கண், நரிகள் திரிகின்ற மயானத்தில் நடனம் புரிகின்றவர். அவர், அரிசில் ஆற்றின் நீர்ப் பெருக்கம் கொண்டு மேவும் அம்பர் மாநகரில், உயர்ந் தோனாகிய கோச்செங்கட் சோழன் கட்டிய கோயிலில் பொருந்தி வீற்றிருப்பவர்.*

எல்லி – இருள்; குரிசில் – உயர்ந்தோன்.

199. மையகண் மலைமகள் பாக மாயிருள்
கையதோர் கனலெரி கனல ஆடுவர்
ஐயநன் பொருபுனல் அம்பர்ச் செம்பியர்
செய்யகண் ணிறைசெய்த கோயில் சேர்வரே.

தெளிவுரை: *உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்கும் ஈசன், இருளின்கண், கையில் எரியும் நெருப்பை ஏந்தி ஆடுகின்றவர்; நீர் வளம் மிக்க அம்பரில், கோச்செங்கட் சோழன் கட்டிய கோயிலில் வீற்றிருப்பவர்.*

200. மறைபுனை பாடலர் சுடர்கை மல்கவோர்
பிறைபுனை சடைமுடி பெயர ஆடுவர்
அறைபுனல் நிறைவயல் அம்பர் மாநகர்
இறைபுனை எழில்வளர் இடமது என்பரே.

தெளிவுரை: *வேதங்களை நன்கு விரித்துப் பாட வல்லவராகிய ஈசன், எரியும் நெருப்பானது பெருகவும், பிறைச் சந்திரன் சடை முடியில் அசையவும் நடம்*

Koviloor Digital Library

புரிபவர். அப் பெருமான், நீர்வளம் நிறைந்த வயல்களையுடைய அம்பர் மாநகரில் கோச்செங்கட் சோழன் கட்டிய கோயிலின்கண் வீற்றிருப்பவர்.

இறை – கோச்செங்கட் சோழ நாயனார்.

201. இரவுமல்கு இளமதி சூடி ஈடுயர்
பரவமல்கு அருமறை பாடி ஆடுவர்
அரவமோடு உயர்செம்மல் அம்பர்க் கொம்பலர்
மரவமல்கு எழில்நகர் மருவி வாழ்வரே.

தெளிவுரை: இரவில் ஒளிரும் இளம் பிறைச் சந்திரனைச் சூடிப். பெருமையுடைய அரிய மறைகளைப் பாடி ஆடுகின்ற ஈசன், அரவத்தை அணியாகத் தரித்து உயர்ந்து விளங்கும் செம்மலாய், அம்பர் என்னும் நகரில் வீற்றிருப்பவர்.

ஈடு உயர் – பெருமை மேலோங்குதல்.

202. சங்கணி குழையினர் சாமம் பாடுவர்
வெங்கனல் கனல்தர வீசி யாடுவர்
அங்கணி விழவமர் அம்பர் மாநகர்ச்
செங்கணல் இறைசெய்த கோயில் சேர்வரே.

தெளிவுரை: ஈசன், சங்கால் ஆன குழையைக் காதில் அணியாகக் கொண்டு விளங்குபவர்; சாமம் என்னும் வேதத்தை ஓதி அருள்பவர்; வெம்மையான நெருப்பினைக் கரத்தில் ஏந்தி வீசி ஆடுபவர். அப் பெருமான், அழகிய திருவிழாக்கள் விளங்கும் அம்பர் மாநகரில் கோச்செங்கட் சோழ நாயனார் கட்டிய கோயிலாகப் பொருந்தி விளங்குபவர்.

சிறப்புரை: ஈசன், ஒரு காதில் தோடும் பிறிதொன்றில் குழையும் கொண்டு விளங்குபவர். இதனை,

Koviloor Digital Library

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ

என மாணிக்கவாசகர் உரைத்தருளிய பெற்றியும் காண்க. ஈசன், திருக்கரத்தில் நெருப்பேந்தி எண் தோளும் வீசி ஆடும் சிறப்பினை, "எவங்கனல் கனல் தர வீசி யாடுவர்" என உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், "எண் தோள் வீசி நின்று ஆடும் பிரான் தன்னைக் கண்காள் காண் மின்களோ" எனத் திருநாவுக்கரசர் திருவங்கமாலை வாயிலாக அருளிச் செய்த மாண்பும் காண்க.

செங்கணல் இறை – செங்கண் நல் இறை. கோச்செங்கட் சோழன்.

203. கழல்வளர் காலினர் சுடர்கை மல்கவொர்
சுழல்வளர் குளிர்புனல் சூடி யாடுவர்
அழல்வளர் மறையவர் அம்பர்ப் பைம்பொழில்
நிழல்வளர் நெடுநகர் இடமது என்பரே.

தெளிவுரை: ஈசன், திருப்பாதத்தில் நன்கு ஆர்க்கும் வீரக் கழலைக் கொண்டு விளங்குபவர்; சுடர்விட்டு எரியும் நெருப்பானது கையில் விளங்கவும், சுழற்சியை உடைய கங்கையானது சடையில் விளங்கவும் ஆடுபவர். அப் பெருமான், வேள்வித் தீ வளர்த்து அந்தணர்கள் ஓம்பும் அம்பர் என்னும் நகரில், பைம்பொழிலின் ஒளி மேவும் பெருந்திருக் கோயிலின்கண் வீற்றிருப்பவர்.

சுடர் – எரியும் நெருப்பு; நகர் – கோயில்.
நெடு நகர் – பெருங் கோயில்.

204. இகலுறு சுடர்எரி இலங்க வீசியே
பகலிடம் பலிகொளப் பாடியாடுவர்

Koviloor Digital Library

அகலிட மலிபுகழ் அம்பர்வம்பவிழ்
புகலிட நெடுநகர் புகுவர் போலுமே.

தெளிவுரை: வலிமை மிகும் சுடரானது, நன்கு எரியுமாறு வீசிப் பலி ஏற்கும் பொருட்டுப் பாடுவதும் ஆடுவதும் ஆக விளங்குபவர், ஈசன். அவர், புகழ் மலிந்து ஓங்கும் அம்பரில், மணம் கமழும் பெருங் கோயிலைத் தமது இடமாகக் கொண்டு வீற்றிருப்பவர் போலும்.

205. எரியன மணிமுடி இலங்கைக் கோன்தன
கரியன தடக்கைகள் அடர்த்த காலினர்
அரியவர் வளநகர் அம்பர் இன்பொடு
புரியவர் பிரிவிலாப் பூதஞ் சூழவே.

தெளிவுரை: நெருப்புப் போன்று சுடர்விடும் மணிகளை முடியில் பதித்து மேவிய இராவணனுடைய கரிய நிறங் கொண்ட பெரிய கைகள் நலியுமாறு அடர்த்த திருப்பாதத்தை உடைய ஈசன், அரியவராய், வளமை மிக்க நகராகிய அம்பரில் இனிமையொடு வீற்றிருந்து அருள் புரிபவராய், பூத கணங்கள் சூழத் திகழ்பவர்.

206. வெறிகிளர் மலர்மிசை யவனும் வெந்தொழிற்
பொறிகிளர் அரவணைப் புல்கு செல்வனும்
அறிகில அரியவர் அம்பர்ச் செம்பியர்
செறிகழல் இறைசெய்த கோயில் சேர்வரே.

தெளிவுரை: நறுமணம் கமழும் தாமரை மலர் மீது திகழும் பிரமனும், கொடிய படத்தை உடைய அரவத்தைப் படுக்கையாகக் கொண்டு மேவும் செல்வனாகிய திருமாலும், அறிவதற்கு அரியவராகிய ஈசன் அம்பரில் கோச்செங்கட் சோழனார் கட்டிய கோயிலில் சேர்ந்து விளங்குகின்றவர்.

Koviloor Digital Library

207. வழிதலை பறிதலை யவர்கள் கட்டிய
மொழிதலைப் பயனென மொழியல் வம்மினோ
அழிதலை பொருபுனல் அம்பர் மாநகர்
உழிதலை யொழிந்துளர் உமையும் தாமுமே.

தெளிவுரை: *சமணரும், சாக்கியரும் கட்டுரையாக மொழிவனவற்றைப் பயனுடையதெனக் கொள்ள வேண்டாம். ஆறுகாங்கு திரிந்து அலையாது நீர் வளம் மிகுந்துள்ள அம்பர் மாநகரில், அம்பிகையோடு வீற்றிருக்கும் ஈசனைத் தரிசித்து அருள் பெற வாருங்கள்.*

208. அழகரை அடிகளை அம்பர் மேவிய
நிழல்திகழ் சடைமுடி நீல கண்டரை
உமிழ்திரை யுலகினில் ஓதுவீர் கொள்மின்
தமிழ்கெழு விரகினன் தமிழ்செய் மாலையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *அழகரை, அடிகளை, அம்பர் நகரில் மேவிய ஒளி திகழும் சடை முடியுடைய நீலகண்டப் பெருமானைத் தமிழில் சிறந்து விளங்கும் பெரியோனாகிய ஞானசம்பந்தன் சொன்ன தமிழாகிய இத் திருப்பதிகத்தை உலகில் ஓதுவீராக! நற்கதியுறு வீராக!*

278. திருப்பூவணம்

தல விளக்கம்: *பாண்டிய நாட்டுத் தலங்கள் 14இல் 11ஆவது திருத்தலம். இது, மூவர் பாடல் பெற்றது. பிரமன் வழிபட்டது. இதன் வேறு பெயர்கள்: புஷ்பவன காசி, பிரமபுரம், பாஸ்கரபுரம், பிதுர்மோட்சபுரம், இலட்சுமிபுரம், இரசவாதபுரம்*

Koviloor Digital Library

என்பன. வைகையாறு வடக்கு நோக்கிச் செல்கிறது. இதனை உத்தரவாகினி என்பர். இறந்தோரின் எலும்புகளை இங்கு புதைப்பதால் நற்கதி பெறுகின்றது என்பது ஐதிகம். மூவர் பெருமக்களுக்கும், வைகை மணல் சிவலிங்கமாகத் தோன்றியதால், அவர்கள் எதிர்க் கரையிலிருந்தவாறு கண்டு தரிசித்ததாகவும், அதற்கு ஏற்ப நந்தி தேவர் விலகிச் சாய்ந்துள்ளதும் வரலாறு. மாணிக்கவாசகர், "பொருப்பமர் பூவணத்து அரனே போற்றி'' எனப் போற்றியருளிச் செய்துள்ளனர். பொன்னையாள் என்னும் மாதின் பக்திக்கு மெச்சி இறைவன் சித்தராகி வந்து ரசவாதம் புரிந்த தலம். மற்றும் முதல் திருமுறை, பதிகம் எண் 64 காண்க.

சுவாமி : பூவண நாதர், புஷ்பவனேஸ்வரர்

அம்பிகை : சௌந்தரநாயகி, மின்னனையாள்

தல மரம் : பலா

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

209. மாதமர் மேனியனாகி வண்டொடு
போதமர் பொழிலணி பூவ ணத்துறை
வேதனை விரவலர் அரண மூன்றெய்த
நாதனை அடிதொழ நன்மை யாகுமே.

தெளிவுரை: உமாதேவியைத் திருமேனியில் பொருந்திய வராகி, வண்டு அமரும் மலர்கள் கொண்டு விளங்கும் பொழில் உடைய பூவணத்தில் உறையும் ஈசன், வேதமாக விளங்குபவர். அப்பெருமான், பகைத்து எழுந்த மூன்று அசுரர்களின் கோட்டைகளை அம்பால் எய்து எரியுமாறு செய்த நாதன். அவ்

Koviloor Digital Library

இறைவனுடைய திருவடியைத் தொழ நன்மை விளையும்.

210. வானணி மதிபுல்கு சென்னி வண்டொடு
தேனணி பொழில்திருப் பூவ ணத்துறை
ஆனநல் லருமறை அங்கம் ஓதிய
ஞானனை அடிதொழ நன்மை யாகுமே.

தெளிவுரை: வானில் அணி கொண்டு திகழும் சந்திரனைத் தொடும் அளவு உயர்ந்து ஓங்கிய வண்டு நுகரும் தேன் துளிக்கும் மலர்கள் விளங்கும் பொழிலை உடைய பூவணத்தில் உறையும் ஈசன், எல்லாருக்கும் நலம் வழங்கும் நான்கு வேதங்களையும் அதன் ஆறு அங்கங்களையும் நன்கு ஓதி அருளியவர். அப் பெருமானுடைய திருவடி மலர்களைத் தொழுது போற்ற, எல்லா நன்மைகளும் கைகூடும்.

211. வெந்துயர் உறுபிணி வினைகள் தீர்வதோர்
புந்தியர் தொழுதெழு பூவ ணத்துறை
அந்திவெண் பிறையினோடு ஆறு சூடிய
நந்தியை அடிதொழ நன்மை யாகுமே.

தெளிவுரை: கொடுமையாகத் தாக்கி விளையும் துன்பங்களுக்கும், அடைகின்ற பிணிகளுக்கும் காரண மாகிய வினைகள் தீரும் வழியாக, ஈசனைத் தொழுது போற்றுகின்றோர் விளங்கும் நகர் பூவணம். ஆங்கு உறைகின்ற இளம்பிறைச் சந்திரனும் கங்கையும் சூடிய ஈசனின் திருவடிக் கமலத்தைத் தொழுது போற்ற, நன்மை யாவும் கைகூடும்.

சிறப்புரை: முன் இரு அடிகள் வாயிலாக வழிபடுவோர் தம் ஞான உணர்வும், பின் இரு அடிகள் வாயிலாகப் பெறுகின்ற பயனும் உணர்த்தப் பெற்றது. கண்களுக்குப்

Koviloor Digital Library

புலப்படுகின்ற துயரினை வெந்துயர் எனவும்; கண்களுக்குப் புலனாகாமல், உயிரின்பால் பற்றி யிருந்து உரிய காலத்தில் தாக்கும் வினையின் தன்மையை உறுபிணி எனவும் சுட்டப் பெற்றது. இவ்விரண்டும் வினைவயத்தால் ஆயினமையும், எனவே அவற்றை நுகராமல் தீர்க்கப்படுவதற்குரிய ஒரேவழி, இறைவனடியைப் போற்றுதலே ஆகும் எனத் தெளிந்த தன்மையினையும் "தீர்வதோர் புந்தியர்" என ஓதப் பெற்றது.

உறுபிணி என்பது பிறவிப் பிணியையும் குறிக்கும்.

நந்தி – சிவபெருமான். நன்மை – வினை நீக்கமும் முத்திப் பேறும் விளைதல்.

212. வாசநன் மலர்மலி மார்பில் வெண்பொடிப்
பூசனைப் பொழில்திகழ் பூவ ணத்துறை
ஈசனை மலர்புனைந்து ஏத்து வார்வினை
நாசனை அடிதொழ நன்மை யாகுமே.

தெளிவுரை: நறுமணம் கொண்ட மலர் மாலைகள் தரித்துத் திருவெண்ணீற்றைக் குழையப் பூசிப் பொழில் திகழ் பூவணத்தில் உறையும் ஈசன், மலர் புனைந்து ஏத்தும் அன்பர்களின் வினையை நாசம் செய்பவன். அப்பெருமானின் திருவடி மலர்களைத் தொழுது போற்ற எல்லா நன்மைகளும் கைகூடும்.

சிறப்புரை: ஈசனை வழிபடும் தன்மையில், நிஷ்காமியம் எனப்படும் வகையில் உலகப் பொருள்களின்பால் பற்றற்று திருவடிக் கமலங்களைப் பற்றுதலைக் குறியாகக் கொண்டு விளங்கும் அன்பர்களுக்கு, அவர்கள் வேண்டியவாறு நல்குதலும்; காமிய நிலையில் இவ்வுலக நலன்களை நாடி வழிபடும்

Koviloor Digital Library

அன்பர்களுக்கும் அவர்கள் வேண்டியவாறு நல்குதலும் உடையவர் ஈசன். இதனை "நன்மை யாகுமே" என்னும் தொடரால் உணர்த்தப் பெற்றது.

இத்தன்மையில், "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" (திருமறைக்காடு பதிகம், பாடல் வ. எண் *232; 6-23-1*) எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்தவாறும் காண்க.

பொடிப் பூசனை – திருவெண்ணீறு பூசிய ஈசனைப் போற்றிய குறிப்பு. வினை நாசன் – ஈசன்.

213. குருந்தொடு மாதவி கோங்கு மல்லிகை
பொருந்திய பொழில்திருப் பூவ ணத்துறை
அருந்திறல் அவுணர்தம் அரண மூன்றுஎய்த
பெருந்தகை அடிதொழப் பீடை இல்லையே.

தெளிவுரை: குருந்தம், மாதவி, கோங்கு, மல்லிகை ஆகிய மலர்கள் பொருந்திய பொழில் விளங்கும் திருப்பூவணத்தில், வல்லமையுடைய அசுரர்களின் மூன்று கோட்டை மதில்களையும் எரியுமாறு செய்த ஈசனின் திருவடியைத் தொழுது போற்றப் பற்றியுள்ள தீவினை யாவும் நீங்கும்.

சிறப்புரை: ஈசனின் திருநாமச் சிறப்பினை, ''பெருந்தகை'' எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. "பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே" என அருளிச் செய்துள்ள ஞானசம்பந்தர் வாக்கும் காண்க. பாட்டு வ.எண் *252 (3.24.1)*.

பீடித்துத் துன்பம் தரும் தீய வினைகள் "பீடை" எனச் சுட்டப் பெற்றது. பீடு என்பது பெருமை, சிறப்பு எனப்படும். "பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே" என அருளிச் செய்துள்ளமை கொள்க.

Koviloor Digital Library

214. வெறிகமழ் புன்னைபொன் ஞாழல் விம்மிய
பொறியர் வணிபொழில் பூவ ணத்துறை
கிறிபடும் உடையினன் கேடில் கொள்கையன்
நறுமல ரடிதொழ நன்மை யாகுமே.

தெளிவுரை: மணம் கமழும் புன்னை, புலி நகக் கொன்றை முதலான மரங்கள் பெருகிப் பொழிலின் எழுப்பி அணி கொளத் திகழும் பூவணத்தில், மயக்கம் தரும் உடை தரித்த கொள்கை உடையவராக வீற்றிருக்கும் ஈசனின் மணம் கமழும் திருவடி மலரைத் தொழ, எல்லா நலன்களும் கைகூடும்.

கிறிபடும் உடையினன் – ஈசன் தரித்த உடையின் தன்மையை உணர்த்திற்று. தோலுடை, கோவண ஆடை.

215. பறைமல்கு முழவொடு பாடல் ஆடலன்
பொறைமல்கு பொழிலணி பூவ ணத்துறை
மறைமல்கு பாடலன் மாதொர் கூறினன்
அறைமல்கு கழல்தொழ அல்லல் இல்லையே.

தெளிவுரை: பறையின் ஒலியும் முழவின் ஓசையும் ஆர்க்கப் பாடலும் ஆடலும் கொண்டு விளங்கும் ஈசன், சாந்தம் மல்க வழங்கும் பொழில் திகழும் பூவணத்தில் உறைபவர். அப்பெருமான், வேதங்களை விரித்து ஓதி, உமாதேவியை ஒரு கூறாகக் கொண்டு அருள் புரிபவர். வீரக் கழல் ஒலிக்க மேவும் அப் பரமனின் திருவடியைத் தொழத் துன்பம் என்பது இல்லை.

216. வரைதனை யெடுத்தவல் லரக்கன் நீள்முடி
விரல்தனில் அடர்த்தவன் வெள்ளை நீற்றினன்
பொருபுனல் புடையணி பூவணந்தனைப்
பரவிய அடியவர்க்கு இல்லை பாவமே.

Koviloor Digital Library

தெளிவுரை: கயிலை மலையை எடுத்த கொடிய அரக்கனாகிய இராவணனுடைய நீண்ட முடிகளைத் தனது திருப்பாத விரலால் அடர்த்திய ஈசன், தூய்மை யான திருவெண்ணீற்றைத் தரித்தவராய்க் கங்கையைச் சடை முடியில் கொண்டு பூவணத்தில் வீற்றிருப்பவர். அப் பெருமானைப் பரவிப் போற்றும் அடியவர் களுக்குப் பாவமானது அணுகாது. இது சிவனடியார் களைத் தீவினையானது பற்றி நிற்காது என உணர்த் துவதாயிற்று.

பாவம் – தீவினை.

217. நீர்மல்கு மலருறை வானும் மாலுமாய்ச்
சீர்மல்கு திருந்தடி சேர கிற்கிலர்
போர்மல்கு மழுவினன் மேய பூவணம்
ஏர்மல்கு மலர்புனைந்து ஏத்தல் இன்பமே.

தெளிவுரை: புகழ் மிகுந்த செல்வமாகி இன்னுயிர் களைத் தன் வயப்படுத்தும் ஈசன், பிரமனும் திருமாலும் மலரடிகளைக் காண முடியாதவாறு செய்தவர் மழுப்படையுடைய அப்பெருமான் மேவிய பூவணம் என்னும் திருத்தலத்தைச் சிறப்பான மலர்கள் கொண்டு ஏத்துதல் இன்பம் தருவதாகும்.

சிறப்புரை: மூர்த்தி, தலம், தீர்த்தம் எனத் தொழப்பெறும் தன்மையில் இத் திருப்பாட்டு, தலத்தின் சிறப்பினை உணர்த்துவதாயிற்று.

218. மண்டைகொண் டுழிதரு மதியில் தேரரும்
குண்டரும் குணம்பல பேசுங் கோலத்தர்
வண்டமர் வளர்பொழில் மல்கு பூவணம்
கண்டவர் அடிதொழுது ஏத்தல் கன்மமே.

Koviloor Digital Library

தெளிவுரை: சாக்கியரும் சமணரும் நற்குணம் பயவாத சொற்கள் பல பேசும் தன்மையில் உள்ளவர்கள். அவற்றைப் பொருட்டாகக் கொள்ளாது, வளமான பொழில்களையுடைய ஈசனின் புகழ் மணக்க மேவும் பூவணத்தைக் கண்டவர்தம் பக்தர்களின் அடி மலரைத் தொழுது ஏத்துதல் கடமையாகும்.

சிறப்புரை: இத் திருப்பாட்டு, குரு, இலிங்க, சங்கம வழிபாட்டு நெறியில் சங்கம - அடியார் வழிபாட்டினை உணர்த்துவதாயிற்று. இதனை, "அடியார்க்கும் அடியேன்" எனப் புகன்ற சுந்தர மூர்த்தி சுவாமிகள் தம் நெறியினையும் காண்க.

219. புண்ணியர் தொழுதெழு பூவ ணத்துறை
அண்ணலை அடிதொழுது அந்தண் காழியுள்
நண்ணிய அருமறை ஞான சம்பந்தன்
பண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: புண்ணியம் செய்த மாந்தர்கள் தொழுது போற்றுகின்ற பூவணத்தில் உறையும் ஈசனை, வணங்கிப் போற்றிக் காழி நகரில் மேவும் அருமறை வல்லவராகிய ஞானசம்பந்தன் வழங்கி அருளிய இத் திருத்தமிழ்ப் பாடல்களை ஓத, பாவங்கள் யாவும் விலகும்.

சிறப்புரை: புண்ணிய பல செய்து மக்கட் பிறவி கொண்டவர்களுக்கு, ஈசனைப் போற்றித் துதிக்கும் பேறு வாய்க்கும். இதனைப் "புண்ணியர் தொழுதெழு பூவணம்" எனச் சுட்டப் பெற்றது. இந்நெறியில், "புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு அண்ணல் அது கண்டு அருள்புரியா நிற்கும்" எனப்

Koviloor Digital Library

புகலும் (திருமந்திரம் 1828) திருமூலர் வாக்கும் காண்க. அடியவர்கள், நற்கதி பெறும் முகத்தான் அருள் செய்யப் பெற்றது இத்திருப்பதிகம் எனக் குறிப்பால் சுட்டுமாறு, "பண்ணிய தமிழ் சொல்" என அருளிச் செய்ததாம்.

அண்ணல் – ஈசன்.

279. திருக்கருக்குடி

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல் இது 69ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. மருதாந்தநல்லூர் என வழங்கப்படுகிறது. பிரமன், இராமன், சற்குணன் ஆகியோர் பூசித்தது.

சுவாமி : சற்குணலிங்கேஸ்வரர், பிரமபுரீஸ்வரர், கருக்குடி நாதர்

அம்பிகை : கல்யாண நாயகி, அத்வைத நாயகி, சர்வாலங்கார நாயகி.

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

220. நனவிலும் கனவிலும் நாளும் தன்னொளி
நினைவிலும் எனக்குவந்து எய்து நின்மலன்
கனைகடல் வையகம் தொழுக ருக்குடி
அனலெரி யாடும்எம் அடிகள் காண்மினே.

தெளிவுரை: நனவிலும் கனவிலும், நெஞ்சில் தோன்றும் நினைவிலும் எனக்கு நேரில் காட்சி புரியும் ஈசன், கடலால் சூழப்பெற்ற இவ் உலகம் போற்றும் கருக்குடியில், கரத்தில் நெருப்பேந்தி ஆடுகின்ற எமது

Koviloor Digital Library

அடிகள் ஆவார். அப் பெருமானைக் கண்டு தரிசித்து நலம் கொள்வீராக.

சிறப்புரை: திருஞானசம்பந்தர் திருமுன்னர், ஈசன், எல்லாக் காலங்களிலும் விளங்கிக் காட்சி நல்கும் செம்மையானது "நனவிலும்" என்னும் அருஞ் சொல் வாயிலாகச் சுட்டப் பெற்றது. இதன் முந்தைய பதிகத்தை அருளிச் செய்த பாங்கினில், ஈசனை, வைகை ஆற்றின் மறுகரையில் இருந்து திருக்காட்சி யுற்ற பெற்றியினையும், திருக்காளத்தி என்னும் திருத்தலத்திலிருந்து வடநாட்டுத் தலங்களைத் தரிசித்துத் திருப்பதிகம் அருளிச் செய்த வண்ணங் களையும் காண்க.

ஈசன் திருஞானசம்பந்தரின் நினைவில் நின்று திருப்பதிகத்தின் வாயிலாகச் சொல்லும் அருளாணையும் அவ்வாறு உடைமையே எனக் கொள்க.

221. வேதியன் விடையுடை விமலன் ஒன்னலர்
மூதெயில் எரியெழ முனிந்த முக்கணன்
காதியல் குழையினன் கருக்கு டியமர்
ஆதியை அடிதொழ அல்லல் இல்லையே.

தெளிவுரை: வேதத்தின் தலைவனாகவும், இடபக் கொடியுடையவனாகவும், மலமற்ற விமலனாகவும் உள்ள ஈசன், பகைத்த முப்புர அசுரர்களின் கோட்டை மதில்கள் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அப் பெருமான் காதில் குழை அணிந்தவராய்க் கருக்குடியில் வீற்றிருக்கும் ஆதிக் கடவுள். அப்பரமனின் திருவடி மலரைத் தொழுது போற்று பவர்களுக்குத் துன்பம் இல்லை.

Koviloor Digital Library

சிறப்புரை: இசைப் பிரியராகிய ஈசன், இரு கந்தருவர்களைக் காதில் குழையாகக் கொண்டு விளங்குபவர் என்பது புராண வரலாறு.

222. மஞ்சுறு பொழில்வள மலிக ருக்குடி
நஞ்சுறு திருமிட றுடைய நாதனார்
அஞ்சுரும் பார்குழல் அரிவை அஞ்சவே
வெஞ்சுரந் தனில்விளை யாடல் என்கொலோ.

தெளிவுரை: மேகம் சூழும் பொழில் வளம் மிக்க கருக்குடியில் நஞ்சினை அருந்திய மிடறுடைய நீலகண்டராய் விளங்கும் ஈசன், உமாதேவியும் அஞ்சுமாறு கொடிய மயானத்தில் ஆடல் கொண்டு விளங்குவது என்கொல்!

சிறப்புரை: ஈசன், நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் திருவிளையாடல், உமாதேவியும் அஞ்சுமாறு விளங்குதலை இயம்பியது, ஈசனின் எண் குணங்களுள் ஒன்றாகிய முடிவில்லாத ஆற்றலுடைமையைச் சுட்டிற்று.

வெஞ்சுரம் – மயானம்.

223. ஊனுடைப் பிறவியை அறுக்க உன்னுவீர்
கானிடை ஆடலான் பயில்க ருக்குடிக்
கோனுயர் கோயிலை வணங்கி வைகலும்
வானவர் தொழுகழல் வாழ்த்தி வாழ்மினே.

தெளிவுரை: புலன்களின் உணர்வுடைய இப்பிறவியை நீக்க வேண்டும் என்று எண்ணும் அன்பரீர்! மயானத்தில் திருநடம் பயிலும் கருக்குடி நாதரின் திருக்கோயிலை வணங்கியும், வானவர்கள் தொழும் அப் பெருமானின் திருக்கழலை வாழ்த்தியும் வாழ்வீர்களாக.

Koviloor Digital Library

இப் பிறவியில் இத் தன்மையில் வழிபடும் அடியவர்கள், பிறவியை அறுக்கும் பேரருளைப் பெறுவார்கள் என்பது குறிப்பு.

சிறப்புரை: இத் தேகத்தின் நிலையற்ற தன்மை, "ஊனுடைப் பிறவி" என உரைக்கப்பெற்றது. இதனை மாற்றும் உபாயம் ஈசனை வழிபடுதல் ஒன்றே என ஓதுவதாயிற்று. இந்நெறியில், முதல் திருமுறை பதிகம் எண் 59 திருத்தூங்கானை மாடம் திருப்பதிகம் வாயிலாக அருளிச் செய்துள்ள பெற்றியும் நோக்குக.

யாக்கையின் இகழ்ச்சியினை, "உதிர நீர் இறைச்சிக் குப்பை எடுத்தது மலக்குகை ; மேல், வருவதோர் மாயக்கூரை வாழ்வதோர் வாழ்வு வேண்டேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் (திருவாரூர்த் திருப்பதிகம் – இறைகளோடு இசைந்த இன்பம், பாடல் எண் 8) அருளிச் செய்தவாறும் காண்க.

இத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவனின் திருப்பெயராகிய கருக்குடி நாதர் என்பது இத் திருப்பாட்டில் சுட்டப் பெறுதல் காண்க. மன்னுயிர்கள் திருக்கோயிலை வணங்கும் முறையும் இவண் சுட்டப் பெற்றது. கோபுரத்தையே சிவன் எனக் கொண்டு பூக்கள் தூவி அருச்சித்தலை,

குறித்துச் சிவனெனக் கோபுரத்தைப் பூவும்
பறித்தருச்சித்து ஏத்துகபாங் கால்

என மறைஞானசம்பந்தர் (சந்தான ஆச்சாரியர்களுள் ஒருவர்) சைவ சமய நெறி குறட்பா 126இல் அருளிச் செய்துள்ளவாறும் கொள்க.

Koviloor Digital Library

ஈசனை வாழ்த்தியும் வணங்கியும் பிறப்பிணியை நீத்து, மறுமைக்கண் முத்திப் பேரின்பம் கொண்டு வாழ்தல், "வாழ்த்தி வாழ்மினே" எனச் சுட்டப் பெற்றது. அத்தகைய வாழ்த்து, இம்மையிலும் வினையின் சீற்றம் இன்றி இனிது வாழ்தலை உணர்த்தும்.

224. சூடுவர் சடையிடைக் கங்கை நங்கையைக்
கூடுவர் உலகிடை ஐயங் கொண்டொலி
பாடுவர் இசைபறை கொட்ட நட்டிருள்
ஆடுவர் கருக்குடி அண்ணல் வண்ணமே.

தெளிவுரை: ஈசன், சடை முடியில் கங்கையைச் சூடி, உமாதேவியை ஒரு பாகத்தில் சேர வைத்து, உலகில் பிச்சை ஏற்கும் தன்மையில் பாட்டு இசைத்துப் பறையொலி கொட்ட நள்ளிருளில் நடம் புரிபவர். இது கருக்குடியில் வீற்றிருக்கும் அப் பெருமானின் அருள் வண்ணம் ஆகும்.

நங்கை – உமாதேவி; நட்டிருள் – நள்ளிருள்.

225. இன்புடை யாரிசை வீணை பூணரா
என்புடை யாரெழில் மேனி மேலெரி
முன்புடை யார்முதல் ஏத்தும் அன்பருக்கு
அன்புடை யார்கருக் குடியெம் அண்ணலே.

தெளிவுரை: ஈசன், வரம்பில்லாத இன்பம் உடைய குணப்பாங்கு உடையவர்; வீணை கொண்டு இசை பயில்பவர்; எலும்பினை மாலையாக அணிபவர்; எழில் மிக்கதாகிய தூய உடம்பினர்; திருக்கரத்தில், சுடர் விடும் நெருப்பினை ஏந்தியவர்; யாவற்றுக்கும் மூலப் பொருளாகவும் முதற் பொருளாகவும் திகழ்பவர்; அன்பர்களுக்கு அன்புடையவராக

Koviloor Digital Library

இருப்பவர்; அப்பெருமான், கருக்குடியில் வீற்றிருக்கும் எம் அண்ணல் ஆவார்.

சிறப்புரை: ஈசனின் எண் குணங்களுள், முடிவில்லாத ஆற்றல் உடைமையும், தூய உடம்பினராதலும் இத் திருப்பாட்டு உணர்த்திற்று. ஈசன் அன்பருக்கு அன்புடையாராக இருத்தலை உணர்த்தி, அவ்வாறு இல்லாதவர்களுக்கு மறைந்து இருப்பவர் என்பதனைக் குறிப்பால் சுட்டுவதாயிற்று. இத்தன்மையினை, "அன்ப ருக்கு அன்பனே" எனவும்; "ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே" எனவும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த அமுதமொழியாலும் காண்க.

226. காலமும் ஞாயிறும் தீயும் ஆயவர்
கோலமும் முடியரவு அணிந்த கொள்கையர்
சீலமும் உடையவர் திருக்க ருக்குடிச்
சாலவும் இனிதுஅவ ருடைய தன்மையே.

தெளிவுரை: சிவபெருமான், காலம், நியதி முதலான எல்லையாகவும், சூரியன் முதலான சுடர்களாகவும், நெருப்பு முதலான பூதப் பொருள்களாகவும் விளங்கு பவர். அப்பெருமான், சடை முடியில் அரவத்தை அணிந்தவர்; சிறப்பான புகழை உடையவர்; அவருடைய மாண்பு இனிது விளங்குமாறு திருக்கருக் குடியில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: ஈசனின் கோலம், அடியவரை ஆட் கொண்டருளும் திருக்கோலம் என்பதும், அவருடைய சீலம் சிறப்பானது எனவும் சுட்டி, அடியார்களுக்குப் பேரின்பத்தை நல்குதலை இவண் உணர்த்தப் பெற்றது. இந்நெறியில், "கோலமும் நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டும் சீலமும் பாடிச் சிவனே சிவனே என்று!"

Koviloor Digital Library

என மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறும் காண்க. ஈசனின் சீலமானது அப் பெருமானைச் "சிவ சிவ" எனும் சிவநாமத்தால் ஓதலைக்கும் திறத்தது எனக் குறிப்பால் உணர்த்தப் பெற்றது.

227. எறிகடல் புடைதழு இலங்கை மன்னனை
முறிபட வரையிடை அடர்த்த மூர்த்தியார்
கறைபடு பொழில்மதி தவழ்க ருக்குடி
அறிவொடு தொழுமவர் ஆள்வர் நன்மையே.

தெளிவுரை: இலங்கையின் வேந்தனாகிய இராவணனை, மலையிடையில் வைத்து அடர்த்த சிவ மூர்த்தியாகிய ஈசன், சிவனடியார்கள் பக்தி அறிவோடு பரவிப் போற்றும் கருக்குடியில் வீற்றிருப்பவர். அப் பெருமான் யாவர்க்கும் நன்மையைத் தந்தருளி ஆட்சி செய்கின்றவர்.

சிறப்புரை: ஈசனே யாவற்றையும் இயக்குபவர் என்னும் எழில் மெய்ம்மை, "ஆள்வர்" எனச் சுட்டுவதாயிற்று. அப்பெருமான், நன்மை நல்கும் ஆட்சியினைச் செய்பவராகி, அடியவர்களைச் சிவ புண்ணியங்களைச் செய்யுமாறு பணிவித்து நல்வினைப் பயனை மேம்படச் செய்தலை உணர்த்துதல் ஆயிற்று.

அறிவொடு – சிவ ஞானம் விளங்க.

228. பூமனும் திசைமுகன் றானும் பொற்பமர்
வாமனன் அறிகிலா வண்ணம் ஓங்குஎரி
ஆம்என உயர்ந்தவன் அணிக ருக்குடி
நாமன னினில்வர நினைதல் நன்மையே.

தெளிவுரை: திசைமுகனாகிய பிரமனும், பொற்புடைய வாமனாவதாரம் கொண்ட திருமாலும், அறிய முடியாத வண்ணத்தில் ஓங்கி எரியும் தீத்திரளாக

Koviloor Digital Library

உயர்ந்த சிவபெருமான், அணிதிகழ மேவும் கருக்குடியில் வீற்றிப்பவர். அத்திருத்தலத்தை நாம் மனத்திற் கொண்டு நினைத்தல் நன்மையைத் தரும்.

சிறப்புரை: இது தலத்தின் சிறப்பை உணர்த்தி, அதனை மனத்தால் கருதி தியானித்தல் பேறு அளிக்கும் என உணர்த்திற்று.

நாமனனினில் – நாம் மனத்தினில்.

229. சாக்கியர் சமண்படு கையர் பொய்ம்மொழி
ஆக்கிய உரைகொளேல் அருந்திருந்நமக்கு
ஆக்கிய அரனுறை அணிக ருக்குடிப்
பூக்கமழ் கோயிலே புடைபட்டு உய்ம்மினே.

தெளிவுரை: சாக்கியரும் சமணரும் பொய்யான மொழிகளைக் காட்டுரையாக்கிக் கூறுவதனை ஏற்றுக் கொள்ள வேண்டாம். நமக்கு ஆக்கிய அருமையான செல்வமானது அரன் உறைகின்ற அணிதிகழும் கருக்குடி ஆகும். இப் பூவுலகில் நன்கு விளங்கும் இக் கோயிலில் அன்பர் பெருமக்கள் சூழப் போந்து வணங்கி உய்வாராக.

சிறப்புரை: திருக்கோயிலே நமக்கு ஆக்கிய அரிய செல்வம் எனச் சுட்டப் பெற்றது. அச் செல்வத்தைப் போற்றிப் பணிதல் மன்னுயிர்க்குக் கடன் என்பதனையும், அடியவர் பெருமக்கள் புடை சூழச் சென்று தரிசித்தல் உய்தி பெறுவதற்குரியது என்பதனையும் உரைத்தலாயிற்று. இத் தன்மையினை நாவுக்கரசர்,

ஒருகாறும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணா ராகில்

Koviloor Digital Library

அருநோய்கள் கெடவெண்ணீறு அணியாராகில்
அளியற்றார் பிறந்தவாறு ஏதோ....

— தனித் திருத்தாண்டகம் 6.95.6; பாடல் வ. எண் 934

என அருளிச் செய்தவாறும் காண்க.

நமக்கு ஆக்கிய அரன் – நல்வினைப் பயனால் மக்கட் பிறவியைக் கருணையுடன் ஆக்கி நல்கிய, ஈசன்.

230. கானலில் விரைமலர் விம்மு காழியான்
வானவன் கருக்குடி மைந்தன் தன்னொளி
ஆனமெய்ஞ் ஞான சம்பந்தன் சொல்லிய
ஊனமில் மொழிவலார்க்கு உயரும் இன்பமே.

தெளிவுரை: கடற் சோலைகளில் நறுமணம் கமழும் மலர்கள், பெருகி ஓங்கும் காழி நகருக்கு உடையவனாகி, மேலானவனாகிய கருக்குடி நாதனின் ஒளியாகி மெய்ஞ்ஞானம் திகழும் ஞானசம்பந்தன் சொல்லிய வினை நீக்கம் செய்யவல்லதாகிய இத்திருப் பதிகத்தை ஓத வல்லவர்களுக்குப் பேரின்பம் மிகும்.

சிறப்புரை: இத்தலத்தின் ஈசனின் திருப்பெயர் கருக்குடி மைந்தன் என்று உணர்த்தப் பெற்றது. இத் திருப்பதிகம் வினை நீக்கம் செய்யும் என்னும் குறிப்பில் ஊனமில் என உணர்த்தப் பெற்றது. இத் தலத்தினை மனத்தில் நினைத்த அளவில் நன்மையுண்டாகும் என ஓதப் பெற்றது (பாட்டு எண் 9). திருக்கடைக் காப்பாகிய இத்திருப்பாட்டில் முன்னர் பெற்ற இன்பம் உயரும் எனச் சுட்டப் பெற்றது.

உயரும் என்பது சாயுச்சம் எனக் கொள்க.

தன்னொளி – சிவசோதி.

Koviloor Digital Library

280. பஞ்சாக்கரத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தருக்குத் தக்க பருவத்தில் உபநயனம் செய்யும் கருத்தினைக் கொண்டார் உலகியல் தந்தையாராகிய சிவபாத இருதயர். சிவஞானம் உணரப் பெற்றுப் பிறப்பினை எய்தாப் பெருமையுடைய ஆளுடைய பிள்ளை யாருக்குச் சீகாழிப்பதியில் செய்யப் பெறும் உபநயனச் சடங்கில், "மறைநான்கும் தந்தோம்" என வேதியர் மொழிந்தனர். அவர்களுக்கு அஞ்செழுத்து மந்திரம் ஓதிய செம்மையானது திருப்பதிகம் ஆயிற்று. இதனைச் சேக்கிழார் சுவாமிகள்,

மந்திரங்க ளானயெலாம் அருளிச் செய்து
    மற்றவற்றின் வைதிகநூற் சடங்கில் வந்த
சிந்தைமயக் குறும்ஐயம் தெளிய எல்லாம்
    செழுமறை யோர்க் கருளி அவர் தெருளும் ஆற்றால்
முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
    முதலாகும் முதல்வனார் எழுத்துஅஞ்சு என்பார்
அந்தியினுள் மந்திரம்அஞ் செழுத்துமே என்று
    அஞ்செழுத்தின் திருப்பதிகம் அருளிச் செய்தார்.

— திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 266

என அருளிச் செய்யலானார்.

பண் : காந்தார பஞ்சரம்

திருச்சிற்றம்பலம்

231. துஞ்சலும் துஞ்சலில் லாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்

Koviloor Digital Library

வஞ்சகம் அற்றுஅடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்சஉ தைத்தன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: உறங்கும்போதும், உறங்காது விழித் திருக்கும் போதும் நெஞ்சம் கசிந்து உருகுமாறு, அஞ்செழுத்தை நினைத்துப் போற்றுக. இதனை, நாள் தோறும் புரிவீராக. மார்க்கண்டேயர், நெஞ்சில் வேறு எண்ணம் இன்றி ஈசனையே நினைத்துத் திருவடியை வாழ்த்திப் போற்றிய காலத்தில், உயிரைக் கவர வந்த கூற்றுவனை உதைத்து அழித்தது திருவைந்தெழுத்தே.

சிறப்புரை: ஆழ்ந்த உறக்கத்திலும் அந்தராத்மாவானது, திருவைந்தெழுத்தை நெஞ்சுக்குள் தியானம் செய்யும் செம்மையினைத் "துஞ்சலும்" என உணர்த்தப் பெற்றது. எனவே உறங்குங்காலத்திலும் திருவைந் தெழுத்தை உள்ளத்தில் தேக்கி வைத்துக் கொள்ளும் உபாயத்தை உரைத்ததாம். நனவுக் காலத்தில் பலவித மான எண்ணங்கள் அலை மோதும் தன்மை யிருந்தாலும், அவ் அந்தராத்மாவானது திருவைந் தெழுத்தைப் பற்றி இருத்தல் வேண்டும் என்பது ஆணையாயிற்று. இதனை, "நாள்தொறும் நினைமின்" என்னும் அருந்தொடரால் கொள்க.

மனம், ஒரு நிலை கொள்ளாது பல வழிகளில் திரிந்து செல்லும் தன்மையுடையதாயினும், அவ்வாறு செல்ல ஒட்டாது காத்து நின்ற மார்க்கண்டேயரின் பெற்றி, "வஞ்சகம் அற்று" என நவிலப் பெற்றது. ஈசனை வாழ்த்துதல் என்பது, திருவடி வாழ்த்துதல் எனவும், அது திருவைந்தெழுத்தால் ஆவது எனவும் சுட்டப் பெற்றது.

திருவைந்தெழுத்து ஓதியதன் பயனாய் மார்க்கண்டேயர் காக்கப் பெற்றதும், அவரை நோக்கிக்

Koviloor Digital Library

கனன்று வந்த கூற்றுவன், ஈசனால் அழிந்ததும் உணர்த்தித் திருவைந்தெழுத்தின் சிறப்பினை உலகிற்கு ஓதிய நல் வண்ணத்தை ஓர்க.

"நாதன் நாமம் நமச்சிவாயவே" என ஞான சம்பந்தரும்; "நற்றுணையாவது நமச்சிவாயவே" எனத் திருநாவுக்கரசரும்; "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும்; "நமச்சிவாயவா அழ்க" என மாணிக்க வாசகரும் ஓதியமை கொண்டு, திருவைந்தெழுத்தை, "நமசிவாய" என ஓதுதல் வேண்டும் என வழங்கப் பெறுவதாயிற்று. "நமச்சிவாயவே நாநவின்று ஏத்துமே" என நாவுக்கரசரும், "ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது" என ஞானசம்பந்தரும் அருளிச் செய்தனர். மற்றும் "நக்கர் தம் நாம் நமச்சிவாயவென்பார் நல்லரே" என *(3.9.9)* பாட்டு வ. எண் *97*இல் நவின்று அருளியதும் ஓர்க. (நாம்-நாமம்) இத்தகைய திருவைந் தெழுத்தினை ஓதுதல் வேண்டும் எனக் கொள்க.

திருவைந்தெழுத்தினைச் "சிவய நம" எனச் சிந்தித்திருத்தலும் உணரற்பாலது. "சிவ" எனப்படும் பதி எழுத்தை முன்வைத்துச் சிந்தித்திருத்தலை இது உணர்த்திற்று. இதனை,

> நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
> தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
> தானேவந்து எனது உள்ளம் புகுந்து அடியேற்கு அருள்
> செய்தான்
> ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே
>
> — திருவாசகம், பாடல் எண். 553

என மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறும் காண்க.

Koviloor Digital Library

"சிவாய நம என்னும் திருவெழுத்து அஞ்சாலே அவாயமற நின்றாடுவான்" என உண்மை விளக்கம் (பாடல் எண் 32) வாயிலாகத் திருவதிகை மனவாசகங் கடந்தார் அருளிச் செய்தவாறு, அஞ்செழுத்தாவது சிவாயநம எனத் தெரிவித்தல் ஆகிறது. மற்றும் ஐந்தெழுத்தின் பெருமையை,

அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் – அஞ்செழுத்தே
ஆனந்த தாண்டவமும் யாவைக்கும் அப்பாலாம்
மோனந்த மாமுத்தி யும்.

— உண்மை விளக்கம், பாடல் எண். 45

என உணர்த்துதலும் காண்க. ஓதும் ஐந்தெழுத்து "நமச்சிவாய" எனவும், உள்ளும் ஐந்தெழுத்து "சிவாய நம'' எனவும் கொள்ளுதல் மரபெனக் காண்க. நமசிவாய என்பது தூலபஞ்சாட்சரம் எனவும் சிவாய நம என்பது சூக்குமு பஞ்சாட்சரம் எனவும் கொள்வர்.

232. மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை யாள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: மந்திரமாக விளங்குகின்ற நான்கு வேதங் களும் ஆகி, தேவர்களின் சிந்தையில் நிலவி இருந்து அவர்களை ஆட்கொண்டு நன்னெறி பயப்பது, திருவைந்தெழுத்து ஆகும். இத்தகைய திருவைந் தெழுத்து வேள்வியை ஓம்பும் செம்மையுடைய அந்தணர் பெருமக்களின் மந்திரமாக இருந்து, காலச் சந்திகள்தோறும் ஓதப் பெற்று ஆற்ற வல்லதும் ஆகும்.

Koviloor Digital Library

சிறப்புரை: திருவைந்தெழுத்து வேதமாகத் திகழும் பாங்கினை, முந்தைய திருப்பாட்டிற்கு எடுத்தோதிய உண்மை விளக்கப் பாடலைக் கொண்டு அறிக.

233. ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: இவ் அரிய தேகத்தில் உள்ள உயிர்ப்பு, சக்தியை ஒருமிக்கச் செய்து, நிட்டை கூடப் பெற்று, ஞான விளக்கம் திகழச் செய்வதும், அத்தகைய நல்லறிவை நாடுபவர்களுக்குத் தோன்றும் அறியாமை யாகிய இடரைக் கெடுப்பதும், திருவைந்தெழுத்தாகும்.

நன்புலத் தேன் – சிவஞானத்தால் நுகரும் பேரின்பம்.

234. நல்லவர் தீயவர் எனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: புண்ணியப் பெருமக்களாயினும், பாவத்தின் மேலிட்டுக் கொடுமைகள் புரியும் தீயவர் களே என்றாலும், பாகுபாடு இன்றி சிவமுத்தியைக் காட்டுவிக்கும் ஆற்றல் உடையது, திருவைந்தெழுத்து. இயமனுடைய தூதுவர்களால் உயிர் பறிக்கப்படும் காலத்திலும், அதன் துன்பத்தைத் திருவைந் தெழுத்தானது நீக்கிக் காக்கும் நெறியுடையதாகும்.

சிறப்புரை: ஒருவர் தீயனவே செய்தாராயினும், அதனால் துன்புறுத்தும் தீவினையின் தாக்கத்தால் நலியுறாது, திருவைந்தெழுத்தினை ஓதி, நற்கதி பெறலாம் என உணர்த்தப் பெற்றது.

Koviloor Digital Library

235. கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: *மன்மதனின் அம்பானது, தேன் துளிர்க்கும் ஐந்து மலர்களாகிய தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை என்பனவற்றால் ஆனவை. இவ்வுலகில் உள்ள பூதங்கள் நிலம் நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐந்து உடையன; பொழில்கள் அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என ஐவகை யுண்டு; பாம்பின் படம் ஐந்து ஆகும்; ஈசனின் திருக்கரத்தில் மேவும் விரல்கள் ஐந்தாகும். திருவைந்தெழுத்து ஐந்து ஆகும்.*

சிறப்புரை: *ஐந்து உறுப்புக்களைக் காட்டி, அவை ஒவ்வொன்றும் ஐந்து வகையுடையனவாய்க் கூறித் திருவைந்தெழுத்தின் சிறப்பு ஓதப் பெற்றது. மன்மதனின் பஞ்சபாணம், ஐம்பூதங்கள் முதலாக உள்ள அனைத்தும் தனிச் சிறப்புடைமையும், அவற்றை வெல்வது அரிது என்னும் ஆற்றலை வெளிப்படுத்தி ஐந்தெழுத்தின் வல்லமையைத் தெளிவித்தலையும் நனி ஓர்க.*

இத்தன்மையில், "அஞ்சு கொலாம் அவர் ஆடு அரவின் படம்" எனவும், "அஞ்சு கொலாம் அவர் காயப்பட்டான் கணை" எனவும், (காயப்பட்டான் - மன்மதன்) ஓதியருளிய திருநாவுக்கரசர் வாக்கும் காண்க.

வன் - மதன் - வலிமையான மன்மதன்; அஞ்ச - ஐந்து ஆவன.

Koviloor Digital Library

236. தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையி னும்துணை அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: தும்மலும் இருமலும் உடலின்கண் நேருங் காலத்திலும், கொடிய துயரத்தால் நைந்து வாடுங் காலத்திலும், வினையின் வயத்தால் தீமையானது அடையும் காலத்திலும், இப்பிறவியில் மட்டும் அல்லாது, மறு பிறவியிலும், நாள்தோறும் ஓதப் பெறும் திருவைந்தெழுத்தானது துணையாகி நின்று நலம் பயக்கும்.

சிறப்புரை: தும்மல் இருமல் நேரும் கால நியதியில் சில விநாடிகள், உயிர்ப்பின் இடைவெளி காணும் தன்மை யிலும், திருவைந்தெழுந்தானது துணை நின்று காத்தலைச் சுட்டிற்று.

அம்மை – மறுபிறவி.

237. வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு மாநடம்
ஆடி உகப்பன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: திருவைந்தெழுத்தானது, சாதலும் பிறத்தலும் நீங்கிய பேறாளர்களாக்கும் ஆற்றல் உடையது. பீடிக்கப்பெற்ற தொல் பிணியைத் தீர்த்து நாள்தொறும் நல்ல செல்வத்தை அளித்து மகிழ்விக்கச் செய்யும் திறம் கொண்டதாகிய இத்திருவைந்தெழுத்து, சிறப்பான நடம் புரிந்து மகிழும் ஈசனால் பெரிதும் உகந்து ஏற்கப்படுவதாகும்.

Koviloor Digital Library

சிறப்புரை: திருவைந்தெழுத்தானது ஈசனால் ஓம்பப் படுவதாகும். பீடிக்கப்பெற்ற தொல்லையிலிருந்து காத்து நாளும் நனி பெருகும் செல்வத்தை வழங்கு தலும் இவ்வைந்தெழுத்தே எனச் சுட்டுவதாயிற்று. பீடை பாட்டு, வ. எண் 213 காண்க.

238. வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: வண்டு அமரும் கூந்தலை உடைய உமா தேவியால் போற்றப்படுவதும் மற்றும் இராவணன் கசிந்துருகிப் பாடி ஈசனாரின் அருளைப் பெற்று உய்யச் செய்ததும் திருவைந்தெழுத்து ஆகும். திருத்தொண்டர் கள் இத்திருவைந்தெழுத்தினைக் கொண்டு துதிக்க, அவர்களுக்கு அண்டங்களை ஆளுகின்ற பேற்றினை ஆக்க வல்லதும் இதுவே.

ஓதி – கூந்தல்

239. கார்வணன் நான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் காணுதற்கு ஒண்ணாத புகழ் வண்ணமாகிய திருவடி மலர்களின் செவ்வியை, நாள்தோறும் பெருமை கொள்ளுமாறு பேசிப் போற்றுவதற்கு ஆர்வமாக விளங்குவது திருவைந்தெழுத்தாகும்.

சிறப்புரை: ஈசனைப் புறத் தோற்றத்தால் காணாமையும், அகத்தில் ஞானரூபமாகக் காணப் பெறுதலும் இத்

Koviloor Digital Library

திருப்பாட்டு உணர்த்திற்று. இதனை நாவுக்கரசர் பெருமான், "நாடி நாரணன் நான்முகன் என்றிவர் தேடியும் திரிந்தும் காண வல்லரோ! மாட மாளிகை சூழ்தில்லை அம்பலத்து ஆடிபாதம் என் நெஞ்சுள் இருக்கவே" (ஐந்தாம் திருமுறை பதிகம் எண் 1; கோயில் பாடல் எண் 10) என ஈசனின் திருவடிப் பெருமையை உணர்த்தி அருளியதும் நோக்குக.

ஈசன் திருநாமத்தைப் பக்தியுடன் ஓதுதலும், அத்தகையோர்க்கு, ஆவன செய்து உய்விக்க வல்லது திருவைந்தெழுத்தே என உணர்த்தும் பாங்கில், "பேர் வண்ணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு ஆர்வண்ணம் ஆவன அஞ்செழுத்துமே" என ஓதப் பெற்றது. இது இறைவனின் திருநாமத்தைப் பேர் வண்ணம் எனவும், மந்திரச் சொல்லாதலைத் திருவைந்தெழுத்து எனவும் சுட்டப் பெற்றதாம். இத்தன்மையில் "மந்திரம் அஞ்செழுத்துமே" எனத் திருப்பாட்டு எண் 2; பாடல் வ. எண் 232இல் ஓதியருளியமையும் காண்க.

பேர் வணம் – பேர் வண்ணம், திருநாமங்கள். பேசிப் பிதற்றும் – அரனின் திருநாமத்தினைத் திரும்பத் திரும்பக் கூறி உரு ஏற்றுதல்.

240. புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே.

தெளிவுரை: புத்தர்களும் சமணர்களும், கூறும் பொய்யுரைகளை ஏற்காத உறுதியான சித்தம் உடையவர்கள், நன்கு தேர்ந்தும் தெளிவும் கொண்டவர்களாய்ச் சிவஞானம் தரவல்ல திருவெண்ணீறு அணியும் பேறுடையவர்கள் ஆவர்.

Koviloor Digital Library

அவர்களுடைய தீவினை ஆகிய பகையை மாய்க்கும் அத்திரம் என ஆவது திருவைந்தெழுத்து.

சிறப்புரை: திருவெண்ணீறு அணிந்து விளங்கும் அன்பர்கள், "வித்தக நீறணிவார்" என உணர்த்தப் பெற்றது. இது போதந்தருவது நீறு என்னும் பாங்கில், சிவஞானத்தை நல்க வல்லது என அறிக. அத்தகைய ஞானம் உற்றவர்களுக்குத் தீவினையை அன்றி வேறு பகை எதுவும் இல்லை என்பதனைச் சுட்டுமாறு "வினைப் பகைக்கு அத்திரம் ஆவன என" ஓதப் பெற்றது.

உறுதியான சிவபக்தி உடையவர்கள், மனத்தை அடக்கிப் புத்தியால் நன்கு தெளிந்து, உறுதியான சித்தம் உடையவர்கள் என்பது, "பொய் கொளாச் சித்தத்தவர்கள்" என உணர்த்தப் பெற்றது.

241. நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நற்றமிழின் நாயகனாய், நான்கு மறைகளும் வல்லவனாய், காழி நகரில் மேவும் பெருமக்களின் மன்னவனாய் மேவும் ஞானசம்பந்தன், நன்கு நினைத்து எத்தகைய குற்றத்தையும் நீக்கிக் காக்க வல்லதாக உரைத்த, திருவைந்தெழுத்துடைய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், தேவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: நற்றவத்தின் பயனாய் அருள் மேவும் திருநெறிய தமிழ் மொழியும், செம்மையுடைய

Koviloor Digital Library

ஆளுடைய பிள்ளையாரின் சிறப்புத் தோன்ற, நற்றமிழ் ஞானசம்பந்தன் எனவும் சுட்டப் பெற்றது. இத்திருப் பதிகத்தை ஓதும் அன்பர்கள் எல்லாப் பாவங் களிலிருந்தும் விடுவிக்கப்படுபவர்கள் ஆதலால், "அற்றம் இல் மாலை" என உணர்த்தப் பெற்றது.

281. திருவிற்கோலம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம் 32இல், இது, 14ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கூவம் என்பது ஊரின் பெயர். திரிபுரம் எரித்த காலத்தில், இறைவன் வில்லேந்திய திருக்கோலத்தில் வீற்றிருந்ததையொட்டித் திருவிற் கோலம் ஆயிற்று என்பது வரலாறு. இவ்வூருக்குக் ''கூபரக்னபுரி'' எனவும் சொல்லப்படுவதுண்டு. இத்தலம், நைமிசாரண்ய சேஷத்திரம்; கூவம் – ஊர் பெயர்; திருவிற் கோலம் – கோயில்.

இத்திருத்தலத்தில் காணும் சிறப்புக்களாவன:

1. தீண்டாத் திருமேனி, சுவாமி, மணல் இலிங்கம்.

2. அதிக மழை, வெள்ளம் பெருகும் காலங்களில் சுவாமியின் திருமேனியின் மீது முன்னெச்சரிக்கையாக வெண்மை படரும்; போர் நிகழ்வதாயின் செம்மை படரும்.

3. கோயிலிலிருந்து 2 கி.மீ. தொலைவில் திருமஞ்சன மேடை எனப்படும் கூவம் ஆற்றின் கரையிலிருந்து நீர் கொண்டு வந்து அபிடேகம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறி, வேறு இடத்திலிருந்து நீர்

Koviloor Digital Library

கொண்டு வந்து அபிடேகம் செய்தால் சுவாமியின் திருமேனியில் சிற்றெரும்புகள் படரும்.

4. பிஞ்சிவாக்கம் என்னும் கிராமத்திலிருந்து தினந் தோறும் உச்சிக்கால அபிடேகத்திற்குப் பால் கொண்டு வந்த பின்னரே அபிடேகம் செய்யப்படும். இது தொன்றுதொட்டு எவ்விதமான தடங்கலும் இன்றி, நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

5. இங்குள்ள கூபாக்கினி தீர்த்தம் என்னும் குளத்தில் தவளைகள் இல்லை. இக்குளத்தில் மூழ்கி இறைவனை வழிபடுவோர்க்குப் புத்திரப்பேறு உண்டாகும்.

6. இங்குள்ள பைரவர் சந்நிதியில் நாய் வாகனம் இல்லை.

7. கோயிலுக்கு எதிரில் உருத்திராக்க மரம் உள்ளது. இது சித்திரை மாதத்தில் காய்க்கும்.

சுவாமி : திரிபுராந்தகேஸ்வரர், திருவிற்கோல நாதர்

அம்பிகை : திரிபுராந்தகி, திரிபுரசுந்தரி

தீர்த்தம் : அக்கினித் தீர்த்தம்; இதற்கு அச்சிறுகேணி, கூபாக்கினி தீர்த்தம் என வேறு பெயர்களும் உண்டு.

பண் : காந்தார பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

242. உருவினார் உமையொடும் ஒன்றி நின்றதோர்
திருவினான் வளர்சடைத் திங்கள் கங்கையான்
வெருவிவா னவர்தொழ வெகுண்டு நோக்கிய
செருவினான் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: ஈசன், அழகிய வடிவத்தில் திகழும் உமா தேவியோடு ஒன்றி நின்று, திருவுடையவராகிச் சடை

Koviloor Digital Library

முடியில் திங்களும் கங்கையும் சூடியவர். அப் பெருமான், வானவர்கள் தொழுது போற்றுமாறு, வெகுண்டெழுந்து போர்க் கோலம் பூண்டவர்; அப் பரமன் உறைகின்ற இடம் திருவிற்கோலம் ஆகும்.

சிறப்புரை: இத் திருத்தலத்தின் வரலாற்றினை இத் திருப்பாட்டு சுட்டுவதாயிற்று. ஈசன் திரிபுரத்தை எரித்த காலத்தில் வில்லேந்திய திருக்கோலத்தில் தோன்றிக் காட்சி நல்கிய பெற்றியானது, "வெகுண்டு நோக்கிய பெற்றியினான்" என உணர்த்தப் பெற்றது. அத்திருக்கோலத்தைக் கண்டுற்ற வானவர்கள் அஞ்சித் தொழும் தன்மையும் சுட்டப் பெற்றது. ஈசனின் திருக்கோலம் இத்தகைய அச்சத்தைத் தருமாறு உடையதெனினும் அப்பெருமான் அழகுமிளிரும் உமா தேவியை உடனாகக் கொண்டு, திருவுடைய அருளாள னாய் மேவும் சிறப்பினைக் கொண்டு விளங்குதல் காண்க.

243. சிற்றிடை உமையொரு பங்கன் அங்கையில்
உற்றதோர் எரியினன் ஒருச ரத்தினால்
வெற்றிகொள் அவுணர்கள் புரங்கள் வெந்தறச்
செற்றவன் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: சிறிய இடையுடைய உமாதேவியைத் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு மேவும் ஈசன், அழகிய கையில் எரியும் நெருப்பைக் கொண்டு விளங்குபவர்; ஓர் அம்பினைக் கொண்டு அசுரர்களின் மூன்று புரங்களையும் எரிந்து சாம்பலாகுமாறு போர் செய்து வெற்றி கொண்டவர். அப் பெருமான் உறைகின்ற இடமாவது, திருவிற் கோலமேயாகும்.

சிறப்புரை: ஈசன் முப்புரங்களை ஒரே அம்பினைக் கொண்டு தொடுத்து, வெற்றி கொண்டவர் என இவண் சுட்டப் பெற்றது. இதனை,

Koviloor Digital Library

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர்தம் கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற.

—திருவாசகம் 295

என மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்த வாறும் காண்க.

244. ஐயன்நல் லதிசயன் அயன்விண் ணோர்தொழும்
மையணி கண்டனார் வண்ணம் வண்ணவான்
பையரவு அல்குலாள் பாகம் ஆகவும்
செய்யவன் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: ஈசன், யாவற்றுக்கும் தலைவர்; நல்ல அதிசயமாக விளங்கிப் புதுமைப் பொலிவு தோன்ற அருள் புரிபவர்; பிரமனும் தேவர்கள் முதலானோரும் தொழுகின்ற நீலகண்டர்; நல்வண்ணம் உடைய வளாகிய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர். அப் பெருமான் செம்மேனியராய் வீற்றிருக்கும் இடமாவது திருவிற்கோலமே ஆகும்.

சிறப்புரை: ஈசனை, "ஐயன்" எனப் போற்றி உரைத்த செம்மையினைக் காண்க. "ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" (திருவாசகம் - சிவபுராணம்) எனவும்; "ஐய! நின்னது அல்லது இல்லை மற்றொர் பற்று" (திருவாசகம் 77) எனவும்; "ஐயன் எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் ஆச்சோவே" எனவும் மாணிக்கவாசகர் அருளிச் செய்துள்ள பாங்கினையும் காண்க.

ஈசன் அதிசயமானவராய்த் திருவருள் புரிதலும், காட்சி நல்குதலும், திருக்கோலம் புனைதலும் தோன்று மாறு "நல்ல அதிசயன்" என உணர்த்தப் பெற்றது. இது,

Koviloor Digital Library

இத்திருத்தலத்தின் சிறப்பினைச் சுட்டுதலாகவும் அமையும். இத்தன்மையில், அம்பிகையின் அருள் திறத்தை, "அளியேன் அறிவு அளவிற்கு அளவானது அதிசயமே" எனவும், "அதிசயமான வடிவுடையாள்" எனவும் அபிராமி பட்டர் உரைத்தருளியவாறும் நோக்குக.

ஐயன் – தலைவன். மேலானவன்.

245. விதைத்தவன் முனிவருக்கு அறமுன் காலனை
உதைத்தவன் உயிரிழந்து உருண்டு வீழ்தரப்
புதைத்தவன் நெடுநகர்ப் புரங்கள் மூன்றையும்
சிதைத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: ஈசன், சனகாதி முனிவர்கள் என்று சொல்லப்படுகின்ற சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வருக்கும் அறப் பொருளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கினையும் உபதேசித்து அருளியவர்; காலன் உயிரிழந்து வீழுமாறு திருப்பாதத்தால் உதைத்தவர்; உலகத்தை அழித்த வன்மையுடைய முப்புர அசுரர்களை எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அப் பெருமானின் உறைவிடம் திருவிற்கோலமே ஆகும்.

சிறப்புரை: ஈசன், சனகாதி முனிவர்களுக்கு உபதேசித்தருளிய மாண்பு, "அறம் விதைத்தவன்" எனச் சுட்டப் பெற்றது. சரியை, கிரியை என்பன ஆற்றப்படுவன எனவும்; யோகம், ஞானம் என்பன அறியவும் உணரவும்படுவன எனவும் கொள்க. இத்தன்மையில் ஆற்றப்படும் அறங்கள் நன்கு விளைதலை நோக்கி, "விதைத்தவன்" என உணர்த்தும் பாங்காயிற்று.

Koviloor Digital Library

246. முந்தினான் மூவருள் முதல்வன் ஆயினான்
கொந்துலா மலர்பொழிற் கூக மேவினான்
அந்திவான் பிறையினான் அடியர் மேல்வினை
சிந்துவான் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: ஈசன், எல்லாப் பொருள்களுக்கும் மூலம் ஆனவர். மும்மூர்த்திகளுள் முன் விளங்கும் தலைமை காணும் முதல்வராகவும் திகழும் ஈசன், கொத்தாகப் பூக்கும் மலர்ப் பொழில் உடைய கூவம் என்னும் ஊரில் மேவியவர்; குறைந்து விளங்கும் பிறைச் சந்திரனைச் சூடியவர்; அடியவர்களைப் பற்றியுள்ள வினை யாவும் நீங்குமாறு செய்பவர்; அப்பெருமான் உறைகின்ற இடம், திருவிற்கோலம் ஆகும்.

சிறப்புரை: ஈசன், ஆதிப் பொருளாகவும் மூலப் பொருளாகவும் திகழ்தல், "முந்தினான்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "முந்தைகாண் மூவரினும் முதலானான் காண்" எனத் *(6.65.9; பாட்டு எண் 658)* திருநாவுக்கரசர் அருளிச் செய்தவாறும் காண்க.

மால் அறியா, நான்முகனும் காணா மலையாக விளங்குபவரை, உருத்திரன் அப்பெருமானின் திருவுளப் பாங்கின் வண்ணம் மேவி ஒழுகுதலும்; ஈசனோடு ஒருமித்து நிகழ்தலும் ஆயினமை கொண்டு, முந்தியவனாகி மூவருள் முதல்வன் எனவும் சுட்டப் பெறுவதாயிற்று.

செம்பினில் களிம்பு சேர்தல் இயல்பாதலைப் போன்று, மக்கட் பிறவியில் வினையானது பற்றி மேவுதலை "மேல் வினை" எனச் சுட்டப் பெற்றது. இவ்வினையானது, ஈசனை வணங்கிப் போற்றுவதால் அன்றிப் பிற வகையால் தீராது என்பதும், "அடியவர் மேல் வினை சிந்துவான்" என உணர்த்தப் பெற்றது.

Koviloor Digital Library

"முந்தை வினை முழுதும் மோய உரைப்பன்யான்" என மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறும் காண்க. இது நித்திய வழிபாட்டினை வலியுறுத்தியது.

கூக – கூவம். ஊர்ப் பெயர்.

247. தொகுத்தவன் அருமறை அங்கம் ஆகமம்
வகுத்தவன் வளர்பொழிற் கூக மேவினான்
மிகுத்தவன் மிகுத்தவர் புரங்கள் வெந்தறச்
செகுத்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: அரிய வேதங்களையும் அதன் அங்கமாகிய ஆகமங்களையும் தொகுத்து அளித்த ஈசன், பொழில் திகழும் கூவம் என்னும் ஊரில் மேவிக் கொடுமைகளை மிகுத்துச் செய்த முப்புர அசுரர்களை, எரிந்து சாம்பலாகுமாறு போர் செய்து அழித்து, திருவிற் கோலத்தை உறைவிடமாகக் கொண்டுள்ளவர்.

சிறப்புரை: ஈசன், நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும், இருபத்தெட்டு ஆகமங்களையும் தொகுத்து வகுத்தவர் எனச் சுட்டப் பெற்றது. இவ்வாகமங்கள் மூல ஆகமங்கள் இருபத்தெட்டு எனவும் அவற்றிலிருந்து தோன்றிய உப ஆகமங்கள் இருநூற்று ஏழு எனவும் ஆகும். இதனை,

இருபதும் எட்டுமே மூலம்உப பேதம்
இருநூறும் ஏழும்என எண்

என வரும், மறைஞானசம்பந்தர் அருளிச் செய்த (சைவ சமய நெறி, பொது இலக்கணம்; குறட்பா எண் 336) வாறும் காண்க. "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள்வாழ்க" என அருளிச் செய்த மாணிக்கவாசகர் தம் அமுத மொழியும் நோக்குக.

மிகுத்தவன் மிகுத்தவர் – கொடுமை மிகச் செய்த அசுரர்கள்.

Koviloor Digital Library

248. விரித்தவன் அருமறை விரிச டைவெள்ளம்
தரித்தவன் தரியலர் புரங்கள் ஆசற
எரித்தவன் இலங்கையர் கோன்இ டர்படச்
சிரித்தவன் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: அரிய வேதங்களை விரித்து ஓதிய சிவபெருமான், விரிந்து சென்ற கங்கையைச் சடை முடிவில் நிலவுமாறு தரித்தவர்; பகைவராகிய முப்புர அசுரர்களின் கொடுஞ் செயல்கள் யாவும் அற்றொழியு மாறு, அவர்களை எரிந்து சாம்பலாகச் செய்தவர்; இராவணன், கயிலையைப் பெயர்த்த போது அவன் இடர் உற்று நையுமாறு திருவிளையாடல் புரிந்தவர். அப் பெருமானின் உறைவிடமாவது, திருவிற்கோலம் ஆகும்.

சிறப்புரை: அஞ்ஞானத்தால் ஆணவம் பெருக இராவணன் செய்த செயல் எண்ணி இகழும் தன்மை "சிரித்தவன்" எனச் சுட்டப் பெறுவதாயிற்று. இது ஈசனின் அளவற்ற ஆற்றலை உணர்த்துவதாம்.

249. திரிதரு புரம்எரி செய்த சேவகன்
வரியர வொடுமதி சடையில் வைத்தவன்
அரியொடு பிரமனது ஆற்ற லால்உருத்
தெரியலன் உறைவிடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: சிறகுகளைப் பெற்றுக் கொண்டு, வானத்தில் திரிந்து சேதங்களையும் தேவர்களுக்குத் தீங்குகளையும் செய்த முப்புரங்களை எரிந்து சாம்பலாகுமாறு புரிந்த ஈசன், அரவமும் சந்திரனும் சடை முடியில் வைத்த பெருமான் ஆவார். அப் பெருமான், அரியும் பிரமனும் தமது ஆற்றலைப் பெரிதாகக் கொண்டு முனைந்ததால் காணுதற்கு

Koviloor Digital Library

அரியவனாகியவர். அவரது உறைவிடமானது, திருவிற் கோலம் ஆகும்.

சிறப்புரை: ஈசன் ஆற்றிய எட்டு வீரச் செயல்களில் ஒன்றாகிய முப்புரத்தை எரித்ததையொட்டிச் சிறப்புப் பெயராகச் சேவகன் எனப் போற்றப்படுவதாயிற்று. இத்தன்மையில். "குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்" *(திருவாசகம்; கீர்த்தித் திருஅகவல்)* எனவும்,

ஆவகை நாமும் வந்து அன்பர்தம் மோடு
ஆட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலும் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டும்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெருமான் புரஞ் செற்ற கொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்துநாமே

— திருவாசகம் 210

எனவும் அருளிச் செய்த மாணிக்கவாசகர் தம் அமுத மொழியாலும் காண்க.

சேவகன் – சிவபெருமான்; உருத் தெரியலன் – உருவைத் தெரியுமாறு செய்யாதவன். இது ஈசனின் எல்லையற்ற ஆற்றல் உடைமை என்னும் குணத்தை வெளிப்படுத்திற்று.

250. சீர்மைஇல் சமணொடு சீவ ரக்கையர்
நீர்மைஇல் உரைகள்கொள் ளாத நேசர்க்குப்
பார்மலி பெருஞ்செல்வம் பரிந்து நல்கிடும்
சீர்மையி னான்இடம் திருவிற் கோலமே.

தெளிவுரை: செம்மையான புகழின்பாற் கொள்ளாத சமணரும் சாக்கியரும் உரைக்கும் அன்பற்ற

Koviloor Digital Library

உரைகளைக் கொள்ளாது, ஈசன்பால் அன்பு கொண்டு, உலகில் பெருஞ் செல்வத்தைப் பரிவுடன் நல்குபவர், ஈசன், அத்தகைய புகழ் மிகுந்த பெருமான் உறையும் இடமானது, திருவிற்கோலம் ஆகும்.

சிறப்புரை: *பார்மலி பெருஞ் செல்வமாவது, மீண்டும் பிறவாமையாகிய தன்மையாய்க் கொள்க. இதனை "வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை யாண்டும் அஃது ஒப்பது இல்" (திருக்குறள் 363) என்னும் கருத்தின் வழியும் காண்க. ஈசனின் திருவருள், மறுமைக்குரிய பெருஞ் செல்வத்தை நல்குதலையும் இம்மையில் பேரின்ப வாழ்வின் நுகர்ச்சியினை நல்கும் ஆற்றலையும் கொள்க.*

இத் திருத்தலமானது முப்புரத்தை எரியச் செய்த தன்மையில், திரிபுராந்தகேஸ்வரராய்த் திகழும் திருக்கோலத்தைத் தலச்சிறப்பாகக் கொண்டு எடுத்தோதுதலைக் காண்க.

251. கோடல்வெண் பிறையனைக் கூக மேவிய
சேடன செழுமதில் திருவிற் கோலத்தை
நாடவல்ல தமிழ்ஞான சம்பந்தன
பாடவல் லார்களுக்கு இல்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வளைந்ததும், குறையுடையதும் ஆகிய சந்திரனைச் சடை முடியில் சூடி விளங்குகின்ற சிவபெருமான், கூவம் என்னும் ஊரில் பெருமை கொண்டு மேவும் மதில்களை உடைய திருவிற் கோலத்தை நாட வல்ல தமிழ் ஞானசம்பந்தனது பாடலைப் பாட வல்லவர்களுக்குப் பாவமானது விலகிச் செல்லும்.

Koviloor Digital Library

சிறப்புரை: பெருமையும் செழுமையும் தரவல்ல திருக் கோயிலின் சிறப்பு, "சேடன செழுமதில் திருவிற் கோலம்" எனச் சுட்டப் பெற்றது. இத்திருப்பதிகத்தை ஓதுபவர்கள் வினைத் துயர் நீங்கப் பெற்றவராய் இம்மையிலும் மகிழ்ந்து விளங்கி மறுமையிலும் நற்பேற்றுக்கு உரியவர் ஆவார்கள் என்பது இல்லை பாவமே என்பதால் தெளிவாம்.

கோடல் – வளைந்த தன்மை.

282. திருக்கழுமலம்

தல விளக்கம்: *பதிகம் எண் 260 காண்க.*

பதிகக் குறிப்பு: *பாண்டிய நாட்டில் இருந்தபோது தமது தந்தையாரைக் கண்டு, கழுமலநாதனை நினைந்து நலம் வினவிப் பாடியது.*

பண் : *காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

252. மண்ணின்நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல்ல கதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: இப்பூவுலகில் நல்ல வண்ணம் வாழலாம். நற்கதி என வழங்கப் பெறும் முத்தி நலனை அடைய வேண்டும் என எண்ணும் தன்மையிலும், அது கைவரப் பெறும். இப்பேற்றினை அளிக்க வல்லது கழுமலம் எனப்பெறும் வளம் மிகுந்த நகராகும். அத் திருத்தலத்தில் பெண்ணின் நல்லாளாகிய உமா

Koviloor Digital Library

தேவியாரை உடனாகக் கொண்டு பெருந்தகையாகிய ஈசன் நன்கு வீற்றிருப்பவர்.

சிறப்புரை: கழுமலநாதனைக் கண்டு தரிசனம் செய்பவர்களுக்கு இப்பூவுலக வாழ்க்கையானது நல்ல வண்ணமாக, மகிழ்ச்சியும் வளமும் கொண்டு அமையும் என ஓதப் பெற்றது. நற்கதியாகிய முத்தியின்பமானது, மறுமைக்கண் வாய்த்தலை எண்ணுங்காலத்து, அதுவும் கைகூடும் என்பதும், அவ்வுலக வாழ்க்கையானது, நல்ல வண்ணம் வாழும் இப்பூவுல வாழ்க்கையில் காணும் மகிழ்ச்சிக்குக் குறைவுபடாத சிறப்புடையதாக விளங்கும் என்பதும் குறிப்பால் சுட்டப் பெறுமாறு, "குறைவிலை" என்று உரைப்பதாயிற்று.

"மனித்தப் பிறவியும் வேண்டுவனே இந்த மாநிலத்தே" என அப்பர் பெருமான் அருளிச் செய்த வாறு, ஈசனாரின் திருக்கோலக் காட்சியைக் காண வேண்டினும் அத்தகைய பேறு வாய்க்கும் என்பதும், நற்கதி நாடிய ஞான்று அதுவும் கிடைக்கும் என்பதும் தோன்ற, "எண்ணின்" எனும் சொல் சுட்டும்.

253. போதையார் பொற்கிண்ணத்து அடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: ஞானம் பெருகும் அடிசிலைப் பொற் கிண்ணத்தில் கொண்டு ஈசனின் ஆணைப்படி, உமாதேவியார் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஊட்டுவித்து அருளிச் செய்தவர். அதுகண்ட சிவபாத இருதயர், பால் அறாவாயராக விளங்கிய ஆளுடைய

Koviloor Digital Library

பிள்ளையாரை முனிந்து நோக்கி, யார் தந்த அடிசில் என வினவ, ஈசன், திருக்காட்சியினை நல்கி ஆட்கொண்டவர். அப்பெருமான், காதில் குழையுடையவர். உமாதேவியை உடனாகக் கொண்டு கழுமலமாகிய வள நகரில் வீற்றிருப்பவர், அவ் இறைவனே.

சிறப்புரை: ஞானப்பால் அருந்தி முதற் பாட்டு அருளிச் செய்த காலத்தில், "தோடுடைய செவியன்" எனவும், இஞ்ஞான்று, "காதையார் குழையினன்" எனவும் தோடும், குழையும் பொருந்திய தன்மையில் உரைத்தருளிய பெற்றியும், ஈசன் அத்தகைய நிலையில் திருக்காட்சியருளிய பாங்கும் ஓர்க. இந்நெறியில், "நனவிலும், கனவிலும் நாளும் தன்னொளி நினைவிலும் எனக்கு வந்து எய்தும் நின் மலன்" என *(3.21.1 பாட்டு வ. எண் 220)* அருளிச் செய்த மாண்பும் காண்க. இத் திருப்பாட்டு பாண்டிய நாட்டின்கண், மன்னன்பால் பற்றிய வெப்பு நோய் நீங்கப் பெற்ற பின்னர், தம்மைக் காணப் போந்த தந்தையாராகிய சிவபாத இருதயரை நோக்கிக் கழுமலநாதனின் அருளை வியந்து ஓதப் பெற்றது.

போதை – மலர் போன்ற வடிவம்; போதம் எனலும் பொருந்தும்.
போதம் – அறிவு, ஞானம்.

254. தொண்டணை செய்தொழில் துயரறுத்து உய்யலாம்
வண்டணை கொன்றையான் மதுமலர்ச் சடைமுடிக்
கண்துணை நெற்றியான் கழுமல வளநகர்ப்
பெண்துணை யாகஒர் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: தொன்றுதொட்டு மன்னுயிரைப் பற்றி வருகின்ற வினையால் உண்டாகும் துயரத்தைக் களைந்து உய்தி அடைவதற்காகக் கொன்றை மலரைச்

Koviloor Digital Library

சடை முடியில் தரித்தும், நெற்றியில் ஒரு கண் கொண்டும், கழுமலம் என்னும் வள நகரில், உமாதேவியை உடனாகக் கொண்டு, ஈசன் வீற்றிருக்கின்றார்.

தொண்டணை – தொன்று தொட்டு சேர்ந்து வருவது வினையை உணர்த்தியது. ஈசன் திருத்தொண்டும் ஆம். பெண் துணை – உமாதேவியை உடனாக்கிப் பாகம் கொண்டு விளங்குவது.

255. அயர்வுளோம் என்றுநீ அசைவுஒழி நெஞ்சமே
நியர்வளை முன்கையாள் நேரிழை யவளொடும்
கயல்வயல் குதிகொளும் கழுமல வளநகர்ப்
பெயர்பல துதிசெயப் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: நெஞ்சமே! வினைத் துன்பத்தால் தளர்வடைந்து எதுவும் கைகூடப் பெறாது ஆயிற்று என்று தளர்ச்சி கொள்ள வேண்டாம். ஒளி மிக்க வளையலை அணிந்த கையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு, கயல்கள் குதிக்கும் நீர்வளம் மிகுந்த கழுமலம் என்னும் வளமையான நகரில், பலவாகிய புகழ்மிகும் திருப்பெயர்கள் கொண்டு துதிசெய்யுமாறு, ஈசன் வீற்றிருக்கின்றவர் அல்லவா!

சிறப்புரை: ஈசன் பலவாறான திருநாமங்களைக் கொண்டு விளங்குதல், அப்பெருமானை ஏத்தி வணங்கி வினைத் துயரை நீக்குதற் பொருட்டேயாகும் எனச் சுட்டப் பெற்றது. “பெயர் பல துதி செயப் பெருந் தகை இருந்ததே” என ஓதியது வழிபாட்டின் கட்டளை ஆயிற்று. இத்தன்மையில், “ஒரு நாமம் ஓருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ” என மாணிக்கவாசகர் அருளிச் செய்தவாறும் காண்க.

நியர் – ஒளி; பெயர் – திருநாமம், புகழும் ஆம்.

Koviloor Digital Library

256. அடைவிலோம் என்றுநீ அயர்வுஒழி நெஞ்சமே
விடையமர் கொடியினான் விண்ணவர் தொழுதெழும்
கடையுயர் மாடமார் கழுமல வளநகர்ப்
பெடைநடை யவளொடும் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: நெஞ்சமே! திருவடிப் பேற்றை அடையும் வகை இல்லையே எனத் தளர்வு கொள்ள வேண்டாம். இடபக் கொடியுடைய ஈசன், தேவர்கள் தொழுது போற்றும் கழுமலமாகிய வளம் பொருந்திய நகரில் உமாதேவியாரோடு வீற்றிருப்பவர். அப்பெருமானை ஏத்தி வழிபட்டு நலம் கொள்க என்பது குறிப்பு.

சிறப்புரை: கழுமலநகரின் பெருமை, "கடையுயர் மாடம் ஆர்" எனச் சுட்டப் பெற்றது. இது ஊழிக் காலத்திலும் கடலால் கொள்ளப்படாமல் உயர்ந்து விளங்கும் சிறப்புடையது எனலும் ஆகும்.

257. மற்றொரு பற்றிலை நெஞ்சமே மறைபல
கற்றநல் வேதியர் கழுமல வளநகர்ச்
சிற்றிடைப் பேரல்குல் திருந்திழை யவளொடும்
பெற்றெனை யாளுடைப் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: நெஞ்சமே! ஈசனைத் தவிர பற்றக் கூடியது வேறு இல்லை. நான்கு மறைகளும் அதன் தொடர் புடைய பலவும் கற்று, அதன்படி ஒழுகும் வேதியர்கள், பெருமை சேர்க்கும் கழுமலமாகிய வளநகரில், உமாதேவியை உடனாகக் கொண்டு, என்னை ஆளுடைய ஈசன் விளங்குபவர் அல்லவா!

சிறப்புரை: ஞானப்பால் தந்து ஆண்ட ஈசனின் அருள் வண்ணத்தைப் போற்றி, "பெற்று, எனை ஆளுடைய பெருந்தகை" எனச் சுட்டும் சொல் வண்ணம் காண்க. ஈசனைப் பெற்ற தாயாகவும், தந்தையாகவும்

Koviloor Digital Library

உணர்த்தும் மெய்ம்மொழியும் காண்க. இத்தன்மையில், "தாயும் நீயே தந்தை நீயே சங்கரனே அடியேன் ஆயு நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்" என முதல் திருமுறை – திருவலிவலம் திருப்பதிகம், பாட்டு வ. எண் 543 வாயிலாக அருளிச் செய்த பாங்கும் ஓர்க.

258. குறைவளை வதுமொழி குறைவொழி நெஞ்சமே
நிறைவளை முன்கையாள் நேரிழை யவனொடும்
கறைவளர் பொழிலணி கழுமல வளநகர்ப்
பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: மனக் குறை கொண்டு மொழியும் சொற்களை, நெஞ்சமே! விடுவாயாக. நிறைந்த வளையலை முன்கையில் அணிந்து மேவும் உமாதேவி யாரை உடனாகக் கொண்டு, பொழில் திகழும் கழுமலத்தில், பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடிய ஈசன், வீற்றிருப்பவர் அல்லவா!

இத்தகைய குறை யாவும் அப்பெருமான் திருவருளால் நீங்கப் பெறும் என்பது குறிப்பு.

259. அரக்கனார் அருவரை எடுத்தவன் அலறிட
நெருக்கினார் விரலினால் நீடியாழ் பாடவே
கருக்குவாள் அருள்செய்தான் கழுமலவளநகர்ப்
பெருக்குநீ ரவளொடும் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: அரக்கனாகிய இராவணன் பொருந்தி மேவும் பெருமையுடைய திருக்கயிலையை எடுத்தவன், அவன் அலறித் துடிக்குமாறு, ஈசன் தனது திருப்பாத விரலால் நெருக்கினார். பின்னர், அவ் அரக்கன் நீண்டு இனிமை தரும் யாழ் மீட்டிப் பாட, கூர்மையான வாளினை அருள் செய்தார். அப்பெருமான் கழுமல

Koviloor Digital Library

வள நகரில் விளங்குபவர். அப்பெருந்தகை, பெருகிச் சேரும் அன்பினளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு நனி வீற்றிருப்பவர் அல்லவா!

சிறப்புரை: உமாதேவியைப் பெருக்கும் அன்புடையவள் என்னும் சிறப்பின் வழி உணர்த்தப் பெற்றது. இத் திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலின் வாயிலாகவும் உமாதேவியை உடனாகக் கொண்டு மேவும் "பெருந்தகை இருந்ததே" என, மகுடமாக வைத்து ஓதியருளிய மாண்பினை நோக்குக.

இத்தன்மையில், பெருக்கு நீரவள் என்னும் தொடரானது, உமாதேவி கருணை வயத்தினளாய் அன்பு பெருக்கும் சக்தியாய் ஈசனுடன் விளங்கி, மன்னுயிர்க்கும் இன்பத்தைப் பெருக்குகின்ற எழில் மேவும் இறைவி ஆயினள் என்பதாம்.

260. நெடியவன் பிரமனும் நினைப்பரி தாய்அவர்
அடியொடு முடியறி யாஅழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை யவளொடும் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் காணுதற்கு அரிய பொருளாய், அடியும் முடியும் அறியாத தன்மையில், அழல் உருவாய் ஓங்கியவர், சிவபெருமான். அப்பெருமான், மணம் கமழும் பொழில் திகழும் கழுமலம் எனப்படும் வளமையான நகரில், பெண் யானையின் நடை போன்று விளங்கும் உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருப்பவர் அல்லவா!

அப்பெருமானின் இன்னருளால் நலமே நிகழும் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

சிறப்புரை: திருமாலும் பிரமனும் ஈசனின் அடிமுடி காண முடியாத தன்மை நனிபுகலுமாறு, "நினைப் பரிதாய் விளங்கும் ஈசன்" எனச் சுட்டப் பெற்றது. நினைப்பதற்கே அரியவனாகிய பரமனைக் காண ஒண்ணாது என்பது விளக்கமாயிற்று. களிறு நடையினை ஆணுக்குச் சிறப்பாகக் கூறுதலைப் போன்று, "பிடி நடையவள்" என மரபு நோக்கி, உமாதேவியாருக்கு உவமையாகக் கூறப்பெற்றது.

அழலின் தோற்றமும் அதன் எல்லையும் அறிய முடியாத தன்மையை, "அடியொடு முடியறியா அழல் உரு" என ஓதப் பெற்றது.

பிடி – பெண் யானை.

261. தாருறு தட்டுடைச் சமணர்சாக் கியர்கள்தம்
ஆருறு சொற்களைந்து அடியிணை அடைந்துய்ம்மின்
காருறு பொழில்வளர் கழுமல வளநகர்ப்
பேரறத் தாளொடும் பெருந்தகை இருந்ததே.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் உண்மைப் பொருளை நவிலாது, தமக்குப் பொருந்தியவாறு உரைக்க, அவற்றைக் களைந்து, ஈசனின் திருவடி இணை மலரை அடைந்து உய்வீராக. அத்தகைய நற்பேறு அளிக்கும் தன்மையில் பொழில் வளர் கழுமலத்தில், பேரறத்தாளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு, ஈசன் விளங்குபவர் அல்லவா!

சிறப்புரை: உமாதேவி பேரறத்தாள் என ஓதப் பெறுகிறாள். அம்பிகை, காஞ்சியம்பதியில் அறம் வளர் செல்வியாக வீற்றிருந்து, முப்பத்திரண்டு அறங்களைப் புரிந்தனள் எனவும் அத்தகைய அறங்களை மேற்கொள்ளும் பொருட்டு, ஈசன், இரு நாழி நெல்

Koviloor Digital Library

அளித்தனன் என்பதும் புராண வரலாறு. இதனை, "ஐயன் அளந்த படி இரு நாழி கொண்டு அண்டமெல்லாம் உய்ய அறம் செயும் உன்னையும் போற்றி, ஒருவர் தம்பால் செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்று பொய்யும் மெய்யும் இயம்ப வைத்தாய்; இதுவோ உன்றன் மெய்யருளே" என, அபிராமிபட்டர் அருளிச் செய்தவாறும் காண்க.

அறங்கள் 32 ஆவன. ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்கு உணவு, அறுசமயத்தார்க்கு உண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச் சோறு, ஐயம் இடுதல், தின்பண்டம் தருதல், அறவைச் சோறு, மகப் பேறு, மகவு வளர்த்தல், குழந்தைக்குப் பால், பிணஞ்சுடுதல், துகில் அளித்தல், சுண்ணம், மருந்து, சலவைத் துணி, நாவிதப்பணி, கண்ணாடி, காதணி, கண் மருந்து, தலைக்கு எண்ணெய், கன்னிகாதானம், பிறர் துயர் தீர்த்தல், தண்ணீர் தருதல், போகம், மடம், தடம், சோலை, விலங்கிற்குணவு, ஆவுறிஞ்சு தறி, ஏறுவிடுத்தல், உயிர்காத்தல் என்பன.

262. கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோடு இருந்தஎம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவார் அவர்கள்போய் விண்ணுலகு ஆள்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நன்னீர் வளமும் தேன் வளமும் மல்கும் கழு மல நகரில் உமாதேவியோடு வீற்றிருந்த எமது தலைவனைப் போற்றிய அருந்தமிழாய் விளங்கும் ஞானசம்பந்தனது செந்தமிழ் எனப் பெறும் இத்திருப் பதிகத்தை விரும்பி ஏத்தி ஓதவல்லவர்கள், விண்ணுலகில் ஆட்சிமை கொள்வார்கள்.

Koviloor Digital Library

சிறப்புரை: விண்ணுலக ஆட்சிமை மறுமையிலும், நற்பேற்றின் தண்மை இம்மையிலும் வாய்க்கும் என்பது குறிப்பு. தமது தந்தையாரைப் பார்த்துப் "பெருந்தகை இருந்ததே" என விளித்தல் வாயிலாக உரைத்தமை ஈசனைப் போற்றிய மாண்பு எனக் கொள்க.

அருந்தமிழ் ஞானசம்பந்தன் – தமிழுக்குக் கிடைத்தற்கரிய ஞானசம்பந்தன். செந்தமிழ் – செம்மை நல்கும் தமிழ்.

283. திருந்து தேவன்குடி

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலங்கள் 63இல் 42ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. நண்டாங் கோயில் என வழங்கப்படுகிறது. நண்டு பூசித்த தலம். கோயிலின் பெயர் திருந்து தேவன்குடி. ஊர் ஏதும் இல்லை. அருகில் உள்ள தலம் திருவியலூர்.

சுவாமி : கற்கடகேஸ்வரர்

அம்பிகை : அருமருந்தம்மை, அபூர்வநாயகி

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

263. மருந்துவேண் டில்இவை மந்திரங் கள்இவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்இவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழும் அடிகள் வேடங்களே.

தெளிவுரை: திருந்து தேவன்குடியில் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவேடப் பொலிவுகள் யாவும் அருந்தவத்தோரால் தொழப் பெறுபவை. அத்தகைய திருப்பொலிவைக் கண்டு தரிசனம் செய்தால், நோய்

Koviloor Digital Library

தீர்க்கும் மருந்து எனத் தோன்றி நலம் தரும்; மந்திர வாசகமாக விளங்கி வெற்றியை நல்கும்; மறுமைக்கு உறுதுணையாக வழங்கப்படும் புராண வரலாறு போன்று புண்ணியத்தை ஈட்டித் தரும்.

சிறப்புரை: குருலிங்க சங்கம வழிபாட்டு நெறியில், இது சங்கம வழிபாட்டினை உணர்த்திற்று. ஈசனின் திருவேடப் பொலிவு தரும் திருநீறு, உருத்திராக்கம், சடை ஆகியவற்றின் சிறப்பால் ஆட்சி புரிந்த மூர்த்தி நாயனார்தம் பெற்றியும் காண்க. இதனை, "மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரைத்தவாறும் கொள்க. திருவெண்ணீறு அணிந்து மேவுதல் அடியார் திருவேடப் பொலிவின் சிறப்பாதலை, "சேவடி பரவி வெண்ணீறு அணிகிலாதவரைக் கண்டால் அம்ம நான் அஞ்சுமாறே" என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த வண்ணமும் நோக்குக.

264. வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் கப்படாப் பொருளை யோர்விப்பன
தீதில்தே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதிஅந் தம்மிலா அடிகள்வே டங்களே.

தெளிவுரை: மன்னுயிரின் தீவினைகளை இல்லாமை ஆக்கும் தேவன் குடியில் வீற்றிருக்கும் ஆதியும் அந்தமும் இல்லாத ஈசனின் திருவேடப்பொலிவானது, அலங்காரப் பொருள்களை நல்கியும், தீவினைகளை அழித்தும், ஞான நூல்களின் நுண்ணிய பொருள்களை நனி உணருமாறு செய்வித்தும் அருள்புரிய வல்லது.

சிறப்புரை: மக்கள் தம் தம் இல்லங்களிலிருந்து திருக் கோயில் முதலான சிறப்புடைய இடங்களுக்குச்

Koviloor Digital Library

செல்லும்போது தூய ஆடைகளை உடுத்தியும், இதர அணிகளைப் பூண்டும் செல்லுகின்ற பாங்கானது, "வீதி போக்கு ஆவன" என்னும் தொடரால் உணர்த்தப் பெற்றது. ஞான நூல்களின் பொருள்களை உள்ளத்தில் ஊறி நின்று சிவனருளே உணர்த்திவைக்கும் என்னும் குறிப்புத் தோன்ற, "பொருளை ஓர்விப்பன" எனச் சுட்டப் பெறுதலாயிற்று.

ஈசன், ஆதியும் அந்தமும் இல்லாதவன் என்பதனை, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியை யாம் பாடக் கேட்டேயும்" என மாணிக்க வாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ளவாறும் காண்க.

அடிகள் வேடங்கள் என்பதனைக் திருக்கோயில் திருவிழாக் காலங்களில் திருவீதி உலா வரும் ஈசன் திருக்காட்சியும் கொண்டு ஓர்க.

265. மானம்ஆக் குவ்வன மாசுநீக் குவ்வன
வானையுள் கச்செலும் வழிகள் காட்டுவ்வன
தேனும்வண் டும்மிசை பாடுந்தே வன்குடி
ஆனஞ்சா டும்முடி அடிகள்வே டங்களே.

தெளிவுரை: தேனின் மணமும், வண்டின் இசையும் பெருகித் திகழும் தேவன் குடியில் வீற்றிருக்கும் ஈசன், பஞ்ச கௌவியத்தைப் பூசனைப் பொருளாகக் கொண்டு விளங்கும் அடிகள் ஆவர். அப்பெருமானின் திருவேடப் பொலிவானது, மன்னுயிர்க்குப் பெருமை தரவல்ல புகழை மேம்படச் செய்யும்; குற்றம் புரிந்து தீவினைகளை வளர்க்கும் அஞ்ஞானமாகிய மாசினை நீக்கும்; உயர்ந்த பதவியாகிய சாலோக, சாமீப, சாரூப, சாயுச்ச நிலைகளுக்குச் செல்லுகின்ற வழிகளைக் குரு மூர்த்தமாக விளங்கி உணர்த்தியருளும்.

Koviloor Digital Library

சிறப்புரை: நல்வினைப் பயனால் தேவலோக நல்வாழ்வும், அதன் கால அளவு நிறைவுற்றதும் மீண்டும் இவ்வுலகில் மேம்பாடான நிலையில் பிறவி கொள்ளுதல் என்பது சாத்திர விதியாகும். இறைவனுடைய திருவருள் மட்டுமே பிறவிப்பிணியை நீக்க வல்லதென்பது, "வானை உள்கச் செலும் வழிகள் காட்டுவன" எனக் குறிப்பால் உணர்த்துவதாயிற்று.

266. செவிகளார் விப்பன சிந்தையுள் சேர்வன
கவிகள்பா டுவ்வன கண்குளிர் விப்பன
புவிகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அவிகள்உய்க் கப்படும் அடிகள்வே டங்களே.

தெளிவுரை: புவியின் வளத்தைப் பெருக்கும் நீர்வளம் மேவும் தேவன்குடியில், வேள்வியின் அவிர்பாகத்தைக் கொண்டு திகழும் அடிகளாகிய ஈசனின் திருவேடப் பொலிவானது, செவிகளுக்கு இனிமை விளங்கிச் சிந்தையில் சேரும் கருத்துக்களை நல்கவல்லது; ஈசனின் நறும்புகழைக் கூறும் கவிகளைப் பாடவைக்க வல்லது; கண்களுக்கு இனிய காட்சியினைக் காட்டியருள வல்லது.

சிறப்புரை: ஈசனின் வேடப் பொலிவு, செவிப் புலன் வழியாய் மேவும் இனிமையும், வாயின் வழி காணும் புகழ்ச் சொல்லும், கண் வழி காணும் குளிர்ச்சியும் ஆற்றுவிக்கும் சிறப்பினை இத் திருப்பாட்டு சுட்டுவதாயிற்று.

267. விண்ணுலா வும்நெறி வீடுகாட் டும்நெறி
மண்ணுலா வும்நெறி மயக்கம்தீர்க் கும்நெறி
தெண்ணிலா வெண்மதி தீண்டுதே வன்குடி
அண்ணலான் ஏறுடை அடிகள்வே டங்களே.

Koviloor Digital Library

தெளிவுரை: தெளிந்த நிலவினைத் தொடும் உயர்ந்த மதில்களை உடைய தேவன்குடியில் வீற்றிருக்கும் அண்ணலாகிய ஈசன், இடப வாகனத்தையுடைய அடிகள் ஆவர். அப்பெருமானின் வேடத் திருப்பொலிவு, தேவர் உலகத்தில் மேவும் நெறியைக் காட்டும்; முத்தி நெறி காட்டும்; இப்பூவுலகில் வாழும் நன்னெறியைக் காட்டி அஞ்ஞானத்திலிருந்து தெளிவிக்கும்.

சிறப்புரை: ஈசனின் திருக்கோல வண்ணமானது அஞ்ஞானத்தை நீக்கி, மண்ணுலகில் வாழும் செல்வத்தை அளிப்பதுடன் விண்ணவர் உலகமும், முத்திப் பேறும் கிடைக்கச் செய்யும் ஆற்றல் உடைய தென ஓர்க. மயக்கம் தீர்க்கும் நிலையில் ஞானத்தை அடைந்த மன்னுயிர், எந்நெறியைப் பற்றுதல் மேன்மை உடையது என்று ஆயும் நெறியை இறைவன் திருக்குறிப் பின் வண்ணம் காணவல்லது எனக்கொள்க.

அடிகள் – சிவபெருமான்.

268. பங்கம்என் எப்படர் பழிகள் என்னப்படா
புங்கம்என் னப்படர் புகழ்கள்என் னப்படும்
திங்கள்தோ யும்பொழில் தீண்டுதே வன்குடி
அங்கம்ஆ றும்சொன்ன அடிகள்வே டங்களே.

தெளிவுரை: உயர்ந்த பொழில் கொண்ட தேவன்குடி யில் வீற்றிருக்கும் வேதத்தின் ஆறு அங்கங்களையும் விரித்து ஓதிய ஈசனின் திருவேடப் பொலிவு, மன்னுயிர் களுக்கு, ஈனத் தன்மையால் உண்டாகும் பழிகளி லிருந்து காக்கும்; புகழும் தரும்.

சிறப்புரை: அரனடிக்கு அன்புடையவர் செய்யும் பணிகள் அனைத்தும் மேன்மை அடைதலும்,

Koviloor Digital Library

அத்தகைய அன்பு கொள்ளாதவர்கள் செய்யும் செயல் உயர்வுடைத்தாய் இருப்பினும் போற்றப்படாது சிறுமை அடைதலும் சுட்டப் பெற்றது. இந்நெறியில்,

அரனடிக் கன்பர் செய்யும்பாவமும் அறம தாகும்
பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்
வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமை யாகி
நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே.

பாலன் – சண்டேஸ்வரர். மணலால் ஆன சிவலிங்கத்தை இடந்த தனது தந்தையின் காலை வெட்டியவர்.

எனச் சிவஞான சித்தியார் (சுபக்கம்; பாடல் எண் 119) அருளிய வண்ணமும் காண்க.

பங்கம் – இழிவு, ஈனம்; புங்கம் – உயர்வு

269. கரைதல்ஒன் றும்மிலை கருதவல் லார்தமக்கு
உரையில் ஊனம்மிலை உலகினில் மன்னுவர்
திரைகள்பொங் கப்புனல் பாயுந்தே வன்குடி
அரையில்வெண் கோவணத்து அடிகள்வே டங்களே.

தெளிவுரை: அலைகள் பெருகுமாறு பாயும் நீர் வளம் மிகுந்த தேவன்குடியில், ஒளி மிக்க கோவண ஆடை கொண்டு மேவும் ஈசனின் திருவேடப் பொலிவானது, குற்றம் இல்லாத தன்மையில் விளங்குதலும், அதனைக் கருத வல்லவர்களுக்குக் குறை நீங்கப் பெற்று உலகில் பெருமையை நல்குதலும் ஆகும்.

சிறப்புரை: ஈசனின் கோவண ஆடையின் சிறப்பு இவண் சுட்டப் பெற்றது. இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

ஆவணம் செய்து ஆளும் கொண்டு
வரைது கிலோடு பட்டு வீக்கிக்
கோவணமேற் கொண்ட வேடம்
கோவையாகஆ ரூரன் சொன்ன

Koviloor Digital Library

பாவணத் தமிழ் பத்தும் வல்லார்
பறையும் தாம் செய்த பாவந்தானே.

– திருக்கச்சி திருஓணகாந்தன் தளி பாடல் 10

எனக் கோவண ஆடையைச் சிறப்பித்து ஓதி அருளிய பெற்றியினைக் காண்க.

"மன்னுகலை துன்னு பொருள் மறைநான்கே வான் சரடாத் தன்னையே கோவணமாச் சாத்தினன் காண் சாழலோ" என மாணிக்கவாசகப் பெருந் தகையார் அருளிச் செய்த பாங்கும் காண்க.

கரைதல் – அழிதல், கெடுதல், குறைதல்.

270. உலகமுட் குந்திறல் உடையரக் கன்வலி
விலகுபூ தக்கணம் வெருட்டும் வேடத்தின
திலகமா ரும்பொழில் சூழந்ததே வன்குடி
அலர்தயங் கும்முடி அடிகள்வே டங்களே.

தெளிவுரை: சிறந்து விளங்கும் பொழில் சூழ்ந்த தேவன் குடியில் ஒளி திகழும் மலர் தரித்து மேவும் ஈசனின் திருப்பொலிவானது, உலகத்தைத் தன் திறமைக்கு உட்பட்டுள்ளதாகச் செய்விக்கும் ஆற்றலுடைய இராவணனுக்கு ஈடு கொடுக்கும் ஆற்றலில் குறைந் துள்ள பூதகணங்கள் கூட அவ் அரக்கனை வெருட்டி நோக்கும் பாங்கினை உடையன.

திலகம் – சிறப்பு. மஞ்சாடி என்னும் மரமும் ஆம்.

271. துளக்கம்இல் லாதன தூயதோற் றத்தன
விளக்கம்ஆக் குவ்வன வெறிவண்டா ரும்பொழில்
திளைக்குந் தேவன்குடித் திசைமுகன் ஒடுமால்
அளக்கஒண் ணாவண்ணத் தடிகள்வே டங்களே.

Koviloor Digital Library

தெளிவுரை: நறுமணம் கமழும், வண்டு அமரும் பொழில் சூழ மேவும் தேவன்குடியில், பிரமனும் திருமாலும் காணுதற்கு ஒண்ணாத ஈசனின் திருவேடத் திருப்பொலிவானது, நடுக்கத்தைத் தீர்க்கவல்லதும், தூய்மையான தோற்றம் உடையதும், அஞ்ஞானத்தை நீக்கி ஞான விளக்கம் புரிவதும் ஆகும்.

272. செருமரு தண்துவர்த் தேரம ணாதர்கள்
உருமரு வப்படாத் தொழும்பர்தம் உரைகொளேல்
திருமரு வும்பொய்கை சூழ்ந்ததே வன்குடி
அருமருந் தாவன அடிகள்வே டங்களே.

தெளிவுரை: துவர் ஆடை கொண்ட சாக்கியரும் சமணரும் கூறும் உரைகளை ஏற்க வேண்டாம். இலக்குமி வாசம் செய்யும் தாமரை மலர் திகழும் பொய்கை சூழ்ந்த தேவன்குடியில் வீற்றிருக்கும் அடிகளாகிய ஈசனின் திருவேடப் பொலிவு, அருமருந்தாகி இன்பத்தைப் பெருக்கும் பாங்குடையது.

இத் திருத்தலத்தின் அம்பிகையின் பெயர் அருமருந்தம்மை என்பதும், அது ஈற்றடியில் குறிப்பால் சுட்டப் பெற்றுள்ளதும் காண்க.

வேடங்களே – திருக்கோல அழகு.

273. சேடர் தேவன்குடித் தேவர்தே வன்றனை
மாடம் ஓங்கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பெருமை மிக்க தேவன்குடியில் மேவும் தேவாதி தேவனாகிய ஈசனைப் போற்றி மாடமாளிகைகளும் பொழில்களும் திகழும் காழியில் மேவும் ஞான

Koviloor Digital Library

சம்பந்தன் நன்று நாடவல்ல தமிழால் உரைத்த இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், இப்பிறவியின்கண் பாவம் இல்லாதவர்களாய் விளங்கி, நல்லின்பத்தை அடைவார்கள்.

284. திருக்கானப்பேர்

தல விளக்கம்: *பாண்டிய நாட்டுத் தலங்கள் 14இல், 10ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், சுந்தரர் பாடல் பெற்றது. காளையார்கோயில் என வழங்கப் படுவது. இதன் வேறு பெயர்களாவன: சோதிவனம், மந்தார வனம், தேவதாரு வனம், தட்சண காளிபுரம், மகாகாளபுரம், பூலோககைலாயம், காந்தாரம், அகத்திய க்ஷேத்திரம், தவசித்திகரம் என்பன. கானப் பேரெயில் என்பது சங்க காலப் பெயர். ஐராவதம் என்னும் யானை வழிபட்டது.*

ஈசன், காளை வடிவில் தோன்றிச் சுந்தரருக்கு "யாம் இருப்பது கானப் பேர்" எனத் தெரிவித்து மறைந்தருளிய திருத்தலம். இத் திருக்கோயிலில் மூன்று சந்நிதிகள் உள்ளன.

சுவாமி : *காளீஸ்வரர் (காளையப்பர்), சோமேசர், சுந்தரேசர்*

அம்பிகை : *சொர்ணவல்லி, செளந்தர நாயகி, மீனாட்சி*

தீர்த்தம் : *கஜபுஷ்கரணி, சிவகங்கைக் காளி தீர்த்தம், விஷ்ணு தீர்த்தம், சரஸ்வதி தீர்த்தம், கௌரி தீர்த்தம், ருத்ர தீர்த்தம், இலட்சுமி தீர்த்தம், சுதர்சன தீர்த்தம் முதலானவை*

பண் : *கொல்லி*

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

274. பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பூம்பொழில் கானப்பேர் அண்ணலின்
அடியலால் அடைசரண் உடையரோ அடியரே.

தெளிவுரை: பெண் யானைகள் பின்னால் சூழ்ந்து மேவ, பெரிய துதிக்கையுடைய யானையானது மலர் கொண்டு ஏந்தி விடியற் காலையில் நீர் படிந்து, விதி முறைப்படி வழிபடுகின்ற நறுமணம் கமழும் மலர்ப் பொழில் திகழும் கானப் பேர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அண்ணலாகிய ஈசனின் திருவடியை அன்றி, அடியவர்கள் சரணம் புகுதற்கு யாது உள்ளது!

275. நுண்ணிடைப் பேரல்கு நூபுர மெல்லடிப்
பெண்ணின்நல் லாளையோர் பாகமாப் பேணினான்
கண்ணுடை நெற்றியான் கருதிய கானப்பேர்
விண்ணிடை வேட்கையார் விரும்புதல் கருமமே.

தெளிவுரை: நுண்ணிய இடையும், மென்மையான சிலம்பு அணிந்த பாதமும் உடைய பெண்ணின் நல்லாளாகிய உமாதேவியை ஒரு பாகத்தில் மேவும் ஈசன், நெற்றியில் கண்ணுடையவர். அப்பெருமான், கருதி வீற்றிருக்கும் கானப்பேர் என்னும் தலத்தை, விண்ணுலகை ஆளும் விருப்பம் கொண்டுள்ளவர்கள் விரும்பி ஏத்துதல் கடமையாகும்.

சிறப்புரை: இது இத்தலத்தினைச் சார்ந்து வழிபடுவோர் களுக்கு விண்ணுலகப் பேறு வாய்க்கும் என்பது குறிப்பு. யானை பூசித்த தலப் பெருமையும் காண்க.

நூபுரம் – சிலம்பு.

Koviloor Digital Library

276. வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டினம்
காவிவாய்ப் பண்செயும் கானப்பேர் அண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளு ஞானநீர்
தூவிவாய்ப் பெய்துநின்று ஆட்டுவார் தொண்டரே.

தெளிவுரை: *பகலில், பொய்கையில் உள்ள தாமரை மலர்களில் தங்கித் தேனைப் பருகிய வண்டினம், இரவில் மலரும் நிலோற்பல மலரை நுகரும் தன்மை யில், எஞ்ஞான்றும் பண்ணிசைத்து விளங்கும் சிறப்புடையது கானப் பேர் ஆகும். ஆங்கு எழுந்தருளி யுள்ள ஈசனைச் சந்தனம் மற்றும் புனித நீர் கொண்டு பூசித்து மலர் தூவிப் போற்றி அடியவர்கள் விளங்குவர்.*

277. நிறையுடை நெஞ்சுளும் நீருளும் பூவுளும்
பறையுடை முழவுளும் பலியுளும் பாட்டுளும்
கறையுடை மிடற்றண்ணல் கருதிய கானப்பேர்
குறையுடை அவர்க்கலால் களைகிலார் குற்றமே.

தெளிவுரை: *சாந்தம் நிலவும் நிறையுடைய நெஞ்சமும், நீரும், பூவும், ஒலித்து முழக்கும் முழவும், நைவேத் தியமும், திருப்புகழ்ப்பாடல்களும் நன்கு விளங்குகின்ற கானப் பேர் என்னும் தலத்தில், கறைக் கண்டனாக மேவும் ஈசன், வீற்றிருப்பவர். ஆங்கு அத்தகைய பாங்கால் பூசித்து வழிபடுபவர்களுக்கு அல்லாது ஏனையோருக்குக் குறைகள் தீருமோ!*

சிறப்புரை: *இது, வழிபடும் அடியவர்களின் குறைகள் தீரப்பெறும் என்பது உணர்த்தி, அத்தகையோரின் தீவினையும் நீங்கப் பெறும் என்பதாம்.*

குறை – துயரம்; குற்றம் – தீய வினைகள்.

278. ஏனப்பூண் மார்பின் மேல் என்புபூண்டு ஈறிலா
ஞானப்பேர் ஆயிரம் பேரினான் நண்ணிய

Koviloor Digital Library

கானப்பேர் ஊர்தொழுங் காதலார் தீதிலர்
வானப்பேர் ஊர்புகும் வண்ணமும் வல்லரே.

தெளிவுரை: பன்றியின் கொம்பையும், எலும்பினையும் அண்கலனாகக் கொண்டு, எண்ணற்ற ஞானப் பொலிவுடைய திருநாமம் ஆயிரம் விளங்கப் பெற்று மேவும் ஈசன், நண்ணிய கானப்பேர் என்னும் ஊரினை, விரும்பித் தொழும் அடியவர்கள், தீயவினை அற்றவர் ஆவர்; வானப் பேரூர் என விளங்கும் அமராவதி நகருக்குச் செல்லும் வண்ணத்தைப் பெற்றவராகவும் திகழ்வர்.

சிறப்புரை: ஈசன் ஆயிரம் திருநாமங்களை உடையவன் என்பதும், அத்திருநாமங்கள் அனைத்தும் ஞானத்தின் வயம் ஆகும் என்பதும் உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், திருஞானசம்பந்தர், (இரண்டாம் - திருமுறை, பதிகம் எண் 230. திருவாழ்கொளிபுத்தூர் - பாடல் வ.எண் 1021-2-94.5) அரவம் பூண்பதும் உடையார்; ஆயிரம் பேர் மிக உடையார்; வரமும் ஆயிரம் உடையார்; வாழ்கொளிபுத்தூர் உளாரே" என ஓதியருளிய பாங்கும் காண்க. ஈசனின் திருநாமம் அனைத்தும் "ஞானப் பேர்" ஆதலை உணர்த்தியருளிய பெற்றி நோக்குக.

ஈசனின் திருநாமங்கள் எண்ணற்றவை எனவும், அவற்றை ஆயிரம் என்னும் சொல் கொண்டு உணர்த்தியமையாயிற்று. "வெகு கோடி நாம சம்பு குமாரா நமோ நம" என அருணகிரிநாதர், குமாரக் கடவுளைப் போற்றி உரைத்த செம்மையினையும் நோக்குக.

279. பள்ளமே படர்சடைப் பாற்படப் பாய்ந்தநீர்
வெள்ளமே தாங்கினான் வெண்மதி சூடினான்

Koviloor Digital Library

கள்ளமே செய்கிலார் கருதிய கானப்பேர்
உள்ளமே கோயிலா உள்கும்என் உள்ளமே.

தெளிவுரை: யாவற்றையும் ஏற்கும் படர்ந்த சடையினில் கங்கையை ஏற்று சிவபெருமான், வெண்மையான சந்திரனைத் தரித்து விளங்குபவர். அஞ்ஞானத்தில் அழுந்தாத மெய்யன்பர்கள் மேவும் கானப் பேர் என்னும் தலத்தில் விளங்கும் மெய்யன்பர்தம் உள்ளத்தில் அப்பெருமான் திகழ, அவ் அடியவர் தம் திருஉள்ளத்தைக் கோயிலாக எண்ணி என் மனம் ஏத்தும்.

சிறப்புரை: நீரின் இயல்பானது, பள்ளம் நோக்கிச் செல்லும் தன்மையில், கங்கை தரித்த ஈசனின் பாங்கு இங்கு உணர்த்தப் பெற்றது. இது, ஈசனின் சடை முடியானது பள்ளம் போன்று கங்கையைத் தாங்கிய பெருமையை உணர்த்திற்று. பள்ள நீரில் திகழும் மலர்களைப் போன்று, படர்ந்த சடையின்கண், கொன்றை எருக்கம் ஊமத்தம் வன்னி முதலான மலர்கள் திகழவல்ல பாங்கினையும் உய்த்துணரத் தக்கது.

கானப் பேர் என்னும் ஊரில் வீற்றிருக்கும் பெருமானை அன்பர்கள் தம் மனத்தில் இருத்திப் போற்றுதலும், அவர்தம் உள்ளம் பெருங்கோயிலாகத் திகழ்தலும் உணர்த்தி, அத்தகையோரை என் உள்ளமானது நினைத்து ஏத்தும் என அடியவர் வழிபாட்டு நெறிதனை மலரச் செய்தலை ஓர்க.

280. மானமா மடப்பிடி வன்கையால் அடக்கிடக்
கானமார் கடகரி வழிபடும் கானப்பேர்
ஊனமாம் உடம்பினில் உறுபிணிகெட எண்ணில்
ஞானமா மலர்கொடு நணுகுதல் நன்மையே.

Koviloor Digital Library

தெளிவுரை: பெருமையான பெண் யானையை அடக்க வல்ல கானகத்தில் உள்ள பெரிய ஆண் யானையானது வழிபடும் கானப் பேர் என்னும் தலத்தில் வீற்றிருக்கும் ஈசனை, இத்தேகத்தில் உள்ள பிணி கெட, ஞான மலராகக் கருதப்படுகின்ற அட்ட புட்பங்களாகிய கொல்லாமை, அருள், ஐம்பொறி அடக்கல், பொறை, தவம், வாய்மை, அன்பு, அறிவ், ஆகியவற்றின் பெருக்கத்தால் நண்ணுதல் நன்மையாகும்.

சிறப்புரை: யானை பூசித்த தல வரலாறு முதற் பாட்டிலும் இத் திருப்பாட்டிலும் உரைக்கப் பெற்றது. இவ்வுடம்பானது ஊனத் தன்மை உடைத்து என அறிவுறுத்தப்பட்டது. “அழுக்கு மெய் கொடு உன் திருவடி அடைந்தேன்” எனவும், “ஒரு நெல்வால் ஊன்ற வருந்தும் உடம்பு” எனவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இத்தேகத்தின் ஊனத்தை உரைத்தவாறும் காண்க. “மலம் சோரும் ஒன்பது வாயிற் குடில்” என வரும் வாதவூரடிகள் வாக்கும் கொள்க. உயிரைப் பற்றிய வினையானது, இவ்வுடம்பைக் கொண்டு பிணித்துக் கட்டி நுகரவல்ல தன்மையும் அவற்றின் வாயிலாக உண்டாகும் துன்பத்தைக் களையும் உபாயமும் உரைத்தருளிய பாங்கில், ஞான மா மலர் கொண்டு ஏத்துதலைச் செப்புதல் ஆயிற்று. இத்திருப் பதிகத் திருப்பாட்டு எண்கள் 1,3,4 ஆகியவற்றில் தருக்கள் வாயிலாகப் பெறப்படும் மலர்களால் ஈசனைப் போற்றி வழிபடுதலை உரைத்தருளிய நற்றமிழ் ஞானசம்பந்தர், இத்திருப்பாட்டில் ஞான புட்பம் வாயிலாக ஈசனை நண்ணும் நன்னெறியினை அருளிச் செய்த வண்ணம் காண்க. இந் நெறியானது, முத்திப் பேற்றினை நல்குதலாய் மறுமைக்கும், ஆன்ம

Koviloor Digital Library

போதம் கண்டு, மல வாதமற்ற செம்மையில் திகழும் பேறு என இம்மைக்கும் ஆக்கும் எனவும் கொள்க.

281. வாளினான் வேலினான் மால்வரை யெடுத்ததிண்
தோளினான் நெடுமுடி தொலையவே ஊன்றிய
தாளினான் கானப்பேர் தலையினால் வணங்குவார்
நாளுநாள் உயர்வதோர் நன்மையைப் பெறுவரே.

தெளிவுரை: வாளும், வேலும், பெருமை மிகுந்த கயிலை மலையை எடுத்த உறுதியான தோளும் உடைய இராவணனின் நீண்ட முடிகளை நலியுமாறு ஊன்றிய திருத்தாளின் சிறப்புடைய ஈசனின் கானப் பேர் என்னும் தலத்தை, முதன்மையாய் வணங்கும் அடியவர்கள், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும், உயர்ந்த நிலையினை அடைந்து எல்லா நலன்களையும் பெறுவார்கள்.

சிறப்புரை: எண் சாண் உடம்பிற்குத் தலையே பிரதானம் எனவாங்கு, "வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும், தாழ்த்த சென்னியும் தந்த தலைவனை" எனத் *(5.90 தனித் திருக் குறுந்தொகை; பாடல் வ.எண் 890)* திருநாவுக்கரசரும், "சிரங்குவிவார் ஓங்கு விக்கும் சீரோன் கழல் வெல்க" என மாணிக்கவாசகரும் அருளிச் செய்தவாறு காண்க.

தலையினால் ஈசன் திருவடியை வணங்குதல் வேண்டும் என்னும் மாண்பில், "வணங்கத் தலை வைத்து வார்கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்து எம்பெருமான் அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற குணம்'' என்னும் மாணிக்கவாசகரின் அமுத மொழியும் நோக்குக.

Koviloor Digital Library

282. சிலையினான் முப்புரம் தீயெழச் செற்றவன்
நிலையிலா இருவரை நிலைமைகண்டு ஓங்கினான்
கலையினார் புறவில் தேன்கமழ்தரு கானப்பேர்
தலையினால் வணங்குவார் தவமுடை யார்களே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரத்தை எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர்; பிரமன், திருமால் ஆகியவர்தம் கண்களுக்குத் தோன்றாதவராய்த் தீத்திரட்சியாய் ஓங்கிய ஈசன், அப்பெருமானின் தேன் மணம் கமழத் திகழும் கானப் பேர் என்னும் திருத்தலத்தைத் தொழுது போற்று பவர்கள் தவமுடையவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: சிவபெருமான் ஒருவனே நிலையானவன் என்பதும், திருமால் பிரமன் ஆகியோர், கால நியதிக்கு உட்பட்டவர்கள் என்பதும் உணர்த்தும் தன்மையில், "நிலையிலா இருவர்" என உரைக்கப் பெற்றது.

கிரேதயுகம், திரேதயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவாய் விளங்குதலைச் சதுர்யுகம் என்பர். இச் சதுர்முகம் இரண்டாயிரம் உடையது பிரமனுக்கு ஒரு நாள். இத்தகைய நாள் 365 கணக்கு வைத்து ஒரு ஆண்டு எனக் கொண்டு நூறு ஆண்டு கொண்டது ஒரு கற்பம்; இது பிரமனின் காலம் ஆகும். இவ்வாறு ஒரு கோடி கற்பம் கொண்டது திருமாலுக்கு ஒரு நாள். இத்தகைய கணக்கின் வழி நூறு ஆண்டுக் காலம் திருமாலின் காலம் ஆகும். இவ்வாறு ஒரு கோடி திருமாலானவர்களின் காலம் ஈசனின் அணிமுடி துளக்கிடும் காலம் என்பர் (அறப்பளீசுர சதகம் பாடல் எண் 40). பிரமனின் ஒரு நாளில் பதினான்கு

Koviloor Digital Library

இந்திரர்கள் மாற்றம் கொள்கின்றனர். இத்தன்மையில், பிரமன் திருமால் ஆகியோர்தம் நிலையற்ற தன்மையை ஓர்க. "நூறுகோடி பிரமர்கள் நொந்தினார், ஆறு கோடி நாராயணன் அங்ஙனே" என வரும் (5ஆம் திருமுறையில் 1008) அப்பர் வாக்கும் காண்க.

283. உறித்தலைச் சுரையொடு குண்டிகை பிடித்துச்சி
பறித்தலும் போர்த்தலும் பயனிலை பாவிகாள்
மறித்தலை மடப்பிடி வளர்இளங் கொழுங்கொடி
கறித்தெழு கானப்பேர் கைதொழல் கருமமே.

தெளிவுரை: கையில் கமண்டலம் ஏந்தியும், சிகை நீக்கியும் உள்ள சமணர் சாக்கியர்கள் பயனற்றவை மொழிந்து பாவத்தை ஆள்பவர்களாவர். இளம் பிடியன்ன உமாதேவியாரைப் பாகங் கொண்டு மேவும் ஈசனின் கானப் பேர் என்னும் தலத்தினைத் தொழுது ஏத்துதல் கடமையாகும்.

284. காட்டகத்து ஆடலான் கருதிய கானப்பேர்
கோட்டகத்து இளவரால் குதிகொளும் காழியான்
நாட்டகத்து ஓங்குசீர் ஞானசம் பந்தன
பாட்டகத்து இவைவலார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: மயானத்தில் விளங்கி நடம்புரிதலை விரும்பிய ஈசனின் கானப் பேர் என்னும் தலத்தை, நீர்வளம் மிக்க காழியில் சீர்மேவ ஓங்கும் ஞான சம்பந்தன் பாடிய திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், தீவினையிலிருந்து நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.

பாவம் – தீவினை.

Koviloor Digital Library

285. திருச்சக்கரப்பள்ளி

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 17ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. ஊர் - ஐயம்பேட்டை; கோயில் - சக்கரப்பள்ளி. திருமால் வழிபட்டுச் சக்கராயுதம் பெற்ற தலம். இந்திரனின் மகனாகிய சயந்தனும், தேவர்களும் வழிபட்டது.*

சுவாமி : *சக்கரவாகேஸ்வரர்*

அம்பிகை : தேவ நாயகி

பண் : *கொல்லி*

திருச்சிற்றம்பலம்

285. படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
உடையினார் உமையொரு கூறனார் ஊர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனல்
சடையினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: *படைக்கலனில் சிறப்புடைய வெண்மழு ஏந்திப் பாயும் புலியின் தோலினை உடையாகவும், உமாதேவியாரைத் தனது திருமேனியில் ஒரு கூறாகவும் விளங்கும் சிவபெருமான், இடப வாகனத்தில் வீற்றிருப்பவர்; திருவெண்ணீறு பூசித் திகழ்பவர்; கங்கையைச் சடை முடியில் தரித்தவர். அப் பரமனின் உறைவிடமானது சக்கரப்பள்ளி என்பதாகும்.*

286. பாடினார் அருமறை பனிமதி சடைமிசைச்
சூடினார் படுதலை துன்எருக்கு அதனொடும்
நாடினார் இடுபலி நண்ணியோர் காலனைச்
சாடினார் வளநகர் சக்கரப் பள்ளியே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், சிறப்பாகப் போற்றப் பெறும் வேதங்களை ஓதியருளியவர்; குளிர்ச்சியான சந்திரனைச் சடை முடியின்மீது சூடியவர்; மண்டை ஓட்டு மாலையும், அதனுடன் எருக்கம் பூவும் பொருந்தக் கொண்டு மேவுபவர்; திருக்கரத்தில் கபாலம் ஏந்திப் பிச்சை ஏற்றுத் திரிபவர். அவர் அருகில், மார்க்கண்டேயர் அபயமாக வந்து வணங்கிப் போற்றுவதைக் கண்டும் உயிரைக் கவரும் தன்மையில் நண்ணிய காலனை உதைத்து வீழ்த்தியவர்; அப்பெருமானின் நகரானது வளமை மிகுந்த சக்கரப் பள்ளியாகும்.

287. மின்னினார் சடைமிசை விரிகதிர் மதியமும்
பொன்னினார் கொன்றையும் பொறிகிளர் அரவமும்
துன்னினார் உலகெலாம் தொழுதெழ நான்மறை
தன்னினார் வளநகர் சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: மின்னலைப் போன்று விளங்கும் சிவந்த சடை முடியின்மீது, விரிந்து ஒளிக் கதிரை வீசும் சந்திரனையும், பொன் போன்ற கொன்றை மலரையும், படம் கொண்டு மேவும் அரவத்தையும் பொருந்தத் தரித்துள்ள சிவபெருமான், உலகம் யாவும் தொழுது போற்றுமாறு நான்கு மறைகளின் பொருளாக விளங்குபவர். அப் பெருமானுடைய நகரானது வளம் பொருந்திய சக்கரப்பள்ளியாகும்.

சிறப்புரை: நல்ல கதிக்குக் குறைவு இல்லாத தன்மையில், அருளின் இன்னமுதை அடியவர் பெருமக்களுக்கு வழங்கும் மாண்பில், ஈசன் எழுந்தருளியுள்ள சக்கரப் பள்ளி என்னும் தலமானது, வளநகர் எனப் போற்றப் படுவதாயிற்று.

Koviloor Digital Library

288. நலமலி கொள்கையார் நான்மறை பாடலார்
வலமலி மழுவினார் மகிழும்ஊர் வண்டறை
மலர்மலி சலமொடு வந்திழி காவிரி
சலசல மணிகொழி சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: *ஈசன், நலம் தரும் பாங்கினில் கருணை விளங்க அருள்பொழியும் கொள்கை உடையவர்; நான்கு வேதங்களையும் ஓதி விரித்தவர்; வலிமை மிகுந்த மழுப்படையை ஆயுதமாகக் கொண்டுள்ளவர்; அப்பெருமான் மகிழ்ந்து விளங்கும் ஊரானது, வண்டுகள் ஒலிக்கவும், தேன் துளிர்க்கும் மலர்கள் விளங்கவும் காவிரியிலிருந்து மணிகள் கொழிக்கும் சக்கரப்பள்ளியாகும்.*

289. வெந்தவெண் பொடியணி வேதியர் விரிபுனல்
அந்தமில் அணிமலை மங்கையோடு அமரும்ஊர்
கந்தமார் மலரொடு காரகில் பல்மணி
சந்தினோடு அணைபுனற் சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: *ஈசன், திருவெண்ணீற்று மேனியராய் விளங்கும் வேத நாயகர்; கங்கையைச் சடை முடியில் தாங்கியும், மலை மகளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டும் விளங்குபவர். அப் பெருமான் அமர்ந்து மேவும் ஊர், மணம் கமழும் மலரும், அகிலும், பல வகை மணிகளும், சந்தனமும் சேர்ந்து திகழும் நீர் வளம் மிகுந்த சக்கரப் பள்ளியாகும்.*

290. பாங்கினால் முப்புரம் பாழ்பட வெஞ்சிலை
வாங்கினார் வானவர் தானவர் வணங்கிட
ஓங்கினார் உமையொரு கூறொடும் ஒலிபுனல்
தாங்கினார் உறைவிடம் சக்கரப் பள்ளியே.

Koviloor Digital Library

தெளிவுரை: எத் தன்மையில் அமைய வேண்டுமோ அத்தகைய தன்மையில் முப்புரமானது பாழ்பட்டு எரிந்து சாம்பலாகுமாறு, மேரு என்னும் பெரிய மலையைச் சுடர் மிகுந்து மேவும் வில்லாகக் கொண்டு அழித்து, வானவர்களும் தானவர்களும் வணங்கித் தொழ ஓங்கியவர், சிவபெருமான். அவர், உமா தேவியைத் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டும், கங்கையைத் திருமுடியில் வைத்தும் இருப்பவர். அவருடைய உறைவிடம் சக்கரப்பள்ளியாகும்.

சிறப்புரை: முப்புரமானது, தீமை செய்த தன்மையில் அவற்றை அழிப்பதற்கு உரிய வழி எரிந்து சாம்பலாதலைத் தவிர பிற வகையானது சிறவாது என்னும் குறிப்புத் தோன்ற, "பாங்கினால் முப்புரம் பாழ்பட" என்னும் அருந்தொடரால் உணர்த்தப் பெற்றது. வானவர்களும் தானவர்களும் ஈசனைச் சரணம் அடைந்து காக்குமாறு வேண்ட ஈசனின் திருக் குறிப்பில் அமைந்த வண்ணம், நிகழ்ந்த செயலின் சிறப்பினைப் "பாங்கினால்" என்னும் சொல்லால் உணர்த்தப் பெற்றது.

மேரு மலையானது வண்ணம் உடைய பொன் மலை என்னும் தன்மையில் அது சுடர் விட்டு மிளிர் தலை வெஞ்சிலை எனப் பெற்றது. இத்தன்மையில் வெம்மையுடைய மேருமலை என்னும் பொருளினும் சுடர் மேவும் மலை எனக் கொள்ளுதல் மேன்மை யுடைத்து (வெம்மை - சுடர். விருப்பம் என்பதும் ஆம்.) ஈசன் தன் இச்சையால் விரும்பித் தேர்ந்து எடுத்து சிலையாகக் கொண்டவாறும் சுட்டும்.

291. பாரினார் தொழுதெழு பரவுபல் லாயிரம்
பேரினார் பெண்ணொரு கூறனார் பேரொலி

Koviloor Digital Library

நீரினார் சடைமுடி நிரைமலர்க் கொன்றையந்
தாரினார் வளநகர் சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: உலகில் உள்ள மக்களெல்லாம் தொழுது போற்ற விளங்கும் ஈசன், பல்லாயிரக் கணக்கான திருநாமங்களை உடையவர்; உமாதேவியை ஒரு பாக மாகக் கொண்டிருப்பவர்; பேரொலி மேவும் கங்கையைச் சடை முடியில் தரித்து வரிசையாக விளங்கும் கொன்றை மலரை மாலையாகச் சூடி இருப்பவர்; அப்பெருமானின் வளநகர் சக்கரப்பள்ளி யாகும்.

சிறப்புரை: ஈசனின் திருநாமங்கள் பல்லாயிரக் கணக்கானவை எனவும், அவை பிறவிக் கடலிலிருந்து எழுவதற்கு என அமையும் பாங்குடையன என்பதும், நன்கு உணர்த்துமாறு, "தொழுது எழு பரவு பல்லாயிரம் பேர்" என ஓதப்பெறுதலாயிற்று. இத்திருப் பெயர்களை ஞானப் பேர் எனச் சுட்டப் பெற்ற தன்மையையும் அதன் சிறப்பினையும் முந்தின திருப்பதிகத் திருப்பாட்டு வ.எண் 278இல் *(3–26–5)* குறித்துள்ளவாறு காண்க.

292. முதிரிலா வெண்பிறை சூடினார்முன் னநாள்
எதிரிலா முப்புரம் எரிசெய்தார் வரைதனால்
அரிதிலா வல்லரக் கன்வலி வாட்டிய
சதிரினார் வளநகர் சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: முதிர்வு அடையாத இளமையான வெண் திங்களைச் சூடி மேவும் சிவபெருமான், தம்மை எதிர்த்துப் பொருது வெற்றி பெறுவதற்கு ஒருவரும் இல்லை என்னும் நிலையில் திரிந்த முப்புரங்களை, எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர். அவர், தனக்கு இணையாகச் சொல்லுவதற்கு அரிதாக விளங்கும்

Koviloor Digital Library

வலிமை உடைய இராவணனை, அவன் பெயர்த்த மலையினாலே அடர்த்திய திறமையான ஆற்றல் உடையவர். அப்பெருமானின் வளநகர், சக்கரப்பள்ளி ஆகும்.

293. துணிபடு கோவணம் சுண்ணவெண் பொடியினர்
பணிபடு மார்பினர் பனிமதிச் சடையினர்
மணிவணன் அவனொடு மலர்மிசை யானையும்
தணிவினர் வளநகர் சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: ஈசன், கோவணத்தை ஆடையாக அணிந்தவர்; திருவெண்ணீறு தரித்தவர்; பாம்பினை மார்பில் அணியாகக் கொண்டவர்; குளிர்ந்த சந்திரனைச் சடையில் சூடியவர்; தம்முடைய ஆற்றலில் செருக்குற்ற திருமாலும் பிரமனும் தணியுமாறு செய்தவர். அப்பெருமான், சக்கரப்பள்ளி என்னும் அருள் வளம் மேவுமம் ஊரில் வீற்றிருப்பவர்.

மணிவணன் – திருமால். மணிவண்ணன் என்பதாம்.

294. உடம்புபோர் சீவரர் ஊண்தொழில் சமணர்கள்
விடம்படும் உரையவை மெய்யல விரிபுனல்
வடம்படு மலர்கொடு வணங்குமின் வைகலும்
தடம்புனல் சூழ்தரு சக்கரப் பள்ளியே.

தெளிவுரை: சாக்கியர்களும், சமணர்களும் உரைக்கும் சொற்கள், நஞ்சு போன்று கொடுமையானவை; மெய்ம்மையும் அன்று. அவற்றை ஏற்க வேண்டாம். விரிந்து பரவும் புனித நீர் கொண்டு அபிடேகம் செய்தும், மலர் மாலைகளைச் சாத்தியும், நீர் வளம் மிகுந்த சக்கரப்பள்ளியில் மேவும் ஈசனை வணங்குவீராக.

Koviloor Digital Library

சிறப்புரை: திருத்தலத்தின் மகிமையை இத்திருப்பாட்டு உணர்த்துவதாயிற்று. நீரும் மலரும் சாத்திப் புறத்தால் ஈசனின் இலிங்க சொரூபத்தையும் அகத்தால் அப்பெருமான் எழுந்தருளியுள்ள தலத்தையும் வணங்குக எனக் குறிப்பால் சுட்டப் பெற்றது.

வடம்படு மலர் – மலர் மாலை.

295. தண்வயல் புடையணி சக்கரப் பள்ளியெம்
கண்ணுதல் அவனடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொல்
பண்ணிய இவைசொலப் பறையுமெய்ப் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: குளிர்ச்சி மிக்க வயல் வளம் கொண்ட சக்கரப் பள்ளியில் வீற்றிருக்கும் எம்முடைய நெற்றிக் கண்ணுடைய சிவபெருமானின் திருவடியை, கழுமல வள நகரில் விளங்கும் செந்தமிழ் வல்ல ஞான சம்பந்தன், கனிந்து போற்றிய இத் திருப்பதிகத்தைச் சொல்பவர்களுக்குப் பாவமானது சாராது.

சிறப்புரை: எல்லோரையும், துன்பத்திலிருந்து நீக்கும் செம்மையைப் புரியும் ஞானசம்பந்தரின் சொல், செந்தமிழ் எனச் சுட்டப் பெற்றது. பாவமானது மனத்தாலும், வாக்காலும் காயத்தாலும் ஆதல் என்பதும், அவற்றின் வெளிப்படையாகத் தெரியப் பெறும் காயத்தால் செய்யப் பெற்றதை முன்னிருத்தி "மெய்ப் பாவம் தீருமே" என்று, உணர்த்தப் பெறுவதாயிற்று. இது ஏனைய நிலையில், மனத்தாலும், வாக்காலும் செய்யப்பெற்ற பாவமும் நீங்கப் பெறும் எனக் குறிப்பால் சுட்டப் பெறுவதாகும்.

Koviloor Digital Library

செய்யும் பாவமானது வினையாக நின்று, உயிரைப் பற்றி நின்று அது தேகத்தினைக் கொண்டு சுமந்து நுகர்கின்ற தன்மையில், "மெய்ப்பாவம்" எனவும் கொள்க.

286. திருமழபாடி

தல விளக்கம்: *காவிரி வடகரைத் தலங்கள் 63இல் 54ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. இந்திரன் முதலானோர் வழிபட்டது. மார்க்கண்டேயருக்காக இறைவன் மழு ஏந்தி நடனக் காட்சி நல்கிய தலம். நந்தி தேவர் திருமணம் கொண்ட தலம். மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 9 காண்க.*

சுவாமி : *வச்சிரதம்பேஸ்வரர், வைத்தியநாதர், மழுவாடீஸ்வரர்*

அம்பிகை : *அழகம்மை, சுந்தராம்பிகை*

தல மரம் : *பனை*

தீர்த்தம் : *இலக்குமி தீர்த்தம், கொள்ளிடம்*

பண் : *கொல்லி*

திருச்சிற்றம்பலம்

296. காலையார் வண்டினம் கிண்டிய காருறும்
சோலையார் பைங்கிளி சொற்பொருள் பயிலவே
வேலையார் விடம்அணி வேதியன் விரும்பிடம்
மாலையார் மதிதவழ் மாமழ பாடியே.

தெளிவுரை: *காலை வேளையில் வண்டினங்கள் மலர் களைக் கிண்டி விளங்கும் சோலையில் மேவும் கிளிகள், ஈசனின் அரிய பொருளைக் காட்டும் சொற் களைச் சொல்லிப் பயில மேவும் மழபாடி கடலில்*

Koviloor Digital Library

தோன்றிய விடத்தைக் கண்டத்தில் தேக்கிய ஈசன் விரும்பி மேவும் இடம் ஆகும்.

297. கறையணி மிடறுடைக் கண்ணுதல் நண்ணிய
பிறையணி செஞ்சடைப் பிஞ்ஞகன் பேணும் ஊர்
துறையணி குருகினம் தூமலர் துதையவே
மறையணி நாவினான் மாமழ பாடியே.

தெளிவுரை: நீலகண்டத்தினராயும், நெற்றியில் கண் உடையவராயும், அடைக்கலம் புகுந்த சந்திரனை ஏற்றுச் சிவந்த சடைமுடியில் கொண்டு விளங்கும் ஈசன், விரும்பி இருக்கின்ற ஊரானது, நீர்த் துறைகளில் மேவும் வெண்ணிறமாகிய பறவைகள் வெண் மலர்களுடன் சேர்ந்து ஒரே வண்ணமாகப் பொலிய விளங்கும் மழபாடியாகும். ஆங்கு எழுந்தருளியுள்ள பெருமான் மறைகளை ஓதி அருளும் பெற்றி உடையவர்.

பிஞ்ஞகன் – ஈசன்.

298. அந்தணர் வேள்வியும் அருமறைத் துழனியும்
செந்தமிழ்க் கீதமும் சீரினால் வளர்தரப்
பந்தணை மெல்விர லாளொடும் பயில்விடம்
மந்தம்வந் துலவுசீர் மாமழ பாடியே.

தெளிவுரை: அந்தணர்கள் வேள்வி புரியும் வேதங்கள் ஒலிக்கவும், பக்திப் பாடல்கள் இசைக்கவும் உமா தேவியாரோடு ஈசன் வீற்றிருக்கும் இடமானது, தென்றல் உலவும் புகழ் மிகுந்த மழபாடியே.

துழனி – ஒலி.

299. அத்தியின் உரிதனை அழகுறப் போர்த்தவன்
முத்தியாய் மூவரின் முதல்வனாய் நின்றவன்

Koviloor Digital Library

பத்தியால் பாடிடப் பரிந்தவர்க்கு அருள்செயும்
அத்தனார் உறைவிடம் அணிமழ பாடியே.

தெளிவுரை: *யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டு, முத்தியின் பெருநலமாய், மும்மூர்த்திகளின் முதல்வனாய் விளங்கும் சிவபெருமான், பத்தி கொண்டு பாடிப் போற்றும் அன்புடையவர்களுக்கு அருள் புரியும் அத்தன். அப் பெருமானின் உறைவிடமானது அணி மிகும் மழபாடி.*

அத்தி – யானை. அத்தன் – அன்பன், ஈசனை உணர்த்தியது.

300. கங்கையார் சடையிடைக் கதிர்மதி யணிந்தவன்
வெங்கண்வாள் அரவுடை வேதியன் தீதிலாச்
செங்கயற் கண்உமை யாளொடும் சேர்விடம்
மங்கைமார் நடம்பயில் மாமழ பாடியே.

தெளிவுரை: *கங்கை பொருந்தி மேவும் சடை முடியின் இடையில், ஒளி திகழும் சந்திரனை அணிந்த பெருமான், ஒளி மிக்க அரவத்தைக் கொண்டு மேவும் ஈசன் ஆவார். எத்தகைய தீமையும் இல்லாமல் செய்கின்ற உமாதேவியை, உடனாகக் கொண்டு பொருந்தி விளங்கும் இடமாவது, மங்கையர்கள் நடம் பயின்று விளங்கும் சிறப்பு மிக்க மழபாடியே ஆகும்.*

சிறப்புரை: *இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழால் வழிபடும் அடியவர்களின் தன்மை, இவண் உணர்த்தப் பெற்றது. இத் திருப்பதிகத்தின் முதற் பாட்டில் இயற்றமிழ் கொண்டு போற்றுதலும், 4ஆம் (முந்தைய) திருப்பாட்டில் இசைத் தமிழால் போற்று தலும் உணர்த்தி, இத்திருப்பாட்டில் நாடகத் தமிழ் வாயிலாகப் போற்றி ஏத்துதல் உணர்த்தப் பெற்றது. இத் தன்மைகளைக் குறிப்பால் சுட்டப் பெறும்*

Koviloor Digital Library

செம்மையாய் "நற்றமிழ்" எனவும் "செந்தமிழ்" எனவும் ஆங்காங்கு உரைக்கப் பெறுதலும் காண்க.

301. பாலனார் ஆருயிர் பாங்கினால் உணவரும்
காலனார் உயிர்செகக் காலினால் சாடினான்
சேலினார் கண்ணினாள் தன்னொடும் சேர்விடம்
மாலினார் வழிபடும் மாமழ பாடியே.

தெளிவுரை: *பாலனாகிய மார்க்கண்டேயரின் அரிய உயிரைக் கொண்டு செல்ல வந்த காலனின் உயிரைக் காலால் சாடி உதைத்து, உமாதேவியாரை உடனாகக் கொண்டு பொருந்தி விளங்கும் ஈசனின் இடமாவது, திருமால் முதலான பெருமையுடையோர் வழிபடும் சிறப்பு மிக்க மழபாடியே.*

மாலினார் – திருமால் இந்திரன் முதலானோர் வழிபட்ட திருத்தலச் சிறப்பு உணர்த்துவதாயிற்று.

302. விண்ணிலார் இமையவர் மெய்ம்மகிழ்ந்து ஏத்தவே
எண்ணிலார் முப்புரம் எரியுண நகைசெய்தார்
கண்ணினால் காமனைக் கனல்எழக் காய்ந்தஎம்
அண்ணலார் உறைவிடம் அணிமழ பாடியே.

தெளிவுரை: *விண்ணுலகத்தில் விளங்கும் தேவர்கள் மகிழ்ந்து ஏத்தும் தன்மையில் முப்புரங்களை எரிந்து சாம்பலாகுமாறு முறுவல் செய்து நெருப்பினை வெளிப்படுத்தி அழித்தும், மன்மதனை நெற்றிக் கண்ணால் நோக்கி, அதன் வாயிலாக நெருப்புக் கொண்டு அழித்தும் வீரம் விளைவித்தவர், சிவ பெருமான். அத்தகைய எமது அண்ணலின் உறைவிட மாவது அணி திகழ் மேவும் மழபாடியே.*

சிறப்புரை: *ஈசனை நெஞ்சில் கொண்டு வழிபடும் எண்ணம் இல்லாத முப்புர அவுணர்கள், எண்ணிலார்*

Koviloor Digital Library

எனச் சுட்டப் பெற்றனர். ஈசன், மேரு மலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும்; அக்கினி, வாயு, திருமால் ஆகியோரைக் கூரிய அம்பாகவும் கொண்டனரேனும், முறுவலால் நெருப்பினைச் சொரிந்து முப்புரங்களை எரி செய்தார் என்பது புராண வரலாறு. இது, "எரியுண நகை செய்தார்" என ஓதப் பெற்றது.

303. கரத்தினால் கயிலையை எடுத்தகார் அரக்கன்
சிரத்தினை ஊன்றலும் சிவனடி சரண்என்னா
இரத்தினாற் கைந்நரம்பு எடுத்திசை பாடலும்
வரத்தினான் மருவிடம் மாமழ பாடியே.

தெளிவுரை: தனது கரத்தால் கயிலை மலையினை எடுத்த இராவணனுடைய சிரமானது நலிவுற்றுத் துன்புறுமாறு ஊன்றியவர் சிவபெருமான். அவர் திருவடியைச் சரணம் எனக் கொண்டு தனது இரத்தம் தோய்ந்த கை நரம்பினை எடுத்து வீணையாக மீட்டி, இசை எழுப்பிப் பாட வரம் நல்கிய ஈசன், மருவி விளங்குகின்ற இடமாவது சிறப்புடைய மழபாடியே ஆகும்.

இரத்தினால் – இரத்தல் தன்மையையும் சுட்டும்.

304. ஏடுலா மலர்மிசை அயன்எழில் மாலுமாய்
நாடினார்க்கு அரியசீர் நாதனார் உறைவிடம்
பாடெலாம் பெண்ணையின் பழம்விழப் பைம்பொழில்
மாடெலாம் மல்குசீர் மாமழ பாடியே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் தேடிய காலத்தில் அரியவனாய் விளங்கிய நாதராகிய ஈசனின் உறைவிடமாவது, பனை மரங்களில் காய்க்கும் பனம்பழம் பைம்

Koviloor Digital Library

பொழிலில் மல்கி விளங்குகின்ற சிறப்புப் பொருந்திய மழபாடியாகும்.

சிறப்புரை: இது, பைம்பொழிலின் இடையில் பனை மரங்கள் மிகுந்து இருத்தலும் அவற்றிலிருந்து பழங்கள் பறிப்பார் இன்றித் தாமே விழுகின்ற வளம் சுட்டப் பெறுதலும் ஆயிற்று.

305. உறிபிடித்து ஊத்தைவாய்ச் சமணொடு சாக்கியர்
நெறிபிடித்து அறிவிலா நீசர்சொற் கொள்ளன்மின்
பொறிபிடித்து அரவினம் பூண்எனக் கொண்டுமான்
மறிபிடித் தானிடம் மாமழ பாடியே.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் நெறி முறைக்கு ஒவ்வாது உரைக்கும் சொற்களை ஏற்க வேண்டாம். படம் கொண்டு மேவும் அரவத்தினை அணியாகக் கொண்டு, மானைக் கரத்தினில் ஏந்திய ஈசனின் இடமாவது சிறப்புப் பொருந்திய மழபாடியே ஆகும். அதனை ஏத்துக என்பது குறிப்பு.

306. ஞாலத்தார் ஆதிரை நாளினான் நாள்தொறும்
சீலத்தால் மேவிய திருமழ பாடியை
ஞாலத்தால் மிக்கசீர் ஞானசம் பந்தன் சொல்
கோலத்தால் பாடுவார் குற்றம்அற் றார்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: இப்பூவுலகில் சிறப்பாக விளங்கும் ஆதிரை என்னும் விண் மீனுக்கு உரியவராகிய ஈசன் வீற்றிருக்கும், நாள்தோறும் சிறப்பான ஆகம விதிப்படி பூசைகள் மேவும் திருமழபாடி என்னும் திருத்தலத்தை உலகத்தாரால் மிகுந்த சிறப்புடன் போற்றப்படுகின்ற ஞானசம்பந்தன் சொல்லிய திருப்பதிகத்தைச்

Koviloor Digital Library

சிவநெறிக்குரிய தூய பொலிவுடன் பாடுபவர்கள், தீவினையிலிருந்து நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: சிவபெருமானுக்கு உகந்ததும் உரியதும் ஆகிய திருநாள் திருவாதிரை நாள் என்பது, இவண் உணர்த்தப் பெற்றது. இத் திருவிழாவின் பொலிவைத் திருஞானசம்பந்தர், "கபாலீச்சரம் அமர்ந்தான் ஆர்திரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்" *(இரண்டாம் திருமுறை, பா. வ. எண் 505. 2.47.4)* என அருளிச் செய்துள்ளதும் காண்க. இத்தகைய மாச் சிறப்பினை, "மைத்தழை கண்டர் ஆதிரை நாளின் மகிழ்செல்வம் இத்தகைமைத்து என்று என் மொழிகேன்" *(திருநாவுக்கரசு நாயனார் புராணம், பாடல் 235)* எனச் சேக்கிழார் பெருமான், திருநாவுக் கரசர் திருமொழியாக உரைத்த வண்ணமும் காண்க. இத்தன்மையில், "திருவாதிரைத் திருப்பதிகம்" எனச் சிறப்பித்துத் திருவாரூரை மையமாகக் கொண்டு திருநாவுக்கரசர் அருளிச் செய்த சிறப்பும் *(நான்காம் திருமுறை)* காண்க.

இத் திருப்பதிகத்தினைச் சைவத் திருக்கோலம் எனப் போற்றப்படுகின்ற திருவெண்ணீறும், உருத் திராக்க மாலையும் திருமேனியின்கண் பொருந்தப் பெற ஓதுதல் வேண்டும் என்னும் செம்மையில், "கோலத்தால் பாடுவார்" எனச் சுட்டப் பெறுவ தாயிற்று.

287. மேலைத்திருக்காட்டுப்பள்ளி

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல் 9ஆவது திருத்தலம். திருக்காட்டுப்பள்ளி என வழங்கப்*

Koviloor Digital Library

பெறுகின்றது. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருமால், பிரமன், சூரியன், பகீரதன், அக்கினி ஆகியோர் வழிபட்டது. கோயிலுக்கு அக்கினீஸ்வரம் என்பது பெயர்.

சுவாமி : அக்னீஸ்வரர், தியாடியப்பர்

அம்பிகை : அழகம்மை, சௌந்தரநாயகி

தல மரம் : வன்னி, வில்வம்

தீர்த்தம் : அக்கினி தீர்த்தம், காவிரி

குறிப்பு: திருஞானசம்பந்தர் பாடல் பெற்ற கீழைத் திருக்காட்டுப்பள்ளி; பதிகம் எண் 5 முதல் திருமுறையில் (காவிரி வடகரைத் தலம்) உள்ளது தனித்தலம்.

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

307. வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி உண்பதும் வெண்தலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட்டுப் பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தம் நீர்மையே.

தெளிவுரை: உமாதேவியாரை ஒரு பாகத்தில் கொண்டு விளங்கும் ஈசன், ஊர்தோறும் சென்று பிரம கபாலம் ஏந்திப் பிச்சை கொள்பவர். அப்பெருமான், மேகம் சூழ்ந்த பொழில் மன்னும் காட்டுப்பள்ளியில், கங்கை தரித்த சடை முடியுடைய நிமலராய் விளங்கி இருப்பது அவர்தம் அன்பின் தன்மையே ஆகும்.

308. நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி

Koviloor Digital Library

அருத்தனார் அழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே.

தெளிவுரை: ஈசன், நடனம் புரிபவர்; நீண்ட சடை முடியின் மீது சந்திரனோடு பாம்பும் சேர்த்து அணியும் கருத்தினை உடையவர்; நறுமணம் கமழும் பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளியின்கண், எப்பொருட்கும் விளக்கமாய் மேவும் மேலான பொன் போன்ற வராய்த் திகழ்பவர்; உமாதேவியாரைத் திருமேனியில் பாகம் கொண்டு மேவுபவர்; அத்தகைய பரமனின் திருவடி மலரை வணங்கிப் போற்றுதல் ஒன்றே பயன் தர வல்லதாகும்.

சிறப்புரை: நடம் புரியும் ஈசனின் பாங்கு நிருத்தனார் எனச் சுட்டப் பெற்றது. ஈசன் எப்பொருள் தன்னிலும் பற்றுதல் கொள்ளாத பரம் பொருள் என்னும் தன்மையும் ஈண்டு, "நிருத்தனார்" என்னும் சொல் உணர்த்தும். ஈசனே, மேலான பொருள் என்பதனை, "அருத்தனார்" என்று உணர்த்தப்பட்டது. "விருத்தனார் இளையார் விடம் உண்ட எம் அருத்தனார் அடியாரை அறிவரே'' எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்துள்ளமையும் நோக்குக.

நிருத்தனார் – நடம் புரிபவர்; பற்றின்மையுடையவர்.
அருத்தம் – சொல்லின் மெய்ப்பொருள், மேலானது பொன்.

309. பண்ணினார் அருமறை பாடினார் நெற்றியோர்
கண்ணினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
விண்ணினார் விரிபுனல் மேவினார் சடைமுடி
அண்ணலார் எம்மையாள் உடையஎம் அடிகளே.

தெளிவுரை: ஈசன், வேதங்களை உரிய பண்ணில் விரித்து ஓதியவர்; நெற்றியில் கண் உடையவர்;

Koviloor Digital Library

பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளியில் கங்கையைத் தரித்து விளங்கும் சடை முடியுடையவராய் வீற்றிருப் பவர். அவர் எம்மை ஆளாகக் கொண்டு மேவும் அண்ணல்.

310. பணம்கொள்நா கம்அரைக்கு ஆர்ப்பது பல்பலி
உணங்கலோடு உண்கலன் உறைவது நாட்டிடைக்
கணங்கள் கூடித்தொழுது ஏத்துகாட் டுப்பள்ளி
நிணங்கொள் சூலப்படை நிமலர்தம் நீர்மையே.

தெளிவுரை: ஈசன், படம் கொண்டு ஆடும் நாகத்தை அரையில் ஆர்த்துக் கட்டிப் பிரம கபாலத்தைக் கரத்தில் ஏந்திப் பலி ஏற்று விளங்குபவர். அப்பெரு மான் உறைவது, சிவகணத்தோர் தொழுது ஏத்தும் காட்டுப்பள்ளியாகும். அப்பதியில், ஈசன், சூலப் படையைத் திருக்கரத்தில் ஏந்திய நிமலராய் விளங்கும் இயல்புடையவர்.

311. வரையுலாம் சந்தொடு வந்திழி காவிரிக்
கரையுலாம் இடுமணல் சூழ்ந்தகாட் டுப்பள்ளித்
திரையுலாம் கங்கையும் திங்களும் சூடியங்கு
அரையுலாம் கோவணத்து அடிகள் வேடங்களே.

தெளிவுரை: மலையில் திகழும் சந்தன மரங்களை, நீரின் வாயிலாக உந்திக் தள்ளிக் கரையினில் சேர்க்கும் காவிரி மணல் சூழ்ந்த காட்டுப்பள்ளியில், ஈசன் கங்கையும் சந்திரனும் சடை முடியில் சூடி, அரையில் கோவண ஆடையுடன் காட்சி தருபவர்.

312. வேதனார் வெண்மழு வேந்தினார் அரங்கமுன்
ஓதினார் உமையொரு கூறனார் ஒண்குழைக்
காதினார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நாதனார் திருவடி நாளும்நின்று ஏத்துமே.

Koviloor Digital Library

தெளிவுரை: வேதங்களின் நாதராகிய ஈசன், மழுப் படையை ஏந்தியவராய், உமாதேவியை ஒரு கூறு உடையவராய், குழை அணிந்த காதினராய், கடிமணம் கமழும் பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளியின் தலைவராய் விளங்குபவர். அப் பெருமானின் திருவடியை நாளும் நின்று ஏத்துவீராக.

313. மையினார் மிடறனார் மான்மழு வேந்திய
கையினார் கடிபொழில் சூழ்ந்தகாட்டுப் பள்ளித்
தையலோர் பாகமர்த் தண்மதி சூடிய
ஐயனார் அடிதொழ அல்லல்ஒன்று இல்லையே.

தெளிவுரை: மை போன்ற கரிய கண்டத்தை உடைய ஈசன், மானையும் மழுவையும் ஏந்திய கையினர். அவர் கடிமணம் பரவும் பொழில் சூழ்ந்த காட்டுப்பள்ளியில் உமாதேவியாரைத் திருமேனியில் பாகம் கொண்டு குளிர்ந்த சந்திரனைச் சூடியவராய் வீற்றிருப்பவர். அத் தலைவரின் அருள் வழங்கும் திருவடியைத் தொழுது போற்ற அல்லல் யாவும் நீங்கும்.

314. சிலைதனால் முப்புரம் செற்றவன் சீரினார்
மலைதனால் வல்லரக் கன்வலி வாட்டினான்
கலைதனார் புறவணி மல்கு காட்டுப்பள்ளி
தலைதனால் வணங்கிடத் தவமது ஆகுமே.

தெளிவுரை: மேரு மலையை வில்லாகக் கொண்டு முப்புரத்தினை எரிந்து சாம்பலாகுமாறு செய்த ஈசன், சீர் மிகுந்த கயிலை மலையினால் இராவணனுடைய வலிமையை அடக்கியவர். அப் பெருமான், மான்கள் விளங்கும் சோலைகளைக் கொண்டு மேவும் காட்டுப் பள்ளியைச் சிரத்தையாய் வணங்க, நற்றவத்தின் பேறு கைவரப் பெறும்.

Koviloor Digital Library

சிறப்புரை: சிலை என்னும் சொல், மலையையும் வில்லையும் குறிக்குமாறு, மேருமலையை வில்லாகக் கொண்டு வீரம் விளைவித்த ஈசனின் ஆற்றலைச் சுட்டுவதாயிற்று.

மனம், வாக்கு, காயம் ஆகிய மூவகை வழிபாட்டு நெறியில், காயத்தால் ஆகிய வழிபாடும் இவண் சுட்டப் பெறுவதாயிற்று. ஆண்டாண்டுகள் ஆற்றிப் பெறுகின்ற தவத்தின் பேறு ஈசனை வணங்குதலால் கைவரப் பெறும் என்னும் அருள் தன்மையால் காண்க.

315. செங்கண்மால் திகழ்தரு மலருறை திசைமுகன்
தங்கையால் தொழுதெழத் தழலுரு ஆயினான்
கங்கையார் சடையினான் கருது காட்டுப்பள்ளி
அங்கையால் தொழும்அவர்க்கு அல்லல் ஒன்று
இல்லையே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் தொழுது போற்ற அழல் உருவம் ஆகிய கங்கையைச் சடையில் தரித்த சிவபெருமான் கருதுகின்ற காட்டுப்பள்ளியை அழகிய கைகளால் கூப்பித் தொழும் அன்பர்களுக்கு, அல்லல் இல்லை.

சிறப்புரை: இத்திருப்பாட்டு, திருத்தலத்தின் நாதனாகிய ஈசனின் இன்னருளைத் தலம் பெற்ற சீரினால், சாலோகம் என்னும் பாங்கினில் அமையப் பெற்ற தெனக் காண்க.

316. போதியார் பிண்டியர் என்றஅப் பொய்யர்கள்
வாதினால் உரையவை மெய்யல வைகலும்
காரினார் கடிபொழில் சூழ்ந்தகாட்டுப் பள்ளி
ஏரினால் தொழுதெழ இன்பம்வந்து எய்துமே.

Koviloor Digital Library

தெளிவுரை: *அரச மரத்தினடியில் ஞானம் பெற்ற புத்தரின் வழி வந்தவர் எனப் பகரப்படுபவரும், அசோக மரத்தின் நிழலில் அமரும் அருகக் கடவுளின் நெறியுளோர் எனப் பகரப்படுபவரும் கூறும் சொற்கள் வாதத்தால் உரைக்கப் பெற்றவை. அவை மெய்ம்மை ஆகாது. காட்டுப்பள்ளியினை நாள்தோறும் ஏத்தித் தொழுதுபோற்ற இன்பம் வந்து சேரும்.*

போதி – அரச மரம்; பிண்டி – அசோக மரம்.

317. **பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்னன்**
அருமறை யவைவல்ல அணிகொள்சம் பந்தன்சொல்
கருமணி மிடற்றினன் கருதுகாட்டுப் பள்ளி
பரவிய தமிழ் சொல்லப் பறையுமெய்ப் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நீர் வளம் பெருக அணி பெறும் புறவம் என்னும் பெயர் கொண்ட சீகாழிப் பதியில், சிறப்புடன் விளங்கும், அருமையாகப் போற்றப்பெறும் மறைகளில் வல்ல, அணி திகழ ஓங்கும் ஞானசம்பந்தன், நீல கண்டனாகிய ஈசன் கருதும் காட்டுப்பள்ளியைப் பரவிப் போற்றிய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், பாவம் தீரப் பெறுவார்கள்.*

சிறப்புரை: *மெய்ப்பாவம் பறையும் தன்மையைத் திருப்பாட்டு வ.எண் 295இல் உரைக்கப் பெற்றவாறு கொள்க.*

தமிழ் – திருப்பதிகத்தை உணர்த்தியது.

Koviloor Digital Library

288. அரதைப்பெரும்பாழி

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல் இது 99ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. ஹரித்துவாரமங்கலம் என வழங்கப்படுகிறது. திருமால் பன்றி வடிவம் கொண்டு பூமியைத் தோண்டிய (துவாரம் செய்த) இடம்.*

சுவாமி : *பாதாளேஸ்வரர், பாதாள வரதர்*

அம்பிகை : *அலங்காரவல்லி*

தல மரம் : *வன்னி*

தீர்த்தம் : *பிரம தீர்த்தம்*

பண் : *கொல்லி*

திருச்சிற்றம்பலம்

318. பைத்தபாம் போடுஅரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கள்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: *பாம்பும் கோவணமும் புலித்தோலும் கட்டிய ஈசன், பேய்கள் சூழ்ந்து முழங்க மயானத்தில் நடனம் ஆடி விளங்குபவர். அப்பெருமான், திருவெண்ணீறு அணிந்தவராய் மேவும் பித்தர் ஆவர். அவர் கோயில் கொண்டு விளங்குவது அரதைப் பெரும்பாழியே.*

319. கயலசே லகருங் கண்ணியர் நாள்தொறும்
பயலை கொள்ளப்பலி தேர்ந்துழல் பான்மையார்
இயலைவா னோர் நினைந் தோர்களுக்கு எண்ணரும்
பெயரர் கோயில்அர தைப்பெரும் பாழியே.

Koviloor Digital Library

தெளிவுரை: கயல் போன்றும் சேல் போன்றும் அழகிய கருமை வண்ணக் கண்ணுடைய மகளிர் நாள்தோறும் பசலை நோய் கொள்ளுமாறு கவரும் தோற்றம் உடையவராய்ப் பலி ஏற்று உழலும் பாங்கு உடையவர் ஈசன். அப்பெருமான், வானவர்களும் அடியவர்களும் எண்ணுதற்கு அரிய பல திருப் பெயர்களை உடைய வராய் விளங்குபவர். அவர், கோயில் கொண்டு இருப்பது அரதைப்பெரும்பாழியே.

320. கோடல் சாலவ் உடையார் கொலை யானையின்
மூடல் சாலவ் உடையார் முனிகானிடை
ஆடல் சாலவ் உடையார் அழகாகிய
பீடர் கோயில் அரதைப் பெரும் பாழியே.

தெளிவுரை: ஈசன், அடியவர்களின் மனத்தை ஏற்றுக் கொண்டு ஆங்கு உறைபவர்; யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர்; வெறுப்புக்கு உரிய தாகும் சுடுகாட்டில் நடனம் புரிபவர். அப்பெருமான், அழகு எனச் சொல்லப்படும் பெருமை உடையவராய்க் கோயில் கொண்டு விளங்குவது, அரதைப்பெரும் பாழியே.

சிறப்புரை: ஈசன், அன்புடையார்தம் விழைவுகளை ஏற்றுக் கொள்பவர் எனவும்; கோடல் எனச் சொல்லப் பெறும் காந்தள் மலரைச் சூடியவர் எனவும்; வளைந்த பிறைச் சந்திரனை அணிந்து திகழ்பவர் எனவும்; "கோடல் சால் உடையார்" என்னும் தொடர் வாயிலாகச் சுட்டப் பெறுதல் காண்க.

கோடல் – கொள்ளுதல்; காந்தள் மலர்; வளைவு.

321. மண்ணர்நீ ரார்அழ லார்மலி காலினார்
விண்ணர்வே தம்விரித்து ஓதுவார் மெய்ப்பொருள்

Koviloor Digital Library

பண்ணர்பா டல்உடை யார்ஒரு பாகமும்
பெண்ணர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐந்து பூதங்களாக விளங்கும் ஈசன், வேதங்களை விரித்து ஓதி அருள்பவர்; மெய்ப் பொருளாகியவர்; பண்ணில் அமரும் பாடலில் விளங்குபவர்; உமா தேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; அவர் எழுந்தருளியுள்ள கோயில் அரதைப்பெரும் பாழியே ஆகும்.

322. மறையர்வா யின்மொழி மானொடு வெண்மழுக்
கறைகொள்சூ லம்உடைக் கையர்கா ரார்தரும்
நறைகொல் கொன் றைநயந் தார்தரும் சென்னிமேல்
பிறையர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: வேதங்களை ஓதும் சிவபெருமான், மானும் மழுவும் கொண்டு சூலப்படை உடையவராய்த் தேன் துளிர்க்கும் கொன்றை மாலையை விரும்பித் தரித்துப் பிறைச் சந்திரனைச் சூடிக் கோயில் கொண்டு விளங்குவது அரதைப்பெரும்பாழியே.

323. புற்றரவம்புலித் தோலரைக் கோவணம்
தற்றிர வில்நடம் ஆடுவர் தாழ்தரு
சுற்றமர் பாரிடம் தொல்கொடி யின்மிசைப்
பெற்றர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: அரவம், புலித்தோல், கோவணம் ஆகிய வற்றினை இடையில் கட்டி, இரவில் நடம் புரியும் சிவபெருமான், பூத கணங்கள் சூழ விளங்கி இடபக் கொடியை உடையவர். அவர், கோயில் கொண்டு இருப்பது அரதைப்பெரும்பாழி ஆகும்.

Koviloor Digital Library

324. துணையிறுத்து அம்சுரி சங்குஅமர் வெண்பொடி
இணையிலேற் றையுகந்து ஏறுவ ரும்எரி
கணையினால் முப்புரம் செற்றவர் கையினில்
பிணையர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: *சங்கினால் ஆகிய வெண்குழை அணிந்து, திருவெண்ணீறு தரித்து மேவும் ஈசன், இடப வாகனத்தை உகந்து வாகனமாகக் கொண்டவர்; அக்கினிக் கணையைச் செலுத்தி முப்புரத்தை எரியுமாறு செற்றவர்; அப்பெருமான், மானைக் கையில் ஏந்தி, அரதைப்பெரும்பாழியில் கோயில் கொண்டு விளங்குபவர்.*

325. சரிவிலா வல்லரக் கன்தடம் தோள்தலை
நெரிவிலார் அவ்வடர்த் தார்நெறி மென்குழல்
அரிவைபா கம்அமர்ந் தார்அடி யாரொடும்
பிரிவில்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: *தளர்ச்சியே இல்லாத அரக்கனாகிய இராவணனின் வலிமையான பெரிய தோளும் தலையும் நெரியுமாறு அடர்த்த ஈசன், உமாதேவியாரைப் பாகமாகக் கொண்டு வீற்றிருந்து அடியவர்களோடு பிரியாது வீற்றிருக்கும் கோயிலானது, அரதைப்பெரும்பாழியே.*

சிறப்புரை: *அடியவர்கள், பிரியாது எக் காலத்திலும் விளங்கி வணங்கிப் போற்ற, சிவபெருமான் திகழும் தன்மை இவண் சுட்டப் பெற்றது. இத்தகைமையில், "ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்" எனத் திருநாவுக்கரசர் ஓதி அருளியவாறும் காண்க. இது, ஈசனை மந்திரங்கள் போன்ற திருநாமத்தால் இடையறாது திரும்பத் திரும்ப ஓதும் நெறியினைப் போன்று, நாள்தோறும், சந்திப்*

Koviloor Digital Library

போதுகள்தோறும் திருக்கோயிலை நண்ணி, ஈசனைத் தொழுது போற்றும் அடியவர்களின் பாங்கினை இயம்புதல் ஆயிற்று.

326. வரியரா என்புஅணி மார்பினர் நீர்மல்கும்
எரியரா வும்சடை மேற்பிறை யேற்றவர்
கரியமா லோடுஅயன் காண்பரி தாகிய
பெரியர்கோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: *வரிகளையுடைய அரவம், எலும்பு ஆகிய வற்றை மார்பில் அணியாகக் கொண்டு, கங்கை திகழும் சிவந்த சடையின் மீது, பிறைச் சந்திரனைச் சூடிய ஈசன், திருமாலும் பிரமனும் காண்பதற்கு அரியதாக ஓங்கிய பெருமை உடையவர். அவர் மேவி விளங்குகின்ற கோயில், அரதைப்பெரும்பாழியே.*

327. நாணிலாத சமண்சாக் கியர் நாள்தொறும்
ஏணிலா தம்மொழியவ் எழிலா யவர்
சேணுலா மும்மதில் தீயெழச் செற்றவர்
பேணுகோ யில்அர தைப்பெரும் பாழியே.

தெளிவுரை: *சமணரும் சாக்கியரும் நாள்தோறும் உயர் வற்ற சொற்களை மொழிதலுற்றாலும், எழில் மிகுந்த வராய், முப்புரங்கள் எரிந்து சாம்பலாகுமாறு செற்ற வராய் மேவும் ஈசன் பேணும் கோயில், அரதைப் பெரும்பாழியே.*

328. நீரினார் புன்சடை நிமலனுக்கு இடம்எனப்
பாரினார் பரவுஅர தைப்பெரும் பாழியைச்
சீரினார் காழியுள் ஞானசம் பந்தன்செய்
ஏரினார் தமிழ்வல்லார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: கங்கையை மெல்லிய சடையில் தாங்கும் நின்மலனாகிய ஈசனுக்கு இடமாவது எனப் பூவுலகில் நன்கு பரவப்பெறும் அரதைப்பெரும்பாழியைச் சீர் மிகுந்து பொலியும் காழிப் பதியின் ஞானசம்பந்தன் இசைத்த சிறப்புமிக்க இத்திருப்பதிகத்தை ஓதவல்லவர் களுக்குப் பாவம் என்பது இல்லை.

சிறப்புரை: இத் திருப்பாட்டு பாவத்திற்குக் காரண மாகிய தீய வினைகள் யாவும் அற்றொழியும் என்பதும், அது முத்திப் பேற்றுக்கு வகுக்கும் வழியாகும் என்பதும் குறிப்பால் சுட்டுவதாயிற்று.

289. திருமயேந்திரப்பள்ளி

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலங்கள் 63இல் இது, 6ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. இந்திரன், சந்திரன் ஆகியோர் வழிபட்டது. ஆண்டு தோறும் பங்குனி மாதத்தில் ஒரு வார காலம் சூரியனுடைய ஒளி சுவாமி மீது பரவுவது சிறப்பாகும்.

சுவாமி : திருமேனியழகர், சோமசுந்தரர்

அம்பிகை : வடிவாம்பாள்

தல மரம் : கண்ட மரம், தாழை

தீர்த்தம் : மயேந்திர தீர்த்தம்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

329. திரைதரு பவளமும் சீர்திகழ் வயிரமும்
கரைதரும் அகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலால் எயில்எய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை அடியிணை பணிமினே.

Koviloor Digital Library

தெளிவுரை: *கடல் அலைகள் பவளம் கொண்டு வந்து சேர்க்கும் மயேந்திரப்பள்ளியில், சிறப்பான வயிரங் களும் அகில் மரங்களும் கனமான சங்குகளும் விளங்குகின்றன. ஆங்கு, மேருவை வில்லாகக் கொண்டு முப்புரங்கள் எரியுமாறு அம்பு தொடுத்த, அரவத்தை அரையில் கட்டி அழகனாக மேவும் ஈசனின் திருவடியைப் பணிவீராக.*

அரவரை யழகன் – அரவத்தை அரையில் கட்டிய ஈசன்.

330. கொண்டல்சேர் கோபுரம் கோலமார் மாளிகை
கண்டலும் கைதையும் கமலமார் வாவியும்
வண்டுலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியிற்
செண்டுசேர் விடையினாந் திருந்தடி பணிமினே.

தெளிவுரை: *மேகத்தைத் தொடும் உயர்ந்த கோபுரங் களும் அழகிய மாளிகைகளும் விளங்க, நீர்முள்ளியும் தாழையும் தாமரை மலர் பொலியும் பொய்கையும், வண்டுகள் உலவுகின்ற பொழிலும் அணியாகக் கொண்டு மேவும் மயேந்திரப்பள்ளியில், நடையின் மிடுக்குடைய இடபத்தை வாகனமாக உடைய ஈசனின் திருவடியைப் பணிவீராக.*

331. கோங்கிள வேங்கையும் கொழுமலர்ப் புன்னையும்
தாங்குதேன் கொன்றையும் தகுமலர்க் குரவமும்
ஆங்கரும் பும்வயன் மயேந்திரப் பள்ளியுள்
ஆங்கிருந் தவன்கழ லடியிணை பணிமினே.

தெளிவுரை: *கோங்கு, வேங்கை, புன்னை, கொன்றை, குரவம் ஆகியன நன்கு விளங்குகின்ற மயேந்திரப் பள்ளியில் வீற்றிருக்கின்ற இறைவனின் திருவடி மலரைப் பணிவீராக.*

Koviloor Digital Library

சிறப்புரை: வண்ண மலர்களால் ஈசனைத் தூவிப் போற்றும் பாங்கினைக் குறிப்பால் சுட்டுமாறு இத் திருப்பாட்டு உணர்த்திற்று. அட்ட புட்பங்களில் கூறப்பெறும் தாமரை, புன்னை மலர்களும், பிரணவ புஷ்பம் எனப் பெறும் கொன்றையும் இவண் மலர்தல் உணர்த்தியதாம்.

இருந்தவன் – வீற்றிருப்பவன்; பெரிய தவத்தினன். ஆங்கரும்பும் – ஆங்கு அரும்பும்; ஆக்கம் தரும் கரும்பும் எனலும் பொருந்தும்.

332. வங்கமார் சேணுயர் வருகுறி யான்மிகு
சங்கமார் ஒலியகில் தருபுகை கமழ்தரு
மங்கையோர் பங்கினன் மயேந்திரப் பள்ளியுள்
எங்கள்நா யகன்றனது இணையடி பணிமினே.

தெளிவுரை: நெடுந்தொலைவிலிருந்து கப்பல் வரும் குறிப்பைத் தெரிவிக்கும் சங்கின் ஒலியும், அகிலின் புகை மிகுந்து கமழும் நறுமணமும் திகழ மேவும் மயேந்திரப்பள்ளியில் உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருக்கும் ஈசன், எங்கள் நாயகன் ஆவார். அப் பெருமானுடைய திருவடியைப் பணிவீராக.

சிறப்புரை: திருஞானசம்பந்தர் அடியவர் திருக்கூட்டத்துடன் ஈசனை வணங்கிப் போற்றி, "எங்கள் நாயகன்" என மொழிந்து அருள் விளங்கப் பெற்ற பாங்கினை இத் திருப்பாட்டு குறிப்பால் உணர்த்தி, அத்தகைய திருவடி, அனைவருக்கும் நற்பேற்றினை அளிக்க வல்லது என்னும் தன்மை, "இணையடி பணிமினே" என்று அருளாணையாய் வழங்கப் பெற்றது.

333. நித்திலத் தொகைபல நிரைதரு மலரெனச்
சித்திரப் புணரிசேர்த் திடத்திகழ்ந்து இருந்தவன்
மைத்திகழ் கண்டனன் மயேந்திரப் பள்ளியுட்
கைத்தல மழுவனைக் கண்டடி பணிமினே.

Koviloor Digital Library

தெளிவுரை: *முத்துக்கள் வகை வகையாய்க் குவிக்கப் பெற்று, மலர்கள் போன்று ஒளிர்ந்து விளங்கக் கடல் அலைகளால் பெருகித் திகழ மேவும் மயேந்திரப் பள்ளியில், நீலகண்டனாகிய ஈசன் மழுப்படையை ஏந்தி வீற்றிருக்க, அப் பரமனைத் தரிசித்துப் பணி வீராக.*

334. சந்திரன் கதிரவன் தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்
மந்திர மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் அழகனை அடிபணிந்து உய்ம்மினே.

தெளிவுரை: *சந்திரன், சூரியன், புகழ் மிகும் பிரமன், இந்திரன் ஆகியோர் வழிபடத் திகழும் எம் இறைவன், வேத மந்திரங்கள் பெருகி ஓங்க அந்தணர்கள் விளங்கும் மயேந்திரப்பள்ளியில் வீற்றிரும் அழகன் ஆவார். அப் பெருமானின் அடி பணிந்து உய்தி அடைமின்.*

சிறப்புரை: *இத் திருத்தலத்தின் பெருமையை இத் திருப்பாட்டில் குறிப்பிட்டு ஈசன் திருநாமத்தின் சிறப்பும் உணர்த்தப் பெற்றது.*

அழகன் – திருமேனியழகர். இத் தலத்தின் ஈசன் திருப்பெயர்.

335. சடைமுடி முனிவர்கள் சமைவொடும் வழிபட
நடநவில் புரிவினன் நறவணி மலரொடு
படர்சடை மதியினன் மயேந்திரப் பள்ளியுள்
அடல்விடை யுடையவன் அடிபணிந்து உய்ம்மினே.

தெளிவுரை: *சடை முடி கொண்டு தவத்தை மேற் கொண்டு விளங்கும் முனிவர்கள், அமைதி பெருகும் பாங்கில் மனம் பொருந்திய வழிபட, ஈசன், நடம் பயின்று மேவுபவராய்ப் படர்ந்து விளங்கும் சடையில்*

Koviloor Digital Library

நறுமலரினையும் சந்திரனையும் சூடியவராய், இடப வாகனத்தை உடையவராய், மயேந்திரப்பள்ளியில் வீற்றிருப்பவர். அப்பெருமானின் திருவடியைப் பணிந்து, உய்வீராக.

336. சிரமொரு பதும்உடைச் செருவலி யரக்கனைக்
கரம்இரு பதும்இறக் கனவரை யடர்த்தவன்
மரவமர் பூம்பொழில் மயேந்திரப் பள்ளியுள்
அரவமர் சடையனை அடிபணிந்து உய்ம்மினே.

தெளிவுரை: பத்துத் தலைகளை உடைய வலிமை மிகுந்த அரக்கனாகிய இராவணனுடைய இருபது கரங்களும் கெடுமாறு, கனமான மலையாகிய கயிலையைக் கொண்டு அடர்த்த ஈசன், வெண் கடம்ப மரங்கள் கொண்டுள்ள பூம்பொழல் சூழ்ந்த மயேந்திரப் பள்ளியுள், அரவம் சூடிய சடை முடி உடையவராய் வீற்றிருப்பவர். அப் பரமனின் திருவடியைப் பணிந்து உய்வீராக.

சிறப்புரை: இராவணனுடைய வலிமையானது அவனுக்குப் பகைமையைத் தரவல்லதானது, "செருவலி" எனச் சுட்டப் பெறுவதாயிற்று. அத்தகைய வலிமை, போர் தொடுக்க ஏதுவாயிற்று எனலும் அமையும். கயிலை மலையானது பெருமை மிகுந்த மலை என்னும் பாங்கினில் "கனவரை" என வியந்து ஓதப் பெற்றது. இதன் சிறப்பினை, "கற்றவர்கள் சொற்றொகையின் முற்றும் ஒளி பெற்ற கயிலாய மலையே" (3.68.2 பா.வ.எண் 727) என வரும் திருஞான சம்பந்தர் வாக்கும் கொண்டு நோக்குக.

இத் திருமலையின் சிறப்பினை, "ஊழி தோறும் ஊழி முற்றும் உயர் பொன் நொடித்தான் மலை" எனச்

Koviloor Digital Library

சுந்தரர் அருளிச் செய்த பாங்கு காண்க. "கற்றனன் கயிலை தன்னைக் காண்டலும்" (கற்றவன் - சிவபெருமான்) எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்த சிறப்பும் நோக்குக.

சேக்கிழார் பெருமான் திருக்கயிலையின் வண்ணத்தை,

அண்ணல் வீற்றிருக் கப்பெற்றது ஆதலின்
நண்ணும் மூன்றுல கும்நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்யவந்து எய்திய
புண்ணி யந்திரண்டு உள்ளது போல்வது

—திருமலைச் சிறப்பு. பாட்டு 2

என அருளிச் செய்த சிறப்பினை நோக்குக.

மரவம் – வெண்கடம்ப மரம்.

337. நாகணைத் துயில்பவன் நலமிகு மலரவன்
ஆகணைந் தவர்கழல் அணையவும் பெறுகிலர்
மாகணைந் தலர்பொழில் மயேந்திரப் பள்ளியுள்
யோகணைந் தவன்கழல் உணர்ந்திருந்து உய்ம்மினே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் திருக்கழலைக் காண முடியாதவாறு ஓங்கிய ஈசன், மேகத்தைத் தொடுகின்ற உயர்ந்த பொழில் சூழ்ந்த மயேந்திரப் பள்ளியுள், யோகியாய் விளங்கும் பெருமான் ஆவார். அவர் திருக்கழலை உணர்ந்து அத் தன்மையால் தியானம் செய்து இருந்து, உய்வு பெறுவீராக.

சிறப்புரை: ஈசன், யோகத்தில் விளங்கி மேவும் பெருமான் என்பதும், அப் பரமனை அவ்வாறே அந்நெறியில் அமர்ந்து இருந்து உணர்தல் வேண்டும்

Koviloor Digital Library

என்பதும் இவண், "யோகு அணைந்து அவன் கழல் உணர்ந்து இருந்து உய்ம்மினே" என உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், மணிவாசகப் பெருமான், "உம்பர்கட்கு அரசே! ஒழிவு அற நிறைந்த யோகமே" என ஓதியருளிய மாண்பும் காண்க.

மாகம் – ஆகாயம், மேகம்.

338. உடைதுறந் தவர்களும் உடைதுவர் உடையாரும்
படுபழி யுடையவர் பகர்வன விடுமினீர்
மடைவளர் வயலணி மயேந்திரப் பள்ளியுள்
இடமுடை ஈசனை இணையடி பணிமினே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் பழிச் சொல் பகர்கின்ற தன்மையில், அவற்றை ஏற்க வேண்டாம். நீர்வளமும் நிலவளமும் கொண்ட மயேந்திரப் பள்ளியில் வீற்றிருக்கும் ஈசனின் திருவடியைப் பணிவீராக; நற்கதி உறுவீராக.

339. வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனார் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பரம் இதுஎன நாவினால் நவில்பவர்
உம்பரார் எதிர்கொள உயர்பதி அணைவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நறுமணம் கமழும் மலர்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த மயேந்திரப்பள்ளியுள், ஈசனின் திருவடியை ஏத்தி, ஞானசம்பந்தன் உரைத்த இத் திருப்பதிகத்தை, "இதுவே நமக்குக் கேடயமாக இருந்து தீய வினைகளால் உண்டாகும் துன்பத்திலிருந்து பாதுகாக்க வல்லது" எனக் கொண்டு ஓதி உரைப் பவர்கள், மறுமையில் தேவர்களால் எதிர் கொண்டு

Koviloor Digital Library

வரவேற்கப் பெற்று, உயர்ந்த இருப்பிடத்தைச் சார்ந்து, இனிது விளங்குவார்கள்.

சிறப்புரை: இத் திருப்பதிகமானது ஈசனின் திருவடியை வணங்கும் பெற்றியைத் திருப்பாடல்கள்தோறும் உணர்த்திற்று. ஈசனின் அடிமலர்கள், பரஞானம் அபரஞானம் ஆகுதலும், அவ் அரிய அடிமலர்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நலம் அளிப்பனவாதலும் உணர்த்தப் பெற்றன.

திருக்கடைக் காப்பாக உள்ள இத் திருப்பாட்டில் திருஞானசம்பந்தரின் திருப்பதிகம் மக்களுக்குக் கேடயமாக அமைந்து, மேலான பாதுகாப்பைத் தருவது நன்கு உணர்த்தப் பெற்றது. வினைகளை நுகர்ந்து காணும் கர்ம பூமியாகிய இம்மண்ணுலகில், தீவினையின் தாக்கம் தவிர்க்க இயலாது என்பதும், ஆயினும் அவற்றிலிருந்து கேடயம் போன்று பாதுகாக்க வல்ல இத் திருப்பதிகத்தை ஓதி உரைத்தல் கடமை என்பதும் எண்ணுக.

நம்பன் – ஈசன். பரம் – மேலானது, கேடயம்.

290. திருவேடகம்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலங்கள் 14இல், இது 4ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பிரமன், திருமால், ஆதிசேடன், கருடன், வியாசர், பராசரர் ஆகியோர் வழிபட்டது.

பதிகக் குறிப்பு: ஆலவாயில், புனல் வாதத்தின் போது திருஞானசம்பந்தர், "வாழ்க அந்தணர்" என்னும் திருப் பதிகத்தை ஓலையில் எழுதி வைகையாற்றில் விட, அது

Koviloor Digital Library

எதிர்த்திசை நோக்கிக் காற்றென விரைந்தது. கரையின் ஓரமாகக் குலச்சிறையார் ஒரு குதிரையின் மீதேறி வேகமாகச் சென்றும் அவ் ஓலையைக் கையில் கொள்ள இயலவில்லை. இதனை அறிந்த திருஞானசம்பந்தர், அத் திருப்பதிகம் தாங்கிய ஓலையை நிற்கும் பொருட்டு அருளிச் செய்த பதிகம் இது.

சுவாமி : ஏடக நாதேஸ்வரர்

அம்பிகை : ஏலவார்குழலி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

340. வன்னியு மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத்து ஒருவனே.

தெளிவுரை: வன்னிப் பத்திரமும், ஊமத்த மலரும், சந்திரனும் சடை முடியில் தரித்து விளங்கும் ஈசனின் பொன்னின் தன்மையில் விளங்கும் திருவடியைப் புது மலர்களால் அந்தணர்கள் போற்றி வழிபடவும், அடியவர்கள் இனிய இசையுடன் பாடிப் போற்றவும் ஏத்தி விளங்குகின்றனர். அவ்வாறு ஏத்தப் பெறுபவன் ஏடகத்தில் மேவும் ஒப்பற்ற இறைவன் ஆவான்.

341. கொடிநெடு மாளிகை கோபுரம் குளிர்மதி
வடிவுற அமைதர மருவிய ஏடகத்து
அடிகளை அடிபணிந்து அரற்றுமின் அன்பினால்
இடிபடும் வினைகள்போய் இல்லைய தாகுமே.

Koviloor Digital Library

தெளிவுரை: கொடிகளை உடைய நெடிது உயர்ந்து விளங்கும் மாளிகையின் கோபுரத்தில் குளிர்ந்த சந்திரன் மருவும் ஏடகத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானை, அடி பணிந்து அரநாமத்தினைக் கூறி அன்பினால் ஏத்துமின் இம்மையில் துன்பத்தைத் தருகின்ற தீய வினைகள் யாவும் அற்று ஒழிந்து இல்லாமை ஆகும்.

சிறப்புரை: இது மூவகையான – சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் எனப்படும் வினை யாவும் தீரப் பெற்றுப் பிறவாமை நல்கும் என்பது குறிப்பு.

342. குண்டலம் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூர் ஏடகம்
கண்டுகை தொழுதலும் கவலைநோய் கழலுமே.

தெளிவுரை: காதில் இரு கந்தருவர்களைக் குண்டல மாகக் கொண்டு திகழும் குழகன், வண்டு உலவும் கொன்றை மலரையும் வானில் விளங்கும் சந்திரனை யும் சடை முடியில் தரித்து மேவும் ஈசன் ஆவார். அப்பெருமான், வீரநடையின் சிறப்பினைக் கொள்ளும் இடபத்தின் மீது வீற்றிருப்பவர். அத்தகைய பெருமைக்கு உரியவருடைய ஊர் ஏடகம் ஆகும். அத்தலத்தைத் தரிசித்துக் கைதொழுது போற்ற, மனக் கவலையால் பீடிக்கப்பெற்ற நோய் விலகிச் செல்லும்.

சிறப்புரை: இத் தலத்தில் உள்ள தீர்த்தத்தில் மூழ்கி இறைவனை வழிபடின் சித்தப் பிரமை நீங்கும் என்னும் தலச்சிறப்பு சுட்டப் பெறுதல் காண்க.

343. ஏலமார் தருகுழல் ஏழையோடு எழில்பெறும்
கோலமார் தருவிடைக் குழகனார் உறைவிடம்

Koviloor Digital Library

சாலமா தவிகளும் சந்தனம் சண்பகம்
சீலமார் ஏடகம் சேர்தலாம் செல்வமே.

தெளிவுரை: ஏலவார் குழலி என்னும் திருநாமம் தாங்கிய அம்பிகையோடு, எழில் மிகுந்த இடப வாகனத்தில் வீற்றிருக்கும் குழகனாரின் உறைவிடமானது, மாதவி, சந்தனம், சண்பகம் ஆகியன மிகுந்து விளங்கும் சிறப்புடைய ஏடகம் ஆகும். அத் தலத்தைச் சென்று அடைந்து, ஈசனை ஏத்துதல் செல்வம் பயக்கும்.

சிறப்புரை: இத் திருத்தலத்தின் அம்பிகையின் திருநாமம் இவண் சுட்டப் பெற்றது. மூர்த்தி, தலம் தீர்த்தம் என முறையாய்த் தொழும் நெறியில் இத் திருப்பாட்டு, திருத்தலச் சிறப்பினையும் ஓதுதல் ஆயிற்று. இம்மைக்கும் மறுமைக்கும் வாய்க்கப் பெறும் செல்வமாக ஈசனின் அருட் பொலிவு விளங்குதல், "செல்வமே" எனக் குறிப்பால் உணர்த்தப் பெற்றது.

இத் திருப்பாட்டில் குறிக்கப் பெற்ற சண்பகம் அட்ட புட்பங்களில் ஒன்றாக விளங்கி மலர் தூவி வழிபடும் சிறப்பினை நல்குதல் காண்க.

ஏழை – அம்பிகை.

344. வரியணி நயனிநன் மலைமகள் மறுகிடக்
கரியினை யுரிசெய்த கறையணி மிடறினன்
பெரியவன் பெண்ணினோடு ஆண்அலி யாகிய
எரியவன் உறைவிடம் ஏடகக் கோயிலே.

தெளிவுரை: அழகிய கண்களை உடைய மலைமகள் வியந்து நோக்க, யானையின் தோலை உரித்த நீல கண்டனாகிய ஈசன், பெருமை மிகுந்தவர். அப்பெருமமான், பெண்ணாகவும் ஆண் ஆகவும் அலி

Koviloor Digital Library

யாகவும் விளங்கிச் சோதிமயமாய் மேவும் பரமன். அவர் உறைவிடமாவது ஏடகக் கோயில் ஆகும்.

சிறப்புரை: ஈசன் ஆணாகவும் பெண்ணாகவும் அலியாகவும் விளங்குதல், "பெண்ணினோடு ஆணலியாகிய" என்னும் தொடரால் உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், "பெண் ஆண் அலியெனும் பெற்றியன் காண்க" என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த வண்ணமும் காண்க.

"உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன் பெண்ணாகிய பெருமான்" என அருளிச் செய்த ஞானசம்பந்தர் வாக்கினை (திருவண்ணா மலை திருப்பதிகம் - முதல் திருமுறை) நோக்குக.

நயனி – அம்பிகையின் விழியை உணர்த்தியது.

345. பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்து
ஐயனை அடிபணிந்து அரற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே.

தெளிவுரை: பொய்கையைச் சூழ்ந்து, பைம்பொழில் விளங்க, நறுமண மலர்களின் தென்றல் காற்று வீச, வைகை ஆற்றின் வடகரையில் மேவும் ஏடகத்தில் வீற்றிருக்கும் தலைவனாகிய ஈசனின் திருவடியைப் பணிந்து, அரநாமத்தினை நன்கு வாய் மலரக் கூறுவீராக. அது இம்மையில் கொடிய பிணிகளைத் தீர்த்து, மறுமையில் முத்திப் பேற்றினை எளிதாகக் கிடைக்கச் செய்யும்.

சிறப்புரை: ஈசனின் அரநாமமானது, வாய் மலர் நவின்றவர்பால் மட்டும் அல்லாது, செவிகுளிரக் கேட்டவர்பாலும் அத்தகைய பயனை நனி

Koviloor Digital Library

சேர்விக்கும் எனக் கொள்க. "சிவன் எம் இறை செம் பவள எரிபோல் மேனிப்பிரான் திறம் எப்போதும் செவிகாள் கேண்மின்களோ" எனத் திருநாவுக்கரசர் திருஅங்கமாலையில் அருளிச் செய்தவாறும் ஓர்க.

346. தடவரை எடுத்தவன் தருக்கிறத் தோள்அடர்
படவிரல் ஊன்றியே பரிந்தவற்கு அருள்செய்தான்
மடவரல் எருக்கொடு வன்னியும் மத்தமும்
இடமுடைச் சடையினன் ஏடகத்து இறைவனே.

தெளிவுரை: பெரிய கயிலையை எடுத்த இராவணனுடைய தருக்கினைக் கெடுத்துத் தோள்களை அடர்த்து விரலால் ஊன்றியும், பின்னர் பரிவுடன் அருளும் செய்த ஈசன்; அரும்பு போன்ற எருக்கு, வன்னி, ஊமத்தம் மலர் ஆகியவற்றைச் சடை முடியில் வைத்தவர். அப் பெருமான் ஏடகத்தில் வீற்றிருக்கும் இறைவன்.

347. பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தகில்
தன்னுளார் வைகையின் கரைதனில் சமைவுற
அன்னமா மயனுமால் அடிமுடி தேடியும்
இன்னவாறு எனவொணான் ஏடகத்து ஒருவனே.

தெளிவுரை: பொன்னும், மணி வகைகளும், சந்தனம், அகில் ஆகிய மரங்களும் அலைகளின் வாயிலாகக் கொண்டு வந்து சேர்க்கும் வைகையின் கரையில், அன்னப் பறவையாக பிரமனன் திருமுடியையும் பன்றி வடிவாகத் திருமால் திருவடியையும் தேடியும், இன்னதென்று எனக் காணாதவாறு திகழ்ந்திருந்த ஈசன், ஏடகத்தில் வீற்றிருக்கும் பரமனே ஆவான்.

348. குண்டிகைக் கையினர் குணமலாத் தேரர்கள்
பண்டியைப் பெருக்கிடும் பளகர்கள் பணிகிலர்

Koviloor Digital Library

வண்டிரைக் கும்மலர்க் கொன்றையும் வன்னியும்
இண்டைசேர்க் குஞ்சடை ஏடகத்து எந்தையே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் கூறும் உரைகள் குணமில்லாதன. அவை அறியாமையால் மொழிவன. அதனைக் கொள்ள வேண்டாம். கொன்றை மலரும் வன்னியும் மாலையாகக் கொண்டு, சடையில் விளங்க மேவும் ஏடகத்தின் எந்தை ஆகிய ஈசனை, ஏத்தி வழிபடுமின்.

சிறப்புரை: அறிவுக்கு அறிவாகிய இறைவன், பகுத்தறிவு கொண்டு அறிய முடியாத பரம் பொருள். அப் பரமனை, அறியாமை மேலிட்ட மூர்க்கத் தனத்தினால் வணங்காமல் உள்ளவர்கள் "பளகர்" எனச் சுட்டப் பெற்றனர். இத்தன்மையில்,

. . . . நெஞ்சே !
பளகு அறுத்து உடையான் கழல் பணிந்திலை
பரகதி புகுவானே.

—திருவாசகம் 39

என மாணிக்கவாசகர் உணர்த்தி அருளியவாறும் காண்க.

பளகு – குற்றம்; மூர்க்கத்தனம்; மூடத்தனம்.
இண்டை – ஈசன் தலையில் அணிந்துள்ள மாலை

349. கோடுசந் தனம்அகில் கொண்டிழி வைகைநீர்
ஏடுசென்று அணைதரும் ஏடகத்து ஒருவனை
நாடுதென் புகலியுள் ஞானசம் பந்தன
பாடல்பத்து இவைவல்லார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: யானையின் தந்தம், சந்தனம், அகில் ஆகிய வற்றை அலைகள் வாயிலாகக் கொண்டு வரும்

Koviloor Digital Library

வைகை நீரில், எதிர் நீந்திச் சென்ற திரு ஏடு சேரும் ஏடகத் தீவை நாடி ஏத்திய, அழகிய புகலியின் ஞான சம்பந்தன் பாடிய இத் திருப்பதிகத்தை ஏத்த வல்லவர்கள், தீவினை நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: புகலியின் சிறப்பு தென்புகலி எனச் சுட்டப் பெற்றது. இது பெருமை, அழகு என்னும் பொருளைக் காட்ட வல்லது. "தென் தில்லை மன்றினுள் ஆடி போற்றி" என்பதைப் போன்று, தென்புகலியில் உள்ள 'தென்' என்னும் சொல்லின் உட்பொருளைக் காணல் சிறப்பு.

தென் – அழகு; இனிமை; பெருமை. ஏடகம் – தலத்தின் பெயரும், ஈசன் திருப்பெயரும் சுட்டுமாறு ஆயிற்று.

291. திருஉசாத்தானம்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல் இது 107ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. கோயிலூர் என வழங்கப்படுகிறது. இராமர், இலக்குவன், ஜாம்பவான், சுக்ரீவன், அநுமன், இந்திரன், விசுவாமித்திரர் வழிபட்டது. விசுவாமித் திரருக்கு ஈசன் நடனக் காட்சி அருளிய தலம். இராமர் ஈசனிடம் உபதேசம் பெற்ற தலம். ஈசன் திருமேனி வெண்மை பொருந்தியது.

சுவாமி : மந்திரபுரீஸ்வரர்

அம்பிகை : பிருகந்நாயகி, பெரிய நாயகி

தல மரம் : மா மரம்

தீர்த்தம் : கௌதம தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், அநுமன் தீர்த்தம்

Koviloor Digital Library

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

350. நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்அநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே.

தெளிவுரை: திருமாலாகிய இராமபிரானும், இலட்சுமணனும், சாம்பவான், சுக்கிரீவன், அநுமன் ஆகியோரும் தொழுது வணங்கக் கரிய நஞ்சினை அருந்திக் காத்தருள் செய்த, எம் பெருமைக்குரிய சிவபெருமான் வாழ்கின்ற இடம், திருஉசாத்தானம் ஆகும்.

சிறப்புரை: தல விசேடச் சிறப்பு இத் திருப்பாட்டில் குறிக்கப் பெற்றது.

சேடர் – சிவபெருமான்.

351. கொல்லையே றுடையவன் கோவண ஆடையன்
பல்லையார் படுதலைப் பலிகொளும் பரமனார்
முல்லையார் புறவணி முதுபதி நறைகமழ்
தில்லையான் உறைவிடம் திருவுசாத் தானமே.

தெளிவுரை: ஈசன், இடப வாகனத்தை உடையவர்; கோவண ஆடை உடையவர்; பிரம கபாலம் ஏந்திப் பலி கொள்பவர்; தேன் துளிர்க்கும் சோலை சூழ்ந்த தில்லையில் விளங்குபவர்; அப் பெருமானின் உறைவிடம் திருஉசாத்தானம் ஆகும்.

சிறப்புரை: தில்லையில் வீற்றிருக்கும் அருட்கோலம் இத் திருப்பாட்டின் வாயிலாகச் சுட்டப் பெறும் பாங்கினைக் காண்க.

பல்லையார் படுதலை – பிரம கபாலம்.

Koviloor Digital Library

352. தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
ஊமனார் தங்கனா வாக்கினான் ஒருநொடிக்
காமனார் உடல்கெடக் காய்ந்தவெங் கண்ணுதல்
சேமமா உறைவிடம் திருவுசாத் தானமே.

தெளிவுரை: தக்கனின் வேள்வியைப் பயனற்றதாகச் செய்த ஈசன், மன்மதனின் உடல் எரிந்து சாம்பலாகு மாறு செய்த நெற்றிக் கண்ணுடைய கடவுள். அவர், அடியவர்களுக்கு நலம் வழங்கும் தன்மையில் உறையும் இடமாவது, திருஉசாத்தானம் ஆகும்.

சிறப்புரை: உமாதேவியார் தக்கனின் திருமகளாக அவதாரம் செய்து, தாட்சாயணி என்னும் திருநாமம் தாங்கி ஈசனை மணங் கொண்ட தன்மையிலும், தமக்கு வேண்டியவர் எனப்பாராது உலகிற்குத் தீயன விளை விக்கும் தக்கனது வேள்வியைத் தகர்த்த பாங்கு, "தாமலார் போலவே" எனச் சுட்டப் பெற்றது. ஊமையின் கனவு வெளிப்படாதது போன்று, தக்கன் செய்த வேள்வியின் இகழ்ச்சியினைக் "கனா ஆக்கினான்" எனச் சுட்டப் பெற்றது.

353. மறிதரு கரத்தினான் மால்விடை ஏறினான்
குறிதரு கோலநற் குணத்தினார் அடிதொழ
நெறிதரு வேதியர் நித்தலும் நியமம்செய்
செறிதரு பொழிலணி திருவுசாத் தானமே.

தெளிவுரை: மானைக் கரத்தில் ஏந்திய ஈசன், பெருமை உடைய இடப வாகனத்தில் ஏறி, சீலமும் ஆசாரமும் கொண்டு விளங்கும் நற்குணத்தினரான அடியவர்கள் தொழுது போற்றவும், சிவாகம நெறியில் அந்தணர்கள் நாள்தோறும் நியமத்துடன் பூசிக்கவும் விளங்கும் இடம், பொழில் திகழும் திருஉசாத்தானம் ஆகும்.

Koviloor Digital Library

354. பண்டிரைத்து அயனுமா லும்பல பத்தர்கள்
தொண்டிரைத் தும்மலர்தூவித் தோத் திரம்சொலக்
கொண்டிரைக் கொடியொடும் குருகினில் நல்லினம்
தெண்டிரைக் கழனிசூழ் திருவுசாத் தானமே.

தெளிவுரை: பிரமன், திருமால் மற்றும் பக்தர்கள் பண்டைக் காலம் தொட்டு, அரநாமத்தை ஓதி உரைத்தும், மலர் தூவித் தோத்திரங்கள் சொல்லியும் விளங்கி மேவ, அத்தகைய ஈசன் திகழ்வது, நல்லினப் பறவை இனங்களும், நீர் வளம் மிகுந்த கழனிகளும் சூழ்ந்த, திருஉசாத்தானம் ஆகும்.

355. மடவரல் பங்கினன் மலைதனை மதியாது
சடசட எடுத்தவன் தலைபத்து நெரிதர
அடர்தர ஊன்றியங் கேஅவற்கு அருள்செய்தான்
திடமென உழைவிடம் திருவுசாத் தானமே.

தெளிவுரை: உமாதேவியைத் தேகத்தில் பாகமாகக் கொண்டு மேவும் ஈசன், கயிலை மலையை மதியாது பெயர்த்தெடுத்த இராவணனின் பத்துத் தலைகளும் நெரியுமாறு அடர்த்தும், பின்னர் அருளும் செய்து, உறுதியாக வீற்றிருக்கும் இடம் திருஉசாத்தானம் ஆகும்.

மடவரல் – உமாதேவி.

356. ஆணலார் பெண்ணலார் அயனொடு மாலுக்கும்
காணொணா வண்ணத்தான் கருதுவார் மனத்துளான்
பேணுவார் பிணியொடும் பிறப்பறுப் பானிடம்
சேணுலா மாளிகைத் திருவுசாத் தானமே.

தெளிவுரை: ஆணாகவும் இன்றிப் பெண்ணாகவும் இன்றி மேவும் ஈசன், பிரமனும் திருமாலும் காணுதற்கு அரியவர்; அன்பர்தம் மனத்தில் நிறைந்து இருப்பவர்; வணங்கும் அடியவர்தம் உடற் பிணியும் நீக்கிப் பிறவிப் பிணியும் தீர்ப்பவர். அப் பெருமான் வீற்றிருக்கும்

Koviloor Digital Library

இடம், மாட மாளிகைகள் கொண்ட, திருஉசாத்தானம் ஆகும்.

357. கானமார் வாழ்க்கையான் காரமண் தேரர்சொல்
ஊனமாக் கொண்டுநீர் உரைமின்உய் யஎனில்
வானமார் மதிலணி மாளிகை வளர்பொழில்
தேனமா மதியந் தோய் திருவுசாத் தானமே.

தெளிவுரை: *சமணர் மற்றும் சாக்கியர் தம் சொற்கள் பயனற்றவை. நீவிர் உய்ய வேண்டும் என்றால், மயானத்தில் நடனம் புரியும் ஈசன் விளங்குகின்ற, உயர்ந்த மதில்களும், மாளிகைகளும், வளர் பொழில் களும் சூழ, இனிய நிலவு தோயும் திரு உசாத்தானத்தை ஏத்துமின்.*

358. வரைதிரிந்து இழியுநீர் வளவயற் புகலிமன்
திரைதிரிந்து எறிகடல் திருவுசாத் தானரை
உரைதெரிந்து உணரும்சம் பந்தன்ஒண் தமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *நீர் வளமும் வயல் வளமும் மிகுந்த புகலி யில் விளங்கும் ஞானசம்பந்தன், திருஉசாத்தானத்தில் வீற்றிருக்கும் நாதரை உரை தெரிந்து உரைத்த இத்திருப் பதிகத்தை ஓத வல்லவர்கள், நரை திரை என வந்து தாக்கும் மூப்பின் தளர்ச்சியின்றி, இளமை மிடுக்குடன் வாழ்ந்து, நன்னெறியாக விளங்குகின்ற சிவஞான நெறியின்கண் பொருந்தித் திகழ்வார்கள்.*

292. திருமுதுகுன்றம்

தல விளக்கம்: *நடு நாட்டுத் தலங்கள் 22இல் 9ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. இத் தலத்திற்கு*

Koviloor Digital Library

விருத்தகாசி என்னும் பெயர் உண்டு. பிரமனும் அகத்தியரும் வழிபட்ட பதி. சுந்தரர் பொன் பெற்ற தலம்.

மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 12, இரண்டாம் திருமுறை பதிகம் எண் 200 காண்க.

சுவாமி : பழமலைநாதர், விருத்தகிரீஸ்வரர்

அம்பிகை : விருத்தாம்பிகை, பெரியநாயகி, பாலாம்பிகை

தல மரம் : வன்னி

தீர்த்தம் : மணிமுத்தாறு, அக்கினி தீர்த்தம்,
குபேர தீர்த்தம், சக்கர தீர்த்தம்

தல
விநாயகர் : ஆழத்துப் பிள்ளையர், பாதாள விநாயகர்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

359. வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
அண்ணலார் ஆயிழை யாளொடும் அமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந்து இழியவெள்ளருவி சேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே.

தெளிவுரை: வண்ண மலர்களைக் கொண்டு வானவர்கள் வழிபட, ஈசன் உமாதேவியாரோடு இனிது அமர்ந்திருக்கும் இடமாவது, வானத்திலிருந்து மழை பொழிந்து அருவி போன்று விளங்க, செழுமையான முல்லை நிலத்தின் எழில் பெருக்கும் திருமுது குன்றம் ஆகும்.

360. வெறியுலாங் கொன்றையந் தாரினான் மேதகு
பொறியுலாம் அரவசைத் தாடியோர் புண்ணியன்
மறியுலாங் கையினான் மங்கையோடு அமர்விடம்
செறியுளார் புறவணி திருமுது குன்றமே.

Koviloor Digital Library

தெளிவுரை: தேன் கமழும் கொன்றை மாலை உடைவனாய்ப் படம் விளங்கும் அரவத்தை நன்கு அரையில் கட்டி ஆடுகின்ற ஈசன், மான் ஏந்திய கரத்தை உடையவராய் உமாதேவியை உடனாகக் கொண்டு அமருகின்ற இடமாவது, செறிந்த சோலை யுடைய திருமுதுகுன்றம் ஆகும்.

சிறப்புரை: முத்தி நிலை மேவும் மாந்தர்தம் பாவங் களைக் களைந்து, இன்மைப்படுத்திப் புண்ணியத்தை ஏற்றுக் கொள்ளும் தன்மையை உணர்த்துமாறு ஈசனைப் புண்ணியன் எனப் போற்றப்பட்டது. பாவம் நாசமாகுதலை, "விண்ணுற அடுக்கிய விறகில் வெவ்வழல் உண்ணிய புகின் அவை ஒன்றும் இல்லை யாம்; பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே" எனத் திருநாவுக் கரசர் அருளிச் செய்தவாறு காண்க.

361. ஏறினார் விடைமிசை இமையவர் தொழஉமை
கூறனார் கொல்புலித் தோலினார் மேனிமேல்
நீறனார் நிறைபுனற் சடையனார் நிகழ்விடம்
தேறலார் பொழிலணி திருமுது குன்றமே.

தெளிவுரை: ஈசன், இடபவாகனத்தில் ஏறித் தேவர்கள் தொழுது போற்ற, உமாதேவியை ஒரு கூறாகக் கொண்டு, புலியின் தோலை ஆடையாக அணிந்து, திருமேனியில் திருவெண்ணீறு தரித்து, நிறைந்த புனலாகிய கங்கையைச் சடை முடியின் மீது கொண்டு விளங்குகின்ற இடமாவது, பொழிலின் அணி திகழ மேவும் திருமுதுகுன்றம் ஆகும்.

362. உரையினார் உறுபொருள் ஆயினான் உமையொடும்
விரையினார் கொன்றைசேர் சடையினார் மேவிடம்

Koviloor Digital Library

உரையினார் ஒலியென ஓங்குமுத் தாறுமெய்த்
திரையினார் எரிபுனல் திருமுது குன்றமே.

தெளிவுரை: ஈசன், உரைக்கப்படும் பொருள்களின் ஒண் பொருளாக விளங்குபவர்; உமாதேவியை உடனாகக் கொண்டு நறுமணம் கமழும் கொன்றை மலரைச் சடை முடியில் தரித்து இருப்பவர். அப் பெருமான் மேவும் இடமாவது, அரநாமத்தின் ஒலியென ஓங்கும் ஓசை எழுப்பும் மணிமுத்தாறு என்னும் ஆற்றின், அலைகள் விளங்கும் திருமுதுகுன்றம் ஆகும்.

363. கடியவா யினகுரற் களிற்றினைப் பிளிறவோர்
இடியவெங் குரலினோடு ஆளிசென் றிடுநெறி
வடியவாய் மழுவினன் மங்கையோடு அமர்விடம்
செடிதார் புறவணி திருமுது குன்றமே.

தெளிவுரை: ஆண் யானையானது கனத்த குரலில் பிளிறவும், அவ் ஒலியோடு ஆண் சிங்கம் கர்ச்சிக்கும் ஒலியும் இணைந்து ஓங்கும் நெறியில், மழுப்படை உடைய ஈசன், உமாதேவியோடு வீற்றிருக்கும் இடமாவது, சோலைவளம் அழகுடன் பொலியும் திரு முதுகுன்றம் ஆகும்.

சிறப்புரை: ஈசனின் மழுப்படையானது பெற்றுள்ள ஆற்றலினை, யானையும் சிங்கமும் ஆகிய வீரம் மிக்க விலங்குகளுக்கு ஒப்புமை காட்டிய செம்மையைக் காண்க. அப் பெருமான், வளம் நிறைந்ததும், சிவ நாமத்தை ஓதும் தன்மையதும் ஆகிய ஆற்றின் கரையில், கருணை வடிவாகிய உமையவளை உடனாகக் கொண்டு, அருள் பாலிக்கும் பெற்றியினைச் சுட்டுதலும் ஓர்க.

Koviloor Digital Library

364. கானமார் கரியின்ஈர் உரிவையார் பெரியதோர்
வானமார் மதியினோடு அரவர்தாம் மருவிடம்
ஊனமா யினபிணி யவைகெடுத்து உமையொடும்
தேனமார் பொழிலணி திருமுது குன்றமே.

தெளிவுரை: *கானகத்தில் திரியும் யானையின் தோலை உரித்துப் போர்வையாகக் கொண்ட ஈசன், வானத்தில் பெரியதாகத் திகழும் சந்திரனையும், அரவத்தையும் அணிந்து உமாதேவியுடன் பொருந்த வீற்றிருக்கும் இடமாவது, ஊனங்களை நீக்கிப் பிணியையும் தீர்த்துத் தேன் துளிர்க்கும் பொழில் திகழும் திருமுதுகுன்றம் ஆகும்.*

சிறப்புரை: *'ஊனமாயின பிணி' என நவிலப்படும் பிறவிப் பிணியைத் தீர்த்தருளும் திருத்தலச் சிறப்பினை, இத் திருப்பாட்டு ஓதுவதாயிற்று.*

365. மஞ்சர்தா மலர்கொடு வானவர் வணங்கிட
வெஞ்சொலார் வேடரோடு ஆடவர் விரும்பவே
அஞ்சொலாள் உமையொடும் அமர்விடம் அணிகலைச்
செஞ்சொலார் பயில்தரும் திருமுது குன்றமே.

தெளிவுரை: *வலிமை மிகுந்தவராகிய சிவபெருமானைத் தேவர்கள் மலர் தூவிப் போற்றி வணங்குகின்றனர். கொடுந்தொழிலை மேற்கொள்ளும் வேடர்களும், மற்ற மாந்தர்களும் விரும்பித் தொழ, உமாதேவியை உடனாகக் கொண்டு அப்பெருமான் அமரும் இடமாவது, வேதங்களைப் பயில்பவரும், பக்திப் பாக்களைச் சொல்பவர்களும் விளங்கும் திருமுது குன்றம் ஆகும்.*

சிறப்புரை: *சிவபெருமான் மஞ்சர் என்னும் சொல்லால் போற்றப்பெறுகிறார். "மஞ்சா போற்றி மணாளா*

Koviloor Digital Library

போற்றி" என மாணிக்கவாசகர் உரைத்தருளிய பெற்றியும் காண்க.

மஞ்சர் – மைந்தர்; விறல் மிக்கவர்; வலிமையானவர்; அழகர்; குளுமையானவர்.

366. காரினார் அமர்தரும் கயிலைநன் மலையினை
ஏரினார் முடியிரா வணன்எடுத் தான்இற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தரும் திருமுது குன்றமே.

தெளிவுரை: கார் மேகம் போன்று குளிர்ச்சியாக விளங்கி மேவும், நன்மை தரும் கயிலை மலையினை இராவணன் எடுத்தபோது, அவனை நலியச் செய்த ஈசன், உமாதேவியோடு விளங்குகின்ற இடமாவது, சிறப்புக்களையுடைய திருமுதுகுன்றம் ஆகும்.

367. ஆடினார் கானகத்து அருமறை யின்பொருள்
பாடினார் பலபுகழ்ப் பரமனார் இணையடி
ஏடினார் மலர்மிசை அயனும்மால் இருவரும்
தேடினார் அறிவொணார் திருமுது குன்றமே.

தெளிவுரை: மயானத்தில் ஆடிய ஈசன், வேதங்களை ஓத தலையும், அதன் பொருளை விரித்தலும் செய்பவர். அப் பரமனைத் திருமாலும், பிரமனும் தேடியும் காண முடியாதவாறு இருக்க, அவர் திருமுதுகுன்றத்தில் விளங்குபவர் ஆனார்.

368. மாசுமெய் தூசுகொண்டு உழல்சமண் சாக்கியர்
பேசுமெய் யுளவல்ல பேணுவீர் காணுமின்
வாசமார் தருபொழில் வண்டினம் மிசைசெயத்
தேசமார் புகழ்மிகும் திருமுது குன்றமே.

தெளிவுரை: சமணர்களும், சாக்கியர்களும் பேசும் மொழிகள் மெய்ம்மையானதல்ல. வாசனை பெருகும்

Koviloor Digital Library

அழகிய பொழிலில் வண்டுகள் சூழும் புகழ் மிகுந்த திருமுதுகுன்றம் சென்றடைமின். ஈசனை ஏத்துமின்.

சிறப்புரை: இது, தலத்தின் பெருமையை உணர்த்தி ஈசன் பெருமையையும் அருட்பொலிவினையும் குறிப்பால் உணர்த்துவதாயிற்று.

369. திண்ணினார் புறவணி திருமுது குன்றரை
நண்ணினான் காழியுள் ஞானசம் பந்தன்சொல்
எண்ணினான் ஈரைந்து மாலையும் இயலுமாப்
பண்ணினாற் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: செழுமையான சோலையுடைய திருமுது குன்றத்தில் மேவும் பெருமானை நண்ணிய காழியின் ஞானசம்பந்தனின் திருப்பதிகத்தைப் பண்ணின் முறையில் பாடுபவர்களுக்குத் தீவினை நீங்கும்.

293. தென்குடித்திட்டை

தல விளக்கம்: காவிரித் தென் கரைத்தலம் 127இல் இது, 15ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. திட்டை என வழங்கப்படுகிறது. வசிட்டர், தேவர்கள், பைரவர், காமதேனு, ஆதிசேஷன், பிரமன், திருமால், முருகன் வழிபட்டது. வேறு பெயர்கள்: தேரூர், தேனுபுரி என்பன. மூலத்தானத்தில் மேலிருந்து அவ்வப் போது ஒரு சொட்டு நீர் சுவாமியின் திருமேனியின் மீது விழுவது சிறப்புக்குரியது. மேலே சந்திரகாந்தக்கல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

சுவாமி : வசிஷ்டேஸ்வரர், பசுபதீஸ்வரர், தேரூர்நாதர், தேனுபுரீஸ்வரர்

Koviloor Digital Library

அம்பிகை : உலகநாயகி, மங்களாம்பிகை,
சுகந்த குந்தளாம்பிகை

தல மரம் : செண்பகம்

தீர்த்தம் : சூல தீர்த்தம் என்கிற சக்கர தீர்த்தம்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

370. முன்னைநான் மறையவை மறைமுறை குறையொடும்
தன்னதாள் தொழுதெழ நின்றவன் தன்னிடம்
மன்னுமா காவிரி வந்தடி வருடநல்
செந்நெலார் வளவயல் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: நான்கு மறைகளும், நூல்களில் விதித்த முறையில் தொழுது போற்ற விளங்கும் சிவபெருமானின் இடமாவது, காவிரி நீர் வாய்க் கால்கள் வழி வந்து, வயல்களில் விளையும் செந் நெல்லை வளப்படுத்தும் சிறப்புடைய தென்குடித் திட்டை ஆகும்.

371. மகரம் ஆடும்கொடி மன்மத வேள்தனை
நிகரலா காநெருப்பு எழவிழித் தானிடம்
பகரவாள் நித்திலம் பன்மக ரத்தொடும்
சிகரமா ளிகைதொகும் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: மீனக் கொடியுடைய மன்மதனை நிகரில்லாதனவாகிய நெற்றிக்கண்ணால் விழித்து நோக்கி எரிந்து சாம்பலாகுமாறு செய்த ஈசனின் இடமாவது, புகழ் மிக்க முத்துக்கள், பல அணி வகை களுடன் உயர்ந்து பதிக்கப் பெற்று மேவும் மாளிகை களைக் கொண்ட தென்குடித்திட்டை ஆகும்.

சிறப்புரை: சிவனாரின் திருக்குறிப்பினின்று வெளிவரும் நெருப்புப் பொறிகள், உலகில் உள்ள எப்பொருட்கும்

Koviloor Digital Library

இணையாகாத தன்மையும், அத்தகைய நெருப்புப் பொறிகள், ஈசன் கருதியதைத் தவிர பிறவற்றின்பால் எவ்விதத்திலும் சாராமையும் உணர்த்தப் பெறுவ தாயிற்று. இதனை, மன்மதனை எரித்த நெருப்புப் பொறியினால் அண்மையில் இருந்த இரதி தேவிக்கு எத்தகைய ஊறும் நேராமையால் காண்க.

372. கருவினால் அன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினால் அன்றியே உருவுசெய் தானிடம்
பருவநாள் விழவொடும் பாடலோடு ஆடலும்
திருவினான் மிகுபுகழ்த் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: ஈசன், கருவினுள் பொருந்தி எத்தன்மை யிலும் பிறவியைக் கொள்ளாதவராகி, எல்லா வற்றுக்கும் கருப்பொருளாக விளங்குபவர்; இத் தன்மையன் இவ் வண்ணத்தன், இவ் வடிவினன் எனச் சொல்லப் பெறுவதற்கு அரியவராய் எல்லா வற்றையும் தோற்றுவித்து அருள்பவர். அப் பெருமான் விளங்கும் இடமாவது, சிறப்பாகக் கருதப்படும் விழாக் காலங்களில் பாடலும் ஆடலும் நன்கு நிகழ்த்தப் பெறும் திருமேவும் புகழ் மிகுந்த தென்குடித் திட்டையே.

சிறப்புரை: உத்திரம், பூசம், ஆதிரை போன்ற காலங் களில் திருக்கோயில் விழாக்கள் நடைபெறுதலும், அவற்றின் சிறப்பும் மயிலாப்பூர் மற்றும் திருவாரூர்ப் பதிகங்கள் வாயிலாக உணர்த்தியமை கொண்டும் காண்க. இத் தன்மையில் திருக்கோயில்களில் மாதந் தோறும் நிகழ்த்தப் பெறும் விழாக்களில், பாடலுடன் ஆடலும் திருவருளை நனி சேர்க்கும் தன்மையில் அடியவர்களால் இனிது மேற்கொள்ளப் பெற்ற செம்மையும் உணர்த்துவதாயிற்று.

Koviloor Digital Library

373. உண்ணிலா ஆவியாய் ஓங்குதன் தன்மையை
விண்ணிலார் அறிகிலா வேதவே தாந்தனூர்
எண்ணிலார் எழில்மணிக் கனகமா ளிகையிளந்
தெண்ணிலா விரிதருந் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: ஈசன், உயிரின்கண் மேவும், ஒண்மையுறும் பொருளாய் ஓங்கி இருப்பவர். அத்தன்மையைத் தேவர்களும் அறிகிலர். வேதமாகவும் அதன் அந்த மாகவும் விளங்கும் அப்பெருமானின் ஊராவது, எண்ணற்ற நவரத்தின மணிகளால் இழைக்கப் பெற்ற பொன் மாளிகையின்மேல், தெளிந்த நிலவின் ஒளி திகழும் தென்குடித்திட்டை ஆகும்.

374. வருந்திவா னோர்கள்வந்து அடையமா நஞ்சுதான்
அருந்திஆர் அமுதவர்க்கு அருள்செய்தான் அமரும்ஊர்
செருந்திபூ மாதவிப் பந்தர்வண் செண்பகம்
திருந்துநீள் வளர்பொழில் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: தேவர்களின் வேண்டுகோளுக்கு இரங்கி நஞ்சினை அருந்தி அமுதத்தை அவர்களுக்கு அருளிச் செய்த ஈசன் அமரும் இடமாவது, செருந்திப் பூ, மாதவி, செண்பகம் என வளரும் நீண்ட பொழில் திகழும் தென்குடித்திட்டையாகும்.

சிறப்புரை: பொழிலில் சிறந்து விளங்கும் செண்பக மானது, அட்ட புஷ்பங்களில் ஒன்றாகும் எனவும், அது இத் திருத்தலத்தின் தல மரமாக உடையதெனவும் காண்க.

375. ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர்தரும் குமரவேள் தாதையூர்
ஆறினார் பொய்யகத் தையுணர்வு எய்திமெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், எல்லாப் பொருள்களிலும் ஊறித் தோய்ந்து விளங்குபவர்; ஓசையுள் ஒன்றி நிலவுபவர்; திருமாலை ஒரு கூறாகக்கொண்டு திகழ்பவர்; குமாரக் கடவுளை ஈன்றவர்; அப் பெருமானுடைய ஊராவது, ஆறு பகைகளாகிய காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் (பொறாமை) ஆகியவற்றைக் களைந்து, மனமானது ஐம்புலன் வழிச் செல்லாது மெய்ம்மையை உணர்ந்தோர் வழிபடும் தென் குடித்திட்டை ஆகும்.

சிறப்புரை: ஈசன் எல்லாப் பொருளின்கண்ணும் நீக்கமற நிறைந்து விளங்கும் பெற்றியினை, "உம் பர்கட்கு அரசே, ஒழிவற நிறைந்த யோகமே" என மாணிக்கவாசகர் அருளிச் செய்த வண்ணம் காண்க. திருமால் ஒரு கூறினராக விளங்குதலை, "அரியலால் தேவி இல்லை" என்னும் திருநாவுக்கரசர் வாக்கும் நோக்குக.

376. கானலைக் கும்மவன் கண்ணிடந் தப்பநீள்
வானலைக் குந்தவத் தேவுவைத் தானிடம்
தானலைத் தெள்ளமூர் தாமரைத் தண்டுறை
தேனலைக் கும்வயல் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: கானகத்தில் வேட்டை கொள்ளும் மெய்யன்பர், கண் இடந்து அப்பிய ஞான்று வானவர்கள் எல்லாம் போற்றி ஏத்துமாறு, தவத்தின் தேவனாகச் செய்த ஈசன் வீற்றிருக்கும் இடமாவது, தெளிந்த நீர் நிலைகளில் விளங்கும் தாமரையில் திகழும் தேன், பெருகி வயலில் பாயும் வளம் நிறைந்த தென்குடித்திட்டையாகும்.

சிறப்புரை: கண்ணப்ப நாயனாரின் வரலாற்று உண்மை யானது இத்திருப்பாட்டில் ஓதப் பெற்றது. நாயனாரின்

Koviloor Digital Library

அன்பின் செயலை அவ் அடியாரைத் தவத்தின் தேவராய் ஆக்கிய பெருமை போற்றப்படுவதாயிற்று.

377. மாலொடும் பொருதிறள் வாளரக் கன்னெரிந்து
ஓவிடும் படிவிரல் ஒன்றுவைத் தான்இடம்
காலொடும் கனகமூக் குடன்வரக் கயல்வரால்
சேலொடும் பாய்வயல் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: பெருமையுடன் யாவரிடத்திலும் போர் செய்யும் திறலையுடைய அரக்கனாகிய இராவணன், ஓலம் கொண்டு அலறும்படி, விரலால் அடர்த்த சிவபெருமான் வீற்றிருக்கும் இடமாவது, வாய்க்கால் களில் செல்லும் நீரில் பொன் வண்ண முகப்புடைய கயல், வரால், சேல் என்னும் மீன் வகைகள் விளங்கிப் பாயும் வயல்கள் கொண்ட தென்குடித்திட்டையே.

சிறப்புரை: தூய்மையான நீரில் விளங்கும் பொன் மீன், வயல்களில் விளங்கும் சிறப்பு சுட்டப் பெறுதல் காண்க.

378. நாரணன் தன்னொடு நான்முகன் தானுமாய்க்
காரணன் அடிமுடி காணவொண் ணான் இடம்
ஆரணம் கொண்டுபூ சுரர்கள்வந்து அடிதொழச்
சீரணங் கும்புகழ்த் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: திருமாலும் பிரமனும் ஆகிய இருவரும் யாவற்றுக்கும் காரணனாக மேவும் ஈசனின் அடி முடியைக் காண ஒண்ணாதவராயினர். அத்தகு சிறப் புடைய அப்பெருமானின் இடமாவது, அந்தணர்கள் வேதம் ஓதித் திருவடியை ஏத்தப் புகழ் கொண்டு மேவும் தென்குடித்திட்டையே.

ஆரணம் – வேதம்; பூசுரர் – அந்தணர்.

Koviloor Digital Library

379. குண்டிகைக் கையுடைக் குண்டரும் புத்தரும்
பண்டுரைத் தேயிடும் பற்றுவிட் டீர்தொழும்
வண்டிரைக் கும்பொழில் தண்டலைக் கொண்டலார்
தெண்டிரைத் தண்புனல் தென்குடித் திட்டையே.

தெளிவுரை: *சமணரும் சாக்கியரும் கூறும் பொய்யுரைகளைப் பற்றி நிற்காதவர்களே! வண்டு ஒலிக்கும் பொழிலில், மேகங்கள் சூழ்ந்த குளிர்ந்தபுனல் பெருகும் தென்குடித்திட்டை என்னும் திருத்தலத்தைச் சார்ந்து, ஈசனை ஏத்துமின்.*

380. தேனலார் சோலைசூழ் தென்குடித் திட்டையைக்
கானலார் கடிபொழில் சூழ்தரும் காழியுள்
ஞானமார் ஞானசம் பந்தன செந்தமிழ்
பானலார் மொழிவலார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *தேன் துளிர்த்து மணக்கும் சோலை சூழ்ந்த தென்குடித்திட்டையைப் போற்றிப் பொழில் சூழ்ந்த காழியுள், திகழும் சிவஞானம் பெருகி ஓங்கும் ஞானசம்பந்தன் சொல்லிய, செந்தமிழ்ப் பாடல்களை ஓத வல்லவர்களுக்குப் பாவமானது விலகும்.*

294. திருக்காளத்தி

தல விளக்கம்: *தொண்டை நாட்டுத் தலங்கள் 32இல், இது 19ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. சீகாளத்தி எனப் பெறும். சிலந்தி, பாம்பு, யானை பூசித்துப் பேறு பெற்றது. திருமால், பிரமன், திருமகள், கலைமகள், திக்குப்பாலகர்கள், அகத்தியர், வசிட்டர், முசுகுந்தச் சக்கரவர்த்தி, நக்கீரர் முதலானோர் வழிபட்டது. கண்ணப்ப நாயனார், ஈசனின் திருக்*

Koviloor Digital Library

கண்ணில் குருதி வரக்கண்டு, ஊனுக்கு ஊன் என்னும் மருத்துவ முறையின் வழித் தமது கண்ணை இடந்து அப்பிய தலம். இக்கருத்து பாடல் வ. எண் 376இல் சுட்டப் பெறுதலும் காண்க. இத் தலம் ராகு, கேது க்ஷேத்ரம் எனப்படும். பஞ்ச பூதத் தலங்களுள் இது வாயுத்தலம். திருஞானசம்பந்தரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இங்கிருந்தவாறு திருப்பருப்பதம் முதலான தலங்களைப் பாடியருளினர்.

சுவாமி : காளத்திநாதர், குடுமித் தேவர்

அம்பிகை : ஞானப்பூங்கோதை

தல மரம் : மகிழ மரம்

தீர்த்தம் : பொன்முகலி ஆறு, சொர்ணமுகி

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

381. சந்தமார் அகிலொடு சாதிதேக் கம்மரம்
உந்துமா முகலியின் கரையினில் உமையொடும்
மந்தமார் பொழில்வளர் மல்குவண் காளத்தி
எந்தையார் இணையடி என்மனத் துள்ளவே.

தெளிவுரை: சந்தனம், அகில், சாதிக்காய், தேக்கு ஆகிய மரங்களை அலைகளால் உந்தித் தள்ளி வரும் சிறப்பான முகலி ஆற்றின் கரையில், தென்றல் வீசும் பொழில் வளர்ந்து பெருக, வள்ளல் தன்மையுடைய எந்தையாகிய காளத்திநாதர் உமாதேவியாரை உடனாகக் கொண்டு வீற்றிருக்கின்றார். அப் பெருமானின் திருவடி என் மனத்தில் பதிந்துள்ளது.

சிறப்புரை: ஈசனின் திருவடியை மனத்தில் கொண்டு மேவும் பெற்றி இவண் உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், "மனத்தகத்தான், தலை மேலான்

Koviloor Digital Library

வாக்கின் உள்ளான்" என அருளிச் செய்த திருநாவுக்கரசர் வாக்கும் காண்க.

ஈசன், தன் அடியவர்களுக்கு வரையாது வழங்கும் தன்மை, 'வண்காளத்தி எந்தையார்' எனப் போற்றப் பட்டது. காளத்தி என்னும் சொல் திருத்தலத்தினையும், ஈசனையும் சுட்டப் பெறும் பாங்குடைத்து.

வண் – வள்ளல் தன்மை.

382. ஆலமா மரவமோடு அமைந்தசீர்ச் சந்தனம்
சாலமா பீலியும் சண்பகம் உந்தியே
காலமார் முகலிவந்து அணைதரு காளத்தி
நீலமார் கண்டனை நினையுமா நினைவதே.

தெளிவுரை: ஆல், மா, மரவம், சந்தனம், ஆகிய மரங்களும், ஏராளமான மயிற் பீலியும் சண்பகமும் உந்தி வரும் முகலி ஆற்றின் கரையில் மேவும் காளத்தியில் விளங்கும் நீலகண்டனாகிய ஈசனை எவ்வகையில் நினைந்து ஏத்துதல் பொருந்துமோ, அத்தன்மையில் நினைந்து ஏத்துதல் கடமை.

சிறப்புரை: இது புலன்கள் ஐந்தினையும் ஒருமுகப் படுத்தி ஈசனை ஏத்துதலை உணர்த்திற்று. "நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே வஞ்சமே செய்தியாலோ வானவர் தலைவனே நீ, மஞ்சடை சோலைத் தில்லை மல்குசிற் றம்பலத்தே அஞ்சொலால் காண நின்று அழக நீ ஆடுமாறே" (நான்காம் திருமுறை பா. 237) எனத் திருநாவுக்கரசர் நெஞ்சினைத் தூய்மையாகக் கொண்டு ஈசனை உணர்த்தியவாறும் காண்க. மற்றும், "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் நினையாது ஒரு போதும்

Koviloor Digital Library

இருந்தறியேன்" என மொழிந்த (அப்பர் தேவாரம்) பாங்கும் நோக்குக.

383. கோங்கமே குரவமே கொன்றையம் பாதிரி
மூங்கில்வந் தணைதரு முகலியின் கரையினில்
ஆங்கமர் காளத்தி யடிகளை அடிதொழ
வீங்குவெந் துயர்கெடும் வீடெளி தாகுமே.

தெளிவுரை: கோங்கு, குரவம், கொன்றை, பாதிரி, மூங்கில் ஆகிய மரங்களை உந்திக் கொண்டு வரும் முகலியின் கரையினில் வீற்றிருக்கும் காளத்தி நாதரின் திருவடிகளைத் தொழுது போற்ற, வெம்மை தரும் துயர் யாவும் கெடும். முத்திப் பேறு எளிதாகக் கை கூடும்.

சிறப்புரை: தீவினையானது உயிரைப்பற்றி நின்று உறுதுயரை நல்கும் தன்மை கெடும் என்பதும், அதன் வழி ஈசன் திருவருளால் முத்திப் பேறானது எளிதில் கை கூடும் என்பதும் சுட்டப் பெறுவதாயிற்று.

384. கரும்புதேன் கட்டியும் கதலியின் கனிகளும்
அரும்புநீர் முகலியின் கரையினில் அணிமதி
ஒருங்குவார் சடையினன் காளத்தி யொருவனை
விரும்புவார் அவர்கள்தாம் விண்ணுலகு ஆள்வரே.

தெளிவுரை: கரும்பு, தேன் கட்டி, வாழைக் கனி ஆகிய வற்றை உந்தித் தள்ளி வரும் முகலியின் கரையில் பிறைச்சந்திரனை நீண்ட சடையின்கண் தரித்தவராய் மேவும் காளத்திநாதனை விரும்பிப் பணிபவர்கள், விண்ணுலகை ஆள்வார்கள்.

385. வரைதரும் அகிலொடு மாமுத்தம் உந்தியே
திரைதரு முகலியின் கரையினில் தேமலர்

Koviloor Digital Library

விரைதரு சடைமுடிக் காளத்தி விண்ணவன்
நிரைதரு கழலிணை நித்தலும் நினைமினே.

தெளிவுரை: *மலையில் விளங்கும் அகில் மற்றும் முத்துக் களும் அலைகளால் உந்தித் தள்ளி வருகின்ற முகலி யின் கரையினில் சிறந்த மலர்களைச் சடை முடியில் கொண்டு விளங்கும் க்ாளத்திநாதனின் கழல்களை, நித்தமும் தொழுது போற்றி உய்வீராக.*

386. முத்துமா மணிகளும் முழுமலர்த் திரள்களும்
எத்துமா முகலியின் கரையினில் எழில்பெறக்
கத்திட அரக்கனைக் கால்விரல் ஊன்றிய
அத்தன்றன் காளத்தி அணைவது கருமமே.

தெளிவுரை: *முத்துக்களும் மணிகளும் மலர்த் திரள் களும் அலைகளின் வாயிலாகக் கொண்டு வரும் முகலி ஆற்றின் கரையினில், இராவணனைத் திருப்பாத விரலால் அடர்த்த இறைவனின் காளத்தி யானது எழில் பெற்று விளங்குவதாகும். அத்திருத் தலத்தை அணைந்து ஈசனை வணங்குதலைக் கடமை யாகக் கொள்க.*

சிறப்புரை: *இத் திருப்பாட்டு இத் திருத்தலத்தின் பெருமையை உணர்த்துவதாயிற்று.*

387. மண்ணுமா வேங்கையும் மருதுகள் பீழ்ந்துந்தி
நண்ணுமா முகலியின் கரையினில் நன்மைசேர்
வண்ணமா மலரவன் மாலவன் காண்கிலா
அண்ணலார் காளத்தி ஆங்கணைந்து உய்ம்மினே.

தெளிவுரை: *சேற்று மண்ணும், வேங்கை, மருது ஆகிய மரங்களையும் வேரொடு தள்ளி, அலைகளால் உந்திக் கொண்டு செல்லும் முகலியின் கரையில், திருமாலும் பிரமனும் காண்கிலாத அண்ணலார்தம் காளத்தி*

Koviloor Digital Library

என்னும் தலம் திகழ, ஆங்கு சென்றணைந்து உய்தி பெறுவீராக.

சிறப்புரை: இத் திருத்தலத்தில், நன்மை சேர்க்கும் வண்ணமாக ஈசன் வீற்றிருக்கும் பாங்கும், ஆங்குச் சென்றடைய உய்தி பெறுதல் கை கூடும் எனவும் திட்ப மாய்ச் சுட்டப் பெறும் பாங்கினை ஓர்க.

பீழ்ந்து – வேருடன் களைந்து.

388. வீங்கிய உடலினர் விரிதரு துவருடைப்
பாங்கிலார் சொலைவிடும் பரனடி பணியுமின்
ஓங்குவண் காளத்தி உள்ளமோடு உணர்தர
வாங்கிடும் வினைகளை வானவர்க்கு ஒருவனே.

தெளிவுரை: சமணரும், சாக்கியரும் மொழியும் பாங்கில்லாத சொற்களைக் கை விடுக. ஈசன் திருவடியைப் பணிவீராக. வளமுடன் ஓங்கும் வள்ளலாகிய காளத்திநாதனை உள்ளம் ஒன்றி, மனதார உணர்ந்து போற்றுக. வானவர்களுக்கும் நாதனாகிய அப்பெருமான், வினைகளைத் தீர்த்து நலம் புரிபவன்.

389. அட்டமா சித்திகள் அணைதரு காளத்தி
வட்டவார் சடையனை வயலணி காழியான்
சிட்டநான் மறைவல ஞானசம் பந்தன்சொல்
இட்டமாப் பாடுவார்க்கு இல்லையாம் பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அட்டமாசித்திகள் என்று சொல்லப்படும் ஆற்றல்களைச் சேர்க்கும் காளத்தியில், சடை முடியுடைய ஈசனை ஏத்திய வயல்களின் அணி திகழும் காழியின் ஞானியாய், வேதம் வல்ல ஞான

Koviloor Digital Library

சம்பந்தனின் சொல்லாகிய இத் திருப்பதிகத்தை விரும்பி ஓதவல்லவர்களுக்குத் தீவினை விலகும்.

அட்டமா சித்திகளாவன:

1. அணிமா - சிறியதில் சிறியதாதல்
2. மகிமா - பெரியதில் பெரியதாதல் (அண்டங்கள் அணுவாகவும் அணுக்கள் அண்டங்களாகவும் ஆதல்)
3. லகிமா - உறுதியானவற்றை நுண்மையாக்குதல்
4. கரிமா - சிறியனவற்றைப் பெரியதாக்குதல்.
5. பிராத்தி - பாதாளத்தில் இருப்பவர் வானுலகில் இருத்தல்
6. பிராகாமியம் - கூடுவிட்டுக் கூடு பாய்தல் - வோறாரு உடலில் பிரவேசித்தல்
7. ஈசத்துவம் - முத்தொழிலை மேவுதல்
8. வசித்துவம் - யாவற்றையும் தன்வசம் ஆக்குதல்

295. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: *பதிகம் எண் 260 காண்க.*

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

390. கரமுனம்மல ராற்புனல்மலர்
தூவியேகலந்து ஏத்துமின்
பரமனூர்பல பேரினாற்பொலி
பத்தர்சித்தர்கள் தாம்பயில்
வரமுன்னவ்வருள் செய்யவல்லஎம்
ஐயன்நாள்தொறு மேயசீர்ப்
பிரமனூர்பிர மாபுரத்துறை
பிஞ்ஞகன்அருள் பேணியே.

Koviloor Digital Library

தெளிவுரை: பரமனின் ஊரானது, பல திருப் பெயர்களை உடையது; பக்தர் பெருமக்களும், சித்தர்களும் போற்றி ஏத்த, வரங்கள் பல அருள் செய்யவல்ல எம் தலைவன் நாள்தொறும் மேவி விளங்கும் பிரமனூர் எனப்படும் பிரமாபுரம் ஆகும். அப்பதியில் உறையும் ஈசனின் அருளைப் போற்றிக் கர மலர்களால் கூப்பித் தொழுவீராக! நற்புனல் கொண்டு அபிடேகம் செய்து, மலர்தூவிப் போற்றி, மனம் கலந்து ஒருமை நெஞ்சினராய் ஏத்தித் துதிப்பீராக.

சிறப்புரை: கைகளைக் கூப்பி இறைவனைத் தொழு கின்ற பாங்கு "கரமுனம் மலர்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "கைகாள் கூப்பித் தொழீர்! கடி மா மலர் தூவி நின்று பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர்" எனத் திருநாவுக் கரசர், அருளிச் செய்த பாங்கும் காண்க.

மனம் வாக்கு காயம் ஆகியவை ஒரு மிக்கச் செய்தும், புலன் வழி மனத்தை அலைய விடாமலும் ஈசனை வணங்கும் தன்மையை இவண், "கலந்து ஏத்து மின்" என உபதேசிப்பதாயிற்று. இந்நெறியினை, "ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தன்" என முதல் திருமுறையில் (பாடல் எண். 11) அருளிச் செய்த தன்மையும் காண்க. இவ்வற்புதப் பாங்கினை, "கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும் நலம்" என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்துள்ள பெற்றி யையும் ஓர்க.

391. விண்ணிலார்மதி சூடினான்விரும்
புமறையவன் றன்தலை
உண்ணநல்பலி பேணினான்உல
கத்துள்ஊன்உயி ரான்மலைப்

Koviloor Digital Library

பெண்ணினார்திரு மேனியான்பிர
மாபுரத்துறை கோயிலுள்
அண்ணலார்அரு ளாளனாய்அமர்
கின்றஎம்முடை ஆதியே.

தெளிவுரை: *ஈசன், விண்ணில் திகழும் சந்திரனைச் சூடியவர்; விரும்பி ஏத்திய வேதியனாகிய பிரமனின் ஒரு தலையைக் கொய்து உண்ணுகின்ற பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு பலி ஏற்றவர்; ஊனாகவும் உயிராகவும் உள்ளவர்; மலை அரசன் மகளாகிய உமா தேவியைத் திருமேனியில் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; அப் பெருமான், பிரமாபுரத்தில் விளங்கும் கோயிலுள் மேவிய அண்ணல்; அவர் எம் முடைய ஆதிப் பிரானாவர்.*

392. எல்லையில்புக ழாளனும் இமை
யோர்கணத்துடன் கூடியும்
பல்லையார் தலை யிற்பலியது
கொண்டுகந்த படிறனுந்
தொல்லவையகத் தேறுதொண்டர்கள்
தூமலர்சொரிந்து ஏத்தவே
மல்லையம்பொழில் தேன்பில்கும்பிர
மாபுரத்துறை மைந்தனே.

தெளிவுரை: *ஈசன், எல்லையற்ற புகழ் உடையவர்; தேவர்களெல்லாம் சூழ்ந்து விளங்க பிரம கபாலம் ஏந்திப் பலி கொண்டு மகிழ்ந்தவர். இப்பூவுலகில் தெளிந்த தொண்டர்கள் தூய மலர் கொண்டு தூவிச் சொரிந்து இறைவனை ஏத்தி வாழ்த்த, அப்பெருமான், வளம் மிக்க பொழில் திகழும் பிரமாபுரத்தில் வீற்றிருப் பவர்.*

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசனை, மலர்தூவிப் போற்றும் அன்பர்கள், தெளிந்த சித்தத்தை உடைய பாங்கினர் என்பது, "தேறு தொண்டர்கள்" எனச் சுட்டப் பெற்றது.

தேறு – தெளிவு, உறுதி.

393. அடையலார்புரம் சீறிஅந்தணர்
ஏத்தமாமட மாதொடும்
பெடையெலாம்கடற் கானல்புல்கும்பிர
மாபுரத்துஉறை கோயிலான்
தொடையலார்நறுங் கொன்றையான்தொழி
லேபரவிநின்று ஏத்தினால்
இடையிலார்சிவ லோகம் எய்துதற்கு
ஈதுகாரணம் காண்மினே.

தெளிவுரை: நன்மையுறும் அன்பற்கு உரியவராகாது, பகைத்துச் செறுத்தவர்களாகிய முப்புர அசுரர்கள் எரிந்து சாம்பலாகுமாறு செய்து, அந்தணர்கள் ஏத்தி வணங்க, உமாதேவியாரோடு பிரமாபுரத்தில் விளங்கு பவர், சிவபெருமான். அப் பெருமான் நறுமணம் கமழும் கொன்றை மலரை மாலையாக அணிந்து திகழ்பவர். அப் பரமனைப் பரவி ஏத்துதலைக் கடமை யாகக் கொண்டு மேவும் அன்பர்கள், சிவலோகம் அடைவதற்கு அவர்களுடைய வழிபாட்டு நெறியே உரிய சாதனம் ஆகும்.

சிறப்புரை: சிவலோகம் அடைவதற்குப் பெருமானைப் பரவுதல் காரணமாதலால், ஈசனை வணங்குதல் வேண்டும் என்பதனை அருளாணையாகக் கொள்க. "காண்மினே" என்னும் சொல் வாயிலாக, உறுதிப் பொருள் நவிலும் பெற்றியினையும் ஓர்க.

தொடையல் – மாலை.

Koviloor Digital Library

394. வாயிடைம்மறை யோதிமங்கையர்
வந்திடப்பலி கொண்டுபோய்ப்
போயிடம்எரி கானிடைப்புரி
நாடகம்இனிது ஆடினான்
பேயொடும்குடி வாழ்வினான்பிர
மாபுரத்துறை பிஞ்ஞகன்
தாயிடைப்பொருள் தந்தையாகும்என்று
ஓதுவார்க்குஅருள் தன்மையே.

தெளிவுரை: ஈசன், திருவாயால் வேதங்களை நன்கு ஓதியவர்; தாருகவனத்து முனிவர்களின் பத்தினிகள் வந்து இடுமாறு, கபாலம் ஏத்திப் பலி ஏற்றவர்; மயானத்தின் இடையில் இனிது நடனம் ஆடியவர்; பேய்க் கூட்டத்துடன் விளங்குபவர்; அப்பெருமான் பிரமாபுரத்தில் உறையும் பிஞ்ஞகன்; அவனே தாயும் தந்தையுமாய் விளங்கும் பெருமான் என ஓதும் அன்பர்களுக்கு, அவனுடைய அருளிச் செயல் பெருகி ஓங்கும்.

சிறப்புரை: ஈசனே, தாயும் தந்தையாகவும் மற்றும் உள்ள அனைத்துமாகவும் விளங்குதலும், அத்தன்மையில் மேவுதலே அருள் தன்மை உடைத்தென்னும் மெய்ம்மையும், இத் திருப்பாட்டு வாயிலாகச் சுட்டப் பெற்றது.

395. ஊடினால்இனி யாவதுஎன்னுயர்
நெஞ்சமேயுறு வல்வினைக்கு
ஓடிநீயுழல் கின்றதென்அழல்
அன்றுதன்கையில் ஏந்தினான்
பீடுநேர்ந்தது கொள்கையான் பிர
மாபுரத்துறை வேதியன்
ஏடு நேர்மதி யோடுஅராவணி
எந்தையொன்றுநின்று ஏத்திடே.

Koviloor Digital Library

தெளிவுரை: உயர்ந்த நிலை கொண்டு மேவும் நெஞ்சமே! வினையினால் உண்டாகும் துன்பத்தைக் கண்டு வருந்தினும் யாது பயன்! கன்மத்தின்பால் அமையப் பெற்ற வினையை நுகரும் தன்மையில், ஓடி உழல்கின்றதும் எதற்கு? திருக்கரத்தில் எரியும் நெருப்பை ஏந்திய ஈசன், சிறப்புடைய அருள் தன்மை உடையவராய்ப் பிரமாபுரத்தில் உறையும் வேதியன் ஆவார். கீற்று போன்ற சந்திரனும், அரவமும் அணிந்து மேவும் எந்தையாகிய அவ் இறைவனை, ஒருமித்த மனத்தால் ஏத்துவாயாக. துன்பம் யாவும் விலகிச் செல்லும்.

பீடு – பெருமை; சிறப்பு; அருள் தன்மையும் சுட்டும்.

396. செய்யன்வெள்ளியன் ஒள்ளியார்சிலர்
　　என்றும்ஏத்தி நினைந்திட
ஐயன்ஆண்தகை அந்தணன்அரு
　　மாமறைப்பொருள் ஆயினான்
பெய்யுமாமழை யானவன்பிர
　　மாபுரம்இடம் பேணிய
வெய்யவெண்மழு வேந்தியைந்நினைந்து
　　எத்துமின்வினை வீடவே.

தெளிவுரை: ஈசன், செம்மேனியர்; வெள்ளி மலை எனப் பெறும் கயிலை நாயகர்; ஞானம் மிக்க பெருமக்களால் எக்காலத்திலும் ஏத்தி வணங்கப்படும் தலைவன்; வீரம் மிக்கராகியும் தூயராகியும் அருமையாகப் போற்றப் படும் மறையின் ஒண் பொருளாகவும் ஆகியவர்; வளத்தைப் பெய்து வழங்கும் சிறப்புடைய மழை ஆகியவர். அப் பெருமான் பிரமாபுரத்தை இடமாகக் கொண்டு மழுப்படை ஏந்தியவராய் விளங்க, அவரை ஒன்றி நினைந்து ஏத்துவீராக; வினை யாவும் நீங்கி நலம் பெறுவீராக.

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசன் செவ்வொளியும் வெள்ளொளியும் ஆகிய நிலையில் சோதி வடிவாய்த் திகழ்தலை, "செய்யன் வெள்ளியன்" எனக் குறிப்பால் உணர்த்தப் பெற்றது. மெய்யுணர்வு கொண்டு, ஐயம் நீங்கிய தன்மையில் சிவஞான பூர்ணமாக மேவி, இத் தேகமும் மிகையானதாய்க் கொண்டு திகழும் அருளாளர்கள், கர்ம பூமியாகிய இவ்வுலகில் சிலரே உளவாதலை உணர்த்தும் தன்மையில், "ஒள்ளியார் சிலர்" எனக் குறிப்பால் சுட்டப் பெறுவதாயிற்று.

ஈசன் மா மழையாக விளங்கி உலகினை உய்வித்தலை ஓதுதல் காண்க. இத்தன்மையில், "மா மழை போற்றும்" எனச் சிலப்பதிகாரத்தின் கடவுள் வாழ்த்தாக மொழியப் பெறுதலும் ஓர்க.

397. கன்றொருக்கையில் ஏந்திநல்விள
வின்கனிபட நூறியும்
சென்றொருக்கிய மாமறைப்பொருள்
தேர்ந்தசெம்மல ரோனுமாய்
அன்றரக்கனைச் செற்றவன்னடி
யும்முடியவை காண்கிலார்
பின்தருக்கிய தண்பொழிற்பிர
மாபுரத்தரன் பெற்றியே.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் காணமுடியாதவாறு ஓங்கிய ஈசன், கயிலை மலையை எடுத்த இராவணனை அடர்த்தியவனாய்ப் பொழில் திகழும் பிரமாபுரத்தில் வீற்றிருக்கும் சிறப்புடைய பெருமான் ஆவார்.

சிறப்புரை: அசுரர்களின் மாயையைக் களைந்து வீரச் செயலை விளைவித்த திருமாலின் ஆற்றலும், வேதத்தில் வல்லவனாகிய பிரமனின் பேரறிவும் ஈசனின் அடிமுடி காணுதற்கு ஒண்ணாமை, இவண்

Koviloor Digital Library

சுட்டப் பெற்றது. வர பலம் கொண்டு விளங்கிய இராவணனின் ஆற்றல் கயிலையைப் பெயர்த்த ஞான்று தோன்றியவாறு உணர்த்தி, அச் செயலானது, நிறைவேறப் பெறாமை வாயிலாக ஈசனின் பேராற்றலைச் சுட்டுவதாயிற்று. அத்தகைய பெருமான், ஒன்றி நினைந்து வழிபடும் அடியவர்களின் வினைகளைக் கடிந்து காத்தருள் புரிதலை, இத் திருப்பாட்டு நன்கு ஓதுவதாயிற்று.

பெற்றி – அருள் தன்மையும் ஆற்றலும் சுட்டும்.

398. உண்டுஉடுக்கைவிட் டார்களும்உயர்
கஞ்சிமண்டைகொள் தேரரும்
பண்டுஅடக்குசொற் பேசும்அப்பரிவு
ஒன்றிலார்கள்சொற் கொள்ளன்மின்
தண்டொடுஅக்குவன் சூலமும்தழல்
மாமழுப்படை தன்கையில்
கொண்டு ஒடுக்கிய மைந்தன்எம்பிர
மாபுரத்துஉறை கூத்தனே.

தெளிவுரை: சமணர்களும் தேரர்களும், தொன்று தொட்டு வரும் சமயக் கருத்துக்களைத் திரித்துச் சொல்லும் தன்மையுடையவர்கள். நலம் பயவாத அச் சொற்களைக் கொள்ள வேண்டாம். ஈசன், யோக தண்டம், உருத்திராக்க மாலை ஆகியன கொண்டு விளங்குபவன்; வலிமையுடைய சூலப்படை உடையவன்; கையில் எரியும் தழலைக் கொண்டிருப்பவன்; சிறந்த மழுப் படையை ஏந்தியவன்; அப் பெருமான் எமது ஊராகிய பிரமாபுரத்தில் உறையும் கூத்தன் ஆவான். அப் பெருமானை ஏத்தி உய்வீராக.

சிறப்புரை: ஈசனின் வீரத்தைத் குறிக்கப் பெறும் தன்மையில், சூலமும் மழுவும் ஏந்துதலும், அருள்

Koviloor Digital Library

தன்மையைத் தண்டொடு அக்குமாலை ஏந்துதலும், உணர்த்துவதாயிற்று. அன்பின் மேலீட்டினை, "எம் பிரமாபுரத்து உறை கூத்தன்" என்னும் தொடரால் கூட்டப் பெற்றது.

அக்கு – உருத்திராக்கம் எலும்பும் ஆகும்.

399. பித்தனைப் பிர மாபுரத்துஉறை
பிஞ்ஞகன் கழல் பேணியே
மெய்த்தவத்து நின் றோர்களுக்குரை
செய்துநன்பொருள் மேவிட
வைத்தசிந்தையுள் ஞானசம்பந்தன்
வாய்நவின்றெழு மாலைகள்
பொய்த்தவம் பொறி நீங்கஇன்னிசை
போற்றிசெய்யும் மெய்ம் மாந்தரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *பித்தனாய், பிரமாபுரத்தில் உறைகின்ற பிஞ்ஞகனாய் விளங்கும் சிவபெருமான் திருக்கழலைப் பேணி, மெய்த்தவத்தினராய் விளங்கும் சான்றோர் களுக்கு உரை செய்து, ஞானம் பெறுமாறு செய்வித்த ஞானசம்பந்தன் திருவாய் மலர, நவின்ற இத் திரு மாலைகளைப் பாடுக. பொய்த் தன்மை வாய்ந்து, அவம் பெருக்கும் புலன்களின் குற்றம் நீங்க, இன்னிசை யால் ஏத்துக. இத்தன்மையுடையோரே மெய்ம்மை வழி நிலவும் மாந்தர் ஆவார்.*

சிறப்புரை: *ஈசனைப் பித்தன் என்று உரைத்தமை காண்க. இதனைத் தன்னிச்சையாகக் கொள்ளும் செயலை மேவுபவன் ஈசன் என்பது சிறவாமையும், அன்பர்கள்பால், அன்பிற் பிணைப்புண்டும், மன்னுயிரின் இன்பத்தை நோக்கமாகக் கொண்டும் ஆற்றுபவன் என்பதே சிறப்பாம். சுந்தரமூர்த்தி*

Koviloor Digital Library

சுவாமிகள், "பித்தா பிறை சூடீ" என்று அருளிச் செய்ததும், மாணிக்கவாசகர் பெண்பால் உகந்தான் பெரும் பித்தன் காணே டீ" என்று அருளிச் செய்ததும் காண்க.

திருஞானசம்பந்தப் பெருமான் மெய்த்தவத்து நின்ற சான்றோர்களுக்கு உரை செய்து, நன் பொருள் – சிவஞானம், மேவச் செய்த செம்மையினை, இத் திருப் பாட்டு உணர்த்துதல் ஆயிற்று.

பிரமபுரத்து மேவும் பெருமானுக்கு அலங்கரிக்கப் பெறும் திருமாலைகளாக இத் திருப்பதிகம் அருளிச் செய்யப் பெற்ற பாங்கினை "எழு மாலைகள்" எனச் சுட்டப் பெற்றது.

அவம் செய்யும் புலன்களை நல்வழிப்படுத்தி மெய்ம்மை காணும் மாந்தராகச் செய்யும் திருப்பதிகப் பயனை நனி ஓர்க.

மாலைகள் – திருப்பதிகம். பொறி – ஐம்புலன்கள்.

296. திருக்கண்டியூர்வீரட்டம்

தல விளக்கம்: *காவிரித் தென் கரைத் தலங்கள் 127இல் இது 12ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. சூரிய பகவான் பூசித்த பதி. மாசி மாதத்தில் 3 தினங்கள் மாலை நேரத்தில் சூரிய ஒளி சுவாமியின்மீது படும் சிறப்புடையது. ஆதிவில்வாரண்யம் என அழைக்கப் படுவது. அட்டவீரத்தலங்களுள், இது பிரமனின் ஐந்து சிரங்களில் ஒன்றைக் கொய்து, நான்முகனாக ஆக்கி வீரம் விளைவித்த தலம்.*

Koviloor Digital Library

சுவாமி : வீரட்டேஸ்வரர், பிரமசிரக் கண்டீஸ்வரர்,
பிரமநாதர், ஆதிவில்வவனநாதர்

அம்பிகை : மங்கள நாயகி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : நந்தி தீர்த்தம், தட்சதீர்த்தம், பிரம தீர்த்தம்,
குடமுருட்டியாறு

பதிகக் குறிப்பு: இத் திருப்பதிகம் வினாவுரையாக அமையப் பெற்றது.

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

400. வினவினேன்அறி யாமையில்உரை
செய்ம்மினீர்அருள் வேண்டுவீர்
கனைவிலார்புனல் காவிரிக்கரை
மேயகண்டியூர் வீரட்டன்
தனமுனேதனக்கு இன்மையோதமர்
ஆயினார்அண்டம் ஆளத்தான்
வனனில் வாழ்க்கைகொண்டு ஆடிப்பாடிஇவ்
வையமாப்பலி தேர்ந்ததே.

தெளிவுரை: ஈசனைத் தொழுது போற்றி அருளை நாடி நிற்கும் அன்பர்களே! அறியாமை காரணமாக வினவு கின்றேன். உரை செய்வீராக!

ஆரவாரத்தோடு மிகுதியாகச் செல்லும் நீர் விளங்கும் காவிரியின் கரையில் மேவும் கண்டியூரில் விற்றிருக்கும் வீரட்டநாதன், தனக்கு முன்னோர்கள் இன்மையாலோ, நெருக்கமாகியவர்களாகிய திருமாலும் பிரமனும் அண்டங்களை ஆளவும், தான் மயானத்தில் ஆடியும் பாடியும் இவ்வுலகத்தில் கபாலம் ஏந்திப் பிச்சை கொண்டு விளங்குவது.

Koviloor Digital Library

சிறப்புரை: இத் திருப்பாட்டு வினாவுரையாக அமையப் பெற்று, ஈசனின் அருள் தன்மையைப் புலப்படுத்துவதாயிற்று. ஈசன், தாயும் இலி, தந்தை இலி, தான் தனியன் என்னும் திருவாசக அமுதமொழிக்கு இசைய, முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாய் விளங்குபவர் என்னும் மெய்ம்மை யினை வினாவாயிலாக உரைக்கும் தன்மையில் சுட்டப் பெறு தலாம்.

கனை – ஒலி, மிகுதி காவிரி நீரின் தன்மையை உணர்த்துவது.
வனன் – மயானம், சுடுகாடு.

401. உள்ளவாறெனக்கு உரைசெய்மின்உயர்
வாயமாதவம் பேணுவீர்
கள்ளவிழிபொழில் சூழும்கண்டியூர்
வீரட்டத்துறை காதலான்
பிள்ளைவான்பிறை செஞ்சடைம்மிசை
வைத்ததும்பெரு நீரொலி
வெள்ளந்தாங்கியது என்கொலோமிகு
மங்கையாள் உடனாகவே.

தெளிவுரை: உயர்வாகிய மாதவத்தைப் பேணு கின்றவர்களே! உள்ளவாறு உரைப்பீராக.

தேன் கமழும் பொழில் சூழும் கண்டியூரில் வீற்றிருக்கும் வீரட்டநாதன் உமாதேவிவுடன் கொண்டு மேவ, இளைமையான பிறைச் சந்திரனைச் சிவந்த சடையின் மீது வைத்ததும், பெருநீராகிய கங்கையைத் தாங்கியதும் என்கொல்!

மிகு மங்கையாள் – பராசக்தி.

402. அடியர் ஆயினீர் சொல்லுமின்அறி
கின்றிலேன்அரன் செய்கையைப்

Koviloor Digital Library

படியெலாம் தொழுது ஏத்துகண்டியூர்
வீரட்டத்துறை பான்மையான்
முடிவுமாய்முத லாய்இவ்வைய
முழுதுமாய்அழ காயதோர்
பொடியதார்திரு மார்பினிற்புரி
நூலும்பூண்டெழு பொற்பதே.

தெளிவுரை: *அடியவர்கள் ஆகியவர்களே! அரனின் செய்கையைச் சொல்லுமின்! உலகமெல்லாம் தொழுது ஏத்துகின்ற கண்டியூரில் வீரட்டானத்தில் உறைகின்ற பெருமான், அந்தமாக இருப்பவர்; முதற் பொருளாய் விளங்குபவர்; இவ் வையம் முழுவதும் ஆகி, நிறைந்து விளங்குபவர். அவர், திருவெண்ணீற் றினைத் திருமார்பில் பூசி, முப்புரி நூலும் அணிந்து மேவும் பொற்புதான் யாது?*

சிறப்புரை: *இது வினாவின் வழி ஈசனின் முதன்மைத் தன்மையையும் ஆதிப்பிரான் எனவும் உணர்த்துதல் ஆயிற்று.*

403. பழையதொண்டர்கள் பகருமின்பல
வாயவேதியன் பான்மையைக்
கழையுலாம்புனல் மல்குகாவிரி
மன்னு கண்டியூர் வீரட்டன்
குழையொர் காதினிற் பெய்துகந்தொரு
குன்றின் மங்கை வெருவுறப்
புழைநெடுங்கைநன் மாவுரித்தது
போர்த்துஉகந்த பொலிவதே.

தெளிவுரை: *வாழையடி வாழையாக வந்த திருக் கூட்ட மரபில் விளங்குகின்ற பழம் பெரும் திருத்தொண் டர்களே! பலவாகிய தன்மைகளை உடைய ஈசனின் பாங்கினைப் பகருமின். மலைப்பகுதிகளின் வழியாகப்*

Koviloor Digital Library

பெருகி வரும் காவிரியானது, வளத்தைப் பெருக்கி மேவும் கண்டியூரில், வீரட்டநாதன், காதில் குழை அணிந்து மகிழ்ந்து, மலை மகளாகிய உமையவள் வெருவுமாறு யானையின் தோலை உரித்துப் போர்த்துப் பொலிவது என்கொல்!

கழை – வரை. மூங்கிலும் ஆம்.

404. விரவிலாதுமைக் கேட்கின்றேன்அடி
விரும்பியாட்செய்வீர் விளம்புமின்
கரையெலாம்திரை மண்டுகாவிரிக்
கண்டியூர்உறை வீரட்டன்
முரவமொந்தை முழாவொலிக்க
முழங்கு பேயொடும் கூடிப்போய்ப்
பரவுவானவர்க் காகவார்கடல்
நஞ்சம்உண்ட பரிசதே.

தெளிவுரை: ஈசனின் திருவடிக் கமலத்தை விரும்பி ஆட்பட்டுப் போற்றி விளங்கும் அடியவர்களே! விளம்புவீராக!

காவிரியின் அலைகள் பெருக மேவும் கண்டியூரில் உறையும் வீரட்டநாதர், மொந்தை, முழவு முதலான வாத்தியங்கள் முழங்க, பேய்க் கணங்களும் பூத கணங்களும் சூழ்ந்து நிற்க, வானவர்களுக்காகக் கடலில் தோன்றிய நஞ்சினை உண்ட பரிசுதான் என்கொல்!

405. இயலுமாறு எனக்கு இயம்பு மின்இறை
வன்னுமாய்நிறை செய்கையைக்
கயல்நெடுங்கண்ணி னார்கள்தம்பொலி
கண்டியூர்உறை வீரட்டன்
புயல்பொழிந்திழி வானுளோர்களுக்
காகஅன்றயன் பொய்ச்சிரம்

Koviloor Digital Library

அயல்நகவ்வது அரிந்து மற்றதில்
ஊணுகந்த அருத்தியே.

தெளிவுரை: ஈசனின் திருவடிக் கமலத்தைப் போற்றி வணங்கும் மெய்யன்பர்களே! இயம்புவீராக!

கயல் போன்ற கண்ணுடைய மகளிர் பொலிந்து விளங்கும் கண்டியூரில் உறையும் வீரட்டநாதன், உலகத்தில் மழை பெய்வித்து நலம் புரியும் தேவர்களுக்காகப் பிரமனுடைய ஐந்தாவதாகிய சிரத்தைக் கொய்து அதனைக் கொண்டு, பிச்சை ஏற்று உண்ணுகின்ற விருப்பத்தைக் கொண்டது என்கொல்!

சிறப்புரை: பிரமனின் ஐந்தாவது சிரம், ஆணவ நிலை மேலிட்டு நிற்றலும், அது பொய்த்தன்மை உடையதும் தோன்ற, அது பொய்ச் சிரம் எனச் சுட்டப் பெற்றது. படைத்தல் தொழில் மேவும் பிரமனைப் படைக்கும் ஆற்றலினை ஈசன் உடைத்தலையும், அவ் இறைவனே யாற்றுக்கும் முதன்மையானவன் என்பதனையும் உணர்த்தும் வகையால், ஈசனின் வீரச் செயல் அமைதலைக் கொள்க. இது, இத் தலச் சிறப்பினை இத் திருப்பாட்டின் வாயிலாக உணர்த்துதல் ஆயிற்று.

இறைவன்னுமாய் – இறைவனுமாய்.
அருத்தி – விழைவு; விருப்பம்; திருக்கூத்தும் ஆம்.

406. திருந்துதொண்டர்கள் செப்புமின்மிகச்
செல்வன்றன்னது திறமெலாம்
கருந்தடங்கண்ணி னார்கள்தாம்தொழு
கண்டியூர்உறை வீரட்டன்
இருந்து நால்வரொடு ஆல்நிழல்அறம்
உரைத்ததும்மிகு வெம்மையார்
வருந்தவன்சிலை யால்அம்மாமதில்
மூன்றுமாட்டிய வண்ணமே.

Koviloor Digital Library

தெளிவுரை: நன்கு தெளிந்து சிவஞானத்தை உணர்ந்து மேவும் தொண்டர்களே! மெய்ச் செல்வனாக விளங்கும் சிவபெருமானின் திறம் யாவும் நன்கு உரை செய்வீராக.

மகளிர் கூடி இருந்து தொழுகின்ற கண்டியூரில் உறையும் வீரட்டநாதன், சனகாதி முனிவர்களாகிய நால்வருக்குக் கல்லால மரத்தின் நிழலில் இருந்து அறப் பொருள் உரைத்ததுவும், முப்புர அசுரர்களும் அவர்களுடைய மூன்று கோட்டை மதில்களும் எரியு மாறு, மேரு மலையை வலிமையான வில்லாகக் கொண்டு வாட்டிய வண்ணமும் யாதுகொல்!

திருந்து – திருஉந்து. திரு – முத்திச் செல்வம்.

407. நாவிரித்தரன் தொல்புகழ்பல
பேணுவீர்இறை நல்குமின்
காவிரித்தடம் புனல்செய்கண்டியூர்
வீரட்டத்துறை கண்ணுதல்
கோவிரிப்பயன் ஆன்அஞ்சுஆடிய
கொள்கையும் கொடி வரைபெற
மாவரைத்தலத் தால்அரக்கனை
வலியைவாட்டிய மாண்பதே.

தெளிவுரை: நாவினால் அரனது தொன்மையான புகழ்ச் செயல்களைப் போற்றும் அன்பர்களே! விடை பகர்வீராக!

காவிரியின் நீர் வளம் பெருகும் கண்டியூரின் வீரட்டானத்தில் உறையும் கண்ணுதலாகிய ஈசன், பசுவிலிருந்து பெறும் பால், தயிர், நெய் முதலான பஞ்ச கௌவியத்தைப் பூசிக்கப்படும் பொருளாக ஏற்று ஆடி மகிழ்ந்து, இராவணன் கயிலை மலையால் நெரியுமாறு

Koviloor Digital Library

திருப்பாத விரலை ஊன்றி, வலிமையை அழித்து விளங்கிய மாண்பு யாதுகொல்!

சிறப்புரை: நாவினால் அரனது தொல் புகழை நவின்று ஓதுதல் அடியவர்களின் இயல்பாதலை இத்திருப் பாட்டு, "நாவிரித்து அரன் தொல்புகழ் பல பேணுவீர்" என உணர்த்தியது. இத்தன்மையில், "பூ நாளும் தலை சுமப்பப் புகழ் நாமம் செவி கேட்ப, நா நாளும் நவின் றேத்தப் பெறலாமே நல்வினையே" எனத் திருஞான சம்பந்தர் (இரண்டாம் திருமுறை பா.வ.எண் 439) ஓதி அருளியதும் காண்க. "நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என அருளிச் செய்த சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கும் காண்க.

தொல்புகழ் – நெடிய புகழ்; இறை – விடை.

408. பெருமையேசர ணாகவாழ்வுறு
மாந்தர்காள்இறை பேசுமின்
கருமையார்பொழில் சூழுந்தண்வயற்
கண்டியூர்உறை வீரட்டன்
ஒருமையால்உயர் மாலும்மற்றை
மலரவன்உணர்ந்து ஏத்தவே
அருமையால்அவ ருக்குஉயர்ந்துஎரி
யாகிநின்றஅத் தன்மையே.

தெளிவுரை: சிவபெருமானுடைய பெரும் புகழைப் பரவிச் சரண் புகுந்து அருளில் திளைக்கும் மாந்தர் காள்! விடை பகர்வீராக!

அடர்த்தியான இலைகளுடைய வளமையான பொழில் சூழ்ந்தும் குளிர்ச்சி மிக்க வயல்களும் உடைய கண்டியூரில் உறையும் வீரட்டநாதன், திருமாலும்

Koviloor Digital Library

பிரமனும் ஏத்தி நிற்க, அவர்களுக்கு எட்டாதவனாய் உயர்ந்து, தீத்திரளாய் நின்ற தன்மைதான் யாது!

409. நமர்எழுபிறப்பு அறுக்கு மாந்தர்காள்
நவிலுமின்உமைக் கேட்கின்றேன்
கமரழிவயல் சூழுந்தண்புனற்
கண்டியூர்உறை வீரட்டன்
தமரழிந்தெழு சாக்கியச்சமண்
ஆதர்ஓதும் அதுகொளா
தமரர்ஆனவர் ஏத்த அந்தகன்
தன்னைச் சூலத்தில் ஆய்ந்ததே.

தெளிவுரை: *தம்மைச் சார்ந்து விளங்கும் சுற்றத்தினரின் பிறவிப் பிணியை அறுக்கும் அடியவர்களாகிய மெய்த் தொண்டர்களே! பூமியில் வெடிப்பு கொண்டு வறட்சி உண்டாகாதவாறு, குளிர்ந்த நீர் பெருகும் வயல்கள் சூழ்ந்த கண்டியூரில் உறையும் வீரட்டநாதன், சமணர் சாக்கியர்தம் சொற்களைக் கருத்துடையதாகக் கொள்ளாததும், அந்தகனைச் சூலத்தால் சம்ஹரித்ததும் என்கொல்!*

சிறப்புரை: சிவஞானம் பெற்றவராய் ஒருவர் விளங்கினால், அப் புண்ணியமானது இருபத்தொரு தலைமுறையினர்களுக்குப் பிறவாமையாகிய செல்வத்தை வழங்கும் என்னும் கருத்தின்வழி, "நமர் எழு பிறப்பறுக்கும் மாந்தர்காள்" என உணர்த்தப் பெற்றது. இத் தன்மையில், "மூவேழ் சுற்றம் முரண் உறு நரகிடை ஆழாமே அருள் அரசே போற்றி" என மாணிக்க வாசகர் அருளிச் செய்த (போற்றித் திருஅகவல் 118, 119) அமுத மொழியும் காண்க. இத் தன்மையில் ஒரு சிவஞானி தமது சுற்றத்தினரை நற்கதிக்கு ஆளாக்குவர் என்பதும் ஓர்க.

கமர் – நிலத்தில் உள்ள வெடிப்பு.

Koviloor Digital Library

410. கருத்தனைப்பொழில் சூழுங்கண்டியூர்
வீரட்டத்துறை கள்வனை
அருத்தனைத்திறம் அடியர்பால்மிகக்
கேட்டுகந்த வினாவுரை
திருத்தமாந்திகழ் காழிஞானசம்
பந்தன்செப்பிய செந்தமிழ்
ஒருத்தராகிலும் பலர்களாகிலும்
உரைசெய்வார் உயர்ந்தார்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அன்பர்தம் கருத்தாக விளங்கி, கண்டியூரில் வீரட்டானத்தின்கண் உறையும் ஈசன், பிறரால் காணப் பெறாது, மனத்தைக் கவரும் கள்வராகவும், சொல்லின் பொருளாகவும் இருப்பவர். அப் பெருமானின் திறத்தினை அடியவர்களிடம் வினாவுரையாகக் கேட்டு மகிழ்ந்த, திருத்தமாய்த் திகழும் காழியின் ஞானசம்பந்தன் செப்பிய செந்தமிழாகிய இதனை, ஒருவராகத் தனித்தும், பலராகச் சேர்ந்தும் பாடுபவர்கள், உயர்ந்தவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: திருஞானசம்பந்தர், ஈசனின் திறத்தை நன்கு உணர்ந்தவர் என்னும் பாங்கானது, "திருத்த மாந்திகழ்" என்னும் அடைமொழியின் வாயிலாக உரைக்கப் பெற்றது. இவ்வினாவுக்கு உரிய விடையாக அவ்வத் திருப்பாடல்களில் நன்கு உரைக்கப் பெற்று, ஈசனின் திறத்தை வியந்து ஓதுதல் ஆயிற்று. இத்திருப்பதிகத்தைத் திருவாசகத்தில் வினாவுரையாக அமையப் பெற்ற திருச்சாழல் என்னும் திருப்பதிக அமைப்பிலும் காணலாம்.

Koviloor Digital Library

297. திருஆலவாய்

தல விளக்கம்: பாண்டிய நாட்டுத் தலம் 14இல், இது முதலாவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. மதுரை என வழங்கப்படுவது. பஞ்ச சபைகளுள் இது வெள்ளி சபை. ஈசன் கால் மாறி ஆடிய தலம். கோயிலின் பெயர், ஆலவாய்; சிவராசதானி, பூலோக கயிலாயம், கடம்பவனம், கூடல் என்பன இத் தலத்தின் வேறு பெயர்கள். மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 7, இரண்டாம் திருமுறை பதிகம் எண் 66 காண்க.

சுவாமி : சோமசுந்தரக் கடவுள், சொக்கநாதர்

அம்பிகை : மீனாட்சி, அங்கயற்கண்ணி

தல மரம் : கடம்ப மரம்

தீர்த்தம் : பொற்றாமரைக் குளம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர், மதுரையை அடைந்த ஞான்று, சமணர்களால் தீங்கு நேருமோ என அஞ்சிய மங்கையர்க்கரசியாரை நோக்கி, அஞ்ச வேண்டாம் என மொழிந்து அருளிச் செய்தது.

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

411. மானினேர்விழி மாதராய்வழு
திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாய்ஒரு பாலன்ஈங்குஇவன்
என்றுநீபரிவு எய்திடேல்
ஆனைமாமலை ஆதியாய
இடங்களிற்பல அல்லல்சேர்

Koviloor Digital Library

ஈனர்கட்குளளி யேன்அலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: *மான் போன்ற விழியுடைய மாதரசியே! பாண்டிய மன்னனின் பட்டத்து அரசியே! இங்கு என்னைப் பால்மணம் கொண்டு மேவும் பாலன் எனக் கருதி மனம் வருந்த வேண்டாம். மலைப் பகுதிகளில், அல்லல் மேவி விளங்குகின்ற ஈனர்களுக்கு யான் எளியவன் அல்ல. திருஆலவாயின்கண் வீற்றிருக்கும் சிவபெருமான், என் முன் நின்று அருள் செய்பவர். அவர், என்னைக் காத்தருள்பவர்.*

சிறப்புரை: *திருஞானசம்பந்தரின் சிறப்புப் பெயராக விளங்கும் 'பால் அறாவாயன்' என்பது இவண், "பானல் (பால்-நல்) வாயொருபாலன்" எனச் சுட்டப் பெற்றது. ஆளுடைய பிள்ளையாரின் செயல்களும் சொற்களும் திரு ஆலவாயில் மேவும் அரனே முன்னின்று நடத்து தலை உணர்த்துவதாயிற்று.*

412. ஆகமத்தொடு மந்திரங்கள்
அமைந்தசங்கத பங்கமாப்
பாகத்தொடு இரைத்துரைத்த
சனங்கள் வெட்குறு பக்கமா
மாகதக்கரி போல்திரிந்து
புரிந்து நின்றுணும் மாகசேர்
ஆகதர்க்கெளி யேனலேன்திரு
ஆல்வாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: *வேத ஆகமங்களையும், மந்திரங்களையும், உயர்ந்த பொருள் தரும் வாசகங்களையும் நன்கு பயின்று ஓதி உரைப்பவர்களாகிய பெருமக்கள், நாணு கின்ற தன்மையில், மதம் பொருந்திய யானையைப் போன்று, தேகத்தில் அழுக்கு சேர இருப்பவர்களுக்கு*

Koviloor Digital Library

நான் எளிமையானவன் அல்ல. திருஆலவாயில் விளங்கும் சிவபெருமான் யாவற்றையும் முன்னின்று செய்வதனால் அச்சத்தை விடுக.

413. அத்தகுபொருள் உண்டும்இல்லையும்
என்றுநின்றவர்க்கு அச்சமா
ஒத்தொவ்வாமை மொழிந்துவாதில்
அழிந்தெழுந்த கவிப்பெயர்ச்
சத்திரத்தின் மடிந்தொடிந்து
சனங்கள் வெட்குற நக்கமே
சித்திரர்க்கெளி யேனலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: இறைவனின் மேம்பட்ட தன்மையினை "உண்டு இல்லை" என்னும் தன்மையில் இருப்பவர் களுக்கு நான் அச்சம் தருபவன். ஒவ்வாத வார்த்தை களைக் கூறி வாதம் செய்து அழிபவர்களாகிய அத்தகையினருக்கும், பிறர் இகழுமாறு சித்திர வார்த்தைகளை மொழிபவர்களுக்கும் யான் எளியவன் அல்ல. ஆலவாயின்கண் மேவும் அரன் என் முன்னின்று யாவும் புரிபவர்.

414. சந்துசேனனும் இந்துசேனனும்
தருமசேனனும் கருமைசேர்
கந்துசேனனும் கனகசேனனும்
முதலதாகிய பெயர்கொளா
மந்திபோல்திரிந்து ஆரியத்தொடு
செந்தமிழ்ப்பயன் அறிகிலா
அந்தகர்க்குஎளி யேன்அலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: சந்து சேனன், இந்து சேனன், தரும சேனன், கந்து சேனன், கனக சேனன் முதலாகிய பெயர்களைச்

Koviloor Digital Library

சிறப்பாகத் தாங்கி, எல்லா இடங்களிலும் திரிந்து அலைந்தவர்களாகி, வடமொழியும் செந்தமிழும் நவில் கின்ற சிவப் பரம் பொருளையும் அதன் பயனையும் அறியாது, உலகியலில் அகக் குருடர்களாய் விளங்குபவர்களுக்கு, நான் எளியவன் அல்ல. திரு ஆலவாயின் ஈசன் என் முன்னிருந்து நடத்திச் செல் கின்றார். எனவே அச்சத்தை விடுக.

415. கூட்டின்ஆர்கிளி யின்விருத்தம்
உரைத்ததோர்ஒலி யின்தொழில்
பாட்டுமெய் சொலிப் பக்கமே செலும்
எக்கர்தங்களைப் பல்லறம்
காட்டியேவரு மாடெலாங்கவர்
கையரைக்கசி வொன்றிலாச்
சேட்டைகட்கெளி யேனலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: கூண்டில் இருக்கும் கிளி விருத்தம் முதலானவைகளை உரைத்து, அக் கிளியினது ஒலித் தன்மையை மெய்யெனக் கூறி அறங்களைச் சொல்லு கின்றவர்கள் போல் பேசி, இரக்கம் அற்றவராகி, குற்றங்களைப் புரிபவர்களுக்கு நான் எளியவன் அல்ல. ஆலவாயின்கண் உறையும் ஈசன் என் முன்னின்று நன்று அருள் புரிபவர்.

416. கனகநந்தியும் புட்பநந்தியும்
பவணநந்தியும் குமணமா
சுனகநந்தியும் குனகநந்தியும்
திவணநந்தியும் மொழிகொளா
அனகநந்தியர் மதுவொழிந்தவ
மேதவம்புரி வோம்எனும்
சினகருக்கெளி யேனலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

Koviloor Digital Library

தெளிவுரை: *கனக நந்தி, புட்ப நந்தி, பவண நந்தி, குமண மாசுனக நந்தி, குனகநந்தி, திவணநந்தி எனப் பலவகை யான பெயர்கள் கொண்டு, எண்ணற்றவர்களாய் உலகியல் வாழ்க்கையை ஒதுக்கியவர்களாகி, அவமாகிய நிலையைத் தவம் எனக் கொண்டு, பொய்த் தன்மையைக் காட்டுபவர்களுக்கு நான் எளியவன் அல்ல. திருஆலவாயில் வீற்றிருக்கும் சிவபெருமான் என் முன்னிருந்து அருள்பவர்.*

417. பந்தணம்மவை யொன்றிலம்பரி
வொன்றிலம்மென வாசக
மந்தணம்பல பேசிமாசறு
சீர்மையின்றிய நாயமே
அந்தணம்மரு கந்தணம்மது
புத்தணம்மது சிந்தனச்
சிந்தணர்க்கெளி யேனலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: *பந்தத்தால் கட்டுப்பட்டு, அதற்கு ஏற்ற வகையில் ஈடுபடுத்திக் கொள்வதும், ஒரு பொருளின் கண் பரிவு கொண்டு அதன் இச்சைக்கு உவந்து ஆட்படுதலும், இல்லை எனப் பேசியும், புகழ் இன்றி சமயத்தின் கொள்கை இதுவே என மொழிதலும் உடையவர்களுக்கு, நான் எளியவன் அல்ல. திரு ஆலவாயில் கோயில் கொண்டு மேவும் ஈசன் என் முன்னின்று யாவற்றையும் நிகழ்விப்பவர். எனவே அச்சத்தைக் கைவிடுக.*

பந்தணம் – பந்தத்தால் உண்டாகும் கட்டு.
மந்தணம் – இரகசியம், மறைப்பது.

418. மேலெனக்குஎதிர் இல்லையென்ற
அரக்கனார்மிகை செற்றதீப்

Koviloor Digital Library

போலியைப்பணி யக்கிலாதொரு
பொய்த்தவங்கொடு குண்டிகை
பீலிகைக்கொடு பாய்இடுக்கி
நடுக்கியேபிறர் பின்செலும்
சீலிகட்குஎளி யேன்அலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: *தன்னிலும் மேலாக யாரும் இல்லை எனக் கருதிய இராவணனுடைய செருக்கினை அழித்தவர், சிவபெருமான். அப் பெருமானைப் பணிந்து ஏத்தாது, பொய்த் தவத்தைக் கொண்டு, குண்டிகையும் மயிற் பீலியும் விளங்க, ஓலைத் தடுக்கினை உடையவர் களுக்கு, நான் எளியவன் அல்ல. திருஆலவாயின்கண் மேவும் ஈசன், என் முன்னிருந்து யாவற்றையும் புரிபவர்.*

419. பூமகற்கும் அரிக்கும்ஓர்வரு
புண்ணியன்னடி போற்றிலார்
சாமவத்தையி னார்கள்போல்தலை
யைப்பறித்தொரு பொய்த்தவம்
வேமவத்தைசெ லுத்திமெய்ப்பொடி
யட்டிவாய்ச கதிக்கு நேர்
ஆமவர்க் கெளியேன லேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும் நினைத்தற்கு அரிய பொருளாகிய புண்ணியன், சிவபெருமான். அப் பெருமானைப் போற்றி வணங்காதவர்களாய், ஈமக் கிரியையைப் புரியும் தன்மை உடையவர்கள் போன்று தலையில் திகழும் சிகையைக் களைந்து பொய்த் தவத்தின்பால் பயனின்றித் திளைத்துத் தம்மை வருத்திக் கொண்டு பொருள் அற்ற உரை நவில்பவர்*

Koviloor Digital Library

களுக்கு, யான் எளியவன் அல்ல. எனக்குத் திருஆல வாயில் வீற்றிருக்கும் ஈசன் முன்னின்று விளங்குபவர்.

420. தங்களுக்கும்அச் சாக்கியர்க்குந்
தரிப்பொணாதநற் சேவடி
எங்கள்நாயகன் ஏத்தொழிந்திடுக்
கேமடுத்தொரு வாய்த்தவம்
பொங்குநூல்வழி யன்றியேபுல
வோர்களைப் பழிக் கும்பொலா
அங்கதர்க்குளளி யேனலேன்திரு
ஆலவாய்அரன் நிற்கவே.

தெளிவுரை: சமர் கொண்டு அடர்க்கும் சமணர் களுக்கும் சாக்கியர்களுக்கும் அரிதாகிய உயர் பொருளாய் விளங்குபவர், சிவபெருமான். அத்தகைய நாதனின் நல்ல சேவடியை ஏத்தி எங்கள் நாயகனே! என்று போற்றி வழிபடுதலை விட்டு, அவமாய தவத்தின் வழியாய், நல்ல நூற்கள் புகலும் வழியும் இன்றி, அறிஞர்களைப் பழிக்கும் பொல்லாத பழிச் சொல் பேசுபவர்களுக்கு நான் எளிமையானவன் அல்ல. எனக்குத் திருஆலவாயில் மேவும் ஈசன் முன் இருந்து யாவற்றையும் செய்பவர் ஆவர்.

அங்கதர் – பொய்யும் பழியும் உரைப்பவர்.

421. எக்கராம் அமண் கையருக்குளளி
யேன்அலேன்திரு ஆலவாய்ச்
சொக்கன்என்னுள் இருக்கவே துளங்
கும்முடித் தென்னன் முன்னிவை
தக்கசீர்ப்புகலிக் குமன்தமிழ்
நாதன்ஞானசம் பந்தன்வாய்
ஒக்கவேஉரை செய்தபத்தும்
உரைப்பவர்க்கு இடர் இல்லையே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: திருஆலவாய்க் கடவுளாகிய சொக்க நாதன் என் உள்ளத்தில் இருக்க, செருக்குடைய அமணர்களுக்கு எளியவன் அல்ல எனப் பாண்டிய மன்னன் முன்னிலையில் புகலியின்கண் மேவும் சிறப்புடைய தமிழ் நாதனாகிய ஞானசம்பந்தன், வாய் மலர உரைத்த இத்திருப்பதிகத்தை, ஓத வல்லவர் களுக்கு இடர் இல்லை.

சிறப்புரை: இத்திருத்தலத்தின் ஈசன் பெயர் சுட்டப் பெற்றுள்ளமை காண்க.

எக்கர் – செருக்குடையவர்.

298. பொது – திருப்பதிகம்

தனித் திருவிருக்குக்குறள்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

422. கல்லாலனிழல், அல்லாத்தேவை
நல்லார் பேணார், அல்லோநாமே.

தெளிவுரை: கல்லால மரத்தின் நிழலில் சனகாதி முனிவர்களுக்கு அறப்பொருள் உரைத்தருளிய சிவபெருமானை அன்றிப் பிற தெய்வத்தைச் சிவஞானி கள் வணங்கி ஏத்த மாட்டார்கள். நாமும் அவ்வாறு சிவபெருமானை அன்றி வேறு தெய்வத்தைக் கொள்ளோம்.

சிறப்புரை: ஈசனின் திருநாமத்தை விளியாது, அப் பெருமானின் அருளிச் செயலை உணர்த்திய செம்மையும், அதனை உணரும் பெருந்தகையாளர் நல்லார் எனவும் குறிப்பால் சுட்டப் பெற்றது.

தேவு – கடவுள்; நல்லார் – சிவஞானிகள்.

Koviloor Digital Library

423. கொன்றைசூடி, நின்றதேவை
அன்றியொன்று, நன்றிலோமே.

தெளிவுரை: கொன்றை மலரைச் சூடி விளங்குகின்ற சிவபெருமானை அன்றி பிற தெய்வத்தை நன்மை செய்யும் கடவுளாக யாம் கருதவில்லை.

சிறப்புரை: பிரணவ புஷ்பம் என வழங்கப்படுகின்ற கொன்றை மலரைச் சூடி விளங்குபவர் சிவபெருமான் ஆதலாலும், அப் பெருமானே முழு முதல் தெய்வம் ஆதலாலும், அவரை அன்றி, மேலான நன்மை எனும் சொல்லுக்குரிய முத்திச் செல்வத்தை வழங்குபவர் வேறு இல்லை என, இத் திருப்பாட்டின் வாயிலாக உணர்த்தப் பெற்றது.

424. கல்லாநெஞ்சின், நில்லான்ஈசன்
சொல்லாதாரோடு, அல்லோநாமே.

தெளிவுரை: ஈசன், சிவஞானத்தை உணராத நெஞ்சத்தில் விளங்கி நிற்காதவர். அப்பெருமானுடைய திருப்புகழை நன்கு சொல்லாதவர்களோடு, யாம் சேர்ந்து இருக்க மாட்டோம்.

சிறப்புரை: ஈசனின் திருப்புகழைக் கற்றுத் தெளிதலே உண்மையான கல்வி எனவும், அதனைப் பற்றி ஒழுகு தல் கடன் எனவும் உணர்த்தப் பெற்றது. கற்பவை கசடறக் கற்றலும், கற்றபின் அதன் வழி நிற்றலும், அதுவே வாலறிவனாகிய இறைவனின் நற்றாள் தொழும் கல்வியின் பயனாதல் எனப் பகரும் திருக்குறள் கருத்தும் ஓர்க. இதனைத் திருஞான சம்பந்தர், "கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்தப் பெற்றம் ஊர்ந்த பிரமாபுரம்

Koviloor Digital Library

மேவிய பெம்மான்" என முதல் திருமுறை, பாடல் வ.எண் 2இல் வியந்து ஓதுதலும் காண்க.

ஈசனைப் புகழ்ந்து போற்றுதலை,

மற்றிதழ் திண்புயமும் மார்பிடை நீறுதுதை
மாமலை மங்கை உமைசேர்சுவடும் புகழக்
கற்றனவும் பரவிக் கைதொழல் என்றுகொலோ
கார்வயல் சூழ்கானப்பேர் உறை காளையையே

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரைத்தருளிய பாங்கும் ஓர்க.

இத்தகைய ஈசன் புகழைக் கல்லாதது சிறப்படையாது என்பதன்றி, இகழப்படுதலாகும் என வலியுறுத்துமாறு, "கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை" (திரு அம்மானைப் பாடல் 5) எனவும், "கல்லாத புல்லறிவிற் கடைப்பட்ட நாயேனை" (கண்டபத்து பாடல் 4) எனவும் மாணிக்கவாசகர் அருளிச் செய்த வண்ணமும் காண்க. "கல்லா நெஞ்சினர்" என்போர், ஈசன் புகழைக் கருதாத நெஞ்சினர் எனவும், அதனைக் கருதிச் சொல்லாதவர் இகழப் படுபவர் எனவும் காண்க. இவ்வாறு மக்கட் பிறவிக்கு உரிய வழியில், ஈசனை ஏத்தாதவர்களுடன் அடியவர் பெருமக்கள் இணங்குதல் செய்ய மாட்டார்கள் என்பது, "அல்லோம் நாமே" என்னும் தொடரால் சுட்டப் பெறுவதாயிற்று.

425. கூற்றுதைத்த, நீற்றினானைப்
போற்றுவார்கள், தோற்றினாரே.

தெளிவுரை: மார்க்கண்டேயரின் உயிரைப் பறிக்க வந்த கூற்றுவனைத் திருநீற்று மேனியராக விளங்கும் சிவபெருமான், திருப்பாதத்தால் உதைத்து அழித்தார்.

Koviloor Digital Library

அப் பெருமானை, மக்கட் பிறவி எடுத்தவர்கள் போற்றித் துதிப்பார்கள்.

சிறப்புரை: திருநீற்று வண்ணமானது அடியவர்களைக் காத்தருள் புரிதல், "நீற்றினான்" என்னும் அருஞ் சொல் வழிச் சுட்டப் பெற்றது. முன் வினைப் பயனாகவும் மறுமையில் நற்கதிக்குச் செல்லும் தன்மை யிலும் மக்கட் பிறவி அடைதல், "தோற்றினார்" என உணர்த்தப் பெற்றது. இப்பிறவியைக் கொள்ளுதல், ஈசனைப் பற்றி நின்று, பிறவிப் பிணியைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டே ஆகும் என்னும் பாங்கில் "தோற்றினாரே போற்றுவார்கள்" என ஓதப் பெற்றது.

426. காட்டுளாடும், பாட்டுளானை
நாட்டுளாரும், தேட்டுளாரே.

தெளிவுரை: ஈசன், சுடுகாட்டில் விளங்கி நின்று நடனம் புரிபவர்; பெருமை விளங்கும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனப்படும் ஐந்தொழி லையும் தனது சங்கற்பத்தால் ஆற்றுபவர். அப்பரம் பொருளை, நெஞ்சில் தேக்கித் தியானம் செய்பவர்கள் பேரின்பத்தில் திளைப்பவர்கள்.

427. தக்கன்வேள்விப், பொக்கம்தீர்த்த
மிக்கதேவர், பக்கத்தோமே.

தெளிவுரை: தக்கன் செய்த வேள்வியால் உண்டாகும் குற்றத்தைத் தீர்த்த வல்லமையும் அருளும் மிகுந்த தேவராகிய சிவபெருமானுடைய பக்கத்தில் யாம் இருக்கின்றனம்.

சிறப்புரை: வேள்வி புரிதல் உலக நன்மையின் பொருட்டு ஆதலும், அத்தகைய வேள்வியின் உயர்ந்த

Koviloor Digital Library

மகத்துவத்தைக் குற்றமாக்கிய தக்கனையும், உயர்ந்த தாகக் கருதப்படும் வேள்விச் செயலைக் குற்றமற்ற தாக்கச் செய்விக்கும் பாங்கில் அதனையும், அழித்த செம்மையானது 'தீர்த்த' எனச் சுட்டப் பெற்றது.

சிவனடியார்கள் உன்னதமான சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சம் என்னும் நான்கு பதவி களைப் பெறும் பேறுடைமையில், சாமீபம் என்னும் பாங்கினை, "பக்கத்தோமே" என உணர்த்துவதாயிற்று. பொலிவுடைய வேள்வியைத் தக்கன் குற்ற முடையதாகச் செய்தது, "தக்கன் வேள்விப் பொக்கம்" எனப் புகலப் பெற்றது. "மாலறியா நான் முகனும் காணா மலையினை நாம் போலறிவோம் என்றுள்ள பொக்கங்களே பேசும் பாலூறு தேன்வாய்ப் படிறீஇ கடைதிறவாய்" என மணிவாசகப் பெருமான் அருளிச் செய்த அமுதமொழியும் காண்க.

பொக்கம் – பொலிவு, வஞ்சனை, குற்றம்.

428. பெண்ணாண் ஆய, விண்ணோர்கோவை
நண்ணாதாரை, எண்ணோநாமே.

தெளிவுரை: பெண்ணாகவும், ஆணாகவும் ஆகி விண்ணோர்கள் போற்றும் தலைவராகிய சிவபெருமானை; மனம், வாக்கு, காயம் ஆகிய திரி கரணங்களால் அணுகாதவர்களை – நாம் நெஞ்சாலும் எண்ணுவதில்லை.

சிறப்புரை: நெஞ்சமானது ஈசனை நினைத்து வழிபட வேண்டும் என்னும் அருளாணை இத்திருப்பாட்டின் வழி வழங்கப்படுகிறது. "நெஞ்சே! நீ நினையாய், நிமிர் புன்சடை நின் மலனை, மஞ்சாடும் மலைமங்கை மணாளனை, நெஞ்சே நீ நினையாய்" எனத்

Koviloor Digital Library

திருநாவுக்கரசர் அருளிச் செய்தவாறும் காண்க. சிவபெருமானை நினையாதவர்கள்பால், சார்தல் கூடாது என்னும் பாங்கினில், இத்திருப்பதிகத்தின் 3ஆம் திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றமையைத் தொடர்ந்து, ஈசனை நினையாதவர்களை எண்ணத்தில் கருதாமை இத்திருப்பாட்டால் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "வெறிகமழ் சடையன் அப்பன், விண்ணவர் நண்ணமாட்டாச் செறி தருகழல்கள் ஏத்திச் சிறந்து, இனிது இருக்க மாட்டா, அறிவிலா தவரைக் கண்டால், அம்ம நாம் அஞ்சுமாறே" (அச்சப் பத்து 8) என மாணிக்கவாசகர் அருளிச் செய்துள்ளமையும் கொள்க.

பெண்ணாண் ஆய – பெண்ணும், ஆணும், அர்த்த நாரியும் ஆம். பெண்ணாகிய பெருமான் மலை என வரும் திருவண்ணாமலை திருப்பதிகம் காண்க.

429. தூர்த்தன்வீரம், தீர்த்தகோவை
ஆத்தமாக, ஏத்தினோமே.

தெளிவுரை: துன்மதியால் கயிலையைப் பெயர்த்த இராவணனது வலிமையை அழித்துத் திருமலையின் பெருமையும் திருவருளும் பொலியுமாறு அவனுக்கு வாளும், வாழ்நாளும் வழங்கிய இறைவனை, விருப்பத்துடன் யாம் ஏத்தி வணங்கினோம்.

சிறப்புரை: அரக்கனின் அறியாமையும் செருக்கும் தோன்ற "தூர்த்தன்" எனவும், அவனுக்கு அருள் வழங்கித் தீர்வு செய்த ஈசனின் அருட் பொலிவைத் "தீர்த்த, கோ!" எனவும் சுட்டப் பெறுதலாயிற்று.

430. பூவினானும், தாவினானும்
நாவினாலும், நோவினாரே.

Koviloor Digital Library

தெளிவுரை: மலர்மேல் விளங்கும் பிரமனும், உலகத்தைத் தாவி அளந்த திருமாலும், ஈசனின் திருமுடியையும் திருவடியையும் உடல் வருத்தித் தேடியும் காண்கிலராய்ப் பின்னர் நாவினால் ஏத்தி உருகி நின்றவராயினர்.

431. **மொட்டமணர், கட்டர்தேரர்**
பிட்டர்சொல்லை, விட்டுளாமே.

தெளிவுரை: சமணர்களும், தேரர்களும் சமயநெறிக்குப் புறம்பாகச் சொற்களைக் கூறுபவர்கள். அவற்றைப் பொருளாகக் கொள்ளாது விடுத்தனம்.

பிட்டர் – சமய நெறிக்குப் புறம்பானவர்.

432. **அந்தண்காழிப், பந்தன்சொல்லைச்**
சிந்தைசெய்வோர், உய்ந்துளோரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: அழகிய குளிர்ச்சி பொருந்திய காழியில் மேவும் ஞானசம்பந்தனது திருச் சொல்லாக மலர்ந்த இத் திருப்பதிகத்தை சிந்தித்தும், வாயாரப் பாடியும் திகழ்பவர்கள், உய்வு பெற்றவர்களாவார்கள்.

299. திருக்கச்சியேகம்பம்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலங்கள் 32இல், இது முதலாவது திருத்தலம். மூவர் பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்கள் 5இல், இது ஒன்று; ஏனைய நான்கும்: திருவாலங்காடு, திருக்காளத்தி, திருவொற்றியூர், திருக்கழுக்குன்றம் ஆகும். அம்பிகை யானவள் மணலால் இலிங்கம் அமைத்து பூசித்த தலம்; சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இடக் கண் பார்வை

Koviloor Digital Library

அருளிய இடம்; பிரமன் பூசித்த வெள்ளைக் கம்பர், திருமால் பூசித்த கள்ளக் கம்பர், உருத்திரன் பூசித்த நல்ல கம்பர் உடையது. இத்திருக்கோயிலுள் நான்கு பக்கங்களிலும் வாலீசம், ரிஷபேசம், சத்திய நாதேசம், கச்சிமயானம் ஆகிய தலங்கள் உள்ளன. இதில் கச்சி மயானம் வைப்புத் தலமாகும். இது அப்பர் தேவாரத்தில் 6ஆம் திருமுறை, பாடல் வ.எண் 959இல் "மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி மயானத் தான் வார்சடையான் என்னின் அல்லான்..." என அருளிச் செய்யப் பெற்றுள்ளது; மயானம் என வரும் நான்கு தலங்களுள் இது ஒன்று; ஏனையவை: 1. திருக் கடவூர் மயானம், 2. காழி மயானம், 3. நாலூர் மயானம் என்பன. பங்குனி உத்திரப் பெருவிழா, இத்திருத்தலத் தின் பிரதான விழாவாகும். இது பிருத்திவித்தலம். இரத சப்தமியன்று சூரிய ஒளி சுவாமியின் மீது படும் சிறப்பு உடையது. மற்றும் முதல் திருமுறை, பதிகம் எண் 133; இரண்டாம் திருமுறை, பதிகம் எண் 148 காண்க.

சுவாமி : ஏகாம்பர நாதர்

அம்பிகை : ஏலவார்குழலி, காமாட்சியம்மை

தல மரம் : மா மரம்

தீர்த்தம் : சிவகங்கை, கம்பா நதி

தல
விநாயகர் : ஆயிரங்கால் மண்டபத்தில் தெற்கு
வாயிலின்கண் உள்ள விகட சக்கர விநாயகர்.

திருவிருக்குக்குறள்

பண் : கொல்லி

திருச்சிற்றம்பலம்

433. கருவார்கச்சித், திருவேகம்பத்து
ஒருவாஎன்ன, மருவாவினையே.

Koviloor Digital Library

தெளிவுரை: கருப்பொருளாக விளங்கும் சிறப்பு மிக்க கச்சியில் திருவேகம்பத்தில் வீற்றிருக்கும் ஒருவனே! பெருமானே! என்று ஏத்தி வணங்க, வினைத் துயர் இல்லை.

சிறப்புரை: திருக்கச்சியில் வீற்றிருக்கும் இறைவன், யாவற்றுக்கும் மூலகாரணமாகத் திகழ்ந்து ஐந்தொழிலை நிகழ்த்தும் சிறப்பு, "கருவார்" என உரைக்கப் பெற்றது. திருவேகம்பநாதன் பக்தர்களுக்கு அருள் செய்யும் பெற்றியின் காரணமாக, வினை யானது மருவுதல் செய்யாமையும், அப்பெருமானை ஒருவனே என்று வணங்குதல் வேண்டும் என்பதும், இவண் உணர்த்தப் பெற்றது.

இறைவனுக்கு உரிய சிறப்புப் பெயராக, ஏகம்பன் என்று மொழியப் பெற்றது. அப் பெருமான் ஒப்புயர் வற்ற பெருமை உடையவராய், உவமை கூறப்படு வதற்கு வேறு ஒருவரும் இல்லாதவர் என்பது, ஒருவன் என்று சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" (திருவண்டப் பகுதி 42, 43) என மாணிக்கவாசகர் அருளிச் செய்துள்ள அமுதமொழியும் காண்க.

434. **மதியார்கச்சி, நதியேகம்பம்**
விதியால்ஏத்தப், பதியாவாரே.

தெளிவுரை: சிவஞானம் பெருக்கும் தன்மையில் கம்பா நதியின் கரையில் விளங்குகின்ற திருவேகம்பத்தை ஆகம விதிப்படி அன்பர்கள் ஏத்தி வணங்க, சிவ கணங் களுக்குத் தலைமையாய் விளங்குவார்கள்.

சிறப்புரை: மதியார் கச்சி என்பது, ஈசனை ஏத்தி வழிபடும் ஞானத்தைப் பெற்று விளங்குதல் எனக்

Koviloor Digital Library

கொள்க. இது திருத்தலத்தின் சிறப்பினையும் திருக் கோயிலாகிய திருவேகம்பத்தின் சிறப்பினையும் ஒரு சேர உணர்த்துவதாயிற்று.

435. **கலியார்கச்சி, மலியேகம்பம்**
பலியாற்போற்ற, நலியாவினையே.

தெளிவுரை: விழாக்கள் மலிந்து ஆரவாரத்துடன் எஞ்ஞான்றும் விளங்குகின்ற கச்சியில், பேரருள் வழங்குகின்ற திருத்தலமாகத் திகழும் திருவேகம் பத்தைப் பூசையின் சிறப்புக் காட்டும் அபிடேகப் பொருள் கொண்டு போற்ற, தீவினையால் நலிவு இல்லை.

சிறப்புரை: திருக்கச்சி யேகம்பப் பெருமானுக்குப் பூசனை யாண்டும் நடைபெற்று நிகழும் வகையில், சேக்கிழார் பெருமான் ஈசனார் மொழியாக,

வண்டு வார்குழல் மலைமகள் கமல வதனம்
நோக்கிஅம் மலர்க்கண்நெற் றியின்மேல்
முண்டநீற்றர் நின்பூசனை என்றும்
முடிவதில்லைநம் பால்என மொழிய
— திருக்குறிப்புத்தொண்ட நாயனார் புராணம், பாடல் எண் 68

என அருளிச் செய்த தன்மையினை ஓர்க. இஃது, ஈசனார் திருவாக்கின்படி பூசனையானது தொடர்ந்து நடத்தப் பெறுதலை உணர்த்திற்று. அத்தகைய பூசைக்குத் தேவையான பொருகளை வழங்குதல், பெறும்பேறு உடையது எனவும் கொள்க. இது, “பலியாற் போற்றுதல்” என இத் திருப்பாட்டில் சுட்டப் பெற்றது.

இந்நெறியில், ஈசனுக்குத் திருத்தொண்டு ஆற்றும் வகையில் திருவேகம்பப் பெருமானின் திருநாமத்தை

Koviloor Digital Library

ஓதிப் பணியாற்றும் செம்மையினை, "தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப் பாசவினையைப் பறித்து நின்று பாடிப் பொற் சுண்ணம் இடித்து நாமே!" எனவும்; "செறி வுடை மும்மதில் எய்த வில்லி திருவேகம் பன்செம் பொற் கோயில் பாடி; முறுவர் செவ்வாயினீர்! முக்கண் அப்பற்கு ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே!" எனவும் (திருப்பொற்சுண்ணம், பாடல் 4 – 5) மணிவாசகப் பெருமான் அருளிச் செய்துள்ளமை காண்க.

இத்தகைய திருத்தொண்டானது வினை நீக்கி அருளும் என நனி ஓர்க.

பலி – ஈசனுக்குத் தரும் காணிக்கை.

436. வரமார்கச்சிப், புரம்ஏகம்பம்
பரவாஏத்த, விரவாவினையே.

தெளிவுரை: வணங்கிப் போற்றும் பக்தர்களுக்கு வேண்டிய வரங்களை நல்கும் தெய்வப் பேறுடைய திருத்தலம், காஞ்சிபுரம். இத் திருத்தலத்தில் திரு வேகம்பப் பெருமானைப் பரவி ஏத்த, வினை யாவும் நீங்கும்.

சிறப்புரை: சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் ஆகிய வினை வகையானது, ஆன்மாவுடன் பற்றி நின்று வருத்துதலும், இப் பிறிவியின்கண் கர்மபூமியாகிய இம் மண்ணுலகில் நுகர்ந்தது போக, எஞ்சிய வினையை மறுமைக்கண் நுகர்தல் விதியாயினும், திருவேகம்பப் பெருமானைப் பரவிப் போற்றுதலின் பயனாக வினை யாவும் இப்பிறவிலேயே நீங்கி ஒழியும் என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையினை, முந்தைய திருப்பாட்டின்

Koviloor Digital Library

வாயிலாகச் சுட்டப் பெற்ற, "கச்சித்திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடிப் பாசவினையைப் பறித்து" என அருளிய மாணிக்கவாசகர்தம் திருவாசக மெய்ம் மொழியாலும் காண்க.

கச்சிப்புரம் – காஞ்சிபுரம். பரவா – பரவி;
விரவா – மறுமையில் தொடராது.

437. **படமார்கச்சி, இடமேகம்பத்து**
உடையாய்என்ன, அடையாவினையே.

தெளிவுரை: சித்திரங்களின் வேலைப்பாடுகளை உடைய கவின்மிகு கச்சியை இடமாகக் கொண்டு, திருவேகம்பத்தில் வீற்றிருக்கும் நாதனே! என்று ஏத்த, வினையானது சாராது.

சிறப்புரை: இத் திருத்தலமானது, ஏகம்பம் என்று வழங்கப் பெறுதலும், இங்கு எழுந்தருளியுள்ள ஈசன் திருவேகம்ப முடையான் என்பதும் இத்திருப்பாட்டில் சுட்டப் பெறுவதாயிற்று. சித்திரச் சீலை எனவும், துகில் கொடி எனவும் பொருளை நல்குமாறு "படம்" என்பது குறிப்பாயிற்று.

438. **நலமார்கச்சி, நிலவேகம்பம்**
குலவாஏத்தக் கலவாவினையே.

தெளிவுரை: நலம் யாவும் பொருந்தி மேவும் கச்சி நகரில் நிலவுகின்ற திருவேகம்பத்தை, அன்பின் வயத்தால் குலாவி ஏத்த, வினையானது பற்றாது நீங்கும்.

சிறப்புரை: தாமரை இலையில் நீர் ஒட்டாதது போல, இம்மையில் உண்டாகும் ஆகாமியமானது, பற்றுக் கொள்ளாது விலகியும்; பிராரத்த வினையானது, துன்பத்தை உறுத்தாது நழுவியும்; சஞ்சித வினை

Koviloor Digital Library

யானது, தாமாகவே மறைந்தும் ஏகும் என்பது, "கலவா வினை" என உணர்த்தப் பெறுவதாயிற்று.

இது திருவேகம்பன் திருவருளால் நிகழ்வதாதலின் "பிறவாமை" என்னும் நெறியில், முத்திப் பேறு விளை விக்கும் எனக் குறிப்பால் சுட்டுவதாயிற்று.

439. கரியின்னுரியன், திருவேகம்பன்
பெரியபுரமூன்று, எரிசெய்தானே.

தெளிவுரை: *யானையின் தோலை உரித்துப் போர்த்துச் கொண்டவராகிய ஈசன், திருவேகம்பப் பெருமான். அப் பரமன், நன்னெறியிற் பொருந்தி நில்லாது கேடுகளை விளைவித்த மூன்று புரங்களை எரியுமாறு செய்தவர்.*

சிறப்புரை: இத் திருப்பாட்டு திருவேகம்பப் பெருமா னுடைய ஆற்றல் வியந்து ஓதுதலாயிற்று. முப்புரத்தை எரி செய்த ஆற்றலைத் திருவேகம்பநாதனின் சிறப்பாக, "ஈரம்பு கண்டிலம், ஏகம்பர் தம் கையில் ஓரம்பே முப்புரம் உந்தீபற ஒன்றும் பெருமிகை உந்தீபற" என அருளிச் செய்த மாணிக்கவாசகர்தம் மணிமொழியும் காண்க.

பெரியபுரம் – பொருந்தாத முப்புரம் பெருக்குதல் என்னும் பொருள். (பெருக்குதல் – தூற்றுதல்)

440. இலங்கைஅரசைத் துலங்கஊன்றும்
நலங்கொள்கம்பன் இலங்குசரணே.

தெளிவுரை: *இராவணனை கயிலை மலையின்கண் நெரியுமாறு ஊன்றி, அவன் நலத்தை அழித்த திருவேகம்பன் திருவடியைச் சரணம் கொள்ளுதலே சிறந்து விளங்குவதற்கு உரிய செம்மையான வழி.*

Koviloor Digital Library

சிறப்புரை: இராவணனுடைய செருக்கினை அழிக்க ஊன்றிய திருவடியானது, திருமலையின் அருள் தன்மையையும், திருப்பாத மலரின் செம்மையையும், அவனை ஆட்கொண்டு அடியவனாக்கி ஈசனைப் போற்றுமாறு செய்வித்து அருளிய மாண்பினையும் உணர்த்திற்று. இது "துலங்க ஊன்றும்" என்னும் அருட் சொற்களால் சுட்டப்பெற்றது. அவ்வாறு துலங்க வைத்த தன்மையில் அதனைச் சரணடைதல், நன்கு விளங்கச் செய்தது.

இந்நெறியில் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்துக் கலங்கியஞான்று, "கச்சி ஏகம்பவோ" என்று அரற்ற, நலம் செய்த இறைவன் பாங்கினைத் திருநாவுக்கரசர்,

இலங்கை வேந்தன் இராவணன் சென்றுதன்
விலங்கலை எடுக்க அவ்விரல் ஊன்றலும்
கலங்கிக் கச்சி யேகம்பவோ என்றலும்
நலங்கொள் செலவளித் தான்எங்கள் நாதனே.

— 5ஆம் திருமுறை, பா.வ. எண் 477

என அருளிச் செய்தது காண்க. இவ்வருள் நலம் சரணடையும் நலத்தை உணர்த்துதலாம்.

துலங்க – விளங்குதல், தெளிவாக, மேலாக.

441. மறையோன்அரியும், அறியாஅனலன்
நெறியேகம்பம், குறியால்தொழுமே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் அறியமுடியாதவாறு நெருப்பின் திரட்சியாகியவர், சிவபெருமான். அப்பரம் பொருளாகிய அப் பெருமானையே தொழுகின்ற மாண்பினை நோக்கமாகக் கொண்டு, நெஞ்சே! ஏத்துமின்.

Koviloor Digital Library

சிறப்புரை: ஈசனே – நெறியாகவும், போற்றித் தொழப் பெறும் குறியாகவும் உள்ளவர் என உணர்த்தப் பெற்றது. இது, அப் பெருமானைத் தவிர நெறியும் குறியும் வேறு இல்லை என்பதையும் ஓதுதல் ஆயிற்று. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருமழபாடி திருப்பதிகம் பாடல் 9இல்,

நெறியே நின்மலனே நெடுமால் அயன்போற்றி செய்யும்
குறியே நீர்மையனே கொடியேர்இடையாள் தலைவா

என அருளிச் செய்து நன்னெறியும் குறியும் காட்டுதலும் ஓர்க.

நெறி – ஒழுக்கம், பாதை, ஞானவழி;
குறி – நோக்கம், குறிக்கோள், வணங்கப்படும் பொருள்.

442. பறியாத்தேரர், நெறியில்கச்சிச்
செறிகொள்கம்பம், குறுகுவோமே.

தெளிவுரை: சாக்கியர்களும் சமணர்களும் கூறும் நெறியின்படி அமையாது, கச்சியில் ஞானம் பெருகும் திருவேகம்பநாதனின் திருக்கோயிலை நண்ணி, ஏத்துவோமாக.

443. கொச்சைவேந்தன் கச்சிக்கம்பம்
மெச்சும்சொல்லை நச்சும்புகழே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கொச்சைவயம் என்னும் திருப்பெயரை உடைய சீகாழியில் அருள்நாயகனாக விளங்கும் ஞானசம்பந்தன், வேதம் போன்று உயர்வாக மெச்சிக் கச்சிக் கம்பனைப் போற்றிப் பாடுகின்ற இத் திருப் பதிகத்தை ஏத்தி உரைக்க வல்லவர்கள், நிலைத்த புகழுடன் விளங்குவார்கள்.

Koviloor Digital Library

300. திருச்சிற்றேமம்

தல விளக்கம்: காவிரித் தென் கரைத் தலம் 127இல், இது 106ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. பிரம ரிஷி, சித்தர்கள் வழிபட்டது. சித்தாய்மூர் என வழங்கப் பெறுகிறது. பக்கத்தில் அரிச் சந்திர நதி, செண்பக நதி உள்ளது. பிரம ரிஷி முனிவர் தேனீயாக வழிபட்டது என்னும் தல வரலாற்றைக் குறிக்குமாறு இக்கோயிலில் தேன் கூடு உள்ளது. ஈசன் தன் அடியவர் ஒருவருக்குப் பொன் வழங்கி அருளிய தலச் சிறப்புக் கொண்டது.

சுவாமி : சுவர்ணஸ்தாபனேஸ்வரர், பொன்வைத்த நாதர்

அம்பிகை : அகிலாண்டேஸ்வரி

தல மரம் : ஆத்தி

தீர்த்தம் : சுவர்ண புஷ்கரணி

பண் : கொல்லிக் கௌவாணம்

திருச்சிற்றம்பலம்

444. நிறைவெண்திங்கள் வாள்முக மாதர்பாட நீள்சடைக்
குறைவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய
கொள்கையான்
சிறைவண்டுயாழ்செய் பைம்பொழிற் பழனம்சூழ்
சிற்றேமத்தான்
இறைவன்என்றே உலகெலாம் ஏத்தநின்ற பெருமானே.

தெளிவுரை: முழு நிலவு போன்ற ஒளி திகழும் முகம் உடைய உமாதேவியார் இசை பாட, நீண்ட சடை முடியில் பிறைச் சந்திரனைச் சூடி நடனம் புரிகின்ற இயல்பினை உடையவராய் சிறகுகளுடைய வண்டு

Koviloor Digital Library

கள் யாழ் போன்று ஒலிக்கும் பைம்பொழிலும், வயல்களும் சூழ்ந்த சிற்றேமத்தில் வீற்றிருக்கின்ற ஈசன், உலகமெல்லாம் ஏத்திப் போற்றுகின்ற இறைவன்.

மாதர் – உமையவள்; சிற்றேமத்தான் – ஈசன்.

445. மாகத்திங்கள் வாள்முக மாதர்பாட வார்சடைப்
பாகத் திங்கள் சூடியோர் ஆடல்மேய பண்டங்கள்
மேகத்தாடு சோலைசூழ் மிடைசிற்றேம மேவினான்
ஆகத்துஏர்கொள் ஆமையைப் பூண்டஅண்ணல்
அல்லனே.

தெளிவுரை: ஆகாயத்தில் விளங்கும் சந்திரன் போன்ற ஒளியுடைய முகத்தை உடைய உமாதேவியார் இசை பாட, நீண்ட சடையில் பிறைச் சந்திரனைச் சூடிப் பண்டரங்கம் என்னும் கூத்து மேவும் ஈசன், மேகம் திகழும் சோலை சூழ்ந்த சிற்றேமத்தில் மேவியவர். அப்பெருமான், திருமார்பில் ஆமை ஓட்டினை அணிகலனாகப் பூணும் அண்ணல் அல்லவா!

446. நெடுவெண்திங்கள் வாள்முக மாதர்பாட நீள்சடைக்
கொடுவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய
கொள்கையான்
படுவண்டியாழ் செய்பைம் பொழில் பழனம்சூழ்சிற்
றேமத்தான்
கடுவெங் கூற்றைக் காலினாற் காய்ந்த கடவுள்
அல்லனே.

தெளிவுரை: முழு நிலவு போன்ற முகங் கொண்ட உமாதேவி பண் இசைத்துப் பாட, நீண்ட சடையில் பிறைச் சந்திரனைச் சூடி நடம் புரிதலையுடைய ஈசன், பைம்பொழிலும் வயலும் சூழ்ந்த சிற்றேமத்தில் வீற்றிருப்பவர். அப்பெருமான், கொடிய காலனைக் காலால் உதைத்து அழித்த கடவுள் அல்லவா!

Koviloor Digital Library

447. கதிரார்திங்கள் வாள்முக மாதர்பாடக் கண்ணுதல்
முதிரார்திங்கள் சூடியோர் ஆடல்மேய முக்கணன்
எதிரார்புனலம் புன்சடை எழிலாரும் சிற்றேமத்தான்
அதிரார் பைங்கண் ஏறுடை ஆதிமூர்த்தி அல்லனே.

தெளிவுரை: கதிர்கள் வீசி விளங்கும் சந்திரனைப் போன்ற முகங் கொண்ட உமாதேவியார் பண் இசைத்துப் பாட, நெற்றிக் கண்ணுடைய ஈசன், இளம் பிறைச் சந்திரனைச் சூடி, ஆடலை மேவுகின்ற முக் கண்ணன் ஆவார். அவர், கங்கையும் சடை முடியும் கொண்டவராய் எழில் திகழும் சிற்றேமத்தில் வீற்றிருப்பவர். அப்பெருமான், இடபத்தை வாகனமாக உடைய ஆதிமூர்த்தி அல்லவா!

448. வானார்திங்கள் வாள்முகமாதர்பாட வார்சடைக்
கூனார்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
தேனார்வண்டு பண்செயும் திருவாரும்சிற் றேமத்தான்
மானார்விழிநன் மாதொடும் மகிழ்ந்த மைந்தன்
அல்லனே.

தெளிவுரை: வானில் விளங்குகின்ற சந்திரனைப் போன்ற ஒளி திகழும் முகம் உடைய உமாதேவியார் பண் இசைத்துப் பாட, நீண்ட சடைமுடியில் வளைந்த பிறைச் சந்திரனைச் சூடித் திருக்கூத்து மேவும் ஈசன், செல்வம் மிகுந்த சிற்றேமத்தில் வீற்றிருப்பவர். அப்பெருமான் மான் போன்ற விழியாளாகிய மாதொடு மகிழ்ந்து மேவும் மைந்தன் அல்லவா!

சிறப்புரை: சிவபெருமான் உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குதலும், திருமேனியின்கண் ஒரு கூறாகக் கொண்டு அர்த்தநாரி திருக்கோலத்தில் காட்சி நல்குதலும் ஆகிய பாங்கு இவண் உணர்த்தப் பெற்றது. முன்னர், உமாதேவி பாட நடனம் ஆடிய

Koviloor Digital Library

ஈசன் சிற்றேமத்தில் உமையொரு பாகனாக விளங்குபவர் எனக் கொள்க.

449. பனிவெண்திங்கள் வாள்முக மாதர்பாடப் பல்சடைக்
குனிவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய கொள்கையான்
தனிவெள்விடையன் புள்ளினத் தாமம் சூழ்சிற்றேமத்தான்
முனிவும் மூப்பும் நீக்கிய முக்கண்மூர்த்தி அல்லனே.

தெளிவுரை: குளிர்ச்சியான வெண் திங்களைப் போன்ற முகம் கொண்டு மேவும் உமாதேவியார் பண் இசைத்துப் பாட பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடி ஆடல் மேவும் ஈசன், ஒற்றை இடபத்தை வாகன மாக உடையவராய்ப் பறவை இனங்களும் நறுமண மலர்களும் சூழ்ந்து விளங்கும் சிற்றேமத்தில் வீற்றிருப் பவர். அப்பெருமான், விருப்பும் வெறுப்பும் அற்றவரா யும் மூப்பினை அடையப் பெறாத வண்ணம் உடைய வராயும் மேவும், முக்கண் மூர்த்தி அல்லவா!

சிறப்புரை: ஈசனுக்கு மூப்பு இல்லை என உணர்த்திப் பிறப்பும் இல்லை என விளக்கம் தரப் பெற்றது. ஈசனுக்கு மூப்பும் பிறப்பும் இல்லை என்னும் தன்மை, சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை
சேர்ப்பது காட்டகத்தூரினுமாகச் சிந்திக்கின் அல்லால்
காப்பது வேள்விக் குடிதண்துருத்தி எங்கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம் அறிந்தோமேல் நாம்இவர்க்கு ஆட்படோமே

என அருளிச் செய்ததும் நோக்கு.

தாமம் – மலர் மாலை.

Koviloor Digital Library

450. கிளரும்திங்கள் வாள்முக மாதர்பாடக் கேடிலா
வளரும்திங்கள் சூடியோர் ஆடல்மேய மாதவன்
தளிருங்கொம்பு மதுவுமார் தாமஞ்சூழ்சிற் றேமத்தான்
ஒளிரும்வெண் ணூல் மார்பன்என் உள்ளத்துள்ளான்
அல்லனே.

தெளிவுரை: கிளர்ந்து எழுந்து நிறைவடைந்த சந்திரனைப் போன்ற ஒளி திகழும் முகம் கொண்டு மேவும் உமாதேவியார் பண் இசைத்துப் பாட, குறைவிலாத தன்மையில் வளரும் பாங்குடைய பிறைச் சந்திரனைச் சூடி, ஆடலை மேவும் பெருந்தவத் தினராகிய ஈசன், தளிரும் காம்புகளும் தேன் துளிர்க்கும் மலர் மாலைகளும் சூழ விளங்கும் சிற்றே மத்தில் வீற்றிருப்பவர். அப் பரமன் ஒளிர் விடுகின்ற முப்புரி நூலை அணிந்து மேவும் திருமார்பினராய், என் உள்ளத்தில் இருப்பவர் அல்லவா!

சிறப்புரை: திருஞானசம்பந்தர் ஞானப்பால் அருந்தித் திருப்பாடல்களை அருளிச் செய்த ஞான்று, "பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே" என மகுடம் கொண்டு நிறைவு செய்யும் தன்மையில், அவர் ஈசனைக் கண்டு மகிழும் பெற்றியினை உரைப்பதும்; அதில், அவர்தம் உள்ளங் கவர்ந்த கள்வனாகிய பெருமானின் அருட்காட்சியை வியந்து, இத்திருப் பாட்டின் வழியாக, "என் உள்ளத்துள்ளான் அல்லனே!" என ஓதி அருளிச் செய்தலும் ஆயிற்று.

கேடிலாவளரும் திங்கள் – தக்கனின் சாபம் பெற்ற சந்திரன், ஈசனின் திருவருளால் வளர்ந்து பொலியும் திங்களாயிற்று என உணர்த்தப்பட்டது.

451. சூழ்ந்ததிங்கள் வாள்முக மாதர்பாடச் சூழ்சடைப்
போழ்ந்ததிங்கள் சூடியோர்ஆடல்மேய புண்ணியன்

Koviloor Digital Library

தாழ்ந்தவயற்சிற் றேமத்தான் தடவரையைத்தன்
தாளினால்
ஆழ்ந்த அரக்கன் ஒல்கஅன்று அடர்த்தஅண்ணல்
அல்லனே.

தெளிவுரை: திங்களைப் போன்ற ஒளி மிக்க முகம் கொண்டு திகழும் உமாதேவியார் பண் இசைத்துப் பாட, சடை முடியில் பிறைச் சந்திரனைச் சூடி, ஆடல் புரியும் புண்ணிய மூர்த்தியாகிய சிவபெருமான், வயல் வளம் நிறைந்த சிற்றேமத்தில் வீற்றிருப்பவர். அப்பெருமான், கயிலையாகிய பெரிய மலையைத் தன் திருப்பாத விரலால் ஊன்றி இராவணன் நலியுமாறு அடர்த்தியவர் அல்லவா!

452. தனிவெண்திங்கள் வாள்முக மாதர்பாடத் தாழ்சடைத்
துணிவெண்திங்கள் சூடியோர் ஆடல்மேய
தொன்மையான்
அணிவண்ணச்சிற் றேமத்தான் அலர்மேல்
அந்தணாளனும்
மணிவண்ணனுமுன் காண்கிலா மழுவாட்செல்வன்
அல்லனே.

தெளிவுரை: தனிப் பெருமை உடைய வெண் திங்கள் போன்ற ஒளி திகழும் முகப்பொலிவு உடைய உமாதேவியார், பண் இசைத்துப் பாட, தாழ்ந்து விளங்கும் சடையின்கண் பிறைச் சந்திரனைச் சூடி, ஆடல் மேவும் தொன்மையராகிய ஈசன், அழகு பொருந்தியவண்ணம் திகழும் சிற்றேமத்தில் வீற்றிருப்பவர். அப் பெருமான், பிரமனும் திருமாலும் காண முடியாதவாறு மழுப்படை ஏந்தி விளங்குகின்ற செல்வன் அல்லவா!

சிறப்புரை: முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாக விளங்கும் ஈசன், தொன்மை

Koviloor Digital Library

உடையவர் எனப் போற்றப்பட்டது. இத்தன்மையில், "பரமன் காண்க பழையோன் காண்க," "சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க", "சூலமும் தொக்க வளையும் உடைத் தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ" என மணிவாசகப் பெருமான் ஈசனின் தொன்மைச் சிறப்பினை அருளிச் செய்த பாங்கும் நோக்குக.

துணிவெண்திங்கள் – பிறைச்சந்திரன்.

453. வெள்ளைத்திங்கள் வாள்முக மாதர்பாட வீழ்சடைப்
பிள்ளைத்திங்கள் சூடியோர் ஆடல்மேய பிஞ்ஞகன்
உள்ளத்தாற்சிற் றேமத்தான் உருவார்புத்தர் ஒப்பிலாக்
கள்ளத்தாரைத் தானாக்கியுட் கரந்துவைத்தான்
அல்லனே.

தெளிவுரை: வெண்திங்கள் போன்று ஒளி திகழும் திருமுகப் பொலிவுடைய உமாதேவியார் பண் இசைத்துப் பாட, சடை முடியில் பிறைச் சந்திரனைச் சூடி, ஆடல் மேய ஈசன், விழைவுடன் வீற்றிருப்பது சிற்றேமம் ஆகும். அப்பெருமான், பௌத்தர் சமணர் ஆகியோரைப் படைத்தும், அவர்க்குத் தோன்றாத வராய் ஆங்கு மறைந்து விளங்குபவர் அல்லவா!

சிறப்புரை: இத் திருப்பதிகத்தில், சிற்றேமத்தில் மேவும் ஈசன், சிற்றேமத்தான் என ஓதியருளிச் செய்யப் பெற்றது. ஈசன் மன்னுயிர்களைப் படைத்து, மதியும் (அறிவு) மாயமும் ஆக்கும் தன்மையன் என்னும் பாங்கில், "கள்ளத்தாரைத் தான் ஆக்கி உள்கரந்து வைத்தான்" என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

Koviloor Digital Library

மாயமாய மனங்கெடுப் பானை
மனத்துளே மதியாய் இருப்பானைக்
காய மாயமும் ஆக்குவிப் பானைக்
காற்றுமாய்க் கனலாய்க் கழிப்பானை
ஒயுமாறு உறுநோய் புணர்ப் பானை
ஒல்லை வல்வினைகள்கெடுப் பானை
வேய்கொள் தோள்உமை பாகனை நீடூர்
வேந்தனைப் பணி யாவிடலாமே

என அருளிச் செய்த செம்மையும் காண்க.

இது, "அவனருளாலே அவன்தாள் வணங்கும்" நெறியின் வயப்பட்டதாதலை உணர்த்தும் எனக் கொள்க.

பிள்ளைத் திங்கள் – பிறைச் சந்திரன்.

454. கல்லில் ஓதமல்குதண் கானல்சூழ்ந்த காழியான்
நல்லவாய இன்தமிழ் நவிலுஞான சம்பந்தன்
செல்வ னூர்சிற் றேமத்தைப் பாடல்சீரார் நாவினால்
வல்லராகி வாழ்த்துவார் அல்லல்இன்றி வாழ்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கற்களால் ஆகிய மதிலில் கடலலையின் ஓதம் விளங்கும் காழி நகரில், நல்லவை நவிலும் இனிய தமிழ் வல்ல ஞானசம்பந்தன், செல்வனாகிய ஈசன் வீற்றிருக்கும் சிற்றேமம் என்னும் தலத்தை, இத்திருப் பதிகத்தை, நாவினால் ஓதவல்லவர்கள் துன்பம் அற்று வாழ்வார்கள்.

சிறப்புரை: மனம், மொழி, மெய்களாகிய திரிகரண சுத்தியுடன் ஓதப் பெறுதல், "நாவினால் வல்லராகி வாழ்த்துவார்" எனச் சுட்டப் பெற்றது.

Koviloor Digital Library

301. சீகாழி

தல விளக்கம்: *பதிகம் எண் 260 காண்க.*

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

455. சந்த மார்முலை யாள்தன கூறனார்
வெந்த வெண்பொடி ஆடிய மெய்யனார்
கந்த மார்பொழில் சூழ்தரு காழியுள்
எந்தை யார்அடி என்மனத்து உள்ளவே.

தெளிவுரை: *நறுமணம் கமழும் வனப்புடைய உமாதேவியாரை ஒரு கூறாக உடைய ஈசன், திருவெண்ணீற்றைத் திருமேனியில் குழையப் பூசிக் காழிப் பதியில் மேவும் எம் தந்தையாவார். அவருடைய திருவடிகள் என்னுடைய மனத்தில் நன்கு பதிந்துள்ளன.*

சிறப்புரை: *ஈசனுடைய திருவடிகள் பரஞானம் அபர ஞானம் எனப் போற்றப்படுதலும், அவற்றைத் திருஞானசம்பந்தர் நன்கு கைவரப் பெற்றுள்ள பாங்கும் இவண் குறிப்பால் உணர்த்துதலாயிற்று. ஈசனை மனத்தில் பதித்து மேவும் ஆளுடைய பிள்ளையாரின் மாண்பும் சுட்டப் பெறுதலாயிற்று. இந்நெறியில், திருநாவுக்கரசர், "தில்லை அம்பலத்து ஆடியபாதம் என் நெஞ்சுள் இருக்கவே" என அருளிச் செய்து திருவடியை நெஞ்சில் இருத்தியமையும் நோக்குக.*

456. மானி டம்உடை யார்வளர் செஞ்சடைத்
தேநி டங்கொளும் கொன்றையந் தாரினார்

Koviloor Digital Library

கானி டங்கொளும் தண்வயற் காழியார்
ஊனி டங்கொண்டேன் உச்சியில் நிற்பரே.

தெளிவுரை: *மானைக் கரத்தில் ஏந்திய ஈசன், சிவந்த சடை முடியின் மீது, தேன் துளிர்க்கும் கொன்றை மாலையைத் தரித்து விளங்குபவர், மயானத்தில் இருந்து ஆடுகின்ற, வயல்சூழ் காழியில் மேவும் அப்பெருமான், என் உடலின்கண் விளங்கி உயர்ந்த தன்மையில் ஓங்கி இருப்பவர் ஆவார்.*

சிறப்புரை: *உடலின்கண் உயிர் விளங்குதல் போன்று, உயிரை உடலாகக் கொண்டு ஈசன் விளங்குகின்றார் என்பது, "ஊன் இடங் கொண்டேன் உச்சியில் நிற்பர்" என ஓதப் பெறுவதாயிற்று. இந்நெறியில்,*

சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான் இதற்கு இலன்ஓர் கைம்மாறே.

—கோயில் திருப்பதிகம் 10

என மாணிக்கவாசகர் அருளிச் செய்த பாங்கும் ஓர்க.

உள்கும் அடியவர் தம் மனத்தில் உச்சமாய் விளங்கும் ஈசனின் தன்மையினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

உரைப்பார் உரைஉகந்து உள்கவல் லார்தங்கள் உச்சியாய்
அரைக்குஆடரவா ஆதியும்அந்தமும் ஆயினாய்
புரைக்காடு சோலைப் புக்கொளியூர் அவி நாசியே
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச்சொல்லு காலனையே

என அருளிச் செய்தமையும் காண்க.

உச்சி – உயர்வு.

Koviloor Digital Library

457. மைகொள் கண்டத்தர் வான்மதிச் சென்னியர்
பைகொள் வாளரவுஆட்டும் படிறனார்
கைகொள் மான்மறி யார்கடற் காழியுள்
ஐயன்அந் தணர்போற்ற இருக்குமே.

தெளிவுரை: தேவர்களுடைய வேண்டுகோளுக்கு இரங்கி, மை போன்ற கரிய நஞ்சினை அருந்தி நீல கண்டராகிய சிவபெருமான், வானில் விளங்குகின்ற சந்திரனைச் சடை முடியில் சூடிப் படம் கொண்டு ஆடுகின்ற அரவத்தைத் தரித்து ஆட்டுகின்ற சதுரப் பாடு உடையவர். அப்பெருமான், இளமை பொருந்திய மானைக் கரத்தில் ஏந்திக் காழிப் பதியில் மேவும் தலைவராய், அந்தணர்கள் போற்ற வீற்றிருப்பவர்.

படிறர் – உண்மைக் காரணத்தைப் பிறர் அறிந்து கொள்ள முடியாதவாறும், பார்ப்பதற்கு வஞ்சனை உடையதாகத் தோற்றம் கொள்ளுமாறும் ஆற்றும் ஈசனின் செயலை உணர்த்தியது.

458. புற்றின் நாகமும் பூளையும் வன்னியும்
கற்றை வார்சடை வைத்தவர் காழியுள்
பொற்றொடி யோடுஇருந் தவர்பொற் கழல்
உற்ற போதுடன் ஏத்தி உணருமே.

தெளிவுரை: பாம்பு, பூக்கள், வன்னிப் பத்திரம் ஆகிய வற்றை நீண்டு விளங்கும் சடை முடியில் வைத்த சிவபெருமான், காழியில் உமாதேவியாரை உடனாகக் கொண்டு வீற்றிருப்பவர். அப் பெருமானுடைய பொன் போன்ற சிறப்புடைய கழலை, அதற்கு உரிய மலர்களால் தூவிப் போற்றி வழிபட்டும், தியானம் செய்தும் நல்லருள் பாங்கினை உணர்ந்து கொள்வீராக.

சிறப்புரை: இத் திருப்பாட்டில், ஈசனைத் திரிகரணங் களால் ஏத்தி வழிபடுதல் உணர்த்தப் பெற்றது. ஈசனைப் போற்றி வழிபடுவதற்கு உரிய சிறந்த மலர்

Koviloor Digital Library

களாகிய அட்ட புஷ்பங்கள் எனப்படும் புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற் பலம், பாதிரி, அலரி, செந்தாமரை ஆகியவற்றால் அருச்சித்தலும்; மற்றும் மூவிதழ் பத்திரமாகிய வில்வத்தால் ஏத்துதலும், காயத்தால் செய்யப்படும் வழிபாடு – காயிகம் எனவும்; அர நாமத்தை ஓதி வாக்கினால் செய்யப்படும் வழிபாடு – வாசிகம் எனவும்; மனத்தை அடக்கித் தியானித்தல் மானசம் எனவும் காண்க. இத் தன்மையில் ஆற்றும் வழிபாட்டால் ஈசனை உணர்ந்தறியும் ஆற்றல் எழும் என உணர்த்தப் பெற்றது.

பூளை – மென் மலர்; போதுடன் ஏத்தி – மலரால் ஏத்தி.

459. நலியும் குற்றமும் நம்முடல் நோய்வினை
மெலியு மாறது வேண்டுதி ரேல்வெய்ய
கலிக டிந்தகை யார்கடற் காழியுள்
அலைகொள் செஞ்சடை யார்அடி போற்றுமே.

தெளிவுரை: மனத்தின்வழி உண்டாகும் குற்றமும், உடலின்கண் நேரும் பிணியும், நம்மை வருத்தாது விலக வேண்டுமாயின், வேள்வி புரிந்து துன்பத்தை நீக்கவல்ல அந்தணர்கள் விளங்கும், காழியில் வீற்றிருக்கும் கங்கை தரித்த செஞ்சடை உடைய சிவபெருமான் திருவடியைப் போற்றுக.

சிறப்புரை: துன்பத்தை வராமல் தடுத்துக் காப்பது வேள்வி புரிதல் ஆகும் என்பது, இத் திருப்பாட்டில், "கலி கடிந்த கையார்" என்று உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், "கற்று ஆங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை" என ஞானசம்பந்தப் பெருமான் அருளிச் செய்துள்ள மையும் கொள்க.

வெய்ய கலி – உலகில் நேரும் துன்பம்.

Koviloor Digital Library

460. பெண்ணொர் கூறினர் பேயுடன் ஆடுவர்
பண்ணும் ஏத்திசை பாடிய வேடத்தர்
கண்ணு மூன்றுடை யார்கடற் காழியுள்
அண்ண லாயஅடிகள் சரிதையே.

தெளிவுரை: ஈசன், உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; பேய்க் கணங்கள் சூழ நின்று ஆடுபவர்; பண்ணுடன் பொருந்திய பாடல்களைப் பாடும் திருவேடத்தைக் கொண்டவர்; மூன்று கண்களை உடையவர். இவை யாவும் காழியில் வீற்றிருக்கும் அண்ணலாகிய அப்பெருமானின் புகழ் விளங்கும் தன்மையதாகும்.

சிறப்புரை: தாருகவனத்தில் மேவும் முனிபத்தினியர் பால், கபாலம் ஏந்தியவராய்ப் பலி ஏற்றஞான்று தாங்கிய திருக்கோலம், "வேடத்தர்" என்று சிறப்பிக்கப் பெற்றது. சூரியன் வலக் கண்ணாகவும், சந்திரன் இடக் கண்ணாகவும், அக்கினி நெற்றிக் கண்ணாகவும் ஈசனுக்கு விளங்குதல், கண்ணு மூன்றுடையார் எனச் சுட்டப் பெற்றது.

சரிதை – புகழ்ச் செயல், திருவிளையாடல்கள்.

461. பற்று மானும்மழுவும் அழகுற
முற்றும் ஊர்திரிந்து பலி முன்னுவர்
கற்ற மாநன் மறையவர் காழியுள்
பெற்றம் ஏறது உகந்தார் பெருமையே.

தெளிவுரை: திருக்கரத்தில் பற்றி மேவும் மானும் மழுவும் அழகுற விளங்க, ஊர்தொறும் திரிந்து பலி ஏற்க விழையும் ஈசன், வேதங்களை நன்கு கற்றுத் தேர்ந்த மறையவர்கள் விளங்குகின்ற காழிப்பதியில்,

Koviloor Digital Library

இடப வாகனத்தில் உகந்து அமர்ந்திருப்பவர். இது அப் பெருமானுக்குரிய பெருமை ஆகும்.

462. எடுத்த வல்லரக் கன்முடி தோளிற
அடர்த்து உகந்தருள் செய்தவர் காழியுள்
கொடித்த யங்குநற் கோயிலுள் இன்புற
இடத்து மாதொடு தாமும் இருப்பரே.

தெளிவுரை: கயிலை மலையைப் பெயர்த் தெடுத்த இராவணனுடைய முடியும் தோளும் நெரியுமாறு அடர்த்தி அருளும் செய்த சிவபெருமான், வண்ணக் கொடிகளும் தோரணங்களும் விளங்குகின்ற காழியின் திருக்கோயிலில் உமாதேவியை உடனாகக் கொண்டு இன்புற வீற்றிருப்பவர் ஆவார்.

463. காலன் தன்னுயிர் வீட்டு கழலடி
மாலும் நான்முகன் றானும் வனப்புற
ஓல மிட்டுமுன் தேடி உணர்கிலாச்
சீலம் கொண்டவன் ஊர்திகழ் காழியே.

தெளிவுரை: காலனின் உயிரை வீழ்த்திய ஈசனின் திரு வடியைத் திருமாலும் நான்முகனும் வனப்புறும் தோற்றத்தினராய்த் தேடியும் காணாதவர் ஆயினர். அத்தகைய சிறப்புடைய சிவபெருமான் வீற்றிருக்கும் ஊரானது, பெருமையுடன் திகழும் காழியாகும்.

வீட்டு – வீழ்த்துதல்.

464. உருவ நீத்தவர் தாமும் உறுதுவர்
தருவல் ஆடையி னாரும் தகவிலர்
கருமம் வேண்டுதி ரேற்கடற் காழியுள்
ஒருவன் சேவடி யேஅடைந்து உய்ம்மினே.

தெளிவுரை: ஆடைகளைப் புறக்கணித்தும் சேர்த்தும் விளங்கும் சமணரும் சாக்கியரும் தகைமையற்றவர்கள்.

Koviloor Digital Library

உமக்கு நல்ல செயல் கை கூடுதல் வேண்டுமானால், காழியுள் வீற்றிருக்கும் சிவபெருமானின் திருவடியை அடைந்து, வழிபட்டு உய்தி பெறுமின்.

ஒருவன் – சிவன்; மற்றும் பாட்டு வ. எண் 433 சிறப்புரை காண்க.

465. கானல் வந்துல வும்கடற் காழியுள்
ஈனம்இல்லி இணையடி ஏத்திடும்
ஞான சம்பந்தன் சொல்லிய நற்றமிழ்
மானம் ஆக்கும் மகிழ்ந்துரை செய்யவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கடற்கரைச் சோலையின் குளிர்க் காற்று வீசும் காழியுள், எத்தன்மையான குறையும் இல்லாத பரம் பொருளாகிய ஈசன் வீற்றிருக்க, அப்பெருமானின் திருவடியை ஏத்திடும் ஞானசம்பந்தன் சொல்லிய இத் திருப்பதிகமானது பெருமை உடையதாகும். இதனை மகிழ்ந்து உரைப்பீராக.

சிறப்புரை: மன்னுயிர்க்கு இனிமை சேர்க்கும் இத்திருப் பதிகமானது நற்றமிழ் எனப் போற்றப்படுவதாயிற்று.

302. திருக்கழிப்பாலை

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலங்கள் 63இல், இது 4ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. வால்மீகி முனிவர் வழிபட்டது. மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 157 காண்க.

சுவாமி : பால்வண்ணநாதர்

அம்பிகை : வேதநாயகி

தல மரம் : வில்வம்

Koviloor Digital Library

LIBRARY, KOVI... A. No. 17661

தீர்த்தம் : கொள்ளிடம்

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

466. வெந்த குங்கி லியப்புகை விம்மவே
கந்த நின்றுல வும்கழிப் பாலையார்
அந்த மும்அள வும்அறி யாததோர்
சந்த மாலவர் மேவிய சாந்தமே.

தெளிவுரை: *குங்கிலியப் புகையின் நறுமணம் பெருகும் கழிப்பாலையில் வீற்றிருக்கும் ஈசன், அந்தம் இல்லாதவர்; அளவிட்டுச் சொல்ல முடியாத பண்பினர்; அப் பெருமானின் சிறப்பு அவர் மேவும் சாந்தமேயாகும்.*

467. வான் இலங்க விளங்கும் இளம்பிறை
தான் அலங்கல் உகந்த தலைவனார்
கான் இலங்க வரும்கழிப் பாலையார்
மான லம்மட நோக்குடை யாளொடே.

தெளிவுரை: *வானத்தில் விளங்குகின்ற இளம் பிறைச் சந்திரனை மாலையாக விரும்பிய, என்னுடைய தலைவனாகிய சிவபெருமான், கடற்கரைச் சோலை திகழ மேவும் கழிப்பாலையில் வீற்றிருப்பவர். அப்பெருமான், மன்னுயிர்களுக்குச் சிறப்பான நலங்களை ஆற்றும் நோக்குடைய உமாதேவியாரோடு எஞ்ஞான்றும் பொருந்தி இருப்பவர்.*

சிறப்புரை: *ஈசன் உமாதேவியாரோடு எஞ்ஞான்றும் பொருந்தி இருத்தல், "மானலம் மட நோக்குடையாளொடு" என்று உணர்த்துவதாயிற்று. ஈசன் உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குதல், மன்னுயிர்க்குச் சிறப்பான நலத்தை நல்குதல்*

Koviloor Digital Library

பொருட்டாதலை "மானலம்" எனவும் கொள்க. இந் நெறியில், "உலகறியத் தீவேளாது ஒழிந்தனனேல் உலகனைத்தும் கலை நவின்று பொருள்கள் எல்லாம் கலங்கிடுங் காண் சாழலோ" என மாணிக்கவாசகர், ஈசன் உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்கும் காரணத்தை உரைத்தருளிய மாண்பும் காண்க.

மானலம் என்பதனை, மான் நலம் எனவும், மால் நலம் எனவும் விரித்துக் கொள்ளப் பெறும்.

468. கொடிகொள் ஏற்றினர் கூற்றை உதைத்தனர்
பொடிகொள் மார்பினிற் பூண்டதோர் ஆமையர்
கடிகொள் பூம்பொழில் சூழ்கழிப் பாலையுள்
அடிகள் செய்வன ஆர்க்குஅறி வொண்ணுமே.

தெளிவுரை: ஈசன், இடபத்தைப் பொறித்த கொடியை உடையவர்; கூற்றுவனை உதைத்தவர்; திருநீறு அணிந்து மார்பில் ஆமையின் ஓட்டினை ஆபரணமாகப் பூண்டு விளங்குபவர்; அப்பெருமான், மணம் கமழும் பொழில் சூழ்ந்த கழிப் பாலையில் வீற்றிருக்கும் அடிகள் ஆவார். அவர் புரியும் திருவிளை யாடலை யார்தான் அறிந்து கொள்ள முடியும்.

சிறப்புரை: ஈசனின் திருவிளையாடல் யாராலும் உணர்ந்து கொள்ள முடியாது என உணர்த்தப் பெற்றது.

469. பண்ணலம்பட வண்டறை கொன்றையின்
தண்ணலங்கல் உகந்த தலைவனார்
கண்ண லங்கவ ருங்கழிப் பாலையுள்
அண்ணல் எம்கடவுள் அவன் அல்லனே.

தெளிவுரை: பண்ணின் நலத்தினோடு வண்டு இசை பாடும் கொன்றை மலரின் குளிர்ச்சி மிக்க மாலையை

Koviloor Digital Library

உகந்து அணிந்த தலைவனாகிய ஈசன், கண்களுக்கு இனிய நலத்தை வழங்கும் எழில் மிகுந்த கழிப் பாலையில் வீற்றிருக்கின்ற அண்ணல் ஆவார். அவர் எமது கடவுள் அல்லவா!

470. ஏரினாருல கத்திமை யோரொடும்
பாரி னாருட னேபர வப்படும்
காரி னார்பொழில் சூழ்கழிப் பாலையெம்
சீரி னார்கழ லேசிந்தை செய்ம்மினே.

தெளிவுரை: சிறப்போடு திகழும் விண்ணுலகத்தில் உள்ள தேவர்கள், இப்பூவுலகத்தில் விளங்கும் மாந்தர் களுடன் சேர்ந்து பரவிப் போற்றப்படுகின்ற, மேகம் தவழும் பொழில் சூழும் கழிப்பாலையில் விளங்கும் ஈசனின் செம்மை மிகும் திருக்கழலைத் தியானம் செய்வீராக.

சிறப்புரை: போக பூமியாகிய விண்ணுலகத்தவர், தமது சிறப்பினைக் காத்துக் கொள்ளவும், கர்மபூமியாகிய இம் மண்ணுலகத்தவர் தீய வினையிலிருந்து விடுதலை பெறவும், ஈசனைப் பரவிப் போற்றுகின்ற பாங்கு குறிப்பால் உணர்த்தப் பெற்றது. இது காயத்தால் செய்யும் வழிபாடு ஆகும்.

ஈசனைத் தியானம் செய்து மனத்தைப் புனித மாக்கும் செயல் மானச வழிபாட்டு முறையினில் "சிந்தை செய்ம்மினே" என ஓதப் பெற்றது. இந்நெறியில், "ஒன்றி இருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனம் இல்லைக் கன்றிய காலனைக் காலாற் கடிந்தான் அடி அவற்காச் சென்று தொழுமின்கள் தில்லையுட் சிற்றம் பலத்து நட்டம், என்று வந்தாய்! என்னும் எம் பெருமான்றன் திருக்குறிப்பே" (நாலாம் திருமுறை பா.

Koviloor Digital Library

எண் 781) எனத் திருநாவுக்கரசர், ஈசன் திருக்கழலை ஒன்றிய மனத்தொடு வழிபடும் செம்மையினை அருளிச் செய்தவாறும் காண்க.

ஈசனை வணங்குதல், ஊனமாகிய பிறவிப் பிணியை நீக்கும் என ஓர்க.

471. துள்ளு மான்மறி அங்கையில் ஏந்தியூர்
கொள்வ னாரிடு வெண்தலை யிற்பலி
கள்வ னார்உறை யும்கழிப் பாலையை
உள்ளு வார்வினை யாயின ஓயுமே.

தெளிவுரை: *துள்ளுகின்ற இளமையான மானை, அழகிய கையில் ஏந்தி, ஊர்தொறும் திரிந்து, பிரம கபாலத்தில் பிச்சை ஏற்கும் ஈசன், அன்பர்களின் மனத்தைக் கொள்ளை கொள்ளும் கள்வராய் உறையும் கழிப்பாலையை, நினைத்து ஏத்துக. வினை யாவும் விலகும்.*

சிறப்புரை: *இது ஈசன் விளங்குகின்ற தலத்தின் சிறப்பினையும் அருள் தன்மையினையும் உணர்த்துவதாயிற்று.*

472. மண்ணி னார்மலி செல்வமும் வானமும்
எண்ணி நீர்இனிது ஏத்துமின் பாகமும்
பெண்ணி னார்பிறை நெற்றியொடு உற்றமுக்
கண்ணி னார்உறை யும்கழிப் பாலையே.

தெளிவுரை: *இப் பூவுலகத்தில் மேவும் செல்வச் செழிப்பும், வானுலகத்தின்கண் மறுமையில் கொள்ளும் செல்வமும் எண்ணி, உமாதேவியாரை ஒரு பாகமாகக் கொண்டு, பிறைச் சந்திரனைச் சடை முடியில் சூடிய, மூன்று கண்ணுடைய ஈசன், உறையும் கழிப்பாலையை, ஏத்தி நீவிர் வணங்குவீராக.*

Koviloor Digital Library

சிறப்புரை: இவ்வுலகில் மலிந்து மேவும் செல்வமும் மற்றும் வான் முதலாக உள்ள அனைத்தும் ஈசனால் படைக்கப் பெற்றவை. இதன் வழி, அடித்தளமாக உள்ள மண் முதல், வான் என்னும் எல்லை ஈறாக யாவற்றுக்கும் உரியவன் ஈசனே என்னும் மெய்ம்மை உணர்த்தப் பெற்றது. யாவற்றுக்கும் முதல்வனாகிய ஈசனை வணங்கி ஏத்துதல் மன்னுயிர்களின் கடனாகும். ஈசனே இவ்வுலகமாய் மேவும் தன்மையை,

உலகெலாம் ஆகி வேறாய் உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கெய்தல்
இன்றித்தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காது எங்கும்

என வரும் சிவஞான சித்தியார் (பாடல் 91) வாயிலாக உரைத்தருளியது காண்க. அத்தகைய ஈசனை வணங்குதல் கடன் என ஓதுதலாயிற்று.

473. இலங்கை மன்னனை ஈரைந்து இரட்டிதோள்
துலங்க ஊன்றிய தூமழு வாளினார்
கலங்கள் வந்துல வும்கழிப் பாலையை
வலங்கொள் வார்வினை யாயின மாயுமே.

தெளிவுரை: இராவணனுடைய இருபது தோள்களும் நன்கு அழுந்துமாறு ஊன்றிய, தூய்மையான மழுப்படையுடைய ஈசன், கப்பல்கள் வந்து உலவும் கடல் துறையில் மேவும் கழிப்பாலை என்னும் தலத்தில் வீற்றிருப்பவர். அப் பெருமான் விளங்கும் இத் தலத்தை வலம் வருபவர்களின் வினை யாவும் விலகிச் செல்லும்.

Koviloor Digital Library

சிறப்புரை: இத் திருப்பாட்டு, இத் தலத்தின் சிறப்பினையும் அதனை வழிபடும் நெறியில் நகர் வலம் வரும் மாண்பினையும் உணர்த்துவதாயிற்று.

ஈரைந்து இரட்டி – இருபது.

474. ஆட்சி யால்அல ராணொடு மாலுமாய்த்
தாட்சியால் அறியாது தளர்ந்தனர்
காட்சி யால்அறி யான்கழிப் பாலையை
மாட்சி யால்தொழு வார்வினை மாயுமே.

தெளிவுரை: *படைத்தல் தொழிலும் காத்தல் தொழிலும் கொண்டு விளங்கும் உரிமை பூண்டவர்களாகிய பிரமனும் திருமாலும், தற்பெருமை கொண்ட தாழ்மையால், முறையே ஈசனின் திருமுடியையும். திருவடியையும் காண முடியாது தளர்ந்தனர். அப் பெருமான் வீற்றிருக்கும் கழிப்பாலையை மனம் ஒன்றுமாறு ஏத்தி வழிபடுவீராக. அது வினையை மாயச் செய்யும்.*

ஆட்சி – திருமாலும் பிரமனும் தொழிலால் பெற்ற பதவியின் சிறப்பு.
தாட்சி – தாழ்ச்சி.

475. செய்ய நுண்துவர் ஆடையி னாரொடு
மெய்யின் மாசு பிறக்கிய வீறிலாக்
கையர் கேண்மை யெனோ கழிப் பாலைஎம்
ஐயன் சேவடி யேஅடைந்து உய்ம்மினே.

தெளிவுரை: *சிவந்த துவராடையுடைய சாக்கியரும், மற்றும் சமணரும் சிறப்பினை நல்காத நெறியில் இருக்க, நீவிர் கழிப்பாலையில் வீற்றிருக்கின்ற எம் தலைவனாகிய ஈசனின் திருவடியை அடைந்து, உய்தி பெறுவீராக.*

வீறு – சிறப்பு, சாரம்.

Koviloor Digital Library

476. அந்தண் காழி அருமறை ஞானசம்
பந்தன் பாய்புனல் சூழ்கழிப் பாலையைச்
சிந்தை யாற்சொன்ன செந்தமிழ் வல்லவர்
முந்தி வானுலகு ஆடல் முறைமையே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *குளிர்ச்சி மிக்க அழகிய காழியில் மேவும் சிறப்பின் மிக்க மறை வல்ல ஞானசம்பந்தன், நீர் வளம் சூழ்ந்த கழிப்பாலையைச் சிந்தையால் கொண்டு சொன்ன திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், வானுலகில் முதன்மையாய் விளங்குவார்கள்.*

303. திருவாரூர்

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 87ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. பிறக்க முத்தி தரும் தலம். கமலை என்னும் பராசக்தி பூசித்த பதி. சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. மற்றும் முதல் திருமுறை பதிகம் எண் 91; இரண்டாம் திருமுறை பதிகம் எண் 215 காண்க.*

சுவாமி : *வன்மீக நாதர், புற்றிடங்கொண்டார்*

அம்பிகை : *கமலாம்பிகை, அல்லியங்கோதை, நீலோத்பலாம்பாள்*

தல மரம் : *பாதிரி*

தீர்த்தம் : *கமலாலயம், தேவதீர்த்தம், சங்கு தீர்த்தம், கயா தீர்த்தம், வாணி தீர்த்தம்*

பண் : *கௌசிகம்*

திருச்சிற்றம்பலம்

477. அந்த மாய்உலகு ஆதியும் ஆயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்

Koviloor Digital Library

சிந்தை யேபுகுந் தான்திரு வாரூர்எம்
எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொலோ.

தெளிவுரை: ஈசன், உலகின்கண் தோற்றமுறும் பிரளய காலத்தின் அந்தமாகவும், படைக்கப் பெறும் காலத்தில் ஆதியாகவும் விளங்குபவர். அப்பெருமான், திருவெண்ணீறு பூசிய வேதநாயகனாய், என் சிந்தையில் புகுந்து விளங்குபவர். அவர், திருவாரூரில் வீற்றிருக்கும் என் தந்தை. அவர் என்னை ஏற்றுக் கொள் வாரோ!

சிறப்புரை: உலகின்கண் ஆதியும் அந்தமும் ஆகும் ஈசன், தான் ஆதி அந்தம் இல்லாதவர் என்பதும் குறிப்பால் உணர்த்தியது. திருஞானசம்பந்தர், ஆளுடைய பிள்ளை யாராய் விளங்கும் சிறப்பும் சுட்டப் பெற்றது.

478. கருத்தனே கருதார்புர மூன்றுஎய்த
ஒருத்த னேஉமை யாளொரு கூறனே
திருத்த னேதிரு வாரூர்எந் தீவண்ண
அருத்த என்எனை அஞ்சல் என்னாததே.

தெளிவுரை: ஈசன், என் உள்ளத்தின் கருத்தாய் விளங்கும் பெருமான்; நின்னைச் கருதிப் போற்றாத முப்புர அசுரர்கள் எரிந்து சாம்பலாகுமாறு கணை தொடுத்தவர்; உமாதேவியாரைத் திருமேனியில் ஒரு கூறாகக் கொண்டு திகழ்பவர்; தூயவராக மேவும் பரமன்; திருவாரூரில் வீற்றிருக்கும் தீவண்ணர்; எப் பொருட்கும் விளக்க ரூபமாக மேவும் பெரும் பொருள்; என்னை அஞ்சற்க என்று மொழிவீராக.

சிறப்புரை: அருளாளர்கள் மன்னுயிரைத் தன்னுயி ராகப் பாவித்து ஏத்தும் மரபு வழி, உலக மக்கள்

Koviloor Digital Library

கொள்ளும் அச்சத்தைத் தன்பால் ஏற்று மொழியும் நெறியில் இது அமையப் பெற்றது.

479. மறையவன் மாமுனி வன்மரு வார்புரம்
இறையின் மாத்திரை யில்எரி யூட்டினான்
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்எம்
இறைவன் தான்எனை யேன்று கொளுங்கொலோ.

தெளிவுரை: *ஈசன், வேதமாகியவர்; பெரும் தவவேந்தரானவர்; பகை கொண்ட முப்புர அசுரர்கள் நொடிப் பொழுதில் எரிந்து சாம்பலாகுமாறு செய்தவர்; சிறகுகளை உடைய வண்டு ஒலிக்கும் பொழில் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருக்கும் இறைவன். அவர் என்னை அடியவனாக ஏற்றுக் கொள்வாரோ!*

இறையின் மாத்திரை – நொடிப்பொழுது.
சிறைவண்டு – சிறகுகளை உடைய வண்டு.

480. பல்லில் ஓடுகை யேந்திடப் பலிதிரிந்து
எல்லி வந்திடு காட்டெரி யாடுவான்
செல்வ மல்கிய தென்திரு வாரூரான்
அல்லல் தீர்த்துஎனை அஞ்சல் எனுங்கொலோ.

தெளிவுரை: *பிரம கபாலத்தைக் கையில் ஏந்திப் பிச்சை ஏற்றுத் திரிந்து, இரவில் சுடுகாட்டில் நடம் புரியும் ஈசன், செல்வச் செழிப்பு ஓங்கும் சிறப்புடைய திருவாரூரான். அப்பெருமான், என் துயர் தீர்த்து அஞ்சாதே என்று சொல்லி அருள்புரிவாரோ!*

பல்லில் ஓடு – பிரமனின் மண்டையோடு. கபாலம்.

481. குருந்தம் ஏறிக் கொடிவிடு மாதவி
விரிந்த லர்ந்த விரைகமழ் தேன்கொன்றை
திருந்து மாடங்கள் சூழ்திரு வாரூரான்
வருந்தும் போது எனை வாடல்எ னும்கொலோ.

Koviloor Digital Library

தெளிவுரை: குருந்த மரத்தில் ஏறிப் படர்ந்து, மாதவியும், விரிந்து மலர்ந்து நறுமணம் கமழும் கொன்றை மரங்களும் திகழ, மாட மாளிகை சூழப் பொலியும் திருவாரூரில் மேவும் ஈசன், வருத்தம் கொண்டு நலிவுற்று நான் இருக்கும் போது என்னை வருந்தாதே என்று உரைத்து அருள் புரிவாரோ!

சிறப்புரை: வருந்தி நிற்கும்போது தேற்றி ஆள்வர் கொல்லோ என்னும் தன்மையில் திருஞானசம்பந்தர் வினவிய நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

கந்தம்கமழ் கொன்றைமாலைக் கண்ணியன் விண்ணவர்
ஏத்தும்
எந்தை இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள்வரோ
கேளீர்

என வினவி அருளிய பாங்கும் காண்க.

482. வார்கொள் மென்முலை யாளொரு பாகமா
ஊர்களார் இடு பிச்சைகொள் உத்தமன்
சீர்கொள் மாடங்கள் சூழ்திரு வாரூரான்
ஆர்கணா எனை அஞ்சல் எனாததே.

தெளிவுரை: மார்பில் கச்சு அணிந்து விளங்குகின்ற உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு ஊரில் உள்ள வர்கள் இடுகின்ற பிச்சையைக் கொள்ளும் உத்தமன், சீர் மிகுந்து மேவும் மாடங்கள் சூழும் திருவாரூரான் எனப்பெறும் ஈசன். அப்பெருமான் என்னை அஞ்சாதே எனச் சொல்லாதது என்கொல்!

483. வளைக்கை மங்கைநல் லாளையோர் பாகமாத்
துளைக்கை யானை துயர்படப் போர்த்தவன்
திளைக்கும் தண்புனல் சூழ்திரு வாரூரான்
இளைக்கும் போதுஎனை ஏன்று கொளுங்கொலோ.

Koviloor Digital Library

தெளிவுரை: வளையல் அணிந்த கைகளை உடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்கும் ஈசன், தன்னை எதிர்த்து வந்த யானையானது கலங்குமாறு அடர்த்து, அதன் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டவர். அப் பரமன் குளிர்ந்த புனல் சூழ்ந்து மேவும் திருவாரூரான். அவர், இளைத்து வருந்தும் காலத்தில் என்னை ஏற்று அருள் புரிவாரோ!

484. இலங்கை மன்னன் இருபது தோளிறக்
கலங்கக் கால்விர லாற்கடைக் கண்டவன்
வலங்கொள் மாமதில் சூழ்திரு வாரூரான்
அலங்கல் தந்துஎனை அஞ்சல் எனுங்கொலோ.

தெளிவுரை: இலங்கையின் வேந்தனாகிய இராவணனுடைய இருபது தோளும் நலியுமாறு திருப்பாத விரலால் ஊன்றியவர் ஈசன். அப் பெருமான் வலிமை உடைய சிறப்பான மதில் சூழ்ந்த திருவாரூரில் வீற்றிருக்கும் பரமன். அவர், எனக்குப் பெருமை சேர்க்கும் மாலை கொண்டு அருளிச் செய்தும், வருந்தும் காலத்தில் அஞ்சாதே என்று அபயம் அளித்தும் காப்பாரோ!

485. நெடிய மாலும் பிரமனும் நேர்கிலாப்
படிய வன்பனி மாமதிச் சென்னியான்
செடிகள் நீக்கிய தென்திரு வாரூர் எம்
அடிகள் தான்எனை அஞ்சல் எனுங்கொலோ.

தெளிவுரை: திருமாலும், பிரமனும் காண முடியாத தன்மையராய்ச் சந்திரனைச் சடைமுடியின் மீது தரித்த ஈசன், மன்னுயிரின் பாவங்களை நீக்கிப் பெருமை கொள்ளும் திருவாரூரில் வீற்றிருக்கும் அடிக்ள் ஆவார். அவர் என்னை அஞ்சாதே என்று அருள் புரிவாரோ!

Koviloor Digital Library

சிறப்புரை: பிறக்க முத்தி என்னும் திருத்தலப் பெருமை, "செடிகள் நீக்கிய தென் திருவாரூர்" என உணர்த்தப் பெறுவதாயிற்று. இந்நெறியில் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த செம்மையும் காண்க.

செடிகள் – பாவங்கள்; தீவினைகள்.

486. மாசு மெய்யினர் வண்துவர் ஆடைகொள்
காசை போர்க்கும் கலதிகள் சொற்கொளேல்
தேச மல்கிய தென்திரு வாரூர்எம்
ஈசன் தான்எனை யேன்று கொளுங்கொலோ.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் கூறும் பயனற்ற சொற்களைக் கொள்ளாது, அருளொளி திகழ மேவும் பெருமை உடைய திருவாரூரில் வீற்றிருக்கும் ஈசன், என்னைத் தாங்கி நின்று அருள் புரிவாரோ!

தேசு – ஒளி; தென் – பெருமை, அழகு.

487. வன்னி கொன்றை மதியொடு கூவிளம்
சென்னிவைத்த பிரான்திரு வாரூரை
மன்னு காழியுள் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்குஇல்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: வன்னி, கொன்றை, சந்திரன், வில்வம் ஆகியவற்றைச் சடை முடியில் திகழச் சூடிய பெருமான் விளங்கும் திருவாரூரைப் பொலிவுடன் திகழும், காழிப்பதியில் மேவும் ஞானசம்பந்தன் வாய் மலர்ந்து சொன்ன இத்திருப்பாடல்களை ஓத வல்லவர் களுக்கு, பாவமானது தாமே விலகிச் செல்லும்.

Koviloor Digital Library

சிறப்புரை: வினையானது ஆன்மாவைப் பற்றி நின்று இம்மண்ணுலகின் பிறவியில் துன்புறுத்தி மேவுதல் விதியாதலும், அதனை மாற்றி வினைத் தளையை அறுக்க வல்லது, ஈசன் திருவருளே ஆதலும் சாத்திரங் களில் கூறப்பட்ட மெய்ம்மையாகும். அத்தகைய அருள் தன்மையில் இத் திருப்பதிகம் விளங்கி, வினையை அறுக்க வல்லது என உணர்த்தப் பெறுதல் காண்க.

இத்தகைய நெறியானது இத் திருப்பதிகத்திற்கு மட்டும் அன்றி, ஏனைய திருப்பதிகங்களுக்கும் பொருந்தும் எனக் கொள்க.

304. திருக்கருகாவூர்

தல விளக்கம்: காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 18ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் ஆகியோர் பாடல் பெற்றது. திருக்களாவூர் என வழங்கப்படுகிறது. பிரமன், கௌதமர், சந்திரன் வழி பட்டது. இதற்கு, முல்லை வனம், மாதவி வனம், கர்ப்பபுரி என்பன வேறு பெயர்கள். காவிரித் தென்கரையில் உள்ள பஞ்ச வனத் தலங்களுள் முல்லை வனமாகிய இத் தலத்தை அடுத்து ஏனைய தலங்கள்:

அவளிவள்நல்லூர்	– பாதிரி வனம்
அரதைப் பெரும் பாழி	– வன்னி வனம்
இரும்பூளை	– பூளை வனம்
கொள்ளம்பூதூர்	– வில்வ வனம்

Koviloor Digital Library

இவ் ஐந்து தலங்களையும் வைகறை, காலை, நண்பகல், மாலை, இரவு ஆகிய காலங்களில் வழிபடுதல் சிறப்பு என்பர்.

பக்தை ஒருத்திக்கு அம்பிகையானவள் மகப்பேறு மருத்துவம் புரிந்த தலச் சிறப்புக் கொண்டது. இத் தன்மையில் இத் தலம் சிறந்த பிரார்த்தனைத் தலமாக உடையது.

சுவாமி : கர்ப்பபுரீஸ்வரர், முல்லைவன நாதர்,
மாதவிவனேஸ்வரர்

அம்பிகை : கர்ப்பரட்சாம்பிகை, கருக்காத்த நாயகி

தல மரம் : முல்லை

தீர்த்தம் : பிரம தீர்த்தம் முதலியன

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

488. முத்து இலங்குமுறு வல்உமை அஞ்சவே
மத்த யானைமறு கவ்உரி வாங்கியக்
கத்தை போர்த்த கடவுள்கரு காவூர்எம்
அத்தர் வண்ணம் அழலும் அழல் வண்ணமே.

தெளிவுரை: முத்துப் போன்ற முறுவல் கொண்டு மேவும் உமாதேவி காணுமாறு, யானையின் தோலை உரித்துப் போர்த்திய கடவுள் கருகாவூரில் வீற்றிருக்கும் அத்தன். அவர் வண்ணம் நெருப்பின் நிறம் கொண்டதாகும்.

சிறப்புரை: தேவியின் முறுவல் முத்து என விளங்குதலை, "முத்தன்ன வெண்ணகையாய்" என வரும் திருவாசக வாக்காலும் காண்க. சிவபெருமானின் சிவந்த

Koviloor Digital Library

திருமேனியை, "அழலும் அழல் வண்ணமே" எனச் சிறப்பிக்கப் பெற்றது.

489. விமுத வல்லசடை யான்வினை உள்குவார்க்கு
அமுத நீழல்அக லாததோர் செல்வமாம்
கமுத முல்லை கமழ்கின்ற கருகாவூர்
அமுதர் வண்ணம் அழலும் அழல்வண்ணமே.

தெளிவுரை: கங்கை தரித்த சடை முடி உடைய சிவ பெருமானுக்குத் திருத்தொண்டு மேவும் அடியவர் களே! நும்பணியானது. அமுதத்தின் மாண்புடைய தாகி நீங்காத செல்வமாக விளங்கும் முல்லை கமழ்கின்ற கருகாவூரில் வீற்றிருக்கும் ஈசன், அமுதம் போன்று இனிமை தருபவர். அவருடைய வண்ணம் அழல் போன்ற செம்மை உடையதாகும்.

சிறப்புரை: சடை முடியின் சிறப்பு, "விமுத" என்னும் சொல்லால் குறிக்கப் பெற்றது. இது கங்கையைத் தரித்த செம்மையினை வியந்து ஓதுதல் ஆம். உவகை கொண்ட சந்திரனைத் தரித்த பாங்கும் சுட்டும். இத் திருத்தலமானது முல்லைவனம் என அழைக்கப் படுவதும், தல மரம் முல்லை ஆதலும் சுட்டுமாறு, முல்லையின் சிறப்பு இத் திருப்பாடலில் ஓதப் பெற்றது.

ஈசனுக்கு ஆற்றும் பணிகள் திருத்தொண்டு ஆதலும், அது மன்னுயிர்க்கு அமுதம் போன்ற செல்வத்தை வழங்குகின்ற பேறாக விளங்குதலும், அதனை மக்கள் கடைப்பிடித்து மகிழ்தல் வேண்டும் என்னும் கொள்கையில், "உள்குவார்க்கு அமுத நீழல் அகலாத தோர் செல்வமாம்" என உரைக்கப் பெற்றது.

வினை – திருப்பணி; ஈசன் திருத்தொண்டு; சரியை; கிரியை.

Koviloor Digital Library

490. பழக வல்லசிறுத் தொண்டர்பா வின்னிசைக்
குழகர் என்றுகுழை யாஅழை யாவரும்
கழல்கொள் பாடல் உடையார் கருகாவூர்எம்
அழகர் வண்ணம் அழலும்அழல் வண்ணமே.

தெளிவுரை: *பழகுவதற்குரிய சிறப்புடைய சிறுத் தொண்டரின் இசைக்குக் குழையவும், அதில் உள்ளம் பொருந்தித் திருக்கழலைப் போற்றி வாழ்த்த மகிழவும், உடைய கருகாவூரில் விளங்கும் ஈசன், செவ்வண்ணம் உடையவர்.*

சிறப்புரை: *சிறுத்தொண்ட நாயனாரின் சிறப்பினை இத் திருமுறையின் பதிகம் எண் 321இல் குறிக்கப் பெற்றுள்ளது காண்க.*

491. பொடிமெய் பூசிமலர் கொய்து புணர்ந்துடன்
செடியர் அல்லாஉள்ளம் நல்கிய செல்வத்தர்
கடிகொள்முல்லை கமழும் கருகாவூர்எம்
அடிகள் வண்ணம் அழலும் அழல் வண்ணமே.

தெளிவுரை: *திருவெண்ணீற்றை மெய்யில் பூசி, மலர் கொண்டு தூவிப் போற்றி, அடியவர்கள் வழிபட்டு, உள்ளத்தின் குற்றங்களைப் போக்கிக் கொள்ளுமாறு நல்கிய செல்வத்தராகிய சிவபெருமான், மணம் கொள் முல்லை கமழும் கருகாவூரில் வீற்றிருக்கும் எம் அடிகள் ஆவார். அவருடைய வண்ணம் அழல் போன்ற செவ் வண்ணம் ஆகும்.*

சிறப்புரை: *இத்திருப்பாட்டில், ஈசனைப் பூசித்து மேவும் பெருமை உணர்த்தப் பெற்றது. அடியவர்கள் திருநீறு அணிந்து ஈசனை மலர் தூவிப் போற்றக் குற்றம் அற்ற நல்லுள்ளம் வாய்த்தலும், அதுவே சிறந்த செல்வத்தை நல்கும் எனவும் கொள்க.*

Koviloor Digital Library

492. மையல் இன்றிமலர் கொய்து வணங்கிடச்
செய்ய உள்ளம்மிக நல்கிய செல்வத்தர்
கைதன் முல்லை கமழும் கருகாவூர்எம்
ஐயர் வண்ணம் அழலும்அழல் வண்ணமே.

தெளிவுரை: *மயக்க உணர்வின்றி மலர் கொய்து போற்றி வணங்கச் செய்யும் செம்மை உள்ளத்தை அடியவர் களுக்கு நனி நல்கிய செல்வத்தராகிய சிவபெருமான், தாழையும் முல்லையும் கமழும் கருகாவூரில் வீற்றிருக்கும் எம் தலைவர் ஆவார். அவருடைய வண்ணம் நெருப்புப் போன்ற செம்மை உடையது.*

493. மாசில் தொண்டர்மலர் கொண்டு வணங்கிட
ஆசை யாரஅருள் நல்கிய செல்வத்தர்
காய்சி னத்த விடையார் கருகாவூர்எம்
ஈசர் வண்ணம் எரியும்எரி வண்ணமே.

தெளிவுரை: *மாசில்லாத தொண்டர்கள் மலர் தூவி வணங்கிட, அவர்தம் விருப்பம் மலர, அருள் நல்கும் செல்வத்தராகிய சிவபெருமான், இடப வாகனத்தை உடையவராய்க் கருகாவூரில் வீற்றிருக்கும் எம்பரமன் ஆவார். அவரது வண்ணம் எரியும் நெருப்புப் போன்று செந்நிறமானது.*

494. வெந்த நீறுமெய் பூசிய வேதியன்
சிந்தை நின்றருள் நல்கிய செல்வத்தன்
கந்த மௌவல் கமழும் கருகாவூர்எம்
எந்தை வண்ணம் எரியும் எரிவண்ணமே.

தெளிவுரை: *திருநீறு பூசிய வேதியனாய், அடியவர்தம் சிந்தையில் விளங்கி நின்று அருள் புரியும் செல்வத்த ராகிய சிவபெருமான், வாசனை கமழும் முல்லை விளங்கும் கருகாவூரில் வீற்றிருக்கும் எம் தந்தை.*

Koviloor Digital Library

அவரது வண்ணமாவது, எரியும் நெருப்புப் போன்ற செந்நிறம் ஆகும்.

மௌவல் – முல்லை.

495. பண்ணி னேர்மொழி யாளையோர் பாகனார்
மண்ணு கோலம் உடை யம்மல ரானொடும்
கண்ணன் நேடஅரி யார்கரு காவூர்எம்
அண்ணல் வண்ணம்அழலும் அழல்வண்ணமே.

தெளிவுரை: பண்ணின் மொழியன்ன உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்கும் ஈசன், பிரமனும் திருமாலும் காணுதற்கு அரியவராய்க் கருகாவூரில் வீற்றிருக்கும் எம் அண்ணல் ஆவார். அவரது வண்ண மானது நெருப்புப் போன்ற செந்நிறம் ஆகும்.

496. போர்த்த மெய்யினர் போதுழல் வார்கள்சொல்
தீர்த்தம் என்று தெளிவீர் தெளி யேன்மின்
கார்த்தண் முல்லை கமழும் கருகாவூர்எம்
ஆத்தர் வண்ணம் அழலும்அழல் வண்ணமே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் கூறும் மொழிகளை உயர்வானதெனக் கொள்ள வேண்டாம். மேகம் சூழ, முல்லை கமழும் கருகாவூரில் வீற்றிருக்கும் எம் விருப்பத்துக்குரிய ஈசனின் வண்ணம் நெருப்புப் போன்ற செந்நிறம் ஆகும். அப்பெருமானை ஏத்துமின்!

497. கலவ மஞ்ஞை உலவும் கருகாவூர்
நிலவு பாடல் உடையான்றன் நீள்கழல்
குலவு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலவ லார்அவர் தொல்வினை தீருமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: *மயில், தோகை விரித்து ஆடி விளங்குகின்ற கருகாவூர் என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசன், புகழ்ப் பாக்கள் கொண்டு போற்றி வழிபடப் பெற்றவர். அப் பெருமானுடைய அருளொளி திகழும் திருக்கழலைக் கனிந்த தன்மையால் அன்பு செலுத்திக் குலவும் ஞானசம்பந்தன் ஓதிய இத் திருப்பதிகத்தைச் சொல்ல வல்லவர்களின் தொல்வினை தீரும்.*

சிறப்புரை: *இத் திருப்பதிகத்தின் 3ஆம் பாடலில் சிறுத் தொண்டர் பாடும் இசையின் பெருமையைச் சுட்டுமாறு, "நிலவு பாடல் உடையான்றன் நீள்கழல்" என உணர்த்தப் பெறுவதாயிற்று. இது இத் திருத் தலத்தில் விளங்கிய வரலாற்று நிகழ்ச்சியினை அருளுணர்வால் உணர்த்தப் பெற்று உரைத்ததெனவும் கொள்ளுதல் மிகையாகாது. இத்தன்மையில் ஈசனைப் புலவர்களும் அடியவர்களும் போற்றி வழிபட்ட பெருமையினை, "பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்கள்" எனவும், "பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்" எனவும் உரைத்தருளிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருவாக்கும் நோக்குக.*

305. திருஆலவாய்

தல விளக்கம்: *பதிகம் எண் 297 காண்க.*

பதிகக் குறிப்பு: *மதுரையைச் சார்ந்த திருஞான சம்பந்தர், அமணர் தம்முடன் வாதம் புரிவதற்கு முன்னர், ஆலவாய் அண்ணலின் திருக்கோயிலை அடைந்து இறைவனின் திருவுள்ளக் குறிப்பை நோக்கி*

Koviloor Digital Library

அருளிச் செய்தது. மற்றொன்று பதிகம் எண் 366 காண்க.

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

498. காட்டு மாவது உரித்துஉரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடை யாய்உரை செய்வனான்
வேட்டு வேள்விசெய்யா அமண் கையரை
ஒட்டி வாது செயத்திரு உள்ளமே.

தெளிவுரை: *காட்டில் உள்ள யானையின் தோலை உரித்துப் போர்த்திய ஈசனே! மூன்று கண்ணுடைய பெருமானே! நல்வேள்வியைப் புரியாதவர்களாகிய அமணர்களுடன் நான் வாதம் செய்வதற்குத் திருவுளக் குறிப்பு யாதுகொல்! உரை செய்வீராக.*

நாட்டம் – கண்.

499. மத்த யானையின் ஈருரி மூடிய
அத்த னேஅணி ஆலவா யாய்பணி
பொய்த்த வன்தவ வேடத்த ராம்சமண்
சித்த ரையழிக் கத்திரு வுள்ளமே.

தெளிவுரை: *மதம் பொருந்திய யானையின் தோலை உரித்துப் போர்த்திய அத்தனே! அழகு மிக்க ஆலவாயில் விளங்கும் நாதனே! பொய்த்தவ வேடம் கொண்ட சமணரிடம் வாது செய்வதற்குத் திருவுள்ளம் யாதோ? உரைப்பீராக.*

அத்தன் – அன்பின் நெருக்கம் கொண்ட ஈசன்.

500. மண்ண கத்திலும் வானிலும் எங்குமாம்
திண்ண கத்திரு ஆலவா யாய்அருள்

Koviloor Digital Library

பெண்ண கத்தெழிற் சாக்கியப் பேயமண்
தெண்ணர் கற்பழிக் கத்திரு வுள்ளமே.

தெளிவுரை: இப் பூலகத்திலும் விண்ணுலகத்திலும் மற்றும் எல்லா இடங்களிலும் உறுதியாய் விளங்கி மேவும் ஆலவாயில் வீற்றிருக்கின்ற ஈசனே! சாக்கியரும் சமணரும் வாதம் புரியும் தன்மையில் அவர்தம் கல்வி நிலையைத் தகுதியற்றதாக்கும் தன்மையில் அழிதல் செய்வதற்குத் திருவுள்ளம் யாது! உரைத்தருள்வீராக.

கற்பு – கல்வியின் உறுதித் தன்மை.

501. ஓதி யோத்தறி யாவமண் ஆதரை
வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே
ஆதியேதிரு ஆலவாய் அண்ணலே
நீதி யாக நினைந்தருள் செய்திடே.

தெளிவுரை: வேதங்களை ஓதி உணரும் ஞானம் அற்றவராகிய அமணர்களை வாதம் செய்து வெற்றி கொள்ளத் திருவுள்ளம் யாதுகொல்! ஆதி மூர்த்தி யாய்த் திருஆலவாயில் வீற்றிருக்கும் அண்ணலே! நடு நிலையில் இருந்து அருள் செய்வீராக.

ஒத்து அறியா – வேதம் அறியாத.

502. வைய மார்புக ழாய்அடி யார்தொழும்
செய்கை யார்திரு ஆலவா யாய்செப்பாய்
கையில் உண்டுஉழ லும்அமண் கையரைப்
பைய வாது செயத்திரு வுள்ளமே.

தெளிவுரை: உலகம் பொருந்த மேவும் புகழுக்கு உரிய நாதனே! அடியவர்கள் தொழுது போற்றும் திருஆலவாயில் வீற்றிருக்கும் ஈசனே! அமணர்பால் சென்று நான் வாதம் புரிவதற்குத் திருஉள்ளம் யாது! உரைத்தருள்வீராக.

Koviloor Digital Library

503. நாறு சேர்வயல் தண்டலை மிண்டிய
தேற லார்திரு ஆலவா யாய்செப்பாய்
வீறி லாத்தவ மோட்டுஅமண் வேடரைச்
சீறி வாதுசெ யத்திரு உள்ளமே.

தெளிவுரை: *நாற்றுகள் கொண்டு வயல்களில் பயிர் வளம் பெருகவும், தேன் மணம் கமழும் மலர்கள் திகழும் சோலைகள் விளங்கவும் மேவும், திருஆலவாய் என்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் நாதனே! பெருமை தரும் தவத்தினை நீத்தவராய், வன்மை உடையவராய், உடலை வருத்திக் கொண்டு பொய்த் தன்மையாக வேடம் கொண்டுள்ள அமணர்பால் சென்று நான் வாதம் செய்ய, திருவுள்ளம் யாதுகொல். உரைத்தருள்வீராக.*

மோட்டு – இயல்புக்கு உரியதல்லாத மூர்க்கத் தன்மை.

504. பண்டு அடித்தவத் தார்பயில் வாற்றொழும்
தொண்ட ருக்குஎளி யாய்திரு ஆலவாய்
அண்ட னேஅமண் கையரை வாதினில்
செண்டு அடித்துள றத்திரு வுள்ளமே.

தெளிவுரை: *பேரன்பு பூண்டு திருத்தொண்டு மேவும் பழைய அடியவர்களுக்கு எளியவராய் விளங்கும் திருவாலவாய் அண்ணலே! அண்டப் பொருளாக விளக்கும் பெருமை உடையவரே! சமணர்களை வாதிட்டு வெற்றி கொண்டு ஆரவாரித்து விளங்கு வதற்குத் தேவரீரின் திருவுள்ளம் யாது? உரைத்தருள் வீராக.*

உளறுதல் – ஆரவாரம் செய்து மகிழ்தல்.

505. அரக்கன் தான்கிரி யேற்றவன் தன்முடிச்
செருக்கி னைத்தவிர்த் தாய்திரு ஆலவாய்

Koviloor Digital Library

பரக்கு மாண்புடை யாய்அமண் பாவரைக்
கரக்க வாதுசெ யத்திரு உள்ளமே.

தெளிவுரை: *கயிலை மலையைத் தன் முடியில் ஏற்றித் தாங்கிய இராவணனின் செருக்கினை அடக்கிய நாதனே! திருஆலவாயில் பெருமையுடன் அருள் விளக்கம் விரிந்து மேவ வீற்றிருக்கும் ஈசனே! சமணர் பால் வாதம் புரிந்து அவர்களை அடக்குவதற்குத் திருவுள்ளம் யாது! உரைத்தருள்வீராக.*

506. மாலும் நான்முக னும்அறி யாநெறி
ஆலவா யுறையும் அண்ண லேபணி
மேலை வீடுஉண ராவெற்றரையரைச்
சால வாதுசெயத் திரு உள்ளமே.

தெளிவுரை: *திருமாலும் நான்முகனும் அறியாத நெறியினராய் மேவிய பரமனே! ஆலவாயில் உறையும் அண்ணலே! முத்தியின் சிறப்பினை உணராது வெற்றுச் சொல் பேசும் சமணர்பால் சென்று வாதம் செய்வதற்குத் தேவரீரின் திரு உள்ளம் யாதுகொல்! பணித்து அருள்வீராக.*

மேலை வீடு – முத்திப் பேறு.

507. கழிக்க ரைப்படு மீன்கவர் வார்அமண்
அழிப்ப ரைஅழிக் கத்திடு உள்ளவே
தெழிக்கும் பூம்புனல் சூழ்திரு ஆலவாய்
மழுப்ப டையுடை மைந்தனே நல்கிடே.

தெளிவுரை: *கழிகளில் உள்ள மீன்களைக் கவர்ந்து அழிக்கும் தன்மையில், அமணர்களை வாதம் புரிந்து வெற்றி கொள்வதற்குத் திருவுள்ளம் யாதுகொல்! நீர் வளம் பெருகும் ஆலவாயில், மழுப்படையுடைய*

Koviloor Digital Library

வராய் வீற்றிருந்து, காத்தருள் புரியும் அழகனே! உரைத்தருள்வீராக.

508. செந்து எனாமுர லுந்திரு ஆலவாய்
மைந்தனே யென்று வல்அமண் ஆசுஅறச்
சந்த மார்தமிழ் கேட்டமெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற்பக ரும்பழி நீங்கவே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *செந்து என்னும் இசை எழுப்பும் வண்டுகள் திகழும் சோலைகளை உடைய ஆலவாயின் மைந்தனே! என மொழிதல் செய்து, சமணரால் பரவிய குற்றங்கள் நீங்குமாறு சந்தம் பெருகும் தமிழ்ப் பாடல்களால் வாதம் புரிய வேண்டி வினவிய மெய்ஞ்ஞானசம்பந்தனின் இத்திருப்பதி கத்தை ஓதுவீராக. அது பழியிலிருந்து விடுவிக்கும்.*

306. திருமழபாடி

தல விளக்கம்: *பதிகம் எண் 286 காண்க.*

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

509. அங்கை யார்அழ லன்னழ கார்சடைக்
கங்கை யான்கடவுள் இடம் மேவிய
மங்கை யான்உறை யும்மழ பாடியைத்
தங்கை யால்தொழு வார்தக வாளரே.

தெளிவுரை: *ஈசன், அழகிய கையில் நெருப்பினைக் கொண்டு விளங்குபவர். அழகிய செஞ்சடையில் கங்கையைத் தரித்தவர். இடப் பாகத்தில் உமா தேவியைப் பாகமாகக் கொண்டு அப் பரமன் உறையும்*

Koviloor Digital Library

மழபாடியைக் கைகளால் கூப்பித் தொழும் அன்பர்கள் நல்ல தகவுடையவர்கள், ஆவார்கள்.

சிறப்புரை: இத்திருப்பாட்டு, தல தரிசனத்தை நோக்க மாகக் கொண்டு ஓதப் பெற்றது.

தங்கையால் – தமது கையால்; தகவாளர் – நற்பண்பாளர்; செவநெறியாளர். கடவுள் – ஈசன். கடவுளே போற்றி – திருவாசக வாக்கு.

510. விதியு மாம்விளை வாம்ஒளி யார்ந்ததோர்
கதியு மாம்கசி வாம்வசி யாற்றமா
மதியு மாம்வலி யாமழ பாடியுள்
நதியந் தோய்சடை நாதநற் பாதமே.

தெளிவுரை: *மழபாடியில் கங்கை தோய்ந்த சடை முடியுடைய ஈசனின் முத்தி வழங்கும் நற்பாதமானது, மன்னுயிர்களுக்கு வினைவழி மேவும் நல்விதியாக்கும்; அதனை விளைவித்து நுகரச் செய்யும் ஒளிர்ந்து மேவும் நற்கதியாகிய முத்திப் பேறு ஆக்கும்; மனத்தினைக் கசிய வைத்துத் தகுந்தவாறு வயப்படுத்தும்; ஞானம் வழங்கும்; எல்லாவற்றையும் நிகழ்த்துகின்ற பேராற்றல் தரும். அத்தகைய திருக்கழலை ஏத்துவீராக.*

மதி – ஞானம்; நதி – கங்கை.
வசி – பஞ்சாக்கரத்தின் பேரெழுத்தாகிய யுண்மை கட்டும்.

511. முழவி னான்முது காடுறை பேய்க்கணக்
குழுவி னான்குல வுங்கையிலேந்திய
மழுவி னான்உறை யும்மழ பாடியைத்
தொழுமின் உம்துயர் ஆனவை தீரவே.

தெளிவுரை: *ஈசன், முழவு என்னும் வாத்தியம் கொண்டுள்ளவர்; சுடுகாட்டில் உறையும் பேய்க் கணத்துடன் குலவி நடம்புரிபவர்; அழகிய கையில்*

Koviloor Digital Library

மழுப் படையை உடையவர். அப் பெருமான், வீற்றிருக்கிற்ற மழபாடியைத் தொழுது ஏத்துமின். அது எல்லாத் துன்பங்களையும் நீக்கிக் காக்கும்.

சிறப்புரை: இத் திருப்பாட்டு தல தரிசனத்தை உரைத்து அருளுவதாயிற்று.

512. கலையி னான்மறை யான்கதி யாகிய
மலையி னான்மரு வார்புர மூன்றெய்த
சிலையி னான்சேர் திருமழ பாடியைத்
தலையி னால்வணங் கத்தவம் ஆகுமே.

தெளிவுரை: ஈசன், ஆய கலைகள் அறுபத்து நான்கு ஆகியவர்; நான்கு மறைகள் ஆகியவர்; நற்கதி நல்கும் கயிலை மலையினை உடையவர்; முப்புர அசுரர்களையும் அவர்களுடைய மதில்களையும் எரி செய்யுமாறு ஏவிய மேருவை வில்லாக உடையவர். அப் பெருமான், வீற்றிருக்கும் திருமழபாடியை முதன்மையாகக் கருதி வணங்கத் தவப் பயன் கை கூடும்.

சிறப்புரை: தோற்றம் பெறும் பொருள் யாவும், கலையினால் பெறுதலும், அவ்வயத்தில் ஈசன் பொலிதலும் உள்ள சிறப்பினை, "உலகனைத்தும், கலை நவின்ற பொருளகள் எல்லாம் கலங்கிடும் காண் சாழலோ" என்னும் திருவாசக அமுத மொழியினைக் கொண்டும் காண்க.

513. நல்வி னைப்பய னான்மறை யின்பொருள்
கல்வி யாயக ருத்தனு ருத்திரன்
செல்வன் மேய திருமழ பாடியைப்
புல்கி யேத்தும் அதுபுக ழாகுமே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், நல்வினையின் பயனாகியவர்; மறையின் பொருளாகியவர்; கல்வியாகவும் அதன் கருத்தாகவும் விளங்குபவர்; உருத்திரனாகத் திகழ்பவர். அச் செல்வன் மேவிய திருமழபாடியைச் சார்ந்து ஏத்துமின். அது உமக்குப் புகழை அளிக்கும்.

சிறப்புரை: இத் திருப்பாட்டு, திருத்தலவாசத்தை உணர்த்தியது.

514. நீடி னார்உல குக்குயிராய் நின்றான்
ஆடி னான்எரி கானிடை மாநடம்
பாடி னார்இசை மாமழ பாடியை
நாடி னார்க்கில்லை நல்குர வானவே.

தெளிவுரை: நீண்டு விளங்குகின்ற இவ்வுலகத்திற்கு ஈசன் உயிராய் மேவுபவர். அப்பெருமான் சுடுகாட்டில் சிறப்பான நடனம் ஆடுபவர். அவர், இசைப் பாடலால் பொலிந்து மேவும் மழபாடியில் இனிது வீற்றிருக்க, அவரை நாடி ஏத்துபவர்களுக்கு வறுமை இல்லை.

சிறப்புரை: ஈசன், உலகுக்கு உயிராக விளங்கி இயக்கு கின்ற செம்மையானது இவண் சுட்டப் பெற்றது. இத்தன்மையில், "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே" எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்துமையும் காண்க. ஈசனை வணங்கி ஏத்துதல் வறுமைப் பிணியை நீக்கும் என அருளாணை வழங்கப் பெறுதலை நோக்குக. இது இம்மைக்குரிய பெரும் பயனை அளித்தலாயிற்று.

நல்குரவு – வறுமை.

515. மின்னி னார்இடை யாளொரு பாகமாய்
மன்னி னான்உறை மாமழ பாடியைப்

Koviloor Digital Library

பன்னி னார்இசை யால்வழி பாடுசெய்
துன்னி னார்வினை யாயின ஒயுமே.

தெளிவுரை: *மின்னலைப் போன்ற மெல்லிய இடை உடைய உமாதேவியைப், பாகம் கொண்டு மேவும் ஈசன் உறையும் சிறப்பு மிக்க மழபாடியை, இசைப் பாடலால் ஏத்தி வழிபடும் அன்பர்களுக்குத் தீவினை யால் நேரும் துன்பம் இல்லை.*

சிறப்புரை: சிவபெருமான் உமாதேவியைப் பாகமாகக் கொண்டு வீற்றிருந்து இன்னருள் புரிதல் "மன்னினான் உறைமா மழபாடி" என ஓதப் பெற்றது. இத் தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள், "மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே" என அருளிச் செய்த மாண்பும் நோக்குக.

516. தென்னி லங்கையர் மன்னன் செழுவரை
தன்னில் அங்குஅ டர்த்தருள் செய்தவன்
மன்னி லங்கிய மாமழ பாடியை
உன்னில் அங்க உறுபிணி இல்லையே.

தெளிவுரை: *இராவணனைச் செழுமையான கயிலை மலையினால் அடர்த்து அருள் செய்தவர் சிவபெருமான். அவர், சிறப்பாக வீற்றிருக்கின்ற பெருமைமிகு மழபாடியை நெஞ்சில் பதித்து ஏத்த, தேகத்தில் உறுகின்ற பிணி யாவும் விலகிப் போகும்.*

சிறப்புரை: ஈசனின் திருநாம மகிமை இத் திருப் பாட்டின்வழி, குறிப்பால் உணர்த்தப் பெறுவதாயிற்று. இதனை, ஈசனின் திருநாமமாகிய வச்சிரதம்பேஸ்வரர் என்னும் நாம சொரூபம், அடியவர்களின் உடற் பிணியைத் தீர்த்தருள வல்லது எனக் கொள்க.

அங்கம் – தேகம்.

Koviloor Digital Library

517. திருவி னாய னும்செழுந் தாமரை
மருவி னானும் தொழத்தழல் மாண்பமர்
உருவி னான்உறை யும்மழ பாடியைப்
பரவி னார்வினைப் பற்றறுப் பார்களே.

தெளிவுரை: திருமகளின் நாயகனாகிய திருமாலும், செழுமை மேவும் தாமரையில் மருவிய பிரமனும் தொழுது போற்றப் பெருந்தழல் ஆகிய மாண்புடைய வடிவத்தினராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் மழபாடியைப் பரவி ஏத்தும் அன்பர்கள், வினை நீங்கியவர் ஆவர்.

இத்தகையோர், துன்பத்தில் அழுந்த மாட்டார்கள் என்பது குறிப்பு.

518. நலியும் நன்றறி யாச்சமண் சாக்கியர்
வலிய சொல்லினும் மாமழ பாடியுள்
ஒலிசெய் வார்கழ லான்திறம் உள்கவே
மெலியு நம்முடன் மேல்வினை யானவே.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் நலியும் சொற்களை வலிய உரைத்தாலும் அவற்றைப் பொருளாக ஏற்காது, மழபாடியுள் கழல் ஒலிக்க நடம் புரியும் சிவபெருமானின் அருளிச் செயலை நினைந்து ஏத்துக. நம்மைப் பற்றிய வினை யாவும் நலிந்து அழியும்.

519. மந்தம் உந்து பொழில்மழ பாடியுள்
எந்தை சந்தம் இனிதுகந்து ஏத்துவான்
கந்தம் ஆர்கடற் காழியுள் ஞானசம்
பந்தன் மாலைவல் லார்க்கில்லை பாவமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: தென்றல் காற்று வீசும் பொழில் சூழ்ந்த மழபாடியுள் மேவும் எம் தந்தையாகிய ஈசனை, சந்தம்

Koviloor Digital Library

பொலியும் இசைப் பாடலால் ஏத்தும் காழியின் ஞான சம்பந்தன் உரைத்த தமிழ் மாலையை ஓத வல்லவர்களுக்குப் பாவம் அணுகாது. இது துன்பம் அற்ற வாழ்க்கையைத் தரும் என உணர்த்துவதாயிற்று.

307. பொது நமச்சிவாயத் திருப்பதிகம்

பதிகக் குறிப்பு: திருஞானசம்பந்தர், நம்பியாண்டார் நம்பி என்னும் அருந்தவத்தினரின் புதல்வியைத் திருமணம் புரிய இசைவு நல்கி, நடந்தேற, திருமணம் காண வந்தோர் அனைவருக்கும் செம்பொருள் ஓதுதலை அருளியது இத் திருப்பதிகம்.

குறிப்பு: திருஞானசம்பந்தருக்கு வாழ்க்கைத் துணைவி ஆகும் பேறு பெற்ற நங்கையின் திருநாமம் "சொக்கியாள்" என்பதாம். ஆதாரம், மூன்றாம் இராஜ இராஜ சோழன் காலத்துக் கல்வெட்டுச் செய்தி; தினமணி நாளிதழ் *27–4–1991.*

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

520. **காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி**
ஓது வார்தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: நான்கு வேதங்களும் மெய்ப் பொருளாகத் திகழ்ந்து விளங்க, அதன்கண், சிறப்புடைய நாமமாகத் திகழ்வது நமசிவாய என்கிற ஈசனின் திருவைந்தெழுத்தாகும். இத்திருவைந்தெழுத்தை அன்பின் மேலிட்டு மனத்தில் பதித்தும், அதன்வழி, கசிந்து

Koviloor Digital Library

உருகிக் கண்ணீர் மல்கி ஓதியும் ஒழுக, நல்ல நெறியை உய்த்து அருளும் இத்தகைய சிறப்புடைய ஈசனின் திருநாமமாகிய ஐந்தெழுத்தினை ஓதுக.

சிறப்புரை: அன்பின் மேலீட்டால் ஓதும் தன்மை காதலாகி எனச் சுட்டப் பெற்றது. ஈசனே தனக்கு உறுதுணையாக விளங்கும் தலைவன் என்னும் உணர்வாலும், தனக்கு அவரையன்றி வேறு யாராலும் நன்மை செய்ய இயலாது என்னும் உறுதிப் பாட்டாலும், உயிரினும் ஒப்பற்றதாகப் பேணு தலாலும், அன்பின் பெருக்கானது காதலாக மலர் வதாயிற்று எனக் கொள்க. "அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்" என்னும் தமிழ் மறையின் கூற்றுக்கு ஏற்ப, கருத்தினுட் புகுந்து மேவும் நாதனின் திருநாமத்தை, நினைத்த அளவில், அன்பின் பெருக்கினால் கண்களில் நீர் பெருகும் இயல்பு ஆயிற்று. இது உலக பந்தத்தால் கட்டுண்டு, அத் துன்பத்தின் வழியாக நேரும் மன வேதனையால் உண்டாகும் கண்ணீரினும் வேறு பட்டது.

வேதத்தின் மெய்ப்பொருளாவது, ஈசன் திருநாமம் என்பதும், அது நமசிவாய என்னும் ஐந்தெழுத்தா தலும் இவண் உணர்த்தப் பெற்றது. ஈசன், வேதத்தின் பொருளாகிய பெருமான் என்பதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

விடையின்மேல் வருவானை வேதத்தின் பொருளானை
அடையில்அன்புடையானை யாவர்க்கும் அறிவொண்ணா
மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்ச்
சடையிற்கங்கை தரித்தானைச் சாராதார் சார்பென்னே

என அருளிச் செய்தவாறும் காண்க.

Koviloor Digital Library

மக்கள் பிறப்பானது, வினையின் வழி பெறப் பட்டதாயினும், இதனைச் சாதனமாகக் கொண்டும், பிறவாமையை அடையும் நோக்கத்திலும் இறைவனின் கருணையால் விளங்கப் பெற்றது எனவும்; இதனை நான்கு ஓர்ந்து, ஈசனின் திருவடிப் பேறாகிய முத்தியின் பத்தைப் பெறுவதற்கு உரிய நன்னெறியைக் கடைப் பிடிக்க வேண்டும் என்பதும்; அது ஐந்தெழுத்தை ஓதுதலாகும் என்பதும் கொள்க.

வேதநான்கினும் – வேதங்கள் நான்கிலும்.
நாதநாமம் – தலையாய நாமம். ஈசனின் நாமம்.

521. நம்பு வார்அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாள்மலர் வார்மது ஒப்பது
செம்பொ னார்தில கம்உல குக்கெலாம்
நம்பன் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: உயர்ந்ததாக விளங்கும் செம்பொன்னின் திலகம் போன்று, எல்லா உலகமும் பிரதானமாக விளங்கி மேவுவது, ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்தாகும். இத் திருநாமத்தை மிகுந்த விருப்பத்துடன் ஓதுபவர்களுக்கு, அது மணம் தரும் புதுமலரில் துளிர்க்கும் தேனின் சுவைக்கு ஒப்பாகி இனிமை தரும்.

சிறப்புரை: ஈசனின் திருவைந்தெழுத்தானது, தேன் என விளங்கி இனிமை தருதலை, "வம்பு நாள் மலர் வார்மது ஒப்பது" எனச் சுட்டப் பெற்றது. இத் தன்மை யில் ஈசனின் திருவடிச் சிறப்பினைத் திருநாவுக்கரசர், "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும்

Koviloor Digital Library

வேண்டுவனே இந்த மாநிலத்தே" என அருளிச் செய்ததும் நோக்குக.

ஈசனின் திருவண்ணமானது தேனென இனிமை பயக்கும் ஆற்றலுடையதாம். சிந்தையில் இனிமை தருவதாயும் விளங்கவல்லது என்பதனை, மாணிக்க வாசகர், "தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்" என உரைத்தருளியவாறும் காண்க.

சிவபெருமான் யாவராலும் விரும்பப்படுபவர் என்னும் நெறியில், "நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்" என்னும் தொடரின் வழி, திருவைந் தெழுத்தை விரும்பி ஏத்தும் பாங்கு ஓதப் பெற்றது. இத் தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன். விரும்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே" என ஓதியருளியதும் காண்க.

நம்பு – நசை, பேர்அவா, விருப்பம். நம்பன் – விரும்பப்படுபவன்; ஈசன்.

522. நெக்குள் ஆர்வம் மிகப்பெரு கிந்நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவர்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தானது, உள்ளம் நெகிழ்ந்து உருகி ஓதப் பெறுவதாகும்; மற்றும் உருத்திராக்க மாலை கொண்டு மணிகளை உருட்டிச் செபித்து மொழியப் பெறுதலும், கையில் உள்ள விரற் கோடு களைக் கொண்டு எண்ணி மொழியப் பெறுதலும் உடையது. இத்தகைய மாண்பில் திருவைந் தெழுத்தினை ஓதுபவர்கள், தேவர்களாகும் தகுதியைப் பெற்று விளங்குவார்கள்.

Koviloor Digital Library

சிறப்புரை: திருவைந்தெழுத்தானது ஈசன் திருவடிப் பேற்றினையும் மறுமைக்கண் வானுலக வளத்தினையும் அவ்வவ் அன்மாக்களுக்கு உரிய தன்மையில் அளிக்க வல்லது எனச் சுட்டப் பெற்றது.

523. இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம்வந்து ஓதவல் லார்தமை நண்ணினால்
நியமம் தான்நினை வார்க்குஇனி யான்நெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: நெற்றியில் கண்ணுடைய ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை நியமத்தோடு நினைத்து ஏத்த வல்லவர்களுக்கு அப்பெருமான் இனிமையானவர். அத்தகைய செம்மை உடைய திருவைந்தெழுத்தினை ஓதும் அன்பர்கள் பால் நெருங்கி மேவும் அடியவர்களிடம், இயமனுடைய தூதுவர்களும் அஞ்சி, விலகிச் செல்வார்கள்.

சிறப்புரை: சிவபெருமான், தன்னைத் தொழுது போற்றுகின்றவர்களுக்கு இனிமையானவர் என்பதனை, "நினைவார்க்கு இனியான், நெற்றி நயனன் நாமம் நமச்சிவாயவே" என உணர்த்தப் பெற்றது. இந்நெறியில் இனியனாகிய ஈசனின் பெற்றியைத் திருநாவுக்கரசர், எப்போதும் இனிமையுடையவர் என்பதனை,

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே.

— நான்காம் திருமுறை, பாடல் வ. எண். 64.

என *(4-7-3)* அருளிச் செய்த பாங்கும் காண்க.

நியமம் – பூஜாவிதி.

Koviloor Digital Library

524. கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: *பாவச் செயல்களைப் புரிபவராயினும், நற்குணங்களைப் பெறாதவராகவும், நன்மைகள் ஏதும் செய்யாதவராகவும் இருந்தாலும், நன்மை விளைவிக்கும் ஈசனின் நாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை ஓதுவார்களானால், அவர்கள், எல்லாவிதமான தீமையிலிருந்தும் நீங்கப் பெற்றவர்கள் ஆவார்கள்.*

சிறப்புரை: *பாவங்களைச் செய்பவர்களுக்கும் அவர்கள் செய்த தீவினையால் மறுமைக்கண் துயர் நேராதவாறு திருவைந்தெழுத்தானது, கவசமாக இருந்து காத்தருளும் என, "எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்" என்னும் தொடரால் சுட்டப் பெற்றது.*

525. மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்த னையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: *மலை போன்ற பாவங்கள் செய்தவர்களும், பந்த பாசத்தால் பிணைக்கப் பெற்றவர்களும், ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தைப் பகர்வார்களாயின். அவர்களுடைய கொடிய வினைகள் யாவும் நீங்கப் பெற்றுச் செல்வமும் நனி பெறுவர்.*

சிறப்புரை: *மலையளவு பாவம் செய்திருந்தாலும் திருவைந்தெழுத்தை ஓதி உய்வு பெறலாம் என*

Koviloor Digital Library

உணர்த்தும் தன்மையில், "மந்தரம் அன பாவங்கள்" என்று ஓதப் பெற்றது. இந்நெறியில், திருநாவுக்கரசர், "விண்ணுற அடுக்கிய விறகில் வெவ்வழல் உண்ணிய புகில், அவை ஒன்றும் இல்லையாம்; பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே!" என உரைத்தருளிய பாங்கும் காண்க.

மந்தரம் – மலை.

526. நரகம் ஏழ்புக நாடினர் ஆயினும்
உரைசெய் வாயின ராயில் உருத்திரர்
விரவி யேபுகு வித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: ஏழு நரகங்களில் புகுந்து ஆழும் தன்மையில் பாவங்களைப் புரிந்தாலும், வரந்தரும் ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தை உரை செய்வாராயின், அவர்கள் உருத்திர கணத்தாரொடு சேர்ந்திருக்கும் பேற்றினைப் பெருவார்கள்.

சிறப்புரை: தீவினைக்குரிய தண்டனையை அடையாது விண்ணளவு கொண்ட விறகாயினும் சிறு நெருப்புப் பொறியில் எரிந்து சாம்பலாகுமாறு, பாவம் யாவும் பொசுங்கப் பெற்றுச் சிவபுண்ணியப் பதவி கைவரப் பெறும் என உணர்த்துதலை, இத் திருப்பாட்டு உணர்த்தியது. முந்தைய திருப்பாட்டிற்கு உரைக்கப் பெற்ற திருநாவுக்கரசர் தேவாரமாகிய "விண்ணுற அடுக்கிய" என்னும் திருப்பாடலையும் நோக்குக.

வரதன் – வரம் தருபவன். ஈசன்.

527. இலங்கை மன்னன் எடுத்த அடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்

Koviloor Digital Library

மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: *கயிலை மலையை எடுத்த இராவணனைத் திருப்பாத விரலால் ஊன்றி அடர்த்தவன் ஈசன். அவ் வரக்கன் உய்வதற்குக் காரணமாக இருந்தது, நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தே ஆகும்.*

சிறப்புரை: *தீவினையின் காரணமாகக் காணும் துன்பத்திலிருந்து பாதுகாக்கும் தகைமை உடையது, ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்து ஆகும். அதுவே இராவணனைக் காத்து வாளும், வாழ்நாளும் பெறுவதற்குத் துணை யாக இருந்தது என்பதும் சுட்டப் பெற்றது.*

அடுக்கன் – கயிலை மலை.

528. போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரி தாகி அலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.

தெளிவுரை: *பிரமனும் திருமாலும், முறையே ஈசனின் திருமுடியையும், திருவடியையும் தேடிய பண்பினராகிக் காண முடியாத நிலையில் வருந்தி ஓதிய நாமமானது, நமச்சிவாய என்னும் திருவைந் தெழுத்தாகும்.*

போதன் – தாமரைப் போதில் விளங்கும் பிரமன். போதனகண்ணன் – செந்தாமரை போன்ற கண்ணை உடையவன். அர்ச்சுனருக்குக் கீதையை உபதேசம் செய்த கண்ணன். அண்ணல் – ஈசன்.

529. கஞ்சி மண்டையர் கையிலுண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்

Koviloor Digital Library

விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுஉள் கண்டன் நமச்சி வாயவே.

தெளிவுரை: சமணர்களும் சாக்கியர்களும் கொடுமை யான சொற்களைக் கூற, அவற்றை ஏற்காதவராயும் தேவர்கள் வேண்டுகோளுக்கு அருள் செய்து கொடிய நஞ்சினை உட்கொண்டவரும் ஆகிய ஈசனின் திருநாமம், நமச்சிவாய என்னும் திருவைந் தெழுத்தாகும்.

530. நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யால்மகிழ்ந்து ஏத்தவல் லாரெலாம்
பந்த பாசம் அறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஈசனின் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் திருவைந்தெழுத்தைச் சந்தம் மிகுந்த தமிழ் கொண்டு, ஞானசம்பந்தன் அருளிச் செய்த இத்திருப் பதிகத்தைச் சிந்தை மகிழ ஏத்த வல்லவர்கள் பந்தபாசத்தை அறுக்க வல்லவர் ஆவர்.

சிறப்புரை: ஈசனின் திருநாமமாகிய ''நமச்சிவாய'' என்னும் திருவைந்தெழுத்தை ஓதும் முறையும் அவற்றால் வாய்க்கும் பயனும் திருப்பாடல் தோறும் உரைத்தருளப் பெற்றுத் திருக்கடைக்காப்பாகப் பந்தபாசம் நீங்கப் பெறுதலை உணர்த்துவதாயிற்று. இத் தன்மையில் திருமூலர்,

ஆசைஅறுமின்கள் ஆசை அறு மின்கள்
ஈசனோடு ஆயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே.

— திருமந்திரம் 2615

Koviloor Digital Library

என அருளிச் செய்த வண்ணமும் காண்க. நமசிவாய என்னும் திருவைந்தெழுத்து, தூலபஞ்சாட்ரம் என்பதாம். இத்தூல பஞ்சாட்சரத்தைப் பிரணவ எழுத்தை முன் சேர்த்து ஓதுதல் முறை என்பது சாத்திரக் கருத்து. இத்தன்மையுடைய திருவைந் தெழுத்தின் பொருளை உண்மை விளக்கம் என்னும் பாடல்,

ஆடும் படிகேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் – கூடு
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகருமுகம் வா முடியப் பார்.

– திருப்பாடல் 33

என ஓதும்.

ந – திருவடி
ம – உதரம்
சி – தோள்
வா – முகம்
யா – முடி.

இது பிரணவ சொரூபியாகிய அம்பலக் கூத்தனைத் திருவைந்தெழுத்தின் வாயிலாகப் பாதாதி கேசமாக ஏத்தப் பெறுதல் ஆயிற்று.

நந்தி – சிவபெருமான்.

308. திருத்தண்டலை நீள்நெறி

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலங்கள் 127இல், இது, 110ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. தண்டலைச்சேரி என வழங்கப்படுகிறது.*

Koviloor Digital Library

கோயிலின் பெயர் நீள்நெறி. கோச்செங்கட் சோழன் கட்டிய மாடக் கோயில். அரிவாட்டாய நாயனார் முத்தித்தலம். தண்டலையார் சதகம் என்னும் அரிய நூலை உடைய தலம்.

சுவாமி : நீள்நெறிநாதர்

அம்பிகை : ஞானாம்பிகை

தல மரம் : குருந்தை

தீர்த்தம் : ஓமக தீர்த்தம்

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

531. விரும்பும் திங்களும் கங்கையும் விம்மவே
சுரும்பும் தும்பியும் சூழ்சடை யார்க்கு இடம்
கரும்பும் செந்நெலும் காய்கமு கின்வளம்
நெருங்கும் தண்டலை நீணெறி காண்மினே.

தெளிவுரை: விரும்பப்படுகின்ற சந்திரனையும், கங்கையையும் திகழத் தரித்து, வண்டுகள் ரீங்காரம் செய்யும் மலர்களைச் சூடி மேவும் சடை முடியுடைய ஈசனுக்கு உரிய இடமாவது, கரும்பும், நெல்லும், பாக்கு மரங்களும் உடைய தண்டலையில் திகழும் நீள்நெறி யாகும். இத்தலத்தை நாடி ஈசனை ஏத்துமின்.

532. இகழும் காலன் இதயத்தும் என்னுளும்
திகழும் சேவடி யான்திருந் தும்இடம்
புகழும் பூமக ளும்புணர் பூசுரர்
நிகழும் தண்டலை நீணெறி காண்மினே.

தெளிவுரை: மார்க்கண்டேயராகிய சிவபக்தரை மதியாது இகழ்ந்துரைத்த காலனைத் திருப்பாதத்தால் உதைத்து அடர்த்தவர், சிவபெருமான். அப்பெருமான்,

Koviloor Digital Library

திருஞானசம்பந்தரின் இதயத் தாமரையில் திகழ்ந்து விளங்கி, யாவும் இயற்றுபவர். அவர் வீற்றிருக்கும் இடமாவது, திருமகளும் அந்தணர்களும் விளங்கும் தண்டலை நீள் நெறியாகும். ஆங்கு அப் பெருமானைத் தரிசித்து ஏத்துமின்.

பூசுரர் – அந்தணர். பூவுலகத்தின் தேவர்கள்.

533. பரந்த நீலப் படரெரி வல்விடம்
கரந்த கண்டத்தி னான்கரு தும்இடம்
சுரந்த மேதி துறைபடிந்து ஓடையில்
நிரந்த தண்டலை நீணெறி காண்மினே.

தெளிவுரை: விரிந்து பரந்த எரிபோன்ற கொடிய நஞ்சினைக் கண்டத்தில் தேக்கி, நீலகண்டராகிய ஈசன், கருதி வீற்றிருக்கும் இடமாவது, ஓடையில் எருமை படிந்து பாலைச் சொரிந்து விளங்கும் தண்டலையில் திகழும் நீள்நெறியாகும். ஆங்கு அப் பெருமானைத் தரிசித்து ஏத்துமின்.

534. தவந்த என்பும் தவளப் பொடியுமே
உவந்த மேனி னான்உறை யும்இடம்
சிவந்த பொன்னும் செழுந்தர ளங்களும்
நிவந்த தண்டலை நீணெறி காண்மினே.

தெளிவுரை: எலும்பு மாலையும், திருவெண்ணீறும் உவந்து திருமேனியில் தரித்த சிவபெருமான் உறையும் இடமாவது, பொன்னும் முத்தும் பரவி மல்கும், தண்டலை நீள்நெறியாகும். ஆங்கு வீற்றிருக்கும் பெருமானைத் தரிசித்து ஏத்துமின்.

தவந்த – வெந்த.

535. இலங்கை வேந்தன் இருபது தோளிற
விலங்க லில்அடர்த் தான்விரும் பும்இடம்

Koviloor Digital Library

சலங்கொள் இப்பி தரளமும் சங்கமும்
நிலங்கொள் தண்டலை நீணெறி காண்மினே.

தெளிவுரை: இராவணனின் இருபது தோளும் நெரியு மாறு கயிலை மலை கொண்டு அடர்த்த ஈசன் விரும்பு கின்ற இடமாவது, நீரில் உள்ள சிப்பிகளும் முத்துக் களும் சங்குகளும் அலைகள் வாயிலாகக் கொண்டு நிலத்தின் செல்வமாகப் பெருக்கும் தண்டலை நீள் நெறியாகும். ஆங்கு வீற்றிருக்கும் பெருமானைக் கண்டு தரிசித்து ஏத்துமின்.

536. கருஅரு உந்தியி னான்முகன் கண்ணன்என்று
இருவ ரும்தெரி யாஒருவன் னிடம்
செருவ ருந்திய செம்பியன் கோச்செங்கண்
நிருபர் தண்டலை நீணெறி காண்மினே.

தெளிவுரை: படைத்தல் தொழிலைச் செய்யும் நான் முகன் திருமாலின் உந்திக்கமலத்தில் தோன்றியவர். அவரும், திருமாலும் தெரிந்து கொள்ள முடியாத ஒப்பற்றவராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் இடமாவது, கோச்செங்கட் சோழ மன்னன் கட்டிய கோயிலாகிய தண்டலை நீள்நெறியாகும். அப்பெருமானைக் கண்டு தரிசித்து ஏத்துமின்.

சிறப்புரை: கோச்செங்கட் சோழ நாயனார் கட்டிய கோயிலின் சிறப்பு இத்திருப்பாட்டில் சுட்டப் பெற்றது.

செரு வருந்திய – கோச்செங்கட் சோழர் போர்க் களத்தில் காட்டிய வீரம் சுட்டப் பெறுவதாயிற்று. ஒருவர் – ஈசன்; நிருபர் – அரசர்.

537. கலவு சீவரத் தார்கையில் உண்பவர்
குலவ மாட்டாக் குழகன் உறைவிடம்
கலவு மாமதி லும்சுதை மாடமும்
நிலவு தண்டலை நீணெறி காண்மினே.

Koviloor Digital Library

தெளிவுரை: சாக்கியரும் சமணரும் அன்பு கொண்டு ஏத்துதல் செய்யாதவராய்ப் புறத்தே இருக்க, சிவபெருமான் வீற்றிருக்கும் இடமானது, மதில்களுடன் விளங்கும் மாடமாளிகைகள் கொண்டு விளங்கும் தண்டலையில் மேவும் நீள்நெறி என்னும் திருக்கோயிலாகும். ஆங்கு அப்பெருமானைக் கண்டு தரிசித்து ஏத்துமின்.

538. நீற்றர் தண்டலை நீணெறி நாதனைத்
தோற்று மேன்மையர் தோணி புரத்துறை
சாற்று ஞானசம் பந்தன் தமிழ்வலார்
மாற்றில் செல்வர் மறப்பர் பிறப்பையே.

தெளிவுரை: திருநீறு அணியப் பெற்ற அடியவர்கள் வாழும் தண்டலையில் வீற்றிருக்கும் நீள்நெறி நாதனை, அத்தகைய திருநீற்றின் செம்மை திகழும் மேன்மையர் விளங்கும் தோணிபுரத்தில் உறையும் ஞானசம்பந்தன் நவின்ற இத்திருப்பதிகத்தால் ஏத்த வல்லவர்கள், நிலைத்த செல்வத்தை உடையவர்களாய்ப் பிறவிப் பிணியும் நீங்கப் பெற்றவராவார்கள்.

சிறப்புரை: இத் திருத்தலத்தில் விளங்கும் ஈசனின் திருப்பெயரானது, இத் திருப்பாட்டில் உணர்த்தப் பெறுவதாயிற்று. ஞானசம்பந்தப் பெருமான், ஈசனின் புகழன்றிப் பிறவற்றைப் பேணார் என்னும் குறிப்புத் தோன்ற, "தோணி புரத்துறை சாற்று ஞானசம்பந்தன்" என உரைத்தலாயிற்று. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்" என அருளிச் செய்தமையும் ஓர்க.

Koviloor Digital Library

இத் திருப்பதிகத்தினை ஊன்றிப் பயில வேண்டும் என்பதும், அதுவே, ஓதும் அன்பர்கள்பால் வலிமையைச் சேர்த்து, ஞானம் முதலான இனிமையை நல்கும் என்பதும் "ஞானசம்பந்தன் தமிழ்வலார்" எனும் அருந் தொடரின் உட்பொருளாகக் கொள்க.

309. திருஆலவாய்

தல விளக்கம்: *பதிகம் எண் 297 காண்க.*

பதிகக் குறிப்பு: *திருஞானசம்பந்தர், அடியார் திருக்கூட்டத்துடன் மதுரையில் மேவிய நாளில், அவர் வருகையை விரும்பாத அமணர்கள், அவ்அருளாளர் கள் திருவாசம் கொண்டு இருந்த திருமடத்தைத் தீயிட்டுக் கொளுத்தினர். இச்செயலை அறிந்த ஞான சம்பந்தர், இதற்குக் காரணமாக இருப்பது சமணர்கள் என்றாலும், அரசாட்சியின் முறைமையானது வழுவியதால் நேரிட்டது என உணர்த்துமாறும், அரசனின் தேவியாரின் திருமாங்கல்யத்தின் காப்புக்கும், குலச்சிறையாரின் மேன்மைக்கும் ஊறு நேராதவாறும், "பையவே சென்று பாண்டியர்க்கு ஆகுக" என்னும் மகுடம் கொள்ளுமாறு, "செய்யனே திருஆலவாய் மேவிய ஐயனே" என எடுத்தோதப் பெற்றது.*

பாண்டிய மன்னன் பின்னர், நின்றசீர் நெடுமாற நாயனார் ஆகும் பெற்றியை உள்ளிருத்திய அருட் குறிப்பும் இவண் ஈசனைப் போற்றுதல் வாயிலாகப் பெறப்படும் பேறு ஆயிற்று.

பண் : கௌசிகம்

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

539. செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐய னேஅஞ்சல் என்றருள் செய்எனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வும்சுடர்
பைய வேசென்று பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: எமக்குப் பாதுகாவலாக விளங்கும் பெருமானே! திருஆலவாயில் கோயில்கொள்ளும் தலைவனே! அஞ்சாதே என்று அருள் செய்வீராக. பொய்த் தன்மை உடையவராகிய அமணர்கள் என்னை எரிக்குமாறு பற்ற வைத்த நெருப்பானது மெல்லச் சென்று பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

சிறப்புரை: ஈசன், சிவந்த திருமேனியராக விளங்கு தலையும், அப் பெருமான் யாவற்றினையும் விளை விக்கும் அடித்தளமாகத் திகழ்தலையும், பாதுகாவலாக மேவி இருத்தலையும் சுட்டுமாறு, "செய்யன்" என்று உணர்த்தப் பெற்றது. ஈசனை உள்கி, பாண்டியனின் மாண்பினையும் உள்கி, "பாண்டியற்கு ஆகவே" என்று அளிக்கப் பெற்ற ஆணையானது, அவ் வரசனுக்குச் சைவத்தின் மெய்ப்பாங்கை உணரச் செய்யும் வெப்பு நோய் ஆக்கப் பெறுதற்கும், பின்னர் நின்றசீர் நெடுமாறன் ஆவதற்கு உரிய முகாந்தரம் ஆகுதற்கும் வழியாயிற்று.

செய்ய – சிவந்த, நிலம் (சேறு), காவல், நெறி.

540. சித்த னேதிரு ஆலவாய் மேவிய
அத்த னேஅஞ்சல் என்றருள் செய்எனை
எத்த ராம்அம ணர்கொளு வும்சுடர்
பத்தி மன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

Koviloor Digital Library

தெளிவுரை: ஈசன், எல்லாவிதமான ஆற்றல்களையும் உடைய சித்தர்; திருஆலவாயில் மேவி விளங்கும் அன்பிற்குரியவர். "அஞ்சாதே" என்று அருள் புரிவீராக. வஞ்சனையுடைய அமணர்கள் என்னை எரிக்குமாறு பற்ற வைத்த நெருப்பானது, சமணப் பற்றுடைய பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

சிறப்புரை: ஈசன், யாவும் செய்யவல்ல ஆற்றல் உடைய பெருமான் என்பதனைச் சித்தன் என்னும் சொல் கொண்டு சுட்டப் பெறுவதாயிற்று. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "அத்தனே! அண்டர் அண்டமாய் நின்ற ஆதியே! யாதும் ஈறிலாச் சித்தனே! பத்தர் சிக்கெனப் பிடித்த செல்வமே! சிவபெருமானே!" (பிடித்த பத்து 8) என, அருளிச் செய்தவண்ணம் காண்க.

என் சித்தத்தில் வீற்றிருக்கும் பெருமானே! என்று போற்றும் தன்மையில், சித்தனே என அருளிய தாயிற்று எனலும் பொருந்தும். அன்பிற்குரியவராகிய ஈசனை "அத்தனே" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில், "அத்தன் ஆனந்தன் அமுதன் என்று அள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்" என மாணிக்கவாசகரும்; "அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனல் ஆமே" எனச் சுந்தர மூர்த்தி சுவாமிகளும்; "முத்தனே முதல்வாதில்லை அம்பலத்தாடுகின்ற அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே" எனத் திருநாவுக்கரசரும் அருளிச் செய்த பாங்கும் நோக்குக.

தற்போதைய நிலையிலிருந்து மாறி நாயனாராகத் திகழவிருக்கும் மாண்பினைப் புகலும் அருட் குறியாக, "பத்திமன் தென்னன் பாண்டியற்கு" என்னும் சொற்றொடர் உணர்த்துதலாயிற்று.

Koviloor Digital Library

541. தக்கன் வேள்வி தகர்த்தருள் ஆலவாய்ச்
சொக்க னேஅஞ்சல் என்றருள் செய்எனை
எக்க ராம்அம ணர்கொளு வும்சுடர்
பக்க மேசென்று பாண்டியற் காகவே.

தெளிவுரை: தக்கன் செய்த தீய வேள்வியைத் தகர்த்து அருள் தன்மையை வழங்கிய ஆலவாயில் மேவும் சொக்கநாதனே! அஞ்சாதே என உரைத்தருள்வீராக. செருக்குடைய அமணர்கள் என்னை எரிக்குமாறு செய்வித்த தீயானது அத்தகையோர் பக்கமே சார்ந்து சென்று, பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

சிறப்புரை: இத் திருப்பாட்டானது, இத் திருத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனின் திருநாமத்தை ஓதியருளிய வண்ணம் ஆயிற்று.

542. சிட்ட னேதிரு ஆலவாய் மேவிய
அட்ட மூர்த்திய னேஅஞ்சல் என்றருள்
துட்ட ராம்அம ணர்கொளு வும்சுடர்
பட்டி மன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: நன்னெறியாக விளங்கும் பெருமானே! திருஆலவாயின்கண் மேவிய அட்ட மூர்த்தியே! அஞ்சாதே என உரைத்தருள்வீராக. தீய குணத்தை உடைய அமணர் என்னை எரிக்கும் தன்மையில் வைத்த நெருப்பானது, கல்வியில் வல்லவனாகிய பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

சிறப்புரை: ஞானமும் நல்லொழுக்கமும் உடைய ஈசனின் தன்மை சிட்டனே என உரைக்கப் பெற்றது. இத்தன்மையில் திருநாவுக்கரசர்,

சிட்டர் வானவர்சென்று வரம்கொளும்
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலத்துறை

Koviloor Digital Library

சிட்டன் சேவடி கைதொழச் செல்லும்அச்
சிட்டர் பால்அணு கான்செறு காலனே.

– 5ஆம் திருமுறை, பா. வ. எண். 6

என அருளிச் செய்தமை காண்க.

ஈசன். ஐம்பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் மற்றும் சூரியன், சந்திரன், ஆன்மா எனவாகிய தன்மையினை அட்ட மூர்த்தியானவன் என சுட்டப் பெற்றது.

பாண்டிய மன்னன் கல்வியறிவு பெற்றவனாதலும், ஆயினும் மெய்க் கல்வியை உணராத நிலையை மாற்றி ஞானத்தை உணர்பவனாய் ஆக்கும் அருட் குறிப்புத் தோன்ற, “பட்டிமன் தென்னை” எனச் சுட்டப் பெற்றது.

சிட்டன் – ஒழுக்கம் உடையவன், ஞானி, ஈசன். துட்டர் – கொடியவர். பட்டிமன் – கல்வியறிவுடையவன். கூன் பாண்டியனைச் சுட்டியது.

543. நண்ண லார்புர மூன்றுளரி ஆலவாய்
அண்ண லேஅஞ்சல் என்றருள் செய்எனை
எண்ணி லாஅம ணர்கொளு வும்சுடர்
பண்ணி யற்றமிழ் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: பகைமை கொண்டு திரிந்த அசுரர்களின் மூன்றுபுரங்களை எரி செய்த ஆலவாய் அண்ணலே! அஞ்சாதே என்று அருள் செய்வீராக. என்னை எரிக்கும் முனைப்புக் கொண்டவராய், நல்ல எண்ணம் இல்லாதவராகிய அமணர் கொளுத்திய நெருப்பானது, பண்ணின் இசையுடன் தமிழ் வழங்கும் பாண்டியற்கு ஆகுக.

சிறப்புரை: திருஞானசம்பந்தர் தமது அடியார் திருக்கூட்டத்துடன் வீற்றிருந்த திருமடத்தில் தீவைத்து

Koviloor Digital Library

ஊறு விளைக்கப் பெற்றதாயினும் பாண்டியன் பேணிய தமிழ்ப் பண்பின் செம்மை நனி உரைக்கப் பெற்ற பாங்கில் "பண்ணியற்றமிழ் பாண்டியன்" எனச் சுட்டப் பெற்றது.

544. தஞ்சம் என்றுன் சரண்புகுந் தேனையும்
அஞ்சல் என்றருள் ஆலவாய் அண்ணலே
வஞ்சம் செய்துஅம ணர்கொளு வும்சுடர்
பஞ்ச வன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: ஆலவாயில் வீற்றிருக்கும் அண்ணலே! தஞ்சம் என்று உன்னைச் சரண் புகுந்த என்னை அஞ்சாதே என்று உரைத்தருள் புரிவீராக. வஞ்சம் உடையவராகிய அமணர்கள் என்னை எரிக்கும் தன்மையில் கொளுத்திய நெருப்பானது பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

545. செங்கண் வெள்விடை யாய்திரு ஆலவாய்
அங்க ணாஅஞ்சல் என்றருள் செய்எனைக்
கங்கு லார்அமண் கையர் இடும்கனல்
பங்கமில் தென்னவன் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: கனல் போன்ற விழியுடைய வெள்ளை இடபத்தை வாகனமாக உடையவரே! திருஆலவாயில் வீற்றிருக்கும் அழகிய விழியுடையவனே! "அஞ்சேல்" என உரைத்தருள்வீராக. என்னை எரிக்குமாறு இருள் கொண்ட நெஞ்சினராகிய அமணர்கள் வைத்த நெருப்பானது, பங்கம் இல்லாத பாண்டியனுக்கு ஆகுக.

சிறப்புரை: திருமடத்திற்குத் தீ வைத்த செயலானது அரசின் செங்கோல் முறைமைக்குப் பங்கமாயிற்று என வலியுறுத்தும் பாங்கிலும், ஆயினும், அரசனுக்கு இழிவு

Koviloor Digital Library

நேர்தல் ஆகாது என்னும் கருத்திலும், "பங்கம் இல் தென்னன்" எனச் சுட்டப் பெற்றது.

546. தூர்த்தன் வீரம் தொலைத்தருள் ஆலவாய்
ஆத்த னேஅஞ்சல் என்றருள் செய்எனை
ஏத்தி லாஅம ணர்கொளு வும்சுடர்
பார்த்தி வன்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: தீய பண்புடையவனும் சிந்தை திரிந்தவனும் ஆகிய இராவணனுடைய வீரத்தை அழித்தும், வாளும் வாழ்நாளும் நல்கி அருள் புரிந்தும், திகழும் ஆலவாய் நாதனே! அஞ்சேல் என்று உரைத்தருள் வீராக. நன்கு ஏத்திப் போற்றுதற்கு உரியவராய் இல்லாத அமணர்கள் என்னை எரிக்குமாறு கொளுத்தி வைத்த நெருப்பானது பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

சிறப்புரை: சிவபெருமானால் ஞானப்பால் அளிக்கப் பெற்று ஆளுடைய பிள்ளையாராய் விளங்கும் திருஞானசம்பந்தரை, ஏத்திப் போற்றி, பல நன்மைகளும் இக, பர நலன்களையும் கொள்ளாது, அஞ்ஞானத்தால் மயங்கிய நிலையில் மேவிய தன்மை ஏத்திலா அமணர் எனச் சுட்டிற்று.

பார்த்திவன் – அரசன்.

547. தூவி னாயன் தானறி யாவகை
மேவி னாய்திரு ஆலவா யாய்அருள்
தூவி லாஅம ணர்கொளு வும்சுடர்
பாவி னான்தென்னன் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: உலகத்தைத் தாவி அளக்க, நெடிது உயர்ந்தவராகிய திருமாலும், அயனாகிய பிரமனும், அறியாத வகையில் மேவிய நாதனே! திரு ஆலவாயில்

Koviloor Digital Library

வீற்றிருக்கும் பெருமானே! அருள் புரிவீராக. தூய்மை இல்லாத அமணர்கள் கொளுத்திய நெருப்பானது பரந்து சென்று பாண்டியனுக்கு ஆகுக.

தூவிலா – தூய்மை இல்லாத. ஈசனை மலர்தூவிப் போற்றாத தன்மையுடையமையைக் குறித்தலும் பொருந்தும். பாவினான் – பரவுதல்.

548. எண்தி சைக்கு எழில் ஆலவாய் மேவிய
அண்ட னேஅஞ்சல் என்றருள் செய்எனைக்
குண்ட ராம்அம ணர்கொளு வும்சுடர்
பண்டி'மன் தென்னன் பாண்டியற்கு ஆகவே.

தெளிவுரை: எட்டுத் திசைகளிலும் எழில் பரவும் பெருமை விளங்கும் ஆலவாயில் மேவிய அண்டர் நாயகனே! அஞ்சேல் என்று அருள் செய்வீராக. சிறுமையுடைய அமணர்கள் என்னை எரிக்குமாறு கொளுத்திய நெருப்பானது, தொன்மையாக விளங்கும் பாண்டிய மன்னனுக்கு ஆகுக.

சிறப்புரை: அண்டங்களுக்கெல்லாம் நாயகனாகிய ஈசனின் சிறப்பு, 'அண்டனே' எனச் சிறப்பித்து உரைக்கப் பெற்றது. இது அண்டங்கள் யாவும் ஆகியவன் ஈசன் எனவும் உணர்த்தும். இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "அண்டா! நின்னையல்லால் இனியாரை நினைக்கேனே" என அருளிச் செய்துள்ள பாங்கும் காண்க.

பாண்டிய நாடு ஈசன் வீற்றிருந்து அருள் வளம் கொண்ட பழம் பதியாகிய சிறப்பினைப் "பண்டிமன்" எனச் சுட்டுமாறு கொள்க. இத்தன்மையில், மாணிக்க வாசகர், "பாண்டி நாடே பழம்பதி யாகவும், பக்தி செய் அடியரைப் பரம்பரத்து உய்ப்பவன்" என அருளிய வண்ணமும் காண்க.

14.

Koviloor Digital Library

549. அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்
வெப்பம் தென்னவன் மேலுற மேதினிக்கு
ஒப்ப ஞானசம் பந்தன் உரைபத்தும்
செப்ப வல்லவர் தீதிலாச் செல்வரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: திருஆலவாயில் வீற்றிருக்கும் ஆதி மூர்த்தியாகவும், என் தந்தையாகவும் விளங்கும் ஈசனின் திருவருளால், நெருப்பின் வெப்பமானது பாண்டிய மன்னன்மீது பொருந்துமாறு, உலக நியதிக்கு ஏற்ற தன்மையில் ஞானசம்பந்தன் உரைத்த இத் திருப்பதிகத்தைச் சொல்ல வல்லவர்கள், தீமையினால் பற்றப்படாது செல்வந்தராகத் திகழ்வார்கள்.

சிறப்புரை: ஈசனை அப்பன் எனக் குறிப்பிட்டுச் சுட்டப் பெற்றமை காண்க. இத்தன்மையில், "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே" என மாணிக்கவாசகரும், "அப்பன் நீ அம்மை நீ" எனத் திருநாவுக்கரசரும் ஈசனை ஏத்தி அருளிச் செய்துள்ளமையும் காண்க.

அப்பன் – தந்தை, கடவுள், கங்கை தரித்தவன் எனவும் (அப்பு – நீர்) குளிர்ச்சி பொருந்திய பிரான் எனக் கொள்ளுதலும் சிறப்புடைத்து.

310. திருஆலவாய்

தல விளக்கம்: பதிகம் எண் 297 காண்க.

பதிகக் குறிப்பு: பாண்டிய மன்னனின் வெப்பு நோய் நீங்கப் பெற்று, உலகெலாம் உய்யுமாறு தோன்றிய திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னனும் மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் உடன்மேவ, ஆலவாய் அண்ணலின் திருமுன்னர் வணங்கி நின்று ஏத்தி அருளிய திருப்பதிகம்.

Koviloor Digital Library

திருவிராகம்

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

550. வீடலால வாயிலாய் விழுமியார்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநீள்க டிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே.

தெளிவுரை: வீடு பேறு என்று சொல்லப்படும் முத்தி நலத்தை அன்றி வேறு அவா இல்லாத சிறப்புடைய பெருமக்கள், நின்னுடைய புகழ்ப் பாடலைப் பாடுகின்ற புகழின்கண் பரவி விளங்கும் பண்புடைய பெருமானே! சுடுகாட்டில் விரும்பி ஆடும் நாதனே! கபாலத்தைக் கையில் ஏந்திய ஈசனே! நீண்ட பெருமை உடைய மதில் விளங்கும் கூடலில் திகழும் ஆலவாய் என்னும் திருக்கோயிலில் மகிழ்ந்து நிலவும் திருக்கோலந்தான் என்னே!

சிறப்புரை: இத் திருப்பாட்டு, ஈசனின் அருள் வண்ணத்தை வியந்து போற்றுவதாயிற்று. வீடு பேறு நல்கும் திருஆலவாயிலானின் சிறப்பும், ஈசனின் இனிய திருக்கோலமும், இத் திருத்தலத்தின் சிறப்புப் பெயர்களாகிய பூலோக கயிலாயம், சிவராசதானி என்பனவற்றை நினைந்து ஏத்துதலாய் விளங்கிற்று. ஈசனைப் புகழ்ந்து பாடும் செம்மையானது, "பாடலால வாயிலாய்" எனப் போற்றப்பட்டது. இத்தன்மையினைத் திருநாவுக்கரசர், "மனத்தகத்தான் தலை மேலான் வாக்கின் உள்ளான், வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர் இனத்தகத்தான்" என அருளிச் செய்தமையும் காண்க.

Koviloor Digital Library

ஈசன், திருஆலவாயில் மகிழ்ந்து குலவி மேவும் தன்மையால் அடியவர்களுக்கு அருளுதலை உணர்த்து மாறு, "குலாயதென்ன கொள்கையே" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்கவாசகர், "நம்பும் என் சிந்தை நணுகும் வண்ணம் நான் அணுகும் அம்பொன் குலாத்தில்லை யாண்டானைக் கொண்டன்றே" என அருளிச் செய்தமை காண்க.

பாடலாலவாயிலாய் – பாடல் ஆல – வாயிலாய் (ஆலுதல் – இசைத்தல்). கபாலி – பிரம கபாலம் ஏந்திய ஈசன். ஆலவாய் திருக்கோயிலின் மதில் என்பதும் ஆம். கூடல் – மதுரை.

551. பட்டி சைந்த அல்குலாள் பாவையாள் ஓர்பாகமா
ஒட்டி சைந்த தன்றியும் உச்சியாள்ஒ ருத்தியாக்
கொட்டி சைத்த ஆடலாய் கூடல்ஆல வாயிலாய்
எட்டி சைந்த மூர்த்தியாய் இருந்தவாறுஇது என்னையே.

தெளிவுரை: பட்டுப் போன்ற உமாதேவியை ஒரு பாக மாகக் கொண்டு அர்த்தநாரியாய் மேவும் பெருமானே! சடை முடியில் கங்கையாளை உச்சியாய்க் கொண்டு திகழும் நாதனே! கொடு கொட்டி என்னும் திருக்கூத்தினைப் புரியும் ஈசனே! கூடலில் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கும் பரமனே! அட்டமூர்த்தியாய் விளங்கும் சிவபெருமானே! தேவரீ ருடைய அருள் வண்ணம் பெருகி இருக்குமாறு மேவிய செம்மைதான் என்னே!

552. குற்றம்நீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்தமின்பம் என்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் உரைப்பதன்மு கம்மனே.

தெளிவுரை: ஈசனே! மன்னுயிர்களின்பால் தோன்றிப் பற்றி நிற்கும் குற்றமாகிய வினையும் நீவிர்!

Koviloor Digital Library

எப்பொருட்கும் இயல்பாய் இருந்து விளங்கும் குணமும் நீவிர்! கூடலில் திகழும் ஆலவாயிலில் வீற்றிருக்கும் ஈசனே! எனக்குச் சுற்றமாகி நின்று மேவு பவர் நீவிர்! தலைவன் நீவிர்! எப்பொருளுக்கும் அதன் விளக்கமாகவும் அவற்றால் பெறப்படும் இன்பமாக இருக்கும் மெய்ப் பொருளும் நீவிர்! நீவிரே முற்றுமாய் விளங்கி என்னை ஆழ்த்துபவர். அவ்வாறு இருக்க, நின்னைப் புகழ்ந்து உரைத்து முகமன் உரைப்பது என்பது யாங்ஙனம்!

சிறப்புரை: இத் திருப்பாட்டு வேதசாரமாய், யாவும் இறைவனே ஆகுதலை ஓதுவதாயிற்று. எங்கும் நிறைந்த இறைவன் சுற்றும் திகழ விளங்குபவன் எனக் காண்க. இந் நெறியில் திருநாவுக்கரசர்,

அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ ஒரு குலமும் சுற்றமும்
ஒருரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ துணையாய் என்
நெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்துநீ இறைவன்நீ ஏறூர்ந்த
செல்வன் நீயே

என அருளிச் செய்தமையும் காண்க.

ஈசனைப் போற்றிப் புகழ்தலானது, உள்ளவாறு திகழும் மெய்ம்மையே அன்றி முகமன் கூறும் வெற்றுப் புகழ்ச்சியாகாது என்பதனை, "புகழ்ந்து முன் உரைப்பது என்! முகமனே" என உணர்த்தப் பெற்றது.

இத்தன்மையில் ஈசன் புகழ்ச்சியைக் கடந்து விளங்குபவர் என்பதனை மாணிக்கவாசகர், "அருளுடைச் சுடரே, அளிந்ததோர் கனியே! பெருந்

Koviloor Digital Library

திறல் அருந்தவர்க்கு அரசே! பொருளுடைக் கலையே! புகழ்ச்சியைக் கடந்த போகமே! யோகத்தின் பொலிவே! தெருளிடத்து அடியார் சிந்தையுள் புகுந்த செல்வமே சிவபெருமானே! இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்து அருளுவது இனியே!" (அருட்பத்து 4) என ஓதி அருளிய செம்மை ஓர்க.

553. முதிருநீர்ச் சடைமுடி முதல்வநீ முழங்கழல்
அதிரவீசி யாடுவா யழகநீ புயங்கன்நீ
மதுரநீ மணாளநீ மதுரைஆல வாயிலாய்
சதுரன்நீ சதுர்முகன் கபாலம்ஏந்து சம்புவே.

தெளிவுரை: ஈசனே! உயர்ந்ததாகவும் புனிதத் தன்மை உடையதாகவும் உடைய கங்கையைச் சடை முடியில் தரித்து விளங்கும் முதல்வன் நீவிர்! நெருப்பின் அனல் வீசி ஒலி எழுப்பக் கைகளை வீசி ஆடுகின்ற பாங்குடைய அழகன் நீவிர்! பாம்பினை அணிந்து விளங்கும் பெருமான் நீவிர்! மன்னுயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் இனியவர் நீவிர்! அழகிய மணவாளனாக விளங்குபவர் நீவிர்! மதுரையின்கண் ஆலவாயில் வீற்றிக்கும் சிவபெருமானே! சதுரப்பாடு உடையவர் நீவிர்! பிரமதேவனின் கபாலத்தை ஏந்திச் சுகமளிக்கும் பரம்பொருளே! நின் கழலை ஏத்திப் போற்றுகின்றனம்.

சிறப்புரை: தம்பால் நீராடும் மாந்தரின் பாவங்களை நீக்கிப் புனிதமாக்கும் கங்கையின் சிறப்புச் சுட்டுமாறு, "முதிரு நீர்" என உணர்த்தப் பெற்றது. ஈசன் பாம்பினை அணிந்து மேவும் திருக்கோலத்தைப் "புயங்கன் நீ" என ஓதப் பெற்றது. இத்தன்மையில், "போற்றி போற்றி புயங்கப் பெருமான்" என மாணிக்க

Koviloor Digital Library

வாசகர் உரைத்தருளியதும் நோக்குக. ஈசனின் இயல்பான அருட் குணமாகி, உலகத்தைப் புரத்தல் செய்வதாகிய குணப் பேறாகக் கருதப்படும், மன்னுயிர்க்குச் சுகமளிக்கும் பான்மையினைச் "சம்புவே" என்று உரைக்கப் பெற்றது. இந்நெறியில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

செம்பொன் மேனி வெண்ணீறணி வானைக்
கரிய கண்டனை மால்அயன் காணாச்
சம்புவைத் தழல் அங்கையி னானைச்
சாமவேத னைத்தன் னொப்பி லானை
— திருநள்ளாறு திருப்பதிகம், பாடல் 1

என அருளிச் செய்த வாக்கும் நோக்குக.

சதுரன் – எல்லாம் வல்லவன்; பேரறிஞன்.

554. கோல மாய நீள்மதிற் கூடல்ஆல வாயிலாய்
பால னாய தொண்டு செய்து பண்டும்இன்றும் உன்னையே
நீல மாய கண்டனே நின்னையன்றி நித்தலும்
சீல மாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே.

தெளிவுரை: அழகு மிக்க நீண்ட மதில் கொண்ட கூடலில் விளங்கும் ஆலவாயிலில் வீற்றிருக்கும் பெருமானே! சண்டேசுவரர் பூசைத் தொண்டு புரிந்து உன்னையே போற்றி, யாண்டும் வழிபட மேவும் நீல கண்டனே! தேவர்கள் நின்னை அன்றி நித்தமும் சிந்தித்து வழிபடத் தக்கவராய் வேறு யார் இருக்கிறார்கள்!

சிறப்புரை: பாலனாய்த் திகழகின்ற காலத்தில், சிவபூசை செய்யும் தொண்டு ஆற்றிய சண்டேஸ்வரரை இத்

Koviloor Digital Library

திருப்பாட்டு குறித்தது. இது, மார்க்கண்டேயரைக் குறித்து உரைக்கப் பெற்றது என்றாலும் பொருந்தும்.

தேவர்கள் நாள்தொறும் ஈசனைப் போற்றி வழிபடுதலும், அவர்கள் ஈசனையன்றி வேறு தெய்வத்தைப் பூசிப்பது இல்லை என்பதும் இவண் சுட்டப் பெற்றது. "சிந்தையில் தேர்வதில்லை" என்ற தொடர்வாயிலாக உணர்த்தப் பெறும் தெளிவையும் உய்த்துணர்க. ஈசனே முழு முதற் பொருள் எனக் கொள்க.

சீலம் – குற்றம் ஓராது குணமே கொள்ளும் செம்மை.

555. பொன்தயங்கு இலங்குஒளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலி
கொன்றையம் முடியினாய் கூடல்ஆல வாயிலாய்
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

தெளிவுரை: பொன்னின் ஒளி விளங்குகின்றதைப் போன்று, நலம் திகழும் குளிர்ந்த சடை முடியானது, ஒளிக் கதிர்கள் வீசுமாறு திரு நடம் புரியும் சிவபெரு மானே! தோற்றம் பெறும் பிறப்பு என்னும் பான்மை யில் மேவாத ஈசனே! திரு முடியில் பிரணவ புஷ்ப மாகிய கொன்றை மலரைத் தரித்துள்ள பெருமானே! கூடல் பதியில் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கும் நாதனே! தேவரீருடைய ஒளிமயமாகிய திரு நடனக் காட்சியினை நினைந்து ஏத்துதலே வழிபடுகின்ற பாங்குடைத்து அல்லவா!

சிறப்புரை: ஈசனின் திருக்கூத்தை நினைத்துப் போற்று தல் அப்பெருமானை வழிபடுகின்ற பாங்காயிற்று என உரைக்கப் பெற்றது. இத் தன்மையில்,

Koviloor Digital Library

தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு

— உண்மை விளக்கம், பாடல் 36

என்னும் திருப்பாடலில் அருளிச் செய்தவாறு, முத்தி நான்ற மலர்ப்பதத்தை நாடி வணங்கும் செம்மையினை நன்கு உணர்த்துதலாயிற்று.

556. ஆதிஅந்தம் ஆயினாய் ஆலவாயில் அண்ணலே
சோதியந்தம் ஆயினாய் சோதியுள்ளொர் சோதியாய்
கீதம்வந்த வாய்மையால் கிளர்தருக்கி னார்க்கல்லால்
ஓதிவந்த வாய்மையால் உணர்ந்து ரைக்கலாகுமே.

தெளிவுரை: ஆலவாய் என்னும் தலத்தில் வீற்றிருக்கின்ற அண்ணலே! ஆதியும் அந்தமுமாக இருப்பவர் நீவிர்; சோதியின் எல்லையாக விளங்குபவர் நீவிர்; பெருஞ் சோதிக்குள் சோதியாய் விளங்கி ஒளிரச் செய்பவர் நீவிர்; மெய்ஞ்ஞானமாகிய சிவஞானத்தால் விளங்கி மேம்படுவர்களுக்கேயன்றி, தேவரீரின் அருள் தன்மையினை உணர்வதற்கும் உரைப்பதற்கும் கூடுமோ!

தருக்குதல் – மேம்படுதல்.

557. கறையிலங்கு கண்டனே கருத்திலாக் கருங்கடல்
துறையிலங்கை மன்னனைத் தோளடர ஊன்றினாய்
மறையிலங்கு பாடலாய் மதுரையால வாயிலாய்
நிறையிலங்கு நெஞ்சினால் நினைப்பதே நியமமே.

தெளிவுரை: நீலகண்டத்தை உடைய பெருமானே! இலங்கையின் மன்னனாகிய இராவணனுடைய தோள் நெரியுமாறு கயிலை மலையால் ஊன்றிய தேவரீர், வேதத்தின் பாடலாக மேவி, மதுரையில்

Koviloor Digital Library

திகழும் ஆலவாய் என்னும் திருக்கோயிலில் வீற்றிருப்பவர். ஒருமித்த மனத்தினால் எண்ணித் துதிப்பதே தேவரீரை வழிபடுவதற்குரிய நியமம் ஆகும்.

558. தாவணவ் விடையினாய் தலைமையாக நாள்தொறும்
கோவணவ் வுடையினாய் கூடலால வாயிலாய்
தீவணம் மலர்மிசைத் திசைமுகனும் மாலுநின்
தூவணம் அளக்கிலார் துளக்கம் எய்துவார்களே.

தெளிவுரை: தாவிச் செல்லும் இடப வாகனத்தை உடைய பெருமானே! கோவண ஆடையை முதன்மை யாகக் கொண்டு விளங்கும் நாதனே! கூடலில் விளங்கும் ஆலவாயில் வீற்றிருக்கும் பரமனே! செந்தாமரை மலரில் திகழும் பிரமனும், திருமாலும் தேவரீரை அளந்து அறியும் தன்மை அற்றவராய், அயர்ச்சி அடைந்தனர் அல்லவா!

சிறப்புரை: வேதங்களே கோவணமாக உடைமையால் கோவண உடையே தலைமையாகக் கொள்ளும் உடையாயிற்று எனக் கொள்க.

தாவணம் – தாவும் வண்ணம்; தீவண மலர் – செந்தாமரை.

559. தேற்றமில் வினைத்தொழிற் றோரும் சமணரும்
போற்றிசைத்து நின்கழல் புகழ்ந்துபுண் ணியங்கொளார்
கூற்றுதைத்த தாளினாய் கூடலால வாயிலாய்
நாற்றி சைக்கும்மூர்த்தியாகி நின்றதென்ன நன்மையே.

தெளிவுரை: தெளிந்த பயனை நல்காத செயலின்கண் மேவும் தேரர்களும் சமணர்களும் நின்னுடைய திருவடியை வணங்கிப் போற்றிப் புண்ணியத்தைக் கொள்ளாதவராயினர். கூற்றுவனை உதைத்த திருப்பாதனே! கூடலின் ஆலவாயின்கண் வீற்றிருக்கும் ஈசனே! உலக மூர்த்தியாய் நின்று விளங்கி,

Koviloor Digital Library

உயிர்களுக்கு எல்லா நன்மையும் தருபவர் நீவிரே அல்லவா!

சிறப்புரை: நான்கு திக்குகளுக்கும் இறைவனாகிய தன்மையில் ஈசன் திகழ்தலும், அவரே நன்மை விளைவிப்பதும் சுட்டப் பெற்றது. உலகத்தின் எழிலை நான்கு திக்குகள் என மொழிதல் ஆயிற்று. இதனை உலக நாதன் என்னும் திருநாமத்தின் சிறப்புக் கொண்டும் காண்க.

560. போயநீர் வளங்கொளும் பொருபுனல் புகலியான்
பாயகேள்வி ஞானசம் பந்தனல்ல பண்பினால்
ஆயசொல்லின் மாலைகொண்டு ஆலவாயில் அண்ணலைத்
தீயதீர எண்ணுவார்கள் சிந்தையாவர் தேவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: நீர் வளம் பெருகும் புகலியில், பரந்த கேள்வி ஞானம் மிக்க, வேதம் வல்ல ஞானசம்பந்தன் சிவபெருமானை ஏத்துதலாகிய நற்பண்பால் விளங்கும் சொல்மாலை கொண்டு ஆலவாய் அண்ணலை ஏத்திய இத்திருப்பதிகத்தை எண்ணத்தில் கொண்டும், சிந்தையில் பதித்தும் ஓதுபவர்கள், தீயவை யாவும் நீங்கப் பெற்றவராய் விளங்குவார்கள். அவர்கள், தேவர்களுக்கு ஒப்பாவார்கள்.

பாயகேள்வி – பரந்த கேள்வியால் வரும் வேதம்.

311. திருவானைக்கா

தல விளக்கம்: காவிரி வடகரைத் தலங்கள் 63இல், இது 60ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. வெள்ளை

Koviloor Digital Library

யானையும் சிலந்தியும் வழிபட்டது. பஞ்சபூதத் தலங்களுள் இது அப்புத் தலம். அம்பிகை, அஷ்டவசுக்கள், பிரமன், பராசரர், கோச்செங்கட் சோழன் முதலியோர் வழிபட்டது. முதலில் பூசித்த சிலந்தி மறுபிறப்பில் கோச்செங்கட் சோழனாகப் பிறந்தது என்பது வரலாறு.

மற்றும் இரண்டாம் திருமுறை பதிக எண் 159 காண்க.

சுவாமி : அப்புலிங்கேஸ்வரர், வெண்ணாவலீசர், ஜம்புநாதர்

அம்பிகை : அகிலாண்டேஸ்வரி

தல மரம் : வெண்ணாவல் மரம்

தீர்த்தம் : காவிரி

திருவிராகம்

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

561. வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார் ஏதும்ஏதும் இல்லையே.

தெளிவுரை: வானின் இருளை நீக்கிக் காக்கும் தன்மையதாய் விளங்கும் வெண் மதியைச் சடை முடியில் தரித்து, தேன் அன்ன இனிய மொழியாற்றும் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு மேவும் சிவபெருமான், ஆனைக்கா என்னும் தலத்தில் வீற்றிருக்கும் அண்ணல் ஆவார். அப்பெருமானின் திருவடியை அபயம் கொண்டு வாழ்பவர்களுக்குப் பாதுகாவலாக வேறு எதுவும் தேவையில்லை. அவர்களுக்கு எத்தகைய பாவமும் நேராது.

Koviloor Digital Library

562. சேறுபட்ட தண்வயல் சென்று சென்று சேண்உலா
ஆறுபட்ட நுண்துறை ஆனைக்காவில் அண்ணலார்
நீறுபட்ட மேனியார் நிகரில்பாதம் ஏத்துவார்
வேறுபட்ட சிந்தையார் விண்ணில்எண்ண வல்லரே.

தெளிவுரை: வயல்களின் வளம் பெருகுமாறு நெடுந் தொலைவு சென்று உலவி வருகின்ற காவிரி ஆற்றின் துறையில் மேவும் ஆனைக்காவில் வீற்றிருக்கும் அண்ணலாகிய சிவபெருமான், திருவெண்ணீறு பூசிய திருமேனி உடையவர். நிகரில்லாத அப் பெருமானின் திருவடிகளை ஏத்துபவர்கள், உலக மாயையில் சிக்க வைக்கும் அஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டவராய், நற்கதிக்கு ஆளாக்கப் பெறுகின்ற சிவஞானம் கைவரப் பெற்றவராய் விளங்குபவர்கள் எனத் தேவர்கள் எண்ணி மகிழ்வார்கள்.

சிறப்புரை: நிலவளத்தைப் பெருக்கும் காவிரி ஆற்றின் இயல்பினை உவமையாகக் கூறி, ஈசனின் திருவடியை ஏத்தும் அடியவர்களின் மன வளமானது பெருகிச் சிவஞானம் அடைதல் உணர்த்தப் பெற்றது. மண்ணுலகில் சிவஞானம் கொண்டு திகழும் சிவனடியார்களைத் தேவர்கள் சிறப்பாகப் போற்றும் மாண்பினையும், இத் திருப்பாட்டு நவில்வதாயிற்று.

563. தாரமாய மாதராள் தானொர்பாகம் ஆயினான்
ஈரமாய புன்சடை ஏற்றதிங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை ஆனைக்காவில் அண்ணலை
வாரமாய் வணங்குவார் வவ்வினைகள் மாயுமே.

தெளிவுரை: தாரம் ஆகிய உமாதேவியாரைத் திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு மேவும் சிவபெருமான், கங்கையைச் சடை முடியில் வைத்து விளங்குவதோடு சந்திரனைச் சூடியவர். சோழ

Koviloor Digital Library

மன்னன் ஒருவனின் வேண்டுகோளுக்கு இணங்க, விலை உயர்ந்த ஆரத்தைத் திருமார்பில் ஏற்ற அவ் ஆனைக்காவின் அண்ணலை, முறையாக அன்பு பூண்டு வணங்கும் அடியவர்களின் தீவினை யாவும் நீங்கும்.

சிறப்புரை: சோழ மன்னன் ஒருவன், காவிரியின் துறையில் நீராடிய காலத்தில் கழுத்தில் அணிந்திருந்த விலை உயர்ந்த மணி ஆரமானது காவிரியில் அடித்துச் சென்றது. இதனை அறிந்த மன்னன், அவ்வாரத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவ்வாற்றிடையில் நின்று ஈசனைப் பிரார்த்தித்தான். அவன் வேண்டுகோளை ஏற்ற இறைவன், அவ் ஆரத்தினைத் திருமஞ்சன நீர் எடுக்கச் செல்வோரின் குடத்தில் காவிரியில் விழுந்த ஆரத்தைச் சேருமாறு செய்வித்துப் பூசை நிகழ்த்துங் கால் திருமார்பில் ஏற்றனர். இத் திருத்தல வரலாறு "ஆரமாய மார்புடை" என உரைத்தருளப் பெற்றது.

இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

தாரமாகிய பொன்னித் தண்துறைஆடி விழுத்தும்
நீரில் நின்றடி போற்றி நின்மலா கொள்என ஆங்கே
ஆரங் கொண்டஎம் ஆனைக்கா வுடைஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆளுடை யாரே

என அருளிச் செய்துள்ளமை காண்க.

வாரம் – அன்பு.

564. விண்ணில் நண்ணு புல்கிய வீரமாய மால்விடைச்
சுண்ணவெண்ணீறு ஆடினான் சூலமேந்து கையினான்
அண்ணல்கண்ணொர் மூன்றினான் ஆனைக்காவு
கைதொழ
எண்ணும் வண்ணம் வல்லவர்க்கு ஏதம்ஒன்றும்
இல்லையே.

Koviloor Digital Library

தெளிவுரை: *வானில் நண்ணிச் சென்று வீரம் விளை விக்கும் பெருமையுடைய இடபத்தை உடையவராய், திரு வெண்ணீற்று மேனியராய், சூலப்படை ஏந்தும் திருக்கரத்தராய், முக் கண்ணுடைய மூர்த்தியாய் மேவும் சிவபெருமான் வீற்றிருக்கும் திருவானைக் காவைத் தொழுது போற்ற வேண்டும் என்கின்ற எண்ணம் கொண்டுள்ள அன்பர்களுக்குத் தீமை யானது அணுகாது.*

சிறப்புரை: *ஈசன், இடப வாகனத்தை உடையவராய் விளங்குவதற்கு, அப்பெருமான் முப்புரத்தை எரித்த போது திருமால் விடையாகித் தாங்கிய செயல் காரண மாயிற்று. இதனை மாணிக்கவாசகர்,*

தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினான் திருமால்காண் சாழலோ

என அருளிச் செய்தவாறு காண்க.

இத் திருப்பாட்டு, திருத்தலத்தினை நினைத்து வணங்குதலின் சிறப்பினை உணர்த்துவதாயிற்று. இதனை, நினைக்க முத்திதரும் பஞ்ச பூதத் தலங்களில் அக்கினித் தலமாகிய திருவண்ணாமலையைப் போன்று, அப்புத் தலமாகிய திருவானைக்கா விளங்கும் சிறப்பினையும் ஓதுதலாயிற்று.

ஏதம் – குற்றம்; பாவம்; தீவனை நீங்குதலை உணர்த்துதலாம்.

565. வெய்யபாவம் கைவிட வேண்டுவீர்கள் ஆண்டசீர்
மைகொள்கண்டன் வெய்யதீ மாலையாடு காதலான்
கொய்யவிண்ட நாள்மலர்க் கொன்றைதுன்று சென்னிஎம்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே.

Koviloor Digital Library

தெளிவுரை: கொடிய பாவமானது விலக வேண்டும் என்று விரும்புகின்ற அன்பர்களே! தேவர்களைக் காத்து அருள் புரிந்தவராய், நீலகண்டனாகிய ஈசன், வெம்மை மிகுந்த நெருப்பினை ஏந்தி ஆடுகின்ற இயல் புடையவராய், எந்நாளும் மலர்ந்து விளங்கும் கொன்றை மலரைச் சடை முடியில் தரித்து வீற்றிருக்கும், பொய்கை சூழ்ந்த ஆனைக்கா என்னும் திருத்தலத்தை அடைவீராக.

இது பாவத்தை நீக்கும் என்பது குறிப்பு.

மாலை – இயல்பு; தன்மை.

566. நாணும்ஓர்வு சார்வுமுன் நகையும்உட்கு நன்மையும்
பேணுறாத செல்வமும் பேசநின்ற பெற்றியான்
ஆணும் பெண்ணும் ஆகிய ஆனைக்காவில்
அண்ணலார்
காணும் கண்ணு மூன்றுடைக் கறைகொள் மிடற
னல்லனே.

தெளிவுரை: அஞ்ஞானத்தால் ஈசனை அறியாத தன்மையினை உணர்ந்து நாணுதலும், பதியை ஓர்ந்து அறிதலும், அறிந்ததன் பின் சார்ந்து இருத்தலும், சார்தலினால் மகிழ்ந்து விளங்குதலும், அத்தன்மையில் மனத்தை அடக்கி உள்கித் தியானம் செய்தலும் ஆகியன நன்மை உடையனவாகும். அத்தகைய நிலையால் காணும் பேறு, வேறு எத் தன்மையாலும் கான முடியாதது. அவ்வாறு பேசப்படுவதற்குக் கர்த்தாவாகிய ஈசன், ஆணும் பெண்ணும் சேர்ந்த தாகிய அர்த்தநாரி திருக்கோலத்தில், ஆனைக்காவில் வீற்றிருக்கின்ற அண்ணல் ஆவார். அப்பெருமான் மூன்று கண்களையுடையவராய் நஞ்சினையுண்ட

Koviloor Digital Library

கறையுடைய கண்டத்தினராய் விளங்குபவர் அல்லவா!

மிடறனல்லனே – மிடறுடையவன் அல்லவா; மிடறுடைய நல்லவனே.

567. கூருமாலை நண்பகல் கூடிவல்ல தொண்டர்கள்
பேரும்ஊரும் செல்வமும் பேசநின்ற பெற்றியான்
பாரும் விண்ணும் கைதொழப் பாயும்கங்கை செஞ்சடை
ஆரநீரொ டேந்தினான் ஆனைக்காவு சேர்மினே.

தெளிவுரை: *மிகுதியாக மாலை மற்றும் பகல் காலங்களில், அன்பின் மிக்கவராயும், சிவஞானப் பொலிவு உடையவராயும் உள்ள திருத்தொண்டர்கள் கூடி இருந்து, ஈசனின் திருநாம மகிமைகளையும், திருத்தலங்களின் சிறப்புக்களையும், அருளிச் செயல்களையும் பேசப்படுகின்ற பெற்றியுடையவராகிய சிவபெருமான், பூவுலகமும் விண்ணுலகமும் கைதொழுது ஏத்தக் கங்கையைச் செஞ்சடையில் பொருந்துமாறு தரித்தவர். அப் பரமன் வீற்றிருக்கின்ற திருவானைக்கா என்னும் தலத்தை அடைவீராக.*

சிறப்புரை: *இத் திருப்பாட்டு அறக் கடவுள் வழிபாட்டினைப் புரியும் திருத்தொண்டர்களின் செழுமையினை உரைப்பதாயிற்று. இத் தன்மையில், சுந்தரமூர்த்தி சுவாமிகள்,*

காலையிலும் மாலையிலும் கடவுள் அடிபணிந்து
கசிந்தமனத்தவர் பயிலும் கலய நல்லூர்கணே

என வழிபாட்டின் பெற்றியை உரைத்தருளியவாறும் காண்க.

திருத்தொண்டர்களுடன் கூடி நிற்கும் பெருமையே செம்மையுடையது என உணர்த்தும்

Koviloor Digital Library

நெறியில், "கூடி வல்ல தொண்டர்கள்" என ஓதப் பெற்றது. இத் தன்மையில் அவ்வடியவர்கள் ஈசனின் அருள் பெற்றுப் பேரானந்தம் உறுவர் என்பதனை மாணிக்கவாசகர்,

பெருமான் பேரா னந்தத்துப்
பிரியாது இருக்கப் பெற்றீர்காள்
அருமால் உற்றுப் பின்னை நீர்
அம்மா அழுங்கி அரற்றாதே
திருமா மணிசேர் திருக்கதவம்
திறந்த போதே சிவபுரத்துத்
திருமால் அறியாத் திருப்புயங்கன்
திருத்தாள் சென்று சேர்வோமே.

—யாத்திரைப் பத்து, பாடல் 8

என அருளியவாறும் கொள்க.

568. பொன்னமல்கு தாமரைப் போதுதாது வண்டினம்
அன்னமல்கு தண்டுறை ஆனைக்காவில் அண்ணலைப்
பன்னவல்ல நான்மறை பாடவல்ல தன்மையோர்
முன்னவல்லர் மொய்கழல் துன்னவல்லர் விண்ணையே.

தெளிவுரை: தாமரை மலரில் வண்டினம் ரீங்காரம் செய்யவும், அன்னப் பறவைகள் குளிர்ந்த துறையில் விளங்கவும் திகழ்கின்ற ஆனைக்காவில் வீற்றிருக்கும் அண்ணலை, நான்கு மறைகளாலும் திரும்பத் திரும்பப் போற்றி நின்று, திருக்கழலை ஏத்துபவர்கள் மறுமைக் கண் விண்ணுலகத்தில் விளங்கி நிற்பார்கள்.

இத் தன்மையில் விளங்குபவர்கள் இப்பூவுலகின் கண் குறைவற்ற செல்வராய்த் திகழ்வார்கள் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

பொன்னமல்கு தாமரை – திருமகள் வாசம் செய்யும் தாமரை, செல்வச் செழிப்பு உணர்த்துவது.

569. ஊனொடுண்டல் நன்றென ஊனொடுண்டல் தீதென
ஆனதொண்டர் அன்பினால் பேசநின்ற தன்மையான்
வானொடொன்று சூடினான் வாய்மையாக மன்னிநின்று
ஆனொடு அஞ்சும் ஆடினான் ஆனைக்காவு சேர்மினே.

தெளிவுரை: *ஈசனுக்கு, நல்ல சுவையுடைய இறைச்சி உணவு நனி வழங்குதலை மேற்கொண்டு, அதனை நன்றெனக் கருதி அமுது படைத்தவர், கண்ணப்ப நாயனார். அத்தகைய ஊன் உணவை ஈசனுக்குப் படைத்தல் அபசாரம் எனக் கருதி, அத்தகைய செயல் தீது என மருண்டார் சிவகோசரியார். இவ்விரு தொண்டர்களும் பேரன்பு பூண்ட காரணத்தால் பேச நின்ற தன்மையில் திகழும் சிவபெருமான், வானில் ஒரு கலையுடன், எஞ்சிய சந்திரனைச் சூடி, வளருமாறு செய்தவர். பசுவின் பஞ்ச கௌவியத்தை அபிடேகப் பொருளாக ஏற்று மகிழும் அப்பெருமான் வீற்றிருக்கும் ஆனைக்காவைச் சென்றடைவீராக.*

சிறப்புரை: *இது பூரண அன்பினராகிய ஈசன் யாவர்க்கும் அருள் செய்பவர் என்பதாம். ஊன் படைத்தலை நன்றெனவும் அதனைத் தீது எனவும் கூறி.ய இருவரும் அன்பின் மிகையால் கருதும் தன்மை யால் "ஆன தொண்டர்" என்று உணர்த்துதலாயிற்று.*

570. கையில்உண்ணும் கையரும் கடுக்கள்தின் கழுக்களும்
மெய்யைப் போர்க்கும் பொய்யரும் வேதநெறியை
அறிகிலார்
தையல்பாகம் ஆயினான் தழலதுஉருவத் தான்எங்கள்
ஐயன்மேய பொய்கைசூழ் ஆனைக்காவு சேர்மினே.

Koviloor Digital Library

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் பொய் நெறியில் மேவி, வேத நெறியை அறியாதவராயினர். ஈசன், உமாதேவியைப் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; சோதி சொரூபமாகத் திகழ்பவர்; எங்கள் தலைவர். அப் பெருமான் வீற்றிருக்கும் பொய்கை சூழ்ந்து விளங்கும் ஆனைக்காவைச் சென்றடைமின்.

இது ஈசனின் தண்ணருள் கிடைக்கச் செய்யும் என்பது குறிப்பு.

571. **ஊழியூழி வையகத்து உயிர்கள் தோற்று வானொடும்**
ஆழியானும் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழிஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஊழிக் காலந்தோறும் உயிர்களைப் படைக்கும் தொழில் மேவும் பிரமனுடன், திருமாலும் தேடிச் சென்று காணுதற்கு அரியவராகிய ஈசன், ஆனைக்காவில் வீற்றிருக்கும் அண்ணல் ஆவார். அப்பெருமானைக் காழிப்பதியில் மேவும் ஞான சம்பந்தன் கருதிச் சொன்ன இத்திருப்பதிகத்தை, முறையாகக் கற்று ஓதவல்லவர்களின் கொடிய வினை யாவும் மாய்ந்தழியும்.

சிறப்புரை: ஊழிக் காலத்தில் உலகம் அழிதலும் அதன் பின்னர் ஈசனுடைய ஆக்ஞையின் வண்ணம் பிரமன், படைக்கும் தொழிலை ஆற்றுதலும் இத்திருப்பாட்டில் சுட்டப் பெற்றது.

இத் திருப்பதிகமானது மன்னுயிர்களுக்கு வாழ்வளிக்கும் தன்மை உடையதெனவும், இதனைக் கல்விச் செல்வத்தைப் போன்று நற்பொருளாகக்

Koviloor Digital Library

கொண்டு, கற்றல் வேண்டும் எனவும், நன்கு உணர்த்துமாறு, "வாழியாகக் கற்பவர்" என உணர்த்தப் பெற்றது.

துன்பம் அற்ற இனிய வாழ்க்கையை இப்பூவுலகில் பெறுவதற்கும், ஈசனை வழிபடும் பேற்றினை அடைவதற்கும், தீய வினையானது தடையாய் இருத்தல் கூடாது என்னும் வாய்மையால், "வல்வினைகள் மாயும்" என ஓதப் பெற்றது. நல்வினையின் பயனால் இப்பிறவியில் ஈசனின் திருக்காட்சியைப் பெற முடியும் என்பதற்குத் திருநாவுக்கரசர்,

> இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
> மனித்தப்பிறவியும் வேண்டுவனே இம்மாநிலத்தே

என அருளிச் செய்தவாறும் காண்க.

இத்தன்மையில், மாணிக்கவாசகர், திருமாலும் நான்முகனும் பூவுலகில் பிறக்கின்ற விருப்பம் உடையவர்கள் என்பதனை,

> புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள்நாம்
> போக்குகின் றோம்அவ மே;இந்தப் பூமி
> சிவன்உய்யக் கொள்கின்ற வாறுஎன்று நோக்கி

என அருளிச் செய்தவாறும் நோக்குக.

எட்டாம் பாடலில் இராவணனுடைய செயலைக் குறிக்கப் பெறாமையும், ஒன்பதாம் பாடலில் வரும் திருமால், பிரமன் வழிபடும் பாங்கு திருக்கடைக் காப்பில் அமைந்துள்ள தன்மையும், காண்க.

வாழியாகக் கற்பவர் – வாழ்வளிக்கும் கல்வியாக ஓதுபவர்.

Koviloor Digital Library

312. பொது திருப்பதிகம்

திருப்பதிகக் குறிப்பு: மதுரை மாநகர் சென்றடைந்த திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னனின் வெப்பு நோயை நீக்கியருளிய பின்னர், "போகமார்த்த பூண் முலையாள்" (முதல் திருமுறை, பதிகம் எண் 49) என்னும் திருப்பதிகத்தை ஓலையில் எழுதித் தீயில் இட, அது எரியால் பற்றப்படாது பசுமையாக விளங்கியது. சமணர்களின் ஓலையானது எரிந்து கருகியது. அனல் வாதத்தில் தோல்வி கண்ட சமணர்கள் புனல்வாதத்தினை மேற்கொண்டனர். அமணர்தம் ஓலையானது வைகையாற்றின் வெள்ளப் பெருக்கினில் அடித்துச் செல்லப்பட்டது. திருஞான சம்பந்தர் அருளிச் செய்து எழுதிய இத்திருப்பதிக மானது வெள்ளத்தை எதிர்த்துச் சென்றது. இத்திருப்பதிகத்தைத் 'திருப்பாசுரம்' என்று பெயரிட்டு ஓதியருளிய சேக்கிழார் சுவாமிகள், 24 பாடல்களால் அத் திருப்பதிகத்திற்குப் பாசுரக் கருத்து அருளிச் செய்தனர்.

வேகமாக ஆற்றினை எதிர்த்துச் சென்ற ஓலையைக் கைப்பற்றி எடுக்கும் கருத்தில் கரையோரம் குதிரையின் மீது இவர்ந்து சென்ற குலச்சிறையாருக்கு அச் செயல் கை கூடும் வண்ணம் அருளிச் செய்யப் பெற்ற பதிகம் எண் 290 திருவேடகம் காண்க.

திருப்பாசுரம்

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

572. வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக

Koviloor Digital Library

ஆழ்க தீயதுஎல் லாம்அர நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

தெளிவுரை: உலகம் வாழும் பொருட்டுச் செய்யும் கேள்விகளைப் புரியும் அந்தணர்கள் வாழ்க! அவ் வேள்விகள் நடைபெறுவதற்குத் துணையாக மேவும் தேவர்கள் வாழ்க! அபிடேகம் அர்ச்சனை ஆகிய வற்றுக்குப் பஞ்ச கௌவியத்தினை நல்கி உறுதுணையாய் விளங்கும் பசுக் கூட்டங்கள் வாழ்க! இவ்வகையான வழிபாட்டின் காரணமாகக் குறைவில்லாது வானமானது மழை பொழிவதாகுக! அத்தன்மையில் மன்னன், ஓங்கும் புகழ் பெற்று விளங்குக! தீயநெறியில் சென்று அழிவை உண்டாக்கும் அனைத்தும் கெடுவதாக! எல்லாம் அரன் நாமமாகிய திருவைந்தெழுத்தை ஓதி இருக்க, அதுவே உலகில் யாங்கணும் சூழ்ந்து விளங்கி உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் தன்மையால், உலகத்தில் தீவினையாலும், அஞ்ஞானத்தாலும் உண்டாகும் துயர் யாவும் தீர்க. இது, உலகம் இன்புற்று வாழ, ஓதி அருளிய வாழ்த்தாயிற்று.

சிறப்புரை: வேள்வியை ஓம்புதலானது, நாட்டுக்குச் செல்வ வளத்தை நல்குதலாகும் எனவும், அரன் நாமம் அஞ்ஞானத்தை நீக்கிப் பேரின்பத்தை உயிர்களுக்கு அளிக்கும் என்னும் மறைவாசகம் எனவும் இவண் உரைக்கப் பெற்றது. "மன்னன் உயிர்த்து மலர்தலை உலகம்" என்றாற் போல, வேந்தனின் கடமையையும், அக் கடமையை ஆற்றுவதால் உண்டாகும் பயனையும் நன்கு உணர்த்துவதாயிற்று.

திருக்கோயில்களில், பூசைகள் முறையாக நடை பெறச் செய்தலை அரசனின் கடமை எனச் சுட்டுமாறு,

Koviloor Digital Library

வேந்தன் அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு ஞானம் பெற்று ஓங்குக என்றும் குறிப்பால் உணர்த்துதல் காண்க.

573. அரிய காட்சிய ராய்த்தமது அங்கைசேர்
எரியர் ஏறுகந்து ஏறுவர் கண்டமும்
கரியர் காடுறை வாழ்க்கையர் ஆயினும்
பெரியர் ஆர்அறிவார் அவர் பெற்றியே.

தெளிவுரை: அரிய காட்சி உடையவராகிய சிவபெருமான், தமது அழகிய கையில் நெருப்பை ஏந்தி, இடப வாகனத்தில் வீற்றிருந்து, நீலகண்டத்தை உடையவராய், மெய்யன்பின் உரிமை பூண்ட பக்தர்களுக்குக் காட்சி தருபவர். அப்பெருமான், சுடுகாட்டில் மேவி இருந்து, நடம்புரிபவர். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சூரியன், சந்திரன், உயிர்கள் என அட்ட மூர்த்தமாகியும் அண்டங்கள் யாவையும் வடிவமாகவும் உடைய பெரியவர். அப்பெருமனைப் பசு ஞானத்தாலும் புலன்களாலும் அறிய முடியாது. அன்பில் திளைத்தவராகிய ஈசனின் தன்மையை யாரே அறிவர்!

சிறப்புரை: அட்ட மூர்த்தியாகி விளங்கும் ஈசன் அன்பில் திகழும்தம் அடியவர்களுக்குக் காட்டும் திருக்கோலத்தை, "உரிய அன்பினில் காண்பவர்க்கு உண்மையாம் பெரிய நல்லடையாளங்கள் பேசினார்" (திருஞானசம்பந்தர் புராணம் பாட்டு எண் 825) என உரைத்தருளியது காண்க.

ஈசனின் திருக்கோலத்தை அப்பெருமானின் அருளையே துணையாகக் கொண்டு காணுகின்ற வண்ணத்தை மாணிக்கவாசகர், "காணொணாத்

Koviloor Digital Library

திருக்கோலம்! நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" — என அருளிச் செய்தவாறும் நோக்குக.

574. வெந்த சாம்பல் விரையெனப் பூசியே
தந்தை யாரொடு தாயிலர் தம்மையே
சிந்தியா எழு வார்வினை தீர்ப்பரால்
எந்தை யார்அவர் எவ்வகை யார்கொலோ.

தெளிவுரை: திருநீறானது, எல்லா ஒளியினும் விஞ்சிய சிவபெருமானின் திருமேனியின் ஒளியால் மணம் கமழச் செய்யும் பாங்காயிற்று. அத்தகைமையுடைய ஈசன், தாமே உலகின் முதலாகவும், ஈறாகவும் விளங்கிப் பின்னும் தோற்றுவித்தலால் தமக்குத், தோற்றுவிப்பவர் யாரும் இல்லாதவராய்த் தந்தையும் தாயும் அற்றவராய் விளங்கித் தம்மைச் சிந்தை செய்பவர் தம் வினையைத் தீர்த்தருளிப் பொய்ம்மையைப் போக்குபவர் ஆயினார். அத்தகைய எந்தையை எவ்வகையான சொல் கொண்டு உணர்த்த வல்லது!

575. ஆட்பால் அவர்க்குஅருளும் வண்ணமும் ஆதி மாண்பும்
கேட்பான் புகில்அள வில்லை கிளக்க வேண்டா
கோட்பா லனவும் வினையும் குறுகாமை எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்க தக்கார்

தெளிவுரை: சிவபெருமான், தன்னுடைய அடியவர்களுக்கு அருள் புரிகின்ற வண்ணமும், தொன்மைச் சிறப்புடைய மாண்பும், கேட்கப் புகுங்கால் அவை, ஆய்வுக்குள் அடங்காததும் எல்லையற்றுப் பெருகும் தன்மையுடையதும் ஆகும். எம் தந்தையாகிய அப்பெருமானுடைய திருவடிப் புகழ்ச்சியைச் செவிமடுக்கும் அடியவர்களுக்குக் கோள்களாலும் தீய வினைகளாலும் இடர்கள் உண்டாகாது.

Koviloor Digital Library

சிறப்புரை: தொன்மைக் காலம் முதற் கொண்டு மன்னுயிரைத் தோற்றுவித்த ஈசன், அவ்வுயிர்களைப் பக்குவப் படுத்தி, அருளிச் செய்கின்ற பாங்கினை, ஆதி மாண்பு எனச் சுட்டப் பெற்றது. ஈசனின் அருள் வண்ணமானது, ஏத்தப் பெறுவதற்கு உரித்ததேயன்றி, கிளர்ந்து ஆய்தற்கு உரியதாகாது. அது, மாந்தர்தம் அறிவின் ஆற்றலுக்கு அப்பாற்பட்டது என உணர்த்தும் தன்மையில் "கிளக்க வேண்டா" என ஓதப் பெற்றது.

ஈசனுடைய வீரச் செயலும், அடியவர்களுக்கு அருளுதலும் அப் பெருமானுடைய புகழ்ச் செயல் ஆகும். அதனைக் கேட்டல் ஞானபூசையாகும். இத்தகையவற்றைச் சிவனடியார்கள் வேட்கை கொண்டு கேட்க வேண்டும் என்னும் செம்மையால் "தலை நின்று இவை கேட்க" என் உரைத்தல் ஆயிற்று. "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என ஓதும் ஞானசம்பந்தரின் திருவாக்கும் (முதல் திருமுறை பாடல் வ.எண் 2) காண்க.

தக்கார் – சிவனடியார்கள்.

576. ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்க வேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்க நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர்இறையே வந்துசார் மின்களே.

தெளிவுரை: அன்பில் தோய்ந்து குழைந்து சாதுக்கள் எனும் புகழுக்குரியவர்களே! காரண காரியங்களைக் காட்டியும், வேதவாக்கியங்கள், மேற்கோள்கள், உவமைகள் முதலான மொழியாலும் ஈசனை ஆய்வு செய்ய வேண்டாம். அப்பெருமான், யாவற்றுக்கும் அப்பாற்பட்டவர்; அளந்து அறிய முடியாதவர்; அரிய சோதியாய் விளங்குபவர். அப்பெருமானை,

Koviloor Digital Library

மனத்துக்கண் நிலை நிறுத்திப் பிறவிப் பிணியிலிருந்து விடுபடுவீராக.

சிறப்புரை: ஈசன், ஆராய்ச்சிக்கு அப்பாற்பட்டவர் என்பதும், அவரை வணங்குதல் ஒன்றே மாந்தர் செய்யத் தக்கவை என்றும் உணர்த்துமாறு "சோதிக்க வேண்டா" உணர்த்துவதாயிற்று. இத் தன்மையில் மாணிக்கவாசகர், "வணங்கத் தலை வைத்து, வார்கழல் வாய் வாழ்த்த வைத்து, இணங்கத் தன் சீரடியார் கூட்டமும் வைத்து, எம்பெருமான் அனங்கொடு அணி தில்லையம் பலத்தே ஆடுகின்ற குணம் கூரப்பாடி, நாம் பூவல்லி கொய்யாமோ" என அருளிச் செய்துள்ளதும் காண்க. இந்நெறியில், அளவிடுவதற்கு அரிய சோதியாகிய ஈசனின் மலர்ச் சிலம்படியினை வாழ்த்தி வணங்குதல் வேண்டும் என்பதாம். வாழ்த்துதலாவது, இறைவனின் புகழை ஓதுதலும், வணங்குதலாவது அப்பரமனின் திருவடியை ஏத்துதலும் ஆகும்.

இத் திருப்பாட்டு, புறத்தே சோதி வடிவாக விளங்கும் இறைவனை அகத்துள் தியானத்தின் வாயிலாகக் காணுதலின் பெற்றியை உரைத்தருளியது.

சாதுக்கள் – திருத்தொண்டர்கள்.

577. ஆடும்எனவும் மருங்கூற்றம் உதைத்து வேதம்
பாடும்எனவும் புகழல்லது பாவம்நீங்கக்
கேடும் பிறப்பும் மறுக்கும் எனக்கேட்டீ ராகில்
நாடும் திறத்தார்க்கு அருளல்லது நாட்ட லாமே.

தெளிவுரை: சிவபெருமான், திரு நடனம் புரிவதும், மார்க்கண்டேயருக்காகக் கூற்றுவனைக் காலால் உதைத்து அழித்ததும், வேதங்களைப் பாடியருளியதும் ஆகிய செயல்கள் புகழ் விளங்கும் தன்மையா அல்லது

Koviloor Digital Library

மன்னுயிர்களின் தீவினைகளை நீக்குவதற்கா, அன்றிப் பிறப்பினை அறுத்துப் பிறவா நெறியினை அளிப்பதற்கா எனக் கேட்பீராயின், இவை தன்னை நாடியவர்களுக்கு அருள் செய்வதற்கே அன்றி வேறு எக்காரணமும் ஆகாது என உறுதியாகக் கூறலாம்.

சிறப்புரை: ஈசனின் அருளிச் செயலானது, மன்னுயிர் களுக்குப் பிறவா நெறியளிக்கும் பெற்றியே ஆகும் என உணர்த்தப் பெற்றது. இத்தன்மையில், மாணிக்க வாசகர். "சிறு நெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம், குறியொன்றும் இல்லாத கூத்தன் தன் கூத்தை எனக்கு அறியும் வண்ணம் அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே" என, அருளியது நோக்குக.

திறத்தார் – சிவஞானம் மிக்க சீலர்கள்.

578. கடிசேர்ந்த போது மலரான கைக்கொண்டு நல்ல
படிசேர்ந்த பால்கொண்டு அங்குஆட்டிடத் தாதை பண்டு
முடிசேர்ந்த காலையற வெட்டிட முக்கண்மூர்த்தி
அடிசேர்ந்த வண்ணம் அறிவார் சொலக்கேட்டும் அன்றே.

தெளிவுரை: நறுமணம் கொண்ட மலர்தூவிப் போற்றி, உலகினில் உயர்ந்த தன்மையில் விளங்கிப் பால் கொண்டு, மணலால் ஆகிய சிவலிங்கத் திருமேனி குளிருமாறு, சண்டீசர் அபிடேகம் செய்தபோது, அவ்வடியவர்தம் உலகியல் தந்தையானவர் இடர் செய்யலானார். அவ்வாறு இடர் செய்த தந்தையின் காலை வெட்டினாலும், அச்செயலானது பாவமாகக் கருதப்படாத நிலையில், முக்கண் மூர்த்தியான சிவபெருமான் அவ்வடியவருக்குத் திருவடிப் பேற்றினை அளித்தருளினார். இத்தன்மையானது,

Koviloor Digital Library

அறிவு சார்ந்த பெரியோர்களால் சொல்லப்படுகின்ற செம்மை அல்லவா!

சிறப்புரை: ஈசனுக்குப் பால் கொண்டு பூசித்து வழிபடுவதன் சிறப்பானது "நல்ல படி சேர்ந்த பால் கொண்டு" என ஓதப் பெற்றது. இது, அபிடேகத்திற்குரிய பொருள் யாவும் நன்மையை விளைவிக்கும் என்பதும் உணர்த்துவதாகும். தந்தையின் காலைத் துணித்தல் பாதகச் செயலாயினும், அடியவராகிய சண்டீசருக்குப் பாவம் பற்றாத தன்மையும் இவண் சுட்டப் பெற்றது. இதனை, ''நரரினிற் பாலன் செய்த பாதகம் நன்மையாய்த்தே" என வரும் சிவஞான சித்தியார் (சுபக்கம் எண் 119) திருப்பாட்டில் காண்க.

இராமபிரான், இராவணனைக் கொன்ற பழி நீங்க, ஈசனைப் பூசித்த செம்மையும் (பதிகம் எண் 10 திருஇராமேச்சுரம் பாட்டு வ. எண் 101), சண்டீசர் செய்த செயலானது, பாதகம் இன்றித் திருவடிப் பேற்றினை அளித்த தன்மையும், சிவபூசையின் மேன்மையினைக் காட்டும்.

579. வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்
ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்
பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த
சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே.

தெளிவுரை: வேத நாயகனாக விளங்கும் சிவபெருமானை முதலாகக் கொண்டு, உலக மக்கள் குற்றத்தில் மேவாது, நன்னெறியை உணர்கின்ற மாண்பால், சூத முனிவர் அருளிச் செய்த பதினெட்டு புராணங்களும், ஒழுக்கத்தைப் போதிப்பதாகும்.

Koviloor Digital Library

580. பாராழி வட்டம் பகையால் நலிந்தாட்ட வாடிப்
பேராழி யானதுஇடர் கண்டு அருள்செய்தல் பேணி
நீராழி விட்டேறி நெஞ்சிடம் கொண்டவர்க்குப்
போராழி ஈந்த புகழும் புகழுற்ற தன்றே.

தெளிவுரை: *பகைவர்கள் பெருகியதன் காரணமாக நலிந்து மேவும் உலகத்தைக் காக்கும் தொழில் பேணும் திருமால், கடலில் துயில் கொண்டிருந்ததை விடுத்து, ஈசனைப் பூசித்து வழிபட்டு, அப் பகைவர்களை வெல்லும் வகையில் ஆழிப் படையை வேண்டினார். அவர் வேண்டுகோளுக்கிணங்கிய சிவபெருமான், காத்தல் தொழில் நன்கு திகழப் போர் ஆற்றல் மிகுந்த அப் படையை அளித்தது, மெய்யான புகழ் ஆகும் அல்லவா!*

சிறப்புரை: *திருமால், தான் மேற்கொண்டுள்ள காக்கும் தொழில் சீரான நிலையில் நடைபெறும் பொருட்டு ஈசனைப் பூசித்து, சக்கரப் படையைப் பெற்ற வரலாறு இவண் பேசப்பட்டது. திருமால், தியாகராசப் பெருமானைப் பூசித்த செம்மையும், பின்னர் இந்திரனும் முசுகுந்தச் சக்கரவர்த்தியும் பூசித்த பெருமையும் ஓதப் பெற்றது. ஈசன், சலந்தராசுரனை வதம் செய்யும் பொருட்டுத் திருப்பாதத்தால் தரையில் ஒரு வட்டம் இட, அது சக்கரப் படையாக மாறி, அவ் அசுரனை அழித்துத் திரும்பியது. அத்தகைய ஆற்றல் பொருந்திய சக்கரப் படையைத் திருமால் ஈசனை வேண்டிப் பெற்றார் என்பது வரலாறு.*

அழகுக்கு அழகு செய்வதைப் போன்று சக்கரப் படையினை வழங்கிய ஈசனின் அருட் செயலானது, புகழுக்குப் புகழ் சேர்க்கும் பெற்றியாய்த் திகழ்ந்தது என்க.

Koviloor Digital Library

புகழுற்றதன்றே – புகழுற்றது அல்லவா. அஞ்ஞான்றே புகழுற்றது என்பதும் சிறக்கும்.

581. மாலா யவனும் மறைவல்ல நான்முகனும்
பாலாய தேவர் பகரில் அமுதூட்டல் பேணிக்
காலாய முந்நீர் கடைந்தார்க்கு அரிதாய் எழுந்த
ஆலாலம் உண்டுஅங்கு அமரர்க்கு அருள் செய்த்தாமே.

தெளிவுரை: உலகத்தைக் காக்கும் தொழில் பேணும் திருமாலும், படைக்கும் தொழில் மேவும் பிரமனும் மற்றும் பலராகிய தேவர்களும், அமுதம் கொண்டு மகிழும் விருப்பத்தால் கடலைக் கடைந்தனர். அப்போது அரியதாய் எழுந்த ஆலகால விடத்தை உட்கொண்டு காத்தவர் சிவபெருமான். இது, ஈசன், தேவர்களுக்கு அருள் புரிந்த செம்மையாகும்.

சிறப்புரை: தேவர்கள், தாம் விரும்பிய அமிர்தத்தினைத் தமக்குத் தாமே ஈட்டிக் கொள்ளும் ஆற்றல் இன்றி, ஈசனால் அருளிச் செய்யப் பெற்ற பாங்கினை "அமுது ஊட்டல்" என உணர்த்துதல் ஆயிற்று.

582. அற்றன்றி அந்தண் மதுரைத் தொகை யாக்கி னானும்
தெற்றென்று தெய்வம் தெளியார் கரைக்கு ஓலை
தெண்ணீர்ப்
பற்றின்றிப் பாங்கெதிர்வில் ஊரவும் பண்பு நோக்கில்
பெற்றொன்று உயர்த்த பெருமான் பெருமானும் அன்றே.

தெளிவுரை: சிவபெருமான், முன்னர் உரைத்த அத்துணைப் புகழுக்கும் உரியவராகியவர். அதுவும் அன்றி, அவர், மதுரையில் தமிழ்ச் சங்கத்தை ஆக்கித் தமிழ் வளர்த்து அருளிச் செய்தவர். ஈசனே முழு முதற் பொருள் எனத் தெளிவு பெறாதவர்களுக்குத் தெளிவு பெற, இந்த அரிய ஓலையானது, வைகை ஆற்றில் எதிர் நோக்கிச் செல்லும் மாண்பினை நோக்கில், இடப

Koviloor Digital Library

வாகனத்தின் மீது இவர்ந்து மேவும் பெருமானே, இறைவன் எனத் தக்கவர், என்பதுதானே மெய்ம்மை!

பெற்றொன்று உயர்த்த – இடப வாகனத்தில் ஏறிய.

583. நல்லார்கள் சேர்புகலி ஞானசம் பந்தனல்ல
எல்லார்க ளும்பரவும் ஈசனை யேத்துபாடல்
பல்லார்க ளும்மதிக்கப் பாசுரம் சொன்னபத்தும்
வல்லார்கள் வானோர்உல காளவும் வல்லர் அன்றே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: சிவஞானிகள் குழுமி விளங்கும் புகலியின் ஞானசம்பந்தன், மெய்யன்பர்களால் நன்கு பரவப் படும் ஈசனை ஏத்துகின்ற பாடலாவது, இத் திருப் பாசுரம் ஆகும். இதனை ஓத வல்லவர் வானுலகை ஆளும் வல்லமை பெற்றவராவர்.

சிறப்புரை: இத் திருப்பாசுரத்தைத் திருஞானசம்பந்தர் ஓலையில் எழுதி வைகை ஆற்றில் "திருக்கையால் நீட்டி இட்டார்" எனச் சேக்கிழார் சுவாமிகள் தம் செம்மை நல் வாக்கால் அருளிச் செய்தனர். மேலும் இத்திருப் பாசுரத்திற்கு உரை நவின்று,

வெறியார் பொழிற்சண் பையர்வேந்தர் மெய்ப்பா சுரத்தைக்
குறிஏ றியஎல்லை அறிந்துகும் பிட்டேன் அல்லேன்
சிறியேன் அறிவுக்கு அவர்தம்திருப் பாதம் தந்த
நெறியே சிறிதுயான்அறி நீர்மை கும்பிட்டேன் அன்பால்.

– திருஞானசம்பந்தர் புராணம், பாடல் 844

என அருளிச் செய்த பாங்கில் இதன் மெய்க் கருத்தின் விளக்கத்தை யாரே பகர்வார்!

பாலறா வாயரின் திருப்பதிகமானது திருப் பாசுரம் என ஓதப் பெற்றுள்ள சிறப்பினை நோக்குக.

Koviloor Digital Library

திருப்பாசுரத்தின் சிறப்பாக முதற்கண் தெரிவித்த முதற்பாசுரத்தில், "வேந்தனும் ஓங்குக" என்றபோது, கூன் பாண்டியனாக இருந்த அரசன், கூன் நிமிர்ந்து, நின்றசீர் நெடுமாறன் ஆகிய வண்ணமும் காணப் பெற்றது. இம் மன்னவன், அறுபத்து மூன்று நாயனாருள் ஒருவராகிய செம்மையினை, "நிறை கொண்ட சிந்தையான் நெல் வேலி வென்ற நின்ற சீர்நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்" எனச் சுந்தர மூர்த்தி சுவாமிகள் அருளிச் செய்த தன்மையாலும் நோக்குக.

நல்லார்கள் – சிவஞானிகள்; வல்லார்கள் – சிவனடியார்கள்.

313. திருவான்மியூர்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம் 32இல், இது 25ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரின் பாடல் பெற்றது. வான்மீகி முனிவருக்கு இறைவன் நடனக் காட்சி தந்தருளிய தலம். அகத்திய முனிவருக்கு வைத்திய மூலிகைகளை உபதேசித்த தலம். வேதங்கள், காமதேனு, தேவர்கள், சூரியன், பிருங்கி முனிவர் முதலானோர் வழிபட்டுப் பேறு பெற்றது.

மற்றும் இரண்டாம் திருமுறை பதிகம் எண் 140 காண்க.

சுவாமி : மருந்தீசர், வேதபுரீஸ்வரர், பால்வண்ண நாதர்

அம்பிகை : திரிபுரசுந்தரி, சொக்க நாயகி, சுந்தர நாயகி

தல மரம் : வன்னி

தீர்த்தம் : பஞ்ச தீர்த்தங்கள்

Koviloor Digital Library

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

584. விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கையொர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூர்உறையும்
அரையா உன்னையல்லால் அடையாது எனது ஆதரவே.

தெளிவுரை: *ஈசனே! நீவிர், நறுமணம் கமழும் கொன்றை மலரை அணிந்தவர்; விடத்தை உட்கொண்டு அதனால் கரிய நிறத்தினை உடைய கண்டத்தினர்; புகழ் பல உடையவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; கடல் சூழ்ந்த திருவான்மியூரில் உறையும் அரசே! உம்மைத் தவிர என் மனம் பிறவற்றை நாடாது.*

585. இடியார் ஏறுடையாய் இமையோர்தம் மணிமுடியாய்
கொடியார் மாமதியோடு அரவம்மலர்க் கொன்றையினாய்
செடியார் மாதவிசூழ் திருவான்மி யூர்உறையும்
அடிகேள் உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: *இடியைப் போல முழங்கும் இடபத்தை உடைய ஈசனே! தேவர்களுக்கு வாழ்வளிக்கும் நாதனே! இடபக் கொடியும், சந்திரனும், அரவமும், கொன்றை மலரும் உடைய இறைவனே! மாதவி மலரின் மணம் சூழ்ந்த திருவான்மியூரில் உறையும் அடிகளே! உம்மை அன்றி என்னுடைய மனமானது வேறொன்றை நாடாது.*

586. கையார்வெண்மழுவா கனல் போல்திரு மேனியனே
மையார் ஒண்கண் நல்லாள் உமையாள் வளர் மார்பினனே

Koviloor Digital Library

செய்யார் செங்கயல்பாய் திருவான்மி யூர்உறையும்
ஐயா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: கையில் மழுப்படையுடைய பெருமானே! நெருப்புப் போன்ற சிவந்த மேனியனே! ஒளி மிக்க கண்ணுடைய நல்லாள் ஆகிய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்கும் திருமார்பினை உடைய பரமனே! கயல் பாயும் நீர் வளம் மிகுந்த திருவான்மியூரில் உறையும் தலைவனே! என்னுடைய மனமானது தேவரீரை அன்றி வேறு எதிலும் சாராது.

சிறப்புரை: ஈசனே யாவற்றுக்கும் தலைவன் என்பதை "ஐயா" என உணர்த்தப் பெற்றது. இக்கருத்தில் சுந்தர மூர்த்தி சுவாமிகள், "மையார் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே! ஐயா நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே" எனவும்; மாணிக்க வாசகர், "மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள் ஐயா! என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" எனவும் அருளிச் செய்த பெற்றியை நோக்குக.

587. பொன்போ லுஞ்சடைமேல் புனல்தாங்கிய புண்ணியனே
மின்போ லும்புரிநூல் விடையேறிய வேதியனே
தென்பால் வையமெலாம் திகழுந்திரு வான்மிதன்னில்
அன்பா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: பொன் போன்ற சடை முடியின் மீது கங்கையைத் தரித்து விளங்கும் புண்ணியனே! மின்னலைப் போன்று ஒளிரும் முப்புரி நூலினைத் தரித்து இடப வாகனத்தில் விளங்கும் வேதியனே! இவ்வுலகமானது இனிமையுடன் திகழுமாறு திருவான்மியூரில் அன்புடன் விளங்கும் ஈசனே! தேவரீரை அன்றி என் நெஞ்சமானது வேறொன்றையும் நாடாது.

தென் – இனிமை; தென்பால் – இனிமையாக, அழகாக.

Koviloor Digital Library

588. கண்ணாரும் நுதலாய் கதிர்சூழ்ஒளி மேனியின்மேல்
எண்ணார் வெண்பொடிநீறு அணிவாய்எழில் வார்பொழில்சூழ்
திண்ணார் வண்புரிசைத் திருவான்மியூர் உறையும்
அண்ணா உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: *நெற்றியில் கண்ணுடைய நாதனே! ஒளி வீசும் திருமேனியுடைய பெருமானே! எண்ணத்தில் மகிழ்ச்சியைக் கொடுக்கும் திருவெண்ணீற்றைப் பூசி அணியும் பரமனே! எழில் மிக்க பொழிலும் உறுதியான மதில்களும் உடைய திருவான்மியூரில் வீற்றிருக்கும் அண்ணாவே! என் மனமானது உன்னை அல்லாது வேறொன்றினைச் சாராது.*

அண்ணா – அண்மையில் இருந்து அன்பு செலுத்துபவன்.

589. நீதீ நின்னையல்லால் நெறியாதும் நினைந்தறியேன்
ஓதீ நான்மறைகள் மறையோன்தலை ஒன்றினையும்
சேதீ சேதமில்லாத் திருவான்மியூர் உறையும்
ஆதீ உன்னையல்லால் அடையாது எனது ஆதரவே.

தெளிவுரை: *நடுநிலையில் இருந்து நீதி வழங்கும் நாதனே! தேவரீரை அன்றி நான் வேறு நெறியினைச் சிந்தித்ததில்லை. வேதங்களை ஓதும் பரமனே! பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றைக் கொய்து, நான்முகனாக விளங்கச் செய்த பெருமானே! எத்தகைய குறைவும் அடையாது, செழித்து ஓங்கும் திருவான்மியூரில் உறையும் ஆதியே! உம்மையன்றி என் மனமானது வேறு எதனையும் நாடாது.*

சிறப்புரை: *ஈசன் நடுநிலையில் இருந்து அருள்பாலிப்பவர் என்னும் மெய்ம்மையை "நீதி!" என விளித்து ஓதப் பெற்றது. இத்தன்மையில், "நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே" எனத் திருவருட் பிரகாச*

Koviloor Digital Library

வள்ளலார் அருளிச் செய்துள்ள பாங்கும் காண்க. மாணிக்கவாசகர், "பங்கயத்து அயனும் மாலறியா நீதியே! செல்வத் திருப் பெருந்துறையில் நிறை மலர்க் குருந்த மேவிய சீர் ஆதியே!" என அருளிச் செய்த தன்மையும் நோக்குக.

590. வானார் மாமதிசேர் சடையாய்வரை போலவரும்
கானார் ஆனையின்தோல் உரித்தாய் கறை மாமிடற்றாய்
தேனார் சோலைகள்சூழ் திருவான்மியூர் உறையும்
ஆனாய் உன்னையல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: வானத்தில் பொருந்துகின்ற சிறந்த சந்திரனைச் சடை முடியில் சேர்த்து வைத்து இருப்பவரே! காட்டில் உலவும் கரிய யானையின் தோலை உரித்த நீலகண்டனே! தேன் துளிர்க்கும் மலர் களைக் கொண்ட சோலைகள் சூழ்ந்த திருவான் மியூரில் உறையும் நாதனே! இடப வாகனத்தில் விளங்கும் ஈசனே! என் மனமானது தேவரீரை அல்லாது வேறு எதிலும் சார்ந்து நிற்காது.

ஆனாய் – இருப்பவனாயினாய்; இடப வாகனத்தவன் ஆனாய். ஆன் – இடபம்.

591. பொறிவாய் நாகணையா னொடுபூமிசை மேயவனும்
நெறியார் நீள்கழல்மேல் முடிகாண்பரி தாயவனே
செறிவார் மாமதில்சூழ் திருவான்மியூர் உறையும்
அறிவே உன்னை யல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: படம் கொண்டு விளங்கும் நாகத்தைப் படுக்கையாகக் கொண்டுள்ள திருமாலும், தாமரைப் பூவில் உறையும் பிரமனும், நெறி காட்டும் உமது நீண்ட கழலையும், மேலோங்கும் முடியையும், காண்பதற்கு அரிதாகிய ஈசனே! மதில் சூழ்ந்த திருவான்மியூரில்

Koviloor Digital Library

வீற்றிருக்கின்ற பேர் அறிவே! தேவரீரையன்றி என் மனமானது வேறொன்றையும் நாடாது.

சிறப்புரை: ஈசன் ஞான மயமாய், அறிவிற்கு அறிவாய், அறிவிக்கும் அறிவாய் விளங்கும் பெற்றியினை "அறிவே" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "மறிசேர் அங்கையனே! மழபாடியுள் மாணிக்கமே! அறிவே! நின்னையல்லால் இனி யாரை நினைக்கேனே!" எனவும்; மாணிக்க வாசகர், "அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே" எனவும் ஓதி அருளிச் செய்தமை காண்க.

பூமிசை – தாமரைப் பூவின்மீது.

592. குண்டாடும் சமணர் கொடும் சாக்கியர் என்றிவர்கள்
கண்டார் காரணங்கள் கருதாதவர் பேசநின்றாய்
திண்தேர் வீதியதார் திருவான்மி யூர்உறையும்
அண்டா உன்னை யல்லால் அடையாதுஎனது ஆதரவே.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் உண்மையான காரண கருத்துக்களை அறியாதவராய், உம்மைப் பேச வீற்றிருந்தீர். தேர் செல்லும் அகன்ற வீதிகளை நன்கு கொண்டு மேவும் திருவான்மியூரில் உறையும் அண்டர் நாயகனே! தேவரீரையன்றி என் மனமானது வேறு எதனையும் நாடாது.

593. கன்றா ருங்கமுகின் வயல்சூழ்தரு காழிதனில்
நன்றா னபுகழால் மிகுஞானசம் பந்தனுரை
சென்றார் தம்மிடர்தீர் திருவான்மியூரதன்மேல்
குன்றாது ஏத்தவல்லார் கொடுவல்வினை போயறுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பாக்கு மரக் கன்றுகள் வயல்களைச் சூழ்ந்து விளங்குகின்ற காழியில், நன்மைகள் மேவும்

Koviloor Digital Library

சைவ நெறியில் விளங்கிப் புகழ் கொண்டு திகழும் ஞானசம்பந்தன் உரை கொண்டு இடர் தீர்க்கும் திருவான்மியூரின்மேல் செப்பிய இத் திருப்பதிகத்தை ஏத்தி ஓத வல்லவர்களுக்குத் தீவினையானது விலகிச் செல்லும்.

சிறப்புரை: இத் திருப்பதிகத்தில், ஈற்றடியில் வருகின்ற *ஐயா உன்னையல்லால்; அண்ணா உன்னையல்லால்; அறிவே உன்னையல்லால்; அண்டா உன்னையல்லால்* என்னும் திருத்தொடர்கள் சுந்தரர் அருளிச் செய்த திருமழபாடி திருப்பதிகத்தில் பொருந்துமாறு போற்றி உரைக்கப் பெறுதலைக் காண்க.

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பதிகமானது, "உரை சென்றார் தம் இடரைத் தீர்க்க வல்லது" என உரைக்கப் பெற்றுச் சொல்வோரும், சொல்லக் கேட்போரும் பெறுகின்ற பயனை உணர்த்திற்று.

314. திருப்பிரமபுரம்

தல விளக்கம்: பதிகம் எண் 260 காண்க.

பண் : கௌசிகம்

திருச்சிற்றம்பலம்

594. இறையவன் ஈசன் எந்தை
இமையோர்தொழுது ஏத்த நின்ற
கறையமி கண்டன்வெண் தோடு
அணிகாதினன் காலத்தன்று
மறைமொழி வாய்மையினான்
மலையாளொடு மன்னுசென்னிப்

Koviloor Digital Library

பிறையணி செஞ்சடையான்
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: இறைவனாகிய ஈசன், என் தந்தை. அப்பெருமான், தேவர்களால் தொழப்படுபவர்; கழுத்தில் நஞ்சு அருந்திய கறையுடையவர்; சங்கினால் ஆன தோடு என்கிற அணியைக் காதில் கொண் டுள்ளவர்; உரிய காலத்தில் வேதங்களை உபதேசம் செய்தவர்; மலை மகளாகிய உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர்; ஒளி மேவித் திகழும் செஞ் சடையில், பிறைச் சந்திரனை அணிந்துள்ளவர். அப்பெருமான், வீற்றிருக்கும் பிரமாபுரத்தை ஏத்துவீராக.

595. சடையினன் சாம வேதன்
சரிகோவண வன்மழுவாள்
படையினன் பாய்புலித்தோல்
உடையான் மறை பல்கலைநூல்
உடையவன் ஊனமில்லி
உடனாய்உமை நங்கையென்னும்
பெடையொடும் பேணும்இடம்
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: ஈசன், சடை முடி உடையவர்; சாமவேதன் என்னும் திருப்பெயர் பூண்டவர்; யாவராலும் மாறு பாடற்ற தன்மையில் விளங்கும் வேதத்தைக் கோவணமாகத் தரித்து இருப்பவர்; மழு என்னும் வாட்படை உடையவர்; புலியின் தோலை உடுத்தியவர்; வேதம் முதலான கலை நூல்களின் தலைவர்; எத்தகைய குறைபாடும் இல்லாதவர்; உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர். அப் பெருமான் விரும்புகின்ற இடமாகிய பிரமாபுரத்தை ஏத்துக.

Koviloor Digital Library

596. மாணியை நாடு காலனுயிர்
மாய்தரச் செற்றுக்காளி
காணிய ஆடல் கொண்டான்
கலந்து ஊர்வழி சென்று பிச்சை
ஊணியல் பாகக் கொண்டு அங்கு
உடனே உமைநங்கை யோடும்
பேணிய கோயில் மன்னும்
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: *ஈசன், மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனின் உயிரை மாய்த்தவர்; காளி தேவி காணுமாறு திருநடனம் புரிந்தவர்; பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி, ஊர்தொறும் சென்று பிச்சை ஏற்று உணவைத் கொண்டவர்; உமாதேவியை உடனாகக் கொண்டு விளங்குபவர்; அப்பெருமான் விரும்பி இருக்கும் கோயில், சிறப்புடன் திகழும் பிரமாபுரம் ஆகும். அதனை ஏத்துமின்.*

597. பாரிடம் விண்ணும் எங்கும்
பயில்நஞ்சு பரந்து மிண்டப்,
பேரிடர்த் தேவர் கணம்
பெருமான் இதுகா எனலும்
ஓரிடத் தேகரந்து அங்கு
உமைநங்கை யொடும்உடனே
பேரிட மாகக் கொண்ட
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: *மண்ணுலகத்திலும் விண்ணுலகத்திலும் விரிந்து பரந்து நஞ்சின் வெம்மையால் தேவர்கள் இடர் கொண்டு நலிந்து, 'பெருமானே! காப்பாற்றுவீராக' என்று வேண்டித் துதிக்க, அந்த விடத்தை ஓரிடத்தில் சாருமாறு தருவித்துக் கொண்டு, கண்டத்தில் கரந்து அருள் புரிந்தவர், சிவபெருமான். அப் பரமன்,*

Koviloor Digital Library

உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருக்கும் பெருமை மிகுந்த இடமாவது, பிரமாபுரம் ஆகும். அதனை ஏத்துக.

598. நச்சரவச் சடைமேல்
நளிர் திங்களும் ஒன்றவைத்துஅங்கு
அச்சம்எழ விடைமேல்
அழகார் மழு ஏந்திநல்ல
இச்சை பகர்ந்து மிக
இடுமின் பலி என்றுநாளும்
பிச்சைகொள் அண்ணல் நண்ணும்
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: ஈசன், நஞ்சு கொண்டு மேவும் அரவத்தைச் சடை முடியின் மீது இருத்திக் குளிர்ச்சி மிக்க சந்திரனை அதனுடன் ஒன்றி இருக்குமாறு செய்தவர்; இடப வாகனத்தின் மீது அமர்ந்து, அச்சம் தரும் மழுப் படையை ஏந்தியவர்; விருப்பத்துடன் பலி இடுமாறு வேண்டி நாள்தோறும் பிச்சை ஏற்பவர். அவ் ஈசன் வீற்றிருக்கும் பிரமாபுரத்தைப் பேணுவீராக.

599. பெற்றவன் முப்புரங்கள்
பிழையா வண்ணம் வாளியினால்
செற்றவன் செஞ்சடையில்
திகழ்கங்கை தனைத் தரித்திட்டு
ஒற்றை விடையினனாய்
உமை நங்கையொடும் உடனே
பெற்றிமை யால் இருந்தான்
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: ஈசன், இடப வாகனத்தை உடையவர்; மூன்று புரங்களைத் தப்பித்துச் செல்லாதவாறு ஒரு அம்பு செலுத்திச் சாம்பலாக்கியவர்; கங்கையைத்

Koviloor Digital Library

தரித்தவர்; ஒற்றை இடபத்தை உடையவர்; உமா தேவியை உடனாகக் கொண்டு பெருமையாக விளங்குபவர். அப் பெருமான் வீற்றிருக்கும் பிரமா புரத்தைப் பேணுவீராக.

பிழையா வண்ணம் – வானில் பறந்து திரியும் முப்புரங்களை ஓர் அம்பால் அழித்த ஆற்றலைச் சுட்டியது.

600. வேத மலிந்த வொலி
விழவின் னொலி வீணையொலி
கீத மலிந்துடனே
கிளரத்திகழ் பௌவமறை
ஓத மலிந்துயர் வான்
முகடேற வொண் மால்வரையான்
பேதையொடும் இருந்தான்
பிரமாபுரம் பேணுமினே.

தெளிவுரை: வேதங்களை ஓதுகின்ற ஒலியும், திரு விழாக்கள் நடைபெறுகின்ற ஒலியும், வீணையில் கீதங் களை இசைத்து மீட்டுகின்ற ஒலியும், ஒரு சேர எழுந்து கடலின் ஒலியை அடக்குகின்றவாறு, வானில் சென்று ஒலிக்க, பெருமையுடைய கயிலை மலையானாகிய சிவபெருமான் உமாதேவியோடு வீற்றிருக்கும் பிரமா புரத்தை ஏத்துவீராக.

சிறப்புரை: அந்தணர்கள், வேதங்களை ஓதி வேள்வி புரிதலும், வேத பாடசாலை வாயிலாக ஓதுவித்தலும் உணர்த்துமாறு, "வேதம் மலிந்த ஒலி" எனச் சிறப்பிக்கப் பெற்றது. திருக்கோயிலில் நடைபெறும் திருவிழாக் களின் ஒலியும், இறைவன் திருவீதி உலா வரும் தன்மையில் வாசிக்கப் பெறும் மங்கலவாத்திய ஒலியும், மக்கள் தம் தம் இல்லங்களில் நிகழ்த்தும் சுபச் சடங்கு களின் ஒலியும் விளங்கும் செம்மை, "விழவின் ஒலி"

Koviloor Digital Library

என ஓதப் பெறுவதாயிற்று. கலை ஞானம் வல்ல மக்கள், ஆடலும் பாடலும் கொண்டு ஈசனைப் போற்றும் மாண்பில் சிறந்து விளங்குதல் "வீணை யொலி கீதம் மலிந்து" என ஏத்தப் பெற்றது.

மால்வரை – கயிலை மலை; பேதை – உமாதேவி.

601. இமையவர் அஞ்சி யோட
எதிர்வாரவர் தம்மையின்றி
அமைதரு வல்லரக்கன்
அடர்த்து மலை அன்றுஎடுப்பக்
குமையது செய்து பாடக்
கொற்ற வாளொடு நாள் கொடுத்திட்டு
உமையொடு இருந்தபிரான்
பிரமாபுரம் உன்னுமினே.

தெளிவுரை: இராவணனைக் கண்டு தேவர்கள் அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டனர். அவன், தன்னை எதிர்த்து நிற்பவர் இன்றிக் கயிலை மலையைப் பெயர்த்து எடுத்த காலத்தில், ஈசன் திருப்பாத விரலால் சிறிது ஊன்ற, மலை அழுந்தி அவ் அரக்கனை நெரித்தது. மனம் வெதும்பி. உடல் சோர்ந்து துன்புற்று நலிந்த இராவணன், ஈசனைப் பாடிப் போற்ற, அவனுக்கு வீரவாளும், நீண்ட வாழ்நாளும் வரமாகக் கிடைத்தது. அத்தகைய வரத்தை நல்கிய சிவபெருமான் உமாதேவி யோடு வீற்றிருப்பது பிரமாபுரம் ஆகும். அதனை நினைத்து ஏத்துமின்.

குமை – துன்பம்; உன்னுதல் – ஏத்துதல்.

602. ஞாலம் அளித்தவனும்
அரியும் அடி யோடுமுடி
காலம் பலசெலவும்
கண்டிலாமை யினால்கதறி

Koviloor Digital Library

ஓலம் இடஅருளி
உமைநங்கை யொடும்உடனாய்
ஏல விருந்தபிரான்
பிரமாபுரம் ஏத்துமினே.

தெளிவுரை: பூவுலகைப் படைத்த பிரமனும், திருமாலும் பலகாலம் ஈசனின் அடி முடியைத் தேடி அலைந்து, காண முடியாது அயர்ந்து பக்தியால் கதறி ஓலம் இட்டனர். அத்தன்மையில் அவர்களுக்கு அருள் புரிந்த சிவபெருமான், உமாதேவியை உடனாகக் கொண்டு பொருந்துமாறு வீற்றிருக்கும் இடம் பிரமாபுரம் ஆகும். அதனை ஏத்துமின்.

சிறப்புரை: பிரமனும் திருமாலும் செருக்கின் வயத்தில் நின்று தேடிக் காணாமையும், பின்னர் அத்தகைய செருக்கினைக் கொண்டது தகாது என உணர்ந்து, உள்ளம் அழிந்து வருந்தியமையும், ஈசனைப் போற்றித் துதித்து வேண்டுதல் வாயிலாக முறையிட்ட செம்மையும், "கதறி ஓல மிட" என்னும் அருஞ் சொற்களால் கொள்க.

603. துவருறும் ஆடையினார்
தொக்க பீலியர் நக்கரையர்
அவரவர் தம்மைகள்கண்டு
அணுகேன்மின் னருள்பெறுவீர்
கவருறு சிந்தை யொன்றிக்
கழிகாலம் எல்லாம் படைத்த
இவர்அவர் என்றுஇறைஞ்சிப்
பிரமாபுரம் ஏத்துமினே.

தெளிவுரை: சமணரும் சாக்கியரும் கொண்டுள்ள கொள்கைகளை அணுக வேண்டாம். இறைவனுடைய திருவருளில் நாட்டம் கொண்டு அதனைப்

Koviloor Digital Library

பெறுவதற்கு விரும்புபவர்களே! இக்காலத்தில் மட்டும் அல்லாது சென்ற காலத்திலும் எல்லாவற்றையும் தோற்றுவித்துக் காத்தருள் புரிபவர் சிவபெருமானே என்று சிந்தையில் தோய்ந்த விருப்பம் உடையவராய் வழிபடுவீராக. அப்பெருமான் வீற்றிருக்கின்ற பிரமா புரத்தை ஏத்துவீராக.

சிறப்புரை: இத் திருப்பதிகத்தில் அமைந்த திருப்பாடல் கள் திருத்தலத்தின் பெருமையைச் சாற்றித் தல வழி பாட்டு நெறியைப் பரவுவதாயிற்று.

கவர்தல் – விரும்புதல்.

604. உரைதரு நான்மறையோர்
புகழ்ந்து ஏத்த ஒண்மாதினொடும்
வரையென வீற்றிருந்தான்
மலிகின்ற பிரமபுரத்து
அரசினை யேத்தவல்ல
அணிசம்பந்தன் பத்தும் வல்லார்
விரைதரு விண்ணுலகம்
எதிர்கொள்ள விரும்புவரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: பெரும் புகழுக்கு உரிய நான்மறை வல்ல பெருமக்களால் புகழ்ந்து ஏத்த, ஒளி திகழ மேவும் உமாதேவியை உடனாகக் கொண்டு, மலை போன்று உறுதிப் பொருளாக விளங்குபவர் சிவபெருமான். அவர் வீற்றிருக்கும் பிரமாபுரத்தின் அருளாட்சிச் சிறப்பினை, ஏத்திய ஞானசம்பந்தனின் இத்திருப் பதிகத்தை ஓத வல்லவர்கள், கற்பகத் தரு முதலான நறு மணமலர்கள் பொலிந்து எழில் மேவும் தேவர் உலகத்தவர்களால், எதிர் கொண்டு வரவேற்கப் படுவார்கள்.

ஒண்மாது – உமாதேவி; அரசு – அருளாட்சி.

Koviloor Digital Library

315. திருவொற்றியூர்

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலங்கள் 32இல், இது 20ஆவது திருத்தலம். மூவர் பாடல் பெற்றது. ஆதிபுரி என்னும் பெயர் உடையது. கலிய நாயனார் அவதாரத் தலம். சுந்தரர், சங்கிலியாரைத் திருமணம் செய்த பதி. பட்டினத்தடிகள் முத்தித் தலம்.

சுவாமி : ஆதிபுரீஸ்வரர், புற்றிடங் கொண்டார், படம் பக்கநாதர், எழுத்தறியும் பெருமான், ஆனந்தத் தியாகர்

அம்பிகை : திரிபுரசுந்தரி, வடிவுடை அம்மை

தல மரம் : மகிழ மரம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

605. விடையவன் விண்ணு மண்ணும்
தொழநின்றவன் வெண்மழுவாள்
படையவன் பாய்புலித் தோல்
உடைகோவ ணம்பல்கரந்தைச்
சடையவன் சாம வேதன்
சசிதங்கி சங்கவெண்தோடு
உடையவன் ஊனமில்லி
உறையும் இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: சிவபெருமான், இடப வாகனத்தை உடையவர்; தேவர்களும் பூவுலக மாந்தரும் தொழுது போற்ற விளங்குபவர்; ஒளி திகழும் மழுப் படையுடையவர்; புலித் தோலும் கோவணமும் உடையாகக்

Koviloor Digital Library

கொண்டவர்; பலவிதமான மலர்களைச் சடையில் சூடியவர்; சாமவேதன் என்னும் திருநாமத்திற்கு உரியவர்; சந்திரனைத் திருமுடியில் தாங்கி, சங்கினால் ஆகிய வெண்மையான தோடு என்னும் அணியைக் காதில் அணிபவர்; குறையேதும் இல்லாத குணக் குன்றாகிய அப்பெருமான், அடியவர்களின் ஊனமாகக் கருதப்படும் குற்றம் குறைகளைக் களைந்து வீற்றிருக்கும் இடம், ஒற்றியூரே.

கரந்தை – திருநீற்றுப்பச்சை; சசி – சந்திரன்.

606. பாரிடம் பாணிசெய்யப்
பறைக்கட் செறு பல்கணப்பேய்
சீரொடும் பாடல்ஆடல்
இலயம்சிதை யாதகொள்கைத்
தாரிடும் போர்விடையன்
தலைவன்தலை யேகலனா
ஊரிடும் பிச்சை கொள்வான்
உறையும்இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: பூத கணங்கள் பண் இசைத்துப் பாடவும், பறைகள் கொட்டவும் பல்வேறு கணங்களையுடைய பேய்கள் பாடி ஆடவும், இலயம் கெடாதவாறு நிகழ்த்தும் திருக்கூத்தினைப் புரிபவர், ஈசன். இடப வாகனத்தை உடைய அப்பெருமான், படைத்தல் தொழில் மேவும் தலைவனாகிய பிரமனின் தலையைப் பிச்சைப் பாத்திரமாகக் கொண்டு ஊரார் இடுகின்ற பிச்சை கொள்பவர். அவர் உறைவது, ஒற்றியூரே.

சிறப்புரை: ஈசன், ஊர்தொறும் சென்று பிச்சை ஏற்றுத் திரிதல், "தலையே கலனா ஊரிடும் பிச்சை கொள்வான்" எனச் சுட்டப் பெற்றது. இத்தன்மையில் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

Koviloor Digital Library

காரிரும் பொழிற் கச்சி மூதூர்க்
காமக் கோட்டம் உண் டாக நீர்போய்
ஊரிடும் பிச்சை கொள்வ தென்னே
ஓணகாந்தன் தளியுளீரே

என அருளிச் செய்த பாங்கும் காண்க.

தலைவன் தலை – பிரம கபாலம்.

607. விளிதரு நீரு மண்ணும்
விசும்போடு அனல் காலும்ஆகி
அளிதரு பேரருளால்
அரனாகிய ஆதிமூர்த்தி
களிதரு வண்டு பண்செய்
கமழ்கொன்றையி னோடுஅணிந்த
ஒளிதரு வெண்பிறையான்
உறையும்இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: *ஈசன், நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என ஐம்பூதங்களாக விளங்கி, மன்னுயிர்களுக்கு அன்புடன் அருளும் பேரருளானவர். அப்பெருமான், அர்ன் என்று சொல்லப்படுகின்ற ஆதிமூர்த்தி. வண்டுகள் பண் செய்யும் நறுமணம் கமழ்கின்ற கொன்றை மலருடன், பிறைச் சந்திரனைச் சூடி அவ் இறைவன் உறையும் இடமாவது ஒற்றியூரே.*

608. அரவமே கச்சதாக
அசைத்தான் அலர் கொன்றையந்தார்
விரவிவெண் ணூல்கிடந்த
விரையார்வரை மார்பன் எந்தை
பரவுவார் பாவம் எல்லாம்
பறைத்துப்படர் புன்சடைமேல்
உரவுநீர் ஏற்ற பெம்மான்
உறையும் இடம் ஒற்றியூரே.

Koviloor Digital Library

தெளிவுரை: சிவபெருமான், அரவத்தை அரையில் கச்சாகக் கட்டியவர்; கொன்றை மாலை சூடியவர்; முப்புரி நூல் தரித்த மலை போன்ற திரு மார்பினர். எம் தந்தையாகிய அப் பெருமான், பரவி ஏத்தும் அடியவர்களின் பாவத்தைத் தீர்த்தருள்பவர். சடை முடியில் கங்கையைத் தரித்த அக்கடவுள் உறையும் இடம், ஒற்றியூரே.

உரவு நீர் – கங்கை.

609. விலகினார் வெய்ய பாவம்
விதியால் அருள் செய்து நல்ல
பலகினார் மொந்தை தாளம்
தகுணிச் சமும் பாணியாலே
அலகினால் வீசி நீர்கொண்டு
அடிமேல் அலர் இட்டுமுட்டாது
உலகினார் ஏத்த நின்றான்
உறையும் இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: ஈசன், கொடிய பாவங்களிலிருந்து விடுபட்ட பக்குவப்பட்ட நன் மாந்தர்களுக்கு நல்லுப தேசம் செய்விப்பவராய்ப் பலவிதமான வாத்தியங் களும் சேர்ந்து முழங்க, பாடல்களை இசைத்துத் தூய நீர் கொண்டு அபிடேகம் செய்தும் மலரால் தூவி அருச்சித்தும் ஏத்தியும் வழிபட வீற்றிருக்கும் இடமாவது, ஒற்றியூரே.

610. கமையொடு நின்றசீரான்
கழலும் சிலம்பும் ஒலிப்பச்
சுமையொடு மேலும் வைத்தான்
விரிகொன்றையும் சோம னையும்
அமையொடு நீண்ட திண்டோள்
அழகாய பொற் றோடுஇலங்க

Koviloor Digital Library

உமையொடும் கூடி நின்றான்
உறையும் இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: அமைதியும் சாந்தமும் விளங்கப் பொலியும் சிவபெருமான், கழலும் சிலம்பும் ஒலிக்க நடம் புரிபவர். திருமுடியின்கண் சந்திரனையும், கொன்றை மலரையும் தரித்த அப்பெருமான், நீண்ட அழகிய தோளழகு உடையவர்; காதில் அழகிய பொன் மயமான தோடு அணிந்தவர். அவர், உமாதேவியோடு வீற்றிருக்கும் இடமாவது ஒற்றியூரே.

கமை – பொறுமை, சாந்தம்.

611. நன்றியால் வாழ்வதுள்ளம்
உலகுக்குஆரு நன்மையாலே
கன்றினார் மும்மதிலும்
கருமால் வரையே சிலையாப்
பொன்றி னார் வார்சுடலைப்
பொடிநீறு அணிந்தார் அழலம்பு
ஒன்றினால் எய்தபெம்மான்
உறையும் இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: ஈசன், உலகத்தில் உள்ளவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்னும் நற்குணத்தின் சிறப்பினால் மூன்று புரங்களையும் பெருமை வாய்ந்த மேரு மலையை வில்லாகக் கொண்டு, நெருப்பாகிய கணை ஒன்றினால் எய்து அழித்தவர். திருவெண்ணீறு அணிந்து பொலியும் அப்பெருமான் உறையும் இடம் ஒற்றியூரே.

612. பெற்றியால் பித்தன் ஒப்பான்
பெருமான் கரு மானுரி தோல்
சுற்றியான் சுத்தி சூலம்
சுடர்க்கண்ணுதல் மேல்விளங்கத்

Koviloor Digital Library

தெற்றியாற் செற்றரக்கன்
        உடலைச் செழு மால்வரைக்கீழ்
ஒற்றியான் முற்றும் ஆள்வான்
        உறையும் இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: இயல்பால் பித்தனைப் போன்று விளங்கும் சிவபெருமான், மானின் தோலை உடுத்தியிருப்பவர்; நெருப்புக் கண்ணை நெற்றியில் கொண்டு விளங்கு பவர்; கயிலை மலையைத் தெற்றிப் பெயர்த்த இராவணனை மலையின்கீழ் நெரியுமாறு நலியச் செய்தவர்; அடியவர்களை முழுமையாக ஆட் கொண்டு அருள் புரிபவர். அப்பெருமான் வீற்றிருக்கும் இடமாவது ஒற்றியூரே.

சிறப்புரை: ஈசனின் இயல்பினைப் பித்தன் என உரைக்கப்பெறினும், செயல் தன்மையில் வீரமும், அடியவர்களை ஆட்கொள்ளும் கருணையில் முழுமையும் விளங்குமாறு, இத் திருப்பாட்டு நவில்வதாயிற்று.

ஒற்றியான் – அழுத்தியவன். பரம் பொருளாகிய ஈசனுக்கு ஒற்றுதலும், இராவணனுக்கு நெரிக்கப்படுதலும் ஆம்.

613. திருவினார் போதினானும்
        திருமாலுமோர் தெய்வம் உன்னித்
தெரிவினாற் காண மாட்டார்
        திகழ்சேவடி சிந்தை செய்து
பரவினார் பாவம் எல்லாம்
        பறை யப்படர் பேரொளியோடு
ஒருவனாய் நின்ற பெம்மான்
        உறையும் இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் தெய்வத்தைக் காண வேண்டும் என நினைத்துத் தெரிந்தது போலக் கருதிச்

Koviloor Digital Library

சென்று பார்க்க முனைந்த போது, காண முடியாதவர் களாய் அயர்ந்து நிற்க; பின்னர் சிந்தனை செய்து பரவி ஏத்தப் பேரொளியாகக் திகழ்ந்தவர், சிவபெருமான். அத்தகைய பேரொளியாகிய பரமன், பரவும் அடியவர்தம் பாவங்களைக் களைந்து உறையும் இடம் ஒற்றியூரே.

614. தோகையம்பீலி கொள்வார்
துவர்க் கூறைகள் போர்த்து உழல்வார்
ஆகம செல்வனாரை
அலர் தூற்றுதல் காரணமாகக்
கூகையம் மாக்கள் சொல்லைக்
குறிக் கொள்ளன்மின் ஏழுலகும்
ஓகை தந்தாள வல்லான்
உறையும்இடம் ஒற்றியூரே.

தெளிவுரை: *மயில் தோகை கொண்டுள்ள சமணரும், துவர் ஆடையைப் போர்த்திய சாக்கியரும், ஆகம நெறியில் பூசிக்கப் பெறும் செல்வராகிய சிவபெரு மானைப் பழித்துக் கூறும் சொற்களை ஏற்க வேண்டாம். ஏழுலகமும் மகிழுமாறு ஆட்கொள்ள வல்லவராகிய அப்பெருமான் வீற்றிருக்கும் இடம், ஒற்றியூரே. அதனை ஏத்துமின்.*

615. ஒண்பிறை மல்குசென்னி
இறைவன் உறை ஒற்றியூரைச்
சண்பையர்தம் தலைவன்
தமிழ்ஞான சம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல் பத்தும்
பரவிப் பணிந்து ஏத்தவல்லார்
விண்புனை மேலுலகம்
விருப்பெய்துவர் வீடுஎளிதே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: ஒளிமிக்க பிறைச் சந்திரனைத் திருமுடியில் தரித்த சிவபெருமான் உறைகின்ற ஒற்றியூரைச் சண்பை என்னும் காழியின் தலைவனாகிய தமிழ் ஞான சம்பந்தன் சொன்ன, பண்ணின் வளம் திகழும் இத் திருப்பதிகத்தைப் பரவியும் பணிந்தும் ஏத்தவல்ல வர்கள், மறுமையில் விண்ணுலகத்தில் அழகுடன் விளங்கி இருந்து, முத்திப் பேற்றை எளிதாக எய்து வார்கள்.

சிறப்புரை: இத் திருப்பதிகம், ஈசனுக்கு ஒப்பானது என உரைக்கப் பெறுதல் காண்க. இதனை "பரவிப் பணிந்து ஏத்த" என்னும் தொடரால் கொள்க.

பரவி – விரும்பி ஒதுதல்.

316. திருச்சாத்தமங்கை

தல விளக்கம்: காவிரித் தென் கரைத் தலம் 127இல் இது 81ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. சீயாத்த மங்கை என வழங்கப்படுகிறது. பிரமன் பூசித்த தலம். திருநீலநக்க நாயனாரின் அவதாரப் பதி. கோயிலின் பெயர் அயவந்தீசம்.

சுவாமி : அயவந்தீஸ்வரர், பிரமபுரீஸ்வரர்

அம்பிகை : இருமலர்க் கண்ணம்மை

தல மரம் : கொன்றை

தீர்த்தம் : சூரிய சந்திர தீர்த்தம் (கீழ்த்துறை சூரியன், மேல் துறை சந்திரன்)

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

616. திருமலர்க் கொன்றைமாலை
திளைக்கும் மதி சென்னிவைத்தீர்

Koviloor Digital Library

இருமலர்க் கண்ணி தன்னோடு
உடனாவதும் ஏற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேகம்
உரிஞ்சும் பெருஞ் சாத்தமங்கை
அருமலர் ஆதிமூர்த்தி
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: சிறப்பான கொன்றை மலரை மாலையாகக் கொண்டு மகிழும் தேவரீர், சந்திரனைத் தலையில் வைத்து விளங்குபவர்; தாமரை மலர் போன்ற கண்ணுடைய உமாதேவியோடு இணைந்து பாகத்தில் ஏற்று, அர்த்தநாரி திருக்கோலத்திலும் வேறாகத் திகழ, உடன் கொண்டு விளங்குமாறும் வீற்றிருப்பவர். அத்தகைய ஒப்பற்றவராயும் அருமை உடையவராயும் மேவும் ஆதிமூர்த்தி, பெருமையுடைய மலர்களைத் தரும் எழிலுடைய பெருஞ்சாத்த மங்கையில் உள்ள அயவந்தீசத்தில் உறைபவர் ஆவர்.

சிறப்புரை: பிரணவ புஷ்பம் எனப்படுவதும், ஈசனுக்கு உரித்தானதும், இத்திருத்தலத்தின் தல விருட்சமாகவும் உள்ள கொன்றை மலரானது, திருமலர் எனப் போற்றப் படுவதாயிற்று. இத்திருத்தலத்தின் அம்பிகையின் திருப் பெயராகிய இருமலர்க் கண்ணியம்மை என்பது, இத் திருப்பாட்டில் உணர்த்தப் பெற்றது. அம்பிகையின் திருநாமம் தமது பக்தர்களுக்கு நயனங்கள் வாயிலாக அருள் வழங்கும் காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சி (அட்சி – கண்) போன்று தமது இரு கண்களாலும் அருள் வழங்கும் மாட்சிமையை உணர்த்திற்று.

இரு மலராவது, பெருமை பொருந்திய தாமரை மலர் எனவும், அது திருமகள் வாசம் செய்யும் செந்தாமரையும், கலைமகள் மேவும் வெண்தாமரை

Koviloor Digital Library

யும் கொண்டு எண்ணத் தகுவது எனவும், தேவி தம் பார்வையால், சேவார்த்திகளுக்குக் கல்வியும் செல்வமும் வளமுடன் வழங்கும் தன்மை யாயும் கொள்க.

அட்ட புட்பங்களைக் கொண்டு ஈசனை ஏத்திப் பரவும் சிறப்பு பெருமலர்ச் சோலை எனப் போற்றப்பட்டது.

அயவந்தி – கோயிலின் பெயர்.

617. பொடிதனைப் பூசுமார்பில்
புரிநூல் ஒரு பால்பொருந்தக்
கொடியன சாயலாளோடு
உடனாவதும் கூடுவதே
கடிமண மல்கிநாளும்
கமழும் பொழில் சாத்தமங்கை
அடிகள் நக் கன்பரவ
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: சிவபெருமான், திருவெண்ணீறு பூசி, திருமார்பில் முப்புரி நூலை அணிந்து, பூங்கொடி போன்ற மென்மையுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு, அர்த்தநாரியாகவும் திகழ்பவர். நறுமண மலர்கள் எல்லாக் காலங்களிலும் பூத்துக் கமழும் பொழில் விளங்கும் சாத்தமங்கையில், அப்பெருமான் திருநீலநக்க நாயனார்ரால் ஏத்தி வழிபட அயவந் தீசத்தில் அமர்ந்துள்ளவர்.

சிறப்புரை: முந்தைய திருப்பாட்டில் பெரு மலர்ச் சோலைகள் திகழும் சாத்த மங்கை என உணர்த்தி, மலர்களின் வளப்பத்தினை உரைத்த பாலறாவாயர், எக்காலத்திலும் வளத்துடன் மலர்களைத் தருகின்ற

Koviloor Digital Library

பொழிலை உடையது இத்திருத்தலம் என இத்திருப் பாட்டின் வழி ஓதுதலைக் காண்க. பனிக்காலம் மற்றும் குளிர் காலத்திலும், கோடைக்காலத்திலும் சில வகையான மலர்களின் வளப்பம் குறைந்து காணப் படினும், அவ்வக்காலங்களில் பூக்கும் மரங்களும் செடி வகைகளும் மல்கி விளங்கிய தன்மையை, "நாளும் கமழும் பொழில்" என உணர்த்தப் பெற்றது.

இதனை உணர்த்தப் பெறும் நோக்கில், "கொடியன சாயல்" என அம்பிகையின் குணவிசேட மாக ஓதப் பெற்றதும் காண்க.

பொடி – திருநீறு; நக்கன் – திருநீலநக்க நாயனார்.

618. நூல் நலம் தங்குமார்பில்
நுகர் நீறு அணிந்து ஏறதுஏறி
மானன நோக்கி தன்னோடு
உடனாவது மாண்பதுவே
தானலங் கொண்டு மேகம்
தவழும் பொழிற் சாத்தமங்கை
ஆனலந் தோய்ந்த எம்மான்
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: முப்புரி நூல் அணிந்த திருமார்பில் திருவெண்ணீற்றைக் குழையப் பூசி, இடப வாகனத்தில் ஏறி, உமாதேவியை ஒருபாகத்தில் இணைத்து, அர்த்த நாரியாகவும் உடனாகக் கொண்டு வேறாய் விளங்கியும் திகழ்பவர், சிவபெருமான். அப்பெருமான், பொழில் சூழ்ந்த சாத்த மங்கையில், ஆவின் நலம் பெருகும் பஞ்ச கௌவியத்தைத் திருமஞ்சனமாகக் கொண்டு, அயவந்தீசத்தில் வீற்றிருப்பவர்.

ஆனலம் – பஞ்ச கவ்வியம்.

Koviloor Digital Library

619. மற்றவில் மால்வரையா
மதில்எய்து வெண் ணீறுபூசிப்
புற்றரா அல்குலா ளோடு
உடனாவதும் பொற்பதுவே
கற்றவர் சாத்தமங்கை
நகர் கைதொழச் செய்தபாவம்
அற்றவர் நாளும் ஏத்த
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: மேருமலையை வில்லாகக் கொண்டு முப்புரங்களை எய்து சாம்பலாகுமாறு செய்து, தேவர்களைக் காத்தருள் புரிந்த சிவபெருமான், திருவெண்ணீறு அணிந்தவர்; உமாதேவியை உடனாகக் கொண்டு, பாகமாகப் பெற்று அர்த்த நாரியாகவும் திகழ்பவர். இவை அப்பெருமானின் சிறப்புடைய செயல்களாகும். அவர், கற்றவர்களும் பாவம் அற்றவர்களும் விளங்குகின்ற சாத்த மங்கையில் மேவும் அயவந்தீசத்தில் வீற்றிருப்பவர்.

சிறப்புரை: ஈசனின் திருவருள் வலத்தால் சாத்தமங்கை நகரில் கற்றவர்கள் விளங்கி இருந்தலை, "கற்றவர் சாத்த மங்கை நகர்" எனப் போற்றப்படுவதாயிற்று. "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" எனத் திருஞானசம்பந்தர் முதல் திருமுறையில் 2ஆம் திருப்பாட்டில் அருளிச் செய்ததும், "கற்றதனால் ஆய பயன் என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்னும் திருக்குறள் கருத்தும் இவண் நோக்குக. இத் திருத்தலத்தைக் கை தொழுது ஏத்தப் பாவம் விலகும் என்னும் ஆணை, வழங்கப் பெறுதலும் காண்க.

620. வெந்தவெண் ணீறுபூசி
விடையேறிய வேதகீதன்

Koviloor Digital Library

பந்தண வும்விரலாள்
உடனாவதும் பாங்கதுவே
சந்தமா றங்கம் வேதம்
தரித்தார் தொழும் சாத்தமங்கை
அந்தமாய் ஆதியாகி
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: ஈசன் திருவெண்ணீறு பூசி, இடப வாகனத்தில் அமர்ந்து, உமாதேவியை உடனாகக் கொண்டு வீற்றிருக்கும் வேத கீதனாவார். அவர், வேதமும், அதன் ஆறங்கமும் ஓதுகின்ற அந்தணர்கள் தொழுகின்ற சாத்தமங்கையில், ஆதியும் அந்தமும் திகழும் மூர்த்தியாய் விளங்குபவர். அப் பெருமான் அயவந்தி என்னும் இடத்தில் வீற்றிருப்பவர்.

621. வேதமாய் வேள்வியாகி
விளங்கும் பொருள் வீடதாகிச்
சோதியாய் மங்கைபாகம்
நிலைதான் சொல்லல் ஆவதொன்றே
சாதியான் மிக்கசீரால்
தகுவார் தொழும் சாத்தமங்கை
ஆதியாய் நின்ற பெம்மான்
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: ஈசன், வேதமாய் விளங்குபவர்; வேத முறையால் விளங்கும் வேள்வியாகவும், ஞான வேள்வி யாகவும் திகழ்பவர்; ஒண் பொருளாகவும் முத்திப் பேறாகவும் உள்ளவர். சோதியாயும், உமாதேவியை ஒரு பாகமாகவும் கொண்டு விளங்குபவர். அப் பெருமானை, இத் தன்மையுடையவர் என்று வாயினால் சொல்வது ஆகக்கூடிய செயலாகுமோ! அத்தகைய சிறப்புடைய பெருமான், தக்கவர்கள்

Koviloor Digital Library

தொழுகின்ற சாத்தமங்கையில் ஆதிமூர்த்தியாய் அயவந்தியில் அமர்ந்திருப்பவரே.

622. இமயமெல் லாம்இரிய
மதில்எய்துவெண் ணீறுபூசி
உமையையொர் பாகம்வைத்த
நிலை தானுன்னல் ஆவதொன்றே
சமயமா றங்கம் வேதம்
தரித்தார்தொழும் சாத்தமங்கை
அமையவேறு ஓங்குசீரான்
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: இமயம் முதலான பெரிய மலைகளும் நிலை கலங்குமாறு முப்புரங்கள் எரிந்து சாம்பலாகு மாறு செய்து, உமாதேவியை ஒரு பாகமாக வைத்து மேவும் சிவபெருமானுடைய பெரிய நிலையினைப் பாராட்டிப் பேசுவது என்பது ஆகக்கூடிய செயலாகுமோ! வேதத்தையும், அதன் ஆறு அங்கங்கள் முதலான சமய நூல்களையும் நன்கு ஆய்ந்து அறிந்த பெருமக்களால் தொழப்படும் சாத்த மங்கையில் ஓங்கு கின்ற சிறப்புடன் திகழும் ஈசன், அயவந்தியில் வீற்றிருப்பவரே.

சிறப்புரை: இத் திருத்தலத்தில் எல்லாச் சிறப்பும் ஈசனுக்கே உரித்தாதலும், ஏனையவை யாவும் அடங்கி நிற்றலும் சுட்டுமாறு, "அமைய வேறு ஓங்கு சீரான்" என ஓதப் பெற்றது.

623. பண்ணுலாம் பாடல்வீணை
பயில்வானோர் பரமயோகி
விண்ணுலா மால்வரையான்
மகள் பாகமும் வேண்டினையே

Koviloor Digital Library

தண்ணிலா வெண்மதியம்
தவழும்பொழில் சாத்தமங்கை
அண்ணலாய் நின்றஎம்மான்
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: சிவபெருமான், பண்ணின் இசை விளங்க வீணை மீட்டிப் பாடுபவர்; பரமயோகியானவர்; மலைக்கு அதிபனாகிய பர்வதராசனின் மகளாகிய பார்வதியை ஒரு பாகமாகக் கொண்டு திகழ்ந்தவர். அப்பெருமான், குளிர்ச்சி பொருந்திய வெண் மதி தோயும் பொழில் சூழ்ந்த சாத்தமங்கையில் தலைவனாய் விளங்கி அயவந்தீசத்தில் அமர்ந் திருப்பவர்.

சிறப்புரை: பரமயோகியாகிய ஈசன், உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர் என, நயம் விளங்க ஓதப் பெற்றது காண்க. "பத்தனாய்ப் பாட மாட்டேன் பரமனே பரமயோகி எத்தினாற் பக்தி செய்தேன் என்னை நீ இகழ வேண்டாம்; முத்தனே முதல்வா தில்லை அம்பலத் தாடுகின்ற அத்தா! உன் ஆடல் காண் பான் அடியனேன் வந்தவாறே'' எனத் திருநாவுக்கரசர் ஈசனைப் பரமயோகீ என்று போற்றும் செம்மையும் காண்க.

624. பேரெழில் தோளரக்கன்
வலிசெற்றதும் பெண்ணோர்பாகம்
ஈரெழிற் கோலமாகி
உடனாவதும் ஏற்பதொன்றே
காரெழில் வண்ணனோடு
கனகம் அனை யானும் காணா
ஆரழல் வண்ண மங்கை
அயவந்தி அமர்ந்தவனே.

Koviloor Digital Library

தெளிவுரை: எழில் கொண்ட தோளினால் மலையைப் பெயர்த்த இராவணனுடைய வலிமையை அடக்கிய சிவபெருமான், உமா தேவியை உடனாகக் கொண்டு, தனித்தனியேயும், பாகத்தில் இணைத்து அர்த்த நாரியாயும் ஆகிய வண்ணத்தில் காட்சி நல்குபவர். அப்பெருமான், திருமாலோடு பிரமனும் தன்னைக் காண முடியாதவாறு, தீத்திரட்சியாய் மேவிச் சாத்த மங்கையில் செவ்வண்ணனாய் அயவந்தி என்னும் திருக்கோயிலில் வீற்றிருப்பவரே.

கனகம் அனையான் – பிரமன்; மங்கை – சாத்தமங்கை.

625. கங்கையோர் வார்சடைமேல்
அடையப்புடை யேகமழும்
மங்கையோடு ஒன்றிநின்றஅம்
மதிதான் சொல்லல் ஆவதொன்றே
சங்கையில் லாமறையோர்
அவர்தாம் தொழு சாத்தமங்கை
அங்கையிற் சென்னிவைத்தாய்
அயவந்தி அமர்ந்தவனே.

தெளிவுரை: ஈசனே! கங்கையை நீண்ட சடை முடியில் கொண்டு விளங்குவதும், பக்கத்தில் மணம் மிகும் உமாதேவியை ஒன்ற வைத்து அர்த்தநாரியாய்த் திகழ் வதும் ஆகிய செம்மையுடைய அருஞ்செயல் சொல்லி முடியக்கூடிய · ஒன்றோ! வேதங்களை நன்கு தெளிவாகக் கற்ற அந்தணர்கள் தொழுகின்ற சாத்த மங்கையில், கபாலம் ஏந்திய பெருமானாய் விளங்கும் தேவரீர், அயவந்தி என்னும் கோயிலில் வீற்றிருப்பவர்.

626. மறையினார் மல்குகாழித்
தமிழ்ஞானசம் பந்தன் மன்னும்

Koviloor Digital Library

நிறையினார் நீலநக்கன்
　　நெடுமாநகர் என்று தொண்டர்
அறையும்ஊர் சாத்தமங்கை
　　அயவந்தி மேல் ஆய்ந்த பத்தும்
முறைமையால் ஏத்த வல்லார்
　　இமையோரிலும் முந்துவாரே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: *மறை வல்ல பெரியோர்கள் விளங்கும் காழியின் தமிழ் ஞானசம்பந்தன், சிறப்பின் மிக்க நிறை உடையவராகிய நீல நக்கருடைய திருநகர் என்று திருத் தொண்டர்களால் ஏத்தப் பெறும் சாத்தமங்கையில் மேவும் அயவந்தி என்னும் திருக்கோயிலின்மேல் உரைத்த இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள், தேவர் களைவிட மேலானவர்கள் ஆவார்கள்.*

317. திருக்குடமூக்கு

தல விளக்கம்: *காவிரித் தென்கரைத் தலம் 127இல், இது 26ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர் ஆகியோரின் பாடல் பெற்றது. கும்பகோணத் தில் உள்ளது. காஞ்சிபுரத்தைப் போன்று இந்த நகரம் சைவ, வைணவக் கோயில்கள் நிறைந்துள்ளன. இந் நகரில், பாடல் பெற்ற திருக்கோயில்கள் மூன்று உள்ளன.*

1. *குட மூக்கு - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோர் பாடல் பெற்றது.*

2. *குடந்தைக் கீழ்க் கோட்டம் - திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.*

Koviloor Digital Library

3. குடந்தைக் காரோணம் – திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது.

மூர்க்க நாயனார் வாழ்ந்த பதி. இங்குள்ள மகா மகக் குளம் தீர்த்த விசேடம் உடையது. கங்கை முதலான ஏழு தீர்த்தங்கள் சேர்ந்து விளங்கும் சிறப் புடையது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசி மகம் (பௌர்ணமி) நாளன்று சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

பிரமனின் வேண்டுகோளுக்கு இணங்கி இறைவன் தந்த அமுத கலசம் தங்கிய இடம். ஏம ரிஷி பூசித்த பதி.

சுவாமி : கும்பேசர்

அம்பிகை : மங்களாம்பிகை

தல மரம் : வன்னி

தீர்த்தம் : மகாமகக் குளம், காவிரி

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

627. அரவிரி கோடல்நீடல் அணிகாவிரி யாற்றயலே
மரவிரி போது மௌவல் மணமல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன் குடமூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி இருந்தான்அவன் எம்மிறையே.

தெளிவுரை: கோடல் மலர் விளங்கும் அழகிய காவிரி யின் அருகில் முல்லை மல்லிகை மலரும், தேன் துளிர்க்கும் குராமலரும் திகழும் குடமூக்கினை இடமாகக் கொண்டு அழகனாகிய சிவபெருமான், இரவில் திகழும் சந்திரனைச் சூடி வீற்றிருப்பவர். அப் பெருமானே எமது இறைவன்.

கோடல் – காந்தள் மலர்; மௌவல் – முல்லை.

Koviloor Digital Library

628. ஒத்துஅர வங்களோடும் ஒலிகாவிரி யார்த்தயலே
பூத்துஅர வங்களோடும் புகைகொண்டடி போற்றிநல்ல
கூத்துஅர வங்கள்ஓவாக் குழகன்குட மூக்குஇடமா
ஏத்துஅர வங்கள்செய்ய இருந்தான்அவன் எம்இறையே.

தெளிவுரை: வேதங்கள் ஓதும் ஒலியோடு, காவிரி ஆற்று வெள்ளத்தின் ஒலியும் இணைந்து பரவ, மலர்ச் சோலைகளில் பூத்த மலர்களைக் கொண்டு ஏத்தித் தூப தீபங்களைக் காட்டி அரநாமத்தை ஓதி உரைத்துப் போற்றித் துதி செய்து விளங்க, ஆரவாரத்துடன் திருக்கூத்து புரியும் அழகனாகிய சிவபெருமான், குட மூக்கினை இடமாகக் கொண்டு வீற்றிருக்கின்றார். அப் பெருமானை, எல்லாரும் "அர அர" என ஓதி ஆரவாரித்தும், மெய்ப் புகழ் கூறியும் வணங்கு கின்றனர். அவர் எம் கடவுள் ஆவார்.

பூத்து அரவம் – ஈசனைப் பூசித்து மகிழ்வதால் உண்டாகும் ஒலி; ஏத்து அரவம் – ஈசனின் புகழ் சரிதைகளைக் கூறுவதால் உண்டாகும் ஒலி.

629. மயில்பெடை புல்கியால மணல்மேல் மடஅன்னம் மல்கும்
பயில்பெடை வண்டுபண்செய் பழங்கள் விரிப்பைம்பொ
ழில்வாய்க்
குயில்பெடை யோடுபாடல் உடையாண்குட மூக்கிடமா
இயலொடு வானம்ஏத்த இருந்தான்அவன் எம்இறையே.

தெளிவுரை: ஆண் மயிலானது, பெண் மயிலோடு சேர்ந்து ஆடவும், அன்னப் பறவைகள் காவிரிக் கரையில் விளங்கும் மணலின் மீது நடை பயிலவும், வண்டினம் பண் செய்யும் பைம்பொழிலின்கண் குயிலானது பெடையோடு சேர்ந்து பாடலை இசைத்து விளங்கவும், குடமூக்கில் ஈசன் வீற்றிருப்பவர்.

Koviloor Digital Library

வானவர்கள் ஏத்துமாறு இருக்கும் அப் பெருமானே எம் இறைவன் ஆவார்.

630. **மிக்கரை தாழவேங்கை யுரியார்த்துஉமை யாள்வெருவ**
அக்குஅரவு ஆமை யேன மருப்போடுஅவை
பூண்டழகார்
கொக்கரை யோடுபாடல் உடையான்குட மூக்கிடமா
எக்கரை யாரும்ஏத்த இருந்தான் அவன் எம்இறையே.

தெளிவுரை: சிவபெருமான், புலியின் தோலை உரித்து நன்கு தாழ, அரையில் கட்டியவர்; உமாதேவி வெருவு மாறு எலும்பு, பாம்பு, ஆமை ஓடு, பன்றியின் கொம்பு ஆகியவற்றை அணியாகக் பூண்டு, கொக்கரை என்னும் வாத்தியம் பொருந்தப் பாடுபவர். அப்பெருமான், குடமூக்கை இடமாகக் கொண்டு அனைவரும் ஏத்த விளங்குபவர். அவர் எம் இறைவன்.

சிறப்புரை: ஞானிகளால் ஏத்தப்படுகின்ற சிவ பெருமான், எல்லா வகையானவர்களும் ஏத்த அருள் புரிபவர் என்னும் கருத்தில், "எக் கரையாரும் ஏத்த இருந்தான்" எனச் சுட்டப் பெற்றது. இந்நெறியில், திருவருட் பிரகாச வள்ளலார், ''கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே! காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே! வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே! மதியார்க்கும் மதிப்பவர்களுக்கும் மதி கொடுக்கும் மதியே! நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே! நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங் கொடுக்கும் நலமே! எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுகின்ற சிவமே! என்னரசே!" எனப் போற்றி உரைத்தலும் காண்க.

Koviloor Digital Library

அக்கு – எலும்பு; கொக்கரை – வாத்திய வகை; எக்கரையார் – எத் தன்மையில் உள்ளவரும்; குடமூக்கு – தலத்தின் பெயர்.

631. வடிவுடை வாள்தடங்கண் உமையஞ்ச வோர்
வாரணத்தைப்
பொடியணி மேனிமூட உரிகொண்டவன் புன்சடையான்
கொடிநெடு மாடம்ஓங்கும் குழகன்குட மூக்கிடமா
இடிபடு வானம்ஏத்த இருந்தான்அவன் எம்இறையே.

தெளிவுரை: அழகிய ஒளி திகழும் அகன்ற கண்ணுடைய உமாதேவியார் அஞ்சுமாறு யானையின் தோலை உரித்துத் தனது திருவெண்ணீறு திகழும் மேனியில் போர்த்திய சிவபிரான், சடை முடியுடைய வராய்க் கொடிகள் திகழும் நெடிய மாட மாளிகைகள் விளங்கும் குழகனாய்க் குடமூக்கின்கண், வானவர்கள் ஏத்திப் பரவுமாறு இருப்பவர். அப்பெருமான் எம் இறைவன் ஆவார்.

632. கழைவளர் கவ்வை முத்தம் கமழ்காவிரி யாற்றயலே
தழைவளர் மாவின்நல்ல பலவின்கனி கள்தங்கும்
குழைவளர் சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இழைவளர் மங்கையோடும் இருந்தான்அவன்
எம்இறையே.

தெளிவுரை: முற்றிய மூங்கில்களின் வாயிலாக வெளிப்படும் முத்துக்கள் விரவும் காவிரி ஆற்றின் மருங்கில், மாங்கனிகளும் பலாவின் கனிகளும் பெருகும் சோலைகள் சூடி, சிவபெருமான் குடமூக்கினைத் தலமாகக் கொண்டு உமாதேவி உடனாகித் திகழ வீற்றிருப்பவர். அப் பெருமான் எம் இறைவன் ஆவார்.

633. மலைமலி மங்கைபாகம் மகிழ்ந்தான்எழில் வையம்உய்யச்
சிலைமலி வெங்கணையாற் சிதைத்தான்புர
மூன்றினையும்

Koviloor Digital Library

குலைமலி தண்பலவின் பழம் வீழ்குட மூக்கிடமா
இலைமலி சூலம்ஏந்தி இருந்தான்அவன் எம்இறையே.

தெளிவுரை: மலை மகளாகிய உமாதேவியைத் திருமேனியில் பாகமாகக் கொண்டு மகிழ்ந்து விளங்கும் சிவபெருமான், எழில் மிக்க இவ்வுலகம் உய்யுமாறு மேருமலையை வில்லாகக் கொண்டு, அக்கினியைக் கணையாக்கித் தொடுத்து, மூன்று புரங்களையும் சிதைத்தவர். பலாக் கனிகள் தாமாகவே கனிந்து வீழும் வளப்பத்தையுடைய குடமூக்கில் மேவும் அப் பெருமான், சூலப்படையை ஏந்தியவர். அவர் எம் இறைவன் ஆவார்.

634. நெடுமுடி பத்துடைய நிகழ்வாளரக் கன்னுடலைப்
படுமிடர் கண்டயர்ப் பருமால்வரைக் கீழடர்த்தான்
கொடுமடல் தங்குதெங்கு பழமவீழ்குட மூக்கிடமா
இடுமணல் எக்கர்சூழ இருந்தான்அவன் எம்இறையே.

தெளிவுரை: நீண்ட முடிகள் பத்துடைய அரக்கனாகிய இராவணனுடைய உடலானது, இடர் கொண்டு நலியுமாறு கயிலை மலையின்கீழ் அடர்த்து விளங்கிய சிவபெருமான், வளைந்த மடல்களை உடைய தென்னை மரங்களிலிருந்து முற்றிய காய்கள் விழும் குட மூக்கில் வீற்றிருப்பவர். அப்பெருமான் எம் இறைவன் ஆவார்.

தெங்குபழம் – முற்றிய தேங்காய்.

635. ஆரெரி ஆழியானும் மலரானும் அளப்பரிய
நீரிரி புன்சடைமேல் நிரம்பா மதிசூடிநல்ல
கூரெரி யாகிநீண்ட குழகன்குட மூக்கிடமா
ஈருரி கோவணத்தோடு இருந்தான்அவன் எம்இறையே.

Koviloor Digital Library

தெளிவுரை: நெருப்பினை உமிழ்ந்து மாற்றானை அழிக்க வல்ல சக்கரப் படையுடைய திருமாலும், தாமரை மலரின் மீது விளங்கும் பிரமனும், அளப்பதற்கு அரியவராகிய சிவபெருமான், கங்கை திகழும் சடை முடியின் மீது, பிறைச் சந்திரனைச் சூடி விளங்குபவர். அப் பெருமான் உயர்ந்து ஓங்கி எரியும் சோதியாகிய அழகர். அப் பரமன் குடமூக்கினை இடமாகக் கொண்டு தோலும் கோவண ஆடையும் கொண்டு வீற்றிருப்பவர். அவர் எம் இறைவன்.

636. மூடிய சீவரத்தார் முது மட்டையர் மோட்டமணர்
நாடிய தேவரெல்லாம் நயந்தேத்திய நன்னலத்தான்
கூடிய குன்றம்எல்லாம் உடையான்குட மூக்கிடமா
ஏடலர் கொன்றைசூடி இருந்தான்அவன் எம்இறையே.

தெளிவுரை: சாக்கியரும் சமணரும் கூறுவன பயனற்றவை. தேவர்கள் விரும்பி ஏத்தி வழிபட நன்னலத்தை அருளும் சிவபெருமான், மன்னுயிரைக் குன்றவைக்கும் தீவினையால் வரும் குற்றங்களை நீக்கி அருள் புரிபவர். அப் பெருமான், கொன்றை மலரைச் சூடிக் குடமூக்கினை இடமாகக் கொண்டு விளங்குபவர் அவர் எமது இறைவன்.

637. வெண்கொடி மாடம் ஓங்கு விறல் வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் தமிழ்ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்குஅமர்ந்தான் அடிசேர் தமிழ்பத்தும் வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடுஎளிதே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: ஒளி திகழ்கின்ற கொடிகளையுடைய மாட மாளிகைகள் பெருமையுடன் திகழும் வெங்குரு

Koviloor Digital Library

எனப்படும் காழி நகரில் விளங்குபவராகி, அனைவரிடத்திலும் நட்புக் கொண்டு சீர் மிக உடையவராகித் தமிழில் வல்லவராய்த் திகழும் ஞானசம்பந்தன், நன்மையும் தண்மையும் உடைய குடமூக்கில் அமர்ந்த ஈசனின் திருவடியைச் சேரும் தமிழாக, இத்திருப்பதிகத்தை அருளிச் செய்தனர். இதனை ஓத வல்லவர்கள் உயர்ந்து மேவும் விண்ணுலகத்தை நண்ணுவார்கள். அவர்களுக்கு முத்திப் பேறு எளிதாகக் கைகூடும்.

வெண்கொடி – சத்துவ குணத்தினை விளக்கும் தூய கொடியாகவும் மக்களின் ஒழுக்க நெறியை ஓதுவதாயும் ஆயிற்று.

318. திருவக்கரை

தல விளக்கம்: தொண்டை நாட்டுத் தலம் 32இல், இது 30ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல் பெற்றது. வக்கிராசுரன் வழிபட்ட தலம். மூலவர் மும்முகப் பொலிவு உடையவர்.

சுவாமி : சந்திர சேகரர், சந்திர மௌலீஸ்வரர்

அம்பிகை : வடிவாம்பிகை, அமிர்தேஸ்வரி

தல மரம் : வில்வம்.

தீர்த்தம் : சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம்

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

638. கறையணி மாமிடற்றான் கரிகாடரங் காவுடையான்
பிறையணி கொன்றையினான் ஒருபாகமும்
பெண்ணமர்ந்தான்

Koviloor Digital Library

மறையவன் றன்தலையில் பலிகொள்பவன் வக்கரையில்
உறைபவன் எங்கள்பிரான் ஒலியார்கழல் உள்குதுமே.

தெளிவுரை: *ஈசன், நஞ்சினை அருந்திய கறை பொருந்திய கண்டத்தை உடையவர்; சுடுகாட்டினை, நடம் பயிலும் அரங்காக உடையவர்; பிறைச் சந்திரனையும் கொன்றை மலரையும் அணிந்தவர்; உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டு விளங்குபவர்; பிரமனின் தலையினைக் கொய்து கபாலபாக ஏந்திப் பிச்சை கொள்பவர். அப் பெருமான், எங்கள் பிரானாய்த் திருவக்கரையில் வீற்றிருக்க, அவர்தம் திருவடியைக் தியானம் செய்வீராக.*

மறையவன் தலை – பிரம கபாலம்.

639. பாய்ந்தவன் காலனைமுன் பணைத்தோளியொர் பாகமதா
ஏய்ந்தவன் எண்ணிறந்தவ் இமையோகள் தொழுது இறைஞ்ச
வாய்ந்தவன் முப்புரங்கள் எரிசெய்தவன் வக்கரையில்
தேய்ந்திள வெண்பிறைசேர் சடையானடி செப்புதுமே.

தெளிவுரை: *ஈசன், காலனைப் பாய்ந்து காலால் உதைத்தவர்; உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு விளங்குபவர்; எண்ணற்ற தேவர்களால் தொழுது போற்றப்படுபவர்; முப்புரங்கள் எரிந்து சாம்பலாகு மாறு செய்தவர். பிறைச் சந்திரனைச் சடைமுடியில் சூடித் திருவக் கரையில் வீற்றிருக்கும் அப்பெருமானின் திருவடியை ஏத்தி வணங்குவோமாக!*

640. சந்திர சேகரனே அருளாய்என்று தண்விசும்பில்
இந்திர னும்முதலா இமையோர்கள் தொழுது இறைஞ்ச
அந்தர மூவெயிலும் அனலாய்விழ ஓர்அம்பினால்
மந்தர மேருவில்லா வளைத்தான்இடம் வக்கரையே.

Koviloor Digital Library

தெளிவுரை: "சந்திரனைச் சடை முடியின்கண் சூடி மேவும் சிவபெருமானே! அருள் புரிவீராக!" என்று விண்ணுலகத்தில் விளங்கும் இந்திரன் முதலான தேவர்கள் தொழுது ஏத்தி வேண்டுதல் புரிய, அந்தரத்தில் திரிந்து கேடுகளை விளைவித்த மூன்று கோட்டைகளும் எரிந்து சாம்பலாகுமாறு, மேரு மலையை வில்லாகக் கொண்டு வளைத்து ஓர் அன்பினால் எய்தவர், ஈசன். அவருடைய இடமாவது திருவக்கரையாகும்.

சிறப்புரை: இத்தலத்தில் வீற்றிருக்கும் ஈசனின் திருநாமம் இத்திருப்பாட்டில் சுட்டப் பெறுதல் காண்க.

641. நெய்யணி சூலமொடு நிறைவெண்மழு வும்மரவும்
கையணி கொள்கையினான் கனல்மேவிய ஆடலினான்
மெய்யணி வெண்பொடியான் விரிகோவண
ஆடையின்மேல்
மையணி மாமிடற்றான் உறையும்இடம் வக்கரையே.

தெளிவுரை: நெய் தடவப் பெற்ற சூலமும், மழுவும் படையாகக் கொண்டு திகழும் சிவபெருமான், அரவத்தைக் கையில் ஆபரணமாகக் கொண்டுள்ளவர்; நெருப்புக் கனலைக் கையில் ஏந்தி நடம் புரிபவர்; திருமேனியில் திருவெண்ணீறு பூசி விளங்குபவர்; விரித்து ஓதப் பெறும் வேதங்களைக் கோவணமாகக் கொண்டுள்ளவர். அப் பெருமான், கரிய கண்டத்தை உடையவராய் வீற்றிருக்கும் இடமாவது, திருவக்கரை ஆகும்.

சிறப்புரை: தேவர்களின் வேண்டுகோளை ஏற்று நஞ்சினை அருந்தி உலகினை உய்வித்த அருள் செயலைக் குறிப்பிட்டு, அத்தகைய பெருமானின் இடமாவது வக்கரை எனச் சுட்டப் பெறுதலாவது,

Koviloor Digital Library

ஈசனின் கருணையும் அப் பெருமானின் ஆற்றலும் உணர்த்தப் பெறுவது ஆகும்.

642. ஏனவெண் கொம்பினொடும் இளவாமையும் பூண்டுகந்து
கூனிள வெண்பிறையும் குளிர்மத்தமும் சூடிநல்ல
மானன மென்விழியா ளொடும் வக்கரை மேவியவன்
தானவர் முப்புரங்கள் எரிசெய்த தலைமகனே.

தெளிவுரை: *பன்றியின் கொம்பும் ஆமையின் ஓடும் அணிகலனாகக் கொண்டு, வளைந்த பிறைச் சந்திரனும், ஊமத்தம் மலரும் சூடி, நல்ல மான் விழி யன்ன விழியுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு, வக்கரை என்னும் திருத்தலத்தில் மேவிய பெருமான், அசுரர்களின் முப்புரங்கள் சாம்பலாகு மாறு எரி செய்த முதன்மையானவர் ஆவார்.*

சிறப்புரை: *மன்னுயிர்களை ஞான வழிப்படுத்திப் பதியைக் காட்டுவிக்கும் அம்பிகையின் அருள் வண்ணமானது, "நல்ல மானன மென் விழியாள்" என ஓதப் பெற்றது.*

தானவர் -- அசுரர்; தலைமகன் – ஆதிமூர்த்தி, ஈசன்.

643. கார்மலி கொன்றையொடும் கதிர்மத்தமும் வாளரவும்
நீர்மலி யும்சடைமேல் நிரம்பாமதி சூடிநல்ல
வார்மலி மென்முலையா ளொடும் வக்கரை மேவியவன்
பார்மலி வெண்தலையிற் பலிகொண்டுழல் பான்மையனே

தெளிவுரை: *கார் காலத்தில் மலர்ந்து பெருகும் கொன்றை மலரும், ஊமத்தம் மலரும், பாம்பும், கங்கையும் சடை முடியின் மீது விளங்கித் திகழ, அதனுடன் பிறைச்சந்திரனைச் சூடிய சிவபெருமான், உமாதேவியை உடனாகக் கொண்டு திருவக்கரையில்*

Koviloor Digital Library

விளங்குபவர். அவர், பிரம கபாலம் ஏந்திப் பலி ஏற்று உலவும் தன்மை உடையவர்.

644. கான்அண வும்மறிமான் ஒரு கையதோர் கைமழுவாள்
தேன்அணவும் குழலாள் உமைசேர்திரு மேனியனான்
வான்அணவும் பொழில்சூழ் திருவக்கரை மேவியவன்
ஊன்அணவும் தலையிற் பலிகொண்டுழல் உத்தமனே.

தெளிவுரை: கானகத்தில் மேவும் மானை ஒரு கையில் ஏந்தி, மழுவாகிய ஒளி திகழும் படையினையும் ஏந்தித் தேன் மணம் கமழும் கூந்தலையுடைய உமாதேவியை ஒரு பாகமாகக் கொள்ளும் சிவபெருமான், வானை அணுகும் உயர்ந்த பொழில் சூழ்ந்த திருவக்கரையில் வீற்றிருப்பவர். அப் பெருமான் பிரம கபாலத்தை ஏந்திப் பிச்சை ஏற்று உலவும் உத்தமனே.

சிறப்புரை: ஈசன் பிச்சை ஏற்கும் தன்மையானது, ஆன்மாக்களைக் கடைதேற வைக்கும் உயர்ந்த பாங்கினில் அமைதலை நோக்கி, அச் செயலானது உத்தமம் வாய்ந்தது எனச் சுட்டப் பெறுவதாயிற்று.

645. இலங்கையர் மன்னனாகி எழில்பெற்ற இராவணனைக்
கலங்கவோர் கால்விரலாற் கதிர்பொன்முடி பத்துஅலற
நலங்கெழு சிந்தையனாய் அருள் பெற்றலு நன்களித்த
வலங்கெழு மூவிலைவேல் உடையானிடம் வக்கரையே.

தெளிவுரை: இலங்கையின் மன்னனாகிய இராவணன் கலங்குமாறு, திருப்பாதத்தின் ஒரு விரலால் கயிலை மலையை அழுத்தி, முடிகள் பத்தும் அலறுமாறு செய்தவர், சிவபெருமான். அவ்வரக்கன் நற்சிந்தை கொண்டு போற்றி ஏத்த நன்கு அருள் செய்த அவர், சூலப் படை கொண்டு வீற்றிருக்கும் இடமாவது, திருவக்கரையே.

Koviloor Digital Library

646. காமனை ஈடழித்திட்டு அவன்காதலி சென்றிரப்பச்
சேமமே உன்றனக்கு என்று அருள்செய்தவன்
தேவர்பிரான்
சாமவெண் தாமரைமேல் அயனும் தரணியளந்த
வாமனனும் அறியா வகையான்இடம் வக்கரையே.

தெளிவுரை: *மன்மதனுடைய பெருமை மிக்க தேகத்தை எரித்துச் சாம்பலாக்கி பின்னர் அவனுடைய தேவி யானவள் இரந்து வேண்டிப் பிரார்த்திக்க அருள் புரிந்தவர், தேவர்களுக்கெல்லாம் கடவுளாகிய சிவபெருமான். தாமரைமேல் திகழும் சாமம் முதலான வேதங்களை ஓதுகின்ற பிரமனும், உலகினை அளந்த வாமனனாகிய திருமாலும் அறியா வகையில் நெடிய சோதியாகிய அப் பெருமான் வீற்றிருக்கும் இடமாவது, திருவக்கரையே.*

647. மூடிய சீவரத்தர் முதிர்பிண்டியர் என்றுஇவர்கள்
தேடிய தேவர்தம்மால் இறைஞ்சப்படும் தேவர்பிரான்
பாடிய நான்மறையன் பலிக்கென்றுபல் வீதிதொறும்
வாடிய வெண்தலை கொண்டு உழல்வான்இடம்
வக்கரையே.

தெளிவுரை: *சாக்கியரும் சமணரும் தேடுகின்ற தேவராலும் போற்றப்படும் தேவர்தம் தலைவராகிய ஈசன், நான்கு மறைகளையும் அருளிச் செய்து, வீதி தோறும் சென்று, பலி ஏற்றவர். அப்பெருமான், பிரமக கபாலம் கொண்டு விளங்குகின்ற இடமாவது திருவக் கரையே.*

சிறப்புரை: *இத் திருப்பதிகத்தில் பலி ஏற்று வினை கடியும் தன்மையில் பாடல்கள் 1, 6, 7 மற்றும் 10இன் வாயிலாகவும்; முப்புரங்களை எரித்துத் தேவர்களைக் காத்தருள் புரிந்த செயலினைப் பாடல்கள் 2, 3, 5இன்*

Koviloor Digital Library

வாயிலாகவும்; நஞ்சினை அருந்திக் காத்தருள் புரிந்த செயலைத் திருப்பாட்டு 4இன் வாயிலாகவும் மொழிதல் செய்து, அத்தகைய பெருமான் இத் திருத் தலத்தில் இடம் கொண்டு உள்ளவர் எனச் சுட்டப் பெற்றது காண்க. இவ் அருளிச் செயல்கள், ஈசன் அடியவர்கள்பால் கொண்டுள்ள கருணை வயத்தையும், அதனைத் திருத்தலச் சிறப்பாக உபதேசித்தலும் ஆகும்.

648. தண்புனலும் அரவும் சடைமேலுடை யான்பிறைதோய்
வண்பொழில் சூழ்ந்தழகார் இறைவன் உறை
வக்கரையைச்
சண்பையர் தம்தலைவன் தமிழ்ஞானசம் பந்தன்சொன்ன
பண்புனை பாடல் வல்லார் அவர்தம் வினை பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்

தெளிவுரை: கங்கையும், பாம்பும் சடை முடியில் விளங்கத் திகழும் சிவபெருமான் உறையும் பொழில் சூழ்ந்த திருவக்கரையைச் சண்பை நகர் எனப்படும் சீகாழியின் தலைவனாகிய தமிழ் ஞானசம்பந்தன் சொன்ன பண்ணிசை உடைய இத் திருப்பதிகத்தை ஓத வல்லவர்கள் வினை அற்றவர்கள் ஆவார்கள்.

சிறப்புரை: இது, வினை நீக்கம் பெற்றதன் பயனாய், முத்திப் பேறு வாய்க்கும் என்பது சுட்டப் பெறுவதாயிற்று.

தண்புனல் – கங்கை.

319. திருவெண்துறை

தல விளக்கம்: காவிரித் தென்க்ரைத் தலம் 127இல், இது 112ஆவது திருத்தலம். திருஞானசம்பந்தர் பாடல்

Koviloor Digital Library

பெற்றது. வண்டுறை என வழங்கப்படுகிறது. பிருங்கி முனிவர் வண்டு உருவில் வழிபட்டுப் பேறு பெற்றது. வித்யாதரர், பிரமன், துருவன், திருமால் வழிபட்டது.

சுவாமி : மதுவனேஸ்வரர், பிரமரேஸ்வரர், பிரமபுரீசர், வெண்டுறை நாதர்

அம்பிகை : சத்யதாயதாட்சி, பிரஹதாம்பாள், வேல்நெடுங்கண்ணி

தல மரம் : வில்வம்

தீர்த்தம் : பிரம தீர்த்தம்

பண் : பஞ்சமம்

திருச்சிற்றம்பலம்

649. ஆதியன் ஆதிரையன் அனலாடிய ஆரழகன்
பாதியொர் மாதினொடும் பயிலும் பரமாபரமன்
போதிய லும்முடிமேல் புனலோடுஅர வம்புனைந்த
வேதியன் மாதிமைபால் விரும்பும்இடம் வெண்டுறையே.

தெளிவுரை: சிவபெருமான், ஆதிமூர்த்தியானவர்; ஆதிரை என்னும் விண்மீனுக்கு உரியவர்; எரியும் நெருப்பைக் கையில் ஏந்தித் திருநடம் புரியும் மேலான அழகர்; தமது அங்கத்தின் ஒரு பாதியாய் உமாதேவியை ஏற்று மகிழ்ந்து விளங்குகின்ற பரம் பொருள்; கொன்றை முதலான மலர்களைச் சூடிய முடியின் மீது கங்கையும், பாம்பும் அழகுடன் பொருந்துமாறு புனைந்த வேதநாயகர். அப்பெருமான் காதலால் விரும்பி வீற்றிருக்கின்ற இடமாவது, வெண்டுறை ஆகும்.

சிறப்புரை: திருவாதிரை நாள், ஈசனுக்கு உரிய நாள். அது, நடராசப் பெருமானின் திருவிழாவை நிகழ்த்தும் நாளாகவும் உள்ளதால், ஆதிரையன் எனச் சிவபெரு

Koviloor Digital Library

மானைப் போற்றி ஏத்துதல் ஆயிற்று. அதனைக் காணாதே போதியோ பூம்பாவாய் என அருளிச் செய்தமையும் காண்க.

சிவபெருமானின் சிறப்பினைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள், "ஆதியன் ஆதிரையன், அயன் மால் அறிதற்கு அரிய சோதியன்,'' (திருநனிபள்ளி திருப்பதிகம், பாடல் 1) என அருளிச் செய்த பாங்கும் ஓர்க.

பரமாபரமன் – மேலான பரம்பொருள்;
மாதிமை – அதிக விருப்பம், காதல், பித்து.

650. காலனை ஒருதையில் உயிர்வீடுசெய் வார்கழலான்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடிய பண்டரங்கன்
மாலைமதி யொடுநீர் அரவம்புனை வார்சடையான்
வேலன கண்ணியொடும் விரும்பும்இடம் வெண்டுறையே.

தெளிவுரை: கூற்றுவனைத் திருப்பாதத்தால் உதைத்து மாய்த்த சிவபெருமான், பால், நெய், தயிர் ஆகிய பஞ்ச கௌவியத்தால் பூசிக்கப் பெறுபவராய் பண்டரங்கம் என்னும் திருக்கூத்து புரிபவர். அப் பெருமான், சந்திரனையும் கங்கையையும் பாம்பையும் அழகு மிளிரச் சடை முடியில் புனைந்து, வேல் போன்ற கண்ணுடைய உமாதேவியை உடனாகக் கொண்டு விரும்பி வீற்றிருக்கும் இடமாவது, வெண்துறையே.

சிறப்புரை: ஈசனைப் பஞ்ச கௌவியம் கொண்டு பூசிப்பது "பாலொடு நெய் தயிரும் பயின்றாடிய பண்டரங்கன்" எனப் போற்றப்பட்டது. நம்பியாரூரர், "நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார்" என (திருஓணகாந்தன்தளி பதிகம்) அருளிச் செய்துள்ளதும் காண்க. அகப் பூசைக்குரிய

Koviloor Digital Library

தன்மையில், "நேயமே நெய்யும் பாலாய் நிறைய நீர் அமைய ஆட்டிப் பூசனை ஈசனார்க்குப் போற்றி அவிக் காட்டினோமே" எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்த பாங்கும் ஓர்க.

முந்தைய திருப்பாட்டில் திருவாதிரை நாளின் சிறப்பினை உணர்த்திய ஆளுடைய பிள்ளையார், இத்திருப்பாட்டில், அந்நாளின் சிறப்புக்குரிய நடராசப் பெருமானுடைய திருக்கூத்தினைக் குறிப்பால் உணர்த்திப் பூசித்தலுக்கு உரிய பொருள்களாகப் பால், நெய், தயிர் ஆகியவற்றை ஓதியருளிச் செய்த பாங்கினை, உய்த்தறிக.

இத் தலத்தில் விளங்கும் அம்பிகையின் திரு நாமமானது, இத் திருப்பாட்டில் குறிக்கப் பெற்ற மாண்பினை நோக்குக.

651. படைநவில் வெண்மழுவான் பலபூதப் படையுடையான்
கடைநவில் மும்மதிலும் எரியூட்டிய கண்ணுதலான்
உடைநவி லும்புலித்தோல் உடையாடை யினான்கடிய
விடைநவி லும்கொடியான் விரும்பும்இடம்
வெண்டுறையே.

தெளிவுரை: சிவபெருமான், மழுப்படை உடையவர்; பல வகையான பூதங்களைப் படை வீரர்களாகக் கொண்டுள்ளவர்; கீழ்த் தன்மையாகக் கருதப்படும் பாவங்களைச் செய்து வந்த மூன்று மதில்களும் எரிந்து சாம்பலாகுமாறு செய்த நெற்றிக் கண்ணுடையவர்; புலித் தோலை உடையாகக் கொண்டு இருப்பவர்; மிகவும் விரைந்து செல்லக்கூடிய ஆற்றல் பொருந்திய இடபத்தைக் கொடியாகக் கொண்டு இருப்பவர். அப்பெருமான் விரும்புகின்ற இடமாவது, வெண்துறை யாகும். அதனை ஏத்துமின் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

652. பண்ணமர் வீணையினான் பரவிப்பணி
தொண்டர்கள்தம்
எண்ணமர் சிந்தையினான் இமையோர்க்கும்
அறிவரியான்
பெண்ணமர் கூறுடையான் பிரமன் தலையிற் பலியான்
விண்ணவர் தம்பெருமான் விரும்பும்இடம்
வெண்டுறையே.

தெளிவுரை: ஈசன், பண்ணில் விளங்கும் வீணையினை மீட்டும் மாண்பினர்; பரவித் தொழுகின்ற தொண்டர்களின் மனத்தில் வீற்றிருக்கும் விருப்பம் உடையவர்; தேவர்களுக்கும் அறிவதற்கு அரியவராகியவர்; உமா தேவியைத் திருமேனியில் பாகமாகக் கொண்டு விளங்குபவர்; பிரம கபாலம் ஏந்திப் பிச்சை ஏற்பவர். தேவர்களின் நாதனாகிய அப்பெருமான் விரும்பி மேவும் இடமாவது வெண்துறையாகும்.

சிறப்புரை: பண்ணின் இனிமையை நல்கும் வீணையைக் கரத்தில் ஏந்தி மீட்டி, மன்னுயிர்களை ஞான போதத்தில் ஆழ்த்தும் சிவபெருமானது சிறப்பு, "பண்ணமர் வீணையினான்" என ஏத்தப் பெறுவதாயிற்று. இதனை, "வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிக நல்ல வீணை தடவி" எனப் புகலும் வாக்கும் காண்க.

ஈசன், திருத்தொண்டர்களின் உள்ளத்தில் கோயில் கொண்டு விளங்கும் பெற்றி, "எண்ணமர் சிந்தையினான்" என ஏத்தப் பெற்றது. இத்தன்மையில் மாணிக்கவாசகர், "சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால், அவன் அருளாலே அவன் தாள் வணங்கி" (சிவபுராணம்) எனவும் "சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான் திருப்பெருந் துறையுறை சிவனே!

Koviloor Digital Library

எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய் யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே" (கோயில் திருப்பதிகம் 10) எனவும் அருளிச் செய்தமை காண்க.

விண்ணவர்தம் பெருமானாய் அவர்களால் அறிதற்கு அரியவனாய் மேவும் சிவபெருமான், கர்ம பூமியாகிய இம் மண்ணுலகில், மன்னுயிர்களுக்கு அருளும் பொருட்டு விரும்பி உறையும் இடமாகத் திருத்தலச் சிறப்பு உணர்த்துதல் ஆயிற்று.

653. பாரிய லும்பலியான் படியார்க்கும் அறிவரியான்
சீரிய லும்மலையாள் ஒருபாதமும் சேரவைத்தான்
போலிய லும்புரமூன்று டன்பொன்மலை யேசிலையா
வீரிய நின்றுசெய்தான் விரும்பும்இடம் வெண்டுறையே.

தெளிவுரை: சிவபெருமான், உலகத்தில் மேவும் எல்லாப் பூசைகளையும் தமே ஏற்பவர்; உலக மாந்தர்களின் அறிவால் அறிவதற்கு அரியவர்; சீர் மிக்க உமாதேவியை ஒரு பாகத்தில் பொருந்துமாறு வைத்தவர்; போர்த்தன்மை உடையவர்களாயும் பகைமை உடையவர்களாயும் உள்ள மூன்று அசுரர் களின் கோட்டைகளும் எரியுமாறு மேருமலையினை வில்லாகக் கொண்டு வளைத்து வீரம் புரிந்தவர். அப்பெருமான் விரும்பி மேவும் இடமாவது, வெண் துறையே.

அரிது – இன்மைப் பொருளாயிற்று.

654. ஊழிகளாய்உல காய் ஒருவர்க்கும் உணர்வரியான்
போழிள வெண்மதியும் புனலும்அணி புன்சடையான்
யாழின் மொழியுமையாள் வெருவவ் வெழில்வெண்
மருப்பின்
வேழம் உரித்தபிரான் விரும்பும்இடம் வெண்டுறையே.

Koviloor Digital Library

தெளிவுரை: சிவபெருமான், ஊழிக்காலமாக விளங்குபவர்; உலகமாக விளங்குபவர்; யாராலும் உணவர்தற்கு அரியவர்; பிறைச் சந்திரனையும் கங்கையையும் சடைமுடியில் அணிந்து விளங்குபவர்; உமாதேவி வியக்குமாறு, யானையின் தோலை உரித்தவர். அப்பெருமான் விரும்பி வீற்றிருக்கும் இடமாவது, வெண்துறையே.

சிறப்புரை: யாவுமாகிய இறைவன் ஊழிக்காலமாகவும் அதனால் ஆளப் பெறும் உலகமாகவும் விளங்கு கின்றதை, இத்திருப்பாட்டு உணர்த்துவதாயிற்று. இது, ஈசனே யாவற்றையும் நிகழ்த்துதலும், அப்பெருமானே யாவுமாய் ஆதலும் விளம்புவதாகும். உணர்வரிய ஈசனின் அரிய மாண்பினை, "உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்" எனும் சேக்கிழார் பெருமான் அருளிச் செய்த அருள் வண்ணத்தால் கொள்க.

655. **கன்றிய காலனையும் உருளக்கனல் வாய்அலறிப்**
பொன்றமுன் நின்றபிரான் பொடியாடிய மேனியினான்
சென்றிமை யோர்பரவும் திகழ்சேவடி யான்புலன்கள்
வென்றவன் எம்இறைவன் விரும்பும்இடம்
வெண்டுறையே.

தெளிவுரை: சிவபெருமான், மார்க்கண்டேயரின் உயிரைக் கவரச் சினந்து வந்த காலனை அலறி வீழு மாறு அழித்தவர்; திருநீற்றினைத் திருமேனியில் பூசி விளங்குபவர்; தேவர்கள் சென்று பரவி ஏத்தும் சிறப்பான மலரடிகளை உடையவர்; புலன்களால் ஈர்க்கப்படாத பரம்பொருளாகவும், புலன்களை வென்று திகழும் சிவஞானிகளின் தலைவனாகவும் விளங்குபவர். அப் பெருமான் விரும்பி உறையும் இடமாவது, வெண்துறையே.

Koviloor Digital Library

656. கரம்இரு பத்தினாலும் கடுவன்சின மாய்எடுத்த
சிரம்ஒரு பத்தும்உடை அரக்கன்வலி செற்றுகந்தான்
பரவவல் லார்வினைகள் அறுப்பான்ஒரு பாகமும்பெண்
விரவிய வேடத்தினான் விரும்பும்இடம் வெண்டுறையே.

தெளிவுரை: இருபது கரங்களை உடைய இராவணன், தனது பத்துத் தலைகளாலும் கயிலையைச் சினந்து எடுத்தபோது, அவனுடைய வலிமை அழியுமாறு செய்த சிவபெருமான், தன்னை ஏத்தி வழிபடும் பக்தர் களின் வினைகளை அறுப்பவர். ஒரு பாகத்தில் உமாதேவியைப் பொருந்துமாறு மேவும் திருக் கோலத்தை உடைய அப்பெருமான், விரும்பி உறையும் இடமாவது, வெண்துறையே.

சிறப்புரை: இராவணனின் வலிமையை அழித்த ஈசன், அவன் செருக்கழிந்து சாமகானம் கொண்டு ஏத்தி வழிபட மகிழ்ந்து வரங்களை நல்கிய பாங்கு, "உகந்தான்" என உணர்த்தப் பெற்றது.

657. கோல மலர்அயனும் குளிர்கொண்டல் நிறத்தவனும்
சீலம் அறிவரிதாய்த் திகழ்ந்தோங்கிய செந்தழலான்
மூலம தாகிநின்றான் முதிர்புன்சடை வெண்பிறையான்
வேலை விடமிடற்றான் விரும்பும்இடம் வெண்டுறையே.

தெளிவுரை: பிரமனும் திருமாலும் சிவபெருமா னுடைய சீலத்தை அறியாதவர்களாய்த் தேடியபோது, அப்பெருமான் செந்தழலாய் ஓங்கி விளங்கியவர். சடை முடியின் மீது வெண்மையான பிறைச் சந்திரனைச் சூடிய அவர், கடலில் தோன்றிய விடத்தைக் கண்டத்தில் தேக்கி நீலகண்டராய் விளங்கித் தேவர்களைக் காத்தவர். அப்பெருமான் விரும்புகின்ற இடமாவது வெண்துறையே.

கொண்டல் நிறத்தவன் – திருமால்.

Koviloor Digital Library

658. நக்குரு வாயவரும் துவராடை நயந்துடையாம்
பொக்கர்கள் தம்உரைகள் அவைபொய்யென
எம்இறைவன்
திக்கு நிறைபுகழார் திருதேவர் பிரான்கனகம்
மிக்குயர் சோதியவன் விரும்பும்இடம் வெண்டுறையே.

தெளிவுரை: *சாக்கியரும் சமணரும் கூறுபவை யாவும் பொய்யுரையாய்க் கொள்க. எல்லாத் திக்குகளிலும் புகழ் விளங்கத் திகழும் தேவர் பிரானாகிய எம் இறைவன், பொன் போன்ற சோதியாக விளங்குபவர். அப் பெருமான் விரும்பி மேவும் இடமாவது வெண் துறையாகும். இத்திருத்தலத்தைச் சார்ந்து சிவபெரு மானைப் பரவுவீராக!*

சிறப்புரை: *சிவபெருமானுடைய வண்ணம், "கனகம் மிக்குயர் சோதியவன்" எனப் போற்றி உரைக்கப் பெற்றது. இத்தன்மையில், "கருமணியைக் கனகத்தின் குன்றொப்பானைக் கருதுவார்க்கு ஆற்ற எளியான் தன்னை" (திருமுதுகுன்றம் திருத்தாண்டகம் - ஆறாம் திருமுறை பா.எண் 1) எனத் திருநாவுக்கரசர் அருளிச் செய்துள்ளதும் காண்க. "பொன்னார் மேனியனே" எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஈசனின் திருமேனி வண்ணத்தை உரைத்தருளிய பெற்றி யினையும் நோக்குக.*

659. திண்ணம ரும்புரிசைத் திருவெண்டுறை மேயவனைத்
தண்ணம ரும்பொழில்சூழ் தருசண்பையர்தம் தலைவன்
எண்ணமர் பல்கலையான் இசைஞானசம் பந்தன்
சொன்ன
பண்ணமர் பாடல்வல்லார் வினையாயின பற்றறுமே.

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

தெளிவுரை: உறுதியான மதில்களையுடைய திருவெண் துறையில் மேவிய சிவபெருமானைக் கருதி, குளிர்ச்சி மிக்க பொழில் சூழ்ந்த சண்பை எனப்படும் சீகாழியில் விளங்கும் தலைவனாகிய, பல்கலைகளில் வல்ல ஞானசம்பந்தன் சொல்லிய, பண்ணிசை திகழும் இத் திருப்பதிகத்தைப் பாட வல்லவர்கள், வினையால் பற்றப்பட மாட்டார்கள்.

இது துன்பமற்ற வாழ்க்கையைப் பெறுவார்கள் என்பதனை உணர்த்திற்று.

மூன்றாம் திருமுறை

முதல் தொகுதி முற்றிற்று.

* * *

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17661

Koviloor Digital Library